# திருக்குறளும் 

 விவிலியமும்

காமாட்சி சீனிவாசன்

பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

938/91

REGISTRAR OF BOOKS
INFORMATION & TOURISM DEPARTMENT
FORT ST. GEORGE, MADRAS-9

துணை இயக்குநா
செய்தி மற்றும் சுற்றுலாத் துறை
- 9 DEC 1991
சென்னை - 600 009.

# திருக்குறளும் விவிலியமும்



# திருக்குறளும் விவிலியமும்

காமாட்சி சீனிவாசன்

பதிப்புத்துறை

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

© பதிப்புரிமை
பதிப்புத் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை—625 021.

*Publications Division*
*Madurai Kamaraj University*
*Madurai—625 021.*

திருக்குறள் ஆய்வக வெளியீட்டு எண் : 6

பதிப்பு எண் : 96

விலை : ரூ 25-00

பதிப்பு விவரங்கள் :

| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் | : காமாட்சி சீனிவாசன் |
| 2. | தலைப்பு | : திருக்குறளும் விவிலியமும் |
| 3. | பதிப்பு | |
| | அ) இடம் | : மதுரை காமராசர் பல்கலைக்கழகம் (Madurai Kamaraj University.) |
| | ஆ) பதிப்பித்தோர் | : பதிப்புத்துறை, மதுரை பல்கலைக்கழகம் (Publications Division) Madurai Kamaraj University, Madurai-21.) |
| | இ) ஆண்டு | : 1979 (முதற்பதிப்பு) 1988 (இரண்டாம் பதிப்பு) |
| | ஈ) மொத்த பக்கங்கள் | : XVI + 346 + XIV |
| 4. | பொருள் | : திறனாய்வு-சமயம் |
| 5. | படிகள் | : 1200 |

அச்சிட்டோர் : மலர் பிரிண்டர்ஸ், மதுரை-20.

# உள்ளிருள் நீக்கும் விளக்கு



அறம்தகளி ; ஆன்ற பொருள்திரி ; இன்பு
சிறந்தநெய் ; செஞ்சொல் தீ ; தண்டு — குறும்பாவா
வள்ளுவர் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு.

— நப்பாலத்தனார்

# திருக்குறள் அறக்கட்டளை

மூன்று பல்கலைக் கழகங் களிலும்
முப்பால் ஆய்வு முறையுடன் நிகழ்க.
மூந்நூ றாயிரம் இருப்பில் இருக்க
முகிழ்க்கும் வட்டியால் வாழ்வு சிறக்க
வாயுறை வாழ்த்தொடு ஆய்வுரை செய்யத்
தண்டமிழ் முழுதும் தழுவிக் கொள்க :
அப்பால் முப்பால் இலக்கியப் பகுதி ;
பழந்தமிழ்ப் பனுவல் பின்னர்ச் செய்க.
இப்பால் வள்ளுவர் வாழ்வியல் இயம்பி
இன்றைத் தமிழின் இலக்கியம் ஆய்க.
இடைப்பால் குறளின் ஒப்புமை உரைக்க
இடைநாள் இலங்கிய இலக்கியத் துடனே
பேரா சிரியப் பெருங்குழு நின்றே
ஆறு திங்களில் அனைத்தும் இணைத்துக்
கூறி யதையே கூறல் தவிர்க்க.
இடைப்படு பேராசிரியர் எழுத்தர்
ஆய்வுத் துணையோடு அத்துறை நடத்துக.
பொய்யா மொழியில் புத்தா ராய்ச்சி
மதிப்பருங் கட்டுரை மாண்புறுஞ் சிற்றுரை
ஆக்க வல்லுநர் அமர்த்துக.
இதுவே திருக்குறட் கட்டளை ஆகுமே.

டாக்டர் தி. முருகரத்தனம்
பேராசிரியன்
திருக்குறள் ஆய்வகம்

மதுரை — 625 021
20-10-86

# முகவுரை

(இரண்டாம் பதிப்பு)

1968 ஆம் ஆண்டு, தமிழக வரலாற்றிலும் தமிழ்மொழி வரலாற்றிலும் குறிப்பிடத்தக்க ஒரு மைல் கல். இன்றைத் தமிழன் தன் உணர்வுகளுக்கு ஒரு வடிவம் தந்த ஆண்டு அது. தமிழகத்தின் தலைநகராம் சென்னையில் உலகத்தமிழ் மாநாடு நடைபெற்றது. அப்போது தமிழாராய்ச்சி நடைபெற ஆராய்ச்சிக் களங்களுக்கு நல்லுள்ளத்தோடு வழிவகைகள் தோற்றுவிக்கப்பட்டன. மூன்று பல்கலைக் கழகங்களிலும் திருக்குறள் ஆராய்ச்சிக்கு ஆய்வகங்கள் தோன்றின. இவ் வாய்வகங்கள் நடைபெற நெறிமுறைகள் வகுத்துத் தரப் பட்டன. இடர்ப்பாடுகளுக்கிடையே ஆய்வகங்கள் இயங்கி வருகின்றன.

மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் திருக்குறளின் வாழ்வியற்கருத்துக்களை ஆராய்தல் வேண்டும் என நெறிப்-படுத்தப்பட்டது. அதன்படி அரசியல், பொருளாதாரம், சமூகம், சமயம் முதலாயின எங்களுக்குப் பொருளாயின. இவ்வகை-யில் முன்னர்ப் பல நூல்கள் வெளிவந்தன. திருக்குறளும் விவிலியமும் என்னும் இந்நூல் இவ்வரிசையில் வெளிவரும் ஆறாவது நூலாகும். உலகப் பெருஞ்சமயங்களுள் ஒன்றான கிருத்தவ சமயத்தின் வேதநூலாகிய விவிலியத்துடன் திருக்-குறளை ஒப்பிட்டு ஆராய்கிறது இந்நூல். விவிலிய நூல் அமைப்பு, அதனை இயற்றியோர், அவர்கள் கருத்துக்கள் ஆகியவற்றை ஆராய்ந்து தெளிந்து திருக்குறளோடும் தமிழ் மரபோடும் ஒப்பிடும் முயற்சி இங்கு மேற்கொள்ளப்பட்டிருக்-கிறது. தமிழ்ப்புலமையும் தமிழ்ச்சமயப் புலமையும் வாய்க்கப் பெற்ற செல்வி காமாட்சி சீனிவாசன் அவர்கள் இவ்வரிய நூலை யாத்துத் தந்திருக்கிறார்கள். தமிழுக்கு இது ஓர் அரிய முயற்சி மட்டுமல்ல ஒரு புதிய முயற்சியுமாகும். தமிழுலகம் இதனை நன்கு வரவேற்கும் என நம்புகின்றேன்.

1973- இல் நூல் எழுதப்பட்டது. 1977—இல் நூலாசிரி யர் இயற்கை எய்தினார். 1979 - இல் நூலின் முதற் பதிப்பு வெளிவந்தது.

இந்நூல் இப்போது இரண்டாவது பதிப்பாக வெளி-வருகிறது. தமிழ்க் கிறித்தவர் இந்நூலைப் போற்றி வர-வேற்றனர். விரைவிலேயே முதற் பதிப்பு விற்பனையாகி-விட்டது. முதற் பதிப்பில் எம்மாற்றமும் செய்யப்படாது இரண்டாம் பதிப்பு கொண்டுவரப்பட்டது. இந்நூலை ஆசிரியர் இயற்றிய முறை பற்றியும், அவர்களின் சில நோக்கங்கள் பற்றியும் முதற் பதிப்பின் முகவுரை விளக்கியிருந்தது. நூலா-சிரியர் விவிலியம் பற்றி விரிவாக எழுதியிருந்தனர். பல்கலைக் கழகத்தின் தேவைக்கேற்பவும் திருக்குறள் ஆய்வுத் துறையின் நோக்கத்திற்கேற்பவும் செல்வி காமாட்சி சீனிவாசன் அவர் களுடைய எழுத்துக்கள் முறைசெய்யப்பட்டு நூல் வெளி-வந்தது. காலமாற்றத்திற்கேற்பவும் ஆராய்ச்சி வளர்ச்சிக்-கேற்பவும் நூலில் மாற்றங்கள் செய்ய ஆசிரியர் இல்லாதது வருந்தத்தக்கது.

விவிலியத்தில் வெளிப்படக் கூறப்பட்டிருக்கும் கருத்துக்-களைத் திருக்குறட் கருத்துக்களோடு ஒப்பிடுதல் ஒருமுறை. விவிலியத்தின் கதைகளிலும் நிகழ்ச்சிகளிலும் வரலாறுகளிலும் வெளிப்படாது பொதிந்து கிடக்கும் கருத்துக்களை ஆய்ந்-தெடுத்து திருக்குறட்கருத்துக்களோடு ஒப்பிடுதல் மற்றொரு முறை. இவ்விருமுறைகளிலுமே செல்வி காமாட்சி சீனிவாசன் ஒப்பீட்டாராய்ச்சியை நிகழ்த்தியிருக்கிறார்கள். இவ்விரண்-டாவது முறையைப் பற்றியே கருத்து வேறுபாடு நிகழலாம். ஆசிரியரின் வலிவு இதனாலே புலப்படுவதாகத் தெரிகிறது.

காலஞ்சென்ற காமாட்சி அம்மையாருக்குத் திருக்குறள் ஆய்வகத்தின் சார்பாகப் பாராட்டுக்கள் உரியன. அன்னாருக்கு இந்நூல் 'நடுகல்' தமிழுலகம், நீரொழியப் பாலுண் குரு-கின் தெரிந்து இந்நூலைப் பாராட்டுவதாக.

இரண்டாம் பதிப்பு அச்சேறுங்கால் மெய்ப்புக்களைப் பார்த்துதவிய செல்வி மா. ஜோதிமணி (ஆராய்ச்சி மாணவி) அவர்களுக்கு நன்றி உரியது.

இத்திருக்குறள் ஆராய்ச்சி வெளியீட்டினை மீண்டும் அச்சேற்ற முயற்சி மேற்கொண்ட பதிப்புத்துறையும் பல்-கலைக்கழகமும் பாராட்டுக்குரியன.

தி. முருகரத்தனம்



## காமாட்சி அம்மையார்

இந்நூலாசிரியர் செல்வி காமாட்சி சீனிவாசன் வரலாறு இங்கு வரையத்தக்கது. தமிழ்கூறு நல்லுலகத்தின் ஈழத்தில் நல்ல தமிழ்ச் சைவக் குடும்பத்தில் அவர்கள் தோன்றி-னார்கள். ஈழத்துச் சைவ மணம் அவர்கள் பால் கமழ்ந்தது. பண்டைச் சைவ இலக்கியங்களைக் குடும்பச் சூழ்நிலையில் இயல்பாகவே அவர்கள் கற்றார்கள் போலும். உடன் பிறந்த தமிழகத்தின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1952 இல் முதுகலை (எம். ஏ.,) பட்டம் பெற்றார்கள்; தமிழகத்தையே தாயகமாகக் கொண்டு வாழ விரும்பித் தமிழ் வளர்த்த மதுரையில் கிருத்த-வர்கள் நடத்தும் டோக் பெருமாட்டி கல்லூரி-யின் தமிழ்த்துறையைச் சேர்ந்து பணியாற்றி-னார்கள்; சில ஆண்டுகளுக்குப் பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சென்று பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்

மேற்பார்வையில் இறையனார் களவியல் உரை-யில் மொழியாராய்ச்சி செய்து எம்.லிட், பட்டம் பெற்றார்கள்; அடுத்துச் சேலம் சாரதா மகளிர் கல்லூரியில் சிறிது காலம் தமிழ்ப் பேராசிரி-யராகப் பணியாற்றிப் பின் 1969இல் மதுரைப் பல்கலைக் கழகத்துத் திருக்குறள் ஆய்வகத்து விரிவுரையாளராக அமர்ந்தனர்; இங்கு எட்-டாண்டுகள் பணியாற்றிய பின் தம் ஐம்பதாவது வயதில் நோய்வாய்ப்பட்டு இயற்கை எய்தினர்.

செல்வி காமாட்சி சீனிவாசன் சிறுபருவத்தி-லேயே நோய்வாய்ப்பட்டு முதுகூன் விழுந்து நல்வாழ்வு வாய்ப்பை இழந்தவர்கள் போலும், காலமெல்லாம் நோயால் துன்புற்றவர்கள்; 1970-1971இல் பக்கவாத நோயால் பாதிக்கப்-பட்டு வேலூர் மருத்துவக் கல்லூரியில் ஓரளவு குணம் பெற்று மீண்டும் அவர்கள் பல்கலைக் கழகத்துக்கு வந்தார்கள்; கால் நடை இழந்-தார்கள்; எழுதும் வலது கைத்திறனையும் இழந்தார்கள்; பின்னர் பெரும்பாலும் தள்ளு வண்டியிலும் ரிக்ஷாவிலும் வந்து துறைப் பணியை ஆற்றினார்கள். 1977இன் நடுவில் வாழ்க்கையில் முடியா நிலையை அடைந்து நோய்வாய்ப்பட்டார்கள். 'என் அம்மாவைப் போல் 80 ஆண்டுகள் வாழ்வேன்' என்று சொல்லிக் கொண்டிருந்த அவர்கள் தம் 50 ஆவது வயதில் துன்பத்திலிருந்தும் நோயி-லிருந்தும் விடுதலை பெற்றது போன்று மீளாத் துயில் கொண்டார்கள்.

காமாட்சி அம்மையார் தமிழகத்தில் கற்க வந்து பின் கற்பிக்க உளம் கொண்டனர். வாழ் நாளெல்லாம் தனியாகவே வாழ்ந்தனர். தமிழ் மணமும் சைவ மணமும் கிருத்தவ மணமும் வீசியது தவிரப் பிறமணம் அறியாத செல்வி அவர்கள்; உள்ள உறுதியும் விடாமுயற்சியும் குன்றாதவர்கள்; உழைப்பாளர். காரணமின்றித் துன்பப்பட்டவர்கள். இந்நூலில் அவர்கள் வரைந்து காட்டிய யோபுவின் வாழ்க்கை போன்றது அவர்கள் வாழ்க்கை.

பிறந்து வளர்ந்த சைவ சமயம் அவர்களது துன்ப வாழ்க்கைக்கு ஆறுதல் அளிக்க வில்லை கிருத்தவ சமயமாவது ஆறுதல் அளிக்குமா என ஏங்கினர். ஆதலால் அக்கிருத்தவ சமயத்தைத் தழுவினர் போலும். ஆனாலும் அதனையும் அவர்கள் புதிய கூண்டாகக் கண்டனரே' ஒழிய ஆறுதல் பெறவில்லை போலும். இறுதியில் நீங்கள் கிருத்தவர் தானே எனக் கேட்ட வினாவிற்கு அவர்கள் விடை தரவில்லை. கிருத்துவ சமயத்தில் காமாட்சியார் சைவ உள்ளத்தைக் கண்டார்கள்.

அவர்கள் ஒரு கவிஞர்; கவிதைகள் பல எழுதியிருக்கின்றனர். இளைஞர்க்கான கதை நூல்கள் முதலாயின எழுதியிருக்கின்றனர். திருக்குறள் ஆய்வகத்தில் பணியாற்றி அவர்கள் நான்கு நூல்களை இயற்றித் தந்தனர். அவற்றுள் மூன்று நூல்கள் வெளிவந்துள்ளன. அவை அவர்களது புலமைக்கு நல்ல சான்றுகள். அவையே நாங்கள் அவர்களுக்கு நட்ட நடுகல்.

# ஆசிரியர் முன்னுரை

தமிழக அரசால் தமிழ்நாட்டிலுள்ள மூன்று பல்கலைக்கழகங்களிலும் ஏற்படுத்தப்பட்ட திருக்குறள் ஆய்வகங்களுள் மதுரைப் பல்கலைக்கழக ஆய்வகத்தின் பணிகளுள் ஒன்றாக எழுதப்பட்டது இந்நூல். திருக்குறளை ஆய்வதில் பல முறைகள் உள. திருக்குறட் கருத்துக்களைப் பிறிதொரு அற நூலுடன் அல்லது பிறிதொரு நாட்டின் அல்லது இனத்தின் அறக்கருத்துக்களுடன் ஒப்பிட்டு ஆய்வதும் ஒன்றாகும்.

திருக்குறள் அறக் கருத்துக்களை விவிலிய நூல் அறக் கருத்துக்களுடன் ஒப்பிட்டு ஆய்வது இந்நூல். பண்டை யூதர்தம் கருத்துக்களும் முதலாம் இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிருத்துவத் தலைவர்களின் (அவர்களும் யூதர்களே) கருத்துக்களும் விவிலிய நூலில் உள்ளன. இவ்வாறு திருக்குறளைப் பிறிதொரு இனத்தவரின் அறநூல்களுடன் ஒப்பிட்டு ஆய்வதில் இரு நோக்கங்கள் உள. ஒப்பிட்டு ஆய்வதன் மூலம் திருக்குறட் கருத்துக்களையே இன்னும் ஆழமாகப் புரிந்துகொள்ளுதல் ஒன்றாகும். பிறநாட்டவரின் அல்லது இனத்தவரின் அறக்கருத்துக்களை அறிந்து கொள்ளுதல் மற்றொன்றாகும். 'ஒரே ஆசியா' எனவும் 'ஒரே உலகம்' எனவும் நாடுகளின் ஒற்றுமையையும் நல்லுறவையும் குறித்த கருத்துக்கள் பரவி வருகின்ற இக்காலத்தில் பிற நாட்டவரின் வரலாற்றை, இலக்கியத்தை, அறக் கருத்துக்கள் தோன்றி வளர்ந்த விதத்தை ஆய்ந்தறிதல் சுவையும் பயனும் உடையதே.

யூதர்கள் தமிழர்களைப் போலவே பண்டை நாகரிகமும் இலக்கியச் சிறப்பும் உடையவர்கள். விவிலிய நூலின் பகுதிகள் பல தற்போது கிடைத்துள்ள பழந்தமிழ் நூல்களை விடப் பழமையானவை

பாரதியார், நாமக்கல் கவிஞர் முதலியோர் நம் நாட்டைத்தான் துன்புற்றும் பிறர்க்கு நற்பயனளித்தநாடு எனப் போற்றினர். யூதர் இனமும் அவ்வாறே தான் துன்புற்றுப் பிறருக்கு நற்பயனளித்த ஓர் இனமாகும். அவர்தம் அறக்கருத்துக்களும் சீரியனவே.

திருக்குறளையும் விவிலிய நூலையும் ஒப்பிட்டு ஆயும் இப்பணியை எனக்கு நல்கிய மதுரைப்பல்கலைக் கழகத்தார்க்கு என் நன்றி உரியதாகும்.

காமாட்சி ஸ்ரீனிவாசன்

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| ஆசிரியரின் முன்னுரை | | | பக்கம் |
| 1. | யூத இலக்கியமும் விவிலிய நூலாய்வும் | | |
| 1. 1. | யூத இலக்கியத்தின் தோற்றம் | — | 1 |
| 1. 2. | எழுது கருவிகள் | — | 3 |
| 1. 3. | எழுதப்பட்ட மொழி | — | 3 |
| 1. 4. | யூதர் கவிதையின் தன்மைகள் சில | — | 4 |
| 1. 5. | சில அணிகள் | — | 6 |
| 1. 6. | சில இலக்கிய மரபுகள் | — | 11 |
| 1. 7. | விவிலிய நூல் ஆய்வு | — | 12 |
| 1. 8. | விவிலிய நூலின் பகுப்பு | — | 13 |
| 2. | முதலைந்து நூல்கள் | — | 14 |
| 2. 1. | முதல் ஐந்து நூல்கள் வரலாறு | — | 14 |
| 2. 2. | யூதர்குல முன்னோர்களைக் குறித்த கதைகள் | | 21 |
| 2. 3. | மோசேயும் அவர் காட்டிய நீதியும் | — | 28 |
| 2. 3. 1. | மோசேயின் வாழ்க்கை | — | 28 |
| 2. 3. 2. | நீதிக் கோட்பாடுகள் | — | 29 |
| 2. 3. 2. 1. | அடிமை | — | 32 |
| 2. 3. 2. 2. | கொலை முதலியன | — | 33 |
| 2. 3. 2. 3. | கவனமின்மையால் நிகழும் குற்றம் | — | 36 |
| 2. 3. 2. 4. | களவு முதலியன | — | 37 |
| 2. 3. 2. 5. | கடன் | — | 38 |
| 2. 3. 2. 6. | ஒப்புரவு | — | 40 |
| 2. 3. 2. 7. | நடுவு நிலைமை | — | 42 |
| 2. 3. 2. 8. | சமூகத்தில் மாதர் நிலை | — | 46 |
| 2. 3. 2. 9. | விலங்குகளிடத்து அருள் | — | 50 |
| 2. 3. 2. 10. | குற்ற நிவாரண பலி | — | 54 |

| | | | |
|---|---|---|---|
| 2. 3. 2. 11. | ஒழுக்கம் | | 56 |
| 2. 3. 2. 12. | நேர்மையும் உள்ளத்தூய்மையும் | — | 58 |
| 2. 3. 2. 13. | வாணிபத்தில் நீதி | — | 62 |
| 2. 3. 2. 14. | செல்வமும் வறுமையும் | — | 63 |
| 2. 3. 2. 15. | நீதியும் விளைவும் | — | 66 |
| 2. 3. 2. 16. | சொத்துரிமை | — | 67 |
| 2. 3. 2. 17. | நாடும் அரசும் | — | 67 |
| 3. | வரலாற்று இலக்கியங்கள் | — | 70 |
| 3. 1. | யோசுவா | — | 70 |
| 3. 2. | நியாயாதிபதிகள் | — | 71 |
| 3. 3. | சாமுவேல் (இரு நூல்கள்) | — | 74 |
| 3. 4. | இராஜாக்கள் (இரு நூல்கள்) | — | 81 |
| 3. 5. | சில நீதிக் கருத்துக்கள் திருத்தமுறல் | — | 90 |
| 3. 6. | நாளாகமம் | — | 96 |
| 3. 7 | கடவுட் கொள்கையில் சில கருத்துக்கள் | — | 101 |
| 4. | தீர்க்கதரிசிகள் | — | 103 |
| 4. 1. | தீர்க்கதரிசிகள் வரலாறு | — | 103 |
| 4. 2. 1. | இத்தீர்க்கதரிசிகளின் கருத்துக்களும் திருக்குறளும் | — | 108 |
| 4. 2. 2. | இத்தீர்க்கதரிசிகளின் கடவுட் கொள்கை | — | 125 |
| 4. 3. 1 | எழாம் நூற்றாண்டில் வாழ்ந்தோர் | — | 130 |
| 4. 3. 2. | இவர்கள் கருத்துக்களும் திருக்குறளும் | — | 132 |
| 4. 3. 3. | இவர்களின் கடவுட் கொள்கை | — | 139 |
| 4. 4. 1. | ஆறாம் நூற்றாண்டில் கி. மு. 538-ஆம் ஆண்டின் முன் வாழ்ந்தோர் | — | 147 |
| 4. 4. 2. 1. | இவர்கள் கருத்துக்களும் திருக்குறளும் | — | 149 |
| 4. 4. 2. 2. | பதிலாளாகத் துன்பம் தீர்த்தல் | — | 152 |
| 4. 5. 1. | யூதர்கள் திரும்பியபின் வாழ்ந்தோர் | — | 156 |
| 4. 5. 2. | இவர்கள் கருத்தும் திருக்குறளும் | — | 160 |
| 4. 6. | தீர்க்கதரிசிகள் சிறப்பியல்பு | — | 164 |

| | | | |
|---|---|---|---|
| 5. | துதிப் பாடல்கள் | — | 165 |
| 5.1. | துதிப்பாடல்களும் பிறநூல்களும் | — | 166 |
| 5.2. | கடவுட் கொள்கையும் திருக்குறளும் | — | 170 |
| 5.3. | நீதிக் கருத்துக்கள் | — | 177 |
| 5.4. | பிற கருத்துக்கள் | — | 185 |
| 5.5. | பாடலுட் சிறந்த பாடல் | — | 198 |
| 6. | முதறிவு இலக்கியம் | — | 194 |
| 6.1. | நீதி மொழிகள் | — | 194 |
| 6.2. | யோபு | — | 210 |
| 6.3. | பிரசங்கி | — | 231 |
| 7. | நற்செய்தி நூல்கள் | | |
| 7.1. | கிருஸ்து பெருமான் | — | 242 |
| 7.2. | கிருஸ்துவின் நற்செய்தியும் திருக்குறளும் | | 255 |
| 7.2.1. | இல்லமும் அன்பும் | — | 261 |
| 7.2.2. | பிறர்க்கு உதவி | — | 263 |
| 7.2.3. | குற்றம் பொறுத்தலும் பகைவரிடத்து அன்பும் | | 266 |
| 7.2.4. | துறவு | — | 271 |
| 7.2.5. | நோன்பு முதலியன | — | 276 |
| 7.2.6. | சமூகத்தில் மாதர் நிலை | — | 278 |
| 7.2.7. | அரசியல் | — | 279 |
| 7.2.8. | உள்ளப்பண்புகள் | — | 280 |
| 7.2.9. | பிற கருத்துக்கள் | — | 285 |
| 8. | பிற நூல்கள் | | |
| 8.1. | திருத்தூதரின் செயல்கள் | — | 290 |
| 8.1.1. | இந்நூலில் அடங்கிய நீதிக் கருத்துக்கள் | — | 291 |
| 8.2. | வெளி | — | 297 |

| | | | |
|---|---|---|---|
| 9. | கடிதங்கள் | | |
| 9.1. | கடிதங்களின் வரலாறு | — | 302 |
| 9.2. | பவுலின் கடிதங்களும் திருக்குறளும் | — | 303 |
| 9.3. | திருக்கூட்ட ஆட்சி ஒழுங்கு குறித்த கடிதங்கள் | | 316 |
| 9.4. | எபிரேயர்க்கு எழுதப்பட்ட கடிதமும் பொதுக்கடிதங்களும் திருக்குறளும் | — | 317 |
| 9.5. | புதிய ஏற்பாட்டின் இறையியற் கொள்கையும் திருக்குறளும் | — | 325 |
| 9.6. | வீடு | — | 333 |
| 9.7. | முடிவுரை | — | 341 |
| | நூல் விளக்கம் | — | 343 |

1

# யூத இலக்கியமும் விவிலிய நூலாய்வும்

1.0. யூத இலக்கியம் மிகப் பழமையானது. தற்போது பழைய ஏற்பாட்டிலுள்ள நூல்களிற் சில கி.மு. எட்டாம் நூற்றாண்டில் தோன்றியவை. பல ஆறாம் நூற்றாண்டில் எழுந்தவை. மற்றும் பல நான்காம் நூற்றாண்டிலும் பின்னும் எழுந்தவை. பழைய ஏற்பாட்டிலுள்ள நூல்களனைத்தும் கிருத்துவின் காலத்திற்கு முற்பட்டவையே.

## 1. 1. யூத இலக்கியத்தின் தோற்றம்

யூத இலக்கியம் எழுத்து வடிவில் எழுதப்படுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே கதைகளும் பாடல்களும் மக்களிடையே வழங்கிவந்தன. இவை வாய்மொழியாக ஒருவருக்கொருவர் கூறப்பட்டுத் தலைமுறை தலைமுறையாக இம்முறையிலேயே காப்பாற்றப்பட்டு வந்தன.

கதைகள் பலவகையின. சில கதைகள் பழங்கால மக்கள் உள்ளத்தில் இயல்பாக எழத்தக்க சில கேள்விகட்கு விடையாகப் புனையப் பட்டன. உலகில் நோயும் துன்பமும் எவ்வாறு தோன்றின? மக்கள் ஏன் துன்புற்று உழுது விதைத்துப் பயன்கொள்ள வேண்டிய நிலையிலுள்ளனர்? பாம்பு ஏன் மக்களைக் கடிக்கிறது? அது ஏன்

கொடிய நஞ்சையுடையதாயுள்ளது? ஆகாயத்தில் வானவில் தோன்றுவது எப்படி? உலகில் பல மொழிகள் எவ்வாறு உண்டாயின? இத்தகைய கேள்விகட்கு விடையாகப் புனையப்பட்ட கதைகளே தற்போது ஆதியாகமத்தின் முற்பகுதியில் காணப்படுகின்றன. நீண்டகாலமாக வாய்மொழியாக வழங்கிவந்த இக்கதைகள் எழுத்து வடிவில் இலக்கியங்கள் தோன்றியபோது அவற்றில் சேர்க்கப்பட்டன. இவற்றில் பண்டைக்கால யூத மக்களிடையே பயின்ற சில நீதிக் கருத்துக்களும் அடங்கியிருப்பது பின்னர் ஆயப்படும்.

ஆபிரகாம் முதலிய யூதர் குல முன்னோர்களைக் குறித்த கதைகளும், மோசேயைக் குறிதத கதைகளும், யூதர்கள் கானான் நாட்டில் புகுந்தபின் நிகழ்ந்த போர்களையும், யூதர்களிடையே தோன்றிய தலைவர்களையும் குறித்த கதைகளும் கூடப் பல தலைமுறைகளாகச் செவிவழிச் செய்தியாக மக்களிடையே வழங்கி வந்த பின்பே எழுதது வடிவைப் பெற்றன. ஆகவே இவற்றிலெல் லாம் வரலாற்று உண்மையும் கற்பனையும் கலந்துள்ளன. யூதர் களிடையே அரசர்கள் தோன்றிய காலத்திலிருந்தே எழுதப்பட்ட இலக்கியங்கள் தோன்றலாயின.

கதைகளைப் போலவே சில பழைய பாடல்களும் கி.மு. ஆயிரத்துக்கு முன்பிருந்தே யூதர்களிடையே வழங்கிவந்தன. இவை பெரும்பாலும் வீரர்களையும் போர்களையும் குறித்த பாடல்களா யிருந்தன இவையும் பின்பு எழுதப்பட்ட இலக்கியங்களுள் புகுந்தன. முதலைந்து நூல்கள் என்னும பகுதியில் குறிப்பிடப்படும் லாமேக்கின் பாடலும் வரலாற்று இலக்கியங்கள் என்னும் பகுதியில் குறிப்பிடப் படும் தெபொராளின் பாடலும் இவ்வகையைச் சேர்ந்தனவே. லாமேக்கின் பாடல் யூதர்கள் பாலைவனத்தில் அலைந்து திரிந்த காலத்திலேயே தோன்றியிருக்க வேண்டுமென ஆய்வாளர் கருதுகின் றனர். முழுப்பாடலாகவன்றி இரண்டு மூன்று வரிகள் கொண்ட சிறு பகுதிகளாகவும் சில பழங்கவிதைகள் காப்பாற்றப்பட்டுப் பின் இலக்கியங்களில் சேர்க்கப்பட்டன.

சில பழமொழிகளும் விடுகதைகளும்கூட இவ்வாறே நெடுங் காலம் வாய்மொழியாக மக்களிடையே வழங்கி வந்து பின் நூல களுட் புகுந்தன. 'சவுலும் தீர்க்கதரிசிகளில் ஒருவனோ?' (Is Saul among the Prophets?) என்னும் பழமொழியும் (சாமு. 10.12) சவுலுக்கு அஞ்சி மறைந்து வசித்த தாவீது தற்செயலாகச் சவுலை எதிர்ப்பட்ட

போது கூறிய ஆகாதவர்களிடத்திலே ஆகாமியம் பிறக்கும்'[1] என்ற பழமொழியும் (சாமு. 24.13) இத்தகையவே. அக்காலத்திலேயே அது முதியோர் மொழி எனக் குறிப்பிடப்படுகிறது.

## 1. 2. எழுது கருவிகள்

நம் நாட்டில் பண்டையோர் எழுத்தாணி கொண்டு ஓலையில் எழுதினர். யூதர்கள் நாட்டில் எகிப்திலிருந்து தருவிக்கப்பட்ட பாப்பிரஸ் (Papyrus) என்னும் ஒரு வகை வரைதாள்களிலோ (நைல் நதியோரத்தில் வளர்ந்த நாணல்களினால் செய்யப்பட்டவை) அல்லது பதம் செய்யப்பட்ட நீண்ட தோல் சுருள்களிலோ எழுதினர். நீண்டகாலம் நிலைத்திருக்க வேண்டிய சமய நூல்கள் பெரும்பாலும் தோல் சுருள்களிலேயே எழுதிப் பாதுகாக்கப்பட்டன. தோல் சுருள் மிக நீளமாக இருந்ததனால் ஓர் அறிஞரின் கருத்தை எழுதியபின் தோலில் எஞ்சிய இடமிருப்பின் பிற்காலத்தவர் மற்றொரு அறிஞரின் கூற்றுக்களை அவ்விடத்தில் எழுதுதல் இயல்பு. இம்முறையிலேயே சில நூல்களில் பிற்சேர்க்கைகள் சேர்க்கப்பட்டன என்பர்.

## 1. 3. எழுதப்பட்டமொழி

விவிலியத்தில் பழைய ஏற்பாடு முதலில் எபிரேயமொழியில் எழுதப்பட்டுப் பின்பே வேறு பலமொழிகளிலும் மொழிபெயர்க்கப் பட்டது. பழைய ஏற்பாட்டு நூல்கள் வெவ்வேறு காலத்தில் எழுதப்பட்டன. பொதுவாக எபிரேய மொழியில் எழுதப்பட்டிருப் பினும் பழைய ஏற்பாட்டில் கிளைமொழி வேறுபாடுகளும் நடையிலும் மொழியின் தன்மைகளிலும் காணப்படும் வேறுபாடுகளும் பலவுள என்பர். புதிய ஏற்பாட்டு நூல்கள் தற்போதுள்ள வடிவில் முதலில் கிரேக்க மொழியிலேயே எழுதப்பட்டுப் பின்பு வேறுபலமொழி களிலும் மொழிபெயர்க்கப்பட்டன. முதலில் கிருத்துவின் சீடர்களும் அவரைப் பின்பற்றினோரும் அவர் போதனைகளையும் வாழ்க்கைக் குறிப்புக்களையும் அராமிக் (Aramic) என்னும் மொழியில் எழுதினர்.

1. 'ஆகாதவர்களிடத்தில்ஆகாமியம்பிறக்கும்' என்பதுதீயவர்கள் இயல்பாகத்தீமை யைச் செய்வர் என்னும் கருத்தைத் தரும் ஒரு பழமொழியாகும். ஆங்கிலத்தில் From the wic ed comes forth wickedness என்னும் வடிவத்தில் இப்பழமொழி காணப்படுகிறது. தீயவர்களே தீமையைச் செய்வர் : தான் தீயவதன அல்லன்; ஆகவே சவுலுக்குத் தீங்கு செய்யத் தக்கவனல்லன் என்ற கருத்தில் தாவீதுஇப் பழமொழியைக் கூறுகின்றான்.

எனவும் பின்பே நற்செய்தி நூல்கள் கிரேக்க மொழியில் எழுதப்பட்டன எனவும் ஆராய்ச்சியாளர் கருதுவர். புதிய ஏற்பாடு தற்போதுள்ள வடிவையடைந்தது கிரேக்க மொழியிலேயே. தற்காலத்தில் நம்நாட்டில் ஆங்கிலம், மொழிகற்றோரிடையே ஒரு பொது மொழியாக வழங்குதல் போன்று புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் ரோம ஆட்சிக்கு உட்பட்ட நாடுகளனைத்திலும் கற்றோரிடையே கிரேக்க மொழி ஒரு பொதுமொழியாக வழங்கிற்று. யூதர்கள் மட்டுமன்றி வேறு பல இனத்தவருங்கூட அக்காலத்தில் கிருஸ்துவைப் பின்பற்றுவோராகச் சேர்ந்தனராகையினால் அனைவரும் படித்துப் பயனடையுமாறு புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில் எழுதப்பட்டது.

## 1. 4. யூதர் கவிதையின் தன்மைகள் சில

தமிழில் எதுகை, மோனை, சந்தம் என்பன மூன்றும் கவிதைக்கு உறுப்பாக அமைகின்றன எதுகை மோனையின்றிச் செந்தொடையாகவும் கவி புனையலாமாயினும் பெரும்பாலும் எதுகை மோனை பொருந்தவே தமிழ்க் கவிதைகள் யாக்கப்படுகின்றன. ஆங்கிலத்தில் எதுகையும் சந்தமும் கவிதைக்கு உறுப்பாக அமைகின்றன. மோனை பொதுவாக எப்போதும் காணப்படுவதின்று. மோனையை ஆங்கிலத்தில் ஓர் அணியாகவே சில பாடல்களில் பயன்படுத்துவர்.

யூதர்களின் கவிதைக்குச் சந்தம் ஓர் உறுப்பாகும். எதுகை பொருந்திய கவிதைகளும் மூலமொழிப் பழைய ஏற்பாட்டில் உள எதுகையை அவர்கள் ஓர் அணியாகப் பயன்படுத்தினர். ஆதியாகமத்திலுள்ள லாமேக்கின் பாடல் (4. 23-24) எதுகையமைப்பைப் பெற்றுள்ளது எனப் பழைய ஏற்பாட்டை மூலமொழியில் கற்றுஆய்ந்தோர் கூறுகின்றனர். தமிழில் சந்தம் நேர்நிரை என்னும் அசைகளை அமைக்கும் முறையினால் உண்டாவது எபிரேய மொழியில் சந்தம் குறில் நெடில் ஓசைகளை யமைக்கும் முறையினாலன்றி அசையழுத்தத்தினாலேயே (By Accent) உண்டாகிறது. ஆங்கிலத்திலும் சந்தத்திற்கு அசையழுத்தமே முக்கியமாக அமைகிறது.

சந்தத்தோடு எபிரேயமொழிக் கவிதைக்கு மற்றோருறுப்பாக அமைவது ஒத்த இரு கருத்துக்களை அடுத்தடுத்து வைத்து இணையியைபாகத் தொடுக்கும் ஒருமுறையே (Parallelism) ஆகும். எதுகையும் சந்தமும் மொழிபெயர்ப்பில் மறைந்துவிடினும் இணை

யிலையபு என்னும் இத்தன்மையை மொழிபெயர்ப்பிலும் காணலாம். புதிய அமெரிக்க மொழிபெயர்ப்பில் இவ்வித இயைபு தெளிவாகக் காட்டப்படுகின்றது இயைபு கூட்டியையபாகவோ (synthesis) முரணியையபாகவோ (Antithesis) இருக்கலாம்.

எ. கா. கூட்டியையபு :

எளியவன் என்றைக்கும் மறக்கப்படுகிறதில்லை.

சிறுமைப்பட்டவனுடைய நம்பிக்கை ஒருபோதும் கெட்டுப் போவதில்லை. (சங். 9.18)

முரணியையபு.

கர்த்தர் நீதிமான்களுடைய வழியை அறிந்திருக்கிறார்
துன்மார்க்கருடைய வழியோ அழியும் (சங். 1.6)

இயைபு ஓர் உவமை வடிவாகவும் இருக்கலாம் :

மதிகேடாய் நடக்கிற அழகுள்ள ஸ்திரீ
பன்றியின் மூக்கிலுள்ள பொன் மூக்குத்திக்குச் சமானம்.
(நீதி. 11.22)

இதுவும் ஒருவகைக் கூட்டியையபே (Synthesis) தமிழிலும் இயையபை (Parallelism) பல கவிதைகளில் காணலாம். தமிழில் இவை ஆங்காங்கே அணிகளாகவே பயன்படுத்தப்படுகின்றன. எபிரேய மொழியில் அவை கவிதைக்கு எப்பொழுதும் வேண்டப்படும் உறுப்பாக அமைகின்றன.

இயைபு நயத்தைத் திருக்குறளிலும் காணலாம்.

அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு (135)

மனநல மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும் (457)

என்பன கூட்டியையபே (Synthesis) ஆகும்.

இனிய வுளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. (100)

இத்தகைய உவமைகளும் ஒருவகை இயைபே.

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும் (121)

இறலினும் எண்ணாது வெஃகின் விறலினும்
வேண்டாமை யென்னும் செருக்கு (180)

என்பன முரணியையே. மற்றும் பல குறள்களையும் வள்ளுவர் முரணியைபு நயம் தோன்ற யாத்துள்ளார்.

பழைய ஏற்பாட்டில் நீதிமொழி, சங்கீதம் என்னும் பகுதிகளில் முரணியைபு நயத்தை அதிகமாகக் காணலாம். நீதிகளைச் சுருக்க மாகக்கூறிமக்கள் உள்ளத்தில் பதிய வைப்பதற்குப் பலமொழிகளிலும் இதுஒரு நல்ல முறையாகப் பயன்பட்டது போலும்.

பழைய ஏற்பாட்டில் யோபு,சங்கீதம், நீதிமொழிகள், உன்னதப் பாட்டு என்னும் நூல்கள் கவிதைவடிவானவை, தீர்க்கதரிசிகளின் நூல்களில் கவிதையும் உரைநடையும் விரவியுள்ளன. எசேக்கியேல், ஆகாய்,சகரியா, மல்கியா என்போரின் நூல்கள் பெரும்பாலும் உரை நடையினாலானவை. ஏனைய தீர்க்கதரிசிகளின் நூல்களனைத்திலும் பெரும்பகுதி கவிதையே

.5. சில அணிகள்

பழைய ஏற்பாட்டில் கவிதைப் பகுதிகளில் சொல்லணிகள் பொருளணிகள் பல பொதிந்துள்ளன. சொல்லணிகள் மொழி பெயர்ப்பில் மறைந்து விடினும் பொருளணிகளை மொழிபெயர்ப்பிலும் காணலாம்.

யோபு, உன்னதப் பாடல் என்னும் பகுதிகளில் இயற்கைப் பொருள்கள் அல்லதுஇயற்கைக் காட்சிகள் அழகுறப் புனைந்துரைக்கப் படுகின்றன. சங்கீதம் என்னும் துதிப்பாடல்களிலும் இறைவனின் படைப்புத்திறத்தைஎண்ணி வியக்கும் கவிஞர்கள் நீலவானையும் விண் மீன்களையும் காலையில் தோன்றும் கதிரொளிச் சிறப்பையும் கொந் தளிக்கும் கடலையும் பலபடப் புனைந்துரைக்கின்றனர்.

தீர்க்கதரிசிகளின் நூல்களில் வரும் கவிதைப் பகுதிகள் பல மூலமொழியில் இனிய ஓசையையுடையனவாய்ச் சிறந்த இலக்கிய மாகத் திகழுகின்றன என்பர். யூத கவிஞர்கள் எதுகையை ஒரு அணியாகவே பயன்படுத்தினர். தாம் வற்புறுத்திச் சொல்ல விரும்பும்

கருத்துக்களை எதுகையணி பெற அமைத்து மக்களுள்ளத்தில் பதிய வைப்பதில் ஏசாயா வல்லவரென்பர்.

தமிழ்நாட்டில் களப்பிரர் படையெடுப்பின் முன் யாராவது அப்படையெடுப்பு நிகழப்போவதையும் அதனால் நாட்டில் ஏற்படப் போகும் துன்பத்தையும் கூறி மக்களை எச்சரிக்க முன் வந்திருந்தால் "மதுரையே நீ கசப்பாவாய்; நெல்வேலியே உணவில்லாத நகராவாய், உறையூரிலுள்ளோரே அங்கு உறையாது நீங்குவீர்கள்; வஞ்சியிலுள்ளோரே உங்கள் வஞ்சியர் கலங்கி யழுவார்கள்" எனக் கூறி எச்சரித்திருக்கலாம். மீகா அக்காலத்தில் தமிழ்நாட்டில் வாழ்ந்திருந்தால் அவ்வாறுதான் கூறியிருப்பார். மீகாவின் முதலதிகாரத்தில் இவ்வாறே யூதநாட்டின் நகர்களின் பெயர்கள் சில சிலேடையணி பொருந்த அளப்படுகின்றன பகைவரால் நாட்டுக்கு நேரப்போகும் அழிவைக் குறித்துக் கூறும்போது மீகா, 'சொல்நகரில் இதைச் சொல்ல வேண்டாம்; அழுநகரில் அழ வேண்டாம்; துகளூரில் உள்ளவர்களே தூசில் விழுந்து புரளுங்கள்; அழகு நகரில் உள்ளவர்களே நல்லாடைகளின்றி வெட்கத்துடன் வெளியே செல்வீர்கள்; செலவ நகரில் உள்ளவர்களே உங்கள் செலவு தவிர்க்கப்படும்' என்றார்[2]. இத்தகைய சொல்லணிகள் மொழிபெயர்ப்பில் மறைந்து விடுகின்றன. விவிலியத்தை மூல மொழியில் கற்ற அறிஞர் தம் ஆய்வு நூல்களில் இவற்றை எடுத்துக் காட்டுகின்றனர். தீர்க்கதரிசிகளின் காலத்தின் முன்னும் யூதர்களிடையே கவிதைகள் வழங்கிவந்தன எனினும் இவ்வறவோர்களின் நாவில் கவிதை பல புது அணிகளையும் இலக்கிய நயங்களையும் பெற்றுச் சிறந்தது.

நம் நாட்டிலும் பக்தியியக்கத்தின் காலத்தில் கவிதை பல புதிய செய்யுள் வடிவங்களையும் புதிய சந்தங்களையும் பல புதிய அணிகளையும் பெற்றுப் பொலிவெய்தியதென்பது யாவரும் அறிந்ததே. பக்திக் கவிஞர்களும் சொல்லணிகளை ஆங்காங்கே பயன்படுத்தினர் —

2. E. Cutler, One Prophet and Another, p. 53
Tell it not in Tell-town
Weep not in Weep - Town
In the House of dust
Roll thyself in dust
Pass awa inhabitant of Beauty-town
in nakedness and shame
The inhabitant of March-town
shall not march forth.

சுந்தரர் 'ஒற்றியூரேலும்மதன்று' என நகைச்சுவை தோன்ற ஒற்றியூர் என்னும் ஊரின் பெயரை ஒற்றிவைக்கப்பட்ட ஊர் எனச் சிலேடையாகக் கொண்டார். 'தேருரார் மாவூரார் திங்களூரார்'[3] (தேரில் ஏறிச் செல்லார், குதிரையில் ஏறிச் செல்லார், திங்கள் என்னும் ஊரையுடையவர்) எனவும் 'பாருலாம் புகழேற்றார் பைங்கணேற்றார் பலியேற்றார்'[4] (உலகு நிறைந்த புகழைப் பெற்றார், பசிய கண்ணையுடைய எருதையுடையார், பலியேற்றார்) எனவும் பிற இடங்களிலும் நாவுக்கரசர் சிலேடையைப் பயன்படுத்தினார். சம்பந்தர் சிலேடை, மடக்கு முதலிய அணிகளைப் பயன்படுத்திய இடங்கள் பல அவற்றைச் சிறப்பாக அவர் பிறந்த ஊராகிய சீகாழியைக் குறித்த பதிகங்களில் காணலாம்.

இவ்வாறே தீர்க்கதரிசிகளும் சொல்லணிகளை ஆங்காங்கே பயன்படுத்தினர். அன்றியும் தம் கருத்துக்களை விளக்க அவர்கள் பல உவமைகளையும் உருவகங்களையும் பயன்படுத்தியதும் உண்டு. இவற்றை மொழிபெயர்ப்பிலும் காணுதல் கூடும். தீர்க்கதரிசிகள் என்னும் பகுதியில் இவை விளக்கப்படுகின்றன. தம நாட்டிலுள்ள இயற்கைப் பொருள்கள், தம் நாட்டு மக்களின் வாழ்க்கை ஆகியவற்றிற்கேற்ப அவர்கள் உவமைகளை அமைத்திருப்பினும் அவர்கள் கூறும் உவமைகள் சில நம் பக்தி இலக்கியங்களில் காணும் உவமைகளுடன் ஒத்திருப்பதையுங் காணலாம். இவ்வொற்றுமையும் தீர்க்கதரிசிகள் என்னும் பகுதியில் சுட்டப்படும்.

தீர்க்கதரிசிகளின் கவிதைகள் பலவற்றில் பொருளுக்கேற்ற ஓசை அமைந்திருப்பதையும் மூலமொழியில் பழைய ஏற்பாட்டைக் கற்ற அறிஞர் எடுத்துக் கூறுகின்றனர். எரேமியா தீர்க்கதரிசியின் நூலின் மூற்பகுதியில் காணப்படும் கவிதைகள், ஆமோசின் சில வரிகள், புலம்பல் என்னும் பகுதியில் அடங்கிய பாடல்கள் ஆகியவை ஓசையின் மூலமாகவே துயரத்தைப் புலப்படுத்தக் கூடியனவாக அமைந்துள்ளன என்பர்[5]. அதேபோல மகிழ்ச்சிதரும் செய்தியைக்

---

3. திருநாவுக்கரசர் தேவாரம் 181. 3 தலமுறை
4. ,, ,, 36. 4 தலமுறை
5. B W. Anderson, Understanding the Old Testament, p. 399
"*Often these religious lyrics are cast in a 3/2 quinah meter. the mournful cadence so appropriate for expressing sorrow (see Amos 5.2. and lamentations).*"

கூறும் இரண்டாம் ஏசாயாவின் பாடல்கள் பெருமிதத்தையும உவகையையும் காட்டும் ஓசையோடு பொருந்தியுள்ளன என்பர்[6].

தமிழிலக்கியங்களில் பொருளுக்கேற்ப ஓசையை அமைக்கும் திறம் கம்பராமாயணம், பெரிய புராணம் போன்ற காவியங்களிலேயே சிறப்பாகக் காணப்படுகின்றதெனினும் இத்தன்மையைப் பக்தி இலக்கியங்கள் சிலவற்றிலும் காணலாம். திருஞான சம்பந்தரின் தேவாரப் பதிகங்கள் சில பொருளுக்கு ஏற்ற ஓசை பொருந்தியனவாக உள்ளன. திருக்குற்றாலப் பதிகத்தில்,

வம்பார் குன்றம் நீடுயர்சாரல் வளர்வேங்கை
கொம்பார் சோலைக் கோலவண்டியாழ்செய் குற்றாலம்

309.1 தலமுறை

என்பன போன்ற வரிகளில் வரியின் நீளமும் நேரசைகளின் மிகுதியும் மலையின் உயர்வை மலைக்காட்சியின் சிறப்பைப் புலப்படுத்திநின்றன.

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
பானல்வாய்ச்சிறு பாலனிங்கிவன் என்று நீ பரிவெய்திடேல்
ஆனைமாமலை யாதியாய இடங்களில் பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன் திரு ஆலவாய் அரன் நிற்கவே

209.1 தலமுறை

என்னும் பாடலின் ஓசையே பெருமிதவுணர்ச்சியைக் காட்டுகின்றது.

ஏழு சீர் பொருந்த நீள் வரிகளையமைத்ததனாலும் நேரசைகளின் மிகுதியாலும் அவ்வுணர்ச்சி தோற்றுவிக்கப்படுகிறது.

செய்ய னேதிரு வாலவாய் மேவிய
அய்ய னேஅஞ்சல் என்றருள் செய்யெனைப்
பொய்ய ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே

292.1 தலமுறை

என்ற பாடலில் குறுகிய வரிகளும் குறிலோசையின் மிகுதியும் கவிஞர்க்கு அப்போது ஏற்பட்ட நெருக்கடியான நிலைமையையும் உடனடியாக உதவி வேண்டி நின்ற தன்மையையும் உணர்த்து

6. B.W. Anderson, Understanding the Old Testsament, p. 410
"The poetry to a pitch of exultation as Second Isaiah contemplates the New Exodus".

சின்றன. இவ்வாறே தீர்க்கதரிசிகளும் தம்கவிதைகளில் சீரமைப்பினாலும் அசையழுத்தத்தை வைக்கும் முறையினாலும் பொருளை அல்லது உள்ளத்துணர்ச்சியை ஓசைமூலம் புலப்படுத்தினர்.

எபிரேயக் கவிதையில் எதுகை எப்போதும் அமைவதில்லை. வரிகளை இணைப்பதற்கு இயைபு (Parallelism) என்னும் தன்மையுடன் வேறு சில முறைகளையும் கவிஞர் பயன்படுத்தினர். எழுத்து வரிசையின்படி ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு வரியின் முதலெழுத்தாக வரும்படி தொடுத்தல் ஒருமுறையாம் 'ஆத்திசூடி', கொன்றை வேந்தன்' என்னும் இடைக்கால நீதி நூல்களில் அமைந்திருப்பதும் இம்முறையேயாம். 'ஆத்திசூடி'யில் எதுகையமைப்பு இல்லை. அறஞ்செய விருப்பு, ஆறுவது சினம், இயல்வது கரவேல், ஈவது விலக்கேல் என அடிகள் எழுத்து வரிசையின்படி அமைவதனாலே இணைந்து நிற்கின்றன பழைய ஏற்பாட்டில் நீதிமொழிகள் என்ற நூலின் இறுதிப் பகுதியில் மூலமொழியில் இவ்வகை எழுத்து வரிசையமைப்பைக் கொண்ட செய்யுள் உள்ளது[7], சில தீர்க்கதரிசிகளின் நூல்களிலும் இவ்வித அமைப்பைக் காணலாம்[8] (நாகூம் 1). சங்கீதம் என்னும் பகுதியில் சில பாடல்களும் இவ்வித வரியமைப்பைக் கொண்டன இப்பகுதியில் மிக நீளமான துதிப்பாடல் (சங். 119) ஒன்று உண்டு. இது எட்டு அடிகளைக் கொண்ட பல கவிதை (Verses) களை உடையது. ஒவ்வொரு கவிதையும் எபிரேய எழுத்து வரிசையின்படி ஒவ்வொரு எழுத்தை முதலெழுத்தாகக் கொண்டு தொடங்குவது[9] இந்நயங்களை மூலத்திலேயே காணலாம். மொழி

7. B W Anderson, *Understanding the Old Testament*, p.469
*"Proverbs (31 10.31) An Alphabetic Poem on the Good House Wife"*

8. H. W Robinson, *The Old Testament-Its Making and Meaning* p.97

*"The first chapter of the book of Nahum is a poem in which the acrostic alphabetic form can be traced at least down to the tenth verse".*

9. B W Anderson, *Understanding the Old Testament*, p. 483
*"It (ps. 119) is an acrostic or alphabetic study, consistin of as many eight line stanzas as there are letters in the Hebrew alphabet. Each of the eight lines begins with the same Hedrew letter, according to the position of the stanza in the alphabetical sequence".*

பெயர்ப்பில் காணுமாறில்லை. திருநாவுக்கரசர் தேவாரத்தில் பொது என்னும் பகுதியில் சித்தத்தொகைத் திருக்குறுந்தொகை என்ற பாடலிலும் இந்நயத்தைக் காணலாம். அகர வரிசையின்படி ஒவ்வொரு எழுத்தை முதலெழுத்தாகக் கொண்டு தொடங்கும் குறுந் தொகைகளைக் கொண்ட (அண்டம், ஆதி, இட்ட, ஈறு முதலிய தொடக்கத்தன) இப்பாடலும் மிக நீண்டு 30 கவிதைகளையுடையதா யமைந்துள்ளது (310 தலமுறை).

விவிலிய நூலின் இலக்கிய நயத்தை ஆய்வது இந்நூலின் முக்கிய நோக்கமன்றெனினும் யூத இலக்கியத்தைத் தமிழ்நாட்டவர் புரிந்து கொள்ள உதவுவதற்காகச் சில ஒற்றுமைகள் இங்குக் காட்டப் பட்டன. இவை விரிப்பின் பெருகும்.

## 1. 6. சில இலக்கிய மரபுகள்

வள்ளுவர் தம் கருத்துக்களை விளக்க எடுத்துக்காட்டுவமை. பிறிதுமொழிதலணி என்னும் அணிகளை ஆடிக்கடி பயன்படுத்தினார். யூத அறிஞர்கள் உருவகக் கதையைப் பயன்படுத்தினர்.

பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது (481)

என்பது எடுத்துக்காட்டுவுவமை.

நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற. (495)

என்பது பிறிதுமொழிதல் அணியாம். காலமும் இடமும் வாய்க்கும் போதே போரில் வெற்றி பெறுதல் அரசர்க்கு எளிதாகும் என்பதை இக்குறள்கள் உணர்த்தின. இவற்றையே சற்று விரித்துரைப்பின் அவை உருவகக் கதைகளாகும். இங்கு முற் கூறப்பட்ட குறளில் வரும் கருத்தைத் திருத்தக்கத்தேவர் ஒரு செய்யுளில் எடுத்தாண்டார்.

இடத்தொடு பொழுதும் நாடி
யெவ்வினைக் கண்ணு மஞ்சார்
மடப்பட லின்றிச் சூழும்
மதிவல்லார்க் கரிய துண்டோ
கடத்திடைக் காக்கை யொன்றே
ஆயிரங் கோடி கூகை
இடத்திடை யழுங்கச் சென்றாங்
கின்னுயிர் செகுத்த தன்றே
(சீவக சிந்தாமணி 1927)

இங்குப் 'பகல் வெல்லும் கூகையைக் காக்கை' எனப் பொதுவாகப் பறவைகளின் இயல்பைக் கூறுதலின்றி ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியைக்

கூறுவதுபோல ஒரு இடத்தில் (நீரற்ற நிலத்தில்) ஒருகாக்கை ஆயிரங் கோடி கூகைகளை அவை வசிக்கும் இடத்திலேயே சென்று கொன்றது எனக் கூறுவதனால் இது உருவகக் கதையேயாயிற்று. இவ்வாறே உருவகக் கதைகள் நீதிக் கருத்துக்களை விளக்கப் பயன்படுகின்றன.

பழைய ஏற்பாட்டில் வரலாற்றிலக்கியங்களில் ஆங்காங்கே உருவக் கதைகளைக் காணலாம். யூதர்களின் நாடு இஸ்ரவேல், யூதா என்ன இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டு இருவேறு அரச குடும்பங்களால் ஆளப்பட்ட காலத்தில் யூதாவின் அரசன் அமத்சியா இஸ்ரவேல் அரசனான யோசுவாவுடன் போர் செய்ய விரும்பி 'நாம் இருவரும் போரில் ஈடுபட்டு நம் திறமையைக் காண்போம்' எனச் சொல்லியனுப்பினான். இஸ்ரவேல் அரசன் அதற்கு மறுமொழியாக ஓர் உருவகக் கதையைக் கூறினான். ''லிபனோனிலுள்ள முட்செடியானது, லிபனோனிலுள்ள கேதுரு மரத்தை நோக்கி நீ உன் மகளை என் மகனுக்கு விவாகம் செய்து கொடு என்று சொல்லச் சொல்லிற்று. ஆனாலும் லிபனோனிலுள்ள ஒரு காட்டுமிருகம் அந்தவழி போகையில் ஓடி அந்த முட்செடியை மிதித்துப் போட்டது'' (II இரா. 14.9) இதுவே கதை. தன் தகுதியறியாது பெருமை பாராட்டுவது எத்தகைய வீண்செயல் என்பதைக் கதை காட்டுகிறது. தீர்க்கதரிசிகளும் சில அமையங்களில் உருவகக் கதைகளைப் பயன்படுத்தினர். புதிய ஏற்பாட்டில் நற்செய்தி நூல்களில் இயேசுபெருமான் கூறிய உருவகக் கதைகள் சிறப்பாகக் காணப்படுகின்றன.

1. 7. விவிலிய நூல் ஆய்வு

தமிழிலக்கிய வரலாற்றில் கால ஆராய்ச்சி இன்னும் தெளிவாகவில்லை. தொல்காப்பியம் சிலப்பதிகாரம் முதலிய நூல்கள் தோன்றிய காலத்தைக் குறித்து இன்னும் ஆராய்ச்சியாளர் வேறுபட்ட கருத்தைத் தெரிவிக்கின்றனர். தமிழ்நாடு பூகோள அமைப்பின்படி மூன்று பக்கத்திலும் கடலால் சூழப்பட்ட பாதுகாப்பான இடமாக உள்ளதால் பண்டைத் தமிழருக்குப் பிறநாட்டவர்களுடன் வாணிபத் தொடர்பு இருந்ததேயன்றி அரசியல் தொடர்பு (போர், உடன்படிக்கை முதலியன) அதிகம் ஏற்பட வாய்ப்புஇல்லை. ஆகவே கால ஆராய்ச்சிக்குப் போதிய சான்றுகளும் கிடைத்தில.

யூதர்களோ மத்தியதரைக் கடலின் அருகில் அக்காலத்தில் நாகரிகத்தில் உயர்ந்திருந்த எகிப்தியர் அசீரியர் முதலிய பல இனத்தவரிடையே வாழ்ந்தவர்கள். ஆதலின் அவர்கள் வரலாற்றை அயலிலுள்ள பல நாடுகளிலும் கிடைக்கும் சான்றுகளைக் கொண்டு

ஆராய்தல் கூடும். விவிலிய நூலை ஆராய்வோர் அவ்வாறே யூதர்கள் வாழ்ந்த கானான் நாட்டில் மட்டுமன்றி எகிப்து, அசிரியர், பாபிலோனியா ஆகிய பல நாடுகளினின்றும் புதைபொருள் ஆய்வாளரால் கண்டுபிடிக்கப்பட்ட பல சான்றுகளை ஒப்பிட்டு ஆய்ந்து யூத வரலாற்றையும் அவ்வரலாற்றின் முக்கிய நிகழ்ச்சிகள் நிகழ்ந்த காலத்தையும் நன்கு ஓர்ந்து நிறுவியுள்ளனர். எடுத்துக்காட்டாக யூதர்கள் உரிமையற்றவர்களாய் எகிப்தில் வாழ்ந்த காலத்தில் கடின வேலைக்கு உட்படுத்தப்பட்டனர் என யாத்திராகமம் கூறுகிறது. ராம்சேஸ் என்னும் பண்டசாலைப் பட்டினத்தை அவர்கள் கட்டினார்களெனக் குறிப்பிடப்படுகிறது (யாத். 1. 11). எகிப்தில் கிடைத்த சான்றுகளும் இரண்டாம் ராம்சேஸ் என்னும் எகிப்திய மன்னன் தன் கட்டிட வேலைகளில் பணிசெய்ய 'அபிரு' என்னும் இனத்தவரை (அபிரு,) எபிரேயர் என்ற சொல்லின் மற்றொரு வடிவம்) பயன்படுத்தினான் எனக் கூறுகின்றன[10]. ஆகவே யூதர்கள் கி.மு. 13 ஆம் நூற்றுண்டில் அல்லது அதற்கு முன்பு உரிமையற்றவர்களாய் எகிப்தில் கடுந்தொழில் செய்து வாழ்ந்தது உண்மையே எனக்கொள்வர் இவ்வாறே பிறவும்.

## 1.8. விவிலிய நூலின் பகுப்பு

யூத இலக்கியத்தின் தன்மையும் தற்கால அறிஞர்கள் விவிலிய நூலை ஆயும் முறையும் மேலே விளக்கப்பட்டுள்ளன. ஆயினும் விவிலிய நூலில் காணப்படும் நீதிக் கருத்துகளைத் திருக்குறளுடன் ஒப்பிட்டு ஆய்வதே இந்நூலின் நோக்கமாகும். வரும் அதிகாரங்களில் விவிலிய நூலின் பகுதிகள் பின்வருமாறு பகுக்கப்பட்டு அம் முறையில் ஆயப்படுகின்றன.

அ) பழைய ஏற்பாடு (Old Testament)

1. முதலைந்து நூல்கள் (Pentateuch)
2. வரலாற்று இலக்கியங்கள் (Historical Literature)
3. தீர்க்கதரிசிகள் (Porphets)
4. துதிப்பாடல்களும் பிறபாடல்களும் (Psalms and Solomon's Songs)
5. முதறிவு இலக்கியம் (Wisdom Literature)

ஆ) புதிய ஏற்பாடு (New Testament)

1. நற்செய்தி நூல்கள் (Gospels)
2. பிற நூல்கள் (Acts of the Apostles and Revelations)
3. கடிதங்கள் (Epistlies)

10. B. W. Anderson, Understanding the Old Testament, p.33.

2

# முதலைந்து நூல்கள்

## 2. முதல் ஐந்து நூல்கள்[1]

ஆதியாகமத்திலிருந்து உபாகமம் வரையுள்ள இவ்வைந்து நூல்களும் உலகம் தோன்றிய காலத்திலிருந்து மோசேயின் காலம் வரை யூதர் குலத்தின் கதையைக் கூறும். மோசேயின் நீதி (The Law of Moses) என வழங்கப்படும் யூத இனத்தவரின் பழைய நீதிக்கோட்பாடுகள் இவற்றிலேயே காணப்படுகின்றன.

விவிலிய நூலை ஆராய்ந்த அறிஞர் நான்கு மூலங்களினின்றும். எடுக்கப்பட்ட பகுதிகள் இவ்வைந்து நூல்களிலும் காணப்படுகின்றன என்பர். கி.மு. 850—750 என்னும் ஆண்டுகட்கிடையே இருவர் தனித்தனியாக யூத இனத்தின் முன்னோர்களைக் குறித்து மக்களிடையே வழங்கிய கதைகள், வரலாற்று நிகழ்ச்சிகள் ஆகியவற்றைத் தொகுத்து எழுதினர் எனவும், அவ்விருவரால் எழுதப்பட்டவை இம்முதலைந்து நூல்களை ஒன்றாகத் தொகுத்தவர்க்குப் பயன்பட்டன எனவும் கூறுவர்.

---

1. இந்நூலிலுள்ள ஒவ்வொரு பகுதியிலும் அவ்வப்பகுதியில் ஆயப்படும் விவிலிய நூற்பிரிவுகள் தோன்றிய காலம் சூழ்நிலை ஆகியவை விளக்கப்படுகின்றன. இச்செய்திகட்கு மூலம் பின் நூல்விளக்கத்தில் தரப்பட்டுள்ள விவிலிய நூலாய்வு குறித்த ஆங்கில நூல்களே பொதுவாகப் பலராலும் ஏற்றுக் கொள்ளப்படும் கருத்துகள். இவ்வாறு அறிஞர் கூறுகின்றனர் என்றோ ஆராய்ச்சியாளர் கருதுவர் என்றோ அவ்வவ்விடங்களில் குறிப்பிடப்படுகின்றன. தனிப்பட்ட ஓர் ஆய்வாளரின் கருத்தை எடுத்துச் சொல்ல நேரின் இடம் சுட்டி அடிக்குறிப்பு தரப்படுகிறது. ஒவ்வொரு பகுதியிலும் இவ்வாறே.

இந்த நான்கு மூலங்களினின்றும் திரட்டபட்ட பொருள்களால் உருவாகிய இம்முதலைந்து நூல்கள் முழு வடிவையடைந்தது கி. மு. ஆறாம் நூற்றாண்டின் இறுதியிலேயே எனலாம்.[2]

2. 1. சில பழங்கதைகள்

ஆதியாகமத்தின் முற்பகுதியில் காணப்படும் கதைகள் யூதர்களிடையே மிகப் பண்டைக் காலந்தொட்டு வழங்கி வந்த கதைகளேயாகும். இவை வரலாற்று நிகழ்ச்சிகளெனக் கொள்ளத்தக்கவை அல்ல. இவற்றில் சில நற்கருத்துக்களை விளக்குவன.

ஆதாம் ஏவாளின் மக்களாகிய காயீன் ஆபேல் என்பவர்களின் கதையும் ஆதியாகமத்தில் காணப்படுகிறது. இவ்விருவரும் இறைவனுக்குக் காணிக்கை செலுத்துகின்றனர். ஆபேலின் காணிக்கை ஏற்றுக்கொள்ளப்படுகிறது காயீனின் காணிக்கையோ ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இதனால் பொறாமை கொண்ட காயின் ஆபேலைக் கொலை செய்தான்.

"கர்த்தர் காயீனை நோக்கி: உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்றார். அதற்கு அவன் நான் அறியேன்; என் சகோதரனுக்கு நான் காவலாளியோ என்றான்.

அதற்கு அவர்: என்ன செய்தாய்? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கி கூப்பிடுகிறது.

இப்பொழுது உன் சகோதரனுடைய இரத்தத்தை உன் கையிலேயே வாங்கிக் கொள்ளத் தன் வாயைத் திறந்த இப்பூமியில் நீ சபிக்கப்பட்டிருப்பாய்.

நீ நிலத்தைப் பயிரிடும் போது அது தன் பலனை இனி உனக்குக் கொடாது; நீ பூமியில் நிலையற்று அலைகிறவனாய் இருப்பாய் என்றார்

அப்பொழுது காயீன் கர்த்தரை நோக்கி: எனக்கு இட்ட தண்டனை என்னால் சகிக்க முடியாது.

இன்று என்னை இந்தத் தேசத்தினின்றும் துரத்தி விடுகிறீர்; நான் உமது சமுகத்துக்கு விலகி மறைந்து, பூமியில் நிலையற்று அலைகிறவனாய் இருப்பேன், என்னைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் என்னைக் கொன்று போடுவானே என்றான்.

2. W.H. Robinson, Old Testament, Its Making and Meaning, p. 33-36

அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி:காயீனைக் கொல்லுகிற எவன் மீதும் ஏழு பழி சுமரும் என்று சொல்லி, காயீனைக் கண்டு பிடிக்கிற எவனும் அவனைக் கொன்று போடாத படிக்குக் கர்த்தர் அவன் மேல் ஒரு அடையாளத்தைப் போட்டார்.'' (ஆதி.4-9-15)

இவ்வாறு செல்கிறது கதை. இங்கு நீதிக்கருத்தின் தொடக்கத்தைக் காணலாம். கொலை செய்தவன் தண்டிக்கப்பட வேண்டும் என்பது நாகரிகமற்ற பழங்கால மக்களுள்ளும் காணப்பட்ட ஓர் கருத்தாகும்.

பண்டைக் காலத்தில் காயீனர் (Cainites ஓர் இனத்தவர் (Tribe) இருந்தனர் எனவும் அவர் நெற்றியில் ஓர் அடையாளம் இட்டிருப்பர் எனவும் தம இனத்தைச் சேர்ந்த ஒருவன் கொலையுண்டால் கடும்பழி வாங்குவர் எனவும் அவ்வினததவரின் தோற்றத்தை விளககவே இக்கதை எழுந்ததெனவும் ஆராய்ச்சியாளர் கூறுவர்.[3]

மக்கள் நிலையாக ஓரிடத்தில் தங்கி வாழ்ந்து பயிர்த்தொழிலை மேற்கொண்டு நிலைபெற்ற அரசாட்சியை ஏற்படுத்து முன்னர், இனமினமாகக் (Tribe by tribe) காட்டில் அல்லது வெளியிடங்களில் அலைந்து திரிந்த காலத்தில் நீதி இவ்வாறே நிறைவேற்றப்பட்டது ஒருவன் கொல்லப்பட்டால் அவன் உறவினர் அல்லது இனத்தை சேர்ந்தவர் கொன்றவனைத் தேடிக்கொல்வர் அரசோ வேறுகாப்போ இல்லாத காலத்தில் இவ்வாறு பழிவாங்கும் முறையே மக்களுக்கு ஒருவகைப் பாதுகாவலாயிற்று. அந்நிலையே இங்குக் காண்கிறோம்.

இவ்வாறு பழிக்குப் பழி வாங்குகிறவர்கள் செய்யப்பட்ட தீமைக்கு நிகராகவன்றிப் பன்மடங்கு அதிகமாகவும் பழிவாங்குவதுண்டு எனத் தெரிகிறது.

காயீனின் வழிவந்தவனாகிய லாமேக்கு, ஒருவன் தன்னை அடித்துக் காயப்படுத்தியதற்குப் பதிலுக்கு அவனை அடித்துத் திருத்தி அடையாமல் அவனைப் பலமாகத் தாக்கிக் கொன்றான் என ஆதியாகமம் கூறுகின்றது. அவன் அச்செய்தியைப் பெருமையுடன் தன் மனைவியரிடம் கூறினான்.

---

3. J.A. Bewer, The literature of the Old Testament, p.61-62

''லாமேக்கு தன் மனைவிகளைப் பார்த்து ஆதாளே, சில்லாளே, நான் சொல்வதைக் கேளுங்கள். எனக்குக் காயமுண்டாக ஒருவனைக் கொன்றேன் ; எனக்குத் தழும்புண்டாக ஒரு வாலிபனைக் கொலை செய்தேன்.

காயீனுக்காக ஏழு பழி சுமருமானால், லாமேக்குக்காக எழுபத்தேழு பழி சுமரும் என்றான்'' (ஆதி 4. 23–24).

பழிக்குப் பழி வாங்கும் கருத்துத் தமிழ் இலக்கியங்களில் இல்லாமல் இல்லை. ஆனால் தமிழ் நாட்டில் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே ஊரூராகத் தங்கி மக்கள் பயிர்த்தொழில் முதலிய தொழில்களில் ஈடுபடும் நிலையான வாழ்க்கையும் முறையான அரசாட்சியும் ஏற்பட்டுவிட்டன. பொதுமக்கள் கொலையாளியையோ பிற குற்றவாளிகளையோ கொல்லும் பொறுப்பைத் தாங்களே மேற்கொள்ளாது அரசிடமோ அரசால் நியமிக்கப்பட்ட அதற்குரிய காவலர்களிடமோ முறையிட வாய்ப்பு இருந்தது. போர் நடக்கும்போது தன் தலைவனையோ உறவினனையோகொன்றவீரனைஇன்றுகொல்வேன் எனச் சபதம் கூறி மாற்றார் படையில் அவனைத் தேடிக் கொல்லும் வழக்கம் வீரர்களிடையில் இருந்ததென அறிகிறோம்.

தும்பைத்திணையின் துறைகளை விளக்குமிடத்துத் தொல்காப்பியம்,

> செருவகத் திறைவன் வீழ்ந்தெனச் சினைஇ
> ஒருவன் மண்டிய நல்லிசை நிலையும்
> பல்படை யொருவற் குடைதலின் மற்றவன்
> ஒள்வாள் வீசிய நூழிலும் ......

எனக் கூறுகிறது. இப்பகுதிக்கு நச்சினார்க்கினியர், ''போரிடத்தே தன்வேந்தன் வஞ்சத்தாற் பட்டானாகச் சினங்கொண்ட மனத்தனாய்ப் பெரும்படைத்தலைவன் தலை மயங்கிப் பொருத நல்ல புகழைப் பெற்ற நிலைமைக்கண்ணும்;'' ''அங்ஙனம் நல்லிசைஎய்திய ஒருவற்கு வஞ்சத்தாற் கொன்ற வேந்தன் பல்படை புறங்கொடுத்தலின் அவரைக் கோறல் புரிதல் அறனன்றென்று கருதாது அவன் வாளாற் றடிந்து கொன்று குவித்தற் கண்ணும்'' என உரை கூறிச்செல்கிறார்[4]. போரில் ஒரு அரசன் நேர்மையாக அன்றி வஞ்சத்தால் கொல்லப்படுகிறான். அந்நிலையில் நீதியைச் செய்பவர்கள்யார்?எந்த

4. தொல்காப்பியம், பொருளதிகாரம் 72 (புறத்திணையியல்), நச்சினார்க்கினியர் உரை.

நீதிமன்றத்தில் சென்று முறையிட முடியும்? அத்தகையோர் நிலையில் கொல்லப்பட்ட அரசனின் படைத்தலைவன் சினங்கொண்டெழுந்து பகைவர் படையை எதிர்த்துக் கடும்போர் புரிதலே அவனுக்குப் பெரும் புகழைத்தருவதாகும். அவ்வாறு கடுஞ்சினத்தொடு போர் புரியும்போது பகைவரின் படைவீரர்கள் அவன் முன் நிற்கலாற்றாது சிதறியோடினாலும், அரசனைக்கொன்றதற்காகப்பழி வாங்கும் நோக்கத்தோடு போர் புரிகின்றனாதலின் புறங்கொடுப்பவரைக் கொல்தல் அறனன்று என்பதையும் கருதாது அவ்வாறு சிதறியோடும் பகைவர்களையும் கொன்று குவிப்பான் என்பது பொருள்.

புறநானூற்றிலும் தும்பைத்திணையில் இருபெருவேந்தர்போர் செய்யும் காலத்து, ஒரு வீரன் போரில் இறப்ப 'என் அண்ணனைக் கொன்றவனை நான் இன்று கொல்வேன்' என அவன் தம்பி வஞ்சினங்கூறி மாற்றார்படையில் கொன்றோனைத்தேடிக் கொல்வன் என்னும் கருத்தைச் சில பாடல்கள் காட்டுகின்றன. அரிசில்கிழாரின் பாடல்களில் ஒன்று போரில் பகைவர்களில் ஒருவனைக் கொன்றவனை நோக்கி 'உன்னால் கொல்லப்பட்டவனின் தம்பி உன்னோடு போர் செய்து உன்னைக் கொல்வதற்காகத் தேடிக் கொண்டிருக்கிறான். நீ எவ்வளவு பாதுகாப்புடன் போர் செய்தாலும் தப்பமாட்டாய்' எனப் பிறர் எச்சரிப்பதாக வருகிறது.

> தோல்தா தோல்தா என்றி தோலொடு
> துறுகன் மறையினும் உய்குவை போலாய்
> நெருநல் எல்லைநீ எறிந்தோன் தம்பி
> அகல்பெய் குன்றியில் சுழலுங் கண்ணன்
> பேரூர் அட்ட கள்ளிற்கு
> ஓரில் கோயில் தேருமால் நின்னே (புறம் 300)

"நீ (உன் பணியாட்களை நோக்கி) கேடகத்தைத்தருக, கேடகத்தைத் தருக என்கிறாய் ; கேடகம் மட்டுமின்றிப் பெரிய பாறைக் கல்லால் நீ உன்னை மறைத்துக் கொண்டாலும் உய்வாய் போலும், நேற்று உன்னால் வாளால் எறிந்து கொல்லப்பட்டவனின்தம்பி அகலில் இட்ட குன்றிமணியைப் போலச் சுழலும் கண்ணையுடையவனாய், பெரிய ஊரின்கண் காய்ச்சப்பட்ட கள்ளையுண்பதற்காக ஒரு வீட்டுள் சென்று கலத்தைத் தேடுபவனைப் போல் உன்னைத் தேடுகின்றான்" என்பதே செய்யுளின் பொருள். கொல்லப்பட்டவனின் தம்பி சினத்தினால் குன்றிமணியைப் போலச் சிவந்த கண்ணையுடையவனாகிக் கள்ளை

உண்ண வேண்டுமென ஆவலோடிருப்பவன் ஆத்திரத்துடன் கலத்தைத்தேடுவதுபோலப் பகைவனைத் தேடினான்.

அரிசில் கிழாரது மற்றொரு பாடல் தன் அண்ணனைக்கொன்ற பகைவீரனைப் பழிவாங்கும் நோக்கத்தோடு போர்க்கோலம் பூண்டு கொண்டிருந்த வீரனை நோக்கிப் பிறனொருவன், இவன் போர்க் கோலம் பூணுவதையும் அதன் நோக்கத்தையும் கேள்வியுற்ற பகைவர் மிகவும் அஞ்சுகின்றனர் எனச் சொல்லி அவ்வீரனை ஊக்குவிப்பதாகக் கூறுகிறது.

கொடுங்குழை மகளிர் கோதை சூட்டி
நடுங்குபனிக் களைஇயர் நார்அரிப் பருகி
வளிதொழி லொழிக்கும் வண்பரிப் புரவி
பண்ணற்கு விரைதி நீயே நெருநை
எம்முற் றப்பியோன் தம்பியொடு ஓராங்கு
நாளைச் செய்குவெ னமர்எனக் கூறிப்
புன்வயி றருத்தலுஞ் செல்லான் பன்மான்
கடவு மென்ப பெரிதே யதுகேட்டு
வலம்படு முரசின் வெல்போர் வேந்தன்
இலங்கிரும் பாசறை நடுங்கின்று
இரண்டா காதவன் கூறிய தெனவே (புறம் 304)

''வளைந்த குழையை அணிந்த தேவியர் மாலை சூட்டி வாழ்த்த, நடுக்கத்தைச் செய்யும் குளிரைப் போக்குவதற்கு நாரால் வடிக்கப்பட்ட கள்ளைப் பருகிக் காற்றைவிட விரைந்து செல்லும் குதிரையைச் சேணமிடுவதற்கு விரைகின்றாய் நீ; 'நேற்று என் அண்ணனைக் கொன்றவனோடும் அவன் தம்பியோடும் ஒருமிக்க நாளைக்குப் போர் செய்வேன் எனக் கூறி வயிற்றுக்கு உணவும் உண்ணானாய்த் தான் ஏறிப்போர் செய்வதற்காகப்பல குதிரைகளையும் ஆராய்ந்து கொண்டிருக்கிறான்' எனக் கூறி வெற்றியைத் தரும் முரசையும் வெல்லும் போரையும் உடைய பகையரசனது இலங்குகின்ற பாசறையில் உள்ளோர் நடுங்குகின்றனர்'' என்பது இச்செய்யுளின் பொருள். தன் தமையனைக் கொன்றவனைப் போரில் எதிர்த்துக் கொன்றொழிக்க வேண்டும் என்னும் ஆர்வத்தில் பொழுது புலருமுன் எழுந்து சென்று விரைந்து செல்லும் குதிரையைத் தேர்ந்தெடுத்து ஒப்பனை செய்யும் ஒருவனை இச்செய்யுள் காட்டுகிறது.

இவ்வாறு பழிக்குப் பழி வாங்கவேண்டும் என்னும் எண்ணத்தினால் தோன்றும் வீரம் புறநானூற்றில் போற்றப்படுகின்றது[5].

ஆனால் நயத்தக்கநாகரிகத்தை விரும்பும் வள்ளுவரோ பொதுவாகப் போரில் வீரத்தைப் போற்றினாரெனினும் பழிக்குப்பழி வாங்கும் கருத்தை எவ்விடத்தும் ஆதரித்தாரல்லர். பொதுமக்களின் வாழ்க்கையைக் குறித்துக் கூறுமிடத்துப் பழிவாங்கும் எண்ணத்திற்கு மாறாகத் தீமை செய்தார்க்கும் நன்மை செய்தல், தான் இறக்க நேரிடினும் பிறர்க்குத் தீங்கு செய்யாமை எனும் இத்தகைய பண்புகளையே பல இடத்திலும் போற்றினார். விவிலிய நூலிலும் இக்கருத்துக்களைப் பினனர்க் காணலாம்.

இன்னும் உலகில் மக்கள் வாழ்க்கையில் செறிந்த தீமைகாரணமாக ஏற்பட்ட தேவகோபத்தினால் பெரும்மழையும் வெள்ளமும் ஏற்பட்டுப் பூமியை அழிக்கத் தன் நல்வாழ்வினால் தேவனின் அருளைப் பெற்ற நோவா பெரும் பேழையொன்று செய்து அதனுள் புகுந்து தன்னையும் தன் குடும்பத்தையும் காப்பாற்றிக் கொண்டது. மக்கள் பலர் சேர்ந்து ஒரு பெருநகரத்தையும், வானத்தையாளவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும், கட்ட முனைந்தபோது அவர்களது அகந்தையை அசுற்ற எண்ணிய தேவன் அவர்கள் பேசும் மொழியை வெவ்வேறாக்க, அவர்கள் நகரத்தை அமைக்க முடியாமல் நீங்க அதிலிருந்தே உலகில் பல மொழிகள் உண்டாகியது முதலிய கதைகளும் ஆதியாகமத்தின் முற்பகுதியில் காணப்படுகின்றன. இவை அக்காலத்து அந்நாட்டு மக்களிடையே வழங்கி வந்த பழங்கதைகளே.

வெள்ளம் தணிந்த பின் நோவா பேழையிலிருந்து வெளிவந்து நிலத்தில் வசிக்கத் தொடங்கியபோது தேவன் நோவாவையும் அவன் குடும்பத்தினரையும் நோக்கி,

"உங்களுக்கு உயிராயிருக்கிற உங்கள் இரத்தத்திற்காகப் பழி வாங்குவேன்; சகல ஜீவ ஐந்துக்களிடத்திலும் மனுஷனிடத்திலும் பழி வாங்குவேன்: மனுஷனுடைய உயிருக்காக அவனவன் சகோதரனிடத்தில் பழி வாங்குவேன்.

---

5. விவிலியம் கூறும் சதையில் பொது மக்களிடையே பொறாமையால் நிகழ்ந்த கொலையும் அதனை ஒட்டி எழுந்த பழியும் பழிக்குப் பழியும் பேசப்படுகின்றது. புறநானூற்றில் நாட்டுப்பகையால் எழுந்த போரில் நிகழும் வஞ்சினம் பேசப்படுகிறது. இவ்வேறுபாடு கருதத்தக்கது (பதிப்பாசிரியன்)

மனுஷன் தேவசாயலில் உண்டாக்கப்பட்டபடியால், மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ அவனுடைய இரத்தம் மனுஷனாலே சிந்தப்படக்கடவது'' (ஆதி. 9. 5. 6) எனச் சொல்லியதாக ஆதியாகமம் கூறுகிறது.

கொலை செய்தவன் கொல்லப்படவேண்டும் என்பது பண்டை நீதி. திருவள்ளுவரும் பொது மக்கள் தனிப்பட்ட முறையில் பழிக்குப் பழி வாங்குவதை விரும்பவில்லையாயினும் கொலை முதலிய கடுங்குற்றம் செய்பவர்களை அரசன் தண்டித்தல் வேண்டும் எனவே விதித்தார்.

கொலையில் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர் (550)

பசிய பயிர்கள் வளரவேண்டி உழவர் களையை நீக்கிக் காத்தல் போல அரசனும் கொடியோரைத் தண்டித்துப் பிற குடிமக்களைக் காத்தல் கடன் என்றார் வள்ளுவர்.

2. 2. யூதர்கால முன்னோர்களைக் குறித்த கதைகள்

ஆபிரகாமையும் அவன் வழிவந்தோரையும் குறித்த கதைகள் ஆதியாகமத்தின் பிற்பகுதியில் காணப்படுகின்றன. இக்கதைகள் கற்பனையும் உண்மையும் கலந்தவையாக இருக்கலாம். அப்பெயர்களைச் சுற்றிப் புனையப்பெற்ற பல கதைகள் நாளடைவில் மக்களிடையே எழுந்திருக்கலாம்.

இக்கதையில் ஆபிரகாம் தெய்வபக்தியில் சிறந்தவனாகவும் உயர் குணமுடைய சான்றோனாகவும் காட்டப்படுகிறான். தேவனின் ஆணையின்படி ஆபிரகாம் தன் ஊரையும் தன்தேசத்தையும் விட்டுப் புறப்பட்டுக் கானான் தேசத்திலே சென்று வசித்தான். ஆபிரகாமைக் குறித்துக் கூறப்படும் கதைகளில் இரு நிகழ்ச்சிகள் குறிப்பிடத்தக்கனவாகும். அவற்றில் ஒன்று அவன் தேவனையும் தேவதூதர்கள் இருவரையும் விருந்தோம்பியதாகும். யாரென அறியாது தன் கூடாரத்தைத் தாண்டிச் சென்ற மூவரையும் எதிர்கொண்டழைத்து உபசரித்த ஆபிரகாம் பின்னரே அவர்களை இன்னாரென அறிகிறான்.

இவ்வாறு புதிதாக வந்த அவ்விருந்தினர் மூவரையும் நன்கு பேணினான் ஆபிரகாம். பணிவுடைமை, இனியவை கூறல், விருந்-

தோம்பல் ஆகிய பண்புகள் அவனிடம் சிறந்து விளங்கின எனத் தெரிகிறது.

மற்றது ஆபிரகாம் தன் மகனைப் பலியிடச் சென்ற நிகழ்ச்சி. நீண்டகாலமாகப் பிள்ளையில்லாதிருந்த ஆபிரகாம் முதிர் வயதில் ஒரு புதல்வனைப் பெற்றான். அவனே ஈசாக்கு தேவ கட்டளையின்படி ஆபிரகாம் தன்குடிக்கு ஒரு மகனும் அன்பிற்குரியவனுமாகிய ஈசாக்கைப் பலியிட எண்ணி ஒரு மலைக்குச் சென்றான் விறகுக் கட்டைகளை அடுக்கி மகனை அவற்றின்மேல் கிடத்திக் கத்தியை யோங்கியபோது தேவனது வாக்கினால் தடுக்கப்பட்டான் பின்பு அருகில் காணப்பட்ட ஆட்டுக்குட்டியைப் பிடித்து வந்து மகனை விட்டு விட்டு அதைப் பலியாகச் செலுத்தினான். ஆபிரகாம் காலத்திலிருந்தே யூதர்கள் மக்களைப்பலியிடும் வழக்கத்தை மேற்கொள்ளாது விலங்குகளையே பலியிட்டனர் என்பதையே இக்கதை காட்டுகிறது என விவிலிய நூலை ஆராய்ந்த அறிஞர் கூறுவர் இக்கதை ஓரளவு பெரியபுராணத்தில் காணப்படும் சிறுத்தொண்டநாயனார்கதையையே ஒத்திருக்கிறது. சிவனுக்காக அருமை மகன் சீராளனைக் கொன்று சமைத்து விருந்தளித்துப் பின் உயிருடன் எழப்பெற்றார் சிறுத்தொண்டர் என்ற அக்கதையும்கூடப் பல்லவர் காலத்தில் மக்களினத் தவரையும் கொன்றுபலியிடும் வழக்கம் பரவி வந்ததையும் சைவசமயத் தலைவர்கள் அதை மறுத்தமையையுமே காட்டுமென அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர்.

வள்ளுவரோ மக்கட் பலியின்றி விலங்குகளைப் பலியிடுவதைக் கூட விரும்பவில்லை. ஆயினும் பண்டைக்காலத்தில் மக்கள் மக்கட் பலியை நீக்கி விலங்குகளைப் பலியிடும் வழக்கத்தை மேற்கொண்டதையும் அருளுடைமையில் ஒரு படி எனலாம்.

ஈசாக்கு பெரியவனான பின்பு ஆபிரகாமின் பணியாள் ஒருவன் தன் தலைவனின் மகனுக்கேற்ற பெண்ணைத்தெரிந்தெடுத்து அழைத்து வரச் சென்றான். அவன் ஏற்ற பெண்ணைத் தேர்ந்தமுறை. பெண்களில் எத்தகைய பண்பை அவர்கள் விரும்பினர் என்பதைக் காட்டுகிறது. பணியாள் தன் தலைவன் முன்பு வசித்த ஊருக்குச் சென்று ஒரு கிணற்றருகில் நின்றான். அவனுடன் வந்த ஒட்டகங்கள் பக்கத்தில் நின்றன.

''நான் குடிக்க உன் குடத்தைச் சாய்க்கவேண்டும் என்று நான் சொல்லும்போது, குடிஎன்றும்,உன் ஒட்டகங்களும் குடிக்கும்படி

வார்பபேன் என்றும் சொல்லும் பெண் எவளோ, அவளே நீர் உம்-முடைய ஈசாக்குக்கு நியமித்தவளாயிருக்கவும், என் எஜமானுக்கு அனுக்கிரகம் செய்தீர் என்றுநான் அதினாலே அறியவும்செய்தருளும்'' என இறைவனை எண்ணி வேண்டிக் கொண்டான்.

அப்படியே அவன் அங்கு நீர் மொள்ளவந்த ரெபக்காள் என்னும் மங்கையை யணுகித் தண்ணீர் கேட்டான்.

''அதற்கு அவள்: குடியும் என் ஆண்டவனே என்று சீக்கிர மாய்க் குடத்தைத் தன் கையில் இறக்கிக் கொண்டு, அவனுக்குக்-குடிக்கக் கொடுத்தாள்.

கொடுத்தபின் உம்முடைய ஒட்டகங்களும் குடித்துத் தீரு-மட்டும் அவைகளுக்கும் மொண்டு வார்ப்பேன் என்று சொல்லி; சீக்கிரமாய்த் தன் குடத்துத் தண்ணீரைத் தொட்டியிலே ஊற்றி விட்டு, இன்னும் மொண்டுவரத் துரவண்டையில் ஓடி, அவனுடைய ஒட்டகங்களுக்கெல்லாம் மொண்டு வார்த்தாள்'' (ஆதி.24-14-20).

இவ்வாறு அருளோடு நீர்வார்த்துதவிய மாதை நோக்கி அவன் ''நாங்கள் உன் தகப்பன் வீட்டில் இராத் தங்க இடம் உண்டோ?'' எனக் கேட்க, எங்களிடத்தில் வைக்கோலும் தீவனமும் வேண்டிய மட்டும் இருக்கிறது; இராத் தங்க இடமும் உண்டு'' என்றாள். பின்பு அப்பணியாள் அவள் தந்தை வீட்டிற்குச் சென்று அவளை ஈசாக்குக்கு மணம்பேசித் தந்தையை ஒருப்படச் செய்கிறான். அவளும் தக்கதுணையுடன் ஆபிரகாம் இருக்கும் இடத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறாள்.

இங்கும் அருளுடைமையும் விருந்தோம்பும் திறனுமே சிறப்பிக்-கப்படுகின்றன. யூதர்குல முன்னோர்களைக் குறித்த இக்கதைகள் எழுந்த காலத்து அந்நாட்டவரிடையே விருந்தோம்பல் என்னும் பண்பு பெரிதும் போற்றப்பட்டது போலும்.

யோசேப்பு என்பான் எகிப்தில் பல அனுபவங்களை அடைந்து தன் உண்மையாலும் நேர்மையாலும் புத்தி கூர்மையாலும் உயர்-வெய்தி இறுதியில் எகிப்திய அரசனின் நம்பிக்கைக்குரிய உயர் அலுவலன் அல்லது அமைச்சன் என்னும் நிலையை அடைந்தான். இங்குக் கனவின் மூலம் எதிர்கால நிகழ்ச்சி அறியப்படுகிறது என்னும் கருத்தைக் காணலாம். எகிப்திய அரசன் பார்வோன் கண்ட ஒரு கனவுக்குப் பொருள் கூறியதனாலேயே யோசேப்பு அரசனின்

நம்பிக்கையைப் பெற்றான். கனவு நிகழ்ச்சி பின்வருமாறு கூறப்படுகிறது :

"இரண்டு வருஷம் சென்ற பின்பு பார்வோன் ஒரு சொப்பனம் கண்டான் : அதுவென்னவென்றால் அவன் நதியண்டையில் நின்று கொண்டிருந்தான்.

அப்பொழுது அழகும் புஷ்டியுமான ஏழு பசுக்கள் நதியிலிருந்து ஏறி வந்து புல் மேய்ந்தது.

அவைகளின்பின் அவலட்சணமும் கேவலமுமான வேறே ஏழு பசுக்கள் நதியிலிருந்து ஏறி வந்து நதி ஓரத்தில் மற்றப் பசுக்களண்டையிலே நின்றது.

அவலட்சணமும் கேவலமுமான பசுக்கள் அழகும் புஷ்டியுமான ஏழு பசுக்களையும் பட்சித்துப் போட்டது. இப்படிப்பார்வோன் கண்டு விழித்துக் கொண்டான்.

மறுபடியும் அவன் நித்திரை செய்து, இரண்டாம் விசை ஒரு சொப்பனம் கண்டான் : நல்ல செழுமையான ஏழு கதிர்கள் ஒரே தாளிலிருந்து ஓங்கி வளர்ந்தது. பின்பு, சாவியானதும் கீழ்க்காற்றினால் தீய்ந்ததுமான ஏழு கதிர்கள் முளைத்தது.

சாவியான கதிர்கள் செழுமையும் நிறை மேனியுமான அந்த ஏழு கதிர்களையும் விழுங்கிப் போட்டது. அப்பொழுது பார்வோன் விழித்துக்கொண்டு அது சொப்பனம் என்று அறிந்தான்"

(ஆதி.41.17—24)

இக்கனவுக்கு யோசேப்பு பொருள் கூறினான். ஏழு ஆண்டு எகிப்தில் விளைபொருள் மலிந்திருக்கும். பின்பு ஏழு ஆண்டுகள் கடும் பஞ்சமும் ஏற்படும். செழுமை நிறைந்த ஏழு ஆண்டுகளிலுள்ள விளைபொருள்கள் பின் வரும் ஏழு ஆண்டின் பஞ்சத்தைப் போக்கப் பயன்பட வேண்டும் என அவன் பொருள் கூறினான். பின் நம் மொழியில் முதலமைச்சன் என்று சொல்லத்தக்கதோர் நிலையை அடைந்த யோசேப்பு அரசின் சார்பாகப் பல பெருங்களஞ்சியங்களை ஏற்படுத்திப் பெருந்தொகையாகத் தானியங்களைத் திரட்டிச் சேமித்து வைத்தான். ஏழாண்டுகள் பஞ்சம் ஏற்பட்டபோது சேமித்த தானியங்களை நாட்டு மக்களுக்கு விற்றுப் பஞ்சத்தைப் போக்கினான். பஞ்சம் பல நாடுகளிலும் பரவியிருந்ததனால் பல நாட்டு மக்களும் அவனிடம் தானியம் கொள்ள வந்தனர். தங்கள் தம்பி அங்கு மேனிலையில் இருப்பதையறியாத அவன் தமையன்மாரும் தங்கள் நாட்டில்

உணவின்மையால் தானியம் விலைக்கு வாங்க எகிப்திற்கு வந்தனர். முதலில் அவர்களை யறியாதவன் போல் நடித்துத் தானியம் விற்ற யோசேப்பு மறுமுறை அவர்கள் வந்தபோது, அவர்கள் பேரில் குற்றம் சுமத்துவான்போல் அழைத்துவரச் செய்து விசாரித்துத் தன்னை இன்னானென அவர்களுக்குஅறிவித்துமிக்க அன்புடன் உபசரித்தான். தன் தந்தையையும் அழைத்துவரச் செய்து அனைவரையும் எகிப்தில் குடியேற்றினான். இவ்வாறே யூதர்குலம் எகிப்துள் புகுந்தது.

இக்கதைகளில் யோசேப்பு சான்றாண்மை மிக்க செம்மலாகக் காட்டப்படுகிறான்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை (322)

என்றார் வள்ளுவர். அறநூலோர் தொகுத்துக் கூறிய அறங்களி-லெல்லாம் தலையாயது உணவைப் பகுத்துண்டு பல உயிர்களையும் பாதுகாத்தலேயாகும் என்பது அவர் கருத்து. இவ்வறத்தையே யோசேப்பு எகிப்தில் கடைப்பிடித்தான்.

இன்னும் எகிப்தில் தங்கள் தம்பியை அறிந்து யோசேப்பின் தமையன்மார் அவனிடம் பணிந்து மன்னிப்புக் கேட்ட போது அவன் நடந்துகொண்டவிதம் அவனது அன்புடைமையையும் அருளுள்ளத்தையும் காட்டும்.

யோசேப்பு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள் நான் தேவனா?

நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள்:தேவனோ, இப்பொழுது நடந்துவருகிற படியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்-கும்படிக்கு, அதை நன்மையாக முடியப் பண்ணினார்.

ஆதலால் பயப்படாதிருங்கள்: நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று, அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, அவர்களோடே பட்சமாய்ப் பேசினான்'' (ஆதி.50 19-21)

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல் (321)

என்பது குறள். யோசேப்பு தனக்குத் துன்பம் செய்த தன் தமையன் மார்க்கு நன்மையையே செய்தான்.

ஆதியாகமத்தில் காணப்படும் இக்கதைகள் சிறுவர்கட்குக் கூறப்படும் நீதிக்கதைகள் போன்றுள்ளன. இவை கி.மு. 1000 ஆண்டுகட்கும் முற்பட்ட காலத்திலிருந்து யூதர்களிடையே வழங்கி வந்து பின் 'யாவேயினன்' எல்லோகினன்' என்று குறிப்பிடப்படும் அவ்விரு எழுத்தாளர்களால் திரட்டி எடுக்கப்பட்டன. ஆகையினால் இவை எவ்வளவுக்கு வரலாற்று நிகழ்ச்சிகளால் அடிப்படையாகக் கொண்டன, எவ்வளவுக்கு கற்பனை நிகழ்ச்சிகளை நிறைந்துள்ளன எனப் பிரித்துரைத்தல் அரிதே. யூதர்குல முன்னோர்கள், ஆரான், கானான் முதலிய நாடுகளில் வசித்துப் பின் ஏதோ பஞ்சம் ஏற்பட்ட போது எகிப்து சென்றனர் என்பது மட்டும் வரலாற்று உண்மையே யாகும் என விவிலிய நூலையும் யூதர் வரலாற்றையும் ஆராய்ந்த அறிஞர் கருதுகின்றனர்.

விவிலிய நூலில் இப்பகுதி திருக்குறளுக்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆண்டுகள் முற்பட்டதே 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' என்று சொல்லும் அளவிற்குப் பயிர்த் தொழில் சிறப்புற்றோங்கிய நிலையைக் குறள் காட்டுகிறது. நிலையான அரசாட்சி நிலவியது திருகுறளின் காலத்தில். அமைச்சு, படை முதலிய அங்கங்களுடன் அரசர்கள் சிறப்புடன் ஆண்டனர். நகரங்களிலும் ஊர்ப்புறத்திலும் மக்கள் நிலையாகத் தங்கி வாழ்ந்தனர்.

பத்யெழுவறியாப் பழங்குடிகெழீஇய
பொதுவறு சிறப்பிற் புகார்[6]

என மக்கள் இடம் விட்டுப் பெயராமையே சிறப்பாகக் கருதப்பட்டது. அக்காலத் தமிழ் நாட்டில். வாணிபமும் தொழில்களும் சிறப்புற்றிருந்தன. நாகரிகம் மிகுந்த நல்வாழ்க்கையைக் குறளில் காணலாம்.

ஆதியாகமத்தில் காணப்படும் கதைகளோ இன்னும் நாகரிகம் முற்றாத பழங்காலத்தையே காட்டுகின்றன. அக்காலத்தில் யூதர்களில் முன்னோர்கள் நிலையாக ஓரிடத்தில் தங்கிவாழவில்லை. நிலை பெற்ற வீடுகளிலன்றிக் கூடாரங்களிலேயே தங்கி வாழ்ந்தாரெனத் தெரிகிறது. யோசேப்பு அரிக்கட்டுகளைக் குறித்துக் கண்ட கனாவினின்றும் அவர்கள் இடையிடையே சிறிதளவு பயிர்த்தொழிலும் செய்தனரென ஊகிக்கலாமாயினும் ஆடுமாடுகளை வளர்த்துப் பயனெடுத்தலே அவர்கட்கு முக்கியத் தொழிலாக இருந்தது. ஆடுமாடுகளுடன்

6. சிலப்பதிகாரம்,மங்கல வாழ்த்துப்பாடல், 15.16

ஒட்டகங்களையும் வளர்த்தனர். ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்கு ஒட்டகங்களிலோ அல்லது கோவேறு கழுதைகளிலோ ஏறிச் சென்றனர். ஆடுமாடுகளைப் பகல் முழுவதும் வெளியிடங்களில் கொண்டு சென்று மேய்த்து வந்தவர்கள் மாலையில் துரவண்டையில் அவற்றைக் கொண்டு வந்து நீர் காட்டுவதும் பெண்கள் மாலையில் துரவண்டையில் வந்து நீரெடுத்துச் செல்வதும் இங்குக் காணும் காட்சிகளாம். ஆபிரகாம் முதலியோர் தங்கள் மந்தைகட்குப் புல்லும் நீரும் தேடி அடிக்கடி வெவ்வேறிடங்களில் சென்று தங்கினர் எனத் தெரிகிறது. இக்காலத்தில் யூதர்களிடையே அரசர்கள் இருக்கவில்லை. இறுதியில் யூதர்குல முன்னோர்கள் கடும் பஞ்சகாலத்தில் உணவு தேடி நைல் நதியால் செழிப்புற்றிருந்த எகிப்தை அடைந்தனர்.

வேறுபட்ட இவ்விரு வாழ்க்கைநிலையிலும் கூடக் கருத்துக்களில் ஓரளவு ஒற்றுமையைக் காணலாம். விருந்தோம்பல் அருளுடைமை ஆகிய பண்புகள் ஆதியாகமக் கதைகளில் போற்றப்படுவதை முன்பே கண்டோம். குடும்பத்தில் தந்தை மகன் அண்ணன் தம்பி ஆகியோரிடையே ஆழ்ந்த அன்பு இக்கதைகளில் காட்டப்படுகிறது. யாக்கோபு ஏசா பற்றிய கதையிலும் பின்பு யோசேப்பின் கதையிலும் சகோதரரிடையே பொறாமை, சினம் ஆகியவை தோன்றுவதைக் காணினும் இறுதியில் சகோதர பாசமே வெற்றி அடைகிறது. அன்புடைமை என்னும் பண்பு யோசேப்பிடமே மிக உயர்ந்த நிலையில் மிளிர்கிறது.

> அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
> புன்கணீர் பூசல் தரும் (71)

என்பதற்கேற்ப யோசேப்பு, தன்னை யறியாது தானியம் வாங்கத் தன்னிடம் வந்த தமையன்மாரைக் கண்டபொழுது முதலில் தன்னையாரெனக் காட்டிக் கொள்ளாதிருக்க முயன்றும் தன் கண்களில் திரண்டெழுந்த கண்ணீரை அடக்க முடியாதவனாய்த் தன் அறைக்குச் சென்று அழுதான் என ஆதியாகமம் கூறுகிறது.

ஆதியாகமத்தில் வரும் கதைகளில் கனவுகள், வரும் நிகழ்ச்சிகளை அறிவிப்பன மட்டுமின்றித் தெய்வ சித்தத்தை உணர்த்துவனவாகவும் உள்ளன. தெய்வ நியதி என்னும் கருத்து பழைய ஏற்பாட்டுக் கதைகள் பலவற்றிலும் இழையோடிச் செல்கிறது. அது வினைப்பயன் என்னும் கருத்தே. சென்ற பிறவியில் மற்றொருவனைப்

பொய்யாகக் குற்றம் சாட்டிக் கொல்வித்த வினைப்பயனால் கோவலன் பொற்கொல்லனால் பொய்க்குற்றம் சாட்டப்பட்டுக் கொல்விக்கப்பட்-டான். வள்ளுவரும் மறுபிறவி, வினைத்தொடர்பு என்னும் கருத்துக்களில் நம்பிக்கையுடையரே. யூதர்களோ ஒருயிர் பல பிறவிகளை எடுக்கும் என நம்பவில்லை. மக்கள் ஒரு முறையே இவ்வுலகில் பிறந்து வாழ்கின்றனர் என நம்பினர். ஆகவே சென்ற பிறவி என்னும் கருத்து விவிலிய நூலில் எவ்விடத்தும் காணப்படுவதில்லை. ஆயினும் ஒருவன் இப்பிறவியிலேயே முன் செய்த செயலின் பயனைப் பின் அடைகிறான் என்ற கருத்தைப் பழைய ஏற்பாட்டில் பல இடங்-களில் காணலாம். ஆயினும் மக்கள், வாழ்வில் செய்யும் நற்செயல் தீச்-செயல்களுக்கு ஏற்ற பயனை அடைகிறார்கள் என்பது மட்டுமின்றி இவையனைத்திற்கும் மேலாக இறைவனின் நல்நோக்கமொன்று மக்கள் வாழ்க்கையினூடே விரவி வெற்றி பெற்று வருகிறது எனுமொரு கருத்தை விவிலிய நூல் தருகிறது.

### *2. 3.* மோசேயும் அவர் காட்டிய நீதியும்

யாத்திராகமத்திலிருந்து உபாகமம் வரையுள்ள நான்கு நூல்-களிலும் முக்கிய பாத்திரமாகத் திகழ்பவர் மோசே என்னும் யூதர் தலைவரே. மோசேயின் காலம் ஏறக்குறைய கி. மு. 1200 என்பர். யாத்திராகமம் முதலியவற்றில் மோசேயைக் குறித்துத் தற்போது காணப்படும் கதைகள் அனைத்துமே உண்மையெனக் கொள்ளப்பட மாட்டாவாயினும் மோசே என்ற தலைவரொருவர் அக்காலத்து வாழ்ந்து யூதர்களை எகிப்தினின்றும் மீட்டுச் சென்றனர் என்பதையும் அத்தலைவர் அவர்கட்குச் சில வழிபாட்டு முறைகளையும் நீதிகளையும் கற்பித்தார் என்பதையும் வரலாறாகக் கொள்ளலாம்.

### *2. 3. 1* மோசேயின் வாழ்க்கை

பஞ்சம் காரணமாக எகிப்துக்குச் சென்ற யூதர்கள் சில தலைமுறைகள் செல்ல அங்குப் பல்கிப் பெருகிப் பெருங்கூட்டமாக வாழ்ந்-தனர். இன்றும் ஓரினத்தவர் பிறிதொரு நாட்டிற் சென்று குடியேறி வாழநேரின், அந்நாட்டவருக்கும் குடியேறியவர்க்கும் இடையே பகை தோன்றுவது போல, நாளடைவில் எகிப்தியருக்கும் எகிப்தில் வாழ்ந்த யூதர்கட்குமிடையே பகை ஏற்பட்டது. எகிப்தியர் யூதர்களிடமிருந்து கடும் வேலைகள் வாங்கினர் அவர்களைப் பலவாறு துன்புறுத்தினர். அக்காலத்திலேயே யூதர்களிடையே மோசே என்னும் தலைவரொரு-வர் தோன்றி அவர்களை எகிப்தினின்றும் மீட்டுச் செங்கடலைத் தாண்டியழைத்துச் சென்று பாலைவனங்களிடையே தங்கச் செய்தார்.

## 2. 3. 2. நீதிக்கோட்பாடுகள்

யாத்திராகமம் முதல் உபாகமம் வரையுள்ள நான்கு நூல்களில் பல நீதித் தொகுப்புகள் (Codes of Law) அடங்கியுள்ளன. மோசேயால் தரப்பட்டதாகக் கூறப்படும் இவையனைத்தும் உண்மையில் மோசேயாலேயே நியமிக்கப்பட்டனவல்ல. இவை பல நூற்றாண்டுகளாக யூதரிடையே சிறிது சிறிதாக வளர்ந்து திரண்டனவேயாகும் என அறிஞர் கருதுகின்றனர். பத்துக் கட்டளைகள் (Ten Commandments) என அழைக்கப்படும் நீதிகளை மட்டுமேமோசேதந்திருக்கலாமென்பர். வேறு சில நீதிகளையும் சில வழிபாட்டு முறைகளையும்கூட மோசே வாய்மொழியால் கற்பித்திருக்கலாம். நீதிக் கோட்பாடுகள் எழுதப்பட்டது பிற்காலத்திலேயே.

யாத்திராகமம் முதலிய நான்கு நூல்களில் காணப்படும் விதிகளையும் திருக்குறள் காட்டும் நீதியையும் ஒப்பிட்டு ஆராயுமிடத்து நினைவில் கொள்ளத்தக்கன சிலவுள. யாத்திராகமம் முதலியவற்றில் காணப்படும் நீதிக் கோட்பாடுகள் காலத்தால் மிக முற்பட்டன. அவையனைத்துமே கி. மு. ஆறாம் நூற்றாண்டின் இறுதிக்கு முன் தோன்றியவையே. திருக்குறள் கி. பி. முதலாம் நூற்றாண்டு அல்லது இரண்டாம் நூற்றாண்டளவில் எழுந்ததென்பதை அனைவரும் ஒப்புவர். இன்னும் யாத்திராகமம் முதலியவற்றில் உள்ள விதிகள் யூத இனத்தைச் சேர்ந்த யாவருமே கட்டாயமாகக் கடைப்பிடிப்பதற்காக இயற்றப்பட்டன. இன்ன குற்றத்தைச் செய்தவர்க்கு இன்ன தண்டனை என விதிப்பன. இம்முறையில் இவை தற்காலத்துச் சட்ட நூல்கள் போன்றன. திருக்குறளோ சட்டநூல் அன்று. நாட்டில் அனைவரும் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு எழுதப்பட்டதுமன்று. மக்கள் தாமாக விரும்பிக் கடைப்பிடிக்க வேண்டிய அறங்களை எடுத்துக் காட்டினார் வள்ளுவர். இவை கடைப்பிடிக்கப்படாவிடின் அல்லது அறத்துக்கு மாறான தீச்செயல்கள் மேற்கொள்ளப்பட்டால் இயல்பாக மக்கள் வாழ்க்கையில் என்ன தீமைகள் நிகழக் கூடும் என்பதை எடுத்துக்காட்டினார். இன்ன குற்றத்திற்கு இன்ன தண்டனை என அவர் விதிக்கவில்லை. பழைய ஏற்பாட்டில் திருக்குறளைப் போல் நல்வாழ்க்கை மேற்கொள்ள விரும்புபவர்க்கு அறவுரையாக எழுதப்பட்ட பகுதி நீதிமொழிகள் என்னும் நூலே.

பத்துக் கட்டளைகள் என்னும் விதிகள் பழைய ஏற்பாட்டில் இரு இடங்களில் காணப்படுகின்றன. யாத்திராகமத்தின் இருபதாம்

அதிகாரத்தில் சொல்லப்படும் இவ்விதிகள் திரும்பவும் உபாகமத்தின் ஐந்தாம் அதிகாரத்திலும் கூறப்படுகின்றன. இப்பத்துக் கட்டளை-களையும் மோசே தாமே தந்தார் எனச் சிலர் கருதுவர். சிலர் இவையும் மோசேயின் காலத்துக்குப் பின்னெழுந்தவையே என்பர். மோசே, மக்கள் யாவே என அவர்கள் அழைத்த இறைவனை வழிபட வேண்டுமெனவும், இறைவன் நீதியுள்ளவர் ஆகையினால் நீதியொடு கூடிய நல்வாழ்க்கை வாழவேண்டுமெனவும் பொதுவாகக் கற்பித்தார் என்பர். எவ்வாறாயினும் மிகப் பழைய காலத்திலேயே யூதர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இப்பத்துக் கட்டளைகள் இன்றும் யூதர்களாலும் கிருஸ்தவர்களாலும் தத்தம் ஆலயங்களில் நடைபெறும் வழிபாட்டினிடையே படிக்கப்பட்டுப் போற்றப்படுகின்றன.

அவை பின்வருமாறு காணப்படும்.

"என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.

மேலே வானத்திலும் கீழே பூமியிலும் பூமியின் கீழ்த் தண்ணீ-ரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தை-யாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்.

நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்......

உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம் நாமத்தை வீணிலே வழங்கு-கிறவனைத் தண்டியாமல்விடார்.

ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக.

ஆறு நாளும் நீ வேலைசெய்து, உன்கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக.

ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன்குமாரனானாலும், உன்குமாரத்தியானாலும் உன்வேலைக்காரனானாலும், உன்வேலைக்காரியானாலும், உன்மிருக ஜீவனானாலும், உன் வாசலில் இருக்கிற அந்நியனானாலும் யாதொரு வேலையும் செய்ய வேண்டாம்.

... ... ... ... ... ... ... ... ...

உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடிப்பதற்கு உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக

கொலை செய்யாதிருப்பாயாக

விபச்சாரம் செய்யாதிருப்பாயாக

களவு செய்யாதிருப்பாயாக

பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக

பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும் அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும். அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும் பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்றார்'' (யாத் 20 3-17).

இங்கு முதல் நான்கு கட்டளைகளும் சமயக் கொள்கைகளினின்றும் பிறந்தன. யூதர்கள் யாவே தங்களுடன் ஓர் உடன்படிக்கை (Covenant) செய்து கொண்டார் என நம்பினர். யாவே தங்களை எகிப்தினின்று மீட்டார் எனவும் செழிப்புள்ள கானான் தேசத்தை தங்களுக்குரிய நாடாக நியமித்தார் எனவும் நம்பினர். அவ்வுடன்படிக்கையின்படி அவர்கள் பிற தெய்வங்களை வழிபடலாகாது. யூதர்கள் மோசேயின் காலத்திலிருந்தே உருவ வழிபாட்டை மேற்கொள்ள வேண்டாம் எனக் கற்பிக்கப்பட்டனர். ஆயினும் யூதப் பொது மக்கள் மட்டுமின்றி அரசர்களுங்கூட அடிக்கடி உருவ வழிபாட்டை மேற்கொண்டனர் எனப் பழைய ஏற்பாட்டில் பின்பு வரும் வரலாற்று இலக்கியங்களால் அறியலாம். ஆயினும் தீர்க்கதரிசிகள் என அழைக்கப்பட்ட அவர்கள் தம் சமயத் தலைவர்கள் உருவ வழிபாட்டைக் கண்டித்தே வந்தனர். இறைவனது திருப்பெயர் மிகத் தூய்மையானது எனக் கருதி அதை நாவினால் உச்சரிக்கவும் அஞ்சினர் யூதர்கள். அவர்கள் வாரத்தில் ஏழாம் நாளை ஓய்வு நாளாகவும் வழிபாட்டிற்குரிய நாளாகவும் கருதி வந்தனர். இச்சமயக் கருத்துக்களையே முதல் நான்கு கட்டளைகள் காட்டுகின்றன.

பின்வரும் ஆறு கட்டளைகளும் பொது நீதியைக் குறிக்கும் இவ்வாறே சமயச் சார்பான விதிகளும் (Cultic rules) பொது நீதி

களும் (Social laws) யாத்திராகமம் முதலிய நூல்களில் பலவிடங்-களில் சேர்த்தே கூறப்படுகின்றன.

வள்ளுவரோ எச்சமயத்தைச் சார்ந்த விதிகளையும் எவ்விடத்தும் கூறாது பொது அறங்களையே யாண்டுங் கூறினார். பத்துக் கட்டளைகளில் பிந்திய ஐந்து விதிகளுக்கும் நிகராகக் கொல்லாமை, பிறனில் விழையாமை, கள்ளாமை, பொய்யாமை (வாய்மை), வெஃகாமை என்னும் திருக்குறளறங்களைக் காட்டலாம். வள்ளுவர் ஒருவன் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமைகள் இன்ன இன்ன எனத் தனித்தனியே கூறாது,

மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல் (70)

எனப் பொது வகையால் கூறினார். பிறர் 'இவன் தந்தை இத்தகைய புதல்வனைப் பெறுவதற்கு என்ன தவம் செய்தானோ?' எனக்-கூறும்படி நடத்தலே மகன் தந்தைக்குச் செய்யத்தக்க உதவி என்றார் இவ்வாறு கூறும்போது மகன் தன் தாயையும் தந்தையையும் மதித்து நடக்க வேண்டும் என்பது தெளிவு.

ஓய்வு நாளை ஆசரிக்கவேண்டுமெனப் பத்துக் கட்டளைகளில் கூறப்பட்ட விதி ஒரு விதத்தில் சமயச்சார்பான விதியே யாயினும், வேலையாட்களும் அடிமைகளும் விலங்குகளும் கூட வாரத்தில் ஒரு நாள் ஓய்வுபெற வாய்ப்பளித்தலால் அது அருளுடைமையின் பாற் படுமெனவுங் கொள்ளலாம். இக் கருத்துப் பின் வரும் வசனத்தில் இன்னும் தெளிவாகக் காணப்படுகிறது.

''ஆறுநாள் உன்வேலையைச்செய்து ஏழாம்நாளில்உன் மாடும் உன் கழுதையும் இளைப்பாறவும் உன் அடிமைப் பெண்ணின் பிள்ளையும் அந்நியனும் இளைப்பாறவும் ஓய்ந்திருப்பாயாக'' (யாத். 23. 12).

வாரத்தில் ஒரு நாள் ஓய்வு என்பது தற்காலத்தில் ஏறக்-குறைய உலக முழுவதிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கருத்தா-யிற்று.

2.3.2.1 அடிமை

யாத்திராகமத்தில் காணப்படும் சமூகச் சார்பான நீதிகளை (Social laws) நோக்குமிடத்து அடிமைகளையும் அடிமைப் பெண்-களையும் குறித்த விதிகள் முதற்கண் கூறப்படுகின்றன. இவற்றிலும்

வேறு சில விதிகளிலும் தன்னினத்திற்கும் பிற இனத்திற்கும் வேறு-பாடு காண்பிக்கின்றனர் யூதர்கள். எபிரேயரில் (யூதர்) ஒருவனை அடிமையாகக் கொண்டால் அவன் வாழ்நாள் முழுவதும் அடிமை-யாக இருக்க வேண்டியதில்லை. ஆறு ஆண்டுகள் வேலை செய்து ஏழாம் ஆண்டு விடுதலை பெறுவான் (யாத் 21.2). பிற இனத்-தார்க்கு இவ்வாறு விடுதலை பெறும் விதியில்லை. எபிரேயன் ஒருவன் அடிமையாகும்போது மணமானவனாய் இருந்து மனைவியோடு விலைப்பட்டிருந்தால் அவன் மனைவியும் அவனுடன் ஏழாம் ஆண்டில் விடுதலை பெறுவாள். ஆனால் அடிமையை விலைக்குக் கொண்ட தலைமகன் அவ்வடிமைக்கு ஒரு பெண்ணை மணம் செய்வித்திருந்தால் அவளும் (அவர்கட்குக் குழந்தைகளிருந்தால்) குழந்தைகளும் அத்தலைவனுக்குச் சொந்தமானவர்கள். அடிமை மட்டும் விடுதலை பெற்றுச் செல்வான். அவன் தன் மனைவி மக்களைவிட்டுப் பிரிய மன மில்லாமல் தன் தலைவனின் அடிமையாகவே வாழ்நாள் முழுவதும் இருக்க விரும்பினாலும் அதற்கும் விதிகள் இடமளிக்கின்றன.

ஆனால் அடிமைப் பெண்ணுக்கு ஏழாம் ஆண்டு விடுதலை பெறும் உரிமையில்லையென யாத்திராகமம் கூறுகிறது.

''ஒருவன் தன் மகளை வேலைக்காரியாக விற்றுப் போட்-டானானால் வேலைக்காரன்விடுதலைப்பெற்றுப்போவதுபோல் அவள் போகக் கூடாது'' (யாத். 21. 7).

இவ்விதியில் உபாகமம் பின்பு ஒரு சீர்திருத்தத்தைக் கொண்டு வருகிறதென்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. வள்ளுவரோ எவ்-விடத்தும் தமிழர்க்கும் பிற இனத்தவர்க்கும் வெவ்வேறு நீதியைக் கூறவில்லை. ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறு நீதியைக் கூறினாரு-மல்லர். எல்லா வகையிலும் பொது அறத்தையே போற்றினார்.

2.3.2.2. கொலை முதலியன

யாத்திராகமத்தில் கொலை முதலிய குற்றங்களும் அவற்றிற்-குரிய தண்டனைகளும் அடுத்தபடியாகக் கூறப்படுகின்றன. தெரிந்து செய்யும்கொலைக்குக் கொலைத் தண்டனையே ஏற்றதாகக் கருதப் பட்டது. தற்செயலாக ஒருவரைக் கொன்றவன் குறிப்பிட்ட சில நகரங்களில் சென்று அடைக்கலம் புகலாம். மற்றும் ஒருவனைத் திருடி

விற்பவன், தன் தாயையாவது தந்தையையாவது சபிப்பவன் ஆகி-யோரும் கொலைத் தண்டனைக்காளாவர்.

கொல்லாமல் ஒருவனை அடித்துக் காயப்படுத்தியவன் உரிய தண்டம் செலுத்த வேண்டும்.

''மனிதர் சண்டை பண்ணி, ஒருவன்மற்றொருவனைக் கல்லால் எறிந்ததினாலாவது கையாலடித்ததினாலாவதுஅவன்சாகாமல் கட்டில் கிடையாய்க் கிடந்து,

திரும்ப எழுந்திருந்து தன் ஊன்றுகோலைப் பிடித்துக் கொண்டு நடமாடினால், அடித்தவன் ஆக்கினைக்கு நீங்கலாயிருப்பான்; ஆனாலும் அவனுக்கு வேலை மினக்கெட்ட நஷ்டத்தைக் கொடுத்து அவனை நன்றாகக் குணமாக்குவிக்கக் கடவன்'' (யாத். 21.18-19).

கொலைக்குத் தண்டனைகொலை என்பதுபோலஒருவன் மற்ற-வனை அடித்ததனால் அடிக்கப்பட்டவன் கை முதலிய உறுப்புக்களை இழந்தாலும் அடித்தவனும்அதற்குத்தண்டனையாக அதற்கு நிகரான சேதத்தை யடையவேண்டுமென்னும் கருத்தும் அக்காலத்திருந்தது.

''வேறே சேதமுண்டானால், ஜீவனுக்கு ஜீவன்,

கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால். சூட்டுக்குச் சூடு. காயத்துக்குக் காயம், தழும்புக்குத் தழும்பு பழி கொடுக்க வேண்டும்'' (யாத். 21.23-25).

இவ்விதிகள் கடுமையாகத்தோன்றினும் ஆதியாகமத்தில் கண்ட லாமேக்கின் பாடல் என்ற வரிகளுடன் ஒப்பு நோக்க இது ஒரு வகைச் சீர்திருத்தமே. லாமேக்கு தனக்குத் தீமைசெய்த ஒருவனுக்குப் பன்மடங்கு தீமை செய்தான் தன்னைக் காயப்படுத்தியவனைக் கொன்று பழிவாங்கினான். அதைக் குறித்துப் பெருமை பாராட்டிக் கொண்டான். மோசேயின் காலத்திற்குப் பின்னெழுந்த இந்த நீதியிலோ செய்யப்பட்ட தீமைக்கு நிகராகத்தான் பழிவாங்கலாம். அதற்கு மேற்பட அதிகமாகப் பழிவாங்கலாகாது என்ற கருத்துக் காணப்படுகிறது. இத்தகைய சீர்திருத்தைக் கொண்டுவந்தவர் மோசேயாகவே இருக்கலாம்.

இன்னும் ஒருவன் தன் அடிமையானவனையாவது அடிமைப்-பெண்ணையாவது கோலால் கடுமையாக அடித்ததனால் அவனோ அவளோ இறந்தால் பழிக்குப்பழி வாங்கப்படவேண்டுமென யாத்தி-ராகமம் விதிக்கிறது. ஒருவன் தன்னடிமையை யடித்ததனால் அடிமை

ஒரு கண்ணையோ பல்லையோ இழக்க நேரிட்டால், உடையவன் தன்னடிமையை விடுதலை செய்துவிடவேண்டும்.

யாத்திராகமம் முதலிய நான்கு நூல்களிலும் 'பழி கொடுக்க வேண்டும்', 'பழிக்குப் பழி வாங்கப்பட வேண்டும்', 'இரத்தப் பழி', முதலிய தொடர்களை அடிக்கடி காணலாம். வள்ளுவரோ பழிக்குப் பழிவாங்குவதை எவ்விடத்தும் ஆதரித்தார் அல்லர். இவ்வேறு-பாட்டிற்குக் காரணம் ஆயற்பாலது.

எவ்வகைச் சமூகத்திலும் குற்றவாளிக்குத் தண்டனையில்லை என்ற நிலை இருத்தல் பொருந்தாது. அவ்வாறிருப்பின் குற்றங்கள் மலிந்து கொண்டே போகும். கொலையும் களவுமே பெருகும். இவற்-றில் ஈடுபடாத நன்மக்கள் வாழ்வதும் அரிதாகி விடும். வள்ளுவர் காலத்துத் தமிழ்நாட்டில் நிலையான அரசாட்சியிருந்தது. குற்ற-வாளிகளைத் தண்டித்தல் அரசின் கடமையெனக் கருதப்பட்டது

ஆகவே வள்ளுவரும்,

குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில் (549)

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர் (550)

எனக் குற்றவாளியைத் தண்டிக்கும் கடமையை அரசன்மேல் ஏற்றிக் கூறினார். மிகக்கொடுங்குற்றம் புரிவோரைக் கொலைத் தண்டனை-யினாலும் ஒறுத்து நன்மக்களைக் காத்தல் அரசனது கடமை என்றார்.

யாத்திராகமத்தினினறும் மேலே காட்டப்பட்ட விதிகள் யூதர்-களிடையே அரசர்கள் தோன்றுவதற்கு முற்பட்ட காலத்திலிருந்தே வழக்கிலிருந்த விதிகளாகும். அரசர்கள் தோன்றிய பின்னுங்கூட இத்தகைய நீதிமுறை பின்பற்றப்பட்ட தென்பதைப் பழைய ஏற்-பாட்டிலுள்ள வரலாற்று இலக்கியங்களால் அறியலாம். ஒருவன் மற்றொருவனைக் கொன்றால் அல்லது அடித்தோ கல்லால் எறிந்தோ கை முதலிய உறுப்புகட்குச் சேதமுண்டாக்கினால், கொல்லப்பட்ட-வனின் அல்லது அடிக்கப்பட்டவனின் உறவினர்கள் கொன்றவனை அல்லது அடித்தவனைத் தேடிச்சென்று பழி வாங்கினார். இதுவே அவர்கள் கையாண்ட நீதிமுறை. வேண்டுமென்று முன்னேற்-பாட்டோடு காத்திருந்து கொல்லாமல் தற்செயலாகக்கொல்லநேரிடில்

அவ்வாறு கொன்றவன் கொலைத்தண்டனையடைய வேண்டிய-தில்லை. இரத்தப் பழிவாங்குவதற்குரிய கொல்லப்பட்டவனுடைய உறவினனால் இவன் கொல்லப்பட வேண்டியதில்லை. இவ்வாறு திட்டமிட்டு ஒருவனைக் கொல்வதற்கும் (Murder) தற்செயலாகக் கொல்வதற்கும் (Man slaughter) வேறுபாட்டை அவர்கள் அறிந்-திருந்தனர். அவ்வாறு தற்செயலாக ஒருவனைக் கொன்றவனையும் கொல்லப்பட்டவனின் உறவினர் சினங்கொண்டு பழிவாங்கக்கூடும். ஆகையினால் அத்தகையோர் அடைக்கலம் புகுவதற்குரிய சில இடங்-களை நியமித்தனர். முற்காலத்தில் இவை வழிப்பாட்டிற்குரிய சில இடங்களாக அமைந்தன என்றும் பிற்காலத்தில் எருசேலம் நகரிலுள்ள ஆலயம்ஒன்றே வழிப்பாட்டிற்கும் பலிசெலுத்தற்கும் உரிய இடமாகக் கருதப்பட்டதனால் வேறு ஆறு நகரங்கள் அடைக்கலம் புகுதற்குரிய நகரங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன என்றும் விவிலிய நூலறிஞர் கூறுவர். லேவியர் என அழைக்கப்படும் கோயில் பணிபுரிவோர் வசித்த நகரங்களே அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டன. அந்நகரங்-களிலுள்ள பெரியோர் அடைககலம் புக வந்தவன் வேண்டுமென்று கொல்லாமல் தற்செயலாய்க் கொன்றவன்தானா என விசாரித்து அறிந்து அவனுக்கு அடைக்கலம் அளிப்பர். இத்தகைய நகரங்-களையும் அவற்றில் அடைக்கலம் புகும் முறையையும் எண்ணாகமம் முப்பத்தைந்தாம் அதிகாரம் விரிவாகக் கூறுகிறது.

இனிச் சிலவகைக் குற்றங்கட்குக் கல்லெறிந்து கொல்லுதலும் யூதர்கள் அக்காலத்தில் கையாண்ட முறையெனத் தெரிகிறது. மூப்பர்கள் (Elders) என அழைக்கப்படும் அறிவிலும் வயதிலும் முதிர்ந்த பெரியோர் விசாரித்து ஒருவன் கல்லெறிந்து கொல்லப்-படத்தக்கவன் எனத் தீர்ப்பளித்தால் பொதுமக்கள் பலருங்கூடி அவன் இறக்கும் வரையில் அவன்மேல் கல்லெறிந்து கொல்வர்.

2.3.2.3. கவனமின்மையால் நிகழும் குற்றம்

ஒருவனது கவனமின்மையால் பிறரது உயிர்க்கோ பொரு-ளுக்கோ சேதமேற்படின் அவன் உரிய தண்டனை யடைய வேண்டும் அல்லது தன் கவனக் குறைவால் பிறர்க்கு ஏற்பட்ட பொருளழிவிற்கு ஈடுசெய்யவேண்டுமெனவும் யாத்திராகமம் கூறுகிறது.

வழக்கமாய் முட்டுகிற மாட்டைக் கட்டி வைக்காததனால் அது ஓர் ஆடவனையாவது பெண்ணையாவது முட்டிக் கொன்றதனால் மாட்டிற்குரியவன் கொலைத்தண்டனை யடைவான் மூப்பர்கள் அவன்

உரிய அபராதத்தைச் செலுத்தித் தன்னுயிரை மீட்டுக் கொள்ளலாம் என விதித்தார்களாயின் அவன் அவ்வாறு செய்தலும்கூடும். மாடு இன்னொருவனது மாட்டை முட்டிக் கொன்றால் முட்டிய மாட்டுக்-குரியவன் இறந்த மாட்டுக்குரியவனுக்கு அதற்கு ஈடாகப் பொருள் கொடுக்க வேண்டும். ஒருவன் ஒரு குழியை வெட்டித் திறந்துவைத்த தனால் ஒரு மாடாவது கழுதையாவது விழுந்திறந்தால் குழி வெட்டி யவன் அவ்விலங்கினையுடையவனுக்கு அதற்கீடான பணம் செலுத்த வேண்டும். ஒருவனது விலங்கு பிறரது வயலையாவது திராட்சைத் தோட்டத்தையாவது சேதப் படுத்தினால் விலங்கிற்கு உரியவன் ஈடு செய்ய வேண்டும். நெருப்புப் பரந்து வயலையாவது தோட்டத்தை-யாவது நெற்போரையாவது அழித்தால் நெருப்பை மூட்டியவன் ஈடு செய்ய வேண்டும்.

வள்ளுவரும்,

அறிவினா னாகுவ துண்டோ பிறிதின்நோய்
தன்னோய்போல் போற்றாக் கடை (3 5)

என அறிவுடை மக்கள் தம் கவனக் குறைவால் பிறருக்கோ பிறவுயிர்-கட்கோ துன்பம் நேராமல் காத்துக் கொள்ள வேண்டும் என விதித்-தார்.

2. 3. 2. 4. களவு முதலியன

திருட்டுக் குற்றத்திற்காகத் திருடியவன் திருடியபொருளைஇரு மடங்காக அல்லது பல மடங்காக ஈடுசெய்தல் வேண்டும் என யாத்திராகமம் கூறுகிறது. பிடிபட்டபோது அவன் கையில் ஒன்றும் இல்லாவிட்டால் அவன் திருடிய பொருளுக்காக அவனை விற்று ஈடு செய்யலாம்.

ஒருவன் மற்றொருவன் பொறுப்பில் விட்டுச் சென்ற விலங்கு அல்லது பொருள் காணாமற் போனால் அல்லது சேதமடைந்தால் எத்தகைய நிலையில் ஈடுசெய்ய வேண்டும், எத்தகைய நிலையில் ஈடுசெய்யவேண்டுவதில்லை என்பது விளக்கப்படுகிறது.

இன்னா செய்யாமை என்னும் அதிகாரத்தில் பிறருக்குத்துன்பம் செய்தலாகாது என்பதை விளக்கினார் வள்ளுவர். நீதிக் கருத்துக்-களனைத்தையும் பொதுவகையால் கூறல் திருக்குறளினியல்பு. பழைய ஏற்பாட்டு விதிகளை இயற்றியவர்களோ சமூகத்தில் யார் யார்க்குப் பிறர் துன்பம் செய்தல் இயல்பு எனச் சிந்தித்து அவரைத் தனிப்படச் சுட்டிக் கூறினர்.

"அந்நியனைச் சிறுமைப்படுத்தாமலும் ஒடுக்காமலும் இருப்பீர்களாக ; நீங்களும் எகிப்துதேசத்தில்அந்நியர்களாய் இருந்தீர்களே.

விதவைகளையும் திக்கற்ற பிள்ளைகளையும் ஒடுக்காமலிருப்பீர்களாக.

அவர்களை எவ்வளவாகிலும் ஒடுக்கும் போது, அவர்கள் என்னை நோக்கிக் கூப்பிட்டால், அவர்கள் முறையிடுதலை நான் நிச்சயமாய்க் கேட்டு,

கோபம்மூண்டவராகி, உங்களைப்பட்டயத்தினால்கொலைசெய்வேன்; உங்கள் மனைவிகள் விதவைகளும் உங்கள்பிள்ளைகள் திக்கற்ற பிள்ளைகளுமாவார்கள்" (யாத் 22 21 - 24).

இவ்வாறு தேவன் கூறுவதாக யாத்திராகமம் எச்சரிக்கிறது.

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். (319)

என்ற குறள் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

2 3. 2. 5. கடன்

கடன் கொடுப்பதையும் வட்டிவாங்குவதையும் யூதர்களுக்கும் பிற இனத்தார்க்கும் வெவ்வேறு விதிகளை யாத்திரகாமம் கூறுகிறது.

"உங்களுக்குள் சிறுமைப்பட்டிருக்கிற என் ஜனங்களில் ஒருவனுக்கு நீங்கள் பணம் கடனாகக் கொடுத்திருந்தால் வட்டி வாங்குகிறவர்கள்போல் அவனிடத்தில் வட்டி வாங்க வேண்டாம்"
(யாத். 22. 25).

இவ்விதி யூதர்கட்காகவே கூறப்பட்டது. பிறரிடம் யூதர் வட்டி வாங்கினர். பிற்காலத்தில் யூதர்களே பல நாடுகளிலும் பிறருக்கும் பணத்தைக் கடன் கொடுத்துக் கடும் வட்டி வாங்கிப் பணம் சேர்த்து வந்தனர். சகப்பிரியரின் 'வெனிஸ் வர்த்தகன்' (Merchant of Venice by Shakespeare) என்ற நாடகக் கதை இதையே காட்டுகிறது.

ஆயினும் பழைய ஏற்பாட்டு விதிகள் பொதுவாகவும் கடன் பெறுவோரிடத்தில் கடன் கொடுப்போர் மிக்க அருளுடன் நடந்து கொள்ள வேண்டும் எனவே கற்பிக்கின்றன.

''பிறனுடைய வஸ்திரத்தை ஈடாக வாங்கினால், பொழுது போகுமுன்னமே அதை அவனுக்குத் திருப்பக் கொடுத்துவிடுவாயாக.

அவன் போர்வை அதுதானே, அதுவே அவன் தன்னுடம்பை மூடிக்கொள்ளுகிற வஸ்திரம்; வேறு எதினாலே போர்த்துக் கொள்ளு-வான்? அவன் என்னை நோக்கி முறையிடும்போது நான் அவனுக்குச் செவி கொடுப்பேன், நான் இரக்கமுள்ளவராயிருக்கிறேன்''

(யாத் 22-26-27).

யூதர்கள் யூதர்களுக்குக் கடன் கொடுத்தால் வட்டி வாங்கலா-காது என்னும் விதியை உபாகமமும் கூறுகிறது.

''கடனாகக் கொடுக்கிற பணத்துக்கும்ஆகாரத்துக்கும்,கடனாக கொடுக்கிற வேறே எந்தப் பொருளுக்கும், உன் சகோதரன் கையில் வட்டி வாங்காயாக.

அந்நியன் கையில் நீ வட்டி வாங்கலாம்; நீ சுதந்தரிக்கப் போகிற தேசத்தில் உன் தேவனாகிய கர்த்தர் நீ கையிடும் வேலையெல்லாம் உன்னை ஆசீர்வதிக்கும்படி உன் சகோதரன் கையிலே வட்டி வாங்காயாக'' (உபா, 23. 19-20).

கடன் கொடுப்பவர்கள் ஈடாகப் பெற்றுக்கொள்ளும் பொருள் குறித்தும் சில விதிகளை உபாகமம் கூறும்.

''திரிகையின் அடிக்கல்லையாவது மேற்கல்லையாவது ஒருவரும் அடகாக வாங்கக் கூடாது; அது ஜீவனை அடகு வாங்குவது போலாகும்'' (உபா.24.6).

''பிறனுக்கு நீ ஏதாகிலும் கடனாக கொடுத்தால், அவன் கொடுக்கும் அடகை வாங்க நீ அவன் வீட்டிற்குள் பிரவேசிக்க வேண்டாம்.

வெளியே நிற்பாயாக; கடன் வாங்கினவன் அந்த அடகை வெளியே உன்னிடத்தில் கொண்டு வருவானாக.

அவன் தரித்திரனானால் நீ அவன் அடகை வைத்துக் கொண்டு நித்திரை செய்யாமல்,

அவன் தன் வஸ்திரத்தைப் போட்டுப் படுத்துக்கொண்டு உன்னை ஆசீர்வதிக்கும்படி, பொழுதுபோகும்போது, திரும்ப அந்த

அடகை அவனுக்குக் கொடுத்து விடவேண்டும் ; அது உன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக உனக்கு நீதியாய் இருக்கும்''

(உபா. 24. 10-13)

யாத்திராகமத்தில் அடங்கியுள்ள பழைய விதிகளை மக்கள் கடைப்பிடிக்காமல் விட்டதனால், நாட்டில் வறியவர்களின் துன்பம் அதிகரிக்க, செல்வர் வறியவரைக் கொடுமைப்படுத்தும் நிலை நாட்டில் ஏற்பட, தீர்க்கதரிசிகள் எனக் குறிப்பிடப்படும் அறவோர் பலர் வறியவர் சார்பாகப் பேசியும் எழுதியும் பிரச்சாரம் செய்தபின் எழுந்தவை உபாகம விதிகள் ஆகையினால் கடன் கொடுப்பதைக் குறித்த விதிகளை உபாகமம் இவ்வாறு அழுத்திக் கூறுகிறது.

ஒழிபியலில் 'நல்குரவு' என்னும் பத்தில் வறுமைத் துன்பத்தை, குறித்து இரங்கிக் கூறிய வள்ளுவர். இல்லறவியலில் ஈகை, ஒப்புரவு என்னும் அதிகாரங்களின் மூலமாகவும் ஒழிபியலில் இரவு என்னும் அதிகாரத்தின் மூலமாகவும் செல்வர்கள் வறியவர்க்கு உதவவேண்டிய கடமையை விளக்குகிறார். ஆனால் கடன் கொடுப்பவர் வட்டி வாங்கலாமா, ஈட்டுப் பொருளைப் பெறலாமா என்றெல்லாம் அவர் குறிப்பிட்டுக் கூறவில்லை. நீதிகளனைத்தும் பொதுவகையால் கூறல் திருக்குறளியல்பு. மக்கள் வாழ்க்கையிலேற்படக்கூடிய ஒவ்வொரு நிலைமையைக் குறித்தும் சிந்தித்து அதற்கு ஏற்ற நீதியைக் கூறல் பழைய ஏற்பாட்டின் இயல்பு.

2.3.2.6. ஒப்புரவு

செல்வர்களிடம் சேர்ந்த பொருள் அவர்கட்கு மட்டுமேயன்றிப் பலருக்கும் பயன்படவேண்டுமென்பதை ஒப்புரவு என்னும் பத்தில் மூன்று அழகிய உவமைகள் மூலமாக விளக்குகிறார் வள்ளுவர்.

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு (215)

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கட் படின் (216)

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கட் படின் (217)

உலகத்தாரால் விரும்பப்படும் பேரறிவாளனது செல்வம் ஊரிலுள்ளார் பலரும் குடிதண்ணீர் எடுக்கும் குளம் நீர்நிறைந்தது போலவிருக்கும்.

மிக்க நன்மையை உடைய ஒருவனிடம் சேர்ந்த செல்வம் உண்பதற்குப் பயன்படத்தக்க மரம் ஊர் நடுவே பழுத்ததுபோலவிருக்கும்.

பெருந்தகுதியை யுடைய ஒருவனிடம் சேர்ந்த செல்வம் பிணிக்கு மருந்தாகி வேண்டியபோது தவறாமல் கிடைத்துப் பயன்படும் மரத்தைப் போலவிருக்கும்.

ஊரிலுள்ள குளத்தில் பலர்சென்றுநீர்எடுத்தல்போலவும்,பொது விடத்தில் பழுத்துள்ள பழு மரத்தில் பலர் சென்று கனி கொய்தல் போலவும், மருந்து மரத்திலும் பலர் சென்று இலை, வேர், பட்டை முதலியவற்றை எடுத்துப் பயன்படுத்திக் கொள்வது போலவும் செல்வரது பொருளால் பலரும் பயனடையும் நிலை இருக்க வேண்டுமென உவமை முகத்தாற் கூறினார் வள்ளுவர்.

செல்வரது பொருள் பிறர்க்கும் பயன்படவேண்டும் என்பதைக் கருதி யாத்திராகமம் முதலிய நூல்கள் எவ்வகை விதிகளையேற்படுத்தியுள்ளன என்பதை இனிக்காணலாம்.

யூதர்கள் வாரத்தில் ஆறுநாள்வேலை செய்து ஏழாம்நாள் ஓய்வு கொண்டார்கள். அதுபோலவே ஆறு ஆண்டுகள் வயலில் உழுது பயிரிட்டு அறுவடை செய்தபின் ஏழாம் ஆண்டு வயலில் பயிர் செய்யாது நிலத்திற்கு ஓய்வளிக்க வேண்டுமெனக் கருதினார். இது நிலத்தின் செழுமையைப் பாதுகாக்க ஏற்றதாக இருப்பதுமட்டுமின்றி நிலத்தில் தானே விளைந்ததை வறியவர் அறுவடை செய்து எடுத்துக் கொள்ளவும் வாய்ப்பளித்தது.

''ஆறு வருஷம் நீ உன் நிலத்தில் பயிரிட்டு, அதின் பலனைச் சேர்த்துக் கொள்.

ஏழாம் வருஷத்தில் உன்ஜனத்திலுள்ள எளியவர்கள் புசிக்கவும் மீதியானதை வெளியின் ஜெந்துக்கள் தின்னவும், அந்த நிலம் சும்மா கிடக்க விட்டு விடுவாயாக: உன் திராட்சத் தோட்டத்தையும் ஒலிவத் தோப்பையும் அப்படியே செய்வாயாக'' (யாத் 23.10-11).

ஒவ்வொரு ஆண்டிலும் அறுவடைக்காலத்தில்வயலில் விளையும் தானியத்திலும் திராட்சைத் தோட்டத்தில் பழுக்கும் பழங்களிலும் ஒரு பகுதியை வறியவர்க்காக விட்டுவிடுதலும் ஓர் அறமாகக் கருதப்பட்டது. அதை லேவியராகமம் பின் வருமாறு கூறும் :

''நீங்கள் தேசத்தின் பயிரை அறுக்கும்போது, உன் வயலின் ஓரத்திலிருக்கிறதைத்தீர அறுக்காமலும்,சிந்திக் கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமலும்,

உன் திராட்சத் தோட்டத்திலே பின் அறுப்பை அறுக்காமலும், அதிலே சிந்திக்கிடக்கிற பழங்களைப் பொறுக்காமலும் அவைகளை எளியவனுக்கும் பரதேசிக்கும் விட்டுவிடுவாயாக; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்'' (லேவி. 19. 9 - 10).

இன்னும் பலவகைகளில் வறியவர்க்காகப் பரிந்து பேசுகிறது உபாகமம் எவரும் யாருடைய திராட்சைத் தோட்டத்தில் புகுந்தாலும் கையால் வேண்டிய மட்டும் பழங்களைப் பறித்துண்ணலாம். கூடையிலெடுத்துக் கொண்டு போகலாகாது. பிறர் வயலில் தானியங்களைக் கையினால் கொய்துண்ணலாம். அரிவாளால் அறுத்தல் கூடாது.

''நீ பிறனுடைய திராட்சத் தோட்டத்தில் பிரவேசித்தால், உன் ஆசை தீர திராட்சப் பழங்களைத் திருப்தியாகப் புசிக்கலாம்; உன் கூடையில் ஒன்றும் எடுத்துக்கொண்டு போகக் கூடாது.

பிறனுடைய விளைச்சலில் பிரவேசித்தால், உன் கையினால் கதிர்களைக் கொய்யலாம்; நீ அந்த விளைச்சலில் அரிவாளை இடலாகாது'' (உபா. 23. 24-25).

இன்னும் அறுவடைக் காலத்திலும் கனிகொய்யும் காலத்திலும் நிலமுடையோர்க்கு இருக்க வேண்டிய தாராள மனப்பான்மையைக் குறித்து உபாகமம் பின் வருமாறு கூறும் :

''நீ உன் பயிரை அறுக்கையில் உன் வயலிலே ஒரு அரிக்கட்டை மறதியாய் வைத்து வந்தாயானால், அதை எடுத்து வரும்படி திரும்பிப் போகவேண்டாம். உன் தேவனாகிய கர்த்தர் உன் கைப்பிரயாசத்திலெல்லாம் உன்னை ஆசிர்வதிக்கும்படி, அதைப் பரதேசிக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் விட்டுவிடுவாயாக.

நீ உன் ஒலிவமரத்தை உதிர்த்துவிட்ட பின்பு, கொம்பிலே தப்பியிருக்கிறதைப் பறிக்கும்படி திரும்பிப் போகவேண்டாம்;அதைப் பரதேசிக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் விட்டுவிடுவாயாக.;

நீ உன் திராட்சப் பழங்களை யறுத்த பின்பு மறுபடியும் அதை அறுக்கத் திரும்பிப் போக வேண்டாம். அதைப் பரதேசிக்கும்

திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் விட்டுவிடுவாயாக'' (உபா.24. 19—21).

யூதர்கள் தங்கள் விளைபொருளில் பத்தில் ஒரு பங்கை ஆலயப் பணிக்கும் ஆலயப்பணி புரிபவரான லேவியார்க்கும் அளித்து வந்-தனர். அதைத் தசமபாகம் என்பர். தசமபாகத்திலும் மூன்றாம் ஆண்டுக்குரிய தசமபாகத்தை வறியவர்க்கு அளிக்குமாறு பணிக்-கிறது உபாகமம்.

''தசமபாகம் செலுத்தும் வருஷமாகிய மூன்றாம் வருஷத்திலே, நீ உன் வரத்திலெல்லாம் பத்தில் ஒன்றை எடுத்து, லேவியனும் பரதேசியும் திக்கற்ற பிள்ளையும் விதவையும் உன் வாசல்களில்புசித்து திருப்தியாகும்படி அவர்களுக்குக் கொடுத்துத் தீர்ந்தபின்பு,..'' (உபா. 26. 12)

2. 3. 2. 7. நடுவுநிலைமை

நடுவுநிலைமையைக் குறித்தும் சில கருத்துக்களை யாத்தி ராகம் கூறுகிறது. யூதர்களது வழக்கப்படி குற்றத்தை விசாரித்துத் தீர்ப்பளிப்பவர்கள் என மூப்பர்கள் அழைக்கப்படும் வயதிலும் தகுதி-யிலும் உயர்ந்த பொதுமக்களே. பிற்காலத்தில் அரசால் நியமிக்கப் பட்ட அலுவலரும் இருந்தனர். சாட்சி சொல்பவர்கள் பொய் சொல்லலாகாதெனவும், யாரும் பொய்ச்சாட்சி சொன்னாலும் அதை ஏற்றுக் கொள்ளாதபடிப் பிறர் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டுமெனவும் யாத்திராகமம் கூறுகிறது.

''அபாண்டமான சொல்லை ஏற்றுக் கொள்ளாயாக; கொடுமை யுள்ள சாட்சிக்காரனாக இருக்க ஆகாதவனோடே கலவாயாக''
(யாத் 23. 1).

பொறுப்புள்ள நிலையிலுள்ளவர்கள் பிறர் சொல்வதை அப்படியே ஏற்றுக் கொள்ளாது நன்கு ஆய்ந்து உண்மையை உணர்தல் வேண்டும் என்பதையே திருக்குறளும்,

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (423)

என விளக்குகிறது.

யூதர்களிடையே பலர் சேர்ந்து ஆலோசித்துத் தீர்ப்பளிக்கும் முறை இருந்ததனால் பெரும்பாலோர்சொல்வதையே பிறரும் சிந்திக்-காமல் ஏற்றுக் கொள்ளல் கூடும். அதைத் தடுக்க,

''தீமை செய்யத் திரளான பேர்களைப்பின்பற்றாதிருப்பாயாக; வழக்கிலே நியாயத்தைப் புரட்ட மிகுதியானவர்களின் பட்சத்தில் சாய்ந்து, உத்தரவு சொல்லாதிருப்பாயாக'' (யாத். 23 2) என எச்சரிக்கிறது யாத்திராகமம். பிற இடங்களிலெல்லாம் வறியவர்க்காகப் பரிந்து பேசும் பழைய ஏற்பாட்டு நீதிநூல்கள் நீதியைப் குறித்துக் கூறும்போது வறியவன் என்று ஒருவனுக்கு இரங்கி நீதி பிறழ்தலாகாது என விதிக்கின்றன. அதே போல ஒருவன் வறியவன் என அவனை மதிக்காதுஅவனுக்கு அநீதியைச் செய்தலும் ஆகாது. வழக்கில் பல சான்றுகளையும் சரியாக ஆராயாது, குற்றமற்றவனைக் குற்றவாளியென்றோகுற்றவாளியைக் குற்றமற்றவனென்றோ தீர்த்தல் தவறாகும்.

''வியாச்சியத்திலே தரித்தினுடைய முகத்தைப் பாராயாக'' (யாத் 23. 3).

''உன்னிடத்திலிருக்கிற எளியவனுடைய வியாச்சியத்தில் அவனுடைய நியாயத்தைப் புரட்டாயாக.

கள்ளக் காரியத்துக்குத் தூரமாய் இருப்பாயாக;குற்றமில்லாதவனையும். நீதிமானையும் கொலை செய்யாயாக ; நான் துன்மார்க்கனை நீதிமான் என்று தீர்க்க மாட்டேன்'' (யாத். 23. 6—7).

லேவியராகமும் உபாகமமும் கூட வழக்கு விசாரிப்பதில் காண்பிக்க வேண்டிய நடுநிலைமையைக் குறித்துக் கூறுகின்றன.

''நியாய விசாரணையில் அநியாயம் செய்யாதிருங்கள்; சிறியவனுக்கு முகதாட்சிணியம் செய்யாமாலும், பெரியவனுடைய முகத்துக்கு அஞ்சாமலும்,நீதியாகப் பிறனுக்கு நியாயம் தீர்ப்பாயாக'' (லேவி. 19. 15).

''நியாயத்திலேமுகதாட்சிணியம் பாராமல்பெரியவனுக்குச்செவி கொடுப்பதுபோலச் சிறியவனுக்கும் செவி கொடுக்கக் கடவீர்கள் ; மனிதன் முகத்திற்குப் பயப்படீர்களாக ; நியாயத் தீர்ப்பு தேவனுடையது'' (உபா. 1. 17).

தகுதியென வொன்று நன்றே பகுதியால்
பாற்பட் டொழுகப் பெறின் (111)

என்றும்,

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி (118)

என்றும் கூறினார் வள்ளுவர்.

எப்பகுதியினரிடத்தும் தன் முறைமையை விடாது நின்றொழுகும் நடுவுநிலைமை என்னும் அறம் ஒன்றே நன்று. முதலில் சமமாக நின்று, பின்பு தன்கண் வைக்கப்பட்ட பொருளைச் சரியாக நிறுத்துக் காட்டும் துலாக்கோல் போலத் தமக்கு ஏற்ற தன்மையொடு பொருந்தி ஒரு பக்கமும் சாயாமலிருப்பது சான்றோர்க்கு அழகாகும்.

ஒரு பக்கமும் சாயாமல் நடுநின்று தீர்ப்புக் கூறும் முறைமையயே திருக்குறளும் பழைய ஏற்பாடும் ஒக்கப் போற்றின. நீதி பிறழ்வதற்கு என்ன காரணங்கள் இருத்தல் கூடும்? பகைவர் எனக்கருதி அவர்க்கு மாறாகவும் நண்பர் எனக்கருதி அவர் சார்பாகவும் சாய்வதனாலேயே நீதி தவறக்கூடும் எனஎண்ணி அதை விலக்க முயன்றனர் திருக்குறள் உரையாசிரியர்கள். நடுவுநிலைமையை. 'பகை நொதுமல் நட்பு என்னும் மூன்று பகுதியிலும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கும் நிலைமை' என்றார் பரிமேழலகர். 'நடுவநிலைமையாவது நட்டார்மாட்டும் பகைவர்மாட்டும் ஒக்க நிற்கும் நிலை' என்பார் மணக்குடவர். பழைய ஏற்பாட்டு நீதிக் கோட்பாடுகளை நியமித்தவர்களோ இவன் வறியவன், இவன் செல்வன், இவன் சமூகத்தில் தாழ்ந்த நிலையிலுள்ளவன், இவன் உயர்ந்த நிலையிலுள்ளவன் என்றெல்லாம் வேறுபாடு கருதுவதனாலேயே நீதி பிறழ்தல் கூடுமெனக் கருதி அதை விலக்குவதிலேயே கவனம் செலுத்தினர். வறியவனென இரங்கி யவன்சார்பாகவோ செல்வனென அஞ்சி அவன்சார்பாகவோ தீர்க்காமல் நடுநின்று நீதி கூற வேண்டுமென்றனர்.

பழைய ஏற்பாட்டு நீதிக்கோட்பாடுகள் உருவெடுத்த காலமாகிய கி. மு. ஆறாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்திலேயே கையூட்டுப் பெறும் வழக்கம் இருந்திருக்கிறதெனத் தெரிகிறது. ஏனெனில் அதை விலக்கவும் சில விதிகள் கூறப்படுகின்றன.

"பரிதானம் வாங்காதிருப்பாயாக; பரிதானம் பார்வையுள்ளவர்களைக் குருடாக்கி, நீதிமான்களின் வார்த்தைகளைப் புரட்டும்" (யாத். 23.8).

"நியாயத்தைப் புரட்டாதிருப்பாயாக; முகத்தாட்சிணியம் பண்ணாமலும் பரிதானம் வாங்காமலும் இருப்பாயாக; பரிதானம்

ஞானிகளின் கண்களைக் குருடாக்கி நீதிமான்களின் நியாயங்களைத் தாறுமாறாக்கும்'' (உபா. 16.19).

வள்ளுவர் கையூட்டைக் குறிப்பிட்டுக் கூறவில்லை யெனினும் நடுவுநிலைமையினின்றும் தவறுவதால் பெறத்தக்க செல்வம் நன்மையையே பயப்பதாயினும் அதை ஏற்றுக் கொள்ளாது அப்பொழுதே நீக்கிவிட வேண்டும் என்றார்.

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல் (113)

நடுவிகந்தாம் ஆக்கம் என்பதில் கையூட்டும் அடங்கும் அன்றோ-

2. 3. 2. 8. சமூகத்தில் மாதர் நிலை

திருக்குறளைவிடக் காலத்தால் மிக முற்பட்ட பழைய ஏற்பாட்டு விதிகள், சில கருத்துக்களில் திருக்குறளுக்கு ஒப்பிடும்போது ஓரளவு பிற்போக்காக இருத்தலும் இயல்பு. திருக்குறள் காட்டும் சமூகத்தில் பெண்களின்நிலை மிகஉயர்வாக இருப்பதாகவே தெரிகிறது. இல்லறவியலில் வாழ்க்கைத்துணை நலம் என்னும் அதிகாரமும் காமத்துப்பாலும் இதைக் காட்டும்.மேலும் காமத்துப்பாலில் வள்ளுவர் காட்டும் காட்சிகளினின்றும், ஒரு ஆடவனும் பெண்ணும் மனமொத்துத் தாமேவிரும்பி மணம்செய்து வாழும்முறையையே அவர் ஆதரித்தார் எனத் தெரிகிறது.

யாத்திராகமத்து விதிகளின்படி ஒரு ஆடவன் அடிமையாக விலைப்பட்டால் ஏழாம் ஆண்டு விடுதலை பெறுவான் என்பதும் ஒரு பெண் அவ்வாறு விலைப்பட்டால் விடுதலைபெறுதல் இல்லைஎன்பதும் முன்பே குறிப்பிடப்பட்டது. இது பெண்களின் நிலை தாழ்வாக இருப்பதையே காட்டும். இன்னும் பத்துக் கட்டளைகளில் பிறர் பொருளை வெஃகுதலாகாது என்னும் விதி கூறப்பட்டு இருக்கும் முறையும் கவனிக்கத்தக்கது.

''பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், வேலைக்காரியையும் அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்றார்'' (யாத். 20. 17).

இங்கு வீட்டை முற்கூறிப் பின் மனைவியையும் பிற உடைமைப் பொருள்களுடன் சேர்த்துக் கூறுவதால் மனைவியும் உடைமை

யாகக் கருதப்பட்ட நிலைமையை இது காட்டுகிறதென விவிலிய நூலை ஆய்வோர் கூறுவர்

திருமண முறையிலும் ஆடவன் பெண்ணின் தந்தைக்குப் பொருள்கொடுத்துப்பெண்ணை மணந்து கொள்வதே அக்காலவழக்கமாக இருந்தது. இவ்வழக்கமே, மனைவி உடைமைப் பொருளாகக் கருதப்படுவதற்கு ஏதுவாகியது போலும். மணம் செய்யப்படாதவளும் இன்னும் யார்க்கும் மணம் பேசப்படாதவளும் ஆகிய கன்னிகை யொருத்தியை ஆடவன் ஒருவன் பெற்றோர் சம்மதமின்றிச் சேர்ந்தானாயின் பின் அவன் மணப்பெண்ணுக்குக் கொடுக்க வேண்டிய பரிசுப் பொருளை அவள் தந்தையிடம்கொடுத்துஅவளைமணம்செய்து கொள்ள வேண்டும். மணம் செய்யாவிடினும் உரிய பொருளையாவது கொடுக்க வேண்டுமென யாத்திராகமம் கூறுகிறது.

''நியமிக்கப்படாத ஒரு கன்னிகையை ஒருவன் மோசம் போக்கி அவளோடே சயனித்தால், அவன் அவளுக்காகப் பரிசம் கொடுத்து, அவளை விவாகம் பண்ணக்கடவன்.

அவள் தகப்பன் அவளை அவனுக்குக் கொடுக்க மாட்டேன் என்றானாகில்,கன்னிகைகளுக்காகக் கொடுக்கின்ற பரிசமுறைமையின் படி அவன் பணத்தை நிறுத்துக் கொடுக்க வேண்டும்'' (யாத் 22 16-17).

இதைப் படிக்கும் போது, அக்காலத்து யூதர்களிடையே பெண் ஒரு பண்டமாற்றுப் பொருளாகக் கருதப்பட்டாள் என்னும் எண்ணமே ஏற்படுகிறது. திருவள்ளுவர் மட்டுமன்றிச் சங்ககாலத்து அகப்பொருள் செய்யுள்களை யெழுதிய கவிஞருள் எவரும் ஒருமங்கையைப் புணர்ந்து ஆடவன் அதற்கு ஈடாகப் பெண்ணின் தந்தைக்குப் பொருள் கொடுத்து விட்டுச் செல்லலாம் என்னும் இக்கருத்தை ஒப்பார் என்பது திண்ணம் பண்டைத் தமிழரோ ஒரு பெண் ஒரு ஆடவனுடனேயே வாழ்நாள் முழுவதும் வாழவேண்டும்; பிற ஆடவரை மனதால் எண்ணலும் ஆகாது என்னும் கற்புநெறியை உயர்வாகப்போற்றினர். ஒரு மங்கை ஒரு ஆடவனைச் சேர்ந்தால் அல்லது அவனை மனம் செய்து கொள்ள வேண்டுமென மனத்தால் எண்ணினால் கூட அவள் பிறனொருவனையும் மணம் செய்தல் ஆகாது; அவ்வாறு செய்தல் அறத்துக்கு மாறாம் என அவர்கள் கருதினர். ஒரு பெண்ணை அவள் விரும்பிய ஆடவனுக்கே மணம் முடித்து வைத்தற்கு அவள் தோழி

முதலியோர் எடுத்துக் கொள்ளும் முயற்சியையே அகப்பொருள் நூல்களனைத்தும் 'அறத்தொடு நிற்றல்' எனக்கூறி ஆதரிக்கின்றன. தன்மகள் ஒருவனைச் சேர்ந்தாள் என அறிந்தும் தந்தை அவளை அவ்வாடவனுக்கே மணம்செய்து தந்து இருவரையும்இணைந்து வாழ வைக்காது அதற்கீடாக அவன் நிறுத்துத் தரும் வெள்ளியை அல்லது பணத்தைப் பெற்றுத் திருப்தியடைதல் கூடும் என்னும் கருத்து பண்டைத் தமிழ்க் கருத்துக்கு மாறானதே.

பண்டைக் காலத்தில் யூதர்கள் இல்லறத்தைப் போற்றாமலோ குடும்பத்தில் ஒற்றுமையை முக்கியமாகக் கருதாமலோ இல்லை.

"இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன்தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" (ஆதி. 2 24) என ஆதியாகமம் கூறுகிறது. மணமகன் பெண்ணின் தந்தைக்குப் பொருள் கொடுத்துப்பெண்ணைக் கொள்ளும்வழக்கம் அக்காலத்திலிருந்தபோதும்பெற்றோர் பெண்ணின் விருப்பத்தைக் கேட்டே திருமணத்துக்கு ஒப்பினர் எனத் தெரி-கிறது. ஆபிரகாமின் பணியாள் ஈசாக்குக்கு ஏற்ற பெண்ணாக ரெபக்காளைத் தெரிந்தெடுத்துக்கொண்டு மணம்பேச முற்பட்டபோது பெண்ணின் சகோதரனும் தாயும் பெண்ணை அழைத்து அவள் விருப்பத்தைக் கேட்ட பின்பே அவளை ஆபிரகாமின் ஊருக்கு அனுப்ப இசைந்தனர் எனக் கூறப்படுகிறது.

"அப்பொழுது அவர்கள் : பெண்ணை அழைத்து அவள் வாய்ப் பிறப்பைக் கேட்போம் என்று சொல்லி,

ரெபக்காளை அழைத்து : "நீ இந்த மனிதனோடே கூடப் போகிறாயா என்று கேட்டார்கள். அவள் : போகிறேன் என்றாள்" (ஆதி 24. 57-58).

மற்றும் அக்காலத்துப் பெண்கள் வீட்டை விட்டு வெளியே செல்வதைக் குறித்துக் கட்டுப்பாடு ஒன்றும் இருக்கவில்லையெனத் தெரிகிறது. பெண்கள் வெளியில் சென்று ஆடுமாடுகளை மேய்த்தும் தண்ணீர் எடுத்தும் வந்தனர்; மணமாகாத பருவப் பெண்களும் இவ்வாறு சுதந்திரமாக வெளியில் சென்றனர் என ஆதியாகமத்துக் கதைகளினின்றும் அறிகின்றோம்.

ஆயினும் பெண்களுக்கு ஓரளவு உரிமை இருந்ததே தவிர ஆணும் பெண்ணும் சமமென்னும் கருத்து முதலைந்து நூல்கள்

எழுதப்பட்ட காலத்து யூதர்களிடையே இன்னும் உதிக்கவில்லை எனலாம்.

யாத்திராகமத்திற்கு ஒப்பிடுப்போது உபாகமத்தின் காலத்தில் சமூகத்தில் பெண்கள் நிலை ஒரளவு உயர்வடைந்திருந்தது எனத் தெரிகிறது. யாத்திராகமத்தில் கூறப்பட்ட பத்துக் கட்டளைகள் திருப்பவும் உபாகமத்தில் கூறப்படுகின்றன அவற்றில் பிறருக்குரியவற்றை விரும்பலாகாது என்னும் இறுதிக் கட்டளை அமைந்திருக்கும் முறை வருமாறு :

''பிறனுடைய மனைவியை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய வீட்டையும், அவனுடைய நிலத்தையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும் அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக'' (உபா. 5.21).

இங்கு, முன் யாத்திராகமத்திலிருந்து எடுத்துக் காட்டப்பட்ட விதியைப் போலன்றி, மனைவியை முதலில் தனியே கூறிப் பின் வீடு முதலிய பிறபொருளைக் கூறியிருப்பதைக் காணலாம். இது, மனைவி உடைமைகளுள் ஒன்றாகக் கருதப்படாமல் தனித்தானம் அடைந்து விட்டதைக் காட்டும் என்பர். அடிமைகளைக் குறித்த விதியிலும் உபாகமம் ஒரு சீர்திருத்தத்தைக் கொண்டு வருகிறது. அடிமையாக விற்கப்பட்ட பெண்களுக்கு ஏழாம் ஆண்டு விடுதலை பெற்றுப்போகும் வாய்ப்பு இல்லையென யாத்திராகமம் கூறியதற்கு மாறாக உபாகமம் அடிமைப் பெண்ணுக்கும் அவ்வுரிமையை அளிக்கிறது.

''உன் சகோதரனாகிய எபிரெய புருஷனாகிலும் எபிரெய ஸ்திரீயாகிலும் உனக்கு விலைப்பட்டால், ஆறுவருஷம் உன்னிடத்தில் சேவிக்க வேண்டும்; ஏழாம் வருஷத்தில் அவனை விடுதலை பண்ணி அனுப்பி விடுவாயாக'' (உபா. 15. 12)

ஆயினும் உபாகமத்தின் காலத்தில்கூடப் பெண்களின் நிலை இன்னும் சமூகத்தில் போதிய உயர்வு அடையவில்லை என்பதையும் ஒரு பெண் வாழ்நாள் முழுவதும் ஒருவனுடனேயே வாழவேண்டும், அவ்வாறு அவளை வாழ்வித்துக் காப்பது கணவனின் கடன் என்னும் கருத்துக்கள் இன்னும் சமூகத்தில் பரவவில்லை என்பதையும் வேறு சில விதிகள் காட்டுகின்றன கணவன், தன் விருப்பப்படி மனைவியைத் தள்ளி வைக்கலாம் என்னும் வழக்கம் யூதர்களிடையே அக்காலத்து இருந்தது. அதற்கு அவன் எவ்வித நீதிமன்றத்திடமோ நாட்டின்

தலைவர்களிடமோ சென்று அனுமதிபெற வேண்டியதில்லை. மனைவியின் ஒப்புதலையும் பெற வேண்டியதில்லை. கணவனின் தீர்மானமே போதியதாகும். அவ்வாறு விலக்கப்பட்ட பெண் பின்பு வேறொருவனை மணம் செய்து கொள்ளலாம்.

"ஒருவன் ஒரு ஸ்திரீயை விவாகம் பண்ணிக்கொண்ட பின்பு அவளிடத்தில் இலச்சையான காரியத்தைக் கண்டு, அவள்மேல் பிரியமற்றவனானால், அவன் தள்ளுதலின் சீட்டை எழுதி, அவள் கையிலே கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பி விடலாம்.

அவள் அவனுடைய வீட்டை விட்டுப் போன பின்பு வேறொருவனுக்கு மனைவியாகலாம்" (உபா 24. 1-2)

இவ்வாறு கணவன் மனைவியை எளிதில் தள்ளி வைக்கலாம் என்னும் கருத்தைப் பின்பு புதிய ஏற்பாட்டில் கிருஸ்துபெருமான் மறுத்துக் கூறுவதைக் காணலாம். விவிலியம் வெவ்வேறு காலத்தில் எழுதப்பட்ட பல நூல்களின் தொகுப்பாக இருப்பதால் நீதிக் கருத்துக்கள் காலம் செல்லச் செல்ல மாற்றமடைந்து திருத்தமுறுவதை அதில் காணலாம்.

### 2. 3. 2. 9. விலங்குகளிடத்து அருள்

யூதர்கள் உருவவழிபாட்டை விரும்பவில்லை. ஆயினும் மோசேயின் காலத்துக்கு முன்பிருந்தே பலிபீடமமைத்து விலங்குகளைக் கொன்று உயிர்ப்பலி செலுத்தினர். இதை ஆதியாகமத்திலேயே கண்டோம். மிகச் சிறந்தவர்களாகக் கருதப்பட்ட நோவா, ஆபிரகாம் ஆகியோரும் உயிர்ப்பலி செலுத்தினர். மோசே கற்பித்த வழிபாட்டு முறைகளிலும் விலங்குகளைப் பலியிட்டு வழிபடும் முறை முக்கிய இடம் பெற்றிருக்க வேண்டுமெனவே தோன்றுகிறது. யூதர்கள் கானான் தேசத்தில் சென்று தங்கியபோது அந்நாட்டிலும் அயல்நாடுகளிலும் வாழ்ந்த பிற இனத்தவர்கள் பலர் மக்கட்பலியும் (நரபலி) செலுத்தினர் எனத் தெரிகிறது. யூதர்களது முன்னோர்கள் ஆபிரகாமின் காலத்திலிருந்தே மக்கட் பலி செலுத்தவில்லை. ஆனால் யாத்திராகமம் தொடங்கி நான்கு ஆகமங்களும் விலங்குகளையும் பறவைகளையும் பலியிடவேண்டிய பலமுறைகளைப் பற்றிக் கூறுகின்றன. இத்தகைய பலி இறைவனுக்குகந்ததென்ற கருத்தே முதலைந்து நூல்களிலும் காணப்படுகிறது.

சிவபெருமான் முதலிய தெய்வங்கள் மதுரைக் காஞ்சியில் "நாற்ற உணவின் உருகெழு பெரியோர்" (458) எனக் குறிப்பிடப்-

படுகின்றனர். 7. நெருப்பிலிடப்படும் அவிப்பொருளாகிய உணவின் நறுப்புகை மேலே செல்ல அதைத் தேவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர் என அக்கால மக்கள் கருதினர் போலும். அதுபோல யூதர்களும் நெருப்பிலிடப்பட்ட பலிப்பொருளின் நறும்புகையை யாவே ஏற்று மகிழ்வதாக நம்பினர்.

> ''இது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகன பலி'' (லேவி. 3. 5).
>
> ''இது கர்த்தருக்கு இடும் தகன ஆகாரம்'' (லேவி 3. 11).
>
> ''ஆசாரியன் பலிப்பீடத்தின்மேல் அவைகளைத் தகனிக்கக் கடவன்; இது சுகந்த வாசனையான தகன ஆகாரம்'' (லேவி. 3. 16).

விலங்குகளைப் பலியிடுவதைக் குறித்துக் கூறும் மேற்காட்டப்-பட்டன போன்ற சொற்றொடர்களை லேவியராகமம் முதலியவற்றில் அடிக்கடி காணலாம்.

தமிழ்நாட்டில் சங்ககாலத்தில் மட்டுமின்றி இந்நூற்றாண்டின் முற்பகுதி வரையிலும் விலங்குகளையும் பறவைகளையும் பலியிடும் வழக்கமிருந்ததெனினும் வள்ளுவர் அதற்கு மாறாக,

> அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
> உயிர்செகுத் துண்ணாமை நன்று (259)

என்றார். அவிப்பொருளை நெருப்பிலிட்டு ஆயிரம் வேள்விகளை வேட்பதைவிட ஒரு விலங்கையும் கொன்று உண்ணாமலிருப்பதே சிறந்தது எனக்கூறி விலங்குகள்மாட்டு அருள்கொள்ளவேண்டு-மெனக் கற்பித்தார் அவர்.

விவிலிய நூலிலும் பழைய ஏற்பாட்டிலேயே, சில தீர்க்க-தரிசிகளின் நூல்களிலும் சங்கீதம் எனப்படும் துதிப்பாடல்களிலும், கடவுள் விலங்குப்பலிகளை விரும்பவில்லை என்ற கருத்தைக்காண-லாப்.துதிப்பாடல்கள் முதலைந்து நூல்கட்குக் காலத்தால் பிற்பட்டன.

---

7, பத்துப்பாட்டு, மதுரைக் காஞ்சி, 455-60

> மழுவா ணெடியோன் தலைவ னாக
> மாசற விளங்கிய யாக்கையர் சூழ்சுடர்
> வாடாப் பூவின் இமையா நாட்டத்து
> நாற்ற வுணவின் உருகெழு பெரியோர்க்கு
> மாற்றரு மரபின் உயர்பலி கொடுமார்
> அந்தி விழவிற் றூரியங் கறங்க.

புதியஏற்பாட்டின் காலத்தில் கிருஸ்தவர்கள் விலங்குகளைப் பலியிடும் வழக்கத்தை முற்றாகத் தவிர்ந்தனர்.

விவிலிய நூல் ஊன்உணவு உண்பதையும் தக்கதென்று ஏற்றுக் கொள்கிறது. அதைக் குறித்துக் கூறுவதாவது :

''உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடி, உன் எல்லையை விஸ்தாரமாக்கும்போது, நீ இறைச்சி புசிக்க ஆசை- கொண்டு, இறைச்சி புசிப்பேன் என்பாயானால், நீ உன் இஷ்டப்படி இறைச்சி புசிக்கலாம்.

உன் தேவனாகிய கர்த்தர் தமதுநாமம் விளங்கும்படித் தெரிந்து கொள்ளும் ஸ்தானம்உனக்குத் தூரமானால், கர்த்தர்உனக்கு அளித்த உன் ஆடுமாடுகளில் எதையாகிலும் நான் உனக்கு விதித்தபடி நீ அடித்து, உன் இஷ்டப்படி உன் வாசல்களிலே புசிக்கலாம்''

(உபா. 12-20-21).

இவ்வாறு பலிக்காக அன்றி உணவுக்காகவும் விலங்குகளைக் கொல்லலாம் எனத் திட்டமாகக் கூறுகின்றது உபாகமம். விவிலிய நூலின் எப்பகுதியிலும் ஊன் உணவு மறுக்கப்படவில்லை.

வள்ளுவரோ, 'ஊன் உண்ணாமை' என்றபொருளைக் குறித்தே பத்துக் குறள்களை எழுதி ஊனுணவை விலக்கினார்

அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் தினல் (254)

கொல்லாமை என்னும் அறத்தை மீறுவதே அருளுக்கு மாறாகும். அவ்வாறு அருளை நீத்து ஊன் உண்பது பொருளல்லது எனக்கூறி ஊன் உண்பதில் உள்ள விருப்பத்தை விட்டுவிடும்படி போதித்தார் வள்ளுவர்.

பழைய ஏற்பாட்டிலுள்ள முதலைந்து நூல்கள் ஊனுணவையும் விலங்குப் பலியையும் ஏற்றுக்கொள்ளினும் விலங்குகளிடத்து அரு- ளோடு நடந்துகொள்ள வேண்டுமெனக் கற்பிக்கும் விதிகளும் அவற்றில் இல்லாமலில்லை.

பகைவனுடைய விலங்காக இருப்பினும் அது வழிதப்பிப் போனால் அல்லது விழுந்து கிடந்தால் அதற்கு உதவ வேண்டுமென யாத்திராகமம் கூறுகிறது.

''உன் சத்துருவின் மாடாவது அவனுடைய கழுதையாவது தப்பிப்போகக் கண்டால், அதைத் திருப்ப அவனிடத்தில் கொண்டு போய் விடுவாயாக.

உன்னைப் பகைக்கிறவனுடைய கழுதை சுமையோடே விழுந்து கிடக்கக் கண்டாயானால், அதற்கு உதவி செய்யாதிருக்கலாமா? அவசியமாய் அவனோடேகூட அதற்கு உதவி செய்வாயாக'' (யாத். 23 4-5).

ஓய்வு நாளைக் குறித்த விதியிலும் 'உன் எருதும் கழுதையும் இளைப்பாறும் படி' என வயலில் உழுதும் பொதிசுமந்தும் வேலை செய்யும் விலங்குகளும் ஒரு நாள் ஓய்வு பெறவேண்டுமென்பது குறிப்பிடப்பட்டிருந்தது இங்கு நினைவுகூரத்தக்கது.

உபாகமமும் பிறருடைய விலங்கு வழிதப்பிப்போகக் கண்டால் அதை உரியவனுடைய வீட்டிற் கொண்டுபோய்விடவேண்டுமெனவும் அவனது வீடு தூரமாக இருந்தால் விலங்கைக் கண்டவன் அதைத் தன்வீட்டிற்குக் கொண்டுசென்று பாதுகாத்து உரியவன் தேடி வரும்போது அவனிடம் கொடுத்துவிட வேண்டுமென்றும் கூறுகிறது. அது போலவே மற்றொருவனது விலங்கு பாரத்தின்கீழ் விழுந்து கிடக்கக் கண்டால், காணாதவன் போல் போய்விடாமல் அவனோடு சேர்ந்து அதைத் தூக்கியெடுத்துவிட வேண்டுமெனக் கூறுகிறது உபாகமம்.

''மாட்டையும் கழுதையையும் பிணைத்து உழாதிருப்பாயாக'' (உபா 22.10) என்பது உபாகமத்து விதிகளில் ஒன்றாகும். இவ்வாறு வலிமையிலும் விரைவிலும் வேறுபட்ட இருவகை விலங்குகளை ஒரு சேரப் பூட்டியுழுதல் அவற்றிற்குத் துன்பமாக இருக்கும் எனக் கருதி இவ்வாறு விதித்தனர் போலும்.

''போரடிக்கிற மாட்டை வாய் கட்டாயாக'' (உபா 2 .4) என்பது இவ்வாகமத்திலுள்ள மற்றொரு விதி. கதிர்ப்போரை மிதித்துத் தானியத்தையும் தாளையும் பிரிக்க உழைக்கும் மாடு தானியத்தில் சிறிதளவு உண்ணக் கூடுமெனக் கருதி அதன் வாயைக் கட்டச் சிலர் எண்ணக் கூடும். கதிரை மிதித்து வேலைசெய்யும் மாடு தானும் அதிற் சிறிதளவு உண்டு சுவைப்பது பொருத்தமே என்னும் அருள் நோக்கோடு ஏற்படுத்தப்பட்டுள்ளது இவ்விதி.

இவை வள்ளுவர் கூறும் பிறிதின் நோய் தன்னோய்போல் போற்றும் அருளுடைமையுடன் பொருந்துவனவே.

பலிக்காகவோ உணவுக்காகவோ விலங்குகளைக்கொல்வதிலும் சில வரையறைகளை இந்நூல்களில் காணப்படும் விதிகள் ஏற்படுத்துகின்றன.

''பசுவையும் அதின் கன்றையும், ஆட்டையும் அதின் குட்டியையும் ஒரே நாளில் கொல்ல வேண்டாம்''(லேவி, 22.28). பலிகளைக் குறித்துக் கூறும் பொழுது இவ்விதியை ஏற்படுத்துகிறது லேவியராகமம்.

''வழியருகே ஒரு மரத்திலாவது தரையிலாவது குஞ்சுகளாயினும் முட்டைகளாயினுமுள்ள ஒரு குருவிக்கூடு உனக்குத் தென்படும்போது, தாயானது குஞ்சுகளின் மேலாவது முட்டைகளின் மேலாவது அடைகாத்துக் கொண்டிருந்தால், நீ குஞ்சுகளோடே தாயையும் பிடிக்கலாகாது.

தாயைப் போகவிட்டு, குஞ்சுகளை மாத்திரம் எடுத்துக்கொள்ளலாம்; அப்பொழுது நீ நன்றாயிருப்பாயாக ; உன் நாட்களும் நீடித்திருக்கும்'' (உபா. 22.6-7).

இவ்வாறு கூறுகிறது உபாகமம். இவ்விதிகள் உண்பதற்குரிய விலங்கு, பறவை ஆகியவற்றின் இனங்கள் அழியாமல் அல்லது குறையாமல் பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப்பட்டன போலும்.

2. 3. 2. 10. குற்ற நிவாரண பலி

சில குற்றங்களையும் அவற்றிற்காகச் செலுத்தப்படும் குற்ற நிவாரண பலிகளையும்குறித்துக் கூறுகிறது லேவியராகமம் பலிகளைச் செலுத்துவதன் மூலம் குற்றங்கள் போகும் என அவர்கள் அக்காலத்து நம்பினர்.சாட்சியாகச் செல்லும் ஒருவன் பொய் கூறுவது குற்றமாகும் என்பது மட்டுமன்றி அறிந்ததைச் சொல்லாமலிருப்பதும் குற்றமாகும்.

''சாட்சியாகிய ஒருவன், இடப்பட்ட ஆணையைக் கேட்டிருந்தும்,தான் கண்டதையும் அறிந்ததையும் தெரிவியாதிருந்து பாவம் செய்தால் அவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான்'' (லேவி. 5.1).

இது நல்ல நீதிக் கருத்தே. இக்காலத்தும் நீதி மன்றங்களில் சாட்சி பகர அழைக்கப்படுவோர், 'நான் உண்மையைக் கூறுவேன்; உண்மையன்றி வேறெதையும் கூறமாட்டேன்; உண்மைமுழுவதையும் கூறுவேன்' என ஆணையிடுமாறு பணிக்கப்படுகின்றனர். உண்மை முழுவதையும் கூறாமல் மறைப்பதுகுற்றமேஎன்ற கருத்து யாவராலும்

ஏற்றுக்கொள்ளப்பட்ட தொன்றாகும். வேறு பல குற்றங்களையும் லேவியராகமம் குறிப்பிடுகின்றது.

''ஒருவன் கர்த்தருக்கு விரோதமாக அநியாயம் செய்து, தன் வசத்தில் ஒப்புவிக்கப்பட்ட பொருளிலாவது கொடுக்கல் வாங்கலிலாவது தன் அயலானுக்கு மாறாட்டம் பண்ணி, அல்லது ஒரு வஸ்துவைப் பலாத்காரமாய்ப் பறித்துக் கொண்டு, அல்லது தன் அயலானுக்கு இடுக்கண் செய்து,

அல்லது காணமற் போனதைக் கண்டடைந்தும் அதை மறுதலித்து, அதைக் குறித்துப் பொய்யாணையிட்டு, மனிதர் செய்யும் இவை முதலான யாதொரு காரியத்தில் பாவஞ்செய்தானேயாகில்,

தான் அவன் செய்த பாவத்தினாலே குற்றவாளியான படியால், தான் பலாத்காரமாய்ப் பறித்துக்கொண்டதையும், இடுக்கண்செய்து பெற்றுக்கொண்டதையும் தன்வசத்திலே ஒப்புவிக்கப்பட்டதையும் காணாமற் போயிருந்து தான் கண்டெடுத்ததையும்,

பொய்யாணையிட்டுச் சம்பாதித்த பொருளையும் திருப்பக்கொடுக்கக்கடவன்; அந்த முதலைக் கொடுக்கிறது மல்லாமல், அதினோடு ஐந்தில் ஒரு பங்கு அதிகமாகவும் கூட்டி, அதைத்தான் குற்றநிவாரண பலியை இடும் நாளில், அதற்குரியவனுக்குக் கொடுத்து விட்டு,......'' (லேவி. 6. 2-5).

இவை நல்ல நீதிக் கருத்துக்களே. ஆனால் லேவியராகமம் இவற்றோடுகூட அசுத்தமானவை எனக் கருதப்பட்ட விலங்குகளின் உடலையாவது ஊரும் பிராணிகளையாவது அறியாமல் தொடுவதையும் குற்றமாகக் கருதி அவற்றிற்கும் அதே குற்ற நிவாரண பலியை விதிக்கிறது. இவ்வாறு பலவகைகளிலும் சமயச்சார்பான விதிகளையும் பொதுநீதிகளையும் கலந்து கூறுவதே இம்முதலைந்து நூல்களின் இயல்பாகும்.

வள்ளுவரோ தம் குறளில் எச்சமயத்தின் சார்பான கருத்துக்களையும் கூறாது பொதுநீதியையே எவ்விடத்தும் கூறினாரென்பது முன்பே சுட்டிக்காட்டப்பட்டது. ஆகவே அவர் குற்றங்களைப் பலி செலுத்துவதனாலோ வேறு எவ்வித வழிபாட்டு முறையினாலோ போக்கிக் கொள்ளலாமென எங்கும் கூறவில்லை. திருடியவன் அல்லது பிற தவறான வழிகளில் பொருளைத் தேடியவன் அதை உரியவனிடம் திருப்பக் கொடுத்துவிட வேண்டுமென்பது நல்லநீதியே யாயினும்

அவ்வாறும் வள்ளுவர் கூறினாரல்லர். அறத்துக்கு மாறான செயல்கட்குக் கழுவாய் கூறுவது அவர் வழக்கமன்று. இவைசெய்யத்தக்கன, இவை செய்யத்தகாதன என உடன்பாட்டு முகத்தாலும் எதிர்மறை முகத்தாலும் நீதிக்கருத்துக்களைக் கூறி இவற்றால் இன்னஇன்ன பயன் விளையும் எனவும் கூறிச் செல்வதே அவர் வழக்கமாகும்.

யூதர்கள் ஊனுணவை யுண்டனர். ஆனால் சில விலங்கு பறவை முதலியவற்றைத் தூய்மையுள்ளன என்றும் சிலவற்றைத் தூய்மையற்றன வென்றும் கருதினர். லேவியராகமமும் உபாகமமும் இவற்றைக் குறித்து விரிவாகக் கூறும் (லேவி 11, உபா. 14). முயல் பன்றி முதலியவற்றின் இறைச்சியை அவர்கள் உண்பதில்லை. இத்தகைய விலங்குகள் இறந்தபின் அவற்றின் உடலைத் தொடுவதும் தூய்மையற்ற செயல் என அவர்கள் கருதினர்.

வள்ளுவர் ஊனுணவை முற்றாக விலக்கினார் ஊனுண்ணல் அருளுக்கு மாறான செயல் என்பதனோடு ஊனுணவு அனைத்துமே தூய்மையற்றது என அவர் கருதினார்.

உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின் (257)

என்னும் குறளால் இதை உணரலாம்.

2.3 2.11 ஒழுக்கம்

இம்முதலைந்து நூல்கள் சிலவகைத் தவறான ஒழுக்கங்களை வன்மையாகக் கண்டிக்கின்றன. சிறப்பாக லேவியராகமும் உபாகமமும் இவற்றைக் குறித்துக் கூறும். மாற்றாந்தாய், தங்கை முதலிய நெருங்கிய உறவினரைச் சேர்தலும் விலங்கொடு புணர்தலும் கடுங்குற்றமாகக் கருதப்படுகின்றன. இவற்றிற்குக் கொலைத்தண்டனை விதிக்கப்பட்டது. பிறனில் விழைவதும் பெருங்குற்றமாகவே கருதப்பட்டது.

''பிறனுடைய மனைவியோடே சேரும்படி சயனித்து, அவளால் உன்னைத் தீட்டுப்படுத்திக் கொள்ளவேண்டாம்'' (லேவி. 18-20) எனக் கூறுகிறது லேவியராகமம். இது,

எளிதென இல்லிறப்பான் எய்துப்எஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி (145)

என்ற குறளின் கருத்தை யொத்துள்ளது.

நாட்டில் தவறான ஒழுக்கம் பரவிவருதைக் கண்டு ஒரு சீர்திருத்தத்தைக் கொண்டுவர முயன்ற சிலரால் இயற்றப்பட்டன உபாகமவிதிகள். ஆகையினால் அவை இவ்வகைக் குற்றத்திற்கும் கொலைத் தண்டனையையே விதிக்கின்றன. பிறனுடைய மனைவியை ஒருவன் சேர்ந்தால் இருவரும் கொலைத் தண்டனையடைவர். ஒருவனுக்கு நியமிக்கப்பட்ட ஒருத்தியைப் பிறனொருவன் சேர்ந்தாலும் இருவரும் அதே தண்டனை யடைவர். அவன், அவள் விருப்பத்துக்கு மாறாகவே அவளைச் சேர்ந்தான் எனத் தெரிந்தால் அவன் மட்டும் தண்டனையடைதல் வேண்டும். நியமிக்கப்படாத கன்னிகையை ஒருவன் சேர்ந்தால் அவள் தந்தைக்கு ஐம்பது வெள்ளிக் காசுகள் கொடுத்து அவளை மணம் செய்து கொள்ள வேண்டும். இவ்வாறெல்லாம் விதிகளை ஏற்படுத்தி ஆண் பெண் உறவில் ஒழுக்கம் காக்க முயன்றது உபாகமம் (உபா. 22).

இஸ்ரவேல் இனத்திலேயே பொதுமகளிரென யாரும் இருத்தலாகாது எனத் திட்டமாகக் கூறுகின்றன லேவியராகமமும் உபாகமமும் (லேவி. 19.29, உபா. 23.17). இவ்வாறு நீதிக்கோட்பாடுகளில் விதிக்கப்பட்ட போதிலும் கூடப் புதிய ஏற்பாட்டின் காலம் வரையிலும் யூதர்களது நாட்டில் பொதுமகளிர் சிலர் இருந்தனர் என்பதை விவிலியத்தின் பல பாகங்களிலும் காணப்படும் பல சான்றுகளினின்றும் அறியலாம். சமூகத்தைச் சீர்திருத்தல் எந்நாட்டிலும் எளிதன்று.

பிறனில் விழையாமை, வரைவின் மகளிர் என்னும் அதிகாரங்களில் ஆடவர்க்கு ஒழுக்கம் கூறினார் வள்ளுவர். வாழ்க்கைத்துணை நலம் என்னும் பத்தில்

> பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
> திண்மைஉண் டாகப் பெறின் (54)

என்ற குறளின் மூலம் குடும்பப் பெண்ணுக்குக் கற்பைப் போதித்தார்' வள்ளுவர் காலத்தில் வரைவின் மகளிர் அல்லது பொது மகளிர் என அழைக்கப்பட்ட ஒரு பிரிவினர் இருந்தனர். அவர்கள் ஒரு ஆடவனை மணந்து அவனுக்குரிய வாழ்க்கைத் துணையாக வாழும் வாய்ப்பில்லாதவர் என்பதை 'வரைவின் மகளிர்' என்னும் தொடரே விளக்கும். வள்ளுவர் வரைவின் மகளிரை விரும்பலாகாதென ஆடவர்க்கு நீதி கூறினார். ஆனால் பொதுமகளிர் எனச் சமூகத்தால் கருதப்பட்ட அம் மகளிர் செய்யத்தக்கது யாது என அவர்க்கு நீதி கூறினாரில்லை. ஆயினும் திருக்குறளுக்குச் சமகாலத்தில் அல்லது பிற்காலத்தில் பொது

மகளிர் எனப்பட்டோரும் பொதுமகளிராக வாழும் வாழ்க்கையை நீத்து அறவாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் எனும் ஓர் புரட்சிக் கருத்தை யடிப்படையாகக்கொண்டு சிலப்பதிகாரமும் மணிமேகலையு-மாகிய இரட்டைக் காப்பியங்கள் எழுந்தன.

சங்க காலத்தில் செல்வர் குடும்பத்து இளைஞர் பலர் வரைவின் மகளிரை விரும்பிச்சேர்தல் வழக்கமாக இருக்க வள்ளுவர் அதை மறுத்து,

இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு (920)

எனக் கூறியதே வரைவின் மகளிரது நிலையைக் குறித்துச் சிந்திக்கு-மாறு பிற சான்றோரைத் தூண்டியிருக்கலாம். அதன் பயனாகவும் சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகிய காவியங்கள் எழுந்திருக்கலாம். 'இஸ்ரவேல் இனத்தில் பொதுமகளிர் எனயாரும் இல்லாதிருப்பாராக' என உபாகம நீதித்தொகுப்பை இயற்றிய அறிஞர் கூறியது போலவே கணிகையர் குலத்தில் பிறந்த மாதவியின் வாய்மொழியாக,

மணிமேகலையை வான்துயர் உறுக்கும்
கணிகையர் கோலம் காணா தொழிக (27.105—106)

எனக்கூறி ஒரு சீர்திருத்தத்தைக் கொண்டுவர முயன்றார் இளங்கோ-வடிகள். சமூகத்தில் பரவியுள்ள தீமைகளை ஆய்ந்தறியும் சான்றோர் புதிய நீதித்தொகுப்பை யியற்றுவதன் மூலமாவது, காவியம் போன்ற இலக்கியங்களின் மூலமாவது மக்களை விழித்தெழச் செய்து அத்தீமை களை ஒழிக்க முயல்கின்றனர்.

2. 3. 2. 12. நேர்மையும் உள்ளத்தூய்மையும்

லேவியராகமம் பல வகைகளில் நேர்மையைப் போதிக்கின்றது.

"நீங்கள் களவு செய்யாமலும், வஞ்சனை பண்ணாமலும், ஒரு-வருக்கொருவர் பொய் சொல்லாமலும் இருங்கள்.

என் நாமத்தைக் கொண்டு பொய்யாணை இடுகிறதனால், உங்கள் தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்காமலும் இருப்பீர்களாக; நான் கர்த்தர்.

பிறனை ஒடுக்காமலும் கொள்ளையிடாமலும் இருப்பாயாக; கூலிக் காரனுடைய கூலிவிடியற்காலமட்டும் உன்னிடத்தில் இருக்கலாகாது" (லேவி.19-11-13).

பின்வரும் குறள் வரிகளை இவற்றிற்கு ஒப்பாகக்காட்டலாம்.

உள்ளத்தா லுள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல் (282)

தன்னெஞ் சறிவது பொய்யற்க (293)

மறந்தும் பிறன்கேடு சூழற்க (204)

'பிறன் கேடு சூழற்க' எனப் பொதுவகையால் கூறினார் வள்ளுவர். தனித்தனிச் சந்தர்ப்பத்தைக் குறித்துச் சிந்தித்து நீதி கூறும் பழைய ஏற்பாட்டு நீதியாளர்கள் பின்வருமாறும் ஓர் நீதியைக் கூறினார்:

"செவிடனை நிந்தியாமலும், குருடனுக்கு முன்னே தடுக்கலை வையாமலும், உன் தேவனுக்குப் பயந்திருப்பாயாக; நான் கர்த்தர்" (லேவி. 19.14).

யாருக்குக் கேடு சூழ்தல் எளிது? ஏதேனும் உடற்குடையுடை-யவர்களைப் பிறர் துன்புறுத்துதல் எளிது. அதையெண்ணியே இவ் விதியைக் கூறியுள்ளனர். செவிடன் காதால் கேட்காவிட்டாலும் குருடன் கண்ணால் பார்க்கா விட்டாலும் கடவுள் அறிஞர் என அஞ்சி அவர்களுக்குத் துன்பம் செய்யாதிருக்குமாறு பணித்தனர்.

"உன் ஜனங்களுக்குள்ளே அங்கும் இங்கும் கோள் சொல்லித் திரியாயாக" (லேவி . 19 16) என்பதும் லேவியராகமத்தில் கூறப்படும் நீதிகளில் ஒன்றாகும்.

வள்ளுவரும், புறங்கூறலைப் பத்துக் குறள்களில் மறுத்தார்.

மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற (34)

என்பது திருக்குறள். அறம் உள்ளத்திலேயே உதிக்க வேண்டும். சொல்லிலும் செயலிலும் மட்டும் அறம் காணப்பட்டால் போதாது. உள்ளமும் அதனோடு பொருந்த வேண்டும். ஆகவே பிறரை ஒடுக்கலாகாது பிறரை நிந்தித்தலாகாது என்பதனோடு "உன் சகோ-தரனை உன் உள்ளத்தில் பகையாயாக" (லேவி. 19.17) எனவும் கூறுகிறது லேவியராகமம். இன்னும் "பழிக்குப் பழி வாங்காமலும் உன் ஜனப்புத்திரர்மேல் பொறாமை கொள்ளாமலும், உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்பு கூருவாயாக; நான் கர்த்தர்" (லேவி. 19.18) என இறைவன் கூறுவதாகவும் இவ்வாகமம் சொல்லு

கிறது. பழைய ஏற்பாட்டிலுள்ள நீதித் தொகுப்புகள் (Codes of Law) அனைத்துமே இறைவனது கூற்றாகவே கூறப்படுகின்றன. மோசே முதலிய சான்றோர்கள் சான்றோர்களின் உள்ளத்தில்நின்று இறைவன் நீதியை உணர்த்தினார் எனக் கருதி அவ்வாறு கூறினார் போலும். லேவியராகமத்தின் இப்பகுதி புறத்தூய்மையொடு அகத்தூய்மையும், குறித்த உயர்கருத்துக்களைக் கூறுவதனாலேயே 'தூய்மையின் நீதிக் கோட்பாடு' (The Law of Holiness) எனக் குறிப்பிடுகிறது. மேலும் 'நான் கர்த்தர்' என்ற தொடர் இப்பகுதியில் அடிக்கடி வருவது இறைவன் தூயவராய் இருக்கிறார், தலைமை அவருக்கு இருப்பதால் மக்களும் தூயராயிருத்தல் வேண்டும் என்ற கருத்தைத் தருகிறது. இந்நீதித்தொகுப்புயாத்திராகமத்து விதிகளுக்குச் சில நூற்றாண்டுகள் பிற்படத் தோன்றியது ஆகையினால் பழிகுப்பழி வாங்கலாகாது என்ற கருத்தை இங்குக் காண்கிறோம்.

வயதில்முதிர்ந்தோர்க்கு இளையோர் உரிய மதிப்பளித்து நடத்தல் வேண்டுமெனவும் லேவியராகமம் கூறும்

"நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து, முதிர் வயதுள்ளவன் முகத்தைக் கனம் பண்ணி, உன் தேவனுககுப் பயப்படுவாயாக; நான் கர்த்தர்" (லேவி 19.32)

அமைச்சர்க்குரிய ஒழுக்கங்களைக் கூறுமிடத்து வள்ளுவர், தன்னைவிட வயதில மூத்தோர் இருக்கும் அவையில் அவர்கள் பேசுமுன் தான் பேசாது அவர்கள் பேசி முடியும் வரை காத்திருக்கும் அடக்கமே நல்லியல்புகள் எனச் சிறப்பித்துக் கூறப்படும் இயல்புகள் பலவற்றுள்ளும நன்றாம் என்றார்.

நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு (715)

பண்டைக் காலத்தில் மூத்தோர்க்கு மதிப்பளித்தல் எல்லா நாடுகளிலும் வழக்கமாக இருந்திருக்கிறது அவையில் மட்டுமின்றி வீட்டில் உறவினர் சேர்ந்து உரையாடும் போதும் மூத்தோர் தம்கருத்தை கூறிய பின்பே இளையோர் தம் எண்ணத்தை எடுத்துச் சொல்ல வேண்டும் என்னும் வழக்கம் பண்டை யூதர்களிடையே இருந்ததென்பதைப் பழைய ஏற்பாட்டிலுள்ள 'யோபு' என்னும் கதைப் பாடலின் மூலமாகவும் அறியலாம்.

எந்நாட்டிலும் அந்நாட்டவர்க்குத் தீங்கு செய்தலைவிட அந்நியர்க்குத் தீங்கு செய்தல் எளிது. ஆகவே அந்நியர்க்குத் துன்பம்

செய்தலாகாது, அவர்கட்கு உதவவேண்டும் என்ற கருத்துக்களைப் பழைய ஏற்பாட்டில் அடிக்கடி காணலாம். அந்நியரிடத்து அன்புடன் பழக வேண்டுமென லேவியராகமம் கூறுகிறது.

''யாதொரு அந்நியன் உங்கள் தேசத்தில் உங்களோடே தங்கினால், அவனைச் சிறுமைப்படுத்த வேண்டாம்.

உங்களிடத்தில் வாசம் பண்ணுகிற அந்நியனைச் சுதேசி போல எண்ணி, நீங்கள் உங்களில் அன்புகூருகிறதுபோல அவனிலும் அன்புகூருவீர்களாக; நீங்களும் எகிப்து தேசத்தில் அந்நியராய் இருந்தீர்களே. நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்'' (லேவி 19. 33–34).

பிறநாட்டினர் தன்கண் வந்தால் அவர் பாரத்தைத் தாங்கித் தன்னிடத்தே இனிது வாழச் செய்வதே நல்நாடு என வள்ளுவரும் கூறினார் (733).

உபாகமமும் பலமுறை அந்நியர்களைக் குறித்துக் கூறுகிறது யூதர்கள் எகிப்தில் அந்நியராயிருந்து ஒரு காலத்தில் துன்புற்றார்கள் ஆகையினால் அந்நியர்க்கு இரங்கல் வேண்டுமென யூதகுலச் சான்றோர்கள் கற்பித்தனர்.

''நீ அந்நியனுடைய நியாயத்தையும் திக்கற்ற பிள்ளையின் நியாயத்தையும் புரட்டாமலும், விதவையின் வஸ்திரத்தை அடகாக வாங்காமலும் இருந்து,

நீ எகிப்திலே அடிமையாய் இருந்ததையும், உன் தேவனாகிய கர்த்தர் உன்னை அங்கேயிருந்து மீட்டுக் கொண்டு வந்ததையும் நினைப்பாயாக'' (உபா. 24–17–18).

மக்கள் நாட்டில் உயர்நிலையிலுள்ளோர், செல்வாக்குள்ளோர், வலிமையுள்ளோர் ஆகியோர்மாட்டுச் சாய்தல் இயல்பு. ஆனால் கடவுளோ சமூகத்தில் எளியவர். ஆதரவற்றோர், துன்புற்றோர் ஆகியோர்க்கே துணையாய் நிற்கிறார் என்ற கருத்தைப் பழைய ஏற்பாட்டில் அடிக்கடி காணலாம். ஆகவே யூதர்களது நீதிக் கோட்பாடுகளை உருவாக்கியோர் அந்நியர், திக்கற்ற பிள்ளை, விதவை ஆகியோரை அடிக்கடி குறிப்பிடுவதைக் காணலாம்.

''உங்கள் தேவனாகிய கர்த்தர் தேவாதி தேவனும், கர்த்தாதி கர்த்தரும், மகத்துவமும் வல்லமையும் பயங்கரமுமான தேவனு-

மாயிருக்கிறார்; அவர் பட்சபாதம் பண்ணுகிறவருமல்ல, பரிதானம் வாங்குகிறவரும் அல்ல.

அவர் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் நியாயம் செய்கிறவரும், அந்நியன்மேல் அன்பு வைத்து அவனுக்கு அன்ன வஸ்திரம் கொடுக்கிறவருமாயிருக்கிறார்.

நீங்களும் எகிப்து தேசத்தில் அந்நியராய் இருந்தபடியால் அந்நியரைச் சிநேகிப்பீர்களாக'' (உ-பா.10. 17 – 19).

மக்கள் ஒரு பயன் கருதிச் செல்வர் பக்கலிலோ சமூகத்தில் செல்வாக்குடையோர் பக்கலிலோ சாய்தல் கூடும். தேவனோ மக்களிடமிருந்து எதையும் எதிர்பார்க்க வேண்டாத மகத்துவமும் வல்லமையும் உடையவர் ஆகையினால் அவர் ஆதரவற்றவர்க்கே நீதியைச் செய்கிறார் என்பது இங்குக் காணப்படும் கருத்து.

கடவுள் பட்சபாதமற்றவர் என்ற கருத்தை 'வேண்டுதல் வேண்டாமையிலான்' (4) என்ற குறளடி தரும். ஆயினும் ஆதரவற்றவரிடம் கடவுள் சிறப்பாக அருள் செலுத்துகிறார் எனக் குறள் கூறவில்லை,

2.3.2.13. வாணிபத்தில் நீதி

வாணிபம் செய்வோர் நேர்மையான துலாக்கோல், நிறைகல், மரக்கால் முதலியவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்னும் நீதியும் பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் காணப்படுகிறது. வணிகர்கள் பிறருக்குத் தானியம் முதலியவற்றை அளந்து கொடுக்கும்போது சிறிய மரக்காலையும் தாம் கொள்முதல் செய்யும்போது பெரிய மரக்காலையும் பயன்படுத்தலாகாது. நேர்மையான ஒரே அளவுள்ள அளவைக் கருவிகளையே யாவரும் பயன்படுத்த வேண்டும்.

''நியாயவிசாரணையிலும், அளவிலும், நிறையிலும், படியிலும் அநியாயம் செய்யாதிருப்பீர்களாக.

சுமுத்திரையான தராசும், சுமுத்திரையான நிறைகல்லும், சுமுத்திரையான மரக்காலும், சுமுத்திரையான படியும் உங்களுக்கு இருக்க வேண்டும்'' (லேவி 19. 35-36)

''உன் பையிலே பெரிதும் சிறிதுமான பலவித நிறைகற்களை வைத்திருக்க வேண்டாம்.

உன் வீட்டில் பெரிதும் சிறிதுமான பலவித படிகளையும் வைத்திருக்க வேண்டாம்.

உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தில் உன் நாட்கள் நீடித்திருக்கும்படி, குறையற்ற சுமுத்திரையான நிறைகல்லும் குறையற்ற சுமுத்திரையான படியும் உன்னிடத்தில் இருக்க வேண்டும்'' (உபா. 25.13-15).

வள்ளுவரோ இவையனைத்தையும் ஒரு குறளில் அடக்கினார்

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின் (120)

பிறர் பொருளையும் தம்பொருள்போல் ஒப்பநாடி வாணிகம் செய்யின் அது வாணிகம் செய்வோர்க்கு நன்றாய வாணிகமாம். பிறருக்குக் கொடுக்கும் பொருளையும் தாம் கொள்ளும் பொருளையும் ஒப்பநாடுதல் வேண்டுமெனக் கூறுமிடத்து, அவற்றை ஒரே அளவுள்ள படியால் அளக்க வேண்டும், நேர்மையான நிறைகல்லால் நிறுக்க வேண்டும் என்பன மட்டுமின்றி ஒரே அளவு கவனத்துடன் அளக்கவேண்டும், கொடுக்கும் பொருள் பெற்றுக்கொள்ளும் பொருளைப் போல் நல்ல தரமுடையதாகத் தூயதாக உளதா எனக் கவனித்தல் வேண்டும் என்பன அனைத்தும் அடங்கும். இக்குறளுக்கு உரைகூறிய பரிமேலழகரும் 'கொள்வது மிகையும் கொடுப்பது குறையும் ஆகாமல் ஒப்ப நாடிச் செய்தல்' என்றார்.

நேர்மையற்ற முறையில் சிலர் பொய்யான அளவைக்கருவிகளைப் பயன்படுத்தி அறியாதோரை ஏமாற்றுவதைக் கண்டித்துக் கூறும் கூற்றுக்களைப் பின்பு தீர்க்கதரிசிகளின் நூல்களிலும் காணலாம்.

### 2. 3. 2. 14 செல்வமும் வறுமையும்

பொருளொருபால் தேங்குதல் மற்றொருபால் தேய்தல்
அருளறுக்கும் வாளென் றறி (இருளில் ஒளி 7.11)

இவ்வாறு கூறினார் இந்நூற்றாண்டில் வாழ்ந்த உரைநடை எழுத்தாளரும் கவிஞருமாகிய திரு. வி. கல்யாணசுந்தரமுதலியார். பண்டைக் காலத்திலிருந்து இக்காலம் வரையில் பலநாடுகளிலும் இப்பிரச்சனை இருந்து கொண்டே இருக்கிறது. செல்வம் சிலரிடம் சேர்கிறது. பலர் வறுமையினால் வாடுகின்றனர். சங்க காலத்தில் தமிழ்நாட்டில் செல்வம் மிகுந்திருந்தது. வறுமையும் மிகுந்திருந்த-

தெனவே தோன்றுகிறது பசியினால் வருந்திய வறியோர் பலர் நாட்டினில் இருந்தனர் எனவும் அன்னவர்க்கே மணிமேகலை உணவூட்டி மகிழ்வித்தாள் எனவும் அவளது பெயரைக் கொண்ட காவியம் கூறும் வள்ளுவர் காலத்தில் வறுமை பலரை வாட்டியது என்பதை நல்குரவு, இரவு, இரவச்சம் என்னும் அதிகாரங்கள் காட்டும். வறுமை நாட்டில் இருத்தலாகாதென வள்ளுவர் கருதினார்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் (1062)

எனக் கூறினார். 'உலகியற்றியான்' என்பதற்குச் சிலர் 'உலகைப் படைத்த இறைவன்' எனப் பொருள் கொள்வர். அவ்வாறாயின் 'சிலர் இரந்தும் உயிர் வாழவேண்டும் என்ற நோக்கத்தோடு இறைவன் உலகைப் படைத்தானேயாகில் தானும் அவர்களைப்போல் துன்புறுதற்குரியவனாவான் ; ஆகவே மக்கள் முயன்று வாழவேண்டுமென இறைவன் உலகைப் படைத்தானேயன்றி இரந்து வாழ்வதற்காக யாரையும் படைத்தானல்லன்' என்பது வள்ளுவர் கருத்தாக இருக்கலாம். உலகியற்றியான்' என்பதற்கு உலக ஒழுங்கை நியமிப்போர் அதாவது ஆட்சியாளர் எனப் பொருள் கொண்டு, 'நாட்டில் சிலர் இரந்தும் உயிர்வாழத்தக்கதாக ஆள்வோர் சட்ட திட்டங்களை இயற்றி ஆட்சி புரிவார்களேயாகில், நாட்டில் இரப்பார்களும் இருக்கும் நிலை ஏற்பட அனுமதித்த குற்றத்தால் அவர்கள் கெடுவார்கள்' என்பதே வள்ளுவர் கருத்தெனவும் கொள்ளலாம். ஆயினும் பொதுவாகத் திருக்குறள் முழுவதையும் நோக்குமிடத்து வள்ளுவர் வறுமையை நீக்குதற்கு அரசையன்றித் தனிப்பட்ட செல்வரின் தாராளத்தையே அதிகமாக நம்பினார் எனத் தெரிகிறது. சிலரிடம் செல்வம் திரள்வதைச் சட்டங்களின் மூலமாகத் தடுக்க வேண்டும். சிலர் பெருஞ்செல்வராகவும் சிலர் மிகவறியவராகவும் இருக்கும் நிலையை மாற்ற வேண்டியது அரசின் பொறுப்பு எனபன போன்ற கருத்துக்கள் பண்டைத் தமிழ் நூல்களில் அதிகம் காணப்படுவதில்லை அதற்கு மாறாகச் செல்வமும் வறுமையும் அவரவர் வினைப்பயன் என்ற கருத்தைப் பல நூல்களில் காணலாம்.

அகத்தாரே வாழ்வாரென் றண்ணாந்து நோக்கிப்
புகத்தாம் பெறாஅர் புறங்கடை பற்றி
மிகத்தாம் வருந்தி யிருப்பரே மேலைத்
தவத்தால் தவம் செய்யாதார் (31)

என நாலடியார் கூறுகிறது. நல்வினைப்பயன் இல்லாதவர்கள் செல்வர்களின் வீட்டுவாசலில் நின்று 'உள்ளே இருப்பவர்களே நல்வாழ்க்கை பெற்றோர்' எனக் கூறி அண்ணாந்து நோக்கி உள்ளே செல்லும் வாய்ப்பையும் பெறாராய் வெளி வாசலில் நின்று மிக வருந்துவர் என்பது பாடலின் கருத்தாம்

பழைய ஏற்பாட்டு நீதியாளர்கள், நாளடைவில் செல்வம் சிலரிடம் திரள்வதைத் தடுக்க எண்ணியும சில விதிகளையேற்படுத்தியுள்ளனர். அவற்றில் முக்கியமானது நிலம், அதிலும் விளைநிலம் அறுதியாக விற்கப்படுவதில்லை என்பதே. நிலம் விற்ற பின் மீட்கப்படலாம். வறுமையினால் நிலத்தை விற்பவன் பின் தன் கையில் சிறிது பொருள் சேர்ந்தால் தானேயதை மீட்கலாம். அல்லது அவனது நெருங்கிய உறவினர் பணத்தைக் கொடுத்து நிலத்தை மீட்டு அதைத்திரும்பத் தம் குடும்பத்திற்கே உரியதாக்கலாம். யாரும் மீட்காவிடினும், யூதர்கள் ஐம்பது ஆண்டுகட் கொருமுறை கொண்டாடும் யூபிலி என்னும் பெருவிழாவின்போது, நிலம் திரும்பவும் விற்றவனின் உரிமையாகும். ஆகவே நிலத்தை விற்போரும் வாங்குவோரும் அடுத்த யூபிலி வரையுள்ள ஆண்டுகளளவும் பயன்படுத்திக் கொள்ள எனவே விற்பர்; வாங்குவர். நிலமனைத்தும் தேவனுக்குரியது. அதை அறுதியாக விற்குமாறில்லை என அவர்கள் கருதினர். கிராமங்களிலிருக்கும் நிலங்களும் வீடுகளுமே இவ்வாறு யூபிலி ஆண்டில் விடுதலையாகும். மதில் சூழ்ந்த பட்டணங்களிலுள்ள வீடுகளோ அவ்வாறு விடுதலையாவது இல்லை என லேவியராகமம் கூறுகிறது (லேவி.25). அக்காலத்தில் அவர்கள் கிராமீய நிலங்கட்கும் (Rura Property) நகரிலமைந்த மனைகட்கும் (Urban Property) வேறுபாட்டை அறிந்திருந்தனர் எனத் தோன்றுகிறது.

இன்னும் முன்பே கூறப்பட்ட அடிமையாக விற்கப்பட்டவன் ஏழாம் ஆண்டு விடுதலையடையலாம் என்னும் விதியும் யூதர்கட்குக் கடன் கொடுத்தால் வட்டி வாங்கலாகாது என்னும் விதியும் கூட வறியோர்களைப் பாதுகாக்க இயற்றப்பட்ட விதிகளே. இவ்வளவு சட்ட திட்டங்களை யியற்றிய போதிலும் அவர்களால் வறுமையை ஒழிக்க முடியவில்லை. நாட்டில் வறியவர் பலர் இருந்தனர் எனவும் தீர்க்கதரிசிகள் பலர் அவர்கள் சார்பாகப் பேசினர் எனவும் பழைய ஏற்பாட்டில் படிக்கின்றோம். புதிய ஏற்பாட்டின் காலத்திலும் வறியவர்க்குக் குறைவில்லை யெனவே தோன்றுகிறது.

2.3.1.15. நீதியும் விளைவும்

"நீங்கள் என் கட்டளைகளின் படி நடந்து, என் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்தால், நான் ஏற்றகாலத்தில் உங்களுக்கு மழை பெய்யப் பண்ணுவேன்; பூமி தன் பலனையும் வெளியிலுள்ள மரங்கள் தங்கள் கனியையும் கொடுக்கும்.

திராட்சப்பழம் பறிக்கும் காலம்வரைக்கும் போரடிப்புக் காலம் இருக்கும்; விதைப்புக் காலம் வரைக்கும் திராட்சப் பழம் பறிக்கும் காலம் இருக்கும்; நீங்கள் உங்கள் அப்பத்தைத் திருப்தியாகச் சாப்பிட்டு, உங்கள் தேசத்தில் சுகமாய்க் குடியிருப்பீர்கள்"
(லேவி. 26.3-5).

இவ்வாறு தேவன் கூறுவதாகச் சொல்லிச் செல்கிறது லேவிய ராகமம். மக்கள் நீதியைக் கடைப்பிடித்தால் நாட்டில் ஏற்ற காலத்தில் மழை பொழியும், நாடு செழிக்கும், நிலம் மிக்க பயனை அளிக்கும் என்ற கருத்து பண்டைக் காலத்தில் பல நாடுகளிலும் நிலவியிருக்கிறது.

அரசனின் செம்மையே நாட்டு மக்களையும் செந்நெறியில் செலுத்தும் என எண்ணிய வள்ளுவர்,

இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு (545)
முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல். (559)

என இருவழியும் அரசன்மேல் ஏற்றிக் கூறினார். அறநூல்கள் சொல்லிய இயல்பால் செங்கோல் செலுத்தும் அரசனது நாட்டில் மழையும் விளைபொருளும் ஒருங்கு சேரும். ஆனால் அரசன் முறை தவறி நடந்தாலோ பருவமழை பொய்க்குமாறு வானம் துளியைப் பொழியாது

அரசனேயன்றி மக்கள் முறை தவறி நடந்தாலும் நிலம் தன் பயனைக் கொடாதொழியும் என்ற கருத்தைப் பிற சங்க நூல்களிலும் காணலாம்.

சிறுகுடி யீரே சிறுகுடி யீரே
வள்ளிகீழ் வீழா வரைமிசைத் தேன்தொடா
கொல்லை குரல்வாங்கி ஈனா, மலைவாழ்நர்
அல்ல புரிந்தொழுக லான் (கலித்தொகை 39.11-14)

என ஓர் மலைக்குடிமகள் தன் குலத்தைச் சார்ந்தோரை எச்சரிப்பதாகக் கூறுகிறது. கலித்தொகையில் குறிஞ்சிக் கலியைச் சார்ந்த ஓர் செய்யுள். மலைவாழ் மக்கள் அறமல்லாதவற்றைச் செய்தால் மலை நாட்டில் வள்ளிக்கொடிகள் கிழங்கு விளையப் பெறமாட்டா, மலையின் மேலுள்ள தேனிறால்களில் தேன் சேராது, புனங்களில் தினை முதலியவை கதிர் கொள்ள மாட்டா எனக் கூறுகிறாள் குற மகள். மக்கள் நல்வாழ்க்கை வாழா விட்டால் இயற்கையே அவர்களுக்கு மாறாய் நிற்கும் என நம்பினர் பண்டையோர்.

இதே கருத்தைப் பின்பு உபாகமமும் கூறுகிறது (உபா. 11. 13-15).

2.3.2.16. சொத்துரிமை (Inheritance)

குடும்பத்தில் சொத்துரிமை யாரிடமிருந்து யாரைச் சேர வேண்டும் என்பதைக் குறித்தும் சில விதிகளை எண்ணாகமம் கூறும். ஒரு கோத்திரத்துக்குரிய நிலம் அக்கோத்திரத்தை விட்டுப் போகக் கூடாது என்னும் கருத்து அக்காலத்தில் அவர்களிடையே இருந்தது. குலத்தின் பெயர் அழியாமல் காப்பதையும் அவர்கள் முக்கியமாகக் கருதினர்.

தந்தையிடமிருந்து மகன் சொத்துரிமையைப் பெறுவதே அவர்களது இயல்பானதாய உரிமையாய் இருந்தது. வழக்கமாக ஆண் மக்களே சொத்துரிமை பெற்றனர். மூத்த மகன் ஏனைய ஆண் மக்களைவிடப் பெரிய பாகமாகச் சொத்துரிமை பெற்றான் இதைச் 'சிரேஷ்ட புத்திர பாகம்' என்பர். ஒருவனுக்குப் பல மனைவியர் இருப்பின் அவன் எந்த மனைவியை அதிகமாக விரும்புகிறானோ அவளுடைய ஆண் குழந்தைகளில் மூத்தவனுக்குச் சிரேஷ்ட புத்திர பாகத்தைக் கொடுத்தலாகாது ; எம் மனைவியின் குழந்தையாயினும் தன் புதல்வர்களனைவரிலும் முன் பிறந்தவன் எவனோ அவனுக்கே பெரும்பாக உரிமையை அளித்தல் வேண்டுமென உபாகமத்து விதிகளிலொன்று கூறும் (உபா. 21.15-17)

2 3.2.17. நாடும் அரசும்

யூதர்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு வந்தபின் அவர்கள் சென்று புகுந்து தங்கி வாழ்ந்த நாடாகிய கானான் தேசத்தை உபாகமம் பின் வருமாறு சிறப்பித்துக் கூறுகிறது.

"உன் தேவனாகிய கர்த்தர் உன்னை நல்ல தேசத்திலே பிரவேசிக்கப்பண்ணுகிறார் ; அது பள்ளத்தாக்குகளிலும் மலைகளிலுமிருந்து புறப்படுகிற ஆறுகளும் ஊற்றுக்களும் ஏரிகளும் உள்ள தேசம்"

(உபா. 8.7).

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு (737)

என வள்ளுவர் கூறியதுபோலவே மலைகளும் ஓடிவரும் நீராகிய ஆறும் ஊற்றுநீரும் ஏரி முதலிய நீர் நிலைகளும் நிறைந்த நாடே சிறந்த நாடாகும் என யூதர்களும் கருதினர். இன்னும் 'நாடு' என்னும் பத்தில் வள்ளுவர் அடிக்கடி 'விளைவு' 'வளம்' என்பன நாட்டுக்கு மிக வேண்டப்படுவன என வலியுறுத்துவதற்கேற்ப உபாகமமும் கானான் நாட்டில் வயலில்விளையும்கோதுமை,வாற்கோதுமை போன்றதானியங்களையும்,இனியசாற்றைநல்கும்பழக்குலைகளைக்கொண்டதிராட்சைச் செடிகளையும், அத்தி, மாதுளைபோன்றபழமரங்களையும், அந்நாட்டவர்கள் எண்ணெய் எடுப்பதற் கேதுவான ஒலிவத்தோப்பையும் மலையில்மல்குதேனையும் சிறப்பித்துக்கூறுகிறது.மற்றும் உபாகமம் 'அது கல்லுகள் இரும்பாயிருக்கிறதும், செம்பு வெட்டி எடுக்கத்தக்க மலைகளுள்ளதுமான தேசம்'(உபா.8.9)என்று கூறுவதிலிருந்து கனிப்பொருள்களை குறித்தும் அக்காலத்து அவர்கள் அறிந்திருந்தனர் என ஊகிக்கலாம்.

இத்தகைய நாட்டிற்கு அரசன் எப்படிப்பட்டவனாயிருத்தல் வேண்டும் என்பதைக் குறித்தும் சிலகருத்துக்களைக் கூறுகிறது உபாகமம்.

அரசன் குதிரைப் படையை முக்கியமாகக் கருதி எகிப்து முதலிய வெளிநாடுகளிலிருந்து குதிரைகளை வாங்கி நாட்டின் பணத்தைச்செலவு செய்தலாகாது. யூதர்கட்குரிய நீதித் தொகுப்பை அவன் நாள்தோறும் படித்துக் கைக்கொண்டு வாழ்தல் வேண்டும். பின்னும் அரசனுக்குரிய இயல்புகளைப் பின்வருமாறு கூறுகிறது உபாகமம்:

"அவன் இருதயம் பின்வாங்கிப் போகாதபடி அவன் அநேகம் ஸ்திரீகளைப் படைக்க வேண்டாம் ; வெள்ளியும் பொன்னும் தனக்கு மிகுதியாய் பெருகப்பண்ணவும் வேண்டாம்.

அவன் தன் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது, அவனுடைய இருதயம் அவன் சகோதரர் பேரில் மேட்டிமை கொள்-

ளாமலும், கற்பனையை விட்டு வலதுபுறம் இடதுபுறம் சாயாமலும்..."
(உபா. 17-17-18).

அரசர்கள் எவ்வகைக் குற்றங்களைத் தம்மிடத்து நிகழாது கடிதல் வேண்டுமெனக் கூறுங்கால் வள்ளுவர் சொன்ன,

> இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா
> உவகையும் ஏதம் இறைக்கு (432)

என்னும் குறள் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. இதற்கு பரிமேலழகர் 'வேண்டும்வழிப்பொருள் கொடாமையும்நன்மையின் நீங்கிய மானமும் அளவிறந்த உவகையும் இறைக்குக் குற்றம்' எனப் பொருள் கூறினர். மணக்குடவர் 'உலோபமும் நன்மையைக் கடந்த மானமும் நன்மையைத்தாரா மகிழ்ச்சியும் இம்மூன்றும் அரசர்க்குக் குற்றமாம்'என்றார்.

இம்மூன்று குற்றங்களும் மேலே உபாகமத்தினின்றும் எடுத்துக் காட்டப்பட்ட கருத்துடன் ஒத்திருப்பதைக் காணலாம். வேண்டும் வழிப் பொருள்கொடாமை தனக்காகப் பொருளைச் சேர்த்து வைக்க வேண்டும் என்னும் ஆசையினாலேயாம் இதையே மணக்குடவர் உலோபம் என்றார். அரசன் பொருளை நாட்டுக்காக குடிமக்களுக்காகப் பயன்படுத்தக் கடமைப்பட்டவன். அவன் தனக்கெனப் பொருளைச் சேர்த்து வைத்தல் தகாது, ஆகவே அவன் தனக்கென வெள்ளியையும் பொன்னையும் பெருகப்பண்ண வேண்டாம் என உபாகமம் கூறுகிறது. வீண் பெருமை அரசனுக்கேற்றதன்று ; ஆயினும் செல்வமும் ஆற்றலும் அரசனுக்கு இருப்பதால் அவன் பிறரைவிடத் தான் உயர்ந்தவன் என எண்ணி அவ்வாறு பெருமை பாராட்டுதலும் கூடும். இதையே மாண்பிறந்த மானம், நன்மையில்லாத மானம் என விலககினர். அவனுடைய இருதயம் தன் சகோதரர் பேரில் மேட்டிமை கொள்ளாமலும் இருத்தல் வேண்டும் என்றனர் உபாகம நீதிநூலுடையோர். அரசனிடம் செல்வம் மிகுந்திருப்பதால் அவன் தான் விரும்புவனவற்றைத் துய்த்து மகிழ்தல் இயல்பு. ஆனால் அனுபவிப்பதும் அளவோடு இருத்தல் வேண்டும். மாணா உவகை என்பதற்கு 'அளவிறந்த உவகை' எனவும் 'நன்மையைத் தாரா மகிழ்ச்சி' எனவும் உரையாசிரியர் பொருள் கொண்டனர். இதற்கொப்பவே அரசன் பல மனைவியரை மணம் செய்து இன்ப வாழ்க்கையிலேயே பெரிதும் ஈடுபடவேண்டாம் என விதித்தனர் உபாகம விதிகளை இயற்றியோர்.

# 3

# வரலாறு இலக்கியங்கள்

## 3. வரலாற்று இலக்கியங்கள்

பழைய ஏற்பாட்டிலுள்ள சில நூல்கள் வரலாற்று இலக்கியங்கள் (Historical Literature) எனப்படும். இவற்றில் ஓரளவு மிகைப் படுத்தலும் கற்பனைகளும் கலந்திருக்கலாமாயினும் இவை பெரும்பாலும் வரலாற்று நிகழ்ச்சிகளைக் காட்டுவன. பழைய ஏற்பாட்டில் முதலைந்து நூல்களையும் அடுத்து வரும், யோசுவா, நியாயாதிபதிகள், I சாமுவேல் II சாமுவேல் I இராஜாக்கள், II இராஜாக்கள், I நாளாகமம் II நாளாகமம், எஸ்றா, நெகேமியா என்பன வரலாற்று இலக்கியங்களாம். சிறுகதைகள் போல விளங்கும் ரூத், எஸ்தர், யோனா என்னும் மூன்று நூல்களையும் சிலர் இவற்றுடன் சேர்ப்பர். வரலாற்று இலக்கியங்கள் பல நூற்றாண்டுகளாகத் தொடரும் யூதர்குல வரலாற்றைக் காட்டுவன.

### 3. 1. யோசுவா

இது மோசேயின் காலத்தின் பின் இஸ்ரவேலர் யோசுவாவின் தலைமையின் கீழ்க் கானான் நாட்டில் புகுந்து அந்நாட்டவர்களின் நகர்கள் சிலவற்றையும் அந்நாட்டின் சில பகுதிகளையும் கைப்பற்றியதைக் கூறும். வென்ற நாட்டைச் சீட்டுப் போட்டுப் பிரிக்கும்

வழக்கம் அக்காலத்தில் இருந்ததெனத் தெரிகிறது. இஸ்ரவேலின் பன்னிரு குலத்தவர்களும் வென்ற நாட்டைப் பிரித்துக் கொண்டதையே இந்நூலின் பிற்பகுதி கூறுகின்றது. இரு குலத்தவர்கள் யோர்தான் ஆற்றின் ஒரு கரையிலும் ஏனைய பத்துக் குலத்தவர்களும் மறுகரையிலும் சென்று தங்கினர் எனக் கூறப்படுகிறது.

யோசுவா காலத்தில் அவர்கள் மேற்கொண்ட போர்முறைகளை நோக்குமிடத்து எப்படியாவது வெற்றிபெற வேண்டும் என்னும் நோக்கத்தைத் தவிரப் போர்முறையில் நீதி எதையும் அவர்கள் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. போரில் பகைவரை ஏமாற்றலாம் என்ற கருத்தே அக்காலத்தில் நிலவியிருந்தது. ஆயின் பட்டணத்தை யோசுவா சூழ்ச்சியினாலேயே கைப்பற்றினான். இன்னும் போரில் தோற்று ஓடியவர்களைக் கொல்லாது விடுதல், படைக்கலம் அற்றவர்களைப் படைக்கலம் கொண்டு தாக்காமை முதலிய போர்முறை யறங்களையும் அவர்கள் அக்காலத்து அறிந்திருக்கவில்லை. எருசலேம் முதலிய ஐந்து நகரத்து அரசர்கள் போரில் தோற்று ஓடி ஒரு குகையில் ஒளித்திருந்தபோது யோசுவா அவர்களைக் கைப்பற்றிக் கொன்றான் என இந்நூல் கூறுகின்றது (யோ. 10).

வினைத்தூய்மையைக் குறித்துப் பத்துக் குறள்கள் கூறிய வள்ளுவரின் கருத்துக்கும் யோசுவா, நியாயாதிபதிகள் என்னும் நூல்களில் காணப்படும் யூதர்களின் போர் முறைக்கும் வெகுதூரமே.

> பேராண்மை யென்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
> ஊராண்மை மற்றதன் எஃகு (773)

எனப் போர்முனையில் அருள் நோக்கத்தை வற்புறுத்தும் அறம் அக்காலத்து அவர்கட்கு அப்பாற்பட்டதாகவேயிருந்தது. ஆயினும் இந்நிகழ்ச்சிகள் கி.மு. ஆயிரத்துக்கு முன் நிகழ்ந்தவையென்பது நினைவில் கொள்ளத்தக்கது. பழைய ஏற்பாட்டிலேயே பிற்கால நிகழ்ச்சிகளைக் கூறும் நூலகளில் போர்முறையறங்களைக் காணலாம்.

### 3. 2. நியாயாதிபதிகள்

இந்நூல் யோசுவாவின் காலத்தின் பின் யூதர்களிடையே அரசர்கள் தோன்றுமுன் இருந்த நிலையைக் காட்டும். நியாயாதிபதிகள் என அழைக்கப்பட்ட தலைவர்களே மக்கள் மேல் ஓரளவு ஆட்சி செலுத்தி வந்தனர். கானான் நாட்டில் புதிதாகச் சென்று குடியேறிய யூதர்கட்கும் அந்நாட்டிலும் அயலிலும் வசித்து வந்த பிற இனத்தவர்கட்குமிடையே அடிக்கடி போர் நிகழ்ந்தது.

யூதர்களும் போரில் கொடிய முறையையே பின்பற்றினர். அவர்கள் பகைவர்களாகிய பிற இனத்தவரும் யூதர்களோடு போர் செய்யும்போதும் தத்தமக்குள் போர் செய்யும்போதும் அதேவிதக் கொடிய முறைகளையே பின்பற்றினர். அதோனிபேசேக் என்னும் கானானிய நாட்டு அரசனொருவன் போரில் தோற்று ஓடியபோது யூதர்கள் அவனைப் பின் தொடர்ந்து பிடித்து அவன் கைகால்களின் பெருவிரல்களைத் தறித்ததாகவும் அப்போது அவன் "எழுபது ராஜாக்கள், கைகால்களின் பெருவிரல்கள் தறிக்கப்பட்டவர்களாய், என் மேஜையின்கீழ் விழுந்ததைப் பொறுக்கித் தின்றார்கள் ; நான் எப்படிச் செய்தேனோ, அப்படியே தேவன் எனக்கும் செய்து சரிக்-கட்டினார்" எனச் சொன்னதாகவும் கூறப்படுகிறது (நியா. 1. 7).

பகைவரை எவ்விதத்திலும் ஏமாற்றிக் கொல்லலாம் என்ற கருத்தே இந்நூலிலும் காணப்படுகிறது. ஏகூத் என்னும் யூதர் தலைவன் எக்லோன் என்னும் மோவாபிய அரசனைக் காணச் சென்று, தேவனிடமிருந்து நான் உமக்குச் சொல்ல வேண்டிய வாக்கு உண்டு எனக் கூறி அவ்வரசன் தன் ஏவலர்களை வெளியே அனுப்பிவிட்டு ஏகூத்தன் அருகில் வர ஏகூத்தன் ஆடையில் தான் மறைத்து கொண்டு வந்த கத்தியையெடுத்து மோவாபிய அரசனைக்கொன்றான் (நியா. 3. 15-26). இக்கதை ஓரளவு பெரிய புராணத்தில் வரும் மெய்ப்பொருள் நாயனார் கதையையே ஒத்திருக்கிறது. ஆனால் பெரியபுராணத்தில் கொல்லப்பட்டவன் போற்றப்படுகிறான் இங்கோ கொன்றவன் போற்றப்படுகிறான். கி. மு. ஆறாம் நூற்றாண்-டளவில் எழுதப்பட்ட நியாயாதிபதிகள் கி. மு. ஆயிரத்துக்கு முன்-பிருந்து வழங்கி வந்த கதைகளைக் கூறுகிறது பெரியபுராணம் கி.பி. பதினோராம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. காலத்துக்கும் நாட்டுக்கும் ஏற்றபடி கருத்துக்கள் மாறுபடுகின்றன.

அக்காலத்து யூதர்களிடையே ஆடவர்கள் மட்டுமன்றிப் பெண்களும் வீர உணர்ச்சி மிகுந்தவர்களாயிருந்தனர். தெபொராள் என்ற மறக்குடி மகளின் பாடல் ஒன்று நியாயாதிபதிகள் ஐந்தாம் அதிகாரத்தில் காணப்படுகிறது. யூதர்கட்குப் பலவகைகளில் துன்பமளித்த கானானியத் தலைவர்களில் ஒருவனாகிய சிசெராவுக்கு மாறாகப்போர் தொடுக்குமாறு பாராக் என்னும்யூதர் வீரனொருவனை ஊக்குவித்த தெபொராள் தானும் போர்முனைக்குச் சென்றாள். யூதர்களில் பெரும்பகுதியினர் திரண்டு போரில் ஈடுபட்டனர். போர் நிகழும்போது ஓர் புயல் ஏற்பட்டது யாவே தங்கள் சார்பாகப்

புயலைத் தோற்றுவித்தார் என எண்ணிய யூதர்கள் ஊக்கத்துடன் போரில் ஈடுபட்டனர். தோல்வியடைந்த சிசெரா போர் முனையை விட்டுச் சென்று யாக்கேல் என்ற பெண்ணின் கூடாரத்தில் அடைக்கலம் புகுந்தான். அவள் அவனைக் காப்பதுபோல் நடித்துப் பாலும் வெண்ணெயும் அளித்து அவன் தூங்கும்போது அவனைக்கொன்றாள். தெபொராள் இச் செயலைப் புகழ்ந்து பாடுகிறாள். அவள் பாட்டினின்றும் சிசெராவின் ஆட்கள் நெடுநாளாக இஸ்ரவேலரின் வயல்களையழித்தும் உணவுப் பொருள்களைக் கொள்ளையிட்டும் துன்பம் செய்து வந்ததால் அவர்களை எப்படியும் அழிப்பதே நீதியென அவள் கருதியதாகத் தெரிகிறது. 'தெபொராளின் பாடல்' எனும் இப்பகுதி எபிரேய மொழியில் கவிதைவடிவாகவே உளதென்பர். கி.மு. 1,100 அளவில் எழுந்த இப்பழம்பாடலைப் பிற்காலத்தில் நியாயாதிபதிகள் என்னும் நூலை உருவாக்கினோர் சேர்த்துக் கொண்டனர் என விவிலிய நூலறிஞர்கள் கருதுகின்றனர்.

கானான் தேசத்தில் சென்று குடியேறிய யூதர்கள் பல ஆண்டுகள் வரையில் தங்களில் ஒருவனை யரசனாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவில்லை. முடியாட்சியை யவர்கள் விரும்பவில்லை. போர் நிகழுங் காலத்தில் அவ்வப்போது ஒருவர் படைத்தலைவர் ஆயினர். கிதியோன் என்ற தலைவனைச் சிலர் அரசனாக்க விரும்பியபோது அவன் ''நான் உங்களை ஆள மாட்டேன்; என் குமாரனும் உங்களை யாள மாட்டான்; கர்த்தரே உங்களை ஆளுவாராக'' எனப் பதில் சொல்லி மறுத்ததாகக் கூறப்படுகிறது (நியா 8.23).

மற்றொரு முறை அபிமெலேக் என்னுமொருவனைச் சிலர் அரசனாக்க முயன்றபோது அதை எதிர்த்த யோதாம் சில யூதர்களைக் கூட்டிச் சொற்பொழிவாற்றினான். மரங்கள் ஒன்று சேர்ந்து ஒரு அரசனைத் தெரிந்தெடுத்துக் கொள்ள விரும்பினவாம். மரங்களுக்கு அரசனாகும் வாய்ப்பை ஒலிவமரம், அத்திமரம், திராட்சைச் செடி முதலிய பயனுள்ள மரங்களெல்லாம் மறுத்துவிட இறுதியில் ஒரு முட்செடியே அவ்வாய்ப்பை ஏற்கிறது (நியா. 9.8-15). மக்களுள் சிறந்தோர் பதவியை நாடமாட்டார்; அமைதியாகத் தத்தம் கடமையைச் செய்யவே விரும்புவர்; தமக்கு உயர்நிலை வேண்டுமென முயல்பவர்கள் தாழ்ந்தோரே என்ற நீதிக் கருத்தை யோதாம் இக்கதையின் மூலம் காட்டினான்.

வள்ளுவர் தாம் புலப்படுத்த விரும்பும் நீதிகளை விளக்க அடிக்கடி எடுத்துக்காட்டுவமையையும் பிறிதுமொழிதலணியையும்

பயன்படுத்துவது போல யூத அறிஞர் தம் கருத்துக்களை உருவகக் கதைகள் மூலம் புலப்படுத்தினர். இம்முறை புதிய ஏற்பாட்டின் காலத்தில் கிறிஸ்து பெருமானால் மிகச் சிறப்பாகக் கையாளப்பட்டது.

நியாயாதிபதிகளின் காலத்து யூதர்களின் சமுதாய நிலையை இந்நூலில் இருமுறை வரும் பின்வரும் வரி காட்டும்: "அந்நாட்களில் இஸ்ரவேலிலே ராஜா இல்லை, அவனவன் தன்பார்வைக்குச் சரிப்போனபடி செய்து வந்தான்" (17.6,21.25). பொதுவாக நிலையான ஆட்சியற்ற ஒரு குழப்பமான நிலையையே இந் நூல் காட்டுகிறது. பெண்களைச் சிறைப்பிடித்து மணம் செய்து கொள்ளும் வழக்கமும் இக்காலத்தில் யூதர்களிடையே இருந்ததாகத் தெரிகிறது. (21.23). இது யூதகுலத்தின் இயல்பான வழக்கம் இல்லையாகையால் அக்-காலத்துச் சிலர் கானான் நாட்டவர்களிடமிருந்து புதிதாகக் கற்றுக் கொண்ட வழக்கமாக இருக்கலாம்.

33. சாமுவேல் (இரு நூல்கள்)

யூதர்களிடையே அரசர்கள் தோன்றிய வரலாற்றை இப்-பகுதியில் காணலாம். முன்னாளில் அவர்கள் முடியாட்சியை விரும்ப-வில்லை. அரசன் ஆட்சியைத் தன்னலத்துக்கே பயன்படுத்துவான் என எண்ணினர். ஆயினும் சுற்றியிருந்த பிற இனத்தவர்கட்கு அரசர்கள் இருந்தனர். இஸ்ரவேலருக்கும் பகைவரையெதிர்த்து நிற்க அரசர்கள் வேண்டியிருந்தது. அதிலும், யூதர்கள் தங்கியிருந்த நாட்டுக்குஅயலே தெற்கில் வசித்த பெலிஸ்தர் (Philistines) என்னும் வலிமை மிகுந்தவர்களுடன் பகையேற்பட்ட பிறகு யூத வீரர்களை வரையும் ஒன்று சேர்த்துச் சேனையை யணி வகுத்துச் செயலாற்ற அனைவரும் பதித்துக் கீழ்ப்படியத்தக்க ஒரு தலைவன் நாட்டில் வேண்டியிருந்ததால் அரசனொருவனைத் தேர்ந்தெடுத்து முடிசூட்ட இசைந்தனர்.

தனக்கு ஒரு மகன் பிறந்தால் அவனைக் கோயில் பணி செய்ய அளிப்பேன் என நேர்ந்த அன்னையால் குழந்தைப் பருவத்திலே ஏளி என்ற ஆசாரியாரின் பொறுப்பில் விடப்பட்டுச் சிறுவயதிலிருந்தே வழிபாட்டு முறைகளில் நன்கு பயின்றவனும் மக்களால்பெரிதும் மதிக்-கப்பட்டவனும் யூதர்களிடையே ஏற்படும் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளித்து ஓர் நியாயாதிபதியாகப் பணியாற்றி வந்தவனுமாகிய சாமுவேலே சவுலை அரசனாகத் தேர்ந்தெடுத்தான். அவனது செல்-

வாக்கினாலும் சவுலின் போர்த்திறமையினாலும் மக்கள் அவனை ஏற்றுக்கொண்டனர்.

சாமுவேல் தன் பொறுப்பை விட்டு விலகிக் கொள்ளும்போது மக்களை நோக்கி, ''நான் யாருடைய எருதை எடுத்துக் கொண்டேன்? ......... யாருக்கு அநியாயஞ் செய்தேன்? யாருக்கு இடுக்கண் செய்தேன்? யார் கையில் பரிதானம் வாங்கிக் கொண்டு கண் சாடையாயிருந்தேன் சொல்லுங்கள்; அப்படியுண்டானால் அதை உங்களுக்குத் திரும்பக் கொடுப்பேன்'' (I சாமு 12.3) எனக் கூறியதாகவும் மக்கள் அவன் அவ்வாறு செய்ததில்லை என ஏற்றுக்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி (118)

என்ற உயர்ந்த நடுநிலைக்கொள்கையை இங்குக் காணலாம்.

சவுலின் மகன் யோனத்தானோ தாவீதின் வீரத்தையும் நாட்டுப் பற்றையும்கண்டு அவனுக்குச் சிறந்த நண்பனானான். விவிலிய நூலை யறிவோர் தாவீதையும் யோனத்தானையும் நன்னட்புக்கு எடுத்துக் காட்டாகக் கொள்வர்.

செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு (781)

என்பது குறள். அதற்கேற்ப யோனத்தானின் நட்பே தாவீதுக்குச் சிறந்த காப்பாக இருந்தது. தன் தந்தையிடமிருந்தும் யோனத்தான் தாவீதைக் காப்பாற்றி மறைந்து வசிக்குமாறு ஆலோசனையும் கூறினான்.

முதலில் சிறப்புறத் தோன்றிய சவுலின் ஆட்சி பிற்காலத்தில் சீர்மையை இழந்து கேடுற்றது ஏன் என ஆராயப்புகின் பல காரணங்கள் புலப்படும். தன்னை அரசனாக்கியவனும் நாட்டில் மிக்க செல்வாக்குப்பெற்றவனும் இறையருள்பெற்றவனாக மக்களால்கருதிக் கொண்டாடப் பெற்றவனுமாகிய சாமுவேலின் ஆலோசனையைப் பொருட்படுத்தாமல் நடந்ததனால் அவன் நட்பை இழக்கிறான் சவுல்.

வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னாம்
தகைமாண்ட தக்கார் செறின் (8.7)

என்பதற்கேற்ப இந்நிகழ்ச்சியால் சவுலின் செல்வாக்கு குறைந்தது. அவன் உள்ளத்து ஊக்கமும் ஒய்ந்தது. சவுல் விரைவில் உள்ளக் கிளர்ச்சி யடையத்தக்க தன்மையுடையவனாக இருந்திருத்தல் வேண்-

டும். இளம் வயதில் சாமுவேலின் தொடர்பினால் யாவே வழி-பாட்டில் உள்ளக்கிளர்ச்சியுடன் ஈடுபட்ட அவன் அந்த நல்நட்பை-யிழந்தபின் பொறாமைக்கும் செற்றத்துக்கும் உள்ளத்தில் இடம் கொடுத்தான் 'சாமுவேல்' என்ற நூலில் வரும் நிகழ்ச்சிகளை நோக்-கும்போது அவன் தன் பிற்காலத்தில் ஒருவித மன நோயினால் வருந்-தினான் எனத் தோன்றுகிறது.

தன் சார்பாகப் போர் புரிந்து பகைவரையழித்தவனும் தனக்கு உண்மையாக உழைத்தவனும் தன் நலனையே கோரியவனுமாகிய தாவீதின் மேல் பகை கொண்டதும் சவுல் குடிமக்களின் மதிப்பை யிழக்க மற்றொரு காரணமாகும்.

> வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
> நினைப்பானை நீங்கும் திரு (519)

என்பது குறள். அரசர் பணியில் உண்மையுடன் ஈடுபட்ட தாவீதின் கேண்மையை வேறாக நினைத்த சவுலைத் திரு நீங்கிற்று.

ஒரு போரின் போது போர் முடியும் வரை யாரும் உணவுண்ணா-லாகாது எனத் தான் இட்டகட்டளையை அறியாத தன் மகன் யோனத்தான் அக்கட்டளைக்கு மாறாகச் சிறிதுதேனையுண்ட சிறு தவற்றுக்காக அவன் கொலை செய்யப்பட வேண்டுமெனச் சவுல் தீர்ப்பளித்தான். ஆனால் மக்கள் அந்நேரத்தில் அவனுக்கு மாறாக நின்று யோனத்-தானைத் தப்புவித்தனர். (I சாமு. 14)

> கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
> அடுமுரண் தேய்க்கும் அரம் (567)

என்னும் அரசநீதியைச் சவுல் அறியவில்லை போலும்.

தாவீது சவுலிடமிருந்து தப்பியோடிய போது அக்காலத்திருந்த ஆசாரியான் (Priest) அகிமெலேக்கினிடத்தில் சென்று ஒரு வாளையும் உணவையும் பெற்றுக் கொண்டு சென்றான். சவுலுக்குத் தாவீதின் பேரில் ஏற்பட்ட பகையை யறியாத ஆசாரியான் அவன் அரச காரிய மாகச் செல்வதாக எண்ணியே உதவினான் (Iசாமு.21) அகிமெலேக்கு தாவீதுக்கு இவ்வாறு உதவினான் எனக் கேள்வியுற்ற சவுல் அக்காலத்-திருந்த ஆசாரியார் அனைவரையும் கொல்லுமாறு தன் சேவகருக்குக் கட்டளையிட்டான். அவர்களோ ஆசாரியார்களைக் கொல்ல அஞ்சினர். அவர்கள் கருத்தையும் சவுல் பொருட்படுத்தினானில்லை.

இறுதியில் தோவேக் என்னும் சவுலின் ஊழியக்காரன் ஒருவன் அரசனின் கட்டளையை யேற்று அவர்களைக் கொன்றான்.

> இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
> சீறிற் சிறுகும் திரு (568)

தாவீதின்மேல் கொண்ட பொறாமை காரணமாக அரசியலில் தனக்குத் துணை நின்றவருடனும் சேர்ந்து ஆலோசிக்காது அவர் கருத்தையும் மீறி நடந்து பலரின் நன்மதிப்பையும் இழந்தான். இவ்வாறு அரசனுக்குத் தகாத பல செயல்களைச் செய்த சவுல் செல்வாக்கையும் படைவலியையும் இழந்தான். இறுதியில் அவனும் யோனத்தானும் பெலிஸ்தருடன் செய்த போர் ஒன்றில் உயிர் துறந்தனர்.

சவுலின் பகைக்கு அஞ்சி மறைந்து வசித்துக் கொண்டிருந்த தாவீது, சவுலும் யோனத்தானும் போரில் இறந்ததைக் கேள்வியுற்று இரங்கிக் கூறிய செய்யுள் இரண்டாம் சாமுவேலின் முதல் அத்தியாயத்தில் காணப்படுகிறது இது உண்மையில் தாவீதால் பாடப்பட்டதாகவே யிருக்குமென விவிலியநூலை யாய்வோர் கருதுவர்[1]. இச்செய்யுள் நமது புறநானூற்றிலுள்ள கையறு நிலைச் செய்யுட்களைப் போல உள்ளத்தைத் தொடுவதாக வுள்ளது.

> வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
> முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே (புறம் 242.5 – 6)

எனப் பாடிய குடவாயிற் கீரத்தனார் போல,

''பராக்கிரமசாலிகள் விழுந்து போனார்கள்.

... ... ... ... ... ... ... ... ... ...

கில்போவா மலைகளே, உங்கள்மேல் பனியும் மழையும் பெய்யாமலும், காணிக்கைக்கு ஏற்ற பலன் தரும் வயல்கள் இராமலும் போவதாக; அங்கே இல்லாமலும் பராக்கிரமசாலிகளின் கேடகம் அவமதிக்கப்பட்டது'' (II சாமு 1.19—21) என்று தாவீது வருந்திக் கூறினான.

சவுலின் காலத்திற்குப் பின் நாட்டின் ஒரு பகுதிக்குத் தாவீதும் மற்றொரு பகுதிக்குச் சவுலின் மகனாகிய இஸ்போசேத்தும் அரசராயினர். ஏதோ கலகத்தினால் இஸ்போசேத் விரைவில் இறந்துவிடவே தாவீதே நாடு முழுவதற்கும் அரசனாகும் நிலைமை ஏற்பட்டது.

1. J. A. Bewer, The Literature of the Old Testament, Chap. III, Early Narratives, p. 25.

தாவீது, போரில் வீரமும் தன் நண்பர்களிடத்தும் தன்னை ஆதரித்தவர்களிடத்தும் மிகுந்த அன்பும் விசுவாசமும் உடையவனாயிருந்ததால் மக்களின் ஆதரவைப்பெற்று அரசனானான். இளம் வயதில் அவன் யோனத்தானிடம் கொண்ட நட்பு சிறந்த நட்புக்கு எடுத்துக்காட்டு. சவுல் பலமுறை தன்னைக் கொல்ல முயன்றபோதும் தான் அவனுக்கு அஞ்சி ஒளித்து வசிக்க நேரிட்ட போதும் பன்முறைதான் அவனைக் கொல்லக் கூடிய வாய்ப்பு நேரிட்டும், பகை தோன்றுமுன் அரசனாகிய சவுல் தன்னை ஆதரித்த திறத்தையெண்ணி அவனுக்குத் தீங்கு செய்யாமல் நீங்கினான். அது மட்டுமின்றி அரசனுக்குரிய மதிப்பை அவனுக்கு அளித்துப் பணிவுடன் பேசி, "ஏன் என் உயிரைத்தேடுகிறீர்? நான் உமக்கு ஒரு தீங்கும் செய்ய எண்ணவில்லையே" எனப் பன்முறை கூறி அவனைத் தேற்ற முயன்றமையும் அவனது செய்ந்நன்றியறியும் பண்பையே காட்டும்.

தெளிந்தான் கண் ஐயுறவு கொண்டு தீரா இடும்பையுற்ற சவுலோ தாவீதின் சொல்லை அந்நேரத்துக்கு ஏற்றுக் கொண்டாலும் திரும்பவும் ஐயமே கொண்டான்.

படைத்தலைவனான அப்னேர் இறந்தபோது தாவீது அடைந்த துயரமும் அவனுடலை அடக்கம் செய்து அளித்த மதிப்பும் தன் முர்திய நண்பனாகிய யோனத்தானின் மக்கள் யாரும் உளரோ என விசாரித்து முடவனான அவன் மகன் மேவிபோசேத்தை அழைத்துத் தினமும் தன்னுடன் பந்தியிருந்துண்ணச் செய்து ஆதரித்த திறமும் அவன் கண்ணிருந்த சுற்றந்தழுவும் இயல்பைக்காட்டும்.

தாவீது குடிமக்களுக்கு முறை செய்து ஆண்ட நல்லரசனெனவும் தெரிகிறது.

"இப்படியே தாவீது இஸ்ரவேல் அனைத்தின்மேலும் ராஜாவாய் இருந்தான். அவன் தன்னுடைய எல்லா ஜனத்திற்கும் நியாயமும் நீதியும் செய்து வந்தான்" (II சாமு. 8.15).

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு (445)

என்பதற்கேற்ப மக்கள் அவனைக் கொண்டாடினர்.

ஆயினும் தாவீதினிடம் ஒரு பெருந்தவறிருந்தது. அவன் அக்கால வழக்கப்படி பல மனைவியரை மணம் செய்து கொண்டதுமன்றித்

தன் குடிமக்களில் ஒருவனாகிய உரியாவின் மனைவியை விரும்பினான். அவன் அரசனாக இருந்ததனால் அவளை அரண்மனைக்கு அழைப்பித்தல் எளிதாயிற்று.

எளிதென இல்லிறப்பான் எய்தும்எஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி (154)

என்பதற்கேற்ப அவனும் தன் பெருமையை இழந்தான். பின் தாவீது உரியாவை அழைத்துப் பேசி உணவளித்து அவனை நன்கு மதிப்பவன் போல் நடித்து அப்பொழுது நிகழ்ந்து கொண்டிருந்த ஒரு போரில் ஈடுபடச் செய்து சூழ்ச்சியாகக் கொல்வித்தான். இஸ்ரவேலரிடையே அக்காலத்திலேயே விதவைகள் மறுமணம் செய்து கொள்ளும் வழக்கம் இருந்தது. அதன்படி விதவையான உரியாவின் மனைவி பாத்சேபாளை மணம் செய்து கொண்டான்.

யூதர்கள் வரலாற்றில், ஏறக்குறையப் பழைய ஏற்பாட்டின் காலம் முழுவதிலும், மக்களால் இறையருள் பெற்றவர்களாகக் கருதப்பட்ட அறவோர் அவ்வப்பொழுது தோன்றி அரசனும் குடிமக்களும் செய்யும் குற்றங்களை எடுத்துக் கூறித் திருத்த முயன்றனர். இவர்களைத் தீர்க்கதரிசிகள் (Prophets) என்பர். புறநானூற்றின் காலத்தில் தமிழ்நாட்டில் கவிஞர்கள் சிலர் அரசர்களிடம் சென்று ஆட்சியில் உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டியதுண்டு. அரசர்கள் கவிஞர் கருத்தையேற்று அக்குறைகளைத் திருத்திக் கொண்டதுண்டு. பிசிராந்தையார் பாண்டியன் அறிவுடைநம்பியிடம் சென்று வரி விதிக்கும் முறையைக் குறித்துக் கூறிய செய்யுளும் (புறம் 184) சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை நோக்கிப் பழஞ்செய்க்கடனை நீக்கி உழவரை ஆதரிக்க வேண்டுமென வெள்ளைக் குடிநாகனார் பாடிய செய்யுளும் (புறம் 35) சான்றாம். அதே சோழ அரசன் பகையரசனான மலையமானின் குழந்தைப் பருவ மக்களைச் சிறைப்பிடித்து வந்து யானையினால் கொல்விக்க எண்ணியபோது கோவூர்கிழார் என்னும் புலவர் அங்குத் தோன்றி அக்கொடிய செயலினின்று அவனை விலக்கியதும் கவிஞர் அரசர்க்கு நீதிகாட்டிய மற்றொரு நிகழ்ச்சியாகும் (புறம் 38). கபிலர் தலைமையில் ஒரு புலவர் குழு பேகனிடம் சென்று, அவன் அரசியலிலன்றித் தன் சொந்த வாழ்க்கையில் செய்த தவற்றை, அவன் தன் மனைவியை விட்டு மற்றொரு பெண்ணுடன் வாழ்ந்து கொண்டிருந்ததைத் தவறென எடுத்துக் காட்டித் திருத்தியதைப் புறநானூற்றில் காணலாம் (புறம் 143-147). ஆனால் புறநானூற்றுக் கவிஞர்களனைவரும் சமயச்

சார்பற்றவர்கள். யூதர் வரலாற்றில் வரும் தீர்க்கதரிசிகளோ அனைவரும் சமய உணர்ச்சி நிறைந்தவர்களாகவே காணப்பட்டனர். தாம் சொல்லவந்த நீதிகளனைத்தையும் 'கர்த்தர் இவ்வாறு சொல்கிறார்' எனத் தொடங்கிச் சொல்வதே அவர்கள் வழக்கமாயிருந்தது.

நாத்தான் என்ற தீர்க்கதரிசி தாவீதினிடம் வந்து ஒரு கதை மூலம் அவன் உரியாவுக்குச் செய்த அநீதியை எடுத்துக் காட்டினான். ஏராளமான ஆடுமாடுகளையுடைய பெருஞ்செல்வனொருவன், ஒரு விருந்தினர் தன் வீட்டுக்கு வந்தபோது தன் ஆடுமாடுகளில் ஒன்றைக் கொன்று உணவு செய்து விருந்திடாமல், ஒரே ஒரு ஆட்டுக்குட்டியை மகள் போல் அருமையாக வளர்த்த வறியவன் ஒருவனின் ஆட்டைக் கைப்பற்றி அதைக் கொன்று விருந்தளித்தான் என நாத்தான் கூறினான். 'அவன் யார்? அவனை நிச்சயம் தண்டிப்பேன்?' எனத் தாவீது சினத்துடன் வினவ, 'நீயே அந்த மனுஷன்' என்ற பதில் வந்தது. அரசனாக இருந்து பல செல்வநலங்களை அனுபவித்துக் கொண்டிருந்த தாவீது அவற்றோடு மனநிறைவு கொள்ளாது குடிமகன் ஒருவனின் மனைவியை விரும்பி அவனைக் கொன்று அவளைமணந்து கொண்ட செயல் எத்தகைய இரக்கமற்ற செயலாகும் என்பதை நாத்தான் இவ்வாறு எடுத்துக்காட்டினான்.

''கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பான இந்தக்காரியத்தைச் செய்து, அவருடைய வார்த்தையை நீ அசட்டை பண்ணினது என்ன? ஏத்தியனாகிய உரியாவை நீ பட்டயத்தால் மடிவித்து, அவன் மனைவியை உனக்கு மனைவியாய் எடுத்துக் கொண்டு, அவனை அம்மோன் புத்திரரின் பட்டயத்தாலே கொன்று போட்டாய்.

இப்போதும் நீ என்னை அசட்டைபண்ணி, ஏத்தியனாகிய உரியாவின் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக் கொண்டபடியினால் பட்டயம் என்றைக்கும் உன் வீட்டை விட்டு விலகாதிருக்கும்'' (II சாமு. 12. 9-10). இவ்வாறு கர்த்தர் சொல்வதாக நாத்தான் கூறிச் சென்றான். தன்னைக் கடுமையாகக் கண்டித்த நாத்தான் மீது தாவீது சினங்கொள்ளவில்லை. அதற்குப் பதிலாகத் தன் தவற்றையெண்ணி வருந்தினான். ''நான் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தேன்'' என்று கூறிப் பலநாள் உபவாசம் இருந்தான். செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்பு தாவீதிடம் இருந்தது.

''அவைகளை ஒருவன் தொடப் போனால், இருப்பாயுதத்தையும் ஈட்டித்தாங்கையும் கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ள வேண்டும்;

அவைகள் இருக்கிற இடத்தில் தானே அக்கினியினால் முற்றும் சுட்டெரிக்கப்படும் என்றான்'' (II சாமு 23. 7).

இது பகைத்திறந்தெரிதலில் வள்ளுவர் கூறும்,

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து (879)

என்ற குறளை ஒத்திருக்கிறது. ஆயினும் தாவீதின் கூற்றில் பகை வலிமையுறுமுன் இளையதாகக் களைய வேண்டும் என்பதற்குப் பதில் களையும்போது எவ்வளவு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென்பதே வலியுறுத்தப்படுகிறது.

தாவீதின் காலம் கி. மு. 1010 — 971 என்பர்.

## 3. 4. இராஜாக்கள் (இருநூல்கள்)

இவ்விரு நூல்களும் கி மு. ஆயிரத்திலிருந்து கி. மு. ஆறாம் நூற்றாண்டு வரையில் நிகழ்ந்து வந்த யூதர் வரலாற்றைக் கூறுவன.

தாவீதின் பின் அரசனான சாலோமோன் செல்வச் சிறப்புடன் நாட்டையாண்டான்.

தாவீது பல போர்களில் வெற்றி பெற்று எருசலேமைத் தலைநகராக்கி ஆட்சியை நன்கு நிறுவிக் கொண்டான் ஆகையினால் சாலோமோன் போரில் அதிகம் ஈடுபடவேண்டியிருக்கவில்லை. அவன் வாணிபத்தைப் பெருக்கினான். கிழக்கிலிருந்து வரும் வணிகச்சாத்துக்கள் பலர் அவன் ஆட்சிக்குட்பட்ட நாட்டைத் தாண்டிப் பிற நாடுகட்குப் போக வேண்டியிருந்ததால் அவர்கள் செலுத்திய வரிப்பொருளின் மூலம் அவனுக்குச் செல்வம் சேர்ந்தது. படைவலிமையை அவன் பெருக்கினான். எகிப்திலிருந்து குதிரைகள் வாங்கினான். குதிரைகட்குப் பந்திகளமைத்தான். தேர்கள் இயற்றிக் கொண்டான். கப்பல்கள் இயற்றிக் கடல் வாணிபத்தையும் மேற்கொண்டான். கப்பல்கள் கீழ்நாடுகளிலிருந்து யானைத்தந்தங்களையும் குரங்குகளையும் மயில்களையும் அவன் நாட்டுக்குக் கொண்டு வந்தன எனப் பழைய ஏற்பாடு கூறுகிறது (I இரா 10. 22). இத்தகைய பொருள்கள் இந்தியாவினின்றும் இறக்குமதி செய்யப்பட்டிருத்தலும் கூடும்.

சாலோமோன் கூர்ந்த அறிவுள்ளவனெனக் கூறப்படுகிறது. அவன் அறிவுத்திறத்தைக் குறித்த பல கதைகள் உள தேவன் ஒரு

நாள் இரவு சாலோமோனின் கனவில் தோன்றி 'நீ விரும்பினதை என்னிடத்தில் கேள்' என்று கூறியதாகவும் சாலோமோன், 'உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும் நன்மை தீமை இன்னதென்று வரையறுக்கவும் அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும்; ஏராளமாய் இருக்கிற இந்த உமது ஜனங்களை நியாயம் விசாரிக்க யாராலேயாகும்' என வேண்டிக் கொண்டதாகவும் சொல்லப்படுகிறது (I இரா. 3.9).

எருசலேமில் யூதர்கட்கு ஓர் ஆலயத்தைக் கட்டியவன் சாலோமோனே. தாவீது உடன்படிக்கைப் பெட்டியை (யாவே மோசேயின் காலத்தில் இஸ்ரவேலர்களுடன் செய்த உடன்படிக்கை அதில் இருந்ததாக மக்கள் கருதினர்) எருசலேம் நகருக்குள் ஊர்வலமாக ஆடல்பாடலுடனும் வாத்திய இசையுடனும் கொண்டு வந்து எருசலேம் நகரை வழிபாடு நடப்பதற்குரிய இடமாக்கினான். சாலோமோன் அந்நகரில் ஒரு பெரிய கோயிலைக் கட்டி அவ்வுடன்படிக்கைப் பெட்டியை அங்கு வைதது நிலையான வழிபாட்டு முறைகளை நியமித்தான். இறைவனுக்கென்று கோயில்கட்டுவதையும்அதற்காக ஏராளமான செல்வத்தைச் செலவு செய்வதையும் அக்கால யூதர்கள் தவறாகக் கருதவில்லை. அதிக விலங்குகளைப் பலியிடுவதையும் அவர்கள் சிறப்பாகவே கருதினர். உடன்படிக்கைப் பெட்டியை ஆலயத்தினுள் கொண்டுவந்தபோது செய்யப்பட்ட உயிர்ப்பலி பின் வருமாறு கூறப்படுகிறது :

"ராஜாவாகிய சாலோமோனும் அவனோடேகூடின இஸ்ரவேல் சபையனைத்தும் பெட்டிக்கு முன்பாக நடந்து, எண்ணிக்கையும் கணக்குமில்லாத திரளான ஆடுகளையும் மாடுகளையும் பலியிட்டார்கள்" (I இரா 8 5)

ஒன்றன் உயிர் செகுத்தலையும் விரும்பாத வள்ளுவர் இத்தகைய வழிபாட்டு முறையை விரும்ப மாட்டார் என்பது உறுதி.

சாலோமோனின் ஆட்சிக் காலம் கி மு. 974-937 என்பர்.

சாலோமோன் இறந்தபின் ரெகொபெயாம் ஆட்சியேற்றவுடன் இஸ்ரவேல் மக்கள் அனைவரும் அவன்நகரில் வந்து கூடினர். அவர்கள் அவனைக் கண்டு குறைகளை எடுத்துச் சொன்னார்கள்.

"உம்முடைய தகப்பன் பாரமான நுகத்தை எங்கள்மேல் வைத்தார்; இப்போதும் நீர் உம்முடைய தகப்பன் சுமத்தின

கடினமான வேலையையும், அவர் எங்கள்மேல் வைத்த பாரமான நுகத்தையும் லகுவாக்கும்; அப்பொழுது உம்மைச் சேவிப்போம் என்றார்கள்'' (I இரா. 12, 4).

குடிமக்களின் வேண்டுகோளைக் கேட்டு விடை கூறுமிடத்து ரெகொபெயாம் அவர்கள் கருத்துக்கு இணங்குமாறு நல்லயோசனை கூறிய முதியோருக்குச்செவிகொடாமல்தன்னையொத்தஇளைஞருடன் கலந்து பேசித் தான் தன் தந்தையைவிடக் கடினமாகவே யாள்-வேன் என இறுமாப்புடன் குடிமக்களுக்குப் பதில் கூறினான். அதன் பலனாக நாட்டின் பெரும்பகுதி அவன் ஆட்சியைவிட்டு நீங்கிற்று. அதன்பின் யூதர்களின் நாடு இரு பிரிவாக இருவேறு அரசர்களா-லேயே ஆளப்பட்டு வந்தது. எருசலேம் நகரைச் சூழ இருந்த ஒரு பகுதி ரெகொபெயாமின் ஆட்சியின்கீழ் இருந்தது அது யூதா என அழைக்கப்பட்டது. இஸ்ரவேல் அல்லது சமேரியா என்னும் பெரும் பகுதிக்கு யெரொபெயாம் அரசனான்.

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு (544)

சாலோமோன் தன்னாட்சியின் பிற்காலத்தில் செல்வம் சேர்த்தலிலும் ஆடம்பர வாழ்க்கையிலும் ஆவல் மிகுந்தவனாய்க் குடிமக்களின் விருப்பத்தைப் பொருட்படுத்தாது கடுமையாக வரி விதித்தும் கடும் வேலை வாங்கியும் வந்தான். அதனால் மக்களின் நன்மதிப்பை இழந்-தான். அவன் மகனும் மக்களின் விருப்பத்தைப் பொருட்படுத்தாது நடந்து கொண்டதனால் நாட்டின் பெரும்பகுதியை இழந்தான். எந்த நாட்டிலும் ஆள்வோர் ஆளப்படுவோரின் நலனை, விருப்பத்தைக் கருத்துக்களைப் பொருட்படுத்தாது ஆட்சி செலுத்தினால் அவ்வாட்சி நீடித்த காலம் நிலைத்திருத்தல் இயலாது.

இதற்குப் பின் இஸ்ரவேல், யூதா என்னும் இருபகுதிகளையும் பல்வேறு அரசர்கள் ஒருவர் பின் ஒருவராக ஆண்டனர்.

நம் சங்ககாலத் தமிழிலக்கியங்களில் காணப்படும் நிலையான அரசாட்சிக்கும் பழைய ஏற்பாட்டில் காணப்படும் யூத அரசர்களின் ஆட்சிக்கும் அதிக வேறுபாடு உண்டு. தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமிழ் நாட்டில் முடியாட்சி நிலவியிருந்தது. சங்க காலத்தில் சேர சோழ பாண்டிய மன்னர் முடியுடைவேந்தர் எனச் சிறப்புற்றிருந்தனர். சிற்றரசரும் இருந்தனர். மூவேந்தரும் பல தலைமுறைகளாகத் தத்தம் பகுதியை யாண்டு வந்த குடிச்சிறப்புடையவர். மக்கள் அவர்களிடத்துப் பெருமதிப்பு வைத்திருந்தனர். அவர்களை ஏறக்குறையத்

தெய்வத்தன்மையுடையவராகவே மக்கள் கருதினர் என்பதைச் சிலப்பதிகாரம் முதலிய நூல்களினின்றும் அறியலாம். 'தூங்கெயின் மூன்றெறிந்தான்' சோழன் எனவும், 'கடற் கடம்பெறிந்தான்' சேரன் எனவும் 'மழை பிணித்தாண்டான்' பாண்டியன் எனவும் பல அருஞ் செயல்களை அவர்கள் ஆற்றியதாக மக்கள் நம்பினர். இக்குல மன்னரின் ஆட்சியையே மக்களில் எல்லாப் பகுதியினரும் ஆதரித்தனர். பரம்பரையாக ஆட்சி உரிமை அவர்கள் கையில் இருந்தது. ஆட்சியில் அவ்வப்போது நிகழ்ந்த குறைகளை எடுத்துக் காட்டிய புறநானூற்றுக் கவிஞர்களும் அக்குறைகளை மட்டும் நீக்க விரும்பினரேயன்றி யாரும் ஒரு அரசனை ஆட்சியைவிட்டுநீக்கிவேறொரு அரசனை நியமிக்கலாமென எண்ணியதாகத் தெரியவில்லை. தன் கணவனைத் தவறாகக் கொல்வித்த பாண்டிய மன்னனை எதிர்த்து வழக்குரைத்த கண்ணகி மதுரையையே எரித்தாள் எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. அரசன், செய்த தவற்றையுணர்ந்தவுடன் தானே மிறந்தான். ஆயினும் ஆட்சி அவ்வரசகுலத்தை விட்டு நீங்கவில்லை; அடுத்தபடி ஆட்சிக்கு வரவேண்டிய உரிமையுடைய அக்குலத்தவனாகிய வெற்றி வேற்செழியனே அரியணை ஏறினான். நீண்ட காலம் இம்மூன்று குலத்தைச் சேர்ந்த அரசர்களின் ஆட்சியின்கீழ் இருந்து பழகிய மக்கள் பரம்பரையாக வரும் அவர்களின் ஆட்சியுரிமையில் அதிக நம்பிக்கை வைத்திருந்தனர். அரசரிடத்துப் பெருமதிப்பு வைத்திருந்த மக்கள் அதற்கேற்றவாறு அவர்களிடமிருந்து நல்லரசாட்சியை எதிர் பார்த்தனர் நாட்டில் என்ன குறை நேரிட்டாலும் அரசனைப் பொறுப் பாக்கினர்.

மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை யல்லன செயற்கையின் தோன்றினும்
காவலர்ப் பழிக்கும்இக் கண்ணகன் ஞாலம்

(புறம் 35)

எனப் புறநானூறு கூறுகின்றது. அரசர்களும் தங்கள் பொறுப்பையுணர்ந்து கருத்துடன் ஆட்சியைக் கவனித்தனர் என்பதை,

மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயிர் எய்தின் பெரும்பே ரச்சம்
குடிபுர வுண்டும் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதக வில்

(சிலம்பு 25. 100-104)

எனச் சிலப்பதிகாரத்தில் வரும் சேரன் செங்குட்டுவனின் வாக்கால் உணரலாம்.

பழைய ஏற்பாட்டில் காணப்படும் யூத அரசர்களோ பரம்பரையரசர்கள் அல்லர். எந்த அரச பரம்பரையும் நீடித்து நிலைத்திருந்ததாகத் தெரியவில்லை. யூதாவில் மட்டும் சாலோமோனின் பரம்பரை பல தலைமுறைகள் வரையில் நிலைத்திருந்ததெனலாம். மற்றப்படி இராஜாக்கள் என்னும் இரு நூல்களைப் படிக்குமிடத்து இரண்டொரு தலைமுறைகளிலோ நான்கைந்து தலைமுறைகளிலோ ஆட்சி ஒரு பரம்பரையை விட்டுப் புதிய ஒருவருக்குக் கைமாறுவதையே காணலாம். யூத மக்களோ பாலைவனங்களில் சுற்றித்திரிந்து கூடாரங்களில் தங்கிச் சுதந்திரமாக வாழ்ந்துபழகியவர்கள். நிலையானஅரசாட்சியின் கீழ் வாழ்ந்து பழகியவர்களல்லர். அரசர்களும் பரம்பரையாக வந்த அரசகுலப் பண்புகளையும் அத்தகைய பொறுப்பையும் உடையவர்களாயிருக்கவில்லை இந்நிலையில்நாட்டில்நீதியையும் நல்லறப்பண்புகளையும்நிலைநிறுத்தப் பாறுப்போடு முயன்றவர்கள் தீர்க்கதரிசிகள் எனப்படும் அறவோரே. ஆசாரியார்களும் பழைய விதிகளைக் காப்பாற்ற ஓரளவு முயன்று வந்தனர். ஆயினும் அவர்கள் வழிபாட்டு முறைகளில் அதிக கவனம் செலுத்தினார்களே யன்றி நல்லொழுக்கம் அறம் நீதி ஆகியவற்றில் போதிய கவனம் எடுத்துக் கொள்ளவில்லை,

போர்முறைகளிலும் இவ்வேறுபாட்டைக் காணலாம். தொல். காப்பியர்காலத்திலிருந்தே தமிழ்நாட்டில் போர்முறைகளைக்குறித்துச் சில வரையறைகள் இருந்தன. போர் தொடங்கும் பொழுது பகைவரின் ஆநிரைகளைக் கைப்பற்றல், பின்பு பகையரசின் நாட்டைக் கவர்தல், அதன்பின் அரணுள்ள நகர்களை முற்றுகையிட்டோ மதிலெறிந்தோ கைக்கொள்ளல். இறுதியாக இருவர் படையும் எதிரெதிர் நின்று பெரும்போர்செய்தல் போர்முறையாம் எனவகுத்தனர். தமிழ் மன்னரும் தமிழ் மன்னருமே பெரும்பாலும் போர் செய்தனர் போரில் காயமுற்றோரைப் படைக்கலமிழந்தோரைத் தாக்காமை முதலிய அறங்களை இருதிறத்தாரும் ஒத்துக் கைக்கொள்ளுதல் கூடும். பழைய ஏற்பாட்டின் முற்பகுதியில் காணப்படும் யூதர்களோ முறையான போரில் பழக்கப்பட்டவர்களுமல்லர். பாலைவனத்து வாழ்க்கையில் பழக்கப்பட்ட அவர்கள் செழிப்புள்ள ஊர்களில் வாழ்ந்த கானான் நாட்டு மக்களைவிட அதிக உடல்வலிமை யுடையவராயிருந்தனர். அதனாலேயேவெற்றி பெற்றனர் அவர்கள் பெரும்பாலும் பிறஇனத்தவருடனேயே போர் செய்தனராதலினால் இரு திறத்தாரும் ஒத்துச்

சிலமுறைகளைக் கையாள வாய்ப்பில்லை. அவர்கள் வரலாற்றின் முற்பகுதியில் அவர்களும் அவர்களை யெதிர்த்த பிற இனத்தவரும் மாறி மாறிச் சூழ்ச்சிகளைக் கையாண்டனர். இருதிறத்தாரும் கொடியமுறைகளைப் பின்பற்றினர்.

திருக்குறளில் காட்டப்படுவது மன்னனை மிக உயர்வாக மதிக்கும் ஓர் சமுதாயமே. வள்ளுவர் அரசரிடத்து மிக அன்பும் மதிப்பும் கொண்டவரே. அரசனின் பொறுப்பையும் நன்குணர்ந்தவர் என்பது குற்றங்கடிதல், செங்கோன்மை முதலிய அதிகாரங்களினின்றும் தெரியவரும். வள்ளுவர் அரசர்க்குரிய கடமைகளையும் அறங்களையும்பல அதிகாரங்களில் எடுத்துச் சொல்லியிருப்பப் பழைய ஏற்பாட்டின் முதனலந்து நூல்களிலோ அரசர்க்குரிய அறத்தைச் சொல்லும் விதிகள் மிகமிகச் சொற்பமே. வினைத்தூய்மை என்னும் தலைப்பின்கீழ்ப் பத்துக் குறள்களையெழுதிய வள்ளுவர் அரசியலிலும் போரிலும் நேர்மையான முறைகளையே விரும்பினார். வீரர்க்கு மறம்மானத்துடன் மாண்டவழிச் செலவு, அதாவது நன்னெறிக்கண்ணின்று நேர்மையுடன் போர் செய்யும் முறை வேண்டும் என்றார். பகைவர்க்குத் தாழ்வு நேரின் அருள் செய்யவேண்டும் என்றார். பல நூற்றாண்டுகளாக ஓர் நாட்டில் நிலையாகத்தங்கி வாழ்ந்து நிலை பெற்ற ஆட்சிமுறை போர்முறைகள் முதலியவற்றை வகுத்துக் கொண்ட நாகரீகம் முற்றிய நிலையிலிருக்கும் ஓர் சமுதாயத்தையே குறள் காட்டுகிறது. பழைய ஏற்பாட்டின் முற்பகுதியில் காணப்படும் சமுதாய நிலையோ வேறு. காலமும் ஆயிரம் ஆண்டுகள் முற்பட்டது தானே.

இனி இராஜாக்கள் என்னும் நூலில் கூறப்படும் சில அரசரின் ஆட்சியும் சில நிகழ்ச்சிகளும் இங்குக் குறிப்பிடற்பாலன.

உம்ரி என்னும் அரச குடும்பம் (The House of Omri) கி.மு. 9-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இஸ்ரவேல் அல்லது சமேரியா என்னும் பகுதியைச் சிறப்புற ஆண்டு வந்தது. உம்ரியின் ஆட்சிச் சிறப்பைக் குறித்துப் பழைய ஏற்பாட்டில் அதிகம் கூறப்படவில்லையாயினும் பிற சான்றுகளைக் கொண்டு விவிலிய வரலாற்றை ஆய்ந்த அறிஞர்கள் அவ்வரசன் செல்வச் சிறப்போடு ஆண்டு வாணிபத்தைப் பெருக்கி வெளிநாடுகளில் புகழ் பெற்றிருந்தான் எனக் கூறுகின்றனர். தாமஸ்குவை (Damascus) தலைநகராகக் கொண்ட சீரியர்களின் (Syrians) வலிமைக்கு எதிராகத் தன் ஆட்சியைத் திடப்

டுத்திக் கொள்ளத் தன் மகன் ஆகாபிற்கு போனிசிய அரசகுடும்பத்தைச் சேர்ந்த யேசபேல் என்னும் மங்கையை மணம் செய்வித்தான். அரசி யேசபேல் சமேரியாவிற்கு வந்த பின்பும் தன் தந்தை வீட்டாரின் குல தெய்வமாகிய பாகாலுக்குக் கோயில் கட்டுவித்து வழிபட்டு வந்தாள். அதைக் கண்ட குடிமக்களிற் பலரும் அரசியைப் பின்பற்றினர். இதனால் நாட்டில் மோசே காலத்திலிருந்தே யாவேயை வழிபடுவோருக்கும் பாகாலை வழிபடுவோருக்குமிடையே பகை ஏற்பட்டது.

இஸ்ரவேலர் கானான் தேசத்தில் குடியேறிய நாளிலிருந்து இந்தச் சிக்கல் இருந்து கொண்டே யிருந்தது. மோசேயின் காலத்திலிருந்து கானான் தேசத்தில்குடியேறும்வரை ஒரு தெய்வ வழிபாட்டையே உடையவராயிருந்தனர். அவரை யாவே என அழைத்தனர். அவர் உருவமற்றவர் என நம்பினார் சிலைகளெவற்றையும் தம் வழிபாட்டில் பயன்படுத்தவில்லை ஆயினும் பலிபீடம் அமைத்து உயிர்ப்பலி செலுத்தினர் கானான் நாட்டவரோ பல தெய்வங்களை வணங்கினர். சோலைகளினிடையே சிலைகள் அமைத்து வழிபட்டனர். விலங்குகளை மட்டுமன்றி மக்களையும் கொன்று பலி செலுத்தினர் வேறு பல வகைகளிலும் அவர்கள் வழிபாட்டு முறைகள் இஸ்ரவேலரின் வழிபாட்டு முறைக்கு வேறாயமைந்தன. கானான் நாட்டில் குடியேறிய மக்களில் சிலர் கானான் நாட்டவரின வழிபாட்டு முறைகளை ஓரளவு பின்பற்றத் தொடங்கினர். இஸ்ரவேலர் பலர் இன்னும் யாவேயையே தங்கள் தெய்வமாகக் கருதி வந்தபோதும் 'பாகால்' என்னும் அந்நாட்டுத் தெய்வங்களையும் வழிபடத் தொடங்கினர். ஆனால் ஒரு பகுதியினர் எப்போதும் பிற வழிபாடுகட்கு மாறாகவே யிருந்தனர். தீர்க்கதரிசிகள் பிற தெய்வ வழிபாட்டையும் பிற வழிபாட்டு முறைகளை இஸ்ரவேலர் பின்பற்றுவதையும் எப்போதும் கண்டித்தே வந்தனர்.

ஆகாப் என்ற அரசன் காலத்தில் இம்மாறுபாடு உச்ச நிலையை யடைந்தது. அவன் ஆட்சியில் மூன்று ஆண்டுகள் நாட்டில் மழையின்றிக் கடும் பஞ்சம் ஏற்பட்டது எலியா என்ற பெயருடன் அக்காலத்தில் வாழ்ந்த தீர்க்கதரிசி அதைப் பயன்படுத்தி இஸ்ரவேல் மக்கள் 'யாவே' யைவேவணங்க வேண்டுமெனக்கற்பிக்கவிரும்பினார். மூன்று ஆண்டுகளின் முடிவில் ஆகாபின் முன்னிலையில் வந்த எலியா, பாகாலை வழிபடுவோரனைவரையும் கூட்டிவரச் செய்தார். பொது மக்களும் திரண்டு கூடினர். எலியா அவர்களை நோக்கி ''நீங்களெந்த

மட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள் ; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள்'' என்றான் (I இரா. 18. 21). பின்பு அவர் இரு காளைமாடுகளைத் தருவிக்க, ஒன்றைப் பாகாலை வழிபடுவோர் கொன்று வெட்டித் தங்கள் பலிபீடத்தின்மேலிட்டு விண்ணிலிருந்து நெருப்பை யனுப்பி அப்பலியை ஏற்றுக்கொள்ளுமாறு பாகாலை நெடு நேரம் வேண்டிக் கொண்டபோது ஒன்றும் நிகழாதிருப்ப எலியா மற்றக் காளைமாட்டைக் கொன்று வேறொரு பலிபீடத்தில் இட்டு யாவேயை வேண்டிக் கொள்ள விண்ணிலிருந்து நெருப்பு வந்து அதை யேற்றுக் கொண்டதாகவும் கூறப்படுகிறது. இது அவர்கள் மேற்கொண்ட 'அனல் வாதம்'. இத்தகைய இயற்கையிறந்த நிகழ்ச்சிகள் பெரியபுராணம் முதலிய தமிழ் நூல்களிலும் கூறப்பட்டிருப்பது யாவரும் அறிந்ததே பழங்காலத்தில் பல நாடுகளிலும் மக்கள் இயற்கையிறந்த இத்தகைய நிகழ்ச்சிகள் நிகழக்கூடும் என நம்பினர். எவ்வாறோ எலியா பாகாலை வழிபடுவோரை வாதிட்டுவென்றார்.யாவே பக்கமாகத் திரும்பிய மக்கள் உதவியுடன் பாகாலை வழிபடுவோர் பலரை எலியா கொல்வித்ததாகவும் கூறப்படுகிறது. இப்போட்டி முடிந்தபின் மழையும் பெய்தது, மக்கள் பெரும்பாலோர் எலியா பக்கமாயினர். ஆனால் இச்செய்திகளைக் கேள்வியுற்ற அரசி யேசபேல், பாகாலை வழிபடுவோரைக் கொல்வித்த எலியாவைத் தான் கொல்விப்பேன் என வஞ்சினம் கூறினாள். எலியா நாட்டை விட்டோடி முன்பு யூதர்கள் அலைந்து திரிந்த பாலைவன நிலங்களினிடையே சில காலம் மறைந்து வசிக்க வேண்டியதாயிற்று.

இஸ்ரவேலரின் சமயத் தலைவர்கள் பிற தெய்வ வழிபாட்டை இவ்வளவு தீவிரமாக எதிர்த்தது விவிலிய நூலைப் படிக்கும் நம் நாட்டவர்கட்கு வியப்பளிக்கலாம். ஆரியர்கள் தமிழ்நாட்டில் புகுந்தபோது தமிழ்நாட்டவரின் பழைய வழிபாட்டு முறைகளை அழிக்கமுயன்றதாகத்தெரியவில்லை.'இந்திரன்தேவனானால்அவனை வழிபடுங்கள்; முருகன் தேவனானால் அவனை வழிபடுங்கள், என ஆரியரும் தமிழரும் பூசலிடவும் இல்லை. நான்மறைகளைக் கற்ற அறிவுமிக்க பெரியோர்கள் 'உண்மை ஒன்றே; அறிஞர் பலவாகக் கூறுவர்' (ஏகப்சத் விப்ர பகூதா வதந்தி)[2] எனக் கூறி யமைதியடைந்தனர்.

2. A. C Bouquet. Hinduism, p 45

"Even in the earlier Rig-Veda (Book i, hymn164) occurs a brahmodya or theological riddle ascribed to the rishi Dirgha tamas, in which occurs the verse which is often quoted as the actual beginning of all Indian Philosophy : [contd]

பொது மக்களோ முருகன் இந்திரனின் வளர்ப்பு மகளை மணம் செய்தான் என்பது போன்ற கதைகள் கூறி ஒற்றுமை கண்டனர். சிலப்பதிகார காலத்தில் மறை ஓதித் தீவளர்த்தல் போன்ற ஆரிய வழிபாட்டு முறைகள் நகரங்களில் அதிகம் பரவி யிருப்பக் குரவைக் கூத்து முதலிய சமயச் சார்பான கூத்துக்கள் (Cultic dances) விலங்குகளைக் கொன்று குருதியைப் பலியாக அளித்தல் முதலிய பழைய வழி-பாட்டு முறைகள் நாட்டுப் புறங்களிலும் பாலை நிலப் பகுதிகளிலும் பின்பற்றப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. இவ்வாறு எதிர்ப்பின்றிச் சமயக் கருத்துக்களும் வழிபாட்டு முறைகளும் கலந்து பரவின. இது இவர்கள் கண்ட வழி ; அது அவர்கள் கண்ட வழி.

வள்ளுவரோ எத்தெய்வத்தின் பெயரையும் கூறாது பொதுவாக ஒரு தெய்வ வழிபாட்டையே கூறினர்.

மற்றொரு முறை வேறொரு சூழ்நிலையில் எலியா ஆகாபை எதிர்த்தார். ஆகாபின் அரண்மனைத் தோட்டத்துக் கருகே நாபோத் என்னும் குடிமகன் ஒருவனின் திராட்சைத் தோட்டம் இருந்தது. ஆகாப் அதை விலைக்கு வாங்க அல்லது வேறொரு தோட்டத்தைக் கொடுத்து மாற்றிக்கொள்ள விரும்பினான். நாபோத் அது தன் முன்னோர்களின் தோட்டம் என்று கூறி அதை விற்க மறுத்தான் ஆகாப் அதைக் குறித்துத் துயருற்றிருந்தபோது அவன் மனைவியும் நாட்டு அரசியுமான யேசபேல் இச்செய்தியைக் கேள்வியுற்றுத் தன் கணவனுக்கு ஆறுதல் கூறிவிட்டு அத்திராட்சைத் தோட்டத்தைப் பெறுவதற்குச் சூழ்ச்சி செய்தாள். அவ்வூர் மூப்பர்கட்குக் கடிதம் எழுதி நாபோத்தை ஒரு உபவாசத்துக்கு அழைப்பித்து, பலரின் முன்னிலையில் நாபோத் அரசனையும் தேவனையும் தூஷித்தான் என்று சிலரைக் கொண்டு பொய்க் கரி கூறுவித்து மூப்பர் அவனுக்கு மாறாகத் தீர்ப்பளிக்குமாறும் அவனைக் கல்லால் எறிந்து கொல்லு-மாறும் அரசி சூழ்ச்சி செய்தாள். இவ்வாறு நாபோத் கொல்லப்பட்ட

---

[*Continuation*]

Indram Mitram Varunam Agnim ahur
Atho divyah sasuparna Garutman
Ekam sad Vipra bahudha Vadamti,
Agnim Yaman Matarisvanam ahuh.
They call it Indra, Mitra, Varuna and Agni,
And also heavenly, beauteous—winged Garutman:
The Real is one, though sages name it variously,-
They call it Agani, Yama, Matarisvan.''

பின் ஆகாப் அவன் திராட்சைத் தோட்டத்தை கைப்பற்றிக் கொண்டான்.

இதையறிந்த தீர்க்கதரிசி எலியா இச்செயலைக் கண்டிக்க அங்கு வந்தார். நீதிக்கு மாறாக இத்தீச்செயலை ஆகாப் செய்ததனால் அவன் செல்வம் அழியும்; அவனும் அவன் மனைவியும் கொல்லப்படுவர் எனக் கூறிச் சென்றார்.

நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும் (171)

என்னும் பொது நீதியையே இங்கு எலியா கூறினார்.

பின்னர் வந்த ஓர் அரசன் மனாசே அசீரியர்களின் சார்பாகவும் யூதர்கள் விருப்பத்துக்கு மாறாகவும் நடந்து கொண்டான். அசீரியர்களின் தெய்வங்களை வணங்கி அவர்கள் வழிபாட்டு முறைகளைப் பின்பற்றி நாட்டில் மக்கட்பலி செலுத்தும் முறையை ஆதரித்தான். தீ மிதித்தல், அஞ்சனம் பார்த்தல், குறி சொல்லுதல் முதலிய யூத சமயத் தலைவர்கள் விரும்பாத செயல்களை அவன் செய்வித்தான். மற்றும் நீதியுடன் அரசாட்சியை நடத்தவும் இல்லை எனத் தோன்றுகிறது.

"கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்யும் படியாக, மனாசே யூதாவைப் பாவம் செய்யப்பண்ணின அந்தப் பாவமும் தவிர, அவன் எருசலேமை நாலு மூலைவரையும் இரத்தப் பழிகளால் நிரம்பத்தக்கதாய், குற்றமில்லாத இரத்தத்தையும் மிகுதியாய்ச் சிந்தினான்" (II இரா. 21. 16).

மனாசேயின் இத்தகைய செயல்களினால் அவ்வரசன் காலத்தின் பின் யூதாவும் பகைவர் கைப்பட்டதென இந்நூலை எழுதினோர் கருதினர்.

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின் (546)

என வள்ளுவர் கூறியது போலவே யூத அறிஞரும் அரசன் செங்கோல் தவறினால் போரில் வெற்றி கிட்டாது என எண்ணினர்.

### 3.5. இந்நூல்களில் சில நீதிக் கருத்துக்கள் வளர்ந்து திருந்தமுறல்

யோசுவா முதல் இராஜாக்கள் வரையுள்ள இந்நூல்களில் யூதர்களிடையே பயின்று வந்த சில நீதிக் கருத்துக்கள் நாளடைவில் வளர்ந்து திருத்தமுறுவலதக் காணலாம்.

யோசுவாவின் காலத்திலும் நியாயாதிபதிகளின் காலத்திலும் யூதர்கள் போரில் வன்கண்மையையே போற்றினர். பகைவரை எவ்விதத்திலும் ஏமாற்றி வெற்றி கொள்ளலாம் எனக் கருதினர். மேலும் ஓடி ஒளிந்தவர்களையும் அடைக்கலம் புகுந்தவர்களையும் கூடக் கொன்றனர். ஆனால் ஒன்பதாம் நூற்றாண்டாகிய எலிசாவின் காலத்திலேயே போரிலும் சில அறங்களைக் கைக்கொள்ள வேண்டும் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தோன்றுகிறது.

எவ்வாறோ வழிதப்பிச் சுமேரியாவிற்கு வந்துவிட்ட சீரியர்களைக் குறித்து 'நான் இவர்களை வெட்டிப் போடலாமா' என இஸ்ரவேல் அரசன் எலிசாவைக் கேட்டபோது, 'நீர் வெட்ட வேண்டாம்; நீர் உம்முடைய பட்டயத்தாலும் உம்முடைய வில்லினாலும் சிறை யாக்கிக் கொண்டவர்களை வெட்டுகிறீரோ? இவர்கள் புசித்துக் குடித்துத் தங்கள் ஆண்டவனிடத்துக்குப் போகும்படிக்கு, அப்பமும் தண்ணீரும் அவர்களுக்கெதிரில் வையும்'' (II இரா. 6.22) என எலிசா கூறினார். அவ்வாறே அரசன் அவர்களுக்கு விருந்தளித்துத் திரும்பிச் செல்லவிட்டான். இங்குக் கையில் படைக்கலமின்றி வழி தப்பி வந்து விட்ட பகைவர்களைக் கொல்லலாகாது, சிறைப்பிடிக்கப்பட்ட-வர்களையும் கொல்லலாகாது என்ற கருத்துக்கள் காணப்படுகின்றன.

பேராண்மை யென்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு (773)

என வள்ளுவர் கூறிய போர்முறை யறத்தையே இங்கு எலிசாவும் கற்பித்ததாகத் தெரிகிறது.

நாளாகமம் எழுதப்பட்ட காலத்தில் போரே கொடுமையானது. நேர்மையான முறையில் போர் செய்யப்பட்டாலுங்கூடப் போர் விரும்பத்தக்கதன்று என யூதர்கள் கருதினர். கி மு நான்காம் நூற்-றாண்டளவில் எழுதப்பட்ட நாளாகமத்தில் தாவீது தானே எருசலேம் நகரில் ஆலயம் கட்ட விரும்பியதாகவும் ஆயினும் தான் பல போர்-களில் ஈடுபட்டதனால் கர்த்தரின் ஆலயத்தைக் கட்டத் தகுதியற்றவன் எனக் கருதியதாகவும் கூறப்படுகிறது. தாவீது இதைத் தன் மகனிடம் சொன்னான்.

''சாலோமோனை நோக்கி : என் குமாரனே, நான் என் தேவ-னாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஒரு ஆலயத்தைக் கட்ட என் இருதயத்தில் நினைத்திருந்தேன்.

ஆனாலும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி; நீ திரளான இரத்தத்தைச் சிந்தி, பெரிய யுத்தங்களைப் பண்ணினாய்: நீ என் நாமத்திற்கு ஆலயம் கட்ட வேண்டாம்; எனக்கு முன்பாக மிகுதியான இரத்தத்தைத் தரையிலே சிந்தப் பண்ணினாய்.

இதோ, உனக்குப் பிறக்கப் போகிற குமாரன் அமைதியுள்ள புருஷனாயிருப்பான்; சுற்றிலும் இருக்கும் அவன் சத்துருக்களை யெல்லாம் விலக்கி அவனை அமர்ந்திருக்கச் செய்வேன்; ஆகையால் அவன் பெயர் சாலோமோன் என்னப்படும்; அவன் நாட்களில் இஸ்ரவேலின் மேல்சமாதானத்தையும் அமரிக்கையையும் அருளுவேன்.

அவன் என் நாமத்திற்கு ஆலயம் கட்டுவான்; ...'' (I நாளா. 22-7-10).

இவ்வாறு கர்த்தர் தன்னிடம் கூறியதாகத் தாவீது சொன்னான். இங்குப் பலபோர்களில் ஈடுபட்டு வெற்றிகண்ட தாவீதே, நாட்டையும் இனத்தையும் பாதுகாக்கப் போர் செய்ய வேண்டியது சில வேளை- களில் அவசியமாயினும் போர் விரும்பத்தக்க ஒன்றன்று எனக் கருதியதாக நாளாகம ஆசிரியர்கள் எழுதினர். தாவீது சாலோமோ னிடம் இவ்வாறு கூறினான் என்பது இராஜாக்கள் என்னும் நூல்களில் குறிப்பிடவில்லை யாகையினால் இது இந்நூல்களின் காலத்திற்குப் பின்னெழுந்த கருத்தாகவே யிருக்கலாம்

படைச்செருக்கு, படைமாட்சி என்னும் அதிகாரங்களில் போரில் காட்டப்படும் வீரத்தைப் போற்றி, வலியறிதல், காலமறிதல், இடமறிதல் எனப் பல வகைகளில் போர்முறை பற்றி ஆலோசனை கூறிய வள்ளுவரும் கூட,

பகையென்னும் பண்பி லதனை யொருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று. (871)

எனப் போரும் பகையும், சில வேளைகளில் விலக்க இயலாது ஈடுபட வேண்டி நேரிடினும், விரும்பத்தக்கன அல்ல என்றார்.

இனிக்குற்றமும் தண்டனையும் குறித்த கருத்துக்களை யாராயு மிடத்து மிகப் பழங்காலத்தில் யூதர்களிடையே இருந்த கருத்து ஒரு குடும்பமோ, நாடோ, இனமோ அதைச் சேர்ந்த ஒருவர் அல்லது சிலர் செய்யும் குற்றத்திற்கு அக்குடும்பம், நாடு அல்லது இனம் முழுவதும் கூட்டாகப் பொறுப்பாகக் கூடும் என்பதை. இக்கருத்தை வரலாற்று இலக்கியங்களில் முந்தைய நூல்களில் காணலாம்.

யோசுவா என்னும் நூலில் பகைவரிடமிருந்து கவர்ந்துகொள்ளப் பட்ட பொன், வெள்ளி முதலிய விலையுயர்ந்த பொருள்களனைத்தும் யாவேயின் வழிபாட்டிற்கே பயன்படுத்தப்பட வேண்டும். அவற்றில் எதையும் வீரர்கள் தங்கட்காக எடுத்துக் கொள்ளலாகாது என்ற தலைவனாகிய யோசுவாவின் கட்டளையை மீறிச் சில பொருள்களை ஆகான் தனக்கே எடுத்துக் கொண்டு தன் வீட்டில் மறைத்து வைத்த குற்றத்திற்காக ஆகான் மட்டுமின்றி அவன்குடும்பத்தினர்அனைவரும் கல்லெறிந்து கொல்லப்பட்டனர் எனக் கூறப்படுகிறது (யோ. 7. 24-28). தாவீதின் காலத்தில் மூன்று ஆண்டுகள் கடும் பஞ்சம் ஏற்பட்டது. அக்கால வழக்கப்படி அதன் காரணத்தையறிய கர்த்தரின் சமூகத்தில், அதாவது வழக்கமாக அவர்கள் வழிபாடு செய்யும் இடத்தில் சீட்டுப் போட்டுப் பார்த்தார்கள். அதன்படி தாவீதுக்கு முன்பு அரசாண்ட சவுல் கிபியோனியருடன் (யூதரல்லாத பிற இனத்தைச் சேர்ந்தவர்) யூதர்கள் செய்த உடன்படிக்கையை மீறி அவ்வினத்தவர் பலரைக் கொன்றதே மழை பெய்யாமைக்குக் காரணம் எனத் தெரிய வந்தது. தாவீது கிபியோனியரை அழைத்துத் தான் செய்ய வேண்டிய பிராயச்சித்தம் யாது என வினவினான். அவர்களோ சவுல் செய்த தவற்றுக்காக அவன் வழிவந்தோரில் ஏழுபேர் கொல்லப்பட வேண்டும் என்றனர். அவ்வாறே தாவீது சவுல் குடும்பத்தைச் சேர்ந்த எழுவரைக் கைப்பற்றிக் கிபியோனியரிடம் ஒப்புவிக்க அவர்கள் கிபியோனியரால் கொல்லப்பட்டனர் என்றும் அதன் பின் நாட்டில் மழை பெய்ததென்றும் 'சாமுவேல்' கூறுகிறது (IIசாமு. 21). இங்கு ஒரு குடும்பத்தில் ஒருவர் செய்த குற்றத்திற்கு அனைவரும் கூட்டாகப் பொறுப்பாகின்றனர் என்ற கருத்தே காணப்படுகிறது.சவுல் குற்றம் செய்தான்; அவனோ முன்பே போரில் இறந்து பட்டான். அவன் பிள்ளைகள் அல்லது பேரப் பிள்ளைகள் அதற்காகத் தண்டிக்கப்படலாம் என அவர்கள் கருதினர்.

ஆயினும் உபாகம விதிகள் எழுதப்பட்ட காலத்தில் பெற்றோருக்காகப்பிள்ளைகளோ பிள்ளைகளுக்காகப் பெற்றோரோ தண்டிக்கப்படலாகாது; அவரவர் செய்த குற்றத்திற்காகவே அவரவர் தண்டிக்கப்படவேண்டும் என்ற கருத்து காணப்படுகிறது. யூத அரச வரலாற்றில் பிற்கால அரசர்களும் இந்நீதியைக் கடைப்பிடித்ததாகத் தெரிகிறது. கி.மு. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த அமத்சியா என்னும் அரசன் தன் தந்தைக்கு மாறாகக் கலகம் செய்து தன் தந்தையைக் கொன்ற அரசாங்க ஊழியர்களைக் கொல்வித்தான். ஆயினும் பிதாக்

களின் நிமித்தம் பிள்ளைகள் கொலைசெய்யப்படலாகாதுஎன்றநீதியை எண்ணிக் கொலைசெய்தவர்களின்பிள்ளைகளைக்கொல்லாதிருந்தான் என இராஜாக்கள் என்னும் நூல் கூறுகிறது (II இரா. 14. 5-6).

பழைய காலத்தில் ஒரு குற்றத்திற்கு ஒரு குடும்பத்தவர் அல்லது இனத்தவர் கூட்டாகப் பொறுப்பாதல் கூடும் என்னும் கருத்து பலநாடுகளிலும் இருந்திருக்கிறது. சிலப்பதிகாரத்தில் பொற்-கொல்லன் ஒருவன் அரண்மனைச் சிலம்பைத் தான் கவர்ந்துகொண்டு புதிதாக மதுரைக்கு வந்திருந்த கோவலனைக் கள்வனெனப் பொய்க் குற்றஞ்சாட்டிக் கொல்விக்க, சினங் கொண்ட கண்ணகி வழக்கு-ரைக்க அதனால் பாண்டியமன்னன் நெடுஞ்செழியனும்அரசியும் உயிர் துறக்க மதுரை யெரியுண்ணப் பின்னும் பல துன்பங்கள் தொடர்ந்து நிகழ்ந்ததால் அடுத்து அரசுகட்டிலேறும் உரிமையுடைய வெற்றிவேற்செழியன் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று பின் முடிசூடி அரசாண்டான் எனக் கூறப்படுகிறது. இச்செய்தி பதிகத்தை யடுத்து வரும் உரைபெறுகட்டுரை யென்னும் பகுதியில்,

''அன்று தொட்டுப் பாண்டியனாடு மழைவறங்கூர்ந்து வறுமை யெய்தி வெப்புநோயும் குருவும் தொடரக் கொற்கையிலிருந்த வெற்றி-வேற்செழியன் நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வியால் விழவொடு சாந்தி செய்ய நாடு மலிய மழைபெய்து நோயும் துன்பமும் நீங்கியது'' எனவும், வஞ்சிக் காண்டத்து நீர்ப்படைக் காதையுள்,

> கொற்கையி லிருந்த வெற்றிவேற் செழியன்
> பொற்றொழிற் கொல்லர் ஈரைஞ் ஞாற்றுவர்
> ஒருமுலை குறைத்த திருமா பத்தினிக்
> கொருபக லெல்லை யுயிர்ப்பலி யூட்டி (நீர். கா. 127-130)

எனவும் வரும் வரிகளால் புலப்படும். இங்கும் ஒரு பொற்கொல்லன் செய்த தவற்றுக்குப் பாண்டிய நாட்டில் வாழ்ந்த பொற்கொல்லர் என்னும் குலத்தைச் (Caste) சேர்ந்தோரனைவரும் கூட்டாகப் பொறுப்பாகின்றனர் என்னும் கருத்தையே காணலாம்.

இத்தகையதண்டனை முறைகள் வள்ளுவர்கருத்தொடு பொருந் துமா என ஆராயின் பொருந்தா எனவே தோன்றும்.

> தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
> ஒத்தாங் கொறுப்பது வேந்து (561)

எனக் கூறிய வள்ளுவர் அவரவர் செய்த குற்றத்துக்கு ஏற்றவண்ணம் அவரவர் தண்டனையடைதல் வேண்டும் என்ற கருத்தையே கொண்டிருந்தாராதல் வேண்டும். குற்றத்திற்குத் தண்டனை ஏன் அளிக்கப்படல் வேண்டும் என்பதைக் குறித்துப் பல கருத்துக்கள் உள. குற்றம் செய்தோரை ஒறுத்தல் திருத்துதற்கே எனலாம் (Punishment as Corrective). அவ்வாறாயின் சிலகுற்றங்கட்குக்கொலைத் தண்டனை அளிக்கப்படுவது ஏன்? கொலைத் தண்டனை அளிக்கப்பட்டோர் திருந்துமாறில்லை ஆயினும்கொடுங்குற்றங்கட்குக்கொலைத்தண்டனையளிக்கப்படுதலைப் பழைய ஏற்பாடு ஏற்றுக்கொள்கிறது. வள்ளுவரும் ஏற்றுக் கொண்டார் கொடுங்குற்றஞ் செய்தவர்கட்குக் கொலைத் தண்டனையளிக்கப்பட்டால் பிறர் அஞ்சி அக்குற்றங்களைச் செய்யாதிருப்பர். சமூகத்தில் குற்றங்கள் மலியாமல் தடுப்பதற்காகத் தண்டனையளிக்கப்படுகிறது எனலாம் (Punishment as Preventive). இவ்வாறன்றித் தண்டனையினால் என்ன பயன் என்பதை ஆராயாது, குற்றஞ்செய்தவனோ அவனைச் சார்ந்தோரோ தண்டனையடைதல் நீதி; ஆகையினால் தண்டனையளிக்கப்படல் வேண்டும் எனவும் கருதலாம். இத்தகைய தண்டனைமுறையைப் பழியெதிர் செயல் (Retribution) என்பர்

வள்ளுவர், அரசன் அல்லது ஆட்சியாளர் குற்றம் செய்தோர்க்குத் தண்டனையளித்தலைக் குறித்துக் கூறுமிடத்து முன்னிரு கருத்துக்களையே உளத்துக் கொண்டு கூறினார் எனத் தோன்றுகிறது

> தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
> ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து (561)
>
> குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
> வடுவன்று வேந்தன் தொழில் (549)

என்னும் குறள்கள்திருத்தும் நோக்கத்துடன் தண்டனையளித்தலையே குறிக்கும். குற்றம் செய்தோன் பின்னும் அது செய்யாமற் பொருட்டு நடுநின்று ஆராய்ந்து அக்குற்றத்துக்கு ஒப்ப ஒறுப்பதே அரசனின் கடமையெனவும் குடிகளைப் பிறர் நலியாது காத்துத்தானும்நலியாது பேணி அவர்மாட்டுக் குற்றம் நிகழின் அதனை ஒழித்தல் வேந்தன் தொழில் எனவும் இங்குக் கூறப்பட்டது. 'குடிபுறங்காத் தோம்பிக் குற்றம் கடிதல்' என்றற்கு 'குடிகளை நலியாமல் காத்து ஓம்புதற்காக, குற்றஞ் செய்தாரை ஒறுத்தல்' என மணக்குடவர் பொருள் கொண்டார். இங்குச் சமூகத்தில் குற்றம் மலிந்து அதனால் குடிகள்

துன்புறாமல் காத்தல் தண்டனையின் நோக்கம் என்ற கருத்தும் காணப்படுகிறது.

> கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
> களைகட் டதனொடு நேர் (550)

என்னும் குறளில், குற்றம் செய்வாரை ஒறுப்பது நன்மக்களைக் காப்பதற்கே என்னும் கருத்துத் தெளிவாகக் காட்டப்படுகிறது. உழவன் களைகளை நீக்கிப் பயிரைக் காப்பதுபோல அரசன் கொடியாரைக் கொலையினால் ஒறுத்து நற்குடிகளைக் காத்தல் கடனாம். இம்முறையிலேயே வள்ளுவர் ஒறுத்தலைக் குறித்து எழுதினார்.

பழைய ஏற்பாட்டினின்றும் எடுத்துக் காட்டப்பட்ட இரு நிகழ்ச்சிகளிலும் (ஆகான் குடும்பத்தவருடன் கொல்லப்பட்டது சவுலின் பின் வந்தோர் தண்டனையடைந்தது) சிலப்பதிகாரத்தில் வெற்றிவேற்செழியன் பொற்கொல்லர் ஆயிரவரைப் பலிகொடுத்த செயலிலும் முக்கியமாகக் காணப்படுவது பழியெதிர் செயல் (Retribution) என்னும் கருத்தே. இந்நிகழ்ச்சிகளில் குற்றத்திற்குத் தண்டனையளிக்கப்படுதல் நீதி என்பதோடு ஒருவர் செய்த குற்றத்தினால் சீற்றமடைந்த குற்றத்துக்கு ஆளான பிறரோ இறைவனோ அறமோ தண்டனையைக்கண்டு தணிவடைகின்றனர் என்ற கருத்தும் அடங்கியுள்ளது. தண்டனையைக் குறித்து இவ்வாறு எண்ணுமிடங்களிலேயே குற்றம் செய்தவரன்றி அவர் குடும்பத்தவர் இனத்தவராகிய பிறரும் தண்டனையடைதல் கூடும் என்ற கருத்து காணப்படல் இயல்பு. தண்டனையின் நோக்கம் திருத்துதலேயாயின் குற்றம் செய்தவர் மட்டுமே தண்டிக்கப்படல் இயல்பு. பழியெதிர் செயல் (Retribution) என்பது தண்டனையைக் குறித்த பழங்காலக் கருத்தாகும். திருத்துதல் அல்லது குற்றங்கள் இனி நிகழாது தவிர்த்தல் (Correction or prevention) என்பதே தற்காலக் கருத்தாகும். இம்முறையில் அரச தண்டனையைக் குறித்த வள்ளுவர் கருத்து அவர் காலத்தைக் கருதுமிடத்து மிகமுற்போக்காக இருத்தலைக் காணலாம்.

### 3. 6. நாளாகமம்

நாளாகமம்,எஸ்றா,நெகேமியா என்னும் நூல்களின் நடையிலும் கருத்துக்களிலும் ஓரளவு ஒற்றுமை காணப்படுவதனால் இவை ஏறக்குறைய ஒரே காலத்தில் எழுதப்பட்டு அல்லது தொகுக்கப்பட்டிருக்கலாம் என்பர். இவை தற்போதுள்ள வடிவையடைந்தது

கி.மு. நான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே எனக் கருதுவர். நாளாகமம் என்னும் இரு நூல்களையும்எழுதியவர்கள்தம் காலத்திற்கு முன்பே எழுதப்பட்டிருந்த சாமுவேல், இராஜாக்கள் என்னும் நூல்களையும் வேறு அக்காலத்திருந்தபிற மூல நூல்களையும் பயன்படுத்தியிருத்தல் வேண்டும். இராஜாக்கள் என்னும் இரு நூல்களும் பெரும்பாலும் உபாகமச் சீர்திருத்த இயக்கத்தினராலேயே எழுதப்பட்டிருப்ப நாளாகமம் என்னும் இரு நூல்களும் ஆசாரியார்களால் அல்லது கோயில்பணிபுரியும் லேவியர்களால் எழுதப்பட்டன என அறிஞர்கள் கருதுகின்றனர்.

இந்நூல்களிலும் ஆங்காங்கே சில நீதிக் கருத்துக்கள் செறிந்திருப்பதைக் காணலாம்.

தாவீதைக் குறித்துக் கூறப்படும் ஒரு நிகழ்ச்சி இங்குக் குறிப்பிடத் தக்கது. பெலிஸ்தரோடு போர் நிகழ்ந்தபொழுது ஓரமையம் தாவீது அரணான ஓரிடத்தில் தங்கியிருந்தான். அங்குப் போதிய குடிநீர் இல்லைபோலும். தாகத்தினால் வருந்திய தாவீது பெத்லேகம் நகர வாசலின் அருகிலிருந்த கிணற்றுத் தண்ணீரின்மேல் ஆவல் கொண்டு, 'என் தாகத்துக்குக் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வருகிறவன் யார்' என்றான். பெத்லேகமோ அப்போது பெலுஸ்தரின் படைமக்களால் சூழப்பட்டிருந்தது. தாவீதினுடனிருந்த வீரர்களில் மூவர் தங்கள் உயிருக்கு நேரத்தக்க ஆபத்தையும் பொருட்படுத்தாமல் பெலிஸ்தர் பாளையத்தைக் கடந்துசென்று அக்கிணற்றில் நீர் மொண்டு கொணர்ந்தனர். தாவீது அதைக் குடிக்கவில்லை.

"நான் இதைச் செய்யாதபடிக்கு, என் தேவன் என்னைக் காத்துக் கொள்ளக் கடவர்; தங்கள் பிராணனை எண்ணாமல் போய் அதைக் கொண்டுவந்த இந்த மனுஷரின் இரத்தத்தைக் குடிப்பேனோ என்று சொல்லி அதைக் குடிக்க மாட்டேன் என்றான்" (1 நாள் 11-19)

இந்நிகழ்ச்சி தாவீதின் செய்ந்நன்றியறியுந் திறத்தையும் சுற்றம் தழுவும் பண்பையும் காட்டும். தன் வீரர்களிடத்தில் ஆழ்ந்த அன்பு கொண்டிருந்த தாவீது தனக்காக அவர்கள் உயிரையும் பொருட்படுத்தாது பகைவர் படைகளைக் கடந்து சென்று கொண்டுவந்த நீரைத் தான் அருந்துவது தகுதியன்றென எண்ணி அருந்த மறுத்து அதை இறைவனுக்கு அர்ப்பணித்தான்.

தன் ஆட்சியின் இறுதியில் தாவீது தன் குடிமக்களுக்குப் புத்தி-மதிகள் சிலவற்றைக் கூறும் போது இறையருளால் கிடைத்ததாக அந்நாட்டில் கருதப்பட்ட நீதிகளை அவர்கள் கடைபிடித்தொழுகினால் அவர்கள் வழிவருவோர் அந்நாட்டை என்றும் ஆண்டு அனுபவிப்பர் எனக் கூறினான்.

"இப்போதும் நீங்கள் என்றென்றைக்கும் இந்த நல்ல தேசத்தைச் சுதந்தரமாய் அநுபவித்து, உங்களுக்குப் பிறகு அதை உங்கள் பிள்ளைகளுக்குச் சுதந்தரமாய்ப் பின் வைக்கும் பொருட்டாக, நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் கைக்கொண்டு விசாரியுங்கள் என்று கர்த்தரின் சபையாகிய இஸ்ர-வேல் அனைத்தின் கண்களுக்கு முன்பாகவும், நமது தேவனுடைய செவி கேட்கவும் உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்" (I நாள் 28. 8)

செப்ப முடையவன் ஆக்கம் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து (112)

என்ற குறளின் கருத்தே இங்குக் காணப்படுகிறது. வள்ளுவர் தனிப்-பட்டவர்களின் செல்வத்தைக் குறித்து எண்ணி நடுவுநிலைமையைக் கைக்கொண்டொழுகுவோரின் செல்வம் சிதையாது அவர் வழியிலுள்-ளோருக்கும் பாதுகாவலாக இருக்கும் என்றார்ச.மூகத்தில் அநீதி மலிந்ததனால் நாடேயழிந்து மேன்மக்களெல்லாம் சிறைப்பிடிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டுப் பிற நாடுகளில் பல ஆண்டுகள் வசித்துத் திருப்பி வந்த பின் நாளாகமத்தை யெழுதிய ஆசிரியர்கள் நாட்டு மக்கள் நீதியைக் கடைப்பிடித்தால் வருங்காலத்தில் அவர் சந்ததி-யோர் நாட்டைச் சுதந்திரமாக அனுபவிப்பர் என்னும் ஒரு நீதிக் கருத்தைத் தாவீதின் மேல் ஏற்றிக் கூறினர்.

யோசபாத் என்னும் அரசன் யூதாவைச் சேர்ந்த நகர்களனைத்-திலும் நியாயாதிபதிகளை நியமித்ததாக நாளாகமம் கூறுகிறது. பொதுவாக அவ்வவ்விடத்திலுள்ள மூப்பர்கள் (Elders) எனப்படும் வய-திலும் அறிவிலும் மிகுந்த பெரியோர் வழக்குகளை விசாரித்து நியா-யம் தீர்ப்பது யூதர்களிடையே வழக்கமாக இருந்தது. மூப்பர்களுடன் சேர்ந்து வழக்குகளை ஆராய யோசபாத் நியாயாதிபதிகளை நியமித்-திருக்கலாம். நியாயாதிபதிகள் தங்கள் பணிகளை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை அரசன் அவர்கட்கு எடுத்துச் சொன்னான்.

"அந்த நியாயாதிபதிகளை நோக்கி: நீங்கள் செய்கிற காரியத்தைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; நீங்கள் மனுஷனுடைய

கட்டளையினால் அல்ல, கர்த்தருடைய கட்டளையினால் நியாயம் விசாரிக்கிறீர்கள்; நியாயம் விசாரிக்கிற விஷயத்திலே அவர் உங்களுடனே இருக்கிறார்.

ஆதலால் கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் உங்களிடத்தில் இருக்கக் கடவது; எச்சரிக்கையாயிருந்து காரியத்தை நடத்துங்கள்; உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்திலே அநியாயமும் முகத்தாட்சிணியமும் இல்லை, பரிதானமும் அவரிடத்திலே செல்லாது என்றான்'' (II நாள். 19 6-7).

இங்கே நீதி வழங்குவோர் ஒருபால் கோடாதவர்களாய் (முகத்தாட்சிணியம்) நடுவிகந்தாம் ஆக்கத்தை (பரிதானம்) விரும்பாதவர்களாய் நடுநிலையில் நிற்றல் வேண்டும் என்பது கூறப்பட்டது. அத்துடன் நியாயத் தீர்ப்பு கர்த்தருடையது, நியாயம் விசாரிப்போர் கர்த்தருக்கே பயப்படவேண்டும் என்பதும் இங்குக் காணப்படும் கருத்தாம். இவ்வாறு நீதிக் கருத்துக்களைத் தங்கள் கடவுட் கொள்கையோடு தொடர்புபடுத்துதல் யூதஅறிஞர்களின் வழக்கமாகும். தீர்க்கதரிசிகளைக் குறித்த நூல்களில் இதை இன்னும் அதிகமாகக் காணலாம்.

எசேக்கியா என்னும் அரசன் செய்த அல்லது செய்ய முயன்ற சீர்திருத்தங்களைக் குறித்து 'இராஜாக்கள்' சுருக்கமாகவே கூறுகிறது. நாளாகமம் அவற்றை விரித்துரைக்கின்றது. யூதர்கள் கானான தேசத்தில் குடியேறிய காலம் முதல் பஸ்கா அல்லது புளிப்பில்லாத அப்பப்பண்டிகை என்னும் ஓர் பண்டிகையை ஆசரித்து வந்தார்கள். ஆனால் பிற்காலத்தில் பிற நாடுகளின் தொடர்பால்ஏற்பட்ட இப்புதிய பழக்க வழக்கங்களினாலும் போர்த்தொல்லையினாலும் பல ஆண்டுகள் அப்பண்டிகையை ஆசரிக்காது விட்டுவிட்டார்களாம். எசேக்கியா, இஸ்ரவேல், யூதா என்னும் இருபகுதிகளிலும் பல இடங்களுக்கும் ஆட்களையனுப்பி மக்களெல்லாரும் எருசலேம் நகரத்துக்கு வந்து பண்டிகையை ஆசரிக்க வேண்டுமென அறிவித்தான். பலர் திரண்டு வந்தனர். ஆயினும் அவர்கள் அப்பண்டிகையை ஆசரிப்பதற்காகத் தங்களை முறையாகப்பரிசுத்தம் பண்ணிக்கொள்ளவில்லை அந்நிலையிலேயே அவர்கள் பஸ்காப் பண்டிகைக்குரிய உணவையுண்டனர். குடிமக்கள் சார்பாக அரசன் எசேக்கியா இறைவனை வேண்டிக்கொண்டான்.

"எசேக்கியா அவர்களுக்காக விண்ணப்பம் பண்ணி, தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரான தேவனைத் தேடும்படிக்கு, தங்கள் இருதயத்தை நேராக்கினவர்கள் பரிசுத்த ஸ்தலத்திற்கேற்ற சுத்தாங்கம் அடையாதிருந்தாலும், கிருபையுள்ள கர்த்தர் அவர்கள் எல்லாருக்கும் மன்னிப்பாராக என்றான்.

கர்த்தர் எசேக்கியாவின் விண்ணப்பத்தைக் கேட்டு, ஜனங்களுக்கு அநுகூலம் செய்தார்" (II நாள் 30 19-20).

நாளாகமம் கூறும் இந்நிகழ்ச்சியில் புறத்தூய்மையைவிட உள்ளத்தில் உள்ள ஆர்வம் முக்கியமானது என்ற கருத்து ஓரளவு ஏற்றுக்கொள்ளப்படுவதைக் காணலாம் ஆயினும் வழிபாட்டிற்குப் புறத்தூய்மை முக்கியமானது எனக் கருதியதனாலேயே எசேக்கியா மக்கள் தங்களைப் பரிசுத்தம் செய்யாததைக் குறித்து மன்னிப்புக் கேட்கிறான். புறத்தூய்மையும் புறத்தில் செய்யப்படும் வழிபாடுகளும் பொருட்டல்ல, அகத்தூய்மையே முக்கியமானது என்னும் கருத்தைச் சிறப்பாகத் தீர்க்கதரிசிகளின் நூல்களில் காணலாம். தீர்க்கதரிசிகள் அவ்வாறு கற்பித்தாராயினும் அவ்வுயர் கருத்துக்களை மக்களனைவராலும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அது இயல்பே. தீர்க்கதரிசிகளைப் பின்பற்றி உபாகம விதிகள் அகத்தூய்மையின் முக்கியத்தைக்கூறின எனினும் புறத்தூய்மையைக் குறித்த சில விதிகளையும் பலி செலுத்துதல் பண்டிகைகளை ஆசரித்தல் முதலிய புறத்தே செய்யப்படும் வழிபாட்டு முறைகளையும் அவையும் ஏற்றுக் கொள்கின்றன. யூதர்கள், அதிலும் முக்கியமாக ஆசாரியார்கள் குளித்தல், துணிகளைத் துவைத்தல், பாத்திரங்கள் முதலியவற்றைச் சுத்தம் செய்தல் ஆகியவற்றைக் குறித்தெல்லாம் சில விதிகளை ஏற்படுத்தி இவற்றை அவ்வம்முறையின்படி செய்வதை முக்கியமாகக் கருதினர். புதிய ஏற்பாட்டின் காலத்தில் இவ்விதப் புறத்தூய்மை பற்றிய விதிகளைக் குறித்துக் கிருஸ்து பெருமானுக்கும் அக்காலத்திருந்த ஆசாரியார்களுக்கும் இடையே அடிக்கடி தர்க்கங்கள் நடத்தலைக் காணலாம்.

மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற (34)

என்ற வள்ளுவரின் வாக்கு இங்குச் சிந்திக்கத்தக்கது. இம்முறையில் வள்ளுவரின் கருத்தை யொத்திருப்பன தீர்க்கதரிசிகள் சிலரின் சொற்களுட பின்பு கிருஸ்து பெருமானின் போதனைகளுமே.

## 3. 7. கடவுட் கொள்கையில் சில கருத்துக்கள்

இறைவன் தூயவர், நீதியுடையவர் என்னும் கருத்துக்கள் ஏற்பாடு முழுவதிலும் காணப்படும். நீதியுடன் கிருபையுமுடையவர் என்பர். முதலாம் நாளாகமத்தின் 16-ஆம் அதிகாரத்தில் தாவீதால் பாடப்பட்டதாகச் சொல்லப்படும் துதிப்பாடல் ஒன்று காணப்படுகிறது இப்பாடல் நாளாகமம் எழுதப்பட்ட காலத்தில் யூதர்களிடையே இருந்த கடவுட் கொள்கையைக் காட்டுவதாகக் கொள்ளலாம். இப்பாடலில் வரும், ''அவருடைய பரிசுத்த நாமத்தைக் குறித்து மேன்மை பாராட்டுங்கள்; கர்த்தரைத் தேடுகிறவர்கள்ன் இருதயம் மகிழ்வதாக' (1 நாள். 16. 10).

''அவர் பூமியை நியாயந் தீர்க்க வருகிறார்.

கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது'' (1 நாள். 16 33-34) என்ற வரிகள் இறைவனின் தூய்மை, நீதி. இரக்கம் என்னும் பண்புகளைக் காட்டும்.

வள்ளுவரும் இறைவனை வாலறிவன்(தூய அறிவையுடையன்) எனவும் அறவாழி அந்தணன் (அறக்கடலையுடையவன், அழகிய தண்ணிய இயல்பை உடையவன்) எனவும் குறிப்பிட்டார்.

மற்றொரு இடத்தில் தாவீதின் வாய்மொழியாகத்''தேவரீருக்கு நிகரானவர் இல்லை; உம்மைத் தவிர வேறே தேவனும் இல்லை'' எனக் கூறுகிறது நாளாகமம் (I நாள். 17-20).

வள்ளுவர் இறைவனைக் குறித்து வழங்கிய மற்றொரு தொடர் 'தனக்குவமையில்லாதான்' (குறள்7) என்பதாகும். ஒரு தெய்வக் கொள்கையுடைய எவரும் இறைவனை நிகரில்லாதவன் ஒப்பில்லாதவன் எனக்கூறல் இயல்பே.

''கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்,'' (1 நாள். 28 9)

இதுவும் தாவீதின் கூற்றாகவே நாளாகமத்தில் கூறப்படுகிறது 'மலர்மிசை ஏகினான்' என்ற திருக்குறள் தொடருக்கு 'அவன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் விரைந்து செல்பவன்' எனப் பரிமேலழகர் பொருள்கொண்டார் 'மலர்மிசை யேகினான.' என்பதற்கு வேறுவிதமாகவும் பொருள் கொள்ளலாமாகையினால் இக்கருதது

தெளிவின்று. இறைவன் மக்களுள்ளத்திலுள்ள எண்ணங்களனைத்தையும் அறிகின்றான் என்னும் கருத்து தெளிவாகக் காணப்படுவது பல்லவர் காலத்துப் பக்திக் கவிஞர்களின் பாடல்களிலேயே. 'தீர்க்கதரிசிகள்' என்னும் தலைப்பின்கீழ் இக்கருத்து விரிவாக ஆயப்படும். ஏனெனில் இறைவன் மக்களின் உள்ளக்கருத்துக்களை யெல்லாம் ஆராய்ந்தறிகிறான் என யூதர்களிடையே கற்பித்தவர்கள் தீர்க்கதரிசிகளே தீர்க்கதரிசிகளின் கருத்தையே இங்கு நாளாகமம் தாவீதின் மேலேற்றிக் கூறுகிறது.

தாவீதின் வாய்மொழியாக நாளாகமம் கூறும் வேறு சில கருத்துக்களைப் பின்வரும் வரிகளில் காணலாம்.

''கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள்; வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள்; கர்த்தாவே, ராஜ்யமும் உம்முடையது; தேவரீர் எல்லாருக்கும் தலைவராயுயர்ந்திருக்கிறீர்.

ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது; தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர்; உம்முடைய கரத்திலே சத்துவமும் வல்லமையும் உண்டு; எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும்.''

இவ்வரிகளைப் படிப்பவர்க்கு 'இறைவன் பொருள்சேர் புகழ் (குறள் 5) என்ற வள்ளுவரின் தொடர் நினைவுக்கு வரும்.ஒரு தெய்வக் கொள்கையுடைய எவரும் இறைவனே உயர்ந்தவர், புகழுக்குரியவன் என்றெல்லாம் போற்றல் இயல்பே.

பழைய ஏற்பாட்டில் காணப்படும் கடவுட்கொள்கைக்கும் வள்ளுவரின் கடவுட்கொள்கைக்குமிடையே இவ்வித ஒற்றுமைகள் உள எனினும் வேறுபாடுகளும் உள்ளன என்பது தீர்க்கதரிசிகளின் கருத்துக்களை ஆயும்போது புலப்படும்.

———

# 4

# தீர்க்கதரிசிகள்

4. 1. யூத வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெறுகின்றவர் தீர்க்கதரிசிகள் என்னும் அறவோர்கள். தமிழிலக்கிய வரலாற்றில் திருக்குறள் போன்ற சிறந்த இலக்கியங்கள் பின் தோன்றிய ஏனைய இலக்கியங்கள் பலவற்றிலும் தம் செல்வாக்கைப் புலப்படுத்துதல் போலத் தீர்க்கதரிசிகளின் போதனைகளும் முதலைந்து நூல்கள், வரலாற்றிலக்கியங்கள், மூதறிவு இலக்கியங்கள், துதிப் பாடல்கள் ஆகிய பழைய ஏற்பாட்டின் பிற பகுதிகளிலெல்லாம் தம் செல்வாக்கை மிளிரச் செய்துள்ளன. புதிய ஏற்பாட்டின் காலத்திலும் இயேசு பெருமான் தம் சமயக் கருத்துக்களைச் சீடர்கட்கும் பொதுமக்கட்கும் கற்பித்த போது தீர்க்கதரிசிகளை அடிக்கடி குறிப்பிட்டார். அவர்கள் சொற்களை எடுத்தாண்டார். சிறப்பாக இரண்டாம் ஏசாயாவின் கருத்துக்கள் அவர் உள்ளத்தை மிகவும் கவர்ந்தன என்பர்

மோசேக்குப் பின் யூதர்களிடையே நீதியைக் கற்பித்தவர்கள் தீர்க்கதரிசிகளே. இம்முறையில் அவர்களின் கருத்துக்களைத் திருக்குறள் முதலிய நீதிநூல்களின் கருத்துக்களோடு ஒப்பிட்டு ஆய்தல் கூடும் ஆயினும் தீர்க்கதரிசிகள் வெறும் நீதிகளை மட்டுப் கூறவில்லை. இறைவன் தம்மைத் தன் பணிக்கென அழைத்ததாகவும் தமக்குச் சில உண்மைகளை வெளிப்படுத்தி அவற்றை மக்களுக்குக் கூறுமாறு கட்டளையிட்டதாகவும் அவர்கள் நம்பினர். ஆகவே அவர்கள் இறை

வனியல்பையும் அவர் நீதியையும் அருளையும் குறித்து மக்கட்குக் கற்பிக்க முயன்றனர் இம்முறையில் அவர்கள் நம் நாட்டில் பல்லவர் காலத்தில் தோன்றிய பக்திக் கவிஞர்களை ஓரளவு ஒத்துள்ளனர். இன்னும் தத்தம் காலத்துச் சமூகத்தில் உள்ள குறைகள் சமூகத்தில் பரவியிருந்த தீமைகள், ஆகியவற்றை எடுத்துக் கூறுவதும் தீர்க்க-தரிசிகளின் போதனைகளில் காணப்படும் மற்றொரு இயல்பாம். தமிழிலக்கிய வரலாற்றில் பொதுநீதியைக் கற்பித்தவர்கள் திருவள்ளு-வர் போன்ற நீதி நூலாசிரியர்கள். தம் காலத்துச் சமூக நிலையை ஆராய்ந்து குறைகளை எடுத்துக் காட்ட முயன்றவர்கள் சிலப்பதிகாரம் மணிமேகலை என்ற காவியங்களை இயற்றிய கவிஞர்கள். இறைவ-னையும் அவரருளையும் குறித்துப் பாடியவர்கள் பல்லவர் காலத்துப் பக்திப் புலவர்கள். யூதர்கள் வரலாற்றிலோ தீர்க்கதரிசிகள் இம்மூன்-றையும் ஒருங்கே செய்தனர் எனலாம்.

யூதர்கள் நாட்டில் தீர்க்கதரிசிகளின் இயக்கம் மிகச் சிறப்புற்ற நிலையை யடைந்தது. கி.மு. எட்டாம் நூற்றாண்டிலேயே. அரசியல் நிலையில் அதுவே யூதர்கள் வீழ்ச்சியடைந்த காலம். ஆனால் அச்-சாலத்திலேயே சிறந்த தீர்க்கதரிசிகள் தோன்றி உயர் கருத்துக்களை மக்கட்குப் போதித்தனர்.

தீர்க்கதரிசிகளின் பெயர்களால் வழங்கப்படும் நூல்கள் முழுவதும் அவ்வத் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டன வல்ல. அந்நூல் களில் சில பகுதிகள் தன்மைக் கூற்றாகவும் சில பகுதிகள் படர்க்கைக் கூற்றாகவும் வருகின்றன. படர்க்கைக்கூற்றாக வருவன பிறராலேயே எழுதப்பட்டிருத்தல் வேண்டும். தன்மைக் கூற்றாக வருவனவற்றை அவ்வத் தீர்க்கதரிசி தாமே எழுதியிருக்கலாம். அவர் சொல்லைக் கேட்டுச் சீடரோ பிறரோ எழுதியிருக்கலாம். மொழிபெயர்ப்பில் முழுவதும் உரைநடைவடிவாகக் காணப்படினும் மூலமொழியில் தீர்க்-கதரிசிகளின் நூல்களில் பெரும் பகுதிகள் கவிதை வடிவாகவே உள்-ளன என்பர். மூலமொழியிலும் உரைநடைப் பகுதிகளும் உள. பல நூல்களிற் பிற்சேர்க்கைகளும் உள.

திருக்குறள் முறையாக ஒரு நூலாக இயற்றப்பெற்றிருத்தல் வேண்டும். வள்ளுவர் இன்ன பொருள்களைக் குறித்து எழுத வேண்-டும் அவற்றை இன்ன இன்ன பிரிவாக அமைக்க வேண்டும் என வகுத்-துக் கொண்டு எழுதியிருக்க வேண்டுமென நூலின் அமைப்பிலிருந்து ஊகிக்கலாம். யூத தீர்க்கதரிசிகள் யாரும் ஒரு நூலை எழுத எண்ணி எழுதியவர்களல்லர். அவ்வப்போது அவர்கள் பாடிய பாடல்கள்

அல்லது கூறிய மொழிகள் பின்பு தொகுக்கப்பட்டன. இம்முறையிலும் தீர்க்கதரிசிகளின் நூல்கள் தமிழிலுள்ள பக்தி இலக்கியங்களையே ஒத்துள்ளன.

ஆமோசு என்னும் தீர்க்கதரிசி யூதாவில் தெக்கோவா என்னும் ஊரைச் சேர்ந்தவர். அவர் இயல்பான தொழில் ஆடுமாடுகளை மேய்த்தலும் காட்டத்திப் பழங்களை விற்றலுமே என்பதுஅவர் நூலினின்றும் தெரிகிறது அவர் காலம் இரண்டாம் யெரொபெயாம் சமேரியாவில் ஆட்சி செய்த காலமே யென்பர். அக்காலத்தில் யூதர் நாட்டில் செல்வச் செழிப்பு மிகுந்திருந்தது. ஆனால் சமூகத்தில் பல தீமைகள் மலிந்திருந்தன. செல்வர்க்கும் வறியவர்க்கும் வேறுபாடு அதிகமாயிருந்தது. செல்வம் சிலர் கையிலேயே திரளப் பிறர் வறுமையினால் வாடினர். செல்வர்கள் சுக வாழ்க்கையையும் சுவையுள்ள உணவையும் குடிவகைகளையுமே அதிகம் விரும்பியவர்களாய்க் கட்டுப்பாடற்ற வாழ்க்கை வாழ்ந்தனர். இந்நிலையில் யாவேயின் வழிபாட்டில் ஈடுபாடின்மையும் இயல்பே. ஆமோசு ஆட்டுரோமத்தையோ பிற பொருள்களையோ விற்பதற்கு நகர்களுக்குச் செல்லும்போது நகர்களில் செறிந்திருந்த பல தீமைகளை உணர்ந்திருத்தல் வேண்டும்.

யூதர்களனைவருக்கும் எருசலேம் நகரிலுள்ள ஆலயமே சிறப்பாக வழிபாட்டிற்குரிய இடமாகக் கருதப்படினும் சமேரியாப் பகுதியில் உள்ளவர்கட்கு பெதெல் என்னும் நகரில் ஆலயம் ஒன்று இருந்ததென்பது ஆமோசின் நூலினின்றும் தெரிகிறது. திராட்சைத் தோட்டங்களில் கனி கொய்யப்படும் காலத்தில் ஆலயத்தில் விழாக் கொண்டாடக் கூடியிருந்த மக்களிடையே ஆமோசு தம் போதனைகளை முதலில் கூறத் தொடங்கியிருத்தல் வேண்டுமெனக் கருதப்படுகிறது.

ஓசியா என்னும் தீர்க்கதரிசி இஸ்ரவேல் பகுதியில் இரண்டாம் யொராபெயாமின் காலத்தில் பணியாற்றத் தொடங்கி அவ்வரசன் காலத்தின்பின்னும் தம் போதனைகளைச் செய்தார். அவர் தொழில் என்ன என்பது தெரியவில்லை. அவர் குடும்ப வாழ்க்கையைக் குறித்த சிலகுறிப்புக்களே அவர் நூலினின்றும் தெரிய வருகின்றன.

ஓசியா கோமேர் என்னும் மாதை மணந்தார். குழந்தைகள் மூவர் பிறந்தனர். அவர் தம் குழந்தைகட்குப் பொருள் பொதிந்த பெயர்களை யிட்டார். முதற் குழந்தைக்கு 'யெஸ்ரயேல்' எனப் பெயரிட்டார். யெஸ்ரயேல் இஸ்ரவேல் நாட்டில் ஓர் இடத்தின் பெயர். அவ்விடத்தில் யெகூ என்னும் அரசன் செய்த கொடுஞ்-

செயல்களின் பயனாக அவ்வரசனின் சந்ததி தம் காலத்தில் அழியும் என அவர் நம்பினார். இரண்டாவதாகப் பிறந்த பெண் குழந்தைக்கு 'அருள் பெறாதாள்' எனவும் மூன்றாவதாகிய ஆண் குழந்தைக்கு 'நமரல்லர்' எனவும் பெயரிட்டார்[1]. இஸ்ரவேல் நாடு யாவேயை விட்டு விலகித் தவறான வழிகளிற் சென்று அவர் அருளை இழந்தமை-யையும் யாவே இஸ்ரவேல் மக்களை நமரல்லர் என நீக்கியதையும் அவை குறிக்கும் என்றார்.

கோமேர் கற்புடைய மனைவியாக வாழவில்லை. சில காலத்தின் பின் அவள் பிற ஆடவரை நாடி அவர்களுடன் உறவு கொள்வதை ஒசியா உணர்ந்தார் இரண்டாவது குழந்தை பிறந்தபொழுதே மனைவியின் உண்மையின்மையை உணர்ந்து கொண்டதனாலேயே அவர் தம் குழந்தைகட்கு அருள் பெறாதாள் எனவும் நமரல்லர் எனவும் பெயரிட்டார் எனச் சிலர் கருதுவர். தம் மனைவியின் நடத்-தையைக் குறித்துச் சினம் கொண்ட ஒசியா அவளை அவமதித்து நிராகரிக்க எண்ணினார்; குழந்தைகளையும் நிராகரிக்க எண்ணினார். ஆனால் இறுதியில் அவர் அவ்வாறு செய்யவில்லையெனத் தோன்று-கிறது அவர் அவளைச் சிலகாலம் விலக்கி வைத்திருக்கலாம். அவளைப் பிற ஆடவருடன் தொடர்பு கொள்ளாதவாறு தடுத்து நல்லொழுக்க முள்ளவளாக வாழ வேண்டுமெனக் கற்பித்துப் பின்பு ஏற்றுக்கொண்-டார் எனத் தோன்றுகிறது (ஒசி. 3 3). தானாகத் தம்மை விட்டுப் பிரிந்தோ தம்மால் நிராகரிக்கப்பட்டு நீங்கியோ கடலில் மூழ்கி விட்ட மனைவியை அவள் கடனுக்காக அடிமையாக விற்கப்படப்போகும் நிலையில் அவர் இரக்கமுற்றுச் சென்று மீட்டுவந்தார் எனச் சிலர் கருதுவர். "அப்பொழுது நான் அவளை எனக்குப் பதினைந்து வெள்ளிக் காசுக்கும், ஒன்றரைக்கலம் வாற்கோதுமைக்கும் கொண்டு.... ...." (ஒசி. 3 2) என்ற தொடர் அவ்வாறு கடனாளிகளிடமிருந்து மீட்ட-மையையே குறிக்கும் என்பர். எவ்வாறாயினும் தாம் விரும்பிய முறைப்

1. J A Bewer, The Literature of the old Testament, P.94 : "And she conceieved again and bore a daughter. And He said to him, call her name Lo-ruhamah for I will no more have mercy upon the house of Israel that I should in anywise pardon them Now when she had weaned Lo-ruhamah she conceieved and bore a son And He said call his name Lo-ammi, for ye are not my people and I will not be your God".

'Lo-ruhamah means she not obtained mercy
Lo-ammi means not my people."

படி மணம் செய்து கொண்ட தம் மனைவியை முற்றாக நிராகரிக்க அவருள்ளம் இடம் கொடுக்கவில்லை என்பதே இங்குக் கருதத்தக்கது.

மீகாவும் ஏசாயாவும் என்னும் தீர்க்கதரிசியர் யூதா என்னும் தென்பகுதியிலே வாழ்ந்தனர். ஆமோசும் ஓசியாவும் கூறியது போலவே இஸ்ரவேல் பகுதி 721-ஆம் ஆண்டில் அசீரியர் படையெடுப்பில் அழிந்தது. மீகா வாழ்ந்தது இந்நிகழ்ச்சிக்கு முன்பே. இஸ்ரவேல் அழிந்தது ஏசாயா தீர்க்கதரிசியாகப் பணியாற்றிக் கொண்டிருந்த காலத்திலேயே.

மீகாவின் நூலில் சில பகுதிகள் பிற்சேர்க்கை யென்பர். 5 ,6,7-ஆம் அதிகாரங்களில் சிலசில வரிகள் பிற்சேர்க்கை எனவும் சில வரிகள் அவர் கூற்றுக்களே எனவும் கூறுவர். 7-ஆம் அதிகாரத்தில் பிற்பகுதி இஸ்ரவேல் நாடு கடத்தப்பட்ட பின்பே சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்பர்.

மீகா நகரிலன்றி நாட்டுபுறத்தில் வாழ்ந்தவர். அக்காலத்து நாட்டுப்புற மக்கள் அடைந்த துன்பத்தை யறிந்தவர். ஏறக்குறைய இஸ்ரவேல் பகுதியில் பரவியிருந்த தீமைகளே யூதாவிலும் பரவியிருந்தன என்பது மீகாவின் கூற்றுக்களினின்றும் தெரிய வருகிறது. ஆமோசின் கருத்துக்கும் இவர் கருத்துக்கும் அதிக ஒற்றுமைகள் உள்ளன.

பழைய ஏற்பாட்டிலுள்ள ஏசாயா என்னும் நூலில் மூன்று அல்லது மூன்றிற்கு மேற்பட்ட தீர்க்கதரிசிகளின் கூற்று அடங்கியுள்ளது என்பது தற்போது விவிலியநூலை ஆய்வோர் பலராலும் ஏற்றுக்கொள்ளப்படும் கருத்தாகும். தமிழிலக்கியங்களின் வரலாற்றை ஆய்வோர் ஔவையாரின் பெயரில் வழங்கப்படும் நடை, பொருள், சொல் தொகுதி (Vocabulary) ஆகியவற்றை ஆய்ந்து புறநானூற்றிலுள்ள பாடல்கள் சங்க காலத்தில் வாழ்ந்த ஒரு பெண் புலவரால் பாடப்பட்டன எனவும் ஆத்தி சூடி, கொன்றை வேந்தன் முதலியன இடைக்காலத்தில் வாழ்ந்த மற்றொரு புலவரால் பாடப்பட்டிருக்க வேண்டுமெனவும் ஊகித்து அவர்களைச் சங்ககால ஔவையார் எனவும் இடைக்கால ஔவையார் எனவும் அழைப்பது போலவே ஏசாயா என்னும் நூலிலும் செய்யப்படுகிறது. இந்நூலைப் பொதுவாக மூன்று பிரிவாகக் கொள்வர்.

1—39 முதலாம் ஏசாயா
40—55 இரண்டாம் ஏசாயா
56—66 மூன்றாம் ஏசாயா

பொதுவாக நடையையும்பொருளையும் கொண்டுஇவ்வாறு பிரிப்பினும் இவற்றினுள்ளேயும் தெளிவற்ற பகுதிகள் உள. 36 இலிருந்து 39 வரையுள்ள நான்கு அதிகாரங்கள் வரலாற்று இலக்கியங்களினின்றும் எடுக்கப்பட்டனவேயன்றி ஏசாயாவின் கூற்றுக்கள் அல்ல. முதல் 35 அதிகாரங்கள் கூட முழுவதும் ஏசாயாவின் கூற்றுக்கள் அல்ல என்பர். 1—12, 28—33 ஆகிய அதிகாரங்களும் 13-ஆம் அதிகாரத்திற்கும் 27-ஆம் அதிகாரத்திற்கும் இடையே சிலசில பகுதிகளுமே முதலாம் ஏசாயாவின் போதனைகள் எனத் தெளியத்தக்கன.

ஏசாயா எருசலேம் நகரத்தைச் சேர்ந்தவர். ஆமோசையும் மீகாவையும் போலன்றி நகர வாழ்க்கையிலேயே பழகியவர். எருசலேம் நகரத்திலும் அதன்கண்ணிருந்த ஆலயத்திலும் ஆழ்ந்த பற்றுடையவர். அரசரோடு நெருங்கிப் பழகத்தக்க உயர்நிலையிலிருந்தவர் எனத் தோன்றுகிறது. யூதாவை யாண்ட அரசகுடும்பத்தினரிடத்தும் மிக்க அன்புடையவர் ஏசாயா. ஆயினும் நாட்டிலும் அரசியலிலும் மிகுந்த தவறுகளை அவர் உணராமற் போகவில்லை.

4 2.1. இத்திர்க்கதரிசிகளின் கருத்துகளும்

திருக்குறளும்

விவிலியம் சமயநூல். திருக்குறள் நீதி நூல். விவிலியத்தின் பல பகுதிகளிலும் கடவுட் கொள்கையைச் சார்ந்த கருத்துக்களும் நீதிக்கருத்துக்களும் இணைந்தே காணப்படுகின்றன. வள்ளுவரோ கடவுள் வாழ்த்து என்ற தலைப்பில்பத்துக்குறள்களைக் கூறினாரெனினும் பிற இடங்களிலெல்லாம் பொதுநீதியை மட்டுமே கூறினார். இதுவே முக்கிய வேறுபாடு. ஆயினும் நீதிக்கருத்துக்களைப் பொறுத்த வரையில் பல ஒற்றுமைகளையும் காணலாம்.

நாட்டில் மக்களின் வாழ்க்கை அறத்தொடுபொருந்தாவிட்டால் இயற்கைவளம் குன்றும் என ஆமோன் கூறினார். வெட்டுக்கிளியினால் பயிருக்கு அழிவு, மழையின்மை, கடுங்குளிரினாலும் பனியினாலும் துன்பம் ஆகியவற்றைச் சமூகத்தில் பரவிய தீமைகட்கு இறைவனால் நியமிக்கப்பட்ட தண்டனை எனக்கருதினார். ஓசியாவும்

மக்கள் அறத்தைவிட்டு விலகியதனால் தாம் கொடுத்த தானியங்கள், பழங்கள், ஒலிவ எண்ணெய், ஆட்டு ரோமத்தினால் செய்யப்பட்ட பொருள்கள் ஆகியவற்றை அவர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளப் போவதாக யாவே கூறுகிறார் என்றார்.

நாட்டில் நீதி நிலவாவிட்டால் இயற்கை வளம் குன்றும் என்ற கருத்தைத் திருக்குறளிலும் பல இடங்களில் காணலாம். தீர்க்க-தரிசிகள் பொறுப்பைப் பெரும்பாலும் மக்கள்மேல் ஏற்றினர். 'அறத்-திற்கு ஆதியாய் நின்றது மன்னவன் கோல்' எனக் கருதிய வள்ளுவர் பொறுப்பைப் பெரும்பாலும் அரசன்மேலேற்றினார்.

முறைகோடி மன்னவன் செயின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல் (559)

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவான் எனின் (560)

என அரசநீதி தவறின் நாடு வளங்குன்றுதலையும்,

இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு (545)

என நீதியொடு பொருந்தச் செங்கோல் செலுத்தும் அரசன் நாட்டில் மழைவளமும் விளைபொருளின் செழிப்பும் குறையாதிருத்தலையும் கூறினார். மக்கள் நல்வாழ்க்கை யுடையராயிருந்தால் இயற்கை வளத்தை நல்கும். மக்கள் அறத்தொடு பொருந்த வாழாவிட்டால் வளத்தைத் தராது என்ற கருத்துக்களும் திருக்குறளில் காணப்படு-கின்றன.

வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம் (239)

புகழ் தரத் தக்க நல்வாழ்க்கையில்லாத மக்கள் வாழும் நாடு குற்ற மற்ற நல்ல பயன் குன்றும். கற்புடைய மகளிர் வாழும் நாட்டில் மழை வளம் குறையாது என்பதையே வள்ளுவர்,

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை (55)

என்றகுறள் மூலமாகவும் கூறியிருத்தல் வேண்டும். கலித்தொகையில்

வள்ளிகீழ் விழா வரைமிசைத் தேன்தொடா
கொல்லை குரல்வாங்கியீனா மலைவாழ்நர்
அல்ல புரிந்தொழுக லான் (39)

என மலைவாழ் மக்கள் அறம் அல்லாதவற்றைச் செய்தால் மலையில் பெறத்தக்க கிழங்கு, தேன், தினை முதலியவற்றைப் பெறமாட்டார்கள் என்று கூறப்படுவதும் சிலப்பதிகாரத்தில் கண்ணகியை மாதரியிடம் அடைக்கலமாக அளிக்கும்போது கவுந்தியடிகள்,

வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தர் கொற்றம் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்தநா டென்னும்
அத்தகு நல்லுரை அறியா யோநீ (அடை கா.145-148)

எனக் கூறுவதும் இயற்கைவளம் மக்கள் நல்வாழ்க்கையைப் பொறுத்ததே என்ற கருத்து பண்டைத் தமிழ்மக்களிடையேயும் பரவியிருந்ததையே காட்டும்.

நாட்டில் தீமை செறிந்தால் மக்கள் பகைவரை யெதிர்த்து நிற்க இயலாது அழிவர் என்ற கருத்து நான்கு தீர்க்கதரிசிகளின் நூல்களிலும் காணப்படுகிறது. வள்ளுவர் இதையும் அரசன் மேலேயே ஏற்றிக் கூறினார்.

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின் (546)
குணனிலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்
கினனிலனாம் ஏமாப் புடைத்து (868)

பண்டைத் தமிழ் நாட்டில் நிலவின முடியாட்சிக்கும் யூதர்நாட்டில் பழைய ஏற்பாட்டின் காலத்தில் நிலவிய முடியாட்சிக்கும் இடையே உள்ள வேறுபாடு வரலாற்று இலக்கியங்கள் என்னும் பகுதியிலேயே விளக்கப்பட்டது. யூத அரசர்கள் தமிழ் அரசர்களைப் போல அவ்வளவு வலிமை பெற்றிருக்கவில்லை. நாட்டின் பொறுப்பனைத்தும் அவர்கள் கையிலேயே தங்கியிருக்கவில்லை. ஆகவே சமூகத்தில் அறத்தைக் காக்கும் பொறுப்பை அநீதி நிகழாமல் மெலிந்தோர் துன்புறாமல் காக்கும் பொறுப்பை யூத அறிஞர்கள் மக்கள் மேலேற்றினர். வள்ளுவர் அதிகப் பொறுப்பை அரசன்மேலேற்றினார். போரில்வெற்றி தருவது படைவலிமை யன்று அறமே என்பதைப் பொதுக்கருத்தாகக் கொள்ளலாம்.

பிறநாட்டவர்களால் செய்யப்பட்ட குற்றங்களென ஆமோசு எடுத்துக் காட்டியன, உடன்படிக்கையை மீறி நடத்தல், போர்க்-கைதிகளைக் கொடுமையாக நடத்துதல், பிற நாட்டவரைச் சிறைப்-பிடித்து அடிமையாக விற்றல் என்பனவாம். வினைத்தூய்மை குறித்துப் பத்துக் குறள்களை யெழுதியவரும், 'பேராண்மை யென்ப தறுகண் ஒன் றுற்றக்கால், ஊராண்மை மற்றதன் எஃகு' (773) எனக் கூறிய வருமாகிய வள்ளுவர் இத்தகைய நேர்மைக்கும் அருளுக்கும் மாறான செயல்களைக் கண்டிப்பார் என்பது உறுதி. இவை எந்நாட்டிலும் அறவோரால் மறுத்துரைக்கத்தக்க செயல்களே.

அக்கால யூதர் சமூகத்தில் இருந்த குறைகளைத் தீர்க்கதரிசி-களில் பலர் எடுத்துரைத்தனர். வள்ளுவர் எக்காலத்திற்கும் பொருந்-தப் பொதுநீதிகளைக் கூறினாரேயன்றித் தம் காலத்துச் சமூகத்தில் இருந்த துறைகள் இன்னின்ன என எடுத்துக் கூறினாரில்லை. செல்-வர்கள் வறியவரை ஒடுக்குவதையும் சமூகத்தில் செல்வாக்குடையவர். அரசுப் பணியில் உயர்நிலையிலிருப்போர் (அதிபதிகள்) பிறரை ஒடுக்-குவதையும் குறித்துத் தீர்க்கதரிசிகள் பலரின் நூல்களிலும் கூறப் பட்டது. அரசனோ அலுவலரோ வறியவரைத் துன்புறுத்தின் அத் தகைய ஆட்சி அழியும் என எச்சரிப்பதற்காகவே வள்ளுவர்,

அல்லற்பட் டாற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை (555)

என்றார். தீர்க்கதரிசிகளால் குறிப்பிடப்படும் சில தீமைகள் வள்ளுவர்காலத் தமிழகத்தில் இருந்தனவா இல்லையா எனத் தெரிய வில்லை. நீதிமன்றத்தில் உள்ளோரும் அரசுப் பணியில் உயர்நிலையில் உள்ளோரும் கையூட்டுப் பெற்று நீதி தவறினர் எனத் தீர்க்கதரிசி-களின் நூல்களினின்றும் தெரிகிறது. நீதி தவறலாகாது என்பதைப் பல குறள்களில் வள்ளுவர் கூறினார். 'கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்சம், நடுவொரீஇ யல்ல செயின்' (116) எனக் கடுமையாக எச்சரித்தார். ஆனால் கையூட்டுப் பெறும் வழக்கம் அக்காலத்-திருந்ததா எனத் தெரியவில்லை. பொதுவாக,

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
யன்றே யொழிய விடல் (113)

எனக் கூறியதையே கையூட்டுக்கும் பொருந்துவதாகக் கொள்ளலாம். அரசுப்பணியில் உயர்நிலையில் இருப்போர்க்குத் தவறான வழியில் பொருள் சேர்ப்பதற்கு வாய்ப்புகள் பல ஏற்படும் என்பதை

வள்ளுவரும் உணர்ந்தார். அதனாலேயே அமைச்சர் முதலியோர்க்கு வேண்டப்படும் வினைத்தூய்மையைக் குறித்துக் கூறுமிடத்து,

பழிமலைந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை (657)

அழக்கொண்ட வெல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை (659)

சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று (660)

எனப் பல குறள்களால் தவறான வழியில் செல்வத்தைச் சேர்ப்பதனால் தீமையே விளையும் என்பதையும் அவ்வாறு சேர்க்கும் செல்வத்தை விட வறுமையே சிறந்தது என்பதையும் விளக்கினார்.

கடனையும் அதனால் ஏற்படும் துன்பத்தையும் குறித்துப் பழைய ஏற்பாட்டின் பல பகுதிகளிலும் பல கருத்துக்கள் காணப்படுகின்றன. யூதர்கள் யூதர்கட்குக் கடன் கொடுக்கநேர்ந்தால் வட்டி வாங்குதல் ஆகாதென முதலைந்து நூல்களிலுமுள்ள நீதிக்கோட்பாடுகள் கூறின. உபாகமச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்த யோசியா என்னும் அரசன் காலத்தில் மட்டும் அது கடைப்பிடிக்கப் பட்டதோ என்னவோ? யூதர்கள் வரலாற்றில் வேறு எக்காலத்திலும் வட்டி வாங்கலாகாது என்ற ஒரு விதி நடைமுறையில் கடைப்பிடிக்கப் பட்டதாகத் தெரியவில்லை. கி.மு. எட்டாம் நூற்றாண்டில் கடும் வட்டியை வாங்கும் வழக்கமே நாட்டில் இருந்தது. கடனினால் வறியோர் துன்புறுதல், கடன் கொடுத்தோர் நிலத்தையும் வீட்டையும் அடைமானமாகப் பெற்றுக் கொண்டு(கடன் பெற்றோர் உரிய நேரத்தில்கடனைத் திருப்பிக்கொடுக்க இயலா நிலையில் இருந்தால்,சற்றும் கண்ணோட்டமின்றி நிலத்தையும் வீட்டையும் தமக்கே உரிமையாக்கல், வறியவர்கள் உடுக்கும் ஆடையையும் அடகு வைத்துக் கடன் வாங்கும் நிலை, கொண்ட கடனைத் திருப்பிக கொடுக்க இயலாநிலையிலுள்ளோர் அக்கடனுக்காக விற்கப்படுதல் ஆகியவற்றை யெல்லாம் எடுத்துக் கூறித் தீர்க்கதரிசிகள் இந்நிலைமையை எதிர்த்தனர்.

கடனைக் குறித்து வள்ளுவர் யாதொரு நீதியையும் கூறவில்லை. பொதுவாகச் சங்க இலக்கியங்களில் கடன் கொண்டோர் அடையும் துன்பத்தைக் குறித்த குறிப்புக்களையே காணோம். வட்டிக்குக் கடன் கொடுக்கும் வழக்கம் வள்ளுவர்காலத்துத் தமிழ்நாட்டில் இருந்ததா

இல்லையா எனத்தெரியவில்லை. பொது நீதிகளையே கூறினும் தம் சமூகத்திலுள்ள நிலையை உளத்திற் கொண்டே நீதியைக்கூறல் நீதிநூலாசிரியர்க்கு இயல்பு தானியம் முதலிய பொருள்களைக் கடனாகப் பெற்றுப் பின் திருப்பிக் கொடுக்கும் வழக்கம் சங்ககாலத்தில் இருந்தது. அதைக் குறியெதிர்ப்பு என்பர். வள்ளுவரும் இச்சொல்லைப் பயன்படுத்தினார்[2]. இத்தகைய கடனைப் பற்றிய குறிப்பு புறநானூற்றில் காணப்படுகிறது அடைமானமாக வைப்பதற்கு நிலமோ வீடோ யாதுமற்ற நிலையிலேயே பெருஞ்சித்திரனார் உணவுக்குரிய நெல் முதலியவற்றை நெடுநாள் கடனாகப் பெற்றார் எனத் தெரிகிறது[3]. பண்டங்களைக் கடனாகக் கொடுக்கும் வழக்கம் கலித்தொகையிலும் குறிப்பிடப்படுகிறது[4]. பழமொழி முதலிய பிற நீதிநூல்களும் கடன் கொடுத்தோர் கொடுத்த பொருளைத் திரும்பப்பெற அடையுந் துன்பத்தைக் குறித்துக் கூறுகின்றனவேயன்றிக் கடன் கொண்டோர் வட்டிச் சுமையினால் துன்புறுவதைக் குறித்துக் கூறவில்லை[5]. பல்லவர் காலத்தில் நிலம் முதலியவற்றை ஒற்றிவைத்துக் கடன்பெறும் வழக்கம் இருந்ததென்பதைச் சுந்தரர் தம் பாடலில் 'விற்றுக் கொள்ளீர்

2. திருக்குறள் : வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து (221)
3. புறநானூறு, 163 : கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
4. கலித்தொகை, 108 : கண்ட பொழுதே கடவரைப் போலநீ
பண்டம் வினாய படிற்றா றொடீஇயாற்
கொண்ட தெவன்எல்லா யான் ;
5. பழமொழி : கைவிட்ட ஒண்பொருள் கைவர வில்லென்பார்
மெய்ப்பட்ட வஃதே உணர்ந்தா ரால் — மெய்யா
மடம்பட்ட மானோக்கின் மாமயி லன்னாய்
கடாஅ பெற்றான் பெற்றான் குடம் (211)

யாதொரு சான்றுமின்றிக் கடன் கொடுத்தே பொருள் மீண்டு வருதல் இல்லை என அறிவுடையோர் கூறுவர். கடனைத் திரும்பப் பெற விரும்புபவர் பாடிக் குடத்தில் கைவிட்டுத் தான் கொடுத்ததை மெய்ப்பித்துப் பின திரும்பப் பெறவேண்டியிருக்கும்.

கடங்கொண்ட ஒண்பொருளைக் கைவிட் டிருப்பார்
இடங்கொண்டு தம்மினே என்றால்-தொடங்கிப்
பகைமேற்கொண் டார்போலக் கொண்டார் வெகுடல்
நகைமேலுங் கைப்பாய் விடும் (212)

பொருளைப் பிறரிடம் கொடுத்துச் சில காலம் சென்ற பின் அவரிடம் சென்று அப்பொருளைத் திருப்பத் தருக எனக்கேட்டால் அவர் பகைவர் போல வெகுள்வர். அது மனக் கசப்பை உண்டாக்கும்.

ஒற்றியல்லேன் விருப்பியாட் பட்டேன்' (51. 2 தலமுறை) எனவும் ஆபற்காலத்தடிகேளுன்மை ஒற்றிவைத்திங் குண்ணலாமோ' (83. 9. தலமுறை) எனவும் 'ஒற்றியூரேல் உம்மதன்று' (83. 9 தலமுறை) எனச் சிலேடையாகவும் ஒற்றி என்னும் சொல்லைப் பன்முறை பயன் படுத்துவதனால் அறியலாம். பிற்காலச் சோழர் காலத்தில் கம்பர்.

> திடங்கொண்ட ராமபாணம்
> செருக்களத் துற்றபோது
> கடன்கொண்டார் நெஞ்சப்போலக்
> கலங்கினான் இலங்கைவேந்தன்

என்ற உவமையில் கடன் கொண்டோர் துன்பத்தைக் குறித்துக் கூறுவதால் அக்காலத்தில் வட்டி வாங்கும் வழக்கம் தமிழ்நாட்டில் இருந்திருத்தல் கூடும் என ஊகிக்கலாம். ஆயினும் இவை பிற்காலத்து வந்த வழக்கங்களாகவே யிருக்கலாம். சங்ககாலத்தில் அடைமானமாக நிலம் முதலியவற்றைப் பெறுதலும்வட்டியுமின்றித் தானியம் முதலிய வற்றைக் கைமாறாக் கொடுத்தலுமே பெருவழக்காக இருந்தது போலும். தமிழர் சமூக வரலாற்றை ஆய்வோரும் 'வட்டி' என்னும் சொல்லே பிற்காலத்தில்தான் வழக்கில் வந்ததெனவும் கடன் கொடுக்கும் (அல்லது வாங்கும்) வழக்கம் சங்க காலத்தில் அதிகம் இருந்ததா எனத் தெரியவில்லை எனவுமே கூறுகின்றனர்[6].

வட்டியினால் மக்கள் துன்புறும் நிலை வள்ளுவர் காலத்து இல்லாதிருந்திருக்கலாம். அதனாலேயே திருக்குறளில் கடனைக் குறித்த நீதிகளொன்றும் கூறப்படவில்லை போலும். வள்ளுவர், 'பொருள் செயல் வகையில்'.

> அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
> புல்லார் புரள விடல் (755)

எனவும், 'நன்றியில் செல்வத்தில்'

> அன்பொரீஇத் தற்செற்று அறநோக்காது ஈட்டிய
> ஒண்பொருள் கொள்வார் பிறர் (1009)

6. Pillai, K.K., A Social History of the Tamils, Part I,PP. 243-244

"It is not known whether transactions on credit were commonly in vogue. A reference in the Purananuru suggests that loans were taken. Perhaps loans were advanced on the security of commodities. However the word 'vatti' meaning interest, is of latter origin; it does not occur in any of the Sangam classics".

எனவும் பொதுவகையால் கூறியதைக் கொண்டு வறியோரைத் துன்புறுத்திக் கடும் வட்டி வாங்கிச் செல்வம் சேர்க்கும் முறை அவர் அறக் கருத்துக்கு மாறானதே எனக் கொள்ளலாம்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் யூதர்கள் நாட்டில், கையில் பொருளும் இல்லாது கடனைத் திருப்பித் தரவும் இயலாநிலையில் உள்ளோர் கடனுக்காக விற்கப்பட்டனர் எனத் தெரிகிறது. இவ்வாறு கடனுக்காக மக்கள் விற்கப்படுதல் பற்றிய குறிப்புக்களை வரலாற்று இலக்கியங்கள் பலவற்றில் இடையிடையே காணலாம். ஆமோசு இவ்வாறு வறியவர் விலைப்படுதலையும் எதிர்த்தார். முதலைந்து நூல்களிலுள்ள நீதித்தொகுப்புகளைக் கோத்த அறிஞர் மக்கள் அடிமைப்படுவதாகிய தீமையை ஓரளவு குறைக்க எண்ணியே ஒருவன் அடிமையாக விற்கப்பட்டால் ஆறு ஆண்டுகளே தன் தலைவனுக்குப் பணி செய்யவேண்டும்; ஏழாம் ஆண்டு விடுதலை பெற்றுச் செல்லலாம் என விதித்தனர். ஆனால் இவ்விதியும் பெரும்பாலும் நடைமுறையில் கடைப்பிடிக்கப்படவில்லை.

பண்டைத் தமிழ் நாட்டில் அடிமைகள் இருந்தனர் எனப் பலர் கருதுகின்றனர். 'அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்'' (தொல் பொருள்.) என்ற தொல்காப்பியச் சூத்திரத்தில் 'வினைவலர்' என்னும் சொல் ஏவலாளர்களையும் 'அடியோர்' என்னும் சொல் அடிமைகளையும் குறிப்பதாகக் கொண்டு தொல்காப்பியர் காலத்திலேயே மக்களை அடிமைகளாக விற்கும் வாங்கும் வழக்கம் இருந்ததெனச் சில அறிஞர் கருதுகின்றனர்[7]. இன்னும் சிலப்பதிகாரத்தில்,

குடிமுதல் சுற்றமும் குற்றிளை யோரும்
அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி

எனவரும் வரிகளில் 'குற்றிளையோர்' என்னும் சொல் ஏவலாளரையும் 'அடியோர்' அடிமைகளையும் குறிக்கும் என்பர். புறநானூற்றில் வரும் அடியுறை என்னும் சொல்லும் (புறம் 67) அடிமையையே குறிக்கும் என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்[8] ஆனால் அடிமைகளாக விற்கப்பட்டோர் யார், எந்நிலைமையில் விற்கப்பட்டனர்,

---

7. இராகவ ஐயங்கார், மு., தொல்காப்பியப்பொருளதிகார ஆராய்ச்சி, பக்கம் 42;
"ஈண்டு அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும் என்று ஆசிரியர் ஆளுதலால் அவர் காலத்து அடிமை வழக்கம் காட்டில் இருந்தமை பெறப்படுகின்றது. ஏவலாளரை வினைவலர் பாங்கு என வேறு பிரித்தலின் 'அடியோர்' என்பது விற்றுக் கொள்ளத்தக்க அடிமைகளையே குறிப்பதாதல் வேண்டும்."

8. Pillai, K K.,A Social History of the Tamils, Part, I, P. 193

அவர்கள் வாழ்நாள் முழுதும் அடிமைகளாக இருந்தனரா, சில ஆண்டுகள் பணிசெய்து விடுதலை பெற்றனரா என்பன போன்ற விபரங்கள் யாதும்தெரிந்தில. திருக்குறளிலும் அடிமை புகுதல் விற்றல் என்னும் வழக்குகள் பின் வரும் குறள்களில் காணப்படுகின்றன.

ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து (220)

மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் னொன்னார்க்
கடிமை புகுத்தி விடும் (608)

எற்றிற் குரியவர் கயவர்ஒன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து (1080)

ஆயினும் அடிமைகளைக் குறித்தும் வள்ளுவர் நீதி எதுவும் கூறவில்லை. கயவர் விற்றற்குரியர் என்பதனால் பொதுவாக மக்கள்விற்கப்படும் நிலைமையைஅவர்விரும்பவில்லையெனக்கொள்ளலாமேயன்றி, மக்களி சிலர் பிறர்க்கு அடிமையாதல் அறத்திற்கு மாறானதா அடிமைகளை யெவ்வாறு நடத்துதல் வேண்டும், எத்தகையோர் அடிமையாகலாம், யார் யாரை யார் யார் விற்கலாம் (அதாவது தந்தை மகனை விற்கலாமா, கடன் கொடுத்தோர் கடன் பெற்றோரை விற்கலாமா, திருடிப் பிடிபட்டவர் திருடிய பொருளைமுன்பே செலவு செய்து விட்டாரானால் நீதி மன்றத்தோரால்விற்கப்படலாமா போன்றவற்றிற்குரிய விதிகள்) என்பன குறித்து வள்ளுவர் எக்கருத்தையும் தெரிவிக்கவில்லை. யூதர்கள் நாட்டில் இருந்தது போல அடிமைகளைக் கொள்வதும் ஆள்வதும் தமிழ் நாட்டிலும் பெரு வழக்காக இருந்ததா அல்லது எங்காவது ஓரிரு இடங்களில் காணப்பட்ட சிறு வழக்காக இருந்ததா என்பதும் தெளிவின்று. வள்ளுவர் அன்பு, அருள் குறித்துப் பொதுவாகக் கூறியவற்றைக் கொண்டு அடிமைகளையும் அருளோடு நடத்துதல் வேண்டுமெனக் கொள்ளவேண்டுமேயன்றி அது குறித்தும் அவர் யாதும் தனிப்படக் கூறவில்லை.

வணிகர்கள் குறைந்த மரக்காலையும் கள்ளத்தராசையும் பயன்படுத்திப் பிறரை ஏமாற்றித் தாம் இலாபமடைவதை ஆமோசும் மீகாவும் கண்டித்தனர். அக்காலத்தில் வணிகர்கள் இத்தவற்றை அதிகமாகச் செய்தனர்போலும். இந்நிலைமைக்கு மாறாகச்சங்ககாலத் தமிழ்நாட்டில் வணிகர்கள் மிகநேர்மையோடு வாணிகம் செய்தனர் எனவே பட்டினப்பாலை கூறுகின்றது :

நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதூஉம் மிகைகொளாது கொடுப்பதூஉம் குறை
கொடாது
பல்பண்டம் பகர்ந்து வீசும்
தொல்கொண்டித் துவன்றிருக்கை. (பட்.207-212)

வணிகர்கள் நடுவுநிலைமையோடு பொருந்திய நல்ல உள்ளத்தை-யுடையவராய்ப் பழிக்கு அஞ்சி உண்மையையே கூறித் தம் பொருளையும் பிறர் பொருளையும் ஒப்ப எண்ணிக் கொள்ளும்போது அளவுக்கு மீறி அதிகமாகப் பெற்றுக் கொள்ளாமலும் கொடுக்கும்போது குறை-வாகக் கொடுக்காமலும் பல பண்டங்களையும் விற்று வாணிகம் செய்தனர் என இங்குக் கூறப்படுகிறது. வள்ளுவரோ வாணிபத்தில் நேர்மையை

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின் (120)

என ஒரு குறளில் அடக்கினார்.

பத்துப்பாட்டின் காலத்தில் நன்னிலையில் இருந்த தமிழர் சமுதாயத்தில் சிலப்பதிகாரத்தின் காலத்திலேயே பல தீமைகள் புகுந்தன போலும். இக் காவிய காலத்தில் வணிகர்களின் நிலையைக் குறித்து அதிகம் தெரியாவிடினும் வேறு பல வகைகளில் சமூகம் தாழ்ச்சியடைந்த நிலையையே சிலப்பதிகாரமும் மணிமேகலையும் காட்டுகின்றன. சில வகைகளில் இப்பகுதியில் ஆயப்படும் நான்கு தீர்க்கதரிசிகளின் நூல்களில் காட்டப்படும் யூதர் சமுதாயத்தின் நிலை-யும் சிலப்பதிகார மணிமேகலைக் காவியங்களில் காட்டப்படும் தமிழர் சமுதாயத்தின் நிலையும் ஒத்திருப்பதையும் காணலாம்.

தம் காலத்து யூத மக்கள் அளவுக்கு மீறி மது அருந்துவதையும் அதனால் விளையுந் தீமைகளையும் தீர்க்கதரிசிகள் நால்வரும் எடுத்துக் கூறினர். ஆண் பெண் உறவில் ஒழுக்கம் இன்மை நாட்டில் பரவி வருவதை ஓசியா வன்மையாகக் கண்டித்தார். சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகிய நூல்களிலும் கள்ளும் காமமும் பெருந்தீமையாக நாட்டில் பரவியிருந்த நிலையையே காணலாம். மது அருந்து-வதில்லையென நோன்பு மேற்கொண்டிருந்த நசரேயரைப் பிறர் மதுவருந்துமாறு வற்புறுத்துகின்றனர் என ஆமோசு கூறியது போலவே உண்ணா நோன்பியாகிய சமணத்துறவியிடம் சென்று

அவனைக் கள்ளுண்ணுமாறு இரக்கும் களிமகனை மணிமேகலையில் காண்கிறோம்[9]. ஆடவன் நெறி தவறினும் குலமகள் கற்பு நெறியில் நிலைத்திருக்கும் பண்பையே சிலப்பதிகாரமும் அகநானூறு முதலிய சங்க நூல்களும் காட்ட அதற்கு மாறாக ஓசியாவின் நூலில் மனைவி கற்புநெறி தவறினும் கணவனின் அன்பு அவளைக் காக்கும் நிலையே காட்டப்படுகிறது. பண்டைத் தமிழ் நாட்டில் அரசாலும் சமுதாயத்-தாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டபொதுமகளிர் குலமகளிர்என்ற பாகுபாடு இருந்தது.குலமகளிர் மணம்புரிந்து கற்புநெறியோடுவாழ்தற்குரியவர்; பொதுமகளிரோ, ஒருவனை முறைப்படி மணந்து வாழ்வதற்குரியரல்-லர்; பொருள் தந்து ஆதரிக்கும் ஆடவரைச் சேர்தற்குரியவர் என்ற கருத்தும் பெரும்பாலோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது யூத சமுதா-யத்தில் குலமகளிர் பொதுமகளிர் என்ற வேறுபாடு இருக்கவில்லை யூத மகளிர் அனைவரும் மணம் செய்து வாழ்தற்குரியவரே. கானானி-யர் பாகால் தெய்வங்களுக்கு இயற்றிய சிலவிழாக்களின் போது அளவுக்குமீறி மது அருந்துவதும் இருபாலரும் ஒழுக்கம் தவறி நடப்-பதும் அந்நாட்டில் நிலவிய தீமையாகும். கானானியருடன் சேர்ந்து அதே வழிபாட்டு முறைகளைப் பின்பற்றிய யூத ஆடவரும் மகளிரும் கூட அவ்வித ஒழுக்கமின்மையை மேற்கொள்ளத் தலைப்பட்டனர். ஓசியாவின் மனைவியும் இளம் வயதிலேயே தன் தந்தையின் வீட்டில் வாழ்ந்த காலத்திலேயே இவ்வித கானானிய விழாக்களில் ஈடுபட்டுப் பழகியவளாக இருத்தல் வேண்டும். மணமான பின்பும் அவ்வழக்கம் அவளை விடாதிருந்தது. இத்தகைய தவறான வழிபாட்டு முறை களையும் அதனால் நாட்டில் பரவிவரும் ஒழுக்கமின்மையையும் ஓசியா பன்முறை எடுத்துக் கூறிக் கண்டித்தார். சிலப்பதிகாரமும் மணிமே கலையும் காட்டும் காலம் தமிழ் நாட்டில் தொழிலிலும் வாணிபமும் ஓங்கச் செல்வம் செழிந்திருந்த காலம். எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதி யூதர்கள் நாட்டில் அத்தகைய செல்வச்செழிப்பு மிக்க காலமே.செல்வம் மிகுந்த நிலையில் கள்ளிலும்காமத்திலும் ஈடுபடுவது பல நாடுகளில் பல காலங்களில் நிகழக் காணும் தவறேயாகும். நாட்டுக்கும் சமூகச் சூழ்நிலைக்கும் ஏற்றபடி வேறுபாடுகளும் காணப்-படுகின்றன.

வள்ளுவர் தம் காலத்துப் பலர் கள்ளுண்டு களித்தலைக் கண்டே கள்ளுண்ணாமை என்னும் பத்தை எழுதியிருத்தல் வேண்டும் கள்-ளுண்பவர் பிறரின் நன்மதிப்பை யிழத்தலையும் நல்லறிவும் நாணும்

9. மணிமேகலை, மலர் வனம் புக்க காதை, 86-103

அவர்களைவிட்டு நீங்குவதையும் எடுத்துக்கூறிக் கள்ளுண்ணுதலை விட்டு விலகுமாறு கற்பித்தார். அவர் வரைவின் மகளிர் என்ற பத்தில் நல்லறத்தைக் கடைப்பிடிக்கவிரும்புவோர் பொதுமகளிரைச் சேர்த-லாகாது என்றார். குலமகள் கற்பு நெறியை மீறினாள் என இலக்கியங்களில் காட்டுவது தமிழர் மரபு அன்றெனினும் நாட்டில் அத்தகைய தவறுகளும் ஓரளவு நிகழ்ந்ததனாலேயே வள்ளுவர் பிறனில் விழை-யாமை என்னும் அதிகாரத்தை எழுத நேர்ந்திருத்தல் வேண்டும். இவ்வாறு ஆடவர்க்கும் மகளிர்க்கும் கற்பைக் கற்பித்தார் வள்ளுவர். வேசித்தனமும் திராட்சை ரசமும் மதுபானமும் இருதயத்தை மயக்கும்'' (4. 11) என்ற ஓசியாவின் கூற்றை,

> இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
> திருநீக்கப் பட்டார் தொடர்பு (920)

என்ற குறளுடன் ஒப்பிடலாம்.

கி மு. எட்டாம் நூற்றாண்டு யூதர்கள் நாட்டில் செல்வம் மிகுந்த காலமாக இருந்தும் அச்செல்வம் சிலர் கையிலேயே திரளப்பலர் வறுமையினால் வாடினர் என்பதைத் தீர்க்கதரிசிகளின் நூலினின்றும் அறிகிறோம். சிலர் பெருஞ்செல்வராயும் சிலர் மிகவறியராயும் இருந்த நிலைமையே தமிழ் நாட்டில் மணிமேகலையின் காலத்திலும் இருந்த-தென்பதை வறியோர் துன்பத்தைக் குறித்து அக்காவியத்தில் பன்முறை கூறப்படும் கருத்துக்களினின்றும் அறியலாம்.

> வித்தி நல்லறம் விளைந்த அதன்பயன்
> துய்ப்போர் தம்மனைத் துணிச்சித ருடுத்து
> வயிறுகாய் பெரும்பசி யலைத்தற் கிரங்கி
> வெயிலென முனியாது புயலென மடியாது
> புறங்கடை நின்று புன்கண் கூர்ந்துமுன்
> அறங்கடை நில்லா தயர்வோர் பலரால் (பாத். 108-113)

என்னும் வரிகளும் பசியின் கொடுமையைக் குறித்துக் கூறப்படும் கருத்துக்களும் (பாத் 76-80) பிறவும் சான்றாம். சங்க மருவிய காலத்தில் தோன்றியதாகக் கருதப்படும் நாலடியாரும் செல்வர்க்கும் வறியர்க்கும் உள்ள பெரும் வேறுபாட்டைக் காட்டுகிறது.

> அகத்தாரே வாழ்வார்என் றண்ணாந்து நோக்கிப்
> புகத்தாம் பெறாஅர் புறங்கடை பற்றி
> மிகத்தாம் வருந்தி யிருப்பாரே மேலைத்
> தவத்தால் தவஞ்செய்யா தார் (31)

என்பது போன்ற பாடல்கள் பொருள் நிலையில் மக்களிடையே இருந்த பெரும் ஏற்றத்தாழ்வையே காட்டும். அக்காலத் தமிழ் நாட்டில் பொருள் நிலையில் இவ்வளவு வேறுபாடு இருந்ததற்குக் காரணங்கள் என்ன என்பது தெளிவாகத் தெரியவில்லை. மணிமேகலை யாசிரியரும் மேற்காட்டப்பட்ட நாலடியார்ச் செய்யுளை யியற்றியகவிஞரும் கூறும் காரணம் அது அவ்வவர் முற்பிறவியிற் செய்த வினையின் பயன் என்பதே. வறுமையின் காரணத்தை அவர்கள் சமூகவியல் நோக்குடன் ஆராயவில்லை.

வள்ளுவர் காலத்திலும் வறுமையினால் மிகவும் வருந்தியவர்கள் பலர் இருந்தனர் என்பதை நல்குரவு, இரவு, இரவச்சம் என்னும் அதிகாரங்கள் காட்டும். இவ்வதிகாரங்கள் வறுமையினால் வரும் விளைவுகளைக் கூறினவேயன்றி வறுமையின் காரணங்களைக் கூற. வில்லை 'இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின் நிலமென்னும் நல்லாள் நகும்' (1040) என வள்ளுவர் பிற இடத்துக் கூறுவதனால் முயற்சியின்மையினால் சிலர் வறியவராயிருந்தனர் என ஊகிக்கலாம். பொருள் நிலையில பெருவேறுபாட்டிற்கு அதுமட்டும் காரணமாக இருந்திருத்தல் இயலாது.

அறத்தா றிதுஎன வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை (37)
இலர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர் (270)

என்ற குறள்கள் வள்ளுவரும் சென்ற பிறவியில் மக்கள் மேற்கொள்வதற்குரிய அறத்தையோ நோன்பையோ செய்யாமையே அவர்கள் இப்பிறவியில் வறியவராயிருத்தற்குக் காரணம் எனக் கருதினார் என்று எண்ணும்படி அமைந்துள்ளன. இதில் இரண்டாவதாகக் காட்டப் பட்ட குறளுக்குப் பலர் பலவிதமாகப் பொருள் கொள்வர். தற்காலத்தில் சிலர் 'எவன் தன் தேவைக்கு மேற்பட்டவற்றை அனுபவிக்கிறானோ அல்லது சேமித்து வைக்கிறானோ அவன் பிறருக்குரியதை அபகரித்தவன் ஆவான்' என்ற காந்தீயக் கொள்கையை யுளத்திற் கொண்டு 'தம் தேவையளவோடு பொருள் சேர்ப்பதை நிறுத்திக் கொள்பவர் (நோற்பார்) சிலரே; தேவையளவை மீறி அதிகமாகப் பொருள் சேர்க்க விரும்புபவர்களே (நோலாதவர்) பலராவர்; இதுவே பலர் வறியராயிருப்பதற்குக் காரணம்'. அதாவது சமூகத்தில் பலர் அளவுக்கு மீறிப்பொருள் சேர்ப்பதனால் வேறு பலர் வறுமையால் வருந்தும்படி நேரிடுகின்றது எனப் பொருள் கொள்வர். வள்ளுவர்

இச்கருத்தை யுளத்திற் கொண்டு எழுதியிருக்க முடியுமா என்பது ஐயத்திற்குரியதே. பொதுவாக வினைத்தொடர்பில் நம்பிக்கையுடைய ராய வள்ளுவர் தம் காலத்துப் பரவியிருந்த கருத்துக்கேற்ப வறுமை நல்வினையின்மையின் பயன் எனக்கருதியிருக்கலாம் என்றே தோன்று கிறது.

சென்ற பிறவியிலும் மறுபிறவியிலும் நம்பிக்கையில்லாத யூதர் நாட்டு அறவோர்களோ சமூகவியல் நோக்குடனேயே வறுமையின் காரணத்தை ஆராய்ந்தனர். உடைமையினின்றும் விலகி யுறைந்த நிலக்கிழார்கள் (Absenteelandlords) நிலத்தில் வேலை செய்பவர்களுக் குப் போதிய ஊதியமின்றி விளைபொருளில் பெரும்பகுதியைத் தாமே பெற்றுக் கொள்வதனாலும் வட்டிக்குக் கடன் கொடுக்கும் வழக்கத்தி-னாலும் வணிகர்களின் நேர்மையின்மையினாலும் வறியோர் மேலும் மேலும் வறுமையிலழுந்தி வாடும் நிலை ஏற்பட்டதைத் தீர்க்கதரிசிகள் தெளிவாக எடுத்துக்கூறினார். மற்றும்பெற்றோரை யிழந்த சிறுவர்கள் விதவைகள் முதலியோர் இயல்பாக வறுமையினால் வருந்த நேரிடுவ-தனையும் உணர்ந்து ஏசாயா முதலியோர் அவர்கள் துன்பத்தை யெடுத்துச்சொல்லியவர் சார்பாகவும் பேசினர்.

அக்கால யூத சமுதாயத்தில் காணப்பட்ட தீமைகள் சில தமிழ் நாட்டில் சங்க காலத்திலும் சங்க மருவிய காலத்திலும் இல்லாதிருந்-திருக்கலாம். வறுமையினால் பலர் வருந்தியதற்குக் காரணமாக ஏதோ குறைகள் இருந்திருக்க வேண்டும். பண்டைத் தமிழ் நாட்-டிலும் தம் நிலத்தில் பிறர் வேலை செய்யத் தாம் பிற இடங்களில் உறைந்த நிலக்கிழார்கள் இருந்தனர் எனத் தெரிகிறது ஆனால் நிலத்தில் வேலை செய்தோர் எவ்வளவு ஊதியம் பெற்றனர் எவ்வித ஒழுங்கின்படி நிலத்தையுழுது பயிர் செய்தனர் என்பன தெரிந்தில[10]. இத்தகைய நிலக்கிழமை முறையை (Absentee landlordism) விரும்-பாததனால் தானோ என்னவோ வள்ளுவர்,

> செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
> இல்லாளின் ஊடி விடும் (1039)

என்றார்.

---

10. Pillai, K.K., A Social History of the Tamils, Part I, p. 193-4:

"But, besides them, there were various types of obsentee landlords. ......... But there is no means of knowing the exact terms of the employment of labourers ...... Probably as distinguished from slaves, there were independent labourers who were engaged for specific services. Nor do we have a clear picture of the terms of tenancy."

மணிமேகலையில் ஆபுத்திரன்.

> காணார் கேளார் கால்முடப் பட்டோர்
> பேணுநரில்லோர் பிணிநடுக் குற்றோர்
> யாவரும் வருக. (ஆபு 111-113)

என அழைத்து உணவளித்தனன் எனக் கூறப்படுவதனால் உடற் குறையுள்ளோரும் வலிமையற்றோரும் ஆகிய பலர் அக்காலத்து இரந்து வாழ்ந்தனர் எனத் தெரிகிறது. அத்தகையோரை ஆதரித்துக் காக்க வேண்டும் என்றபொறுப்புணர்ச்சி சமூகத்தில்இல்லை போலும். வள்ளல்கள் பலர் வாழ்ந்து கவிஞரை மட்டுமின்றி ஆதுலர்களையும் ஆதரித்த காலம், 'சோறுடைக் கையர் வீறுவீறியங்க' வறியோர்க்கு உணவளித்துக் காத்த பசிப்பிணி மருத்துவன் பண்ணன் (புறம் 178) போன்றோர் வாழ்ந்த காலம் போய் வறியவர் ஆதரவற்று அலைந்த நிலைமையேமணிமேகலையில் காணப்படுகிறது. புறநானூறு, பத்துப்பாட்டு போன்ற சங்கநூல்களில் காணப்படும் சமுதாயநிலையைவிடப் பலவகைகளில் தாழ்ச்சி யடைந்தநிலையைமணிமேகலை காட்டுகிறது. வள்ளுவர் வாழ்ந்த காலம் இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட காலமாக இருத்தல் கூடும். வள்ளுவர் காலத்தில் மிக வறியவரும் இருந்தனர். இரப்பார்க்கு ஈயாது கரப்போரும் இருந்தனர். ஈந்துஒப்புரவு செய்யும் சான்றோரும் இருந்தனர். ஆயினும்,

> ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
> வைத்திழக்கும் வன்க ணவர் (228)

என்ப போன்ற குறள்களை நோக்க வள்ளுவர் காலத்திலேயே தமிழ் நாட்டில் ஈகைத்தன்மை குறைந்துகொண்டுவந்ததெனவே தோன்றும்.

இனி, யூதர்கள் நாட்டில் இல்லாத சில தீமைகள் பழந்தமிழ் நாட்டில் இருந்தன சங்க காலத்திலேயே சாதி வேறுபாடு ஓரளவு பாராட்டப்பட்டு வந்தது எனத் தெரிகிறது. சிலரைத் தாழ்ந்த குலத்தவராகக் கருதும் வழக்கம் அக்காலத்திலேயே ஏற்பட்டு விட்டதென்பது இழிபிறப்பாளன், இழிசினன் என்ற சொற்கள் சங்க இலக்கியங்களில் காணப்படுவதால் புலப்படும் 11. சில சில குலங்களில் பிறந்தவர் சில சில தொழில்களையே செய்ய வேண்டும் என்ற நியதி அக்காலத்திலேயே ஓரளவு ஏற்பட்டுவிட்டதனால் தாழ்ந்த குலத்தோராகக் கருதப்பட்டோர்க்குப் போதிய வேலை வாய்ப்புக்கள் இல்லாதிருக்கலாம் இதுவும் வறுமைக்கு ஒரு காரணமாக இருந்திருக்

11. Pillai K K., A Social History of the Tamils, part I, P. 235

கலாம் இந்நிலையில் வள்ளுவர், 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா, செய்தொழில் வேற்றுமை யான்' (972) எனக் கூறிப் பிறப்பில் ஏற்றத் தாழ்வு இல்லை யெனப் போதித்தார். ஆயினும் மேற்குலங்களில் பிறந்தோர் இயல்பாக நற்குணங்களையுடைய-வராயிருப்பர் என்ற கருத்தை வள்ளுவரும் ஏற்றுக் கொண்டார் என்பதைக் குடிமை என்னும் அதிகாரத்தினின்றும் அறியலாம்.

வள்ளுவர் காலத் தமிழ் நாட்டில் வட்டிக்குக் கடன் கொடுத்துப்-பொருள் சேர்க்கும் வழக்கம் இருக்கவில்லை யெனக் கண்டோம். ஆனால் அதற்குப் பதிலாகப் பொருளில் ஆசைமிகுந்தவர் சிலர் பெரும் பொருளைச் சேர்த்து, அதைத் தாமும் அனுபவிக்காது பிறருக்கும் அளிக்காது, தொழில் வாணிபம் முதலியவற்றில் ஈடுபடுத்தவும் செய்-யாது வீணே சேமித்து வைத்து அதைப்பார்த்து மகிழ்ந்து வந்தனர் எனத் தோன்றுகிறது இவ்வாறு செல்வம் சிலரிடம் முடங்கிக் கிடப்பதனாலும் நாட்டில் பொருளியல் வளர்ச்சி தடைப்பட்டு வறுமை பெருக ஏதுவாகியிருக்கலாம் 'நன்றியில் செல்வம்' என்ற அதிகாரத்தில் வள்ளுவர் இவ்வாறு பொருளை எவ்விதத்திலும் பயன்படுத்தாது வீணே சேர்த்து வைத்தலின் தீமையையே விளக்கினார். நாலடியாரும் ஈயாமை என்னும் அதிகாரத்தில் செல்வத்தைச் சேர்த்து வைத்துப் பயனிழக்கும் பேதைமையைக் கண்டிக்கின்றது.

வள்ளுவர் காலத்தில் சூதாடிப் பொருளையும் நேரத்தையும் விரயம் செய்தோரும் இருந்தனர் என்பதைச் சூது என்னும் பத்தினின்றும் உணரலாம். அதுவும் சிலர் வறுமையுற்று வருந்து வதற்குக் காரணமாக இருந்திருத்தல் வேண்டும். பழைய ஏற்பாட்டில் சூதாட்டத்தில் ஈடுபடலாகாது என்ற விதிகளோ போதனைகளோ இல்லையாகையினால் சூதாட்டத்தில் ஈடுபடும் வழக்கம் அக்கால யூதர் களிடையே இல்லை என ஊகிக்கலாம். பொதுநீதிகள் பல எந்நாட்ட வர்க்கும் பொதுவாக இருப்பினும் தம் சமூகத்தில் எவ்வகைத் தீமைகள் காணப்படுகின்றன என்பதை யுளத்திற்கொண்டு அவற்றை நீக்க விரும்பியே அறவோர்கள் நீதிக்கருத்துக்களை எடுத்துரைக்கின்றனர்.

ஓசியா கூறிய அரசியல் நீதி நாட்டில் முக்கிய பதவிகளில் இருப்போர் தலைமையுடையோர் அரசனுக்கு மாறாகச் சூழ்ச்சி செய்-வதனால் விளையும் தீமை குறித்ததே. இந்நிலை பழந்தமிழ் நாட்டில் காணப்படாததொன்று. அமைச்சர்களோ படைத்தலைவர்களோ அடுப்பைப் போல் அனலாகி அரசனைக் கொல்ல வகை தேடியதாகச்-

சங்க இலக்கியங்களில் செய்திகள் இல்லை. ஆயினும் வள்ளுவர் உட்பகையென்ற பொருளில் பத்துக் குறள்களை எழுதி அரசர், தம்மொடு நெருங்கிப் பழகித் தம்மைச் சார்ந்தவர்போல் ஒழுகிப் பின் தமக்கு மாறாகச் சூழ்ச்சி செய்யக்கூடியவரிடத்து எத்தகைய எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும் என விளக்கினார். 'வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக கேள்போல் பகைவர் தொடர்பு' (882) என்றார். பிற்காலத்து நூலாகிய சீவகசிந்தாமணியே அமைச்சர் முதலியோர் அரசனுக்கு மாறாக எழுவதன் தீமையைத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது சந்திரனில் உள்ள களங்கம் சந்திரன் வளர வளர்ந்து தேயத் தேய்வது போல உயர்விலும் தாழ்விலும் அரசன் சார்பாக நின்று பணிசெய்ய வேண்டியவனே அமைச்சன், அவ்வாறு செய்யின் சந்திரன் ஒளி வீசுவது போல் நாட்டுக்கு நன்மை செய்பவன் ஆவான். அமைச்சன் அரசனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றினால் இயற்கை வளம் குன்றும், நாட்டில் விளைபொருள் கெட மக்கள் பசியினால் வாடுவர், அறங்கள் அனைத்தும் கெடும், பெண்களின் கற்புநிலையும் கெடக் குடும்பவாழ்க்கையும் குலையும் எனச் சீவகசிந்தாமணி கூறுகிறது[12]. ஓர் அரசனைக் கொன்று மற்றொருவன் அரசனாக அவனைக் கொல்லப் பிறிதொருவன் வகைதேடி இவ்வாறு அரசியல் குழப்பங்கள் ஓசியா காலத்து ஏற்பட்டதனால் நாடும் சீர் கெட்டு வருவதையே அவரும் எடுத்துக் கூறினார்.

ஏசாயா கூறிய அரசியல் கருத்துக்கள் பெரிதும் வெளிநாட்டுக் கொள்கை குறித்தனவே. யூதர்கள் நாடு அசீரியர், எகிப்தியர் முதலிய எவரையும் சாராது விலகி நிற்க வேண்டும் எனவே அவர் விரும்பினார் உண்மையில் அக்காலத்து வெளி நாட்டுறவு யூதர்கட்கு இறுதியில் தீமையாகவே முடிந்தது. சீரியரை எதிர்க்க யூத அரசர்கள் அசீரியரின் துணையை நாடினர். அவர்கள் அதிகத் திறைப் பொருள் கேட்டு ஆதிக்கம் செலுத்த முயலவே அவர்களை யெதிர்க்க பாபிலோனியர்களின் துணையை நாடினர். பாபிலோனியர் யூத நாட்டைத் தாக்கிய போது எகிப்தின் உதவியை எதிர்பார்த்தனர். அசீரியரும் பின்புபாபிலோனியாரும் தத்தம் ஆட்சியைப் பெருக்குவதிலேயே குறியாயிருந்தனர் அன்றிச் சிறிய நாடாகிய யூதர் நாட்டில் நலத்தைக் கோரினாரில்லை. எகிப்துஅந்நாடுகளை எதிர்க்கயூத நாட்டைத் தூண்டி விட்டுத் தன் நன்மைக்காக அவர்களைப் பயன்படுத்திக்கொள்ள முனைந்ததேயன்றி எகிப்தும் போதிய உதவி செய்யவில்லை ஓரமையம் அசீரியர்

12. சீவக சிந்தாமணி, 253—255

எருசலேம் நகரை முற்றுகையிட்டபோது முற்றியிருந்த அசீரியர் படைத் தலைவன் மதிலின் மேலிருந்த யூதர்களை நோக்கி 'நெரிந்த நாணலாகிய அந்த எகிப்தையா நம்புகிறீர்கள்?' என்று கேட்டதாக 'இராஜாக்கள்' கூறுகிறது (II இரா. 18. 21). இறுதியில் எகிப்தின் நட்பு யூதர்கட்கு அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பாகவே முடிந்தது

அரசர்கள் பிற அரசரோடு நட்புக் கொள்ளும்போது எவ்வளவு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்பதைக் காட்டவே வள்ளுவர் நட்பு, நட்பாராய்தல், தீ நட்பு, கூடா நட்பு என ஒவ்வொரு பொருள் குறித்தும் தனித்தனியே பத்துக் குறள்கள் எழுதினார். 'ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை, தான் சாந்துயரம் தரும்' (792) என்றார் அவர். பொது நீதிகளைக் கூற வந்த ஆசிரியராகியவள்ளுவர் உலகியலறிவோடு பொருந்த நீதி கூறினார். ஏசாயாவும் ஒசியாவுமோ சமய உணர்ச்சி மிகுந்தவர்களாகஇருந்ததனால்பிறநாடுகளைநம்பாது யாவேயையே நம்புங்கள் எனப் போதித்தனர்.

### 4.2.2. இத்தீர்க்கதரிசிகளின் கடவுட் கொள்கை

இங்கு நீதிக்கருத்துக்கள் பிரித்து ஆயப்பட்டனவே யன்றித் தீர்க்கதரிசிகள் நீதிகளைத்தனியேகூறினாரல்லர். நீதிகளனைத்தையும் தங்கள் கடவுட் கொள்கையுடன் இணைத்தே எண்ணினர், பேசினர். கடவுள் மக்கள் வாழ்க்கையைக் கவனிக்கிறார். அநீதியை அவர் விரும்பவில்லை அளவுக்கு மீறி மதுவருந்துதல், ஒழுக்கமின்மை போன்ற மக்கள் நல்வாழ்க்கையைக் குலைக்கத்தக்க தீமையை அவர் விரும்பவில்லை யென்ற கொள்கையை யுளத்திற் கொண்டே அவர்கள் நீதிகளைக் கூறினர். அத்துடன் யூதர்கள் இறைவனின் சேவைக்கெனச் சிறப்பாகத் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், ஆகவே அவர்கள் நல்வாழ்க்கையிலும் பக்தியிலும் சிறந்து விளங்க வேண்டும்என்றகருத்தும் அவர்களுள்ளத்தில் இருந்தது தம் குல முன்னோனாகியமோசேயுடன் கடவுள் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார் எனவும் அவர்கள் நம்பினர். அவ்வுடன்படிக்கையின்படி யூத மக்கள் சில மரபுகளின்படி வழிபாடியற்றவும் வேண்டும், வாழ்க்கையில் நீதியையும் ஒழுக்கத்தையும் கைக்கொள்ள வேண்டும், இவ்வுடன்படிக்கையை மீறியதனாலேயே நாட்டில் பல தீமைகள் புகுந்தன என அவர்கள் கருதினர்.

கடவுள் வாழ்த்து என்னும் பகுதியில் இறைவனை 'அறவாழி அந்தணன்' என வள்ளுவர் குறிப்பிடுவதிலிருந்து அறத்துக்கும் இறைவனுக்கும் தொடர்புண்டு என்பது புலப்படுமாயினும் பிற இடங்

களிலெல்லாம் அவர் நீதியை மட்டும் கூறினாரேயன்றி அதைக்கடவுட் கொள்கையுடன் தொடர்புபடுத்தவில்லை. அதாவது கடவுள் இதை விரும்புகிறார், இதைவிரும்பவில்லை, இதைக்கண்டுமகிழ்கிறார், இதைக கண்டு சினம் கொள்கிறார் எனக் கூறவில்லை.

தீர்க்கதரிசிகள் மக்கள் வாழ்வில் காணப்பட்ட தவறுகளை நாட்டில் பரவி வந்த தீமைகளை அநீதிகளைஎடுத்துக்கூறும்போதெல்லாம், 'யாவே இவற்றை விரும்பவில்லை. இவற்றின் நிமித்தம் யாவே உங்களை ஒறுப்பார்' எனக் கூறி எச்சரித்தனர்.

தேவகோபம் அல்லது இறைவனின் தண்டனையென்ற கருத்து திருக்குறளில் அடியோடு இல்லாமலில்லை.

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை யறம் (77)
மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு (204)

என்னும் குறள்கள் நோக்கத்தக்கன. ஆயினும் வள்ளுவர் இங்குத் தாம் கடவுள் வாழ்த்தில் பயன்படுத்திய பகவன், இறைவன் என்னும் சொற்களைப் பயன்படுத்தாது அறம் என்ற சொல்லையே பயன்படுத்தினார். அன்பின்மை அல்லது தீமை தானே தீயபயனைவிளைவிக்கும் எனக் கருதினாரா அல்லது அது இறைவனின் செயல், ஒறுப்பவன் அவனே எனக் கருதினாரா என்பது தெளிவின்று. சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகிய காவியங்களில் நல்வினையும் தீவினையும் தாமே பயன் விளைவிக்கும் என்ற கருத்தே காணப்படுகிறது. வள்ளுவரும் அவ்வாறு கருதியிருக்கலாம். நன்மையும் தீமையும் தருபவர் கடவுளே என யூதர்கள் கருதினர்.

இறைவனின் மீயுயர்வு வாய்ந்த நிலையை (Transcendance) மக்களால் எளிதில் அணுக முடியாத தூய்மையை (Holiness) ஏசாயா சிறப்பாக உணர்ந்து கறபித்தார். வள்ளுவரும் இறைவனை வாலறிவன் (தூய அறிவினையுடையவன்) என்றார். ஆயினும் தூய்மை என்பதற்கு இருவரும் உளத்திற் கொண்ட பொருளில் வேறுபாடு உண்டென்பது இருவரின் நூல்களையும் முழுவதும் படித்து ஆயும்போது புலனாகும். உலக நிகழ்ச்சிகட்கு அப்பாற்பட்ட நிலையில் இறைவன் தூயவராக இருக்கிறார் என வள்ளுவர் கருதியதாகத் தோன்றுகிறது. வேதாந்த நூல்களிற் கூறப்படுவதுபோல வள்ளுவர் இறைவனை நிர்க்குணன்

என்றோ அறத்துக்கும் அறமல்லாதவற்றிற்கும் அப்பாற்பட்டவனென்றோ கருதவில்லை யென்பது 'அறவாழி அந்தணன்' 'எண்குணத்தான்' என்ற சொற்களை அவர் பயன்படுத்துவதனால் புலப்படும். 'வேண்டுதல் வேண்டாமை யிலான்' (4) 'பற்றற்றான்' (350) என்ற தொடர்களையும் அவர் இறைவனைக் குறிக்கப் பயன்படுத்துவதனால் 'இறைவன் இவ்வுலக நிகழ்ச்சிகளைக் குறித்து இன்பமோ துன்பமோ அல்லது காய்வோ உவப்போ இல்லாதவராய் இவற்றால் பாதிக்கப்படாதபற்றற்றதூய நிலையில்உள்ளார்'என அவர்கருதினார் என்றே தோன்றும். தீர்க்கதரிசிகளோ யாவே இவ்வுலக நிகழ்ச்சிகளைக்குறித்து இன்பமும் துன்பமும் அடைகிறார். காய்தலும் உவத்தலும் உடையவராயிருக்கிறார், ஆயினும் தூயவராயிருக்கிறார் எனக் கற்பித்தனர்.

இறைவன் தூயவராயிருப்பதனால்மக்கள் செய்யும் தீமைகளைக் காய்தலுடன் நோக்குகிறார்என எசாயா கற்பித்தார். யாவேயூதர்களை ஒறுப்பார் ஆயினும் அவர் அவர்களை முற்றாகக் கைவிடுவதில்லை யென அவர் நம்பினார். பகைவரால் நாடு அழிந்தாலும் பின் ஒரு நற்காலம் வரும் ஒரு நல்லரசன் தோன்றுவான், அவன் தேவ சித்தத்தின்படி நாட்டை யாள்வான், அது தீமையில்லாத பொற்காலமாக இருக்கும் என அவர் கனவு கண்டார் அவர் கனவு எவ்வளவு தூரம் நிறைவேறிற்றோ? ஆயினும் கடவுள் உலகநிகழ்ச்சிகளினின்றும் விலகியவராக இராமல் தம் சித்தத்தை இவ்வுலக வாழ்க்கையிலேயே நிறைவேற்றக் காத்திருக்கிறார் எனத் தீர்க்கதரிசிகள் நம்பினர் என்பதே இங்குக் கருதத்தக்கது

ஆமோசு தம் நூலின் நான்காம் அதிகாரத்தில்இயற்கையினால் மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்களை இறைவனின் தண்டனையாகக்கூறி ஒவ்வொன்றின் பின்னும் 'ஆகிலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பாமல் போனீர்கள்'என யாவேயின் கூற்றாகக் கூறும்போது மக்கள் தம்மிடம் திரும்ப வேண்டுமென ஆவலாகக் காத்திருக்கும் இறைவனின் அருள் நோக்கத்தையே காணலாம்.

ஓசியா என்னும் நூலின் பதினோராம் அதிகாரம் தீமைகளனைத்தையும் காயும் இறைவனின்தூய்மையையும் அந்நிலையிலும்மாறாமலிருக்கும் ஆழ்ந்த அன்பையும் தெளிவாகக் காட்டுகிறது இஸ்ரவேல் சமூகத்தில் மலிந்திருந்த தீமை காரணமாக நாடு அசீரியர்களால் அழியும் எனக்கூறிய தீர்க்கதரிசி'இஸ்ரவேலே நான்உன்னைஎவ்வாறு

கைவிடுவேன்; என் உள்ளம் கலங்குகிறது; இரக்கம் என்னுள்ளத்தில் பொங்குகிறது, உன்னை முற்றாக அழிக்க மாட்டேன், நான் வருவது அழிப்பதற்காக அன்று'[13] என யாவே கூறுவதாகக் காட்டி இஸ்ரவேல் இனத்தவர் இறைவனால்ஒறுக்கப்பட்டுநல்வழியில் சேர்க்கப்படுவார்களே யன்றி அழிக்கப்படமாட்டார்கள் என்றார்

பழைய ஏற்பாடு காட்டும்கடவுளைஎவ்விதத்திலும் பற்றற்றான் எனக் கூறுமாறில்லை அதற்கேற்பத் தீர்க்கதரிசிகளும் தாம் பற்றற்றவர்களாக வாழவேண்டுமென எண்ணவில்லை. யூத தீர்க்கதரிசிகள் துறவிகளல்லர். துறவறம் எனினும் ஓர் அறத்தை அவர்கள் கற்பிக்கவும் இல்லை.

இனி இத்தீர்க்கதரிசிகளின் கருத்துக்கள் சில நம்நாட்டில் பல்லவர் காலத்தில் தோன்றிய பக்திக் கவிஞர்களின் கருத்துக்கள் சிலவற்றுடன் ஒத்திருப்பதைக் காணலாம். தாம் இறைபணியில் நின்று பேசுவதாகக் கூறிய ஆமோசு, 'கர்த்தராகிய ஆண்டவர் பேசுகிறார், யார் தீர்க்கதரிசனம் சொல்லாதிருப்பான்?' (ஆமோசு 3.8) எனக் கேட்பதை,

பாட்டுவித்தால் யாரொருவர் பாடா தாரே
பணிவித்தால் யாரொருவர் பணியா தாரே
காட்டுவித்தால் யாரொருவர் காணா தாரே
காண்பார் ஆர் கண்ணுதலாய்க் காட்டாக் காலே
(309. 3 தலமுறை)

என்னும் திருநாவுக்கரசரின் கூற்றுடன் ஒப்பிடலாம்.

---

13. இப்பகுதிக்கும் தமிழ்மொழிபெயர்ப்புஅவ்வளவுதெளிவாகஇல்லை, புதியஅமெரிக்க மொழி பெயர்ப்பு வருமாறு :

How can I give you up Ephraim
How can I hand you over O Israel
How can I make you like Admah
How can I treat you like Zeboim
My heart recoils within me
My compassions grow warm and tender
I will not again destroy
for I am god and not man
the Holy one in your midst
and I will not come to destroy.

(அத்மா, செபோயீம் என்பன நில அதிர்ச்சியினாலோ வேறு இயற்கை ஆற்றலினாலோ அழிந்த நகர்களின் பெயர்கள்.)

இந்நான்கு தீர்க்கதரிசிகளுமே கடவுள் வெளியே செய்யப்படும் வழிபாடுகளையல்ல உள்ளத்தில் உள்ள அன்பையே விரும்புகிறார் என்பதைப் பன்முறை கூறினர். இதுவும்,

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார் சடைப்புண்ணியன்
பொக்கு மிக்கவர் பூவும் நீரும் கண்டு
நக்கு நிற்பன் அவர் தம்மை நாணியே

(294.9 தலமுறை)

எனக் கூறிய நாவுக்கரசரின் கருத்தை யொத்ததேயாகும். நம் பக்திக் கவிஞர்களைப் போலவே தீர்க்கதரிசிகளும் உவமைகளையும் உருவகங்களையும் அடிக்கடி பயன்படுத்தினர். ஓசியா உழவுத் தொழிலை நோக்கிக் கூறும் ஓர் உருவகம் வருமாறு:

''நீங்கள் நீதிக் கென்று விதைவிதையுங்கள்; தயவுக் கொத்தாய் அறுப்பு அறுங்கள்; உங்கள் தரிசு நிலத்தைப் பயன்படுத்துங்கள்; கர்த்தர் வந்து உங்கள் மேல் நீதியை வார்க்கப்பண்ணுகிற மட்டும் அவரைத் தேடக் காலமாயிருக்கிறது'' (ஓசி. 10-12).

பின்வரும் திருநாவுக்கரசரின் திருநேரிசைச் செய்யுள் இத்துடன் ஒப்பிடத்தக்கது.

மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையுள் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகில்
சிவகதி விளையு மன்றே (284.2 தலமுறை)

இன்னும் சமூகத்தில் ஆதரவற்ற நிலையில் உள்ளவர்களின் நலனைக் கடவுள் கவனிக்கிறார். அத்தகையோரிடத்து அவர் அருள் சிறப்பாகச் செல்கிறது என ஏசாயா கூறியதற்கேற்ப நாவுக்கரசரும்;

உற்றாரிலாதார்க்கு உறுதுணையாவன ...... ...

...... ...... ...... ...... ...... ...

அற்றார்க்கு அரும்பொருள் காண்க ஐயாறன் அடித்தலமே

எனவும் (62.13 தலமுறை)

அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள் செய்வானை (7.2)
எனவும் கூறினார்.

ஏசாயா இஸ்ரவேல் மக்களைக் கசப்பான பழங்களை யளித்த திராட்சைத் தோட்டத்துக்கு ஒப்பிட்டு இறைவனை அத்தோட்டத்தை நட்டு வளர்த்தவனாகக் காட்டியது போலவே மாணிக்கவாசகர் ஒரு கவிதையில் தம்மைநச்சுப்பழங்களைத் தரும் மாமரமாகவும் இறைவனை அம்மரத்தை வளர்த்தவனாகவும் உவமித்து,

...... தாம் வளர்த்ததோர்
நச்சு மாமரம் ஆயினுங் கொலார்
நானு மங்ஙனே உடைய நாதனே (திருச்சதகம் 96)

என்றார். ஏசாயா, யாவே திராட்சைத் தோட்டத்தை யழிப்பார் என்றார். ஆயினும்இஸ்ரவேல் இனம்முற்றாகஅழிவதில்லை; வெட்டப் பட்ட மரத்தினின்று முளை தோன்றி மறுபடியும் தளிர்ப்பது போலச் சிலர் எஞ்சி மீண்டும் அச்சமுதாயத்தை உருவாக்குவர் என்றார். தம்மையே நச்சுமரத்திற்கு ஒப்பிட்ட மாணிக்கவாசகர் மக்கள் தாம் வளர்த்த மரம் நச்சுக் கனியைத் தந்தாலும் அவை வெட்ட மனதில்லாதிருப்பர், அதுபோலத் தம் தகுதியின்மையைப் பொருட்படுத்தாது கடவுள் தமக்குத் தொடர்ந்து அருள் செய்கிறார் என்றார்.

வேறுபட்ட சமூகச் சூழ்நிலையில் தோன்றியபோதும், தமிழர் வழிபாட்டு மரபிற்கும் யூதர் வழிபாட்டு மரபிற்குமிடையே அதிக வேறுபாடிருப்பினும் பல சமயக் கொள்கைகளும் வேறுபட்ட போதிலும் பக்தர்களின் அருள் மொழிகள் அல்லது அனுபவங்களினிடையே தோன்றும் இவ்வொற்றுமைகள் ஆய்ந்து மகிழத்தக்கன.

### 4. 3. 1. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தோர்

கி.மு. ஏழாம் நூற்றாண்டில் முற்பகுதியில் மானாசே என்ற அரசனின் காலத்தில் தீர்க்கதரிசிகள் யாரும் தோன்றவில்லை அல்லது அவ்வரசன் தீர்க்கதரிசிகளை வெளிவந்து பேச அனுமதிக்கவில்லை எனத் தெரிகிறது. ஏழாம்நூற்றாண்டின் பிற்பகுதியில் செப்பனியா, நாகூம், ஆபகூக், எரேமியா ஆகிய நால்வரும் தோன்றினர். எரேமியா நீண்ட காலம் தீர்க்கதரிசியாகப் பணியாற்றினார். ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் தொடர்ந்து தம் பணியைச் செய்தார்.

செப்பனியா : இறைவன் மக்கள் செயல்களுக்குத் தக்கபயனை அவர்களுக்கு அளிக்கும் நியாயத்தீர்ப்பு நாள் ஒன்று வரும் என்ற கருத்து இந்நூலில் காணப்படுகின்றது.

நியாயத் தீர்ப்பு நாளைக் கர்த்தருடைய யாகம் என தீர்க்கத் தரிசி குறிப்பிடுகிறார். அந்த நாள் (தீச்செயல்களைச் செய்தோர்க்குத்) துன்ப மயமான நாளாக இருக்கும்.

நாகூம் : அசீரியர்களின் தலைநகராகிய நி நெ வெ பாபி-லோனியர்களால் அழிக்கப்படும் செய்தியே நாகூம் என்ற நூலில்கூறப் பட்ட முக்கிய பொருளாகும்.

கர்த்தர் நல்லவர்,ஆனால் நீதியும் உள்ளவர், ஆறுகளை வற்ற-வும் மலைகளைக் கரைந்துபோகவும்செய்யத்தக்க வல்லமையும்உள்ள-வர் என நாகூம் கூறிலார். ஆகையினால் தீமை செய்தவர்கள் அதற்-குரிய தண்டனையை அடைந்தே தீருவர். நினெவெ நகரை எடுத்துக் காட்டாகக் கொண்டார் நாகூம். நகரைக் காக்க முடியாது சிதறு-வதையும் தீர்க்கதரிசி புனைந்துரைக்கிறார். மகளிர் ஓலமிட்டு அழு-கின்றனர். நகருக்குள் பகைவர் புகுந்ததும் நகரிலுள்ள வர்த்தகரும் பிறரும் வெட்டுக்கிளி போல் சிதறியோடுகின்றனர். கொள்ளையடித்த நகரம் கொள்ளையடிக்கப்பட்டது.

நினெவெ நகர மக்கள் தாம் எத்தகைய துன்பத்தைப் பிறருக்குச் செய்தனரோ அத்தகைய துன்பத்தைத் தாமும் அடைந்தனர். அசீரியர்கள் அயலிலுள்ள பல நாட்டவர்க்குத் துன்பத்தை முன்பு செய்துள்ளதனால் அவர்கள் அழிவைக் குறித்துப் பலரும் மகிழ்ச்சியே அடைகிறார்களாம். "உன் நொறுங்குதலுக்குப் பரிகாரம் இல்லை; உன் காயம் கொடியது; உன் செய்தியைக் கேட்பவர் யாவரும் உன் பெயரில் கை கொட்டுவார்கள்; உன் பொல்லாப்பு எந்நேரமும் யார் பேரிலேதான் பாயாமற் போயிற்று?" (3 19) எனக் கூறித் தீர்க்கதரிசி தம்முரையை முடிக்கிறார்.

இங்கு நாகூமின் கருத்தும் அவர் மனப்பான்மையும், நினெவெக்கு இரங்கி அந்நகரத்தவர்களும் மனம் திருப்பி இறைவனின் அருளைப் பெற வேண்டுமென விரும்பிய யோனா என்னும் நூலின் ஆசிரியர் தம் கருத்துக்கும் மனப்பான்மைக்கும் மாறாகவே யுள்ளன. (வரலாற்று இலக்கியங்கள்,யோனா பார்க்க)துன்பம் செய்தவர்கள் துன்பமடைதல்

நீதி. அழித்தவர்கள் அழிக்கப்படுதல் நீதி என்பது நாகூமின் நேர் நீதிக் கருத்து. பகைவராயினும் தம் நாட்டுக்குத் துன்பம் செய்தவராயினும் அவர் நன்மையையே நாடுதல் வேண்டும், அவ்வாறு செய்வதே இறைவனுக்குகந்ததாகும் என்ற ஓர் உயர் கருத்தை யோனாவின் ஆசிரியர் கற்பிக்க முயல்கிறார்.

ஆபகூக் என்ற தீர்க்கதரிசியின் உள்ளத்தில் எழுந்த முக்கிய கேள்வி 'உலகில் ஏன் சில சமயங்களில் தீமை மேலோங்குகிறது, எச்சமயத்தாராலும் நல்லவர் எனப் போற்றப்படும் கடவுள் ஏன் தீமையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்' என்பதே.

ஆபகூக் ஏழாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர் எனத் தெரிகிறது அது பாபிலோனிய மன்னன் நெபுகாத்நேசார் (Nebuchadnezzur) வல்லமை பெற்றிருந்த காலம்.

எரேமியா : யோசியா என்னும் அரசன் காலத்தில் தம் ஊழியத்தைத் தொடங்கி எருசலேம் நகர் பாபிலோனியர்களால் அழிக்கப்பட்டதன் பின்பும் தொடர்ந்து பணியாற்றியவர் எரேமியா.

எரேமியா என்னும் நூலில் 46-ஆம் அதிகாரம் வரையுள்ள கூற்றுக்கள் அனைத்தும் அத்தீர்க்கதரிசியுடையனவே என்றும் 47-ஆம் அதிகாரத்துக்கும் 51-ஆம் அதிகாரத்துக்கும் இடையே உள்ள பகுதிகளிற் சில பிறரால் சேர்க்கப்பட்டிருக்கலாமெனவும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

எரேமியாவின் வாழ்க்கை துன்பம் நிறைந்ததாக இருந்தது. ஆயினும் இறைவனின் நீதியிலும் அருளிலும் அவருக்கு இருந்த நம்பிக்கை துன்பங்களனைத்தையும் மேற்கொண்டு வென்றது.

4. 3 2. இவர்கள் கருத்துக்களும் திருக்குறளும்

செப்பனியா, நாகூம் என்னும் இருவர் நூலிலும் காணப்படும் கருத்து தீமை செய்தவர் அழிவர் என்பதே. திருக்குறளில் தீவினையச்சம், இன்னா செய்யாமை என்னும் இரு அதிகாரங்களும் பிறர்க்குத் தீமை செய்தவர் தீமையையே அடைவர் என்னும் கருத்தையே வற்புறுத்துகின்றன.

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயா தடியுறைந் தற்று (208)

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும் (19)

நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர் (320)

என வள்ளுவர் பன்முறை கூறினார். துன்பம் செய்தார் துன்பமடைவர் என்பது இயல்பாக நிகழும் நீதியேயாயினும் ஒருவன் தனக்குத் துன்பம் செய்தவர்க்குத் திருப்பித் துன்பத்தைச் செய்வது சிறப்பன்று. சான்றோர் தீமை செய்தோர்க்கும் நன்மையே செய்வர்.

கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள் (312)

என்றதனோடு மட்டும் அமையாது,

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு (987)

எனவும் வள்ளுவர் கூறினார். ஆகவே மேலே சற்று மாறுபட்டனவாகக் காட்டப்பட்டதாகும், யோனாவின் ஆசிரியர் ஆகிய இருவரின் கருத்துக்களும் திருக்குறளில் காணப்படுபவையே. நினெவெ நகர மக்கள் தாம் செய்த தவற்றினால் அழிந்தனர். ஆயினும் யூதமக்கள் அந்நகர மக்களின் அழிவை விரும்பாது அவர்கள் திருந்தி நலமுறுதலையே விரும்ப வேண்டும், அத்தகைய சான்றாண்மை யூத நாட்டு மக்களிடையே காணப்படுதல் வேண்டும் என 'யோனா' வின் ஆசிரியர் கருதினார்.

செப்பனியாவின் நூலில் நியாயத்தீர்ப்பு நாளைக்குறித்தகருத்து (The day of Judgement) காணப்படுகிறது பிற்கால யூத இலக்கியங்களில் இக்கருத்து இன்னும் வளர்ச்சி பெற்றது பழைய ஏற்பாட்டில் தானியேல் என்னும் நூலிலும் புதிய ஏற்பாட்டில் வெளி என்னும் நூலிலும் இக்கருத்தின் விரிவைக் காணலாம். ஒரு குறிப்பிட்ட நாளில் அனைவர்க்கும் நீதி வழங்கப்படும் என்பது திருக்குறளிலோ பொதுவாக நம் நாட்டு நூல்களிலோ காணப்படாத ஒரு கருத்தாகும். மக்கள் தம் நற்செயல்கள் தீச்செயல்கட்கு ஏற்ற பலனை இம்மையிலோ மறுமையிலோ அடைவர் என்ற பொதுவான கருத்தையே திருக்குறளும் தமிழிலுள்ள பிற நீதிநூல்களும் கூறுகின்றன.

நியாயத் தீர்ப்பை யொட்டிய மற்றொரு கருத்து பின்வரும் ஒரு நற்காலத்தைக் குறித்தது. தீமை ஒறுத்து அழிக்கப்பட்டபின்

எங்கும் அமைதி நிலவும் மக்கள் தூயராய் வாழ்வர். யாவரும் இறைவனை யறிந்து அவன் சித்தப்படி நடப்பர். போரும் பகையும் இரா. மக்கள் போர்க் கருவிகளை இயற்றார். அனைவரும் அமைதி-யுடன் நல்வாழ்வு வாழ்வர். இவ்வாறு ஏசாயா, செப்பனியா, எரேமியா முதலிய சில தீர்க்கதரிசிகள் வரப்போகும் ஒரு சிறந்த காலத்தைக் குறித்துக் கனவு கண்டனர். இதுவும் தமிழ் நூல்களில் பொதுவாகக் காணப்படாத ஒரு கருத்தே யாம். கம்பர் இராமன் ஆண்ட காலம் பகையும் பிணியும் இல்லாது எல்லோரும் நிறைவுடனே வாழ்ந்த நற்காலமாயிருந்தது என இறந்தகாலத்தில் கூறினார். தற்காலத்தில் யோகி திரு. அரவிந்தரே தமது 'தெய்வீக வாழ்க்கை' (The Life Divine) என்ற ஆங்கில நூலின் இறுதியில் இத்தீர்க்கதரிசிகள் கருதியது போல் மக்கள் தூயராய் வாழும் ஒரு பொற்காலத்தைச் சித்திரித்துக் காட்டினார். அரவிந்தர் கருத்தைப் பின்பற்றிச் சுத்-தானந்த பாரதியார்,

அருள்புரிவாய் கருணைக் கடலே
ஆருயிர் அனைத்தும் அமர வாழ்வு பெறவே

எனப் பாடினார்.

உலகில் தீயோர் செழிப்புடன் வாழ்வது ஏன் என்னும் கேள்வி ஆபகூக், எரேமியா என்னும் இருவர் உள்ளத்திலும் எழுந்தது தீமையைச் செய்தோர் துன்பமடைவர் என்ற பொதுநீதியைப் பன்-முறை கூறிய வள்ளுவரும் உலகில் தீயோர் செழிப்புடன் வாழ்தலும் உண்டு என்பதை உணர்ந்துதான் இருந்தார்.

அவ்விய நெஞ்சத்தா னாக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும் (169)

என 'அழுக்காறுடையவன் செல்வமுடையவனாக இருப்பின், அவன் செல்வமுடையவனாக இருப்பது எவ்வாறு என்பது ஆராய்தற்குரியது' என்றார். இது பொதுவாக நீதிநூலுடையார்க்கு விடை காண்பதற் கரிய புதிராகவே யுள்ளது. இனி,

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
யன்றே ஒழிய விடல் (113)

பழிமலைந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை (657)

என்பன போன்றகுறள்கள் தவறான வழிகளில்பொருள் சேர்த்தவர்கள் நலமாக வாழ்தலும் உண்டு என்ற கருத்தைக் குறிப்பாக உணர்த்தும்.

அவ்வாறு அவர்கள் வாழ்வது ஏன் என ஆராயப் புகாது அத்தகைய செல்வ வாழ்க்கை விருப்பத்தக்கதன்று; அதைவிட வறுமையில் வாடுதலே நன்று, அவ்வாறு செல்வத்தைப் பெற முயல வேண்டா என வள்ளுவர் நீதியைக் கற்பித்தார்.

ஆபகூக் கருதியது போலக்கொடுங்கோலாட்சி நீடித்து நிலைக்காது எனவே வள்ளுவரும் கருதினார்.

கூழுங் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு (554)

அல்லற்பட் டாற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை (555)

என்ற குறள்கள் கொடுங்கோலரசு விரைவில் அழியும் என்பதைக் காட்டும். ஆயினும் வள்ளுவர் செங்கோன்மை கொடுங்கோன்மை என்னும் அதிகாரங்களில் அரசன் தன் நாட்டைச் சேர்ந்த குடிமக்களை ஆளும் முறைமையைக் குறித்தே எழுதினார் எனத் தோன்றுகிறது. ஒரு நாட்டவர் பிற நாட்டவரை வென்று ஆளலாமா என்பதைக் குறித்துச் சிந்திக்க வேண்டிய ஒரு நிலை அக்காலத் தமிழகத்தில் இருக்கவில்லை.

பணிவின்மை, பிறர் பொருளை யபகரித்தல், மதுவருந்துதல் ஆகியவற்றைப் பொதுவாக எந்நாட்டிலும் நீதி நூலோர் மறுத்துரைத்தல் இயல்பே. இவற்றில் பின்னிரண்டையும் வள்ளுவர் கள்ளுண்ணாமை, வெஃகாமை என்னும் அதிகாரங்களின் மூலம் கண்டித்தார். "பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு அணி" (95) எனவும், "ஆற்றுவார் ஆற்றல் பணிதல்" எனவும் (985) பணிவுடைமையைப் போற்றியதோடு,

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து (978)

எனப் பணிவின்மையின் தாழ்வையும் எடுத்துரைத்தார்.

சமூகத்தில் காணப்பட்ட அநீதிகளென எரேமியா எடுத்துக் கூறியவை ஏறக்குறைய எட்டாம் நூற்றாண்டுத் தீர்க்கதரிசிகளால் கூறப்பட்ட அதேகுறைகளே. அவை முன்பே ஆயப்பட்டன.

எரேமியா கூறிய அரசியல் நீதிகளைநோக்குமிடத்து "நீ கேதுரு மர மாளிகைகளில் உலாவுகிறபடியினாலே ராஜாவாயிருப்பாயோ?

உன் தகப்பன் போஜன பானம் பண்ணி, நியாயமும் நீதியும் செய்த போது அவன் சுகமாய் வாழ்ந்திருக்கவில்லையோ? அவன் சிறுமையும் எளிமையுமானவனுடைய நியாயத்தை விசாரித்தான் ; அப்பொழுது சுகமாய் வாழ்ந்தான்'' (22.15.16) என யோயாக்கீமை நோக்கிக் கூறி அவனுக்கும் அவன் தந்தை யோசியாவுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை எடுத்துக் காட்டினார். இங்கு யோசியாவின் காட்சிக்கு எளியனாந் தன்மையையே அவர் போற்றுகிறார். அவ்வாறு முறை செய்யாது செல்வக் களிப்பில் ஆழ்ந்திருக்கும் யோயாகீம் சுகமாக வாழ்தல் இல்லையென்பதே அவர் கருத்து. அது,

எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தான் தானே கெடும் (548)

என்ற திருக்குறள் கருத்தோடு பொருந்துவதே.

எரேமியாவின் வாழ்க்கையில் காணப்படும் ஒரு சிக்கல் அவருக்கும் பிற சமயத் தலைவர்க்கும் இடையே ஏற்பட்ட எதிர்ப்பாகும். ஆசாரியர்களும் அவரை எதிர்த்தனர் ; ஒறுத்தனர் ; ஆலயத்தில் அவர் செல்லலாகாதெனத் தடையுந்தரவு இட்டனர். போலித் தீர்க்க தரிசிகளும் அவரை எதிர்த்தனர். அவரும் அவர்களை எதிர்த்துப் பேசினார். ஆசாரியார்கள் உண்மையான பக்தியும் ஆழ்ந்த அறிவும் இன்றிப் போலியாகச் சிலசமய மரபுகளைப்பின்பற்றுகின்றனர் என்றும் போலித் தீர்க்கதரிசிகள் பிறர் விரும்புவதையே கூறி இச்சகம் பேசுகின்-றனர் என்றும் அவர் கூறினார். மக்கள், நாட்டில் சமய அறிவு உள்ளது, சமயத் தலைவர்கள் உள்ளனர் எனப் பொய்யான தன் மதிப்பை (Self confidence) யுடையராய் உள்ளனர் என எரேமியா கருதினார். ''நாங்கள் ஞானிகளென்றும் கர்த்தருடையவேதம் எங்க-ளிடத்தில் இருக்கிறதென்றும் நீங்கள் சொல்லுகிறதெப்படி? இதோ வேதபாரகனின் கள்ள எழுத்தாணி அதை அபத்தமாக்குகிறது'' (8.8) என்றார். சமயக் கருத்துக்களை விரித்தெழுதுகின்றவர்களே அதைப் பிழைபட எழுதுகின்றனர் என அவர் கருதியதாகத் தெரி-கிறது. இன்னும் ''ஆசாரியரிடத்திலே வேதமும் ஞானிகளிடத்திலே ஆலோசனையும் தீர்க்கதரிசிகளிடத்திலே வசனமும் ஒழிந்து போவ-தில்லை'' (18.18)(For the law shall not perish from the priest, nor-counsel from the wise, nor the word from the prophet) என ஒரு பொய்யான நம்பிக்கையை மக்கள் கொண்டுள்ளனர் என எரேமியா கூறினார். எசேக்கியேலும் இம்மூவகையினரைக் குறித்து, ''விக்கினத்தின்மேல் விக்கினம் வரும் ; துர்ச்செய்திமேல் துர்ச்செய்தி வரும் ;

அப்பொழுது தீர்க்கதரிசியினிடத்திலே தரிசனத்தைத் தேடுவார்கள்; ஆனாலும் ஆசாரியாரிடத்திலே தேவமும் மூப்பரிடத்திலே ஆலோசனையும் இல்லாமற் போகும்'' என எருசலேம் நகர் அழிக்கப்பட்ட காலத்தில் அவர்கள் நிலலையக் கூறினார். ஆசாரியார்கள், தீர்க்கதரிசிகள், ஞானிகள் அல்லது மூப்பர்கள் என மூவகையினர் யூதர் நாட்டில் மக்களுக்குச் சமய நூல்களையும் நல்லொழுக்கத்தையும் கற்பிக்கத் தக்கவராய் இருந்தனர் என்பது இவர்கள் கூற்றுக்களினின்றும் தெரிய வருகிறது. ஆயினும் இங்குக் குறிப்பிடப்படும் காலத்தில், எரேமியா, எசேக்கியேல் போன்ற இரண்டொருவரைத் தவிர ஏனையயோர் தத்தமக்கு இருக்கவேண்டியஉயர்கொள்கைகளைக் கைவிட்டனர் என்பதே இங்குக் கூறப்பட்டது

எச்சமூகத்திலும் மக்களுக்குச் சமய நூல்களையும் நல்லொழுக்கத்தையும் கற்பிக்கத் தக்கவராய்ச் சில பிரிவினர் இருத்தல் இயல்பே. சமூகத்தில் பல தவறுகள் புகுந்து சமூக முழுவதும் தாழ்வடையும் ஒரு நிலைமையில் அவர்களும் தம் நிலையினின்றும் பிறழ்தல் கூடும்.

அக்கால யூதர் சமூகத்தில் பரம்பரையாக ஆலய வழிபாட்டை இயற்றுவோரும் சமய நூல்களைப்பாதுகாப்போரும் அவற்றைத்தாமும் கற்றுப் பிறர்க்கும் கற்பிப்போருமாக இருந்தோர் ஆசாரியார்களே. லேவியா (Levites) இவர்க்குத் துணை செய்தனர். லேவியரும் அப்பணியைப் பரம்பரையாகச் செய்வோரே. தீர்க்கதரிசிகள் எக்குலத்திலும் தோன்றுதல் கூடும். இவர்கள் இறைவனால் சிறப்பாகத் தன் பணிக்கென அழைக்கப்பட்டவராகக் கருதப்பட்டனர். ஆனால் தீர்க்கதரிசிகளை மக்கள் பெரிதும் மதித்ததனால் ஆழ்ந்த பக்தியும் நீதியையும் உண்மையையும் உணரும் நல்லுணர்வும் இல்லாத சிலர் தம்மைத் தீர்க்கதரிசிகளெனக் கூறிக்கொண்டு, தாம் இறையருளால் உணர்ந்ததாகப் பல பொய்யான செய்திகளைக் கூறிமக்களைஏமாற்ற முயன்றனர். இத்தகையோரின் எதிர்ப்பையே எரேமியா தாங்க வேண்டியிருந்தது. அறிவுடையோர் (Wisemen) மூப்பர் (Elders) என அழைக்கப்பட்டோர், பொது மக்களுள் கல்வியறிவிலும் பட்டறிவிலும்முதிர்ந்தோராய் மக்களுள் செல்வாக்குடையோராய்த் திகழ்ந்தோர் போலும். சமூகத்தில் தீமைகள் மலிந்து சமூகம் தாழ்வடைந்த நிலையில் இம்மூவகையினருமே தத்தம் நிலையினின்றும் வழுவினர் என்பதே எரேமியாவும் எசேக்கியேலும் எடுத்துக் காட்டிய உண்மையாகும். வள்ளுவர் காலத் தமிழ் நாட்டிலும் மக்களுக்குச் சமய நூல்களையும் நல்லொழுக்கத்தையும் கற்பிக்கத் தக்கோராய

மூவகையினர் இருந்தனரெனத் தெரிகிறது. அக்காலத்தில் பரம்பரையாக வழிபாடு இயற்றி வழிபாட்டு முறைகளைக் கற்பிப்போரும் சமய நூல்களைக் கற்றுஅவற்றைப்பாதுகாப்போருமாயிருந்தோர் அந்தணர்களே. தமிழ்நாட்டில் தீர்க்கதரிசிகள் இல்லை துறவியர் அல்லது நீத்தோர் எனப்படும் ஒரு கூட்டத்தினர் இருந்தனர். எக்குலத்தில் பிறந்தோரும் துறவு பூணுதல் கூடும். அரசர்களாகவோ வீரர்களாகவோ வாழ்ந்தோர் சிலர் பின் துறவு பூண்டதைப் புறநானூற்றில் தாபதவாகை என்னும் துறையைச் சேர்ந்த செய்யுட்கள் காட்டும்[14]. உலகஇன்பத்தைத் துறந்தோராய் வழிபாட்டிலும் சமயஉண்மைகளை ஆய்வதிலும் தம் பொழுதைக் கழித்து எவ்வுயிர்க்கும் அருளுடையோராய்ப் பண்டைத் தமிழகத்தில் நல் நடத்தையும் கல்வியறிவும் கொண்ட பெரியோராய்த் திகழ்ந்தோர் சான்றோர் என அழைக்கப்பட்டனர். 'ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் யான் வாழுமூரே' (புறம் 191) எனப் பிசிராந்தையார் கூறினார்.

இம் மூவகையினரைக் குறித்தும் வள்ளுவர் குறளில் எழுதியுள்ளார். துறவியர் கடைப்பிடிக்க வேண்டிய அறங்களைக் குறித்துத் துறவறவியலில் கூறினார். அந்தணர்களைக் குறித்துத் தனியே ஓர் அதிகாரத்தில் கூறாவிடினும் பல குறள்கள் அவர்களைக் குறிப்பிடுகின்றன. சான்றோர்க்குரிய இயல்புகளைச் சான்றாண்மை என்னும் அதிகாரம் காட்டுகிறது.

வள்ளுவர் காலத்திலேயே துறவில் போலித்தன்மை புகுந்து விட்டது என்பதைக் கூடா ஒழுக்கம் என்னும் அதிகாரம் காட்டும். போலித் துறவை வன்மையாகக் கண்டித்ததோடு,

> மனத்தது மாசாக மாண்டார் நீராடி
> மறைந்தொழுகு மாந்தர் பலர் (278)

என வள்ளுவர் கூறியதனால் உண்மைத் துறவு இன்றி மக்களின் நன்மதிப்பைப் பெறவோ பிற நோக்கங்களுடனோ போலியாகத் துறவு வேடம் பூண்டு வாழ்ந்தோர் பலர் அக்காலத்திலேயே இருந்தனர் என அறியலாம். வள்ளுவர் காலத்தின்பின் நாட்டில் போலித்துறவு இன்னும் அதிகமாகப் பரவிவிடவே, பல்லவர் காலத்தில் தேவார ஆசிரியர்கள் அதை வன்மையாகக் கண்டிக்க நேர்ந்தன.

> மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
> பிறப்பொழுக்கம் குன்றக் கெடும் (134)

எனவும்,

14. புறநானூறு, 251,252

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின் (560)

எனவும் வள்ளுவர் கூறினார். சமூகத்தில் பல தீமைகள் புகுந்தநிலையைக் காட்டும் சிலப்பதிகாரம். சில ஊர்களில் அந்தணர்கள் தம் கடமையைக் கைவிட்டு வேதம் ஓதுவதை மறந்தனர் என்பதையும் காட்டுகிறது. கண்ணகியும் கோவலனும் மதுரையை நோக்கிச் செல்லும்போது மறைநூல்களை ஓதுவதைக் கைவிட்டு வரிப்பாடல்களைப் பாடுவதை மேற்கொண்ட அந்தணர் வாழும் ஊர் ஒன்றை அவர்கள் கண்டனர் எனக் கூறப்படுகிறது[15]. அக்கால மக்கள் வரிப்பாடல்களையே பெரிதும் விரும்பியதனால் பொருள் வருவாய் கருதி அவற்றைப் பாடினர் போலும்.

பொது மக்களிடையே அறிவும் ஒழுக்கமும் உடையோரே சான்றோர் என அழைக்கப்படுகின்றனராகையினால் அவர் ஒழுக்கம் தவறுதல் அரிது.

சமயத் தலைவர்களிடையே,சமய நூல்களைக் கற்பிக்கும் கடப்பாடுடையோரிடையே, சமய நிறுவனங்களிடையே கடமையில் கருத்தின்மை, பொய்மை, பொருள் வருவாயில் நாட்டம் ஆகிய தீமைகள் புகுதல் எந்த நாட்டிலும் ஏற்படக் கூடிய நிலையே. யூத் நாட்டில் தீர்க்கதரிசிகளும் பண்டைத் தமிழ்நாட்டில் வள்ளுவர் இளங்கோ போன்ற அறிஞர்களும் அவற்றை எடுத்துக்கூறித் திருத்த முயன்றனர்.

4 3.3. இவர்களின் கடவுட் கொள்கை

கடவுள் நீதியுள்ளவர் என்ற பொதுவான ஒரு கொள்கையையே செப்பனியாவும் நாகூமும் கூறினர். ஆபகூக் இறைவனைத் ''தீமையைப் பார்க்க மாட்டாத சுத்தக் கண்ணனே'' என அழைத்தார். கடவுள் இவ்வுலக நிகழ்ச்சிகளைக் கவனிக்கிறார். அவர் தீமையை விரும்பவில்லை யென்ற கருத்தை யிங்குக் காணலாம்.

எரேமியா எருசலேம் நகரின் அழிவு யூதர்களிடையே பரவியிருந்த பல தீமைகட்கு இறைவனின் ஒறுப்பு எனக் கூறினாராயினும் அது மக்கள் தாங்களே தேடிக் கொண்டது எனவும் கூறினார்.

15 சிலப்பதிகாரம் : வரிநவில் கொள்கை மறைநூல் வழுக்கத்துப்
புரிநூல் மார்பர் உறைபதிச் சேர்ந்து (புறஞ்.கா.38-39)

"உன் நடக்கையும் உன் கிரியைகளுமே இவைகளை உனக்கு நேரிடப் பண்ணின ; இது இத்தனை கசப்பாயிருந்து உன் இருதயம் மட்டும் எட்டுகிறதற்குக் காரணம் உன் பொல்லாப்புத்தானே" (4.18).

எருசேலம் நகரின் அழிவு மக்கள் தாங்களே தேடிக்கொண்டதா? இறைவனின் ஒறுப்பா? எரேமியாவின் அக்கூற்றிற்குத் தற்கால விவிலிய நூலறிஞர் ஒருவர் தரும் விளக்கம் வருமாறு, தேவகோபம் என்பது இறைவன் இடைப்புகுந்து ஒறுப்பது அன்று தீமை நிறைந்த சமுதாயத்தில் இறைவனின் அருள் தங்குவதில்லை. இறையருள் அச் சமுதாயத்தை விட்டு நீங்குவதனால் மக்கள் தாமாகவே கெடுகின்றனர் என்பதே[16]. 'மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின், அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு' (204) என்ற குறளுக்குப் பரிமேலழகர் உரை கூறும் போது, 'அறக் கடவுள் எண்ணுதலாவது அவன் கெடத் தான் நீங்க நினைத்தல்'எனக் கூறியது இவ்வறிஞரின் கருத்தொடு ஒப்பு நோக்கற் குரியது

இறைவனிடத்து ஆழ்ந்த நம்பிக்கையுள்ளவர்களையும் அவ்வாறு நம்பிக்கையில்லாது இறைவனை விட்டுவிலகுகிறவர்களையும் குறித்து எரேமியா இரு உவமைகள் கூறினார். இறைவனை விட்டு விலகுகிற-வர்கள் வறட்சியான நிலத்திலுள்ள நன்கு வளராது வளர்ச்சி தடைப் பட்ட செடியைப் போலிருப்பர். இறைவனிடத்து நம்பிக்கை வைத்து அவரைச் சார்ந்திருப்பவர் கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விட்டு நீரேற்று அருங்கோடையிலும் பசுமையாய் பொலியும் மரத்தை யொத்திருப்பர் (17-5-8). இங்கு முற்கூறப்பட்ட உவமை வள்ளு-வரின் உவமையொடு ஒப்புநோக்கத் தக்கது. பொதுநீதியைக் கூற வந்த வள்ளுவர் உள்ளத்தில் அன்பு இல்லாதவர்களைப் பாலைநிலத்தி லுள்ள வற்றல்மரத்திற்கு ஒப்பிட்டார்.

16. B.W Anderson, Understanding the Old Testament, p.335:

Your ways and your doings
have brought this upon you
It is your doom and it is bitter
it has reached your very heart. (4.18)

In one sense the 'wrath of God' is not as much God's intervention to punish as it is his withdrawal from a rebellious people, leaving them to suffer the destructive consequences of their own actions and attitudes; It is, one might say, a kind of self destruction Gods sovereignity in human affairs means that men cannot live with impurity, but the punishment is only, 'the fruit of their evice'.

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த் தற்று (78)

என்றார். சமயக் கருத்துக்களைக் கூறவந்த எரேமியாவோ உள்ளத்தில் பக்தியில்லாதவர்களை வறண்ட நிலத்திலுள்ள கறளைச் செடிக்கு ஒப்பிட்டார்.

இனி எரேமியாவின் கருத்துக்கள் சில தமிழ் நாட்டுப் பக்திக் கவிஞர்கள் சிலரின் கருத்துக்களுடன் ஒத்திருப்பதைக் காணலாம். யூதர்கள் சிலர் யாவேயின் தூய வழிபாட்டு மரபை விட்டுத் தவறான வழிபாட்டு முறைகளைப் பின்பற்றுவதைக் குறித்து ஓர் உவமை கூறினார். அவர்கள் செயல் தூய நீரைத் தரும் நீரூற்றைப் பயன் படுத்தாது வெடிப்புள்ள கலங்களில் நீரைத் தேக்கி வைக்க முயல்வது போன்றுளது என்றார்.

''என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவ தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டு விட்டார்கள்; தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக் கொண்டார்கள்'' (2.13).

யாவேயின் கூற்றாக இவ்வாறு கூறினார். இறைவனிடத்து அன்பின்றித் தூயன எனக் கருதப்பட்ட ஆறு, கடல் முதலியவற்றில் நீராடுதலாகிய புறச்செயல்களில் நம்பிக்கை வைத்தலைக் குறித்து இத்தகையதோர் உவமையைத் திருநாவுக்கரசரும் கூறினார்.

கோடி தீர்த்தம் கலந்து குளித்தவை
ஆடி னாலும் அரனுக்கன் பில்லையேல்
ஓடும் நீரினை ஓட்டைக் குடத்தட்டி
மூடிவைத் திட்ட மூர்க்கனோ டொக்குமே.
(303.9. தலமுறை)

உள்ளத்தூய்மையே வேண்டற்பாலது; ஏனெனில் கடவுள் ஒவ்வொருவரின் உள்ளத்தையும் ஆராய்ந்து அறிகிறார் என்பது எரேமியா தம் நூலில் பன்முறை கூறிய கருத்தாகும்.

மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற (34)

எனக் கூறிய வள்ளுவரும் உள்ளத்தூய்மையைச் சிறப்பித்தார். ஆயினும் சமயக் கருத்துக்களை யன்றிப் பொதுநீதியைக் கூறுவதே

அவர் நோக்கமாகையினால் இறைவன் உள்ளத்தை ஆய்ந்து அறிகிறார் என அவர் கூறவில்லை. பின் வந்த பக்திக் கவிஞர்களே அவ்வாறு கூறினர். 'உமக்கு முன்பாக என் இருதயம் எப்படிப்பட்டதென்று நீர் சோதித்தறிகிறீர்' என எரேமியா கூறியது போலவே 'உள்ளுவார் உள்ளிற்றெல்லாம் உடனிருந்தறிதி' எனத் திருநாவுக்கரசரும் தொண்டரடிப் பொடி யாழ்வரும் கூறினார்[17].

இவை ஒற்றுமைகள். நாட்டிற்கும் சமயச் சூழ்நிலைக்கும் தக வேற்றுமைகளும் உள.

தீர்க்கதரிசிகள் பலரின் நூல்களிலும் திரும்பத் திரும்ப வரும் இரு கருத்துக்கள் நம் நாட்டவர்க்கு ஓரளவு வியப்பை அளித்தல் கூடும். அவை உருவவழிபாட்டைக் கண்டித்தலும் பிற தெய்வ வழிபாட்டை எதிர்த்தலுமே யூதர்கள் மோசேயின் காலத்திலிருந்து யாவே ஒருவரையே வழிபடும்படி கற்பிக்கப்பட்டனர். "இஸ்ரவேலே கேள், நம் தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்" (Hear Israel the Lord our God is one) (உபா. 6.4) என்பது அவர்களின் அடிப்படைக் கொள்கையாகும். இவ்வொரு தெய்வக் கொள்கையை நிலைநாட்டத் தீர்க்கதரிசிகள் பிற தெய்வ வழிபாட்டை யெதிர்த்தனர். ,யாவேயை மட்டும் வழிபடுங்கள் ; அவர் ஒருவரே கடவுள்; வேறு தேவர்களெல்லாம் தேவர்களல்லர்' என முழங்குவதே அவர்கள் முறைமையாகும். நம் நாட்டிலோ இருக்குவேத காலத்திலிருந்து தற்காலம் வரையிலும் ஒருதெய்வக் கொளகையை நிலை நாட்ட முயன்ற பக்தர்களும் அறிஞர்களும் எத்தெய்வ வணக்கத்தையும்

17. திருநாவுக்கரசர் தேவாரம், 283.3 தலமுறை

கள்ளனேன் தள்ளத் தொண்டாய்ச்
காலத்தைக் கழித்துப் போக்கித்
தெள்ளியேனாகிய நின்று
தேடினேன் நாடிக் கண்டேன்
உள்குவார் உள்ளித் தெல்லாம்
உடனிருந்தறிதியென்று
மெள்கிப்போ யென்னுள்ளே நான்
விலாவிறச் சிரித்திட்டேனே.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், திருமாலை. 34

உள்ளத்தே யுறையும் மாலை உள்ளுவான் உணர்வொன் றில்லாக்
கள்ளத்தேன் நானும் தொண்டாத் தொண்டுக்கே கோலம் பூண்டேன்
உள்ளுவார். உள்ளித் தெல்லாம் உடனிருந் தறிதி யென்று
வெள்கிப் போயென்னுள் ளேநான் விலாவறச் சிரித்திட்டேனே,

கண்டித்தல் இன்றிப் பல பெயர்களால் கூறப்படுபவரும் பல முறைகளினால் வழிபடப் படுபவரும் ஒரு கடவுளே யாவார் எனக் கற்பிக்க முயன்றனர். ஞாயிறு, திங்கள், தீ, காற்று முதலிய பல தெய்வங்கட்குத் துதிப்பாடல்கள் பாடப்பட்ட இருக்குவேத காலத்தில் இவ்வியற்கைப் பொருள்கள் அனைத்தூடும் பரவி நிற்கும் இறைவன் ஒருவனே என உணர்ந்த கவிஞர் 'உண்மையொன்றே; அறிஞர் பல்வாகக் கூறுவர்' (ஏகம்சத் விப்ர பகூதா வதந்தி) எனப் பாடினார்.

தமிழ் நாட்டில் சங்க காலத்திலும் சங்கம் மருவிய காலத்திலும் திருவள்ளுவர் போன்ற அறிஞர் சிலர் ஒரு தெய்வக்கொள்கையையுடையவராயிருந்த போதிலும் பொதுமக்கள் பலதெய்வ வழிபாட்டையே மேற்கொண்டிருந்தனர் எனத் தோன்றும். புறநானூற்றிலும் சிலப்பதிகாரத்திலும் பல தெய்வங்கள் குறிப்பிடப்படுவது மட்டுமன்றிப் பொதுவாகவும், "புல்லிலை எருக்கமாயினும்உடையவை கடவுட் பேணேம் என்னா" (புறம் 106)(புல்லிய இதழையுடைய எருக்க பலரேயாயினும் வழிபடுவோர் தம்மிடமுள்ளவற்றை யவிப்பின் தெய்வங்கள் அதை ஏற்றுக்கொள்ளமறுப்பதில்லை) எனவும்,"செய்தவமில்லோர்க்குத் தேவர் வரங்கொடார்" (சிலப். கனா.17)"தேவிர்காள் எம்முறுநோய் தீர்ம்" (சிலப். கனா. 14) எனவும் தேவர்கள் பன்மையிலேயே பேசப்படுகின்றனர். தமிழ்நாட்டில் ஒருதெய்வக் கொள்கையைப் பரப்ப, பொது மக்களின் உள்ளத்தைப் பல தெய்வ வழிபாட்டினின்றும் ஒரு தெய்வ வழிபாட்டிற்கு உயர்த்த முயன்றவர்கள் பல்லவர் காலத்துப் பக்திக் கவிஞர்களே எனலாம்.

ஈறிலாதவன் ஈசன் ஒருவனே (304. 3 தலமுறை)

மாதேவனலால் தேவர் மற்றில்லையே" (304 4 தலமுறை)

எனத் திருநாவுக்கரசரும்,

"உய்யப்போமுணர்வி னார்கட்
கொருவ னென் றுணர்ந்த பின்னர்
ஐயப்பா டறுத்துத் தோன்றும்
அழகனூர் அரங்கமன்றே" (திருமாலை 15)

எனத் தொண்டரடிப் பொடியாழ்வாரும் இத்தகைய கருத்துக்களையே பிற பக்திக் கவிஞர்களும் கூறியுள்ளமை சான்றாம். ஆயினும் பக்திக் கவிஞர்கள் நாட்டில் பாவியிருந்த வழிபாட்டுமுறைகளைவன்மையாகக் கண்டிக்கவில்லை. தேவார காலத்தில் ஞாயிற்றை ஒரு தெய்வமாகக் கருதி வழிபடும் முறை மக்களிடையே இருந்ததெனத்தோன்றுகிறது.

அவ்வாறு வழிபடும் பொதுமக்களை நோக்கி 'ஞாயிற்றைத்தனியேஒரு தெய்வமெனக் கருத வேண்டா; ஞாயிற்றை இறைவனின் அருள் வடிவங்களில் ஒன்றாகவோ, இறைவன் ஆணைக்கடங்கிய ஓர் இயற்கைப் பொருளாகவோ கருதி வழிபடுங்கள்' எனத் திருநாவுக்கரசர் போதித்தார். ''அங்கதிரோனவனை அண்ணலாகக் கருதவேண்டா,... செங்கதிரோன் வணங்கும் திருச்சோற்றுத் துறையனாரே'' (93.8 தலமுறை) எனவும் ''அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில், அருக்கன் ஆவான் அரனுருவல்லனோ'' (304.8 தலமுறை) எனவும் பாடினார். மேலும்,

ஞாயிறாய் நமனுமாகி வருணனாய்ச் சோமனாகித்
தீயறா நிருதி வாயு திப்பிய சாந்தனாகி (160.6 தலமுறை)

என வேதங்களால் பாடப்பட்ட தெய்வங்களை எண்ணி அவை அனைத்துமாய் நிற்பவன் ஒருவனே என்றார்.

அரன் நாரணன் நாமம் ஆன்விடை புள்ளூர்தி
உரைநூல் மறையுறையும் கோயில் — வரைநீர்
கருமம் அழிப்பளிப்புக் கையது வேல்நேமி
உருவம் எரிகார் மேனியொன்று (முதல் திருவந்தாதி 5)

எனச் சைவர்களும் வைணவர்களும் வழிபடும் கடவுள் வடிவத்தையினைத்தும் ஆழ்வார்கள் ஒருமை காண முயன்றனர். பிற தெய்வ வணக்கத்தைக் கண்டித்து விலக்கி ஒருமை காணும் முறையையன்றி வழிபடுவோரின் கடவுள் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு இணைத்து ஒருமை காணும் முறையையே நம் நாட்டில் பெரியோர்கள் எப்பொழுதும் பின்பற்றி வந்துள்ளனர். தற்காலத்திலும் காந்தியடிகள் 'ஈசுவரனும் அல்லாவும் உனது பெயரே; அனைவருக்கும் நல்ல அறிவைக் கொடு பகவானே' என வேண்டினார்.

வள்ளுவரும் பொதுவாக ஒரு தெய்வத்தைக் கூறினாரேயன்றி எத்தெய்வ வழிபாட்டையும் கண்டிக்கவில்லை.

உருவவழிபாடும் நம் நாட்டில் பண்டைக் காலத்திலிருந்து தற்காலம் வரையில் இருந்துகொண்டுதானிருக்கிறது. பத்திக் கவிஞர்களனைவரும் உருவவழிபாட்டை மேற்கொண்டவரே. அதனால் அவர்கள் கடவுட் கொள்கை தாழ்வுற்றது எனக் கூறுதற்கில்லை.

விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்

உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே.

(திருநாவுக்கரசர் தேவாரம், 294. 10 தலமுறை)

'அண்ணியன்' என இறைவனின் எவ்விடத்தும் அண்ணியனாந் தன்மையையும்,

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றினுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் துன்னணுப் புரையச்
சிறியவாகப் பெரியோன்[18] (திருவாசகம், திருவண்டப் பகுதி, 1-6)

என இறைவனின் மீயுயர்வு வாய்ந்த நிலையையும் நன்கு உணர்ந்திருந்தனர்.

வள்ளுவர் உருவ வழிபாட்டையோ கோயிலையோ குறித்து ஒன்றும் கூறவில்லை யென்பதைத் தற்கால எழுத்தாளர் சிலர் எடுத்துக் காட்டுகின்றனர். உண்மையே. ஆயினும் வள்ளுவர் காலத்தில் கோயில்கள் இருந்தன. உருவ வழிபாடும் இருந்திருத்தல் வேண்டும். வள்ளுவர் அவற்றை மறுத்தும் யாதும் கூறவில்லையே.

தீர்க்கதரிசிகள் உருவ வழிபாட்டையும் பிற தெய்வ வழிபாட்டையும் வன்மையாகக் கண்டித்தது ஏன்? மோசேயின் காலத்திலிருந்து ஒரு தெய்வத்தை யுருவமின்றி வணங்கிப் பழகிய யூதர்கள் கானான் நாட்டில் புகுந்த பின்பு அங்கு உருவ வழிபாட்டையும் பல தெய்வ வழிபாட்டையுங் கண்டனர். பல தவறான கொள்கைகளும் கொடூர வழக்கங்களும் மற்றும் மக்கள் நல்வாழ்க்கையைக் குலைக்கும் சில பிழை வழக்குகளும் அவற்றுடன் இணைந்திருப்பதைக் கண்டனர். மக்கட் பலி, அதிலும் குழந்தைகளை நெருப்பிலிட்டுப் பலி செலுத்தும் முறை அக்கானானியரிடையே இருந்தது. பாகால் தெய்வங்களின் வழிபாட்டோடு பொருந்திய கூத்துக்களைச் செய்வோர் உடம்பிலிருந்து

18. பொருள் — ஒன்றைவிட ஒன்று எழிலுடையது எனக் கூறத்தக்கவாய் நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்துள்ள அண்டங்களின் திரண்ட வடிவின் பெருக்கமும் அளத்தற்கு அரிய தன்மையும் வளமுடைய பெரிய காட்சியும் மனையினுள்ளே புகும் ஞாயிற்றின் கதிரில் பொருந்திய அணுக்களை யொப்ப, சிறியனவாகத் தோன்றுமாறு பெரிய அளவினை யுடையோர்.

இரத்தம் வடியத்தக்கதாகக் கத்திகளாலும் ஈட்டிகளாலும் தங்களைக் கீறிக் கொள்வது வழக்கமெனத் தெரிகிறது (இராஜாக்கள் 18 28). இன்னும் அளவுக்குமீறி மது அருந்துதலும் ஆண் பெண் உறவில ஒழுக்கமின்மையும் பாகால் - தய்வங்களின் வழிபாட்டுடன் இணைந்திருந்தன என்பதை ஓசியா எடுத்துக் கூறினார். இத்தகைய தீமைகள் கானான் நாட்டிலும் அயல்நாடுகளிலும் உருவ வழிபாட்டுடன் இணைந்திருப்பதைக் கண்டதனாலேயே தீர்க்கதரிசிகள் உருவ வழிபாட்டையும் பிற தெய்வ வணக்கத்தையும் அவ்வளவு வன்மையாகக் கண்டித்தனர் போலும். இவற்றைக் குறித்துத் தீர்க்கதரிசிகள் கூறும் கூற்றுக்கள் அவர்கள் காலத்தில் அவர்கள் நாட்டிலிருந்த சூழ்நிலைக்குப் பொருந்தும் எனக் கொள்ளலாமேயன்றி அவை நம் நாட்டிற்குப் பொருந்துவனவாகக் கொள்வதற்கில்லை.

நம் நாட்டிலும் மக்கட் பலியும் பிற தவறான வழிபாட்டு முறைகளும் சில சில சமயங்களில் பரவியதுண்டு. பல்லவர் காலத்தில் கபாலிகர் என்ற பிரிவினர் அளவுக்கு மீறி மது அருந்துவதைத் தம் வழிபாட்டு மரபுடன் இணைத்தனர் என்பதை மகேந்திரவர்மன் என்ற பல்லவ மன்னனால் இயற்றப்பட்ட 'மத்த விலாசப் பிரசனம்'[19] என்னும் நாடகம் காட்டும். பக்திக் கவிஞர்கள் அவற்றை ஆதரித்தவரல்லர். நம்மாழ்வார் திருவாய்மொழிப் பதிகமொன்றில் (36. 7) ஆட்டை வெட்டிப் பலியிடுதலையும் கள்ளையும் ஏற்றுக் கொள்ளும் இளந்தெய்வங்களை வழிபடாது இவற்றை வேண்டாத பெருந்தெய்வமாகிய திருமாலை வழிபடுமாறு கூறுகின்றார். தேவார கவிஞர்களும் எவ்வித உயிர்ப்பலியையோ கள் முதலியவற்றைப் படைத்தலையோ கூறாது மலரும் தூபமும் விளக்கும் கொண்டு வழிபடும் முறையையே கூறினார். வழிபாட்டு மரபில் தீமைகள் புகுமாயின் அவை அறிஞர்களால் விலக்குதற்குரியனவே. உருவமின்றி வழிபடினும் அவ்வழிபாட்டில் தவறுகள் புகமாட்டா எனக் கூறுதற்கில்லை. துறவியரைக் குறித்துக் கூறுங்கால் வள்ளுவர்,

> கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
> வினைபடு பாலாற் கொளல் (279)

என்றார். உண்மைத் துறவியரும் இருப்பர், போலித் துறவியரும் இருப்பர். அவ்வவர் செயல் நோக்கி நல்லோர் எனவோ தீயோர்

19. மகேந்திரவர்மன் என்ற பல்லவ மன்னனால் வட மொழியில் எழுதப்பட்ட மத்தவிலாசப் பிரகசனம் என்னும் நாடகம் தற்காலத்தில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இத்தமிழ் மொழிபெயர்ப்பைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தால் வெளியிடப்பட்ட மகேந்திரவர்மன் என்ற நூலில் காணலாம்.

எனவே பிரித்தறிதல் வேண்டும் என்றார். அவ்வாறே வழிபாட்டு மரபுகளிலும் நன்மையானவற்றையும் தவறானவற்றையும் அவ்வவற்றின் பயன் நோக்கி ஏற்றுக்கொள்வதோ விலக்குவதோ பொருந்துவதாகும்.

### 4. 4. 1. ஆறாம் நூற்றாண்டில் கி. மு. 538- ஆம் ஆண்டின் முன் வாழ்ந்தோர்

கி மு ஆறாம் நூற்றாண்டில் நாடு கடத்தப்பட்ட யூதர்களிடையே பாபிலோனிய நாட்டில் இரு தீர்க்கதரிசிகள் தோன்றினர். அவர்கள் எசேக்கியேலும் இரண்டாம் ஏசாயாவுமே. 'புலம்பல்' என்னும் நூலிலுள்ள கவிதைகளைப் பாடினோரும் 6- ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தோரே. இவர்கள் எருசலேம் நகர் பகைவர்களால் அழிக்கப்பட்டபோதும் அதன் பின்பும் எருசலேமிலோ அருகிலோ வாழ்ந்தவராக இருத்தல் வேண்டும்.

எசேக்கியேல் : எரேமியா முதியோராக இருந்தபோது இளைஞராக இருந்தவர் எசேக்கியேல். கி. மு 597 - ஆம் ஆண்டு பாபிலோனியர்களால் போர்க்கைதிகளாக அழைத்துச் செல்லப்பட்டவர்களில் ஒருவர். எசேக்கியேல் ஆசாரியார் குலத்தில் பிறந்தவர். எருசலேம் ஆலயத்தில் பற்று மிகுந்தவர். பாபிலோனியாவிலேயே அவர் தம் தீர்க்கதரிசனப் பணியைத் தொடங்கினார். எசேக்கியேல் கண்ட காட்சிகளும் (Visions) அவர் அடைந்த அனுபவங்களும் சற்று விநோதமாகவே தோன்றும். முதலில் கர்த்தர் விண் வழியாகத் தேவதூதர்களால் தாங்கப்பட்ட ஒரு தேரிலேறி வரக்கண்டார் அவ்வாறு வந்த இறைவனால் நீர்க்கதரிசன ஊழியத்திற்கு அழைக்கப்பட்டார். இவ்வனுபவத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சியினாலோ என்னவோ சில நாட்கள் பேச இயலாத நிலையிலிருந்தார். பின்பு பேசும் ஆற்றலைப் பெற்றார் ஆனால் அதன் பிறகுங்கூட அவர் இடையிடையே பேச இயலாமலும் படுக்கையை விட்டு எழுந்திருக்க இயலாமலும் சிற்சில காலம்இருந்தார் என்பது அவர் நூலினின்றும்தெரிகிறது. அவர் உள்ளத்து உணர்ச்சியின் வேகத்தினால் நரம்புகள் பாதிக்கப் பட்டன போலும்.

'புலம்பல்' பாடினோர்: பழைய ஏற்பாட்டில் புலம்பல்'(Lamentations) என்னும் சிறு நூல் எரேமியாவின் நூலுக்கும் எசேக்கியேல் நூலுக்கும் இடையே உள்ளது, ஐந்து அதிகாரங்களையே கொண்ட இச்சிறு நூல் தற்போது பழைய ஏற்பாட்டில் 'எரேமியாவின்புலம்பல்'

எனக் குறிப்பிடப்படினும் அது உண்மையில் அவரால் எழுதப்பட்டதன்று என விவிலிய நூலறிஞர் கருதுவர். இந்நூல் கவிதை வடிவிலேயே மூல மொழியாகிய எபிரேயத்தில் காணப்படுகிறது. இது பெரும்பாலும் துயரத்தைக் காட்டும் ஒருவகைச் சந்த அமைப்பிலேயே எழுதப்பட்டுள்ளதென்பர்.

இரண்டாம் ஏசாயா : இரண்டாம் ஏசாயாவும் பாபிலோனிய நாட்டில் நாடு கடத்தப்பட்ட நிலையிலிருந்த யூதர்களிடையே தோன்றியவரே. எசேக்கியேல் கி.மு. ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தார். இரண்டாம் ஏசாயா அந்நூற்றாண்டின் இடைப் பகுதியில் வாழ்ந்தவர் ஆதல்வேண்டும்.

பழைய ஏற்பாட்டில் தற்போது ஏசாயா என்னும் தலைப்புடன் 66 அதிகாரங்கள் அடங்கிய ஒரு நூல் காணப்படுகிறது. இதில் முற்பகுதியில் உள்ள சில அதிகாரங்களே கி.மு. எட்டாம் நூற்றாண்டில் எருசலேம் நகரில் வாழ்ந்த ஏசாயா என்ற தீர்க்கதரிசியால் கூறப்பட்டன 40-ஆம் அதிகாரத்திலிருந்து 55- ஆம் அதிகாரம் வரையுள்ள பகுதி பாபிலோனியாவில் ஆறாம் நூற்றாண்டினிடைப்பகுதியில் வாழ்ந்த ஒரு தீர்க்கதரிசியால் எழுதப்பட்டிருக்க வேண்டுமென அறிஞர் கருதுவர் அவர் இயற்பெயர் தெரிந்திலது. ஆகவே அவரை இரண்டாம் ஏசாயா எனக் குறிப்பிடுவது வழக்கமாகி விட்டது.

ஏசாயா சில சீடரைத் தெரிந்தெடுத்துத் தம் கருத்துக்களை அவர்கட்குச் சிறப்பாகக் கற்பித்தார் என ஏசாயா என்னும் நூலின் முற்பகுதியில் கூறப்படுகிறது. (8 16-18) அச்சீடர்கள் அவற்றைப் பிறர்க்குக் கற்பிக்க இவ்வாறாக முதலாம் ஏசாயாவின் சீட பரம்பரையொன்று வளர்ந்து வந்திருக்கலாம். அது சில தலைமுறைகளாகத் தொடர்ந்து இருக்கலாம். இரண்டாம் ஏசாயா, மூன்றாம் ஏசாயா எனக் குறிப்பிடப்படுபவர்கள் (அதாவது முறையே 40-55 அதிகாரங்களையும் அதற்குப் பின்னுள்ள அதிகாரங்களையும் எழுதியவர்கள்) முதலாம் ஏசாயாவின் சீட பரம்பரையில் வந்தவர்களாகவே இருக்கலாம். அதனாலேயே அவர்களின் கூற்றுக்கள் ஏசாயா என்ற தலைப்பின்கீழ் எழுதப்பட்டு ஒரு நூலாகக் கொள்ளப்பட்டிருக்கலாம்.

இரண்டாம் ஏசாயாவின் முக்கிய நோக்கம் பல ஆண்டுகள் பாபிலோனியாவில் வாழ்ந்து அல்லலுற்று உளம் சோர்ந்து போயிருந்த யூதர்கட்கு ஆறுதல்கூறி விரைவில் தாய்நாடு திரும்பி எருசலேம் நகரைப் புதுப்பித்து அங்கு வாழ முடியும் என்னும் நம்பிக்கையை

அளிப்பதே. ஆகவே மக்களுடைய வாழ்க்கை வளமெல்லாம் புல்லையும் பூவையும் போல விரைவில் அழியத்தக்கதெனவும் இறைவ-னின் சொல்லே என்றும் நிலைத்திருக்குமென்றும் அவர் கூறினார். பாபிலோனியர்கள் எவ்வளவு வலிமையுள்ளவர்களாகத் தோன்றினும் இறைவனின் ஆற்றலின்முன் அவர்கள் வலிமை நிற்காது என்பதே அவர் கருத்து. மோசேயின் காலத்தில் யூதர்கள் யாவே தங்கள் இனத்தின் தெய்வமெனக் கருதினர். சிறிது சிறிதாக அவர்கள் கடவுட் கொள்கை விரிவடையலாயிற்று. எட்டாம் நூற்றாண்டுத் தீர்க்க-தரிசிகள் யாவே பிற நாடுகட்கும் இறைவன்; அவ்வந்நாட்டவரின் குற்றங்கட்காக அவ்வவரை ஒறுப்பார் எனக் கற்பித்தனர் யாவே உலக முழுதுக்கும் இறைவன் என்பதை இரண்டாம் ஏசாயா இன்னும் தெளிவாகக் கற்பித்தார். யூதர்கள் தாய்நாட்டைவிட்டு பாபிலோனி-யாவில் சென்று வசிக்க நேரிட்டது அவர்கட்குத் துன்பமாகத் தோன்றினும் பிறநாடுகளுடன் கொண்ட தொடர்பால் அவர்கள் கருத்துக்கள் விரிவடைந்தன போலும்.

4.4.2.1 இவர்கள் கருத்துக்களும் திருக்குறளும்

எசேக்கியேல் செல்வத்தைக் குறித்துக் கூறிய ஒரு கருத்து சிந்-திக்கத்தக்கது. வள்ளுவர் பொருள் செயல் வகையில்,

> செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
> எஃகதனிற் கூரிய தில் (759)

என்றார். எருசலேம் நகரமக்கள் பொன்னையும் வெள்ளியையும் மிகுதி-யாகச் சேர்த்து வைத்திருந்தனர். ஆனால் அவை செறுநர் செருக்-கறுக்கவில்லை. எருசலேம் முற்றுகையிடப்பட்டபோது நகரமக்கள் பலர் உணவின்மையால் இறந்தனர். பொன்னும் வெள்ளியும் பசி தீர்க்கவும் பயன்படவில்லை. பொருள் பயனளிக்கும் காலமுமுண்டு, பயன்படாது போகும் காலமும் உண்டு. பொருள் செயல் வகையில் பொருளின் பயனைக் கூறிப் பொருள் தேடுமாறு வற்புறுத்திய வள்ளுவரே ஊழ் என்னும் பத்தில்,

> வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
> தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது (377)

என்றார். இன்னுல் கி.மு. எட்டாம் நூற்றாண்டிலிருந்தே தீர்க்க-தரிசிகள் பலரும் யூத செல்வர்கள் கடும் வட்டி வாங்கியும் வறியோரை வருத்தியும் கையூட்டுப் பெற்றும் பல தவறான வழிகளிலும் பொருள்

சேர்த்தனர் என எடுத்துக் கூறினர். ஆகவேதான் அது பயன்படாமல் போயிற்று போலும்.

> அன்பொரீஇத் தற்செற்று அறநோக்கா தீட்டிய
> ஒண்பொருள் கொள்வார் பிறர். (1009)

வள்ளுவர் எப்போதும் பொதுநீதிகளையே கூறினார் தீர்க்கதரிசிகள் வரலாற்று நிகழ்ச்சிகளைச் சுட்டிக் காட்டி நீதி கூறினர்.

செடேக்கியா பாபிலோனியர்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையையும் ஆணையையும் மீறி எகிப்தியரின் துணையை நாடி பாபிலோனியர்க்கு எதிராகக் கலகம் செய்தது தவறு என எசேக்கியேல் கூறினார். அந்நிலையில்வள்ளுவர் யாது கூறியிருப்பார் என்பது ஐயத்திற்குரியதே.

> செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
> காணின் கிழக்காம் தலை (488)

என வள்ளுவர் கூறினார். பகைவரை வெல்ல இயலா நிலையில் அவர்கட்குப் பணிந்து வெல்லத்தக்க ஒரு நிலை ஏற்பட்டவுடன் எதிர்த்து வெல்லலாம் எனவே அவர் கருதியதாகத் தோன்றுகிறது. செடேக்கியா எகிப்தின் உதவியுடன் வெல்லலாம் என எண்ணினான்; எகிப்தியரோ போதிய உதவி செய்யாது பின் வாங்கி விட்டனர். ஆகவே வள்ளுவர் கொள்கைகளின்படி நோக்குமிடத்து அவன் நட்பாராய் தலிலேயே தவறி விட்டான் எனக் கொள்ளலாம். எரேமியாவும் எசேக்கியேலுமோ இவ்வாறு அரசியல் முறைப்படி ஆராயாது, செடேக்கியாவின் செயல் தேவ சித்தத்திற்கு மாறானது எனவும் எந்நிலையிலும் இட்ட ஆணையை (Oath) மீறலாகாது எனவும் கூறினர்.

திருக்குறளில் பெற்றோர்செய்யும்நன்மை தீமைகளின் பயனைச் சிறப்பாகப் பெற்றோர் வாழ்ந்த நீதியொடுபொருந்திய நல்வாழ்க்கையின பயனைப் பிள்ளைகள் அடைகின்றனர் என்ற கருத்தைப் பன்முறை காணலாம்.

> தக்கார் தகவிலர் என்பது அவரவர்
> எச்சத்தாற் காணப் படும் (114)
> செப்ப முடையவன் ஆக்கம் சிதைவின்றி
> எச்சத்திற் கேமாப் புடைத்து (112)
> பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
> வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல் (44)

என்பன சான்றாம். இத்தகைய கொள்கைகள் பண்டைக்கால யூதர்களிடையேயும் இருந்தன. எசேக்கியேல் அவற்றை மறுத்தார். பெற்றோர் செய்யும் நற்செயல்களின் பயன் பிள்ளைகளைச் சாரா என்றார். அது அவரின் தனிப்பட்ட கருத்தேயாகும். விவிலியத்திலும் பிற பகுதிகளில், சிறப்பாக நீதிமொழிகளில் (Proverbs) இப்பொருள் பற்றித் திருக்குறளோடொத்த கருத்துக்களைக் காணலாம். நல்லோரின் மக்கள் வளமாக வாழ்வர் என்றே நீதி மொழிகள் கூறுகின்றன. துதிப் பாடல்களிலும் (Psalms) பிற பகுதிகளிலும் கூட இக்கருத்து சிற்சில இடங்களில் காணப்படும்.

எசேக்கியேல் கூறிய பிற கருத்துக்கள் யூத வரலாற்றையும் வழிபாட்டு மரனபயும் குறித்தனவே. அவை அவ்வினத்தார்க்கே பொருந்துவன.

புலம்பல் என்னும் பகுதியில் காணப்படும் நீதிக் கருத்து எருசலேம் நகர் அழிந்தது பகைவரால் மட்டுமன்று, அதனுள் செறிந்திருந்த பல தீமைகளினாலேயே என்பதே. வள்ளுவர் அரசனின் செங்கோலாட்சியே வெற்றியைத் தரும் எனச் செங்கோன்மை என்னும் பத்தில் கூறினார். புலம்பல் பாடிய கவிஞர்கள் அரசனை மட்டும் பொறுப்பாக்காது யூத சமுதாயத்தில் நேர்ந்த பல அநீதிகளினால் மக்கள் செய்த தீமைகளினால் போரில் வெற்றி கிட்டாது தோல்வி ஏற்பட்டது என்றனர்.

இரண்டாம் ஏசாயா கூறும் கருத்துக்கள் பெரும்பாலும் சமயச் சார்பானவை. பாபிலோனியர் யூதர்மேல் செலுத்திய வன்மையான ஆட்சி நெடுநாள் நிலைக்கவில்லை. கி. மு 586 ஆம் ஆண்டளவில் எருசலேம் நகர் அழிக்கப்பட்டது கி மு 539-ஆம் ஆண்டு கோரேசு பாபிலோனியருடன் போர் செய்து வெற்றி பெற்றான். எவ்வரசும் படைவலிமையினால் மட்டும் ஆள இயலாது என்பது பல நீதி நூல்களிலும் கூறப்படும் கருத்தே.

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு (544)

என்பதன் மூலம் குடிகள் நலனைக்கவனித்து அவர்களை நன்கு பேணும் அரசனே நெடுநாள் அரசாள்வான் என வள்ளுவர் விளக்கினார். இரண்டாம் ஏசாயா, கோரேசு வெற்றி பெற்றுயர்வதை நோக்கி அதனால் உணரத்தக்க நீதியை மட்டும் கூறாது அது இறைவனின் செயல், இறைவன் கோரேசின மூலமாக யூதர்கட்கும் பாபிலோனி

யரால் அடிமைப்படுத்தப்பட்ட பிற இனத்தவர்க்கும் விடுதலை யளிப்பார் என்றார். வள்ளுவர்கடவுள்வாழ்ந்தைத் தனியே கூறினார். நீதிகளைத் தனியே கூறினார். கடவுள் இவ்வுலகில் சில செயல்களைச் செய்கின்றார் என்றோ செய்விக்கின்றார் என்றோ அவற்றை இன்ன நோக்கத்துடன் செய்விக்கின்றார் என்றோ கூறும் வழக்கு திருக்குறளிலும் தமிழிலுள்ள பிறநீதிநூல்களிலும் இல்லை இறைவன் தன் பணிக்கெனத் தெரிந்தெடுத்துக் கொண்ட ஒருவர் அல்லது சிலர் மூலம் சில செயல்களைச் செய்விக்கிறார் என்னும் கருத்தைத் தமிழில் உள்ள பக்தி இலக்கியங்களில் அல்லது பெரிய புராணம் போன்ற சமயச் சார்பான இலக்கியங்களிலேயே ஓரளவு காணலாம்.

4.4.2.2. பதிலாளாகத் துன்பம் தீர்த்தல் (Vicarious suffering)

இரண்டாம் ஏசாயாவின் கூற்றுக்களில் சிறந்து தோன்றும் இக்கருத்து தனியே ஆயப்படவேண்டும். ஏனெனில் பின்பு புதிய ஏற்பாட்டில் கிருஸ்தவ சமயக் கோட்பாடுகளில் மைய இடம் பெறுவது இக்கருத்தே. ஒருவர் பிறருக்குப் பதிலாளாகத் துன்பத்தையேற்றுக் கொண்டு அவர்கட்கு நன்மை பயத்தல் கூடும் என்ற கருத்து மிகத்தெளிவாகவும் சிறப்பாகவும் காணப்படுவதுகிருஸ்தவ நூல்களிலேயே. எரேமியா போன்ற தீர்க்கதரிசிகள் தம் நாட்டினர் சார்பாகத் துன்பத்தையேற்று அவர்கட்கு நன்மை செய்தனர். இரண்டாம் ஏசாயா இஸ்ரவேல் இனத்தவர் பிற நாட்டினர் சார்பாகத் துன்பமடைந்தனர் என்றும் அதனால் பிற நாட்டினர்க்கு நன்மை பயப்பர் என்றும் நம்பினார். புதிய ஏற்பாட்டின் காலத்தில் இறைவனே மக்கள் சார்பாகத் துன்பத்தையேற்றார் என்ற கொள்கை கிருஸ்தவ சமயக் கோட்பாடுகளில் மையக் கொள்கையாயிற்று.

'குடிசெயல் வகையில்' ஒருவன் தன் குடும்பத்தின் சார்பாகச் செய்ய வேண்டிய கடமையைக் கூறுமிடத்து வள்ளுவர்,

> இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
> குற்றம் மறைப்பான் உடம்பு (1029)

என்றார் தன் குடும்பத்தின் சார்பாகத் தான் துன்பத்தை யேற்றுத் தன் குடியை யுயரச் செய்ய முன்வருபவன் ஒருவன் எவ்வளவு துன்பமாயினும் தாங்க ஒப்புவான் எனக் கருதி அவன் உடம்பு இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ என்றார்.

சான்றோர்கள் தம் பழிக்கு மட்டுமன்றிப் பிறர் பழிக்கும் நாணி வருந்துவர் என்பதை,

பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
உறைபதி என்னும் உலகு (1015)

என்ற குறள் மூலம் கூறினார். சான்றோர்கள் பிறருக்கு வந்த பழியைத் தமக்கு வந்ததாகக் கருதி நாணுவர். அத்தகையோரை யாவரும் புகழ்வர். இவ்வாறு பிறர் சார்பாகத் துன்பமுறுதல் பிறர் சார்பாக வருந்துதல் ஆகிய கருத்துக்களைச் சிற்சில குறள்களில் காணலாம்.

தம் குடும்பத்துக்கு நேரத்தக்க துன்பத்தை நேராமல் காப்பதற்காகவோ தன் குடும்பத்தினரிடமுள்ள குறையை மறைப்பதற்காகவோ ஒருவன் துன்பத்தை ஏற்றுக் கொள்ள மனமுவந்து முன் வருதல்கூடும் என்றார் வள்ளுவர். (குற்றம் மறைப்பான் என்பதற்குத் 'துன்பம் உறற்பாலதாய தன் குடியை அவை உறாமற் காக்க முயல்வான்' என்பது பரிமேலழகர் கொண்ட பொருள். 'தன் சுற்றத்தார்மாட்டு உளதாய குறையை மறைக்கக் கருதுவான்' என்பது மணக்குடவர் கொண்ட பொருள் ) ஓரினத்தவரையோ ஒரு நாட்டவரையோ ஒரு குடும்பமாகக் கருதுமிடத்துத் தன்நாட்டு மக்கள்பால் அன்புடைய தலைவர் ஒருவர் அவர்சார்பாகத் துன்பத்தையேற்று அவர்க்கு நன்மை பயத்தல் கூடும். உலக முழுவதையும் ஒரு குடும்பமாகக் கருதுமிடத்து ஓரினத்தவர் அல்லது ஒருநாட்டவர் பிறநாட்டவர் சார்பாகத் துன்பமுற்று அவர்க்கு நலம்செய்தல் கூடும் அல்லது ஒப்பற்ற தலைவர் ஒருவர் உலக மக்கள் அனைவர் சார்பாகவும் தான் துன்பத்தையேற்று அவர்க்கு நன்மை செய்தல் கூடும் என்ற கருத்துக்களைப் புரிந்து கொள்ளலாம். இறைவனை மக்கள் அனைவர்க்குந் தந்தையாகக் கருதின்மக்கள்சார்பாக இறைவன் துன்பத்தையேற்று அவரைக் காக்கிறான் என்ற இறையியல் கொள்கையையும் புரிந்து கொள்ளலாம்.

வள்ளுவர் இறைவனைப் 'பற்றற்றான்' (குறள் 350) என்றார். தமிழ் நாட்டில் பிற்காலத்துத் தோன்றிய சைவ சித்தாந்த நூல்களும் இறைவன் இவ்வுலக நிகழ்ச்சிகளைக் குறித்து இன்பமோ துன்பமோ அடைவதில்லை என்று தான் கூறுகின்றன. இடைக்காலத்து வாழ்ந்த பக்திக் கவிஞர்களும் அவ்வாறுதான் கருதினார்களா? புராணக்கதைகளின் மூலம் சமய உண்மைகளையும் இறைவனின் இயல்பையும் விளக்க முயல்வது பக்தி இலக்கியங்களின் இயல்புகளில் ஒன்றாகும். சைவ சமயக் கவிஞர் அனைவரும் சிவபெருமான் பாற்கடலிலெழுந்த நஞ்சை யுண்டதைக் குறித்துப் பாடினர். புவனங்கள் உய்ய ஐயர் பொங்கு நஞ்சுண்ட தவச்செயல் அன்பருள்ளத்தைக் கவர்ந்தது.

தேசுடையாய் எனையாளுடையாய் சிற்றுயிர்க்கிரங்கிக்
காய்ச்சின ஆலமுண்டா யமுதுண்ணக் கடையனே
(திருவாசகம், நீத்தல் விண்ணப்பம், 50)

எனவும்,

அண்டவர்கள் கடல் கடைய அதனுள் தோன்றி
அதிர்ந்தெழுந்த ஆலாலம் வேலை ஞாலம்
எண்டிசையும் சுடுகின்ற வாற்றைக் கண்டும்
இமைப்பளவில் உண்டிருண்டகண்டர்
(திருநாவுக்கரசர் தேவாரம், 61. 8 தலமுறை)

எனவும் மனமுருகிப் பாடிய பக்திக் கவிஞர்கள் இக்கதையின் மூலம் என்ன உண்மையைக் கண்டார்கள்? இறைவன் உயிர்கள் சார்பாகத் துன்பமோ துயரமோ அடைகிறான் என அவர்கள் எண்ணினார்களா? இது சிந்தித்தற்குரியதே.

பக்திக் கவிஞர்கள் பலர் சிவபெருமான் நஞ்சுண்ட செயலைக் குறித்துப் பாடியிருப்பினும் திருநாவுக்கரசர் ஏனையோரைவிட இக் கதையில் அதிகப் பொருளைக் கண்டார் எனலாம். ஏனெனில் அவர் வாழ்க்கையில் பல துன்பங்களையடைந்தார். அக்காலத்தில் தமிழ் நாட்டில் பரவியிருந்த சைவசமயம் சமணசமயம் ஆகிய இரு சமயங்களிலுமே பல தவறுகள் செறிந்திருந்ததனாலும் இருசமயத்தாருக்கும் இடையேயிருந்த பகையினாலும் அவர் பல துன்பங்களையடைய வேண்டியதாயிற்று. அக்காலச் சைவசமயத்தவர் பலர் ஒழுக்கத்தைப் பேணாதிருந்தநிலையைக்கண்டு அச்சமயத்தில்நிறைவுகாணாதவராய் ஒழுக்கத்தைக் கற்பிக்கும் சமண சமயத்தைத் தழுவியும் அதிலும் உடலை வருத்தி நல்வாழ்க்கையைக் கெடுக்கும் பொருளற்ற செயல்களும் உள்ளத்தில் தாழ்மையும் பணிவும் அன்பும் அற்ற புறத்துறவுமே நிறைந்திருப்பதைக் கண்டு மனம் வருந்தி நோயுற்றார் ஆனால் சமய உண்மைகளைக் குறித்துச் சிறு வயதிலிருந்தே ஆழ்ந்து சிந்தித்து அக்காலத் தமிழ்நாட்டிலிருந்த சமய நிலையினால் நிறைவடையாது வருந்திய அவர் ஏனையோரைவிட ஆழ்ந்த சமய அறிவைப் பெற்றார். சிறப்பாகப் பக்தியையும் ஒழுக்கத்தையும் இணைக்கும் உயர்நெறியைக் காட்டினார்[20].

20. Meenakshisundarm, T P, A History of Tamil Literature, P. 72-73:

"Appear was a Jain before he became a convert to saivaism. He remembers his life as a naked ascetic which was a revolting sight to the women of the land. That life, he later realises, was a life of vain mortification of the body, steeping it in dirt, denying it even the pleasure of a simple

[Contd.]

திரும்பவும் சைவ சமயத்தைத் தழுவிய அவரைச் சைவர்கள் பலர் 'பிற சமயத்தைச் சேர்ந்து திரும்பியவன்'எனக் குறை கூறினர். அவர் அடைந்த நோய் இறைவனின் தண்டனை எனவும் கருதினர். ஆனால் உண்மையில சைவ சமயம் உயர்வற்றது திருநாவுக்கரசராலேயே. பக்திக் கவிஞர்களில் முற்பட்டவர் அவரே பின்பே பிறர் தோன்றினர் சமண சமயத்தவரும் அவருக்குப் பல துன்பங்களைச் செய்தனர் என்பதை அவர் பாடல்கள் காட்டும். ஆயினும் இறையருளில் ஆழ்ந்த நம்பிக்கையுடன் துன்பங்கள் அனைத்தையும் ஏற்று வென்றனர். சிவ பெருமான் நஞ்சுண்ட காட்சி அவர் உள்ளத்திலிருந்த ஆழ்ந்த மன உறுதியையும் இத்துன்பங்களின் மூலம் நன்மையேற்படும் என்ற நம்பிக்கையையும் அவருக்கு அளித்ததென்பதை அவர்

---

[*Continuation*]

bath. Perhaps his heart was iu need of a loving Porp. Therefore the religion of self reliance building itself according to him on a series of regations, inspite of its knowledge and sincerity brought him only a stomachache. This inner tension was removed when he became a convert to saivaism''.

... ... ... ... ... ... ... ... ...

"It is indeed a good fortune that he was a Jain. Jainism emphasises the ethical principle. He cannot renounce the moral grandeur of that life. In that age various Saivite cults though emphasising the unique devotion to God, permitted all kinds of mental and moral aberations But he revolutionises the whole Saivite attitude of life, by laying the emphasis on the fundamental ethical principle of this Universe, a principle which out of his own experience he equated with Shiva''.

தெ பொ. மீனாட்சி சுந்தரனார் ஆங்கிலத்தில் எழுதிய இலக்கிய வரலாற்றில் திருநாவுக்கரசர் வாழ்க்கையைக் குறித்துக் கூறிய இவ்விளக்கமே இங்குப் பெரிதும் பின்பற்றப்பட்டது.

''கருவுற்ற நாள் முதலாக உன் கழலடி காண்பதற்கு, உருகிறதென்னுள்ளம் நாளும் கிடந்தலறுததெய்த் தொழித்தேன்'' (248.6 தலமுறை) எனவும் ''கலநதிங்கிலு முன்னை மறந்தறியேன்'' (271.6 தலமுறை) எனவும் கூறிய நாவுக்கரசர் என்றும் இறைவனை மறந்ததில்லை. தம் காலத்தில் தமிழ்நாட்டிலிருந்த சமய நிலையினால் நிறைவடையாது வருந்தி நோயுற்ற அவர் நோய்நீங்கப் பெற்றபோது முன்பு காம அறியாதனவும் தம் காலத்துப் பிறரும் அறியாதனவுமாகிய சமய உண்மைகள் உணர்ந்தார் என்பதை 'உற்றதோர் நோய்களைந் திவ்வுலகமெல்லாம் காட்டுவான்:' (14.9 தலமுறை) எனவும் ''கல்லாதனவெல்லாங் கற்பித்தானைக் காணாதனவெல்லாம் காட்டினானைச் சொல்லாதனவெல்லாஞ் சொல்லி யென்னைத் தொடர்ந்திங்கடியேனையாளாக் கொண்டு, பொல்லாதவன் நோய் தீர்த்த புனிதன்'' (81.1 தலமுறை) எனவும் வரும் அவர் பாடலின் அடிகள் காட்டும்.

பாடல்களினால் அறியலாம்[21]. திருநாவுக்கரசரும் அவரை அடுத்துத்தோன்றிய திருஞானசம்பந்தரும் தனித்து வாழ்ந்த துறவிகள் அல்லர். தம் காலத்தில் நாட்டில் ஒரு பெருஞ்சீர்திருத்த இயக்கத்தைத் தோற்றுவித்த தலைவர்களாவர் திருநாவுக்கரசரின் வாழ்க்கையினாலும் பணியினாலும் சைவ சமயம் எழுச்சி பெற்றுயர்ந்தது. பக்தி யியக்கத்தினால் சமணசமயம் கூட ஓரளவு திருத்தம் பெற்றது என வரலாற்றை யுணர்ந்தோர் கூறுவர். தமிழ்நாடு முழுவதும் இக்கவிஞரின் பணியினால் நன்மை யடைந்தது.

திருநாவுக்கரசர் தம் காலத் தமிழ் மக்கட்குப் பதிலாளாக துயரம் துய்த்து அதன் நற்பயனை அவர்கட்கு அளித்தார் எனல் பொருந்தும். தமிழ்நாட்டைத் தன் குடும்பமாகக் கருதி அதன் குற்றத்தை மறைத்தார். இடும்பையை ஏற்றார்.

யூத வரலாற்றில் ஏசாயா எரேமியா போன்ற பெரும் தலைவர்கள் தம் இனத்தவர் செய்யும் தவறுகட்காக வருந்தினர். பிறர் பழிக்குத் தாம் நாணினர். தம்மினத்தவரே தம்மை எதிர்த்துத் துன்பம் செய்த போதும் இறுதியில் அவர்க்கு நலம் பயந்தனர்.

மக்கள் சமுதாயத்தில் காணப்படும் தீமைகளின் பொருட்டு இறைவனும் துயரடைகின்றான் என்ற கருத்தைப் பழைய ஏற்பாட்டிலும் ஓரளவு காணலாம். கணவன் மனைவிக்காகவோ தந்தை மகனுக்காகவோ துயருறுவது போல மக்கள் சார்பாகத் துயருறும் இறையன்பை ஓசியாவின் நூல் காட்டும் புதிய ஏற்பாட்டில் இக்கருத்து இயேசு பெருமானின் வாழ்க்கையினாலும் சொல்லினாலும் இன்னும் தெளிவாக்கப்பட்டது.

### 4. 5. 1. நாடு கடத்தப் பட்ட யூதர்கள் திரும்பியபின் வாழ்ந்தோர்

கி மு. 539-ஆம் ஆண்டளவில் பாபிலோனியரை வென்ற கோரேசு, பாபிலோனியர்களால் நாடு கடத்தப்பட்ட பிற இனத்தவர் அனைவரும் தத்தம் தாய்நாடு திரும்பலாம் என அனுமதியளித்தது.

21. "அலையடுத்த பெருங்கடல் நஞ்சமுதாவுண்டு அமரர்கள் தம் தலைகாத்த ஐயர்' (73-1 தலமுறை) எனச் சிவபிரான் நஞ்சுண்ட செயலைப்பாடும் கவிஞர் தாம சமணர் பகையினால் அடைந்த துன்பத்தைக் கூறும் போதும்,

துஞ்சிருள் காலைமாலை தொடர்ச்சியை மறந்திராதே
அஞ்செழுத்தோதி நாளும் அதனடிக்கன்பதாகும்
வஞ்சனை பாற்சோறாக்கி வழக்கிலா அமணர் தந்த
நஞ்சமுதாக்கு வித்தார் நனிபள்ளி யடிகளாரே (129.5 தலமுறை)

எனக் கூறுவது சான்றாம்.

மட்டுமன்றி அவ்வந்நாட்டுக் கோயில்களினின்றும் பாபிலோனிய மன்னரால் கைப்பற்றிக் கொணரப்பட்ட பொருள்களையும் அவ்வந்நாட்டு மக்கட்கே திரும்ப அளித்து அக்கோயில்களை திரும்பவும் கட்டப் பெறுமாறு உதவியும் செய்தான் கோரேசின் அனுமதியுடன் யூதர்கள் சிறிது சிறிதாகத் தாய்நாடு திரும்பத் தொடங்கினர். திரும்பியவர்கள் மறுபடியும் வயல்களையும் தோட்டங்களையும் பண்படுத்திப் பயிர்விளைவித்தல் ஆடு மாடுகளை மேய்த்தல்முதலிய தொழில்களில் இயல்பாக ஈடுபட்டபோது போதிய விளைபொருளைப் பெறாதவர்களாய் வறுமையினால் துன்பமுற்றனர். இந்நிலையிலேயே ஆகாய், சகரியா என்னும் தீர்க்கதரிசிகள் தோன்றி அவர்களை ஆலயத்தைத் திரும்பக் கட்டுமாறு ஊக்குவித்தனர்.

ஏசாயா என்னும் நூலில் 56-இலிருந்து 66 வரையுள்ள அதிகாரங்களை எழுதியவரையே விவிலிய நூலை ஆயும் அறிஞர்கள் மூன்றாம் ஏசாயா எனக் குறிப்பிடுகின்றனர். ஆயினும் இப்பகுதியை எழுதியவர் யார் என்பதைக்குறித்து அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உளது சிலர் 40-66 வரையுள்ள அதிகாரங்களை ஒருவரே எழுதினார் எனவும் கருதுவர். இது சற்றுப் பழைய கருத்தே. 40-55 வரையுள்ள அதிகாரங்களை எழுதியவர் வேறு, 56-66 வரையுள்ள அதிகாரங்களை எழுதியவர் வேறு என்ற கருத்தே தற்போது ஆராய்ச்சியாளரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது 56-66 வரையுள்ள அதிகாரங்களை எழுதியவர் ஒருவரா பலரா எனவும் அறிஞர் ஆராய்கின்றனர். இப்பகுதியில் பலரின் கூற்றுக்கள் அடங்கியிருக்கலாம், அவர்களனைவரும் முதலாம் ஏசாயாவின்சீடபரம்பரையைச் சேர்ந்தவர்களாகவே யிருக்கலாம்.

ஆகாயும் சகரியாவும் ஆலயத்தைக் கட்டும்படி மக்களை ஊக்கினர். ஆனால் ஆலயம் கட்டுவது முக்கியமன்று, மக்கள் தங்கள் உள்ளத்தைத்திருத்தி நல்வாழ்க்கைமேற்கொள்வதும் இறைவனிடத்து உளமார்ந்த அன்பு செலுத்துவதுமே வேண்டப்படுவதாகும் எனச் சிலர் கருதினர் ஏசாயா நூலின் பிற்பகுதியை எழுதினோர் இக்கருத்து உடையவரே.

மல்கியா, ஒபதியா என்னும் இருவரும் கி மு. 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என ஆராய்ச்சியாளர் கருதுவர்.

ஆலயம் கட்டியபின் சில நாட்கள் மக்கள் புதுமை யார்வத்தினால் வழிபாட்டை ஒழுங்காகச் செய்தனர் ஆலயப் பணிக்காகத் தம்

வருவாயில் பத்திலொரு பங்கை யளித்தனர் நாளடைவில் இயல்பாக ஊக்கம் குறையலாயிற்று. இந்நிலையிலேயே மல்கியா தோன்றினார்.

ஓரதிகாரமே கொண்ட ஒபதியாவின் நூல், யூதர்கட்கு அயலில் வாழ்ந்த எதோமியருக்கு (Edomites) இயற்கையினாலோ பகைவராலோ நேர்ந்த அழிவைக் குறித்துக் கூறுகிறது.

ஒபதியாவின் நூலில் சமய உணர்ச்சியோ நீதிக் கருத்தோ அன்றித் தேசீய உணர்ச்சியே காணப்படுகிறது.

யோவேல் கி. மு ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியிலோ நான்காம் நூற்றாண்டிலோ வாழ்ந்திருக்க வேண்டுமென்பர்.

யோவேலின் காலத்தில் வெட்டுக்கிளிகளினால் பயிர்கட்குப் பெருஞ்சேதம் ஏற்பட்டது. அவ்வாண்டு மழையும் குறைவாக இருந்ததனால் கடும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது ஆலயத்தில் படைத்து வழிபடுவதற்குக் கூட உணவுப் பொருள்கள் இல்லை. இத்தகைய அழிவு, மக்களின் தவறுகட்கு இறைவனின் தண்டனையாகவே ஏற்பட்டது எனக் கருதிய யோவேல் மக்களனைவரையும் நோன்பு மேற்கொண்டு இரட்டணிந்து செய்த தவறுகட்கு வருந்துபவர்களாய் ஆலயத்தில் வந்து வழிபாடு செய்யுமாறு அழைத்தார். அவ்வாறே அனைவரும் வந்து கூடி வழிபாடு செய்தபின் மழைபெய்தது. நாடு மறுபடியும் செழிக்குமென யாவே உறுதி தந்ததாகக் கருதி மக்கள் மகிழ்ந்தனர்.

யோவேலின் நூல் இறுதி நியாயத் தீர்ப்பைக் குறித்து இவ்வாறு கூறுவதனால் இதில் 'வெளிப்பாடு' (A pocalypse) எனப்படும் இலக்கியங்களின் தன்மை ஓரளவு காணப்படுகிறதென்பர்.

தானியேல் பழைய ஏற்பாட்டின் மிகப் பிற்பட்ட நூல்களில் ஒன்று. இது கி மு.இரண்டாம் நூற்றாண்டிலேயே எழுதப்பட்டிருக்க வேண்டுமென ஆராய்ச்சியாளர் கருதுவர். தானியேல் பிற தீர்க்கதரிசிகளின் நூலைவிட வேறாயது. இது 'வெளிப்பாடு' என்ற இலக்கிய வகையைச் சேர்ந்ததே புதிய ஏற்பாட்டில் 'வெளி' (Revelations) என்னும் நூலும் இவ்வகையைச் சேர்ந்ததேயாகும்

'வெளிப்பாடு' எனப்படும் இலக்கியங்கள் கி. மு இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. முதலாம் அல்லது இரண்டாம் நூற்றாண்டு வரை யூதர்களிடையே தோன்றின. பெர்சியர் பெருந்தன்மையுடையோராய்த் தம்மால் ஆளப்பட்ட பல இனத்தவர்க்கும் தத்தம் வழிபாட்டு முறையைப் பின்பற்ற உரிமையளித்தனர். கிரேக்கர், அதிலும்

கி. மு இரண்டாம் நூற்றாண்டிலிருந்த கிரேக்க அரசர்களும் அதிகாரி-களும் அவ்வாறு செய்யவில்லை எனத் தெரிகிறது. கிரேக்கர்கள் யூதர்-களைத் தங்கள் வழிபாட்டு முறைகளைப் பின்பற்றும்படி கட்டாயப் படுத்தியும் யூத ஆலயத்தில் பிற தெய்வ வழிபாட்டைப் புகுத்தியும் யூதர்களைத்துன்புறுத்தியதனால் யூதர்கள்கிரேக்கர் ஆட்சிக்குமாறாகக் கலகம் செய்தனர். அக்காலத்திலேயே தானியேல் என்னும் நூல் எழுதப்பட்டிருக்க வேண்டுமென ஆராய்ச்சியாளர் ஊகிக்கின்றனர்.

'வெளிப்பாடு' எனப்படும் இலக்கியங்கட்குச் சில பொதுத் தன்மைகள் உள. அவற்றில் வரலாற்று நிகழ்ச்சிகள் பல உருவகமாகச் சித்திரிக்கப்படும் நாடுகளும் அரசர்களும் விலங்குகளாக உருவகிக்கப் படுவர். யூதர்கள் ஆள்வோரால் துன்புறுத்தப்பட்ட காலத்தில் ஆள்வோர்க்கு மாறாக எழுதப்பட்டன. இவ்விலக்கியங்களாகையினால் பல செய்திகளை இவற்றில் வெளிப்படையாகக் கூறாது மறைமுக-மாகவே கூறுவர். எழுதுவோர் தம் பெயரைக்கூறாது தம் காலத்திற்கு முன் வாழ்ந்த பெயர்பெற்ற பக்தர் அல்லது பெரியோரொருவர்க்குக் கடவுள் அருளால் வெளிப்படுத்தப்பட்ட செய்தி இது எனக் கூறிச் சில செய்திகளைச் சொல்வதும் இவ்வகை இலக்கியங்களில் காணப்-படும் ஒரு முறையாம். வெளிப்பாடு எனப்படும் இலக்கியங்களனைத்-தும் இறுதி நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கூறும்.

தானியேல் என்னும் நூல் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டதேயாயினும் பாபிலோனியராட்சிக் காலத்தில் (கி. மு. ஆறாம் நூற்றாண்டில்) நிகழ்ந்த சில செய்திகளைக் கூறுவது போல எழுதப்பட்டுள்ளது நாடு கடத்தப்பட்ட யூதர்களில் ஒருவனாகிய தானியேலே இந்நூலின் கதைத் தலைவனாக விளங்குகின்றான்.

இந்நூல் இறுதித்தீர்ப்பைக் குறித்துக்கூறுகிறது. இறந்தவர்கள் அத்தீர்ப்பின்போது எழுந்திருந்து தத்தம் வாழ்விற்கேற்ற நற் பயனையோ தண்டனையையோ அடைவர் என்ற கருத்தும் இங்குக் காணப்படுகிறது. யூத இலக்கியத்தில் இத்தகையதோர் கருத்து முதன் முதலாகக் காணப்படுவது தானியேல் என்னும் நூலிலேயே.

வெளிப்பாட்டு இலக்கியங்களில் 'தானியேல்', 'வெளி' என்ற இரண்டே விவிலியத்தில் சேர்க்கப்பட்டன. விவிலியத்தில் சேர்க்கப் படாத வேறு சில வெளிப்பாட்டு இலக்கியங்களும் (Apocalyptic liter ature) அக்காலத்துத் தோன்றின. சமயக் கொள்கைகளின் நிமித்தம் பிறரால் துன்புறுத்தப்பட்ட மக்கட்கு ஊக்கம் அளிப்பதே அவற்றின்

முக்கிய நோக்கமாகும். வெளிப்பாடு எனப்படும் நூல்கள் தீர்க்கதரிசி களின் நூல்கட்கு வேறாக விளங்கினும் அவற்றோடு ஓரளவு தொடர்பு டையவையே. இவை தீர்க்கதரிசிகளின் கருத்துக்களை ஓரளவு தழுவி எழுதப் பட்டவையாகையினால் இங்குத் 'தானியேல்' தீர்க்கதரிசிகள் என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டது

4.5.2. இவர்கள் கருத்தும் திருக்குறளும்

ஆகாயும் சகரியாவும் ஆலயத்தைக் கட்டுமாறு மக்களை ஊக்கு வித்தனர். ஏசாயாவைப் பின்பற்றிய சிலர் 'ஆலயத்தைக் கட்டு-வதனால் என்ன பயன், நன்னெறியில் சென்று வறியோரை ஆதரி யுங்கள்' எனக் கற்பித்தனர்.

கோயில் கட்டலாமா ஆகாதா என்பதைக் குறித்து வள்ளுவர் யாதும் கூறவில்லை. குறளில்தான் கோயிலே இல்லையே. கோயில் கட்டிப் பலி செலுத்தி வழிபடுவதைவிடத் தூய வாழ்க்கையை மேற் கொண்டு உள்ளத்தைக் கோயிலாக்குவதே சிறந்தது என ஏசாயா நூலின் பிற்பகுதியில் கூறப்பட்ட கருத்தை,

படமாடக் கோயில் பரமர்க் கொன்றியின்
நடமாடக் கோயில் நம்பர்க் கஃதாகா
நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றியின்
படமாடக் கோயில் பரமர்க் கஃதாமே (1821)

எனக் கூறிய திருமூலர் வாக்குடனேயே ஒப்பிடலாம். தமிழ் நாட்டில் கோயிலும் கோயில் வழிபாடும் மிகவும் சிறப்பிக்கப்பெற்ற பல்லவர் காலத்திலேயே ஓவியங்களையோ சிலைகளையோ வைத்து வழிபாடு செய்யுங் கோயில்களைக் கட்டுவதில் கருத்தைச் செலுத்தாது அன்-பர்கள் தாமே நடமாடுங் கோயில்களாக விளங்க வேண்டுமென அவர் கூறினார்.

நோன்பு நோற்கும் முறையைக் குறித்தும் ஏசாயாவின் சீட பரம்பரையினர் சில கருத்துக்களைக் கூறினர். வள்ளுவர் காலத்திலும் ஒருநாள் முழுவதும் உண்ணாதிருந்தோ அன்றி உணவைக் குறைத்தோ நோன்பு மேற்கொள்ளும் வழக்கம் இருந்ததென்பதை 'உண்ணாது நோற்பார் பெரியர்' (160), 'ஆற்றுவார்ஆற்றல்பசியாற்றல்' (225) என வரும் திருக்குறள் தொடர்களால் அறியலாம். சமயக் கணக்கர் தம் மதி வழி கூறாதவராகிய வள்ளுவர் நோன்புகட்குரிய விதிகளையும் கூற-வில்லை. நோன்பைக் குறித்து ஏசாயாவின் நூல் கூறும் கருத்துக்கள்

திருப்பாவையில் ஆண்டாள் கூறும் கருத்துக்களுடன் ஒப்பிடத்தக்கன ஆண்டாள்,

நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்

என நோன்புக்குரிய விதிகளைக் கூறியதுடன்,

செய்யா தனசெய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி யுகந்தேலோர் எம்பாவாய்

(திருப்பாவை, 2)

என நோன்பு நோற்பவர் கைக்கொள்ள வேண்டிய அறங்களைக் குறித்தும் கூறினார் நோன்புநோற்கும் காலத்துத்தகுதியற்ற செயல்களைச் செய்யாதவர்களாய் பிறரைக் குறித்துக் குறை கூறுவதையும் தவிர்த்தவர்களாய்த் தப் மாலியன்றவரை வறியவர்க்கு உணவு முதலியவற்றை யளித்தலே ஏற்றதாம் என்றார். வள்ளுவர் நோன்புக்குரிய விதிகளைக் கூறாவிடினும்,

அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம் (35)

எனப் பல அறங்களுக்கும் கூறியதையே நோன்புக்கும் பொருந்துவதாகக் கொண்டு நோன்பு நோற்கும் காலத்தும் வெகுளி கடுஞ்சொல் ஆகியவற்றை நீத்துத் தூய உள்ளமுடையோராயிருத்தல் தகும் எனலாம். இன்னும், 'ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல்' எனக் கூறியவர் அடுத்து 'அப்பசியை மாற்றுவார் ஆற்றலின் பின்' எனவும் கூறி வறியவர்க்கு உணவளித்தலையே நோன்பைவிடச் சிறப்பித்ததனால் நோன்பு மேற்கொள்பவர் அந்நாட்களில் வறியோர்க்கு உணவளித்தல் அவர் கருத்துக்கும் ஏற்றதே எனலாம்.

கர்த்தரின் ஊழியனாக இருக்க விருப்புபவர் பலவகையிலும் துயருற்றோரின் துயரை நீக்குவதையே கடமையாகக் கொள்ள வேண்டும் என ஏசாயா நூலில் கூறப்படும் கருத்தும் 'மன்னுயிரோம்பி அருளாளுமாறு' (44) கற்பித்தவள்ளுவர் கருத்துக்குப் பொருந்துவதே யாயினும் துன்புற்றோரைத் தேடித் துயர் நீக்குமாறு வள்ளுவர் இவ்வளவு வற்புறுத்திக் கூறவில்லை

மல்கியா எத்தகையவிலங்குகளைப் பலியிடக்கொணரவேண்டும் எனக் கூறினார். வள்ளுவர் விலங்குகளைக் பலியிடும் வழக்கத்தையே

விரும்பவில்லையாகையினால்குறளில் இக்கேள்வியே எழ இடமில்லை. தமிழ்நாட்டில் இந்நூற்றாண்டின்முற்பகுதிவரையிலும் விலங்குகளைப் பலியிடும் வழக்கம் இருந்ததெனினும் பொதுவாகத் தமிழிலக்கியங்கள் அவ்வழக்கத்தைப் போற்றவில்லை யூதர்களிடையே புதிய ஏற்பாட்டின் காலம் வரையிலும் விலங்குகளைப் பலியிடும் வழக்கம் இருந்தது அவ்வாறு பலியிடும் வழக்கம் இருந்தபோது குருடும் முடமுமானவற்றைக் கொணர்தல் வழிபாட்டில கருத்தின்மையைக் காட்டும்எனக் கருதியே மல்கியா அதைக் கண்டித்தார். கதோ உபநிடதத்தில் ஒரு வேள்வியின் இறுதியில் சில பசுக்களைத் தானமாகக் கொடுக்க வேண்டியிருந்தபோது நச்சிகேதசின் தந்தை முதிய வயதுடைய பயனற்ற பசுக்களையே தேடியளிக்கக் கண்டு சிறுவனான நச்சிகேதசு உளம்வருந்தினான் எனக் கூறப்படுகிறது[22]. பலியாகவோ தானமாகவோ ஒரு பொருளை யளிக்கும்போது நல்லதைக் கொடுக்க மனமின்றி வேண்டாததைக் கொடுத்தல் பலரின் இயல்பு. அது எவ்வளவு தகுதியற்ற செயல் என்பதை அறவோர் எடுத்துரைக்கின்றனர்.

ஆசாரியார்கள் மிக உயர்ந்தோராய் விளங்கவேண்டுமென மல்கியா எதிர்பார்த்தார். தமிழ்நாட்டில் அக்காலத்துச் சமய நூல்களைக் கற்பிக்கும் அந்தணர்கள் உயர் ஒழுக்கமுடையோராய் வாழ வேண்டுமென வள்ளுவரும் எதிர்பார்த்தார் என்பது,

மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும் (134)

என்றக் குறளினால் புலனாகும்

முதல் மனைவியைத் தள்ளி வைத்து வேறொருபெண்ணை மணம் செய்யும் வழக்கத்தை மல்கியா எதிர்த்தார். பழைய ஏற்பாட்டின் காலத்தில் இவ்வழக்கம் யூதர்களிடையே அதிகமாக இருந்தது. புதிய ஏற்பாட்டில் இயேசு பெருமானும் இவ்வழக்கத்தைக் கண்டித்தார். மனைவியைத் தன்னுதற் சீட்டளித்துத் தள்ளி வைக்கும் வழக்கம் தமிழ்நாட்டில் இருந்ததில்லை.மனைவியை வாழ்க்கைத்துணையெனக் கருதிய வள்ளுவர் ஒருவனும் ஒருத்தியும் வாழ்நாள் முழுதும் இணைந்து வாழ்தலையே விரும்பினார் என்பது தெளிவு.

வெட்டுக்கிளிகளினால் பயிர்கட்கு ஏற்பட்ட அழிவை மக்கள் செய்த தவறுகட்காக இறைவனின் தண்டனையென யோவேல் கரு-

22. Radha Krishnan (trans), The Principal upanishads, Katha Chap I, Section I.

தினார் மக்கள் அரத்தொடு பொருந்த வாழாவிட்டால் இயற்கைவளம் குன்றும் என்னும் கருத்து திருக்குறளிலும் காணப்படுவது முன்பே குறிப்பிடப்பட்டது.

யோவேலின் நூலிலும் தானியேல் என்னும் நூலிலும் இறுதித் தீர்ப்பைக் குறித்த கருத்துக்கள் காணப்படுகின்றன. இவர்கட்கு முன் வாழ்ந்த சில தீர்க்கதரிசிகளின் நூல்களிலும் கூட இறுதித் தீர்ப்பைக் குறித்த கருத்துக்கள் காணப்பட்டன. உலக வரலாற்றின் இறுதியில் இறைவன் மக்கள் அனைவர்க்கும்நியாயத்தீர்ப்புவழங்குவார்என்னும் ஒரு கருத்து தமிழ்நாட்டில் நீதி நூல்களிலோ பிறநூல்களிலோ காணப் படாத ஒன்றாகும். புத்தருக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இந்திய நாட்டில் மறுபிறவி வினைத்தொடர்பு குறித்த கருத்துக்கள் பரவி வந்தன. தமிழ்நாட்டிலும் சங்க காலத்துக்கு முன்னிருந்தே இத்தகைய கருத்துக்கள் நிலவி வந்தன எனத் தோன்றுகிறது. நம் நாட்டவர், நல்லோர் பல துன்பங்களுக்கு ஆளாவதையோ, தீயோர் மேலோங்குவதையோ காணும்போது அது அவ்வவர் சென்ற பிறவியில் செய்த நல்வினை தீவினைகளில் பயனென்றோ அல்லது நல்லோர் இம்மையில் துன்பமெய்தினும் மறுமையில் நற்பயனடைவர் தீயோர் மறுமையில் தம் தீவினையின் பயனனடைவர் என்றோஎண்ணி அமைதியுறுகின்றனர். வள்ளுவர் மறுபிறவி வினைத்தொடர்பு ஆகிய கொள்கைகளில் நம்பிக்கையுடையவரே. யூதர்கள் எக்காலத்திலும் சென்ற பிறவியோ மறுபிறவியோ உண்டென நம்பியதில்லை. முற்காலத்தில் யூதர்களிடையே மறுமையைக் குறித்துத் தெளிவான கொள்கைகள் இருக்கவில்லை. கி. மு. நான்காம் நூற்றாண்டின் பின்னேயே இம்மையொடு வாழ்வு முடிவதில்லை மறுமையொன்று உண்டு என்னும் கருத்து எழலாயிற்று. மக்கள் இம்மையிலேயே தம் செயலகட்கு ஏற்ற பயனை எப்போதும் அடைவதிலலை யாகையினால் நியாயத்தீர்ப்பு நாளில் இறைவன் அனைவருக்கும் நீதி வழங்குவார் எனவும் யூதநாட்டு அறிஞர் கருதல யினர். இம்மையில நீதி நிறைவேறாதிருப்பதைக் காணும்போது நீதியை விரும்பும்மக்களின் உள்ளம் மறுமையிலாவது நீதியைக் காண விழைகிறது ஆகவே மறுபிறவியில தத்தம் வினைப்பயனை மக்கள்அடைவா என்றோ இறுதித்தீர்ப்புநாளில் இறைவன் நீதிவழங்குவார் என்றோகருதி எவ்வாறாயினும் இறுதியில் நீதி நிறைவேறும் என்ற நம்பிக்கையை மக்கள் கைக்கொளளுகின்றனர். அதிலும் கொடியோர் ஆட்சி வலிபெற்று உயர்ந்திருக்கும் சமயங்களில் இத்தகையதோர் நம்பிக்கையே மக்களில்சிலரையாவது கொடுங்கோலாட்சியை எதிர்த்தும் பல துன்பங்களைத் தாங்கியுப் நன்னெறியில் நிலைத்திருக்கச் செய்கிறது.

## 4 6. தீர்க்கதரிசிகளின் சிறப்பியல்பு

எட்டாம் நூற்றாண்டிலிருந்து இரண்டாம் நூற்றாண்டு வரை யூதர்களிடையே தோன்றிய தீர்க்கதரிசிகளின் கருத்துக்களும் வெளிப்பாட்டு இலக்கியத்தின் கருத்துக்களும் இப்பகுதியில் ஆயப்பட்டன. இவற்றைத் திருக்குறட் கருத்துக்களுடன் ஒப்பிடும்போது பல ஒற்றுமை வேற்றுமைகளைக்காணலாமாயினும் இவற்றிடையே காணப்படும் முக்கிய வேறுபாடு வள்ளுவர் எவ்விடத்தும் பொது நீதியையே கூறியமையும் தீர்க்கதரிசிகள் நீதிகளனைத்தையும் தம் கடவுட் கொள்கையுடன் தொடர்புபடுத்தி எவற்றை இறைவன் விரும்புகிறார், எவற்றை விரும்பவில்லை என்ற முறையில் கூறியமையுமே. வள்ளுவரின் நோக்கம் மக்கள் நல்வாழ்க்கைகேற்ற பொதுநீதிகளைக் கூறுவதே. தீர்க்கதரிசிகளின் நோக்கமோ இறைவனைக் குறித்தும் இறைவனின் சித்தம் எது என்பதைக் குறித்தும் மக்கட்குக் கற்பிப்பதே. இறைவன் நீதியையும் அன்பையும் விரும்புகிறார் என நம்பியதால் அவர்கள் நீதியையும் அறத்தையும் போதித்தனர். இறைவனின் இயல்பையும் அவர் அருளையும் அவர் நீதியையுமே அவர்கள் கூற முயன்றனர்.

இனி, தீர்க்கதரிசிகளின் கருத்துக்கள் சில நம் நாட்டுப் பக்திக் கவிஞர்களின் கருத்துக்களுடன் இடையிடையே ஒப்பிடப்பட்டன. பக்திக் கவிஞர்கள் நீதியைப் போற்றாமலில்லை.

> குற்றொருவரைக் கூறை கொண்டு
> கொலைகள் சூழ்ந்த களவெல்லாம்
> செற்றொருவரைச் செய்த தீமைகள்
> இம்மையே வரும் திண்ணமே
>
> (சுந்தரர் தேவாரம், 18.4 தலமுறை)
>
> சலமொலாமொழி நெஞ்சமே
>
> (மேற்படி 18.8 தலமுறை)
>
> தாழாதறஞ்செய்மின்
>
> (மேற்படி 95.1 தலமுறை)

என்பன போன்ற நீதிகளையும் அறங்களையும் பக்திக் கவிஞர்களும் இடையிடையே கூறிச்சென்றாராயினும்யூததீர்க்கதரிசிகளைப் போலச் சமூகத்திலும் மக்கள் வாழ்க்கையிலும் அரசியலிலும் உள்ள தவறுகளை அவர்கள் ஆய்ந்துணர்ந்து அவற்றிற்கேற்ப நீதிகளைக் கூறவில்லை.

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் தம் காலத்துப் பிற சமயங்களில் காணப்பட்ட போலித் துறவையும் வேறுபல குறைகளையும் எடுத்துக் கூறிக் கண்டித்தனர். திருநாவுக்கரசரும் தொண்டரடிப் பொடியாழ்வாரும் அக்காலத்து நிலவிய சாதிக்கட்டுப்பாட்டை எதிர்த்துச் சில கருத்துக்களைக் கூறினர்[23] இம்முறைகளில் இவர்களும் ஓரளவு சமூகத்தின் குறைகளை நீக்க முயன்றனர் எனினும் தீர்க்கதரிசிகள் மக்கள் வாழ்க்கையின் பல துறைகளையும் ஆராய்ந்து பல துறைகளிலும் உள்ள தவறுகளையும் தெளிவாக எடுத்துக்காட்டி நீதிகூறியது போல இவர்கள் கூறவில்லை. சுந்தரர் பல்லவர்களை ஆதரித்ததைத்[24] தவிரப் பொதுவாகப் பக்திக் கவிஞர்கள் தத்தம் காலத்து அரசியல் நிகழ்ச்சிகளைக் குறித்துத் தம் கருத்துக்களைக் கூற வில்லை. அது தம் கடமையன்று என அவர்கள் கருதினர் போலும். சமயத்துறையில் அரசர்கள் செய்த தவறுகளைத் திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் எதிர்த்தனர் எனலாம்.

பொதுவாக நோக்குமிடத்து நீதியையும் பக்தியையும் ஒருங்கிணைத்ததே தீர்க்கதரிசிகளின் சிறப்பியல்பாகும். மற்றும் தீர்க்கதரிசிகளின் கருத்துக்கள் இங்கு மிகப் பிற்காலத்துத் தமிழ் நூல்களில் காணப்படும் கருத்துக்களுடனேயே ஒப்பிடப்பட்டன. கி. மு. எட்டாம் நூற்றாண்டிலோ ஆறாம் நூற்றாண்டிலோ எழுதப்பட்ட தமிழிலக்கியங்களெவையும் தற்காலத்துக் கிடைத்திலவே. இவ்வளவு முற்பட்ட காலத்திலேயே தீர்க்கதரிசிகள் இத்தகைய உயர் கருத்துக்களைக் கூறியமை வியந்து போற்றத்தக்கதே.

23. திருநாவுக்கரசர், தேவாரம், 309,10 தலமுறை
நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம், திருமாலை, 42, 43.
24. சுந்தரர், தேவாரம், 1,4 தலமுறை.

# 5

# துதிப் பாடல்கள்

## 5 1 துதிப்பாடல்களும் பிற நூல்களும்

பழைய ஏற்பாட்டில் சங்கீதம், சாலோமோனின் உன்னதப் பாட்டு ஆகிய இருபகுதிகளும் முழுவதும் கவிதை வடிவாகவே-யுள்ளன இவற்றில் முன்னது இறைவனைப் பற்றிப் பாடப்பட்ட துதிப் பாடல்களாகும். பின்னது சமயச் சார்பற்ற பொதுப் பாடல்களைக் கொண்டதே இவற்றைப்பாடிய கவிஞர்களின் பெயர்களோ வேறு விவரங்களோ இப்போது தெரிந்தில.

சங்கீதம் என்னும் பகுதியில் நூற்றைம்பது பாடல்கள் உள. இவை தொகுக்கப்பட்டது நாடு கடத்தப்பட்ட யூதர்கள் தாய்நாடு திரும்பி இரண்டாம் ஆலயத்தைக் கட்டிய பின்பே என அறிஞர் கருதுவர். அவ்வாறாயின் கி மு ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதி-யிலிருந்தே இவை தொகுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இத்துதிப்பாடல்களனைத்துமே ஆலயத்தில் பாடப்படுவதற்-காகத் தொகுக்கப்பட்டவை இசையொடு பாடுவதற்கேற்றவை. ஆகவே பலவகை இசைக்குறிப்புக்களையும் இந்நூலில் காணலாம்.

துதிப்பாடல்களனைத்தும் இறைவனை நோக்கிப் பாடப்பட்ட பக்திப் பாடல்கள் என்ற பொதுத்தன்மையிருப்பினும் அவை பல்வேறு பொருள் குறித்தன. பல்வேறு சூழ்நிலையில் எழுதப்பட்டன. சில

ஆலயத்தில் வழிபாட்டுக்கெனவே எழுதப்பட்டன. பல வேறு சூழ்நிலைகளில் இயற்றப்பட்டுப் பின் ஆலய வழிபாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டபோது அவற்றில் அதற்கேற்ற மாற்றங்களும் செய்யப்பட்டன எனத் தோன்றுகிறது.

இப்பாடல்கள் பொருளிலும் பல திறத்தனவே. பகைவரிடமிருந்து நாட்டைக் காக்கும்படி வேண்டும் தேசீயப் பாடல்களும் போரில் பெற்ற வெற்றிக்கு நன்றி கூறும் பாடல்களும் உள. பகைவரினாலோ மழையின்மைமுதலிய இயற்கை நிகழ்ச்சிகளினாலோ நாட்டிற்கு நேர்ந்த துன்பத்தைக் கூறி முறையிடும் பாடல்கள் சில. யூத வரலாற்றில் பன்முறை உதவிக்காத்த இறையருளுக்கு நன்றி கூறும் பாடல்கள் சில. அரசனைக் காக்கும்படி வேண்டும் பாடல்களும் முடிசூட்டுவிழா, அரச குடும்பத்தில் திருமணம் போன்ற நிகழ்ச்சிகட்கு ஏற்ற பாடல்களும் உள. வேறிடங்களினின்றும் திரளாகக் கூடி எருசலேமை நோக்கிச் செல்லும் யாத்திரீகர்களின் பாடல்களும், பண்டிகை நாட்களில் மக்கள் ஊர்வலமாக ஆலயத்தை நோக்கி வருவதையும் ஆலயத்துட்புகுந்து வாத்திய சேவையுடன் பாடியாடி விழாக் கொண்டாடுவதையும் காட்டும் பாடல்களும் உள. அறுவடைக் காலத்தில் வயலில் கிடைத்த தானியத்திற்கும் மரங்களின் கனிகட்கும கால்நடையின் பெருக்கத்துக்காகவும் நன்றி தெரிவிக்கும் பாடல்கள் சில. தனிப்பட்டோர் நோய், பிறரால தமக்கு நேரும் துன்பம முதலியவற்றைக் கூறி முறையிடும் வகையில் அமைந்த பாடல்கள் பல. தனிப்பட்டோர் தம்மை நோயினின்றும் அல்லது பிற துன்பத்தினின்றும் காத்தற்கு நன்றி கூறும் பாடல்களும் உள ஆலயத்தில் ஆழ்ந்த பற்றையும் வழிபாட்டில் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் பாடல்கள் சில. வழிபடுவோர்க்கு நீதியைக் கற்பிக்க முயலும் நீதிக் கருத்தமைந்த பாடல்கள் சில. இவ்வாறாக வாழ்க்கையின் பல துறைகளோடும் தொடர்புடையனவாய்ப் பரந்த பல பொருளைக் கொண்டனவாய் அமைகின்றன பழைய ஏற்பாட்டிலுள்ள துதிப்பாடல்கள்.

நீதிக் கருத்துக்களை விளக்கும் பாடல்களுப் தீர்க்கதரிசிகளின் கருத்தைத் தழுவிய பாடல்களும் மற்றொரு வகையின. முதலாம் பாடலே நீதியைக் கற்பிக்கிறது எரேமியா கூறிய உவமையொன்றைச் சிறிது வேறுபாட்டுடன் பயன்படுத்துகிறது இறைவன் அருளிய நீதியின் வழி நடப்பவர்கள் நீர்க்காலின் அருகிலே வளர்ந்து இலைகள் வாடப்பெறாததும்பருவத்தில் பழங்களை நல்குவதுமாகிய நன்மரத்தையொப்பர். தீயோரோ காற்றில் அடித்துச் செல்லப்படும் பதரை

யொப்பர். இவ்வாறு முதலாம் பாடல் கூறுகிறது 14-ஆம் பாடல் தீமை பெருகிய நிலையைக் கூறுகிறது அது பின்வருமாறு :-

"தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க, கர்த்தர் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார்.

எல்லோரும் வழிவிலகி, ஏகமாய்க் கெட்டுப் போனார்கள் : நன்மை செய்கிறவன் இல்லை; ஒருவனும் இல்லை" (14.2-3).

இப்பாடல் நாடு கடத்தப்பட்ட யூதர்களால் எழுதப்பட்டிருக்கலாம். ஏனெனில் இறுதியடி கர்த்தர் இஸ்ரவேலரைத் திரும்பவும் நன்னிலையில் வைப்பார் அப்பொழுது அவர்கள் மகிழ்வார்களென்ற ஒரு நம்பிக்கையை ஆவலைத் தெரிவிக்கிறது.

முன்பு குறிப்பிடப்பட்ட ஊர்வலப்பாடல்களுட் சிலவும் நீதியைக் கற்பிக்கின்றன.

"கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான்?

உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதாரச் சத்தியத்தைப் பேசுகின்றவன் தானே.

அவன் தன் நாவினால் புறங்கூறாமலும், தன் தோழனுக்குத் தீங்கு செய்யாமலும், தன் அயலான்மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக்காமலும் இருக்கிறான்.

ஆகாதவன் அவன் பார்வைக்குத்தீழ்ப்பானவன்; கர்த்தருக்குப் பயந்தவர்களையோ கனம் பண்ணுகிறான் ........ ...

தன் பணத்தைவட்டிக்குக்கொடாமலும், குற்றமில்லாதவனுக்கு விரோதமாகப் பரிதானம் வாங்காமலும் இருக்கிறான். இப்படிச்செய்கிறவன் என்றென்றைக்கும் அசைக்கப்படுகிறதில்லை" (15).

இப்பாடல் முழுவதும் நீதியையே கற்பிக்கிறது. சுத்தமான கைகளும் மாசில்லாத உள்ளமும் உடையவனாய்த்தன் ஆத்துமாவைப் பொய்மையினின்றும் விலக்கிக் கபடாய் ஆணையிடாமலிருப்பவனே கர்த்தரின் குன்றின்மேல் ஏறத்தக்கவன் என 24-ஆம் பாடலும் கூறுகிறது.

''உன் நாவை பொல்லாப்புக்கும் உன்உதடுகளைக் கபட்டு வசனிப்புக்கும் விலக்கிக் காத்துக் கொள்.

தீமையை விட்டுவிலகி நன்மைசெய் ; சமாதானத்தைத் தேடி அதைத் தொடர்ந்து கொள்'' (34. 13-14).

''நான் இளைஞனாயிருந்தேன்,முதிர் வயதுள்ளவனும் ஆனேன்; ஆயினும் நீதிமான் கைவிடப்பட்டதையும் அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை.

அவன் நித்தம் இரங்கிக் கடன் கொடுக்கிறான், அவன் சந்ததி ஆசிர்வதிக்கப்படும்.

தீமையை விட்டு விலகி நன்மை செய், என்றென்றைக்கும் நிலைத்திருப்பாய்.

கர்த்தர் நியாயத்தை விரும்புகிறார்; அவர் தமது பரிசுத்தவான்-களைக் கைவிடுவதில்லை; அவர்கள் என்றைக்கும் காக்கப்படு-வார்கள்; துன்மார்க்கருடைய சந்ததியோ அறுப்புண்டுபோம்''

(37.25-28).

''சிறுமைப்பட்டவன் மேல் சிந்தனையுள்ளவன் பாக்கியவான் ; தீங்கு நாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்'' (41.1).

இவ்வாறு பிற பாடல்களும் இடையிடையே நீதியைக் கூறிச்-செல்கின்றன. இறைவன் விரும்பாத தீச்செயல்கள் இவையிவை யென 50-ஆம் பாடல் கூறுகிறது.

''நீ திருடனைக் காணும்போது அவனோடு ஒருமித்துப் போகி-றாய்; விபசாரரோடும் உனக்குப் பங்குண்டு

உன் வாயைப் பொல்லாப்புக்குத் திறக்கிறாய், உன் நாவு கற்பனையைப் பிணைக்கிறது.

நீ உட்கார்ந்து உன் சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி, உன் தாயின் மகனுக்கு அவதூறு உண்டாக்குகிறாய்'' (50.18-20).

இத்தகைய செயல்களைச் செய்வோரைக் கடவுள் கண்டிப்பார் எனக் கூறப்படுகிறது. தீயோர் முதலில் செழிப்பினும் இறுதியில் அழிவர் எனப் பல பாடல்கள் வற்புறுத்திக் கூறுகின்றன.

''கொடிய பலவந்தனான ஒரு துன்மார்க்கனைக் கண்டேன், அவன் தனக்கேற்ற நிலத்தில் முளைத்திருக்கிற பச்சை மரத்தைப் போல் தழைத்தவனாயிருந்தான்.

ஆனாலும அவன் ஒழிந்து போனான், பாருங்கள் அவன் இல்லை; அவனைத் தேடினேன்,அவன் காணப்படவில்லை''(37.35 - 6).

92-ஆம் பாடலும் எரேமியாவின் உவமையைத் தழுவித் தீயோர் புல்லைப்போல் தழைத்து விரைவில் அழிவர் எனவும் நீதி-யாளர் கேதுரு மரத்தைப் போல் தழைத்து நெடுநாள் நிலைநிற்பர் எனவும் கூறுகிறது.

## 5.2. இவற்றின் கடவுட் கொள்கையும் திருக்குறளும்

இறைவனின் தூய்மை (Holiness) நீதி (Righteousness) மாறாத அன்பு (Stead fast love) ஆகிய இயல்புகள் துதிப் பாடல்களில் பன்முறை கூறிப் போற்றப்படுகின்றன. வள்ளுவரின் குறளில் 'வாலறிவன்' 'அறவாழியந்தணன்' என்ற தொடர்கள் ஒருவாறு தூய்மையையும் நீதியையும் குறிக்குமாயினும் இறைவனின் அன்பைக் குறித்து வள்ளுவர் அதிகம் கூறவில்லை. இறைவனின் தூய்மையைக் குறித்தும் திருக்குறட்கருத்துக்கும் பழைய ஏற்பாட்டுக் கருத்துக்கும் இடையே உள்ள வேறுபாடு முன்பே காட்டப்பட்டது. (தீர்க்க தரிசிகள், ஏசாயா பார்க்க) மற்றும் வள்ளுவர் இறைவனை, 'எண் குணத்தான்' என்றார். இத்தொடருக்குப் பரிமேலழகர் உரையை ஏற்றுக் கொள்வோமாயின், தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல் இயற்கை உணர்வினனாதல், இயல்பாகவே பாசங்களினின்று நீங்கு-தல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றலுடைமை, வரமபில் இன்ப-முடைமை என்பன இறைவனின் இயல்புகள் என்பது பெறப்படும். பாசங்களின் நீங்கும் தன்மையே தூய்மையெனக் கருதப்பட்டது போலும் 'தூஉய்மை, என்ப தவாவின்மை' (364) என வள்ளுவர் பிற விடத்தும் கூறினார். யூதர்கள் இறைவனைப் பற்றற்றவனாக, இன்ப-துன்பமில்லாதவனாகக் கருதவில்லை. பல துதிப்பாடல்கள், மக்கள் செய்த தவறுகளைக் குறித்து இறைவன் சினங்கொண்டார் எனக் கருதிச் சினம் தணியுமாறு வேண்டுகின்றன. தாம் படைத்த பொருள் களை நோக்கிக் கடவுள் உவகை கொள்கிறார் எனவும், யூதர் குலத்தை உகந்தார் எனவும் அவர்கள் வழிபாட்டைக் கண்டு உவகை கொள்-கிறார் எனவும் சிலபாடல்கள் கூறுகின்றன. முற்றும் உணர்தல் முடிவிலாற்றலுடைமை என்னும் கருத்துக்கள் துதிப்பாடல்களிலும் காணப்படுவனவே.

இறைவன் தூய்மையும் நீதியும் மாறாதஅன்பும் உடையவர் என்-பதோடு அவர் யூதர்களைச் சிறப்பாகத் தம் பணிக்கெனத் தேர்ந்து

கொண்டார் எனவும் எகிப்திலிருந்து மீட்டுக் கானான் நாட்டில் சேர்த்தார் எனவும் அங்கு அவர்கள் யாவேயின் வழிபாட்டை விட்டு விலகியும் அவர் அருளிய நீதியைப் புறக்கணித்தும் வந்ததனால் பகைவரால் வெல்லப்பட்டு நாடு கடத்தப்பட்டனர் என்றும் ஆயினும் கடவுள் அருள் கூர்ந்து கோரேசின் மூலம் அவர்கட்கு மீட்பளித்துத் திருப்பவும் தாய்நாடு சேர்த்தாரெனவும் நம்பினர். மேலும் யூத மக்களின் மூலமாகப் பிறநாடுகளும் இறைவனருளையும் அவர் நீதி-யையும் உணர்ந்து நலமுறும் என்ற நம்பிக்கையும் அவர்களிடையே இருந்தது. இக்கருத்துக்களனைத்தும் துதிப்பாடல்களில் இடை-யிடையே காணப்படுகின்றன. இவை யூதர்கட்கே சிறப்பாக உரிய கருத்துக்களாகையினால் இவற்றையொத்த கருத்துக்களை நம் நாட்டு இலக்கியங்களில் காணுமாறு இல்லை.

இறைவனை 'வேண்டுதல்வேண்டாமையிலான்', 'பற்றற்றான்' எனக் கூறிய வள்ளுவரும் பிற பண்டைக் கவிஞரும் கடவுள் வரலாற்றுக்கு அப்பாற்பட்டவர் எனக் கருதினார்களேயன்றி வரலாற்றில் செயலாற்றுபவராகக் கருதவில்லையெனவே தோன்றும். களப்பிரர் படையெடுப்பின்முன் தமிழ்நாட்டில் செறிந்திருந்த தீமைகள் காரணமாக அப்படையெடுப்பினால் நாடு அழிந்ததுஎன்றோ களப்பிரர் ஆட்சியினின்றும் இறைவனருளால் நாடு மீண்டது என்றோ அல்லது பிற வகையாக அந்நிகழ்ச்சிகளில் தேவசித்தம் எது என்றோ கவிஞர்கள் யாரும் கூறவில்லை. (அக்கால வரலாற்று நிகழ்ச்சிகளும் தெளிவாகத் தெரிந்தில.) பல்லவர் காலத்துப் பக்திக் கவிஞர்களும் அக்காலத்துப் பல்லவர்களுக்கும் சாளுக்கியர்களுக்கும் இடையே நிகழ்ந்த போர்கள் இறைவனின் சித்தத்துக்கு ஏற்றனவா அல்லவா என ஆராயவில்லை. கடவுள் வரலாற்றில் செயலாற்றுகிறார் என்ற கருத்தைத் தற்காலக் கவிஞர் சிலரின் நூல்களிலேயே நம் நாட்டில் காண்கிறோம். வங்கக்கவியரசகிய தாகூர் கடவுளே நாட்டிற்கு நலத்தையும் தீங்கையும் தருபவர் எனக் கருதி 'பாரத பாக்ய விதாதா' (பாரதத்தின் பாக்கியத்தைத் தருபவனே) என்றார். தாம் பாடிய துதிப்பாடல்கள் சிலவற்றிலும் நாட்டின் நலனுக்காக இறைவனை வேண்டினார். தேசியப் போராட்டத்தின் காலத்தில் அவ்வியக்கத்தின் மூலம் கடவுள் செயலாற்றுகின்றார், அவர் அருள் வழியில் நின்றே தேச அன்பர்கள் உழைக்கின்றனர், அவர் நாட்டுக்கு விடுதலை-யருள்வார் என்ற நம்பிக்கை காந்தியடிகள் போன்ற தலைவர்கட்கு இருந்ததென்பதை அவர்களின் சொற்பொழிவுகள், கூற்றுக்கள் மூலம் அறியலாம். பாரதியாரின் சுதந்திரப் பயிர், சுதந்திர தாகம் ஆகிய

பாடல்களும் கடவுளை வரலாற்றில் செயலாற்றுபவராகக் கருதியே நாட்டின் விடுதலைக்காகப் போராடும் அன்பர்களின் துயரை நோக்குமாறும் வெற்றியை யளிக்குமாறும் வேண்டுகின்றன. பாரதியாரின் இப்பாடல்கள் பழைய ஏற்பாட்டுத் துதிப்பாடல்களில், யூதர்கள் கிரேக்க நகராட்சிக் காலத்திலோ பிற நாட்டவரால் துன்புற்ற பிற நாட்களிலோ பகைவரிடமிருந்து நாட்டைக் காக்குமாறு வேண்டும் பாடல்களையொப்பன. துதிப்பாடல்களில், யூதர்களின் தேசிய முறையீடு என்ற வகையில் பல பாடல்கள் உள. சுதந்திரப்பயிர், சுதந்திர தாகம் என்பன இந்நூற்றாண்டின் முற்பகுதியில் பாரதியார் இந்திய மக்கள் சார்பாகப் பாடிய தேசிய முறையீடுகளே.

> இறைவன் படைப்பின் திறத்தை வள்ளுவர்,
> அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
> பகவன் முதற்றே உலகு (1)

என்ற ஒரு குறளில் அடக்கினார். இங்குக்கடவுள் விரும்பி எண்ணிச் சிந்தித்து உலகத்தைப் படைத்தாரா, உலகம் தானே கடவுளினின்றும் தோன்றியதா என்பது தெளிவின்று[1]. துதிப்பாடல்களில் கடவுள் விரும்பித் திட்டமிட்டு உலகையும் பிறவற்றையும் படைத்ததாகக் கூறிப் படைப்பில் விளங்கும் இறையாற்றலைப் போற்றுகின்றனர். பக்திக் கவிஞர்களும் படைப்பில் விளங்கும் இறையாற்றலைப் பலவாறு போற்றுகின்றனர்.

> அருக்கனிற் சோதி யமைத்தோன் திருத்தகு
> மதியில் தண்மை வைத்தோன் திண்திறல்
> தீயில் வெம்மை செய்தோன் பொய்தீர்

1. கடவுள் அறிந்து விரும்பி உலகனைத்தையும் படைத்தாரா, படைப்பு தானாகவே அவரிடமிருந்து தோன்றுகிறதா என ஒரு ஐயம் இருக்கு வேதப் பாடல்களைப் பாடிய முனிவர்களுக்கும் இருந்ததாகத் தோன்றுகிறது.

Macnicol, Nicol, Hindu Scriptures, P. 37

X. 129. The Song of Creation, 6-7:

Who verily knows and who can here declare it
    Whence it was born and whence comes this creation?
The Gods are later than the worlds production,
    Who knows then, whence it first came into being
He the first origin of this creation, whether he
    formed it all or did not form it.
Whose eye controls this world in highest heaven,
    he verily knows it or perhaps he knows it not.

வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலி னூக்கம் கண்டோன் நிழல்திகழ்
நீரில் இன் சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன் என்றென்
றெனைப்பல கோடி எனைப்பல பிறவும்
அனைத்தனைத் தவ்வயின் அடைத்தோன்

(திருவாசகம், அண்டப்பகுதி, 20-28)

என மாணிக்கவாசகர் ஞாயிறு, திங்கள், நெருப்பு, வான், காற்று, நீர், மண் முதலிய இயற்கைப் பொருள்கள் பலவற்றையும் அவ்வவற்றிற்குரிய சிறப்பியல்புகளுடன் படைத்தமைத்த ஆற்றலை வியக்கிறார். சம்பந்தர், சுந்தரர், திருமங்கையாழ்வார் போன்ற பக்திக் கவிஞர்கள் தாம் வழிபடச் சென்ற பல தலங்களிலும் கண்ட இயற்கைக் காட்சிகளையும் மலை, ஆறு, கடல் முதலியவற்றின் எழிலையும் அங்கங்குக் காணப்பட்ட விலங்குகள், பறவைகள், மரஞ்செடிகள், மலர்கள் வயல்கள் ஆகியவற்றையும் பலவாறு புனைந்துரைத்தபோதும் கடவுளின் படைப்பாற்றலையே வாழ்த்தி மகிழ்ந்தனர் எனலாம்.

சங்கீதம் என்னும் பகுதியிலுள்ள பாடல்கள் பக்திப் பாடல்களாகவே அமைவதால் அவற்றுக்கும் தமிழிலுள்ள பக்தி இலக்கியங்கட்கும் கருத்தில் சில ஒற்றுமைகளைக் காணுதல் கூடும். மக்கள் தங்கள் மனநிலைக்கு ஏற்றவாறு கடவுளைக் காண்கின்றனர் அல்லது மக்களின் தன்மைக்கு ஏற்றவாறு அவர்களுடன் தொடர்பு கொள்கிறார் என்ற கருத்தைத் துதிப்பாடல்களில் ஒரு கவிஞர் பின்வருமாறு கூறுகிறார்.

''தயவுள்ளவனுக்கு நீர் தயவுள்ளவராகவும் உத்தமனுக்கு நீர் உத்தமராகவும்,

புனிதனுக்கு நீர் புனிதராகவும், மாறுபாடுள்ளவனுக்கு நீர் மாறுபாடானவராகவும் தோன்றுவீர்'' (18.25-26).

இக்கூற்றைத் தொண்டரடிப் பொடியாழ்வாரின்,

மெய்யர்க்கே மெய்ய னாகும்
விதியிலா என்னைப் போலப்
பொய்யர்க்கே பொய்ய னாகும்
புட்கொடி யுடைய கோமான் (திருமாலை, 15)

என்னும் பாடலுக்கும்,

மெய்த் தவன்காண் மெய்த்தவத்தில் நிற்பார்க்கெல்லாம்
விருப்பிலா இரும்புமன வினையார்க்கென்றும்
பொய்த்தவன் காண் ……… (146 8 தலமுறை)

எனவும்,

மெய்யானைத் தம்பக்கல் விரும்புவார்க்கு
விரும்பாத அரும்பாவியவர் கட்கென்றும்
பொய்யானை …… (110 5 தலமுறை)

எனவும் வரும் நாவுக்கரசரின் பாடல்கட்கும் ஒப்பிடலாம். ஆயினும் இக்கருத்துக்கட்கு மாறாகக் கடவுள் தம்மை விரும்பாத அரும்பாவி-யரிடத்திலும் அன்புகூருகிறார், அவர்களைத் தேடுகிறார், அவர்களை-யும் காக்க விழைகிறார் என்னும் கருத்துக்களைப் புதிய ஏற்பாட்டில் நற்செய்தி நூல்களில் காணலாம்.

எதையும் செய்யவல்ல இறைவனின் ஆற்றலை விளக்கும்,

''அவர் ஆறுகளை அவாந்தர வெளியாகவும், நீரூற்றுக்களை வறண்டஸ்தலமாகவும்,

குடிகளுடைய பொல்லாப்பினிமித்தம் செழிப்பான தேசத்தை உவர் நிலமாகவும் மாற்றுகிறார்.

அவர் அவாந்தரவெளியைத் தண்ணீர்த் தடாகமாகவும், வறண்ட நிலத்தை நீரூற்றுக்களாகவும் மாற்றி,

பசித்தவர்களை யங்கே குடியேறப் பண்ணுகிறார்'' (107.33-36) எனவும்,

''அவர் கன்மலையைத் தண்ணீர்த் தடாகமாகவும், கற்-பாறைகளை நீரூற்றுக்களாகவும் மாற்றுகிறார்''(114.8) எனவும் வரும் துதிப்பாடல் வரிகள்,

நரியைக் குதிரை செய்வானும்
நரகரைத் தேவு செய்வானும்
விரதங் கொண்டாட வல்லானும்
வித்தின்றி நாறு செய்வானும் (109.2 தலமுறை)

என்ற திருநாவுக்கரசரின் பாடலுடன் ஒப்பிடத்தக்கன.

எவ்வகைத் துன்பத்திலும் இறைவன் காக்க வல்லவர் அவரையே நம்புதல் வேண்டும் என்ற கருத்தைத் தரும் வரிகள் பல

துதிப்பாடல்களிலுள. எத்தகைய துன்பத்துக்கும் இறைவனுடைய அடியவர்கள் அஞ்ச வேண்டுவதில்லையென்ற கருத்து நம் நாட்டுப் பகதிப் பாடல்களுள்ளும் பல முறை காணப்படுவதொன்றே. சம்பந்-தரின் கோளறு பதிகம் முழுவதும் அதையே கூறுகிறது ஆயினும்,

"ஆகையால் பூமி நிலைமாறினாலும் மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும்,

அதன் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதன் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும் நாம் பயப்படோம்" (46.2-1) என்னும் வரிகளும், திருநாவுக்கரசரின்

மலையே வந்து விழினும் மனிதர்காள்
நிலையி னின்று கலங்கப் பெறுதிரேல்
தலைவ னாகிய ஈசன் தமர்களைக்
கொலைசெய் யானைதான் கொன்றிடு கிற்குமே
(295.5 தலமுறை)

என்ற பாடலும் மிக ஒத்த கருத்துடையன.

மக்கட்கு மட்டுமின்றி உயிர்களனைத்திற்கும் இறைவன் செய்யும் அருளை இயற்கையைப் போற்றும் துதிப்பாடல்க" சிலகாட்டும. 'கர்த்தர் எல்லார் மேலும் தயவுள்ளவர், அவர் படைத்த யாவற்றின் மேலும் அவர் இரக்கம் உள்ளது' (145.9) என்பன போன்ற வரிகள் 'படைப்பாகிப் பல்லுயிர்க்கும் பரிவோன்' (திருநாவுக்கரசர் தேவாரம், 757.1 தலமுறை) என்ற தொடருடன் ஒக்கும்.

இறைவனின் அருள் சிறப்பாகத் தாழ்ந்தோர் ஆதரவற்ற நிலையிலுள்ளோர் உதவியற்றவர் ஆகியோரிடம் செல்கிறது என ஏசாயா கூறிய கூற்றையும துதிப்பாடல்களைப் பாடிய கவிஞர்கள் பலர் ஒட்-டிப் பாடுகின்றனர். "தம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்திலிருக்கிற தேவன், திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பனும் விதவைகளுக்கு நியாயம் விசாரிக்கிறவருமாய் இருக்கிறார் தேவன் தனிமையானவர்-களுக்கு விடு வாசல் ஏற்படுத்தி, கட்டுண்டவர்களை விடுதலையாக்கு-கிறார்"(68.5.6).பிற துதிப்பாடல்களிலும் இத்தகைய கருத்துக்களைக் காணலாம். 'உற்றாரிலாதார்க்கு உறுதுணை' (திருநாவுக்கரசர் தேவாரம் 62 13) யாக நிற்கும் இறைவனின் அருளை இவை விளக்-குவன.

யூதர்கள் உருவ வழிபாட்டை விரும்பவில்லை. ஆலயத்தில் சிலையமைத்து வழிபாடு செய்யவில்லை. யாவேயை அருவமாகக்,

கருதியே வழிபட்டனர். ஆயினும் தீமையை எதிர்த்துப் போராட வேண்டிய இக்கட்டான நிலையில் அவர்களும் இறைவனைப் படைக்கலம் தாங்கியவனாகக் கற்பனையில் கண்டனர் என்பது சிந்திக்கத்தக்கது.

"கர்த்தாவே நீர் என் வழக்காளிகளோடே வழக்காடி என்னோடு யுத்தம் பண்ணுகிறவர்களோடே யுத்தம் பண்ணும்.

நீர் கேடகத்தையும் பரிசையையும் பிடித்து, எனக்கு ஒத்தாசையாக எழுந்து நில்லும்.

என்னைத் துன்பப்படுத்துகிறவர்களோடே எதிர்த்து நின்று ஈட்டியை யோங்கி அவர்களை மறித்து நான் இரட்சிப்பு என்று என் ஆத்துமாவுக்குச் சொல்லும்" (35.1-3).

ஒரு அன்பர் இவ்வாறு தம் பாடலைத் தொடங்கினார் வேறு சில பாடல்களிலும் தீயோரை ஒறுக்கும்படி இறைவனை வேண்டும் போது 'உமது அம்புகளை அவர்கள் மேல் எய்யும், உம் படைக்கலத்தைப் பயன்படுத்தும்' எனக் கவிஞர்கள் பாடுகின்றனர். அவ்வாறே

இலையார் சூல மேந்திய கையான் எயிலெய்த
சிலையான் ... (சம்பந்தர் தேவாரம், 309. 5 தலமுறை)

எனவும் 'கனல் மழுவாளர்' எனவும் பாடிய தேவார ஆசிரியர்களின் உள்ளத்திலும் திருமாலை 'ஆழியான்' எனப் போற்றிய அன்பர்களின் உள்ளத்திலும் கூட இறைவனின் கையிலுள்ள படைக்கலங்கள் தீமையை அழிக்கும் அவராற்றலுக்கு அறிகுறியாகவே இருத்தல்வேண்டும். தற்காலத்தில் சுப்பிரமணிய பாரதியார் முருகன் கையிலுள்ள வேல் துன்பத்தை நீக்கும் ஆற்றலைக் குறிப்பதாகக் கருதி

கருதிக் கருதிக் கவலைப் படுவார்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல்

(தோத்திரப்பாடல்கள், 2.3).

எனப் பாடினார்.

இறையியல் கொள்கைகளில் வேறுபாடும் இருப்பினும் வெவ்வேறு நாட்டைச் சேர்ந்த பக்தர்களின் கருத்துக்களில் அல்லது அனுபவங்களில் ஓரளவு ஒற்றுமையும் இருத்தல் இயல்பே. திருக்குறள் பக்தி இலக்கியமன்று. இத்தகைய கருத்துக்களை அதில் விரிவாகக் காணுமாறில்லை ஆயினும்,

தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது (7)

என்ற குறளின் மூலம் வள்ளுவரும் இறைவனை நாடுவோர் துன்பத்தினின்றும் நீங்கப் பெறுவர் என உணர்த்தினார்.

3.3. நீதிக் கருத்துக்கள்

துதிப்பாடல்களில் இடையிடையே காணப்படும் நீதிக் கருத்துக்கள் திருக்குறட் கருத்துக்களுடன் ஒப்பிடத்தக்கனவே.

வாய்மையைப் பலபாடல்கள் போற்றுகின்றன. 'மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன்' எனவும் 'ஆணையிட்டவன் தனக்கு நஷ்டம் வந்தாலும் அதில் தவறாதிருக்க வேண்டு'மெனவும் 15-ஆம் பாடல் கூறுகிறது. பிற துதிப்பாடல்களும் வாய்மையையே வற்புறுத்தும்.

பிறரைக் குறித்துக் குறை சொல்வதையும் பிறரை நிந்திப்பதையும் சில பாடல்கள் கண்டிக்கின்றன. ''அவன் தன் நாவினால் புறங்கூறாமலும், தன் தோழனுக்குத் தீங்கு செய்யாமலும், தன் அயலான் மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக்காமலும் இருக்கிறான்'' (15.3) ''நீ உட்கார்ந்து உன் சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி, உன் தாயின் மகனுக்கு அவதூறு உண்டாக்குகிறாய்'' (50 20). புறங்கூறுவதே தீது; அதிலும்,

துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்
என்னைகொல் ஏதிலார் மாட்டு (188)

என வள்ளுவர் வினவியதற்கொப்ப ஒருவன் தன் சகோதரனைக் குறித்தே புறங்கூறுவது எவ்வளவு தகுதியற்றது என்பதை மேற்காட்டப்பட்ட துதிப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

சினத்தை நீக்கும்படியும் உள்ளத்தில் சினம் ஏற்பட்டாலும் அதைச் செயலில் காண்பியாது தவிர்த்து அகற்றுமாறும் சில துதிப்பாடல்கள் கற்பிக்கின்றன.

''கோபத்திலிருந்து விலகு; கடுஞ்சினத்தை விட்டு விடு; செற்றத்தை யுளத்தில் கொள்ளாதே. அது தீமைக்கே இடங்கொடுக்கும்'' (37.8) எனக் கூறப்படுகிறது. தீமையைச் செய்து செழிப்பவர்-

களைக் கண்டாலும் சினங்கொள்ளுதலாகாது ஏனெனில் அவர் இறுதியில் அழிவர், பொறுத்தவர் பூமியாள்வார் என இக்கவிஞர் கூறினார். 'நீங்கள் கோபம் கொண்டாலும் பாவம் செய்யாதிருங்கள்' (4.4.) என்றார் மற்றொரு கவிஞர்.

மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும் (303)

உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின் (309)

என்னும் குறள்களை 37-ஆம் துதிப்பாடலில் வரும் வரிகளுடன் ஒப்பிடலாம்.

தவறான வழியில் பணம் சேர்ப்பதையும் பலபாடல்கள் கண்டிக்கின்றன.

"அவன் தன் பணத்தை வட்டிக்குக் கொடாமலும், குற்றமில்லாதவனுக்கு விரோதமாகப் பரிதானம் வாங்காமலும் இருக்கிறான்" (15 5).

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
யன்றே யொழிய விடல் (113)

என வள்ளுவரும் தவறான வழியில் பணம் தேடுவதைக் கண்டித்தார். தவறான வழியில் சிலர் பொருள் தேடுவதைக் கண்டு பொறாமை கொள்ள வேண்டாம். ஏனெனில் நேர்மையுடன் வாழ்ந்து சிறிது பொருளை வைத்திருப்பதே அதைவிட நல்லது என ஒருபாடல் கூறுகிறது.

"அநேக துன்மார்க்கருக்குள்ள செல்வத்திரட்சியைப் பார்க்கிலும் நீதிமானுக்குள்ள கொஞ்சமே நல்லது" (37.16).

பழிமலைந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை (657)

என்னும் குறளும் அதே கருத்தைத் தரும்.

வறியார்க்கு உதவும் செயலைப் பலபாடல்கள்போற்றுகின்றன. 'வறியவரைக் குறித்து எண்ணுகிறவன் பாக்கியவான்' (Blessed is he who considers the poor 41 1) என்றார் ஒரு கவிஞர். வறியோர்க்கு ஈவதும் வட்டியின்றிக் கடன் கொடுத்து உதவுவதும் போற்றப்படு-

கின்றன. பண்டைக்கால யூத அறிஞர்கள் வட்டிக்குக் கடன் கொடுக்கும் முறையை விரும்பவில்லை. ஆனால் வட்டியின்றி வறியோர்க்கு ஏற்ற நேரத்தில் கடன் கொடுப்பதை ஓர் அறமாகக் கருதினர்.

"துன்மார்க்கன் கடன் வாங்கிச் செலுத்தாமற் போகிறான்; நீதிமானோ இரங்கிக் கொடுக்கிறான்" (37.21).

"அவன் நித்தம் இரங்கிக் கடன் கொடுக்கிறான், அவன் சந்ததி ஆசிர்வதிக்கப்படும்" (37 26)

இவ்வாறு தயாளகுணம் போற்றப்படுகிறது.

"ஆஸ்தியும் ஐசுவரியமும் அவன் வீட்டிலிருக்கும்; அவனுடைய நீதி என்றைக்கும் நிற்கும்.

செம்மையானவர்களுக்கு இருளிலே வெளிச்சம் உதிக்கும்: அவன் இரக்கமும் மன உருக்கமும் நீதியுமுள்ளவன்.

இரங்கிக் கடன் கொடுத்து, தன் காரியங்களை நியாயமானபடி நடப்பிக்கிற மனுஷன் பாக்கியவான்.

அவன் என்றென்றைக்கும் அசைக்கப்படாதிருப்பான்; நீதிமான் நித்திய கீர்த்தியுள்ளவன்" (112.3-5)

"வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்" (112 9).

இவ்வாறு சில துதிப்பாடல்கள் தயாள குணத்தைப் போற்றுவதுடன் அத்தகைய தயாள சிந்தனையுடையோர் வளமுள்ள வாழ்க்கையைப் பெறுவர், பகைவராலோ பிற தீங்கினாலோ அழிக்கப் படார், அவர் வழிவருவோரும் வறுமையினால் துன்புறாது நலமுற வாழ்வர் எனக் கூறுகின்றன. தயாளகுணம் உடையோரின் வாழ்க்கை கெடாது. அவர் வழிவருவோரும் சிறப்படைவர் என்னும் கருத்தைப் பல குறள்களிலும் காணலாம்.

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல் (44)

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று (83)

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்ட லரிது (227)

73-ஆம் பாடலைப் பாடிய கவிஞர் தாம் முதலில் செல்வச் செழிப்புடன் வாழும் தீயோரைப் பார்த்துப் பொறாமை கொண்டதாகவும் ஆயினும் பின்பு அவர்கள் இறைவனை விட்டு விலகிச் செல்வதால் இறுதியில் அழிவர். கடவுளுக்கு அண்மையிலிருப்பதும் அவரிடம் அடைக்கலம் புகுவதுமே ஏற்றது என உணர்ந்ததாகவும் கூறுகிறார். செருக்கு மிகுந்த தீயோர்கள் பலர் செல்வச் செழிப்புடன் வாழ்கிறார்கள். அவர்கள் உடலும் செழுமையாகவுள்ளது. அவருள்ளமும் (தாம் செய்த தவறுகளை யெண்ணிக்) கவல்வதில்லை. செருக்கை யணியாக அணிந்துகொள்கின்றனர் தீச் செயல்கள் அவர்கட்கு ஆடையாகின்றன. கடவுள் தம் செயலை அறிய மாட்டார் என அவர்கள் எண்ணுகின்றனர். செல்வத்தைப் பெருக்கி நாள்தோறும் சுக வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் இத்தகையோரைக் கண்டபோது கவிஞர் நல்வாழ்க்கை வாழ முயல்வதனால் என்ன பயன் என எண்ணினார். 'நான் வீணாகவே இதயத்தில் சுத்தமுள்ளவனாக வாழ்ந்தேன், எண்ணங்களைக் குற்றமற்றனவாகக் காத்தேன், நாள் முழுவதும் நான் துன்பப்படுகிறேன். ஒவ்வொரு நாளும் காலையிலேயே கவலையுறுகிறேன்' என எண்ணி வருந்தினார். இது அவருக்குப் புரிந்து கொள்ள முடியாத புதிராக இருந்தது ஆயினும ஆலயத்திற் சென்று அமர்ந்து தியானித்த பின் அவர் உண்மையை உணர்ந்தார் செல்வர்களாக வாழினும் அவர்கள் வாழ்க்கை பயனற்றதே கனவுபோல் அவர்கள் வாழ்க்கை யழியும் ஆனால் தாம் இறைவனுடன் நெருங்கிய தொடர்போடு வாழ்வதாகவும் அவர் தம்மை என்றும் வழி நடத்துவார் எனவும் உணர்ந்தார். வானிலும் மண்ணிலும் இறைவனே தமக்குத் துணையும் தம் உள்ளத்துக்கு உறுதியளிப்பவரும் தம் பங்குயாவார் என உணர்ந்து அமைதியுற்றார்.

இப்பாடலில் வரும் ஒரு கருத்து, தீயோர் தம் செயல்களைக் குறித்து உள்ளத்தில் உறுத்தல் அடைவதில்லையென்பது. 'தீயோர் வளத்தைக் கண்டு செருக்கு மிகுந்த அவர்களைக் குறித்து நான் பொறாமை கொண்டேன், ஏனெனில் அவர்கள் உள்ளத்தில் உறுத்தல் இல்லை' (For I was envious of the arrogant when I saw the prosperity of the wicked for they had no pangs 73 3-4). இக்கருத்தே பின்வரும் திருக்குறளுடன் ஒப்பு நோக்கத்தக்கது.

> நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
> நெஞ்சத் தவல மிலர். (1072)

இவ்வாறு நீதிக் கருத்துக்களில் ஒற்றுமையிருப்பினும் நீதியைக் குறித்துத் துதிப்பாடல்களில் காணப்படும் கருத்துக்கள் பல திருக்-

குறளில் இல்லை. நீதி இறைவனால் கற்பிக்கப்பட்டது அறத்தினின்-றும் பிறழ்தல் இறைவனுக்கு மாறாகச் செய்யப்படும் பாவமாகும். செய்ததவற்றுக்கு வருந்தி மன்னிப்பு வேண்டுவோரைக் கடவுள் மன்-னித்தல் கூடும் அவர்கள் தீமையை விட்டு விலகி நல்வழியில் நடப்-பதற்கேற்ற நல்லுணர்வைக் கடவுள் அவர்கட்கு அளித்தலும் கூடும், மக்கட்கு நீதியை, நல்வழியைக் காட்ட வல்லவர் கடவுளே, மக்கள் தாமே உணராத வகையில் அவர்களுள்ளத்தின் ஆழத்தில் மறைந்து கிடக்கும் குற்றங்களையும் கடவுள் உணர்கிறார், அவரைப் பணிந்து வேண்டிக்கொண்டால் நாம் அறியாத குற்றங்களையும் அவர் அறிந்து நீக்குவார் என்பன போன்ற கருத்துக்கள் பலழய ஏற்பாட்டில் பரக்கக் காணப்படுகின்றன இவை திருக்குறளில் இல்லை.

அறவாழி யந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்த லரிது (8)

என்ற ஒரு குறளே அறத்தின்வழி நடப்பதற்கு இறைவன் துணை வேண்டும் என்னும் கருத்தை ஓரளவு தருகிறது எனலாம்.

73-ஆம் பாடலில் காட்டப்பட்டது போல நீதியின் வழியில் நடக்க முயன்றும் வாழ்வில் வளமடையாது துன்புற்றோர் கடவுள் தம் சார்பிலிருக்கிறார் என்னும் உணர்வினால் ஆறுதல் அடைதல் கூடும் என்னும் கருத்தும் குறளில் இல்லை.

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை யில (4)

என வள்ளுவர் பொதுவகையால் இறைவனை யடைந்தோர் துன்பத்-தினின்றும் நீங்குவர் எனக் கூறினார். கடவுள் பற்றற்றவர், அவரை யடைந்தோரும் பற்றற்றவராக இருப்பர் ஆகவே அவர்க்கு என்றும் துன்பமில்லை என வள்ளுவர் கருதியதாகத் தோன்றுகிறது. யூத கவிஞர்கள் இறைவனைப் பற்றற்றவராகக் கருதவில்லை, தாமும் பற்-றற்றவராக இருக்க முயலவில்லை துன்பத்தில் ஒரு நண்பனின் துணையினால் ஆறுதலடைவதுபோல இறைவனோடு தமக்குள்ள தொடர்பினால் ஆறுதலடைதல் கூடும் என எண்ணினர்.

துன்பத்தின் மூலம் இறைவன் மக்களை உயரொழுக்கம் உடை-யோராக்கி நன்னெறியில் சேர்க்கிறார் என்ற கருத்தும் துதிப்பாடல்-களில் அடிக்கடி காணப்படும்.

"தேவனே, எங்களைச் சோதித்தீர்; வெள்ளியைப் புடமிடுகிறது போல எங்களைப் புடமிட்டீர்.

எங்களை வலையில் அகப்படுத்தி, எங்கள் இடுப்புக்களின் மேல் வருத்தமான பாரத்தை ஏற்றினீர்.

மனுஷரை எங்கள் தலையின்மேல் ஏறிப்போகப் பண்ணினீர். தீயையும் தண்ணீரையும் கடந்து வந்தோம்; (ஆயினும்) செழிப்பான இடத்தில் எங்களைக் கொண்டுவந்து விட்டீர்'' (66 10-12).

பாபிலோனியராட்சியில் தம்மினத்தவர் துன்புற்றதைக் குறித்தே கவிஞர் இவ்வாறு பாடுகின்றார் இவ்வாறு நாட்டுக்கோ தனிப்பட்டவர்க்கோ நேரும் துன்பத்தினால் கடவுள் அவர்களைத் தூய்மை செய்கிறார் அல்லது நல்வழிப்படுத்துகிறார் என்ற கருத்தும் திருக்குறளில் இல்லை. தவத்தைக் குறித்துக் கூறும்போதே வள்ளுவர்,

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு (267)

எனக் கூறினார் துறவியர் தவத்தை மேற்கொள்ளும்போது அதனால் வரும் துன்பத்தைத் தாங்கி அதன் மூலம் ஆன்மீக உயர்வை அடைவர் எனக்கொள்ளலாம் இடுக்கண் அழியாமையினால் வாழ்க்கையில் வரும் துன்பங்களை எவ்வாறு ஏற்றுக்கொள்ள வேண்டுப் எனக் கூறும்போது துன்பத்தை எதிர்த்து வெல்ல வேண்டும், துன்பத்திற்கு அழிதல் ஆகாது, அதை நோக்கி நகுதல்வேண்டும். இடும்பை இயல்பு எனக் கொள்ளல் வேண்டும், துன்பத்தை இன்பமாகக் கருதல் கூடும் என்றெல்லாம் சொன்னாரேயன்றித் துன்பம் ஒருவனைக் குற்றங்களினீக்கித் தூய்மை செய்தல் கூடும் (Disciplinary value of suffering) என்பதைக் குறித்துக் கூறவில்லை.

72-ஆம் துதிப்பாடல் அரசனுக்குரிய கடமைகள் சிலவற்றைக் கூறும்.

''அவர் உம்முடைய ஜனங்களை நீதியோடும் உம்முடைய ஏழைகளை நியாயத்தோடும் விசாரிப்பார்'' (72.2).

''ஜனத்தில் சிறுமைப்படுகிறவர்களை அவர் நியாயம் விசாரித்து இடுக்கண் செய்கிறவனை நொறுக்குவார்'' (72.4).

''கூப்பிடுகிற எளியவனையும், உதவியற்ற சிறுமையானவனையும் அவர் விடுவிப்பார்.

பலவீனனுக்கும் எளியவனுக்கும் அவர் இரங்கி, எளியவர்களின் ஆத்துமாக்களை இரட்சிப்பார்.

அவர்கள் ஆத்துமாக்களை வஞ்சகத்திற்கும் கொடுமைக்கும் தப்புவிப்பார்; அவர்களுடைய இரத்தம் அவருடைய பார்வைக்கு அருமையாயிருக்கும்'' (72. 12- 14).

இங்கு நீதி செலுத்தலும் சிறப்பாகத் தளர்ந்தோரைத் தாங்குதலும் கூறப்படுகின்றன. இது,

கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி (390)

எனக் கூறிய வள்ளுவர் கருத்துடன் பொருந்துவதே. அரசன் குடிகளை யோம்புங்கால் குடிகட்குத் தீங்கு செய்பவரை ஒறுத்தல் வேண்டும் என்பது 'இடுக்கண் செய்கிறவனை நொறுக்குவார்' (Crush the oppresser) என்ற தொடரினால் காட்டப்படுகிறது. இதுவும்,

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர் (550)

என வள்ளுவர் கூறும் அரசநீதிக்குப் பொருந்துவதே.

செல்வத்தைச் சேர்த்தலும் காத்தலும் அதைத் தன் நாட்டின் நன்மைக்காகப் பயன்படுத்தலும் அரசன் கடமையே என்பதை வள்ளுவர்,

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு (385)

என்ற குறள் மூலம் கூறினார். 72-ஆம் துதிப்பாடலும் அரசன் செல்வம் சேர்க்க வல்லவனாக இருக்க வேண்டும், செல்வம் அவலிடம் திரள வேண்டும் என்னும் ஆவலைப் புலப்படுத்துகின்றது

''ஷேபாவின் பொன் அவருக்குக் கொடுக்கப்படும்'' (72 10) எனவும் ''பூமியிலே மலைகளின் உச்சிகளில் ஒருபிடி தானியம் விதைக்கப்பட்டிருக்கும்; அதன் விளைவு லீபனோனைப் போல் அசையும்; பூமியின் புல்லைப் போல நகரத்தார் செழித்தோங்குவார்கள்'' 16) எனவும் அரசன் ஆட்சியில் இருக்க வேண்டிய செல்வ வளத்தைக் குறித்துக் கவிஞர் பாடுகின்றார்

துதிப்பாடல்களில் அரசரைக் குறித்த பாடல் பலவற்றிலும் கடவுள் அரசனுக்கு நீதியை யறியும் நல்லறிவையளிப்பார், நன்னெறி-

யில் நிற்கும் அரசனைக் கடவுள் காப்பார் என்ற கருத்துக்கள் காணப்படுகின்றன. சாலோமோன் என்ற அரசனுக்கு இறைவன் கனவில் காட்சியளித்து அவன் வேண்டுகோளின்படி நீதியை யறியத்தக்க அறிவை அருளினார் என வரலாற்றிலக்கியங்களில் கூறப்பட்டதும் இங்குக் கருதத்தக்கது இத்தகைய கருத்துக்களும் திருக்குறளில் இல்லை. அரசன் இயல்பாய அறிவும் கல்விகேள்வியும் உடையனாதல் வேண்டும் என வள்ளுவர் கூறினார். கடவுள் அரசனுக்கு அறிவை யளிப்பார் எனக் கூறவில்லை. செங்கோல் செலுத்தி நாட்டைக் காக்கும் நல்லரசனைக் கடவுள் காப்பார் என வள்ளுவர் கூறவில்லை. ஆனால் 'முறைகாக்கும்' என்றார்.

இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின் (547)

என்பதே வள்ளுவர் வாக்கு

பண்டைக் காலத்தில் அரசனைத் தெய்வத்தன்மையுடையவனாகக் கருதும் வழக்கம் பல நாடுகளில் இருந்தது. யூதர்கட்கு அயலிலிருந்த பாபிலோனியர், எகிப்தியர் போன்ற பிறநாட்டவரிடையேயும் இக்கருத்து இருந்ததென ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். ஆனால் யூதர்கள் அவ்வாறு கருதவில்லை. பொதுவாக வள்ளுவர் அரசனைத் தெய்வத்தன்மையுடையவனாகக் கருதினார் எனத் தோன்றவில்லை.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும் (388)

என்ற குறளில் 'இறையென்று வைக்கப்படும்' என்ற தொடருக்குப் 'பிறப்பில் மகனே யாயினும் செயலான் மக்கட்குக் கடவுள் என்று வேறு வைக்கப்படும்' எனப் பரிமேலழகர் பொருள் கூறினார். ஆயினும் இறை என்னும் சொல்லை வள்ளுவர் தலைவன் என்ற பொருளிலா அல்லது தெய்வத் தன்மையுடையவன் என்ற பொருளிலா பயன்படுத்தினார் என்பது தெளிவின்று மணக்குடவர் 'மக்கட்கு நாயகன் என எண்ணப்படும்' என்றே பொருள் கூறினார். சிலப்பதிகாரம் முதலிய பிற தமிழ் நூல்களில் அரசன் தெய்வத்தன்மையுடையவன் என்ற பொருளும் உண்டு சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையில் திருமாலைக்குறித்துப்பாடியாடும்மகளிர்மூவேந்தர்களையும்திருமாலாகவே கூறுகின்றனர் (ஆய் குர 29 - 30) ஆனால் யூதர்கள் ஒரு போதும் அரசர்களைத் தெய்வத்தன்மையுடையவராகக் கருதவில்லை.

யூதா என்னும் பகுதியில் தாவீதின் குலத்தை யாவே தெரிந்தெடுத்து அரசராக நியமித்தார் என்ற கருத்து இருந்தது. 'உமது ஊழியன் குலத்தைக் காத்தருளும்' எனச் சில பாடல்களில் மக்கள் வேண்டு-கின்றனர். அரசன் கடவுளின் ஆணைக்கு உட்பட்டு ஆட்சி செலுத்தக் கடமைப்பட்டவன் என யூதர்கள் கருதினர். வள்ளுவரும் அரசன் தான் விரும்பியபடி ஆளலாம் என எண்ணவில்லை. அறத்தின்படி நீதியின்படி ஆள் தற்குரியவன் என்றார். முறைசெய்து காப்பாற்று வதனால்தான் அவன் இறையெனக் கருதப்படுகிறான். இளங்கோவும் சில இடங்களில் அரசரைத் தெய்வத்தன்மை உடையவராகக் கூறினும் 'அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என அறத்தின் ஆட்சிக்கே அவர்களையும் உட்படுத்தினார்.

5. 4. பிற கருத்துக்கள்

சில பொருள்களைக் குறித்து மாறுபட்ட இரு கருத்துக்களைத் துதிப்பாடல்களில் காணலாம். ஆலயத்தில் விலங்குகளைக்கொன்று பலியிடுதல் ஏற்ற வழிபாடு ஆகுமா? துதிப்பாடல்களைப்பாடிய கவிஞர் களில் உயிர்ப்பலியை ஆதரித்தவர்களுமுளர். மறுத்தவர்களும் உளா.

''பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பாமல் என் செவி-களைத் திறந்தீர்; சர்வாங்க தகனபலியையும் பாவநிவாரணபலி-யையும் நீர் கேட்கவில்லை'' (40.6)

இவ்வாறு கூறி ஒரு அன்பர் தேவனுக்குப் பிரியமானதைச் செய்வதும் அவர் அருளிய நீதிகளை உளத்தில் கொள்வதுமே ஏற்ற வழிபாடாகும் என்றார். உலக முழுவதையும் படைத்தவரும் விலங்குகள் பறவைகள் முதலிய அனைத்தையும் உடையவருமாகிய கடவுள் மக்கள் செலுத்தும் உயிர்ப்பலியை எதிர்பார்த்திருப்பாரா என மற்றொரு கவிஞர் வினவுகின்றார்.

''உன் வீட்டிலிருந்து காளைகளையும், உன் தொழுவங்களி-லிருந்து ஆட்டுக் கடாக்களையும் நான் வாங்கிக் கொள்வதில்லை.

சகல காட்டு ஜீவன்களும், பர்வதங்களில் ஆயிரமாயிரமாய்த் திரிகின்ற மிருகங்களும் என்னுடையவைகள்.

மலைகளிலுள்ள பறவைகளை யெல்லாம் அறிவேன், வெளியில் நடமாடுகிறவைகளெல்லாம் என்னுடையவைகள்.

நான் பசியாய் இருந்தால் உனக்குச் சொல்வேன்; பூமியும் அதன் நிறைவும் என்னுடையவைகளே.

நான் எருதுகளின் மாமிசம் புசித்து ஆட்டுக்கடாக்களின் இரத்தம் குடிப்பேனோ?'' (50.9-13)

இவ்வாறு யாவேயின் கூற்றாகக் கவிஞர் கூறினார். இத்தகைய கருத்துக்களை வேறுசில பாடல்களிலும் காணலாம ஆயினும்விலங்குப் பலியை விருப்பிச் செலுத்தும் பக்தர்களின் பாடல்களும் உள.

''ஆட்டுக் கடாக்களின் நிணப்புகையுடனே கொழுமையான-வைகளை உமக்குத் தகன பலியாக இடுவேன்; காளைகளையும் செம்-மறியாட்டுக் கடாக்களையும் பலியிடுவேன்'' (66.15).

வள்ளுவர் உயிர்ப் பலியை விருப்பவில்லை ஆயினும் விலங்கு-களைக் கொன்று பலியிடும் வழக்கம் சங்க காலத்தில் நம் நாட்டில் இருந்ததென்பதைப் பிற இலக்கியங்களால் அறியலாம. சிலப்பதி-காரத்தில் வேட்டுவ வரி விலங்குப்பலியைக் குறித்துக் கூறுகிறது. திருமுருகாற்றுப்படையும்,

சிறுதினை மலரோடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ

என விலங்குப்பலியை ஏற்றுக் கொள்கிறது ஒரே காலத்தில் ஒரு பொருளைக் குறித்து வெவ்வேறு கொள்கையுடையவர் இருத்தல இயல்பே.

வாழ்க்கையில் மகிழ்ச்சியைக் காட்டும் பாடல்களும் செல்வத்-தையும் வளத்தையும் வேண்டிப் பாடும் பாடல்களும் பல இருப்-பினும் யாக்கை நிலையாமை செல்வம் நிலையாமை ஆகியவற்றைக் கூறும் பாடல்களும் உள. 39, 49, 90 முதலிய பாடல்கள் நிலையா-மையைக் கூறும். மக்கள் வாழ்க்கை சொற்ப காலமே, செல்வம் இருப் பினும் மரணத்தறுவாயில் அது பயன்படுவதில்லை, செல்வத்தினால் ஒருவன் தன்னுயிரை மீட்டுக் கொள்ளமுடியாது, முயன்று செல்-வத்தைத் தேடி வைப்பினும் அதைப்பிறனே அனுபவிக்கிறான் என்பன போன்ற கருத்துக்கள் இவற்றில் காணப்படுகின்றன.

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு (336)

என நிலையாமையைக் கூறிய வள்ளுவர் கருத்தோடு இவையொத்-தனவே.

''எங்கள் ஆயுசுநாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதில் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே; அது சீக்கிரமாய்க் கடந்து போகிறது; நாங்களும் பறந்து போகிறோம்'' (90. 10).

மக்கள் வாழ்நாள் குறைவாக இருப்பதுடன் அதில் துன்பம் அதிகமாக இருக்கிறதே என இக்கவிஞர் கவலையுறுகிறார். இது,

வேதநூல் பிராயம் நூறு மனிதர் தாம் புகுவ ரேனும்
பாதியும் உறங்கிப் போகும் நின்றதில் பதினை யாண்டு
பேதைபா லகன தாகும் பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகரு ளானே
(திருமாலை 3)

எனப் பாடிய தொண்டரடிப்பொடி யாழ்வாரின் கூற்றை யொக்கும். ஆயினும் ஏதோ துன்பம் நிறைந்த காலத்தில் மேற்காட்டப்பட்ட வரிகளைப் பாடிய யூத கவிஞர் துறவு மனப்பான்மையை மேற்கொள்ளாது 'நாங்கள் துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கும் சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும்' (90.15) என்ற வேண்டுகோளுடன் தம் கவிதையை முடிக்கிறார்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் யூதர்களிடையே மறுமையைக் குறித்த தெளிவான கொள்கைகள் இல்லை. உயிர் உலகில் திரும்பத் திரும்பப் பல்வேறு வடிவில் பிறந்திருக்கிறது என அவர்கள் எண்ணவில்லை. நம் நாட்டில் ஆன்மாவையும் உடலையும் பிரித்தெண்ணுவது புத்தர் காலத்தின் முன்பிருந்தே தத்துவ அறிஞரின் வழக்கமாக இருக்கிறது. யூதர்கள் அவ்வாறு எண்ணுவதில்லை. காயம் தம்மின் அந்நியமாகும் என அவர்கள் அறிந்து பிரித்துப் பார்க்கவில்லை. உடலின் தோற்றமே உயிருக்கும் தோற்றமெனக் கருதினர். மரணத்தின் பின் மரித்தவரின் நிலையென்ன? இறந்தோர் நிழல் போன்ற வடிவில் செயலற்ற நிலையிலிருப்பர் என்ற ஒரு கருத்தே தீர்க்கதரிசிகளின் நூல்களிலும் பல துதிப்பாடல்களிலும் காணப்படுகின்றது. இந்நிழல்கட்கு இன்பமும் இல்லை துன்பமில்லை, அவை இறைவனைத் துதிப்பதுமில்லை

''மரணத்தில் உம்மை நினைவுகூர்வதில்லை, பாதாளத்தில் உம்மைத் துதிப்பவன் யார்?'' (6.5)

''பிரேதக்குழியில் உமது கிருபையும், அழிவில் உமது உண்மையும் விவரிக்கப்படுமோ?

இருளில் உமது அதிசயங்களும், மறதியின் பூமியில் உமது நீதியும் அறியப்படுமோ ?'' (88. 11-12).

இத்தகைய தெளிவற்ற கருத்துக்களே மறுமையைக் குறித்துக் காணப்படினும் ஒவ்வோரமையம் பக்தியுணர்ச்சியில் ஈடுபடும் போதும் இறைவனின் அழிவற்ற தன்மையைக் குறித்துச் சிந்திக்கும் போதும் மரணத்தின்பின்னும் இறைவனை வணங்குதல் கூடும். இறந்தபின்பும் உயிருக்குக் கடவுளுடன் தொடர்பிருத்தல் கூடும் என்ற எண்ணமும் அன்பர்கட்கு ஏற்படுவதுண்டு.

''ஆனாலும் தேவன் என் ஆத்துமாவைப் பாதாளத்தின் வல்லமைக்குத் தப்புவித்து மீட்பார், அவர் என்னை ஏற்றுக் கொள்ளுவார்'' (49.15)

''உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே மகிமையில் ஏற்றுக் கொள்வீர்'' (73.24).

திருக்குறளிலோ திட்டமான மறுமைக் கொள்கையுண்டு. வள்ளுவர் பொதுவாக அக்காலத்தில் தமிழ்நாட்டில் பரவியிருந்த கொள்கைக்கேற்ப உயிர் இவ்வுலகில் பலமுறை பிறந்திருக்கிறது என நம்பினார். உறக்கமும் விழிப்பும் போலப் பிறப்பும் இறப்பும் மாறி மாறி நிகழ்கின்றன.

> உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
> விழிப்பது போலும் பிறப்பு (339)

வள்ளுவர் மறுபிறப்போடு வினைத்தொடர்பையும் ஏற்றுக் கொண்டார்

> எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை
> வீயாது பின்சென் றடும் (207)

வினை இம்மையிலும் பயன்கொடுத்தல் கூடும்;

> பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
> பிற்பகல் தாமே வரும் (319)

மறுமையிலும் பயன்தரும்.

> சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
> இம்மையும் இன்பம் தரும் (98)

இப்பிறவியிற் செய்யும் வினை மறுமையில் தொடரும்; எனவே சென்ற பிறவியில் செய்த வினையின் பயனாய் இப்பிறவியில் துன்புறுதல் கூடும் என்ற கருத்துப் பெறப்படுகிறது. இத்தகைய கருத்தும் திருக்குறளில் உண்டு.

உயிருடம்பின் நீக்கியார் என்ப செயிருடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர். (330)

சென்ற பிறவியில் பிறவுயிர்களைக் கொன்றவர்கள் அத்தீவினைப் பயனால் இப்பிறவியில் நோயுற்றுத் துன்பம் நிறைந்த வாழ்க்கையுடையராவர் எனவும் வள்ளுவர் கருதினார். இன்னும் வினைத் தொடர்பு மட்டுமின்றி இப்பிறவி பலவகைகளில் வரும் பிறவிகளோடு தொடர்புடையதாய் அவற்றைப் பாதிக்கக் கூடியதாயுள்ளது. ஒரு பிறவியில் ஒருவன் கற்ற கல்வி பல பிறவிகளிலும் அவனுக்குப் பாதுகாவலாக நின்று பயனளிக்கும். அவ்வாறே ஒருவன் ஒருபிறவியில் ஐம்புலன்களை யடக்கித் தூயவாழ்க்கை வாழச்செய்யும் முயற்சியும் பல பிறவிகளில் தொடர்ந்து பயனளிக்கும். ஒரு பிறவியில் ஏற்பட்ட நட்பு ஆகிய அன்பின் தொடர்பும் பல பிறவிகளிலும் தொடர்ந்து வரும். இக் கருத்துக்களைப் பின்வரும் குறள்களில் காணலாம்.

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து (126)

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து (398)

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தம்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு (107)

முற்கால யூதரின் கொள்கையின்படி இறந்தோர்க்கு இன்பதுன்பமில்லை யெனவே வினைத்தொடர்போ வேறு தொடர்போ இல்லை. தானியேல் என்ற நூல்எழுதப்பட்ட காலத்திலிருந்து துறக்கம் நிரையம் குறித்த கொள்கைகள் தோன்றலாயின. வள்ளுவர் மறுபிறப்பை ஏற்றுக் கொண்டதோடு துறக்கம் நிரையம் அல்லது ஏதோ இன்பமயமானதும் துன்பமயமானதுமாய உலகுகள் உள என்ற கருத்தும் உடையவரே.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் (50)

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு (86)

புகழின்றால் புத்தேள்நாட் டுய்யாதால் என்மற்று
இகழ்வார்பின் சென்று நிலை (966)

இக்குறள்கள் அமரர் உறையும் இன்ப உலகைக் குறிப்பிடுவன.

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும் (121)

அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல் (243)

இக்குறள்கள் அவ்வின்ப உலகுக்கு மாறாக இருள் சேர்ந்த துன்ப உலகொன்றும் உள்ளதென்பதைக் காட்டும். இவ்வுலகுகட்குச் செல்லத் தக்கவர் யார்? சிலப்பதிகாரத்தில் மிகச் சிறந்த செயல்களைச் செய்த கோவலனும் கண்ணகியும் வானுலகு புக்கதாகவும் அவ்வளவு உயர்ந்த செயல்களைச் செய்யாத மாதரியும் கண்ணகியின் தாயாரும் இறந்ததன் அண்மையிலேயே மறுபடியும் இவ்வுலகில் பிறந்ததாகவும் கூறப்படுகிறது. அவ்வாறே வள்ளுவரும் மிகச் சிறந்த செயல்களைச் செய்தார் அல்லது மிக உயர்வாழ்க்கை வாழ்ந்தோர் துறக்கத்தையும் மிகக் கொடுஞ்செயல்களைச் செய்தோர் நிரயத்தையும் அடைய ஏனையோர் மறுபடியும் இவ்வுலகில் பிறப்பர் என எண்ணியிருக்கலாம். இவற்றுக்கு மேலாக வீட்டு நிலை யுண்டெனவும் முற்றவும் பற்றற்றவரே யதை யடைவர் எனவும் வள்ளுவர் கருதினார் என்பதை,

யானெனதென்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும் (346)

என்பது போன்ற சில குறள்கள் காட்டும்.

யூதர்களின தானியேல் போன்ற வெளிப்பாட்டிலக்கியங்கள் மிகச் சிறந்தோரும் மிகக் கொடியோருமே உரிய வெகுமதியையும் தண்டனையையும் பெற உயிர்த்தெழுவர் எனக் கூறுகின்றன. இந்நூல்களை எழுதிய ஆசிரியர்களின் கருத்துப்படி ஏனையோர் எழார் போலும். புதிய ஏற்பாட்டின் காலத்திலிருந்து கிருஸ்தவர்கள் மறுமை யாவர்க்கும் உண்டு. இறந்தோர் இவ்வுலகில் மீண்டும் வந்து பிறப்பதில்லை, ஆனால் ஏதோ ஒரு நிலையில் வாழ்கின்றனர் என்னும் கொள்கையையுடையவர் ஆவர்.

## 5. 5. பாடலுட் சிறந்த பாடல்

'பாடலுட் சிறந்த பாடல்' (Song of songs) அல்லது சாலோ-மோனின் பாடல்கள் எனக் குறிப்பிடப்படுவன பழைய ஏற்பாட்டி-லுள்ள அகப்பொருட் பாடலாகும். இவை வள்ளுவர் பாடியகாமத்துப் பாலை யொப்பன. இவை யுண்மையில் சாலோமோனால் பாடப்-பட்டவையல்ல. நாட்டுப் பாடல்களாக மக்களிடையே எழுந்தனவே யென ஆராய்ச்சியாளர் கருதுவர். யூதர்கள் திருமணத்தின்போது ஏழு நாட்கட்கு உறவினர்கூடி மணமகனையும் மணமகளையும் அலங்கரித்துச் சிறப்புச் செய்வர் ஆடல் பாடல் முதலியவற்றை நிகழ்த்துவர். அக்காலங்களில் பாடப்படும் பாடல்கள் சிலவே இப்பகுதியில் சேர்க்கப்-பட்டன என்பர்.

ஓர் ஆடவனும் பெண்ணும் தம்மிடையே உள்ள அன்பினால் அடையும் மகிழ்ச்சியை, உள்ள நிறைவை இக்கவிதைகள் காட்டும். மணமகளைப் புது மலருக்கும் மணமகனை மலைகளில் தாவி வரும் கலைமானுக்கும் இக்கவிதைகள் ஒப்பிடுகின்றன. வேறு பல உவ-மைகளையும் கூறுகின்றன. தலைவி சோலையைப் போலவும் நீரூற்-றைப் போலவும் இருப்பதாகவும் ஒரு கவிதைபுனைந்துரைக்கிறது. மா துளங் கனிகளும் பிறபழங்களும் நறுமணப் பொருள் தரும் செடிகளும் நிறைந்த சோலை போலவும் சோலையின் நடுவேயிருக்கும் என்றும் நீர் வற்றாத ஊற்றுப் போலவும் அவள் இருக்கிறாள்.

ஆடுகளை மேய்த்தல், பழத்தோட்டங்களையமைத்தல் ஆகிய யூதநாட்டுத் தொழில்கள் இப்பாடல்களிடையே குறிப்பிடப்படு-கின்றன. 'நான் விதைகள் நல்கும் தோட்டத்திற்குச் (Nut orchard) சென்றேன். பள்ளத்தாக்கிலுள்ள பூக்களைப் பார்த்துக் கொண்டு நின்-றேன். திராட்சைக் கொடிகள் அரும்பு விட்டுருக்கின்றனவா என்றும் மாதுளைச் செடிகளி மலர்களைக் கொண்டிருக்கின்றனவா என்றும் பார்த்தேன். அப்போது தலைவன் தேரில் வந்து என்னையும் தன் தேரில் ஏற்றிக் கொண்டான்' என ஒரு கவிதையில் தலைவி கூறு-கின்றாள்.

நம் சங்க காலத்து அகப்பொருட் பாடல்களில் கருப் பொருள் கள் பல காட்சியளிப்பது போல இப்பாடல்களிலும் யூதர் நாட்டைச் சார்ந்த மரம் செடி கொடிகள், விலங்குகள், பறவைகள் ஆகியவை பல உவமைகளிலும் தலைவன் தலைவியர் எதிர்ப்படும் இடத்துச் சூழ்

நிலையில் புனைந்துரைகளிலும் குறிப்பிடப்படுகின்றன. இரண்டாம் பாடல் இளவேனிற் காலத்துக் காட்சிகளை நன்குபுனைந்துரைக்கிறது.

என் அன்பே அழகுடையவளே எழுந்திரு. எழுந்துவா
மாரிக் காலம் கடந்து போய்விட்டது
நிலத்தில் பூக்கள் எழுகின்றன
பறவைகள் பாடும் காலம் வந்து விட்டது
புறாக்களின் குரல் நம்நாட்டில் கேட்கிறது
அத்திமரத்தில் காய்கள் தோன்றுகின்றன
திராட்சைச் செடிகளில் மலர்கள் மலர்கின்றன
அவை மலர்ந்து நறுமணம் கமழ்கின்றன
என் அன்பே அழகுடையவளே எழுந்திரு எழுந்துவா [2]

இவ்வாறு செல்கின்றன சாலோமோனின் உன்னதப் பாட்டு என்னும் இப்பாடல்கள். ஒருவனும் ஒருத்தியும் இணைந்து வாழ்தல் அறம் என்பதைத் தவிர இவற்றில் வேறுநீதிக்கருத்துக்கள் இல்லை

இப்பாடல்களில் தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே உள்ள அன்பின் தொடர்பு இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் அல்லது கிருஸ்துவுக்கும் சபைக்கும் இடையே உள்ள தொடர்பைக் காட்டு மெனப் பிற்காலத்தில் சிலர் இவற்றுக்கு உள்ளுறைப் பொருள் கொண்டனர். ஆனால் இவை பண்டு அக்கருத்துடன் எழுதப்-பட்டன அல்ல. மக்களிடையே உள்ள ஆண்பெண் அன்பைக் குறித்துப் பொதுமக்களிடையே தோன்றிய பாடல்களே.

---

2. இப்பாடல் விவிலியத்தின் தமிழ்மொழி பெயர்ப்பிலின்றும் எடுக்கப்படாது புதிய அமெரிக்க மொழிபெயர்ப்பினின்றும் தமிழாக்கப்பட்டது.

6

## மூதறிவு இலக்கியம்

பழைய ஏற்பாட்டில் யோபு, நீதிமொழிகள், பிரசங்கி என்னும் மூன்று நூல்களும் மூதறிவு இலக்கியம் எனப்படும்.

எரேமியாவின் காலத்திலேயே ஞானிகள் அல்லது அறிவிற் சிறந்தோர் (Wise men) என அழைக்கப்பட்ட சிலர் இருந்தனர் என்பதை "ஆசாரியாரிடத்திலே வேதமும், ஞானிகளிடத்திலே ஆலோசனையும் தீர்க்கதரிசிகளிடத்திலே வசனமும் ஒழிந்து போவதில்லை" (எரே. 18.18) யெனத் தம் கால மக்கள் எண்ணியதாக எரேமியா கூறுவதனின்றும் உணரலாம். மக்களுள் கல்வியறிவும் பட்டறிவும் மிக்கோராய்ப் பிறருக்கு ஆலோசனை சொல்ல வல்லவராய் இருந்தோரையே ஞானிகள் அல்லது அறிஞர் (Wise men) எனக் குறிப்பிட்டனர் போலும். இவர்களிடமிருந்தே மூதறிவு இலக்கியம் தோன்றியிருக்கலாமென்பர்.

தீர்க்கதரிசிகள், யூதர் யாவேயினால் சிறப்பாகத் தெரிந்தெடுக்கப்பட்டு ஓர் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டவர்கள் என்ற கருத்தையும் யூத வரலாற்றையும் தத்தம் காலத்து அமைந்த சமூக வரலாற்றுச் சூழ்நிலைகளையும் உளத்தில் கொண்டு தம் நீதிகளையும் போதனைகளையும் கூறியிருப்ப மூதறிவு இலக்கியங்களோ இச் சார்புகளின்றிப் பொதுநீதிகளையே கூறுகின்றன. ஆலயத்தையும் வழி

பாட்டு மரபையும் குறித்து அவை கூறவில்லை. சிறப்பாக யூதர்கள் குரிய விதியையும் கூறவில்லை யூதர் என்ற எண்ணமின்றிப் பொதுவாக மக்கட்சேற்ற நீதியையே அவை கூறுகின்றன. இம்முறையில் பொது நீதியைக் கூறும் திருக்குறளொடு இவை மிக ஒற்றுமையுடை. எனவே. விவிலியத்தில் திருக்குறள் போன்ற நம் நீதி நூல்கட்கு மிக நெருங்கி நிற்பவை மூதறிவு இலக்கியங்களே.

பழைய ஏற்பாட்டின் இறுதிக்காலத்திலும் புதிய ஏற்பாட்டின் தொடக்க காலத்திலும் (கி மு 200-கி.பி.200) வெளிப்பட்டு இலக்கியங்கள் பல தோன்ற அவற்றுள் தானியேல், வெளி என்னுமிரண்டே விவிலியத்தில் சேர்க்கப்பட்டது போலப் பழைய ஏற்பாட்டின் பிற்காலத்தில் எழுந்த பல மூதறிவு இலக்கியங்களுள் மூன்றே விவிலியத்தில சேர்க்கப்பட்டன பிற மூதறிவு நூல்களும் உள. 'பென்சேராவின் முதுமொழி' (The Wisdom of Ben Sirah) 'சாலமோனின் முதுமொழி' (The Wisdom of Solomon) முதலியன தற்போதும் உள. ஆயினும் அவை பழைய ஏற்பாட்டைத் தொகுத்து அறிஞர்களால் அதில் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை இவற்றுக்கும் பழைய ஏற்பாட்டிலுள்ள மூதறிவு நூல்கட்கும் பல ஒற்றுமைகளும் உள.

மூதறிவு இலக்கியங்களனைத்தும் கி மு.400 ஆண்டின் பின்னெழுந்தவையே யென விவிலிய நூலை ஆயும் அறிஞர்கள் கருதுகின்றனர். இவை பெர்சியராட்சிக் காலத்திலும் கிரேக்கராட்சிக் காலத்திலும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். ஆகவே இவற்றில் பெர்சிய கிரேக்க நாடுகளில் நிலவிய சமயதத்துவக் கருத்துக்களின் செல்வாக்கு ஓரளவு காணப்படுகின்றதென அறிஞர் பலர் கருதுவர். ஆயினும் எவ்வெக் கருத்துக்கள் அவ்வாறு வெளிநாடுகளிடமிருந்து பெறப்பட்டன எனத் திட்டமாகக் கூறுதற்கில்லை.

நீதிமொழிகள் மக்களிடையே வழங்கிய முதுமொழிகளின் தொகுப்பாகும் பிரசங்கியென்னும் நூல்முழுவதும் ஒரு ஆசிரியரால் இயற்றப்பட்டது எனத் தோன்றும் 'யோபு' ஒரு கதைப்பாடலாகும். ஒரு பழங்கதையைப் பயன்படுத்திக் கவிஞர் ஒருவர் இந்நூலைச்செய்யுள் வடிவில் இயற்றினார் என ஊகிக்கப்படுகின்றது.

6. 1. நீதி மொழிகள்

பழைய ஏற்பாட்டில் தற்போதுள்ள நீதிமொழிகள் என்னும் நூல் ஒரு தொகுப்புகளின் தொகுப்பு (Collection of Collections) எனக்

கருதப்படுகிறது. இதில் அடங்கிய முதுமொழிகள் முன்பு சிறுசிறு தொகுப்புக்களாகத் திரட்டப்பட்டுப் பின் ஒன்று சேர்க்கப்பட்டிருக்க வேண்டுமென்பர். இத்தகைய எட்டுத் தொகுப்புகள் அல்லது பிரிவுகள் தற்போதுள்ள நீதிமொழிகள் என்னும் நூலில் அடங்கியுள்ளன வென்பர்.

அவை பின்வருவன வாகும்.

(1) 1-9 தாவீதின் மகனாகிய சாலோமோனின் பழமொழிகள் எனக் கூறப்படுகின்றன.

(2) 10.1-22.16 இவையும் சாலோமோனின் பழமொழிகளெனக் குறிப்பிடப்படுகின்றன.

(3) 22 17-24.22 ஞானிகள் அல்லது அறிஞர்களின் சொற்கள்.

(4) 24.23-24 34 இவையும் ஞானிகளின் சொற்களே.

(5) 25-29 இவை எசேக்கியா என்னும் அரசனால் திரட்டியெழுதப் பட்ட சாலோமோனின் முதுமொழியெனக் குறிப்பிடப்படுகின்றன.

(6) மாசா என்னும் ஊரைச் சேர்ந்த யாகேயின் மகன் ஆகூரின் பழமொழிகள்.

(7) 31.1-9 மாசாவின் அரசன் லாமுவேலுக்கு அவன் அன்னை கற்பித்த முதுமொழிகள்.

(8) 31.10-31 ஒரு நல்ல குடும்பப் பெண்ணின் குணநலங்களைக் குறிதத செய்யுள்.

நீதிமொழிகள் என்னும் நூலில் காணப்படும் குறிப்புக்களைக் கொண்டே இப்பிரிவுகள் ஆய்ந்துணரப்படுகின்றன. ஆயினும் இங்கு சாலோமோனின் முதுமொழிகளெனக் குறிப்பிடப்படுபவை உண்மையில் அவ்வரசனால் கூறப்பட்டனவையோ திரட்டப்பட்டவையோ அல்ல எனவே ஆராய்ச்சியாளர் கருதுவர். மேற்காட்டப்பட்ட பகுப்புக்களுள் மிகப் பழமையானது இரண்டாவதே என்பர். இப்பகுப்பில் ஒரு சில பழமொழிகள் சாலோமோன் காலத்திலிருந்து வந்திருக்கலாம். பெரும்பாலும் அவை பிற்காலத்தனவே. நீதிமொழிகளின் முதற்பகுதி (1-9)யே மிகப் பிற்காலத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டுமென ஊகிப்பர். இப்பகுதி கி.மு இரண்டாம் நூற்றாண்டிலேயே எழுதப்பட்டிருக்க வேண்டுமென்பர்.

நீதிமொழிகளின் முதலொன்பது அதிகாரங்கள் தீமையினின்றும் முக்கியமாகக் காமத்தினின்றும் விலகும்படி எச்சரிக்கின்றன. பிறரைக் கொன்று பொருளைக் கவரும் திருடர் கூட்டத்தில் சேராமலும் பொது மகளிர் இல்லத்திற்குச் சென்று செல்வத்தையும் பிறரின் நன்மதிப்பையும் இழக்காமலும் தீமைக்கு விலகித் தீயோரின் உறவை விட்டு நன்னெறியில் செல்லுமாறு கற்பிக்கின்றன. தாயின் சொல்லையும் தந்தை கூறும் புத்திமதியையும் தட்டலாகாது. மற்றும் சோம்பலை நீக்க வேண்டும். எறும்பு எப்படிச் சுறுசுறுப்பாக உணவு சேர்க்கிறதோ அதுபோல் ஊக்கத்துடன் உழைக்க வேண்டும். இவ்வாறு அறிவுரை கூறுவதுடன் பொன்னையும் வெள்ளியையும் பிறசெல்வங்களையும்விட அரியதும் சிறந்ததுமான ஞானத்தைத் தேடும்படியும் வற்புறுத்துகின்றன இப்பகுதியிலுள்ள நீதிமொழிகள்.

ஞானம் இப்பகுதியில் ஒரு பெண்ணாக உருவகிக்கப்படுகிறது. ஞானம் தெருக்களிலும் அங்காடி யருகிலும் நகர வாசலிலும் நின்று மக்களை யழைக்கிறது பேதைகட்கு அறிவையும் அறிவுடையோர்க்கு நல்ல ஆலோசனையையும் தரவல்லதாயிருக்கிறது. ஞானம் நீடித்த வாழ்நாளையும் செல்வத்தையும் மதிப்பையும் தரும் அதன் வழி நன்மையும் அமைதியுமானது தன்னைப் பற்றியவர்களுக்கு வாழ்வளிக்கும் தரு (The tree of life) வாக உள்ளது ஞானம் நல்ல உணவு வகைகளை உண்டாக்கிஒரு பந்தியை ஏற்படுத்தித் தன் பணிப் பெண்களை அனுப்பி அனைவரையும் விருந்துக்கு அழைக்கிறது. 'பேதைகளே நான் தரும் உணவையுண்டு அறிவடையுங்கள். நல்வாழ்வு பெறுங்கள். புத்தியின் வழியில் நடவுங்கள்' எனக் கூப்பிடுகிறது

வள்ளுவர் பொருட்பாலில் 'அறிவுடைமை' என்ற தலைப்பில் பத்துக் குறள்களை எழுதினார். துறவறவியலில் நிலையாமை, துறவு, அவாவறுத்தல், மெய்யுணர்தல் என்னும் நான்கு அதிகாரங்களையும் பரிமேலழகர் ஞானம் எனக் குறிப்பிட்டார். நீதிமொழிகளில் கூறப்படும் ஞானத்தை எதனுடன் ஒப்பிடலாம் ?

> எவ்வ துறைவ துலகம் உலகத்தோடு
> அவ்வ துறைவ தறிவு (426)

என அறிவுடைமையில் வள்ளுவர் உலகியலறிவையே கூறினார். ஆயினும்

> சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
> நன்றின்பா லுய்ப்ப தறிவு (422)

என்ற குறளை நோக்கும்போது அது ஒருவாறு நீதிமொழிகளில் கூறப்பட்ட ஞானத்தையொக்கும் எனலாம். ஆயினும் இவ்வறிவுடைமை உலக அறிவேயன்றிச் சமய அறிவோ இறைவனைப் பற்றி அறிகிற அறிவோ அன்று. துறவறத்தில் நிலையாமை முதலிய நான்கு அதிகாரங்களும் உலகின் நிலையாமையை உணர்ந்து அனைத்தையும் துறந்து ஆசைகளை நீக்கி வீட்டைத் தரவல்ல மெய்யறிவைப் பெறுதலைக் குறிக்கும். இவ்வறிவே கடவுளையறியும் அறிவு எனவும் கொள்ளலாம்.

> பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
> பற்றுக பற்று விடற்கு (350)
> பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
> செம்பொருள் காண்ப தறிவு (358)

என்னும் குறள்கள் கடவுளைப் பற்றுவதனால்அவரை அறிவதனால் பற்றும் பேதைமையும் நீங்கும் என்ற கருத்தைத் தரும். யூதர்கள் இல்லறம் துறவறம் என அறத்தைப் பிரிக்கவுமில்லை. உலகில் நன்னெறி காட்டி நல்வாழ்க்கையைத் தரும் அறிவு வேறு வீட்டைத் தரும் மெய்யுணர்வு வேறு என அறிவைப் பிரிக்கவுமில்லை. நீதிமொழிகளில் சென்றவிடத்தால் செலவிடாது தீது ஒரீஇ நன்றின் பாலுய்ப்பது ஞானமே. அந்த ஞானமே தேவனால் அளிக்கப்பட்ட அறிவாகவும், தேவனை அறிவிக்கும் அறிவாகவுமுள்ளது.

"அப்பொழுது கர்த்தருக்குப் பயப்படுதல் இன்னதென்று நீ உணர்ந்து, தேவனை அறியும் அறிவைக் கண்டடைவாய்.

கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்றும் அறிவும் புத்தியும் வரும்.

அவர் நீதிமான்களுக் கென்று மெய்ஞானத்தை வைத்திருக்கிறார்; உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு அவர் கேடகமாயிருக்கிறார்." (நீதி. 25-7)

ஞானத்தால் மக்கள் நல்வாழ்க்கை நடத்த வல்லராகின்றனர் என்பது மட்டுமன்றி இறைவனும் ஞானத்தால் செயலாற்றுகின்றார்.

"கர்த்தர் ஞானத்தினாலே பூமியை அஸ்திவாரப்படுத்தி, புத்தியினால் வானங்களை ஸ்தாபித்தார்.

அவருடைய ஞானத்தினாலே ஆழங்கள் பிரிந்தது, ஆகாயமும் பனியைப் பெய்கிறது." (3.19 - 20)

மற்றோரிடத்தில் ஞானத்தின் கூற்றாகப் பின்வருமாறு கூறப்படுகிறது.

* கர்த்தர் தமது தொழிலில் முதன்முதலாக என்னை உண்டாக்கினார். ஆதியில் அதுவே அவர் முதற்செயலாக இருந்தது.

மண்ணுலகு உண்டாவதற்கு முன், நெடுங்காலத்தின் முன் நான் நியமிக்கப்பட்டேன்.

ஆழங்கள் உண்டாவதற்கு முன், நீர் நிறைந்த ஊற்றுக்கள் இல்லாதபோது, நான் தோற்றுவிக்கப்பட்டேன். மலைகள் உருவாக்கப்படுவதற்குமுன் குன்றுகள் தோன்றுமுன் நான் தோற்றுவிக்கப்பட்டேன்.

வயல்களோடு மண்ணுலகை அவர் படைப்பதன்முன் பூமியின் முதல் மண் உண்டாவதற்கு முன்,

அவர் வானவெளியை நிறுவியபோது நான் அவருடன் இருந்தேன்.

அவர் ஆழத்தின் மீது (கடல்) ஒரு வட்டத்தை வரைந்த போதும், அவர் தன்னை ஸ்திரப்படுத்தியபோதும், ஆழத்தின் நீருற்றுக்களைத் தோற்றுவித்த போதும்,

நீர்ப்பெருக்கு அவர் ஆணையை மீறாதபடி கடலுக்கு அதன்கரைகளை அவர் ஏற்படுத்தியபோதும் பூமியின் அத்திவாரத்தை அவர் வரைந்து கொண்ட போதும் மிக்க திறனுள்ள வேலையாளைப் போல நான் அவர் அருகில் இருந்தேன்.

நித்தம் அவர் மனமகிழ்ச்சியாயிருந்து என்றும் அவர் சமூகத்தில் களி கூர்ந்தேன்.

மக்கள் வசிக்கத்தக்க அவர் உலகைக் குறித்து உவகை கொண்டேன், மானிட மக்களின் பேரில் மகிழ்ச்சியுற்றேன்.

(8. 22 - 31)

இவ்வாறு கூறுகிறது ஞானம். படைப்பின் தொடக்கத்தின் முன்பே இறைவனுடனிருந்த ஞானம் அவர் செயல்கள் யாவற்றிலும் பங்கு பற்றியது எத்திறம் நின்றானீசன் அத்திறம் நின்றது ஞானம். இங்கு ஞானம் என்பது மக்களின் உலகியலறிவோ அன்றி மக்களின் மெய்யுணர்வோ அன்று. இறைவனின் ஞானசக்தியாக விளங்குகின்றது அது. அநாதியாக என்றும் இறைவனுடனுறைந்து படைப்-

பாதி தொழிலில் பயின்ற ஞானசக்தியே மக்களுக்கும் நல்லறிவை-யளித்து அவர்களை நல்வழிப்படுத்தி இறைவனையறியும் அறிவை-யும் அவர்கட்கு நல்குகிறது. சித்தாந்த நூல்களில் சக்தி என்றும் இறைவனுடன் நின்று செயலாற்றுவதாகவும் அதுவே இறைவனுக்கும் உயிர்களுக்கும் இடை நின்று கூட்டுவிக்கும் வாயிலாகவும் (Mediating Princ ple) விளங்குவதுபோல[1] நீதிநூல்களின் முற்பகுதியில் ஞானம் இறைவனுக்கு ஒரு துணையாளாகவும் அவருக்கும் உலகுக்கும் இடையே ஓர் இடையீட்டாளர் (Mediator) ஆகவும இடம்பெறுகிறது.

நீதிமொழிகளின் இரண்டாம் பிரிவில் உள்ளவையே மிகப் பழமையானவை. இவை எவ்வித ஒழுங்குமின்றிப் பல்வேறு பொருள்களைக் குறித்தனவாய் விரவிய நிலையில் காணப்படுகின்றன. மூன்-றாம் நான்காம் பிரிவுகளில் பொருள் பற்றிய தொகுப்பு ஓரளவு காணப்படுகிறது. இப்பிரிவுகளிலுள்ள நீதிமொழிகள் 'ஆமெனொபிசின முதுமொழி' (The Wisdom of Amenophis) என்ற எகிப்திய நூலின் கருத்துக்களோடு ஓரளவு ஒத்துள்ளதென்பர்.எகிப்திய நூலே பழையது ஆகையினால் நீதிமொழிகளில் இப்பகுதியை யெழுதிய யூத அறிஞர்களே அதை ஓரளவு தழுவியிருத்தல் வேண்டும். நான்காம் பிரிவிலும் ஓரளவு பொருள் பற்றிய தொகுப்பு காணப்படுகின்றது. ஆயினும் நீதிமொழிகள் தனித்தனியாகவும் காணப்படுகின்றன. இரண்டாம் பிரிவிலுள்ள நீதிமொழிகள் சில இங்குத் திரும்பவும் காணப்படு-கின்றன.

எ.கா :

''சண்டைக்காரியோடே ஒரு பெரிய வீட்டில் குடியிருப்பதைக் காட்டிலும் வீட்டின்மேல் ஒரு மூலையில் தங்கியிருப்பதே நலம்'' (21 9.25.24)

இரண்டாம் பிரிவிலிருந்து ஐந்தாம் பிரிவு வரையடங்கிய இந் நீதிமொழிகள் பலபொருள் குறித்தன. சில இல்லத்தில் தந்தைக்கும் தாய்க்கும் மக்களுக்கும் உள்ள கடமைகளையும் தலைவனுக்கும் வேலையாட்களுக்கும் இடையே இருக்கவேண்டிய உறவையும் குறித்தன. சில பொது வாழ்க்கையில் கொடுக்கல் வாங்கல், பண்ட மாற்று, கடன், உழவு முதலிய தொழில்கள் குறித்தன. சில போரையும் அரச நீதியையும் பிறர் அரசரோடு பழகும் திறத்தையும் குறித்தன. நண்பரையும் பகைவரையும் செல்வரையும் வறியோரையும் குறித்த நீதிமொழிகளும் உள.

பொதுவாக இந்நீதிமொழிகள் மிகவுயர்ந்த தியாகச் செயல்-களையோ மிக அரிய குறிக்கோள்களையோ சுட்டவில்லை. பலரும்,

1. சிவஞான சித்தியார் சுபக்கம், சூத். 5 செய். 9

கடைபிடிக்கக் கூடிய நீதிகளையே காட்டுகின்றன. பெரும்பாலும் நல்வாழ்க்கை வாழ்ந்தால் நலம் பெறலாம், புகழையும் பிறரின் நன்மதிப்பையும் அடையலாம், நீதியோடு வாழ்பவர் இறையருளால் நீடித்த வாழ்நாளையும் நன்மக்களையும் பெறுவர் என ஒரு பயன் நோக்கிக் கடைப்பிடிக்கும் அறங்களாகவே இவை காணப்படுகின்றன.

இந்நீதிமொழிகளிற் பல, பல குறள்களுடன் ஒத்த கருத்தையுடையனவே. பின்வருவன நேராக அக்கருத்தையே உடையனவல்லவாயினும் ஓரளவு கருத்தொற்றுமையினால் ஒப்புநோக்கத்தக்கன.

| | |
|---|---|
| 1. அநியாயத்தின் திரவியங்கள் ஒன்றுக்கும் உதவாது. 10.2 | சலத்தாற் பொருள் செய்தேமார்த்தல் பசுமட், கலத்துள் நீர்பெய்திரீ இயற்று (660) |
| 2. சோம்பற் கையால் வேலை செய்கிறவன் ஏழையாவான். சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும் (10.4) | மடியுளாண் மாமுகடி என்ப மடியிலான், தாளுளாள் தாமரையினாள். (617) |
| 3. புறங்கூறித் திரிகிறவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான். (11.31) | அறைபறையன்னர் கயவர் தாம்கேட்ட,மறை பிறர்க்குய்த் துரைக்கலான். (1076) |
| 4. வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு ...... உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும், எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும் (11.24-25) | காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும், அன்ன நீரார்க்கே உள. (527) |
| 5. சத்திய உதடு என்றும் நிலைத்திருக்கும். (12.19) | 'உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார் உள்ளத்துளெல்லாம் உளன். (294) |
| 6. முயற்சியுள்ளவன் கை ஆளுகை செய்யும், சோம்பேறி பிறரால் கட்டாயப் படுத்தி வேலை செய்விக்கப்படும் நிலையையடைவான். (The hand of the diligent will rule while the slothful will be put to forced labour) (12-24) | மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான் தாஅயதெல்லாம் ஒருங்கு (610) மடிமை குடிமைக்கண் தங்கின் தன் ஒன்னார்க்கு, அடிமை புகுத்தி விடும் (608) |

| | |
|---|---|
| *7. சோம்பேறியின் ஆத்துமா விருப்பும் ஒன்றும் பெறாது. முயற்சியுள்ளவனின் ஆத்துமா செல்வத்திற் செழிக்கும். (13.4) | முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும் (616) |
| 8. ஞானிகளோடே சஞ்சரிக்கிறவன் ஞானமடைவான், மூடருக்குத் தோழனோ நாசமடைவான் (13 20) | நிலத்தியல்பான் நீர் திரிந்தற்றாகும் மாந்தர்க்கு இனத்தியல்பதாகும் அறிவு (452)<br>நல்லினத்தினூஉங்குந்துணையில்லை தீயினத்தின் அல்லற் படுப்பதூஉமில் (460) |
| 9. நல்லவன் தன் பிள்ளைகளின் பிள்ளைகட்குச் சுதந்திரம் வைத்துப் போகிறான் (13.22) | செப்பமுடையவன் ஆக்கம் சிதைவின்றி யெச்சத்துக் கேமாப்புடைத்து (112) |
| 10. தரித்திரன் தனக்கடுத்தவனாலும்பகைக்கப்படுகிறான், ஐசுவரியவனுக்கோ அநேக சிநேகிதருண்டு (14.20) | இல்லாரை யெல்லாரும் எள்ளுவர் செல்வரை, யெல்லாரும் செய்வர் சிறப்பு (752) |
| 11. மெதுவான பிரதியுத்தம் உக்கிரத்தை மாற்றும். (15.1) | ஆற்றுவாராற்றல் பணிதல் அது சான்றோர், மாற்றாரை மாற்றும் படை (985) |
| 12. மேன்மைக்கு முன்னானது தாழ்மை (15.33) | பணியுமாம் என்றும் பெருமை (978) |
| 13. அநியாயமாய் வந்த அதிக வருமானத்திலும், நியாயமாய் வந்த கொஞ்ச வருமானமே உத்தமம் (16 3) | பழிமலைந்து எய்தியஆக்கத்திற் சான்றோர், கழிநல்குரவே தலை (657) |
| 14. அநியாயம் செய்வது இராஜாக்களுக்கு அருவருப்பு, நீதியினால சிங்காசனம் உறுதிப்படும் (16 2) | மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல், மன்னாவாம் மன்னர்க்கொளி (556) |
| 15. ராஜாவின் கோபம் மரண தூதருக்குச் சமானம்(16.14) | யாண்டுச் சென்றி யாண்டும், உளராகார் வெந்துப்பின்வேந்து செறப்பட்டவர். (895) |
| 16. பொன்னைச் சம்பாதிப்பதிலும் ஞானத்தைச் சம்பாதிப்பது எவ்வளவு உத்தமம்! வெள்ளியைச் சம்பாதிப்பதி | கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவர்க்கு. மாடல்ல மற்றையவை (400) |

| | |
|---|---|
| லும் புத்தியைச் சம்பாதிப்பது எவ்வளவு மேன்மை! (16.16) | |
| 17. பலவானைப் பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன் (16 32) | வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை (153) |
| 18 சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான்! இடுக்கணில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான் (17.17) | பற்றற்றக் கண்ணும் பழைமை பாராட்டுதல் சுற்றத்தார் கண்ணேயுள (521) |
| 19. புரட்டு நாவுள்ளவன் தீமையில் விழுவான் (one with a perverse tongue falls into calamity) (17.20) | யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல் லிழுக்குப் பட்டு. (127) |
| 20. பேசாதிருந்தால் மூடனும் ஞானவானென்று எண்ணப் படுவான், தன் உதடுகளை மூடுகிறவன் புத்திமான் என்று எண்ணபபடுவான். (17.28) | கல்லா தவரும் நனிநல்லர் கற்றார் முன் சொல்லாதிருக்கப் பெறின் (403) |
| 21. ஐசுவரியவானுடைய பொருள் அவனுக்கு அரணான பட்டணம். அது அவன் எண்ணத்தில் உயர்ந்த மதில் போலிருக்கிறது. (18.1) | செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும், எஃகதனிற்கூரி யதில் (759) |
| 22. மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்தில் இருக்கும். அதில் பிரியப் படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள். (18 21) | ஆக்கமும்கேடும் அதனால் வரு தலால காத்தோம்பல் சொல் லின் கண் சோர்வு (642) |
| *23. நண்பர்கள் போல நடிப்போரும் உளர் உடன் பிறந்தோரை விட ஒட்டியுறவாடும் நண்பனும் உளன் (18 24) | முகநக நட்பது நட்பன்று நெஞ் சத் தகநகநட்பது நட்பு (786) |
| 24. பிரபுவின் தயையை அநேகர் வருந்திக் கேட்பார்கள், கொடை கொடுக்கிறவனுக்கு எவனும் சிநேகிதன் (19 11) | கொடுத்தலும் இன சொலும் ஆற்றின், அடுக்கிய சுற்றத்தால் சுற்றப்படும் (525) |
| 25. மனுஷனுடைய விவேகம் கோபத்தையடக்கும், குற்றத்தை | பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும்புகழ் (156) |

மன்னிப்பது அவனுக்கு மகிமை. (19. 11)

26. மனுஷனுடைய இருதயத்தின் எண்ணங்கள் அநேகம். ஆனாலும் கர்த்தருடைய யோசனையே நிலை நிற்கும். (19. 21)

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று, சூழினும்தான் முந்துறும். (380)

27. ராஜாவின் உக்குதல் சிங்கத்தின் கெர்ச்சிப்புக்குச் சமானம் அவனைக் கோபப் படுத்துகிறவன் தன் பிராணனுக்கே துரோகம் செய்கிறான். (20-2)

கெடல் வேண்டின் கேளாது செய்க அடல்வேண்டின் ஆற்றுபவர்கண் இழுக்கு (893)

28. நீதிமான் தன் உத்தமத்திலே நடக்கிறான். அவனுக்குப் பிறகு அவன் பிள்ளைகளும் பாக்கியவான்களாயிருப்பார்கள். (20.7)

தக்கார் தகவிலர்என்பதவரவர் எச்சத்தாற் காணப்படும். (114)

*29. சேர்ந்து ஆலோசிப்பதனால் திட்டங்கள் ஏற்படுத்தப்படும். அறிவுள்ளோருடன் ஆலோசித்துப் போர் செய் (20.18)

தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு அரும்பொருள் யாதொன்றுமில். (462)

30. தயையும் சத்தியமும் ராஜாவைக்காக்கும், தயையினாலே தன் சிங்காசனத்தை நிற்கப் பண்ணுவான் (20.28)

இறைகாக்கும்வையகமெல்லாம் அவனைமுறைகாக்கும்முட்டாச் செயின் (547)

*31. பொய்கூறிப் பெறும் செல்வம் விரைவில் மறையும்; நீராவியைப் போலவும் மரணத்தில் கண்ணி (Snare) யைப் போலவும் இருக்கும். (21.6)

சலத்தால் பொருள் செய்தே மார்த்தல் பசுமட் கலத்துள் நீர் பெய்திரீ இயற்று. (660)

32. நீஒரு அதிபதியோடே போஜனம் பண்ண உட்கார்ந்தால், உனக்கு முன்பாக இருக்கிறதை நன்றாகக் கவனித்துப் பார் ......... அவனுடைய ருசியுள்ள பதார்த்தங்களை இச்சியாதே (23.1-2)

மன்னர் விழைப விழையாமை மன்னரால், மன்னிய ஆக்கம் தரும் (692)

| | |
|---|---|
| 33. என் மகனே உன் இருதயம் ஞான முள்ளதாயிருந்தால், என்னிலே என் இருதயம் மகிழும் (23 15) | தம்மிற்றம் மக்கள்அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க் கெல்லாம் இனிது. (68) |
| 34. நீதிமானுடைய தகப்பன் மிகவும் களிகூர்வான். ஞான முள்ள பிள்ளையைப் பெற்றவன் அவனால் மகிழுவான். உன் தகப்பனும் உன் தாயும் சந்தோஷப்படுவார்கள். உன்னைப்பெற்றவள் மகிழுவாள். (23-24-25) | ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய் (69) |
| 35. இன்னும் கொஞ்சம் உறங்கட்டும். இன்னும் கொஞ்சம் கை முடக்கிக் கொண்டு நித்திரை செய்யட்டும் என்பாயோ? உன் தரித்திரம் வழிப்போக்கனைப்போலும், உன் வறுமை ஆயுதமணிந்தவனைப் போலும் வரும். (25.33-34) | நெடுநீர் மறவி மடி துயில் நான்கும் கெடுநீரார் காமக்கலன் (605) |
| 36 ராஜாவின் சமுகத்தில் மேன்மைபாராட்டாதே. பெரியோர்களுடைய ஸ்தானத்தில் நில்லாதே (25 6) | அகலாதணுகாது தீக்காய்வார் போல்க, இகல் வேந்தர்ச் சேர்ந்தொழுகுவார். (691) |
| 37. ஆபத்துக் காலத்தில் துரோகியை நம்புவது உடைந்தபல்லுக்கும் மொழிபுரண்டகாலுக்கும் சமானம் (25-19) | அமரகத் தாற்றறுக்கும் கல்லாமா அன்னார், தமரின் தனிமை தலை. (814, |
| 38. உன் சிநேகிதனையும் உன் தகப்பனுடைய சிநேகிதனையும் விட்டு விடாதே (27.10) | எல்லைக் கண்நின்றார் துறவார் தொலைவிடத்தும், தொல்லைக் கண் நின்றார் தொடர்பு (806 |
| *39. தீய வழியிற் செல்லும்செல்வந்தனைவிட, நேர்மையான வழியிற் செல்லும்வறியவனே சிறந்தவன் (28.6) | நல்லார் கட்பட்ட வறுமையின் இன்னாதே, கல்லார் கட்பட்ட திரு. (408) |
| 40. ஏழை ஜனங்களை ஆளும் துஷ்ட அதிகாரி கெர்ச்சிக்கும் சிங்கத்துக்கும் அலைந்துதிரிகிறகரடிக்கும் ஒப்பாயிருக்கிறான். (28.15) | கொலை மேற் கொண்டாரிற் கொடிதே அலை மேற் கொண்டல்லவை செய் தொழுகும் வேந்து (551) |

| | |
|---|---|
| 41. பிரபு புத்தியீனனாயிருந்தால் அவன் செய்யும் இடுக்கண் மிகுதி (28.16) | கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்ல தில்லை நிலக்குப் பொறை. (570) |
| 42. ஏழைகளுடைய நியாயத்தை உண்மையாய் விசாரிக்கிற ராஜாவின் சிங்காசனம் என்றும் நிலைத்திருக்கும் (29.14) | முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப்படும். (388) |

ஆறாம் பிரிவாகிய 30ஆம் அதிகாரம் ஆகூரின் அறிவுரைகள் அடங்கியதென அதன் முதலடி கூறுகிறது. அப்படியே 31-ஆம் அதிகாரத்தின் தொடக்கத்திலுள்ளன லாமுவேலின் சொற்களெனக் குறிப்பிடப்படுகின்றன. ஆகர், லாமுவேல் என்பன யூதப் பெயர்களல்ல; அரபியப் பெயர்களே. இதுவும் மூதறிவு இலக்கியங்களில் அடங்கிய கருத்துக்கள் சில பிற இனத்தவர்களிடமிருந்து யூதரால் பெற்றுக் கொள்ளப்பட்டன என்பதைக் காட்டும்.

30-ஆம் அதிகாரம் கடவுள் ஒருவர் உளரா என்ற ஐயத்தை வெளியிட்டுப் பின் இறைவனிடத்து நம்பிக்கையையும் கூறி மிகுந்த செல்வமும் அதிக வறுமையும் அற்றஇடைப்பட்டநிலையேஇறைவனை வழிபடுவதற்கும் நீதியொடு பொருந்திய நல்வாழ்க்கைக்கும் ஏற்றது எனக் கூறுகிறது. இப்பகுதியில் வரும் நீதிக் கருத்துக்கள் நான்மணிக்கடிகையில் வருவன போல நான்கு நான்காகத் தொகுத்துக் கூறப்படுகின்றன.

"எனக்கு மிகவும் அச்சரியமானவைகள் மூன்றுண்டு, என் புத்திக்கெட்டாதவைகள் நான்குமுண்டு.

அவையாவன ஆகாயத்தில் கழுகினுடைய வழியும், கன்மலையின் மேல் பாம்பினுடைய வழியும், நடுக்கடலின் மேல் கப்பலுடைய வழியும், ஒரு கன்னிகையைநாடிய புருஷனுடைய வழியுமே"
(30.18-19)

லாமுவேலின் மொழியாகக் கருதப்படும் 31-ஆம் அதிகாரத்தின் முற்பகுதி அரசர்கள் மது அருந்தலாகாதெனவும் அவர்கள், குறையையெடுத்துச் சொல்லுந்திறனில்லாதஏழை மக்கள் சார்பாகவும் திக்கற்றவர்கள் சார்பாகவும் நியாயம் செய்யவேண்டுமெனவும் கற்பிக்கின்றது.

31. 10-31. 31 வரையுள்ள பகுதி ஒரு நல்ல குடும்பப் பெண்ணின் இயல்புகளைக் கூறுகிறது.

''குணசாலியான ஸ்திரீயைக் கண்டு பிடிப்பவன் யார்? அவ-ளுடைய விலை முத்துக்களைவிட உயர்ந்தது'' எனத் தொடங்குகிறது இப்பகுதி. முதலைந்து நூல்களில் காணப்பட்ட நிலையைவிட மூதறிவு இலக்கியங்கள் எழுதப்பட்ட காலத்தில் யூத சமுதாயத்தில் பெண்-களின் நிலை உயர்வடைந்துள்ளது எனத் தோன்றும்.

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின் (54)

எனக் கூறிய வள்ளுவரையொப்ப நீதிமொழிகளில் இப்பகுதியைத் தொகுத்தோரும் 'குணசாலியான ஸ்திரீயைக் கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களை விட உயர்ந்தது' என்றனர். ஓர் இல்லத்தலைவி நற்குணமுடையவளாக இருப்பதுடன் இல்லத்திற்-குரிய பணிகளில் திறமை மிகுந்தவளாகவும் இருத்தல் வேண்டும் இதை வள்ளுவர் 'மனைத்தக்க மாண்புடையளாகி' என ஒரு தொடரில் அடக்கினார். நீதிமொழிகள் அதைப் பல வரிகளில் கூறுகின்றன.

''அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும்; அவள் சம்பத்து குறையாது.

அவள் உயிரோடிருக்கிற நாளெல்லாம் அவனுக்குத் தீமையை யல்ல நன்மையையே செய்வாள்.''(31.11-12)

இவ்வாறு தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகை சான்ற சொற்காத்துச் சோர்விலாளாக அவள் விளங்குகின்றாள்.

மனையறத்திற்கேற்றநற்செய்கைகள்,'வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களறிந்து கடைப்பிடித்தலும் அட்டில் தொழில் வன்மையும் ஒப்புரவு செய்தலும் முதலாயின' என்றார் பரிமேலழகர். குடும்பத் தலைவி தன் இல்லத்தோர்க்கு உணவும் உடையும் தேடும் திறத்தை நீதிமொழிகள் பின்வருமாறு கூறுகின்றன.

''ஆட்டு மயிரையும் சணலையும் தேடித்தன் கைகளினால் உற்-சாகத்தோடே வேலை செய்கிறாள்.

அவள் வியாபாரக்கப்பலைப்போலிருக்கிறாள்; தூரத்திலிருந்து தன் ஆகாரத்தைக் கொண்டு வருகிறாள்.

இருட்டோடே எழுந்து தன் வீட்டாருக்கு ஆகாரங்கொடுத்துத் தன் வேலைக்காரிகட்குப் படியளக்கிறாள்.

ஒரு வயலை விசாரித்து அதை வாங்குகிறாள்; தன் கைகளில் சம்பாத்தியத்தினால் திராட்சைத் தோட்டத்தை நாட்டுகிறாள்''

(31 13 - 16)

தன் கைகளை இராட்டினத்தின் மேல் வைக்கிறாள்; அவள் விரல்கள் கதிரைப் பிடிக்கும்'' (31.19)

''தன் வீட்டாரனைவருக்கும் இரட்டைப் புரை உடுப்பிருக்கிற-தால் தன் வீட்டாரின் நிமித்தம் குளிருக்குப் பயப்படாள்'' (31.21)

இன்னும் வறியோர் மாட்டு அருளுடைமையையும் மனையறத்-திற்கு வேண்டிய மாண்புகளில் ஒன்றாகப் பரிமேலழகர் கூறினார். நீதி மொழியும் ''சிறுமையானவர்களுக்குத் தன் கைகளைத் திறந்து ஏழை-களுக்குத் தன் கரங்களை நீட்டுகிறாள்'' (31.20) எனக் கூறுகிறது.

இத்தகைய இல்லத் தலைவியின் கணவன் நன்னிலையடை-கிறான். ''அவள் புருஷன் தேசத்து மூப்பர்களோடே நியாய ஸ்தலத்தில் உட்கார்ந்திருக்கையில் பேர்பெற்றவனாகஇருக்கிறான்'' (31.23) புகழ் புரிந்த இல்லை உடையவனாக இருப்பதால் அனைவர் முன்பும் பீடுடன் நடக்கவல்லவனாகஇருக்கிறான். இவ்வாறு நல்லில்லத் தலைவியின் பண்புகளைக் கூறுவதுடன் நீதிமொழிகள் முடிகின்றன.

மேலே தனித்தனியே எடுத்துக் காட்டப்பட்ட அடிகள் மட்டு-மன்றிப் பொதுவாகவும் பொதுமகளிர்பால் செல்லாமை, மது அருந்-தாமை, மடியின்மை குறித்து நீதி மொழிகளில் பன் முறை கூறப்படும் கருத்துக்களும் திருக்குறள் கருத்துக்களுடன் ஒத்தவையே. வள்ளுவர் உழவுத் தொழிலை மட்டும் சிறப்பித்துக் கூறினார். ''தன் நிலத்தைப் பயிரிடுகிறவன் ஆகாரத்தினால் திருப்தியடைவான், வீணரைப் பின் பற்றுகிறவனோ மதியற்றவன்'' (12.11) என உழவைப் போற்று-வதுடன் அந்நாட்டில் முக்கியமாக இருந்த ஆடுமேய்க்குந் தொழிலை-யும் சிறப்பிக்கின்றன நீதிமொழிகள்.

''உன் ஆடுகளின் நிலைமையை நன்றாய் அறிந்துகொள்; உன் மந்தைகளின்மேல் கவனமாயிரு.

செல்வம் என்றைக்கும் நிலையாது, கிரீடம் தலைமுறைதலை முறை தோறும் நிலை நிற்குமோ?

புல் முளைக்கும் பச்சிலைகள் தோன்றும், மலைப் பூண்டுகள் சேர்க்கப்படும்.

ஆட்டுக்குட்டிகள் உனக்கு வஸ்திரத்தையும் கடாக்கள் வயல் வாங்கத்தக்க கிரயத்தையும் கொடுக்கும்.

வெள்ளாட்டுப்பால் உன் ஆகாரத்துக்கும், உன் வீட்டாரின் ஆகாரத்துக்கும் உன் வேலைக்காரிகளின் பிழைப்புக்கும் போதுமான படியிருக்கும்'' (27.23-27).

இனி நீதிமொழிகளில் வரும் கருத்துக்கள் சில பிற தமிழ் நூல்களில் காணப்படும் கருத்துக்களுடன் ஒப்பு நோக்கத்தக்கன வாயுள்ளன.

''நன்மை செய்யும்படி உனக்குத் திராணியிருக்கும்போது, அதைச் செய்யத் தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே.

உன்னிடத்தில் பொருள் இருக்கையில் உன் அயலானை நோக்கி நீ போய்த் திரும்பி வா நாளைக்குத்தருவேன் என்று சொல்லாதே'' (3.27-28).

இவ்வரிகள் ஆலூர் மூலங்கிழார் பாடிய பின்வரும் புறநானூற்றுச் செய்யுளுடன் ஒப்பு நோக்கத்தக்கன.

ஒல்லுவது ஒல்லும் என்றலும், யாவர்க்கும்
ஒல்லாது இல்லென மறுத்தலும் இரண்டும்
ஆள்வினை மருங்கின் கேண்மைப் பாலே
ஒல்லாது ஒல்லும் என்றலும், ஒல்லுவது
இல்லென மறுத்தலும் இரண்டும் வல்லே
இரப்போர் வாட்ட லன்றியும் புரப்போர்
புகழ்குறை படூஉம் வாயில்... (புறம் 196)

செய்யக்கூடிய உதவியைச் செய்யாது மறுத்தல் உதவி கோரியவரின் உள்ளத்தை வருத்துவது மட்டுமின்றி மறுப்பவரின் புகழ் கெடுவதற்கும் ஏதுவாகும் என்றார். வள்ளுவரும் இத்தகைய தன்மையை விரும்பாததனாலேயே,

ஒல்லுங் கருமம் உடற்றுபவர் கேண்மை
சொல்லாடார் சோர விடல் (818)

என ஒல்லுவதை மறுப்போரின் நட்பை விட்டு விலகுமாறு ஆலோசனை கூறினார்.

*''நீதியினால் அரசன் நாட்டை நிலைநிறுத்துகிறான்; வலிந்து கொடைகளைப் பெறுபவன் நாட்டையழிக்கிறான்''(By Justice a king gives stablity to a land but one who exacts gifts ruins it 29.4)

* இக்குறியிடப்பட்ட பகுதிகள் புதியஅமெரிக்க மொழி பெயர்ப்பிலிருந்து எடுக்கப்பட்டவை.

இந்நீதிமொழி பிசிராந்தையார் பாண்டியன் அறிவுடை நம்பிக்குக் கூறிய,

அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழ வனாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான் உலகமும் கெடுமே (புறம் 184)

என்னும் அறிவுரையோடும் ஒக்கும். அரசன் நீதியொடு நாட்டை யாண்டு நேர்மையொடு வரிப்பொருள் பெற்றால் நாடு செழிக்கும். குடிமக்களிடமிருந்து வலிந்து பொருள் பெற்றால் நாடு அழியும். முறையோடு இறுக்கும் இறையன்றி அரசன் வேறு பொருளைக் குடிமக்களிடம் எதிர்பார்த்தலைக் கண்டிக்கவே வள்ளுவர், அரசன் குடிமக்களிடம் அதிகப்படியாகப் பொருள் கேட்டுப்பெறுதல் ஆறலை கள்வர் வழிப் போக்கரை வேலால் அச்சுறுத்திப் பொருள் கவர்தலை யொக்கும் என்றார்.

வேலோடு நின்றான் இடுஎன் றது போலும்
கோலோடு நின்றான் இரவு (552)

"உன் அயலான் சலித்து உன்னை வெறுக்காத படிக்குஅடிக்கடி அவன் வீட்டில் கால் வைக்காதே" (25.17) என ஒரு நீதிமொழி கூறுகிறது. இது 'நிமித்தமும் சென்றால் முற்றமும் சலிக்கும்'எனத் தமிழில் வழங்கும் முதுமொழியை ஒக்கும்.

கடவுள் கொள்கையைச் சார்ந்த சில கருத்துக்களையும் நீதிமொழிகள் கூறுகின்றன. அவற்றில் ஒன்று வருமாறு :

"என் மகனே, நீ கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவர் கடிந்து கொள்ளும்போது சோர்ந்து போகாதே.

தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறது போல, கர்த்தரும்எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார்" (3.11-12).

இத்தகைய கருத்துக்களைத் தமிழில் பிற்காலச் சமயஇலக்கியங்களிலேயே காணலாம்.

தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தம் சொலாற்றின்
வந்திடாவிடின் உலுக்கி வழாரினால் அடித்துத் தீய
பந்தமும் இடுவர் எல்லாம் பார்த்திடில் பரிவேயாகும்
இந்தநீர் முறைமை யன்றோ நாதனார் முனிவும் என்றும்
(சிவஞான சித்தியார் சுபக்கம் 2. 16)

என அருணந்தி சிவாச்சாரியர் தம் நூலில் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. இத்தகைய கருத்துக்களைக் கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் முன்பே கூறிய யூத அறிஞர்கள் சமய உணர்ச்சி பாராட்டத்தக்கதே

6. 2. யோபு

யோபு என்னும் நூல் ஒரு கதைப்பாடலாகும். ஒரு பழைய கதையைப்பயன்படுத்திக் கவிஞர் இந்நூலை எழுதினார் என்பர். யோபு எனப்படும் நல்லோனொருவனைக் குறித்த கதை யூதர்களிடையே எசேக்கியேலின் காலத்திற்கு முன்பிருந்தே வழங்கிவந்ததென்பது எசேக்கியேல் என்னும் நூலில் காணப்படும் (எசே. 14 20) ஒரு குறிப்பால் தெரிய வருகிறது. இந்நூலின் பெரும்பகுதி செய்யுள் வடிவாக மூலமொழியில் அமைந்திருப்பினும் இதற்கு ஒரு முன்னுரையும் பின்னுரையும் உரைநடை வடிவில் எழுதப்பட்டுள்ளன. உரைநடைப்பகுதியையும் செய்யுட்பகுதியையும் வெவ்வேறு ஆசிரியர்கள் எழுதியிருக்கலாமெனச் சிலர் கருதுவர்.

நீதிமொழிகளும் சங்கீதமும் பொதுவாக நல்லோர் வாழ்க்கையில் நலமடைவர் தீயோர் துன்புறுவர் என்ற கருத்தையே கூறுகின்றன. தீயோர் முதலில் செழித்தாலும் இறுதியில் அழிவர் என்பது சங்கீதத்தில் பன்முறை கூறப்படும் கருத்தாகும். இக்கருத்துக்களில் ஓரளவு உண்மை இருப்பினும் வாழ்க்கையில் எப்பொழுதும் அவ்வாறு நடைபெறுவதில்லையே. அதைக்குறித்து மூதறிவு இலக்கியங்கள்தோன்றிய காலத்தில் அறிஞர் பலர் சிந்தித்தனர். ஆகவே யோபு என்னும் நூலையும் பிரசங்கி என்னும் நூலையும் எழுதிய ஆசிரியர்கள் 'நல்லோர் நலமடைவர் தீயோர் துன்பமடைவர்' என வழக்கமாக நீதிநூலாசிரியர்கள் கூறும் கருத்துக்களை மறுக்கின்றனர்.

யோபு என்னும் கதைத் தலைவனின் பெயரே நூலுக்கும் பெயராயிற்று. யோபு பெருஞ்செல்வந்தனாகவும் குணத்திற் சிறந்த சான்றோனாகவும் இருந்தான். விளைநிலமும், மாடு, கழுதை, ஒட்டகங்கள், ஆட்டு மந்தை முதலிய கால்நடைச் செல்வங்களும் அவனிடம் ஏராள

மாகஇருந்தன. பணியாளர் பலர் இருந்தனர். ஏழு ஆண்மக்களும் மூன்று பெண்மக்களுமென மக்கட் செல்வத்தையும் அவன் பெற்றிருந்தான். யோபு நேர்மையும் தயாளமும் உடையவன். பலருக்கு உதவி செய்தான். குணசாலியும் பக்தியிற் சிறந்தவனுமாகிய அவன் தவறாது வழிபாடு செய்து வந்தான். தன்சார்பாகவும் தன்மக்கள் சார்பாகவும் பலி செலுத்தி வழிபாடு செய்தான்.

ஓரமையம் தேவதூதர்கள் அனைவரும் இறைவன் திருமுன் வந்தனர். மாறுபாடான தன்மையையுடைய சாத்தானும்[2] அவர்களுடன் வந்தான். 'எங்கிருந்து வருகிறாய்?' எனக் கடவுள் கேட்டார். 'மண்ணுலகத்தில் அங்குமிங்கும் திரிந்து வருகிறேன்' என்றான். 'நேர்மையிற் சிறந்தவனும் குற்றமற்றவனுமாகிய என் ஊழியன் யோபுவைக் கண்டாயா?' எனக் கடவுள் கேட்டார். 'பயனில்லாமலா யோபு பக்தியுள்ளவனாக இருக்கிறான்? ஏராளமான செல்வத்தை அவனுக்குக் கொடுத்திருக்கிறீர். அதனால் பக்தி செய்கிறான்' என்றான். தன்னலங்கருதியே யோபு கடவுளை வழிபடுகிறான், செல்வத்துக்காகவே பக்தி செய்கிறான் என்பதே சாத்தானின் கருத்து. இதைச் சோதித்து அறிவதற்காகச் சாத்தான் கடவுளின் அனுமதி பெற்று முதலில் யோபுவின் செல்வமனைத்தும் அழியும் படியும் மக்களனைவரும் ஒரே நாளில் இறக்கும்படியும் செய்கிறான். யோபு மிகவும் துயருற்றான். ஆயினும் 'கடவுள் கொடுத்தார்' 'அவர் எடுத்துக்கொண்டார்' 'அவர் வாழ்க' என வாழ்த்தினானேயன்றிக் கடவுளை இகழவில்லை. சாத்தான் மறுபடியும் கடவுளின் அனுமதி பெற்று யோபு உடல்முழுதும் புண் ஏற்படத்தக்கதாக நோயுறும்படி செய்கிறான். அப்பொழுதும் யோபு கடவுளை வைதானல்லன். நன்மையைக் கடவுளிடமிருந்து பெறும் நாம் தீமையையும் பெற வேண்டாமா என்றான்.

இவ்வளவும் முன்னுரையில் கூறப்படும் பொருள். இந்நிலையில் யோபுவின் நண்பர் மூவர் எலிப்பாசு, பில்தாது, சோப்பார் என்பவர் அவனைக் கண்டு ஆறுதல் கூற வந்தனர். அவன் துயரத்தின் மிகுதியைக் கண்டு ஆறுதல் கூறவகையன்றி நெடுநேரம் பேசாதிருந்தனர். பின்பு யோபு முதலில் பேசத் தொடங்கினான். அவனுக்கும் நண்பர்களுக்கும் இடையே நடந்த உரையாடலே செய்யுள் வடிவாக மூலத்தில் அமைந்துள்ளது. யோபுவின் நண்பர்கள் மூன்று பேரும் தனித்தனியே தங்கள் கருத்தைக் கூறுகின்றனர். யோபு மூவருக்கும்

2. பொதுவாகத் தேவதூதர்கள் (angels) மிக்க பணிவோடும் அன்போடும் இறைவனை வழிபட்டு என்றும் அவர் ஆணை வழியே ஒழுகுவர் என்பது விவிலியத்தில் காணப்படும் கருத்து. ஆனால் சில தேவதூதர்கள் இறைவனாணைக்கு அடங்காது மீறித் தீயோராயினர் என்ற கருத்தும் விவிலியத்தில் உண்டு. இவர்களின் தலைவனே சாத்தான்.

தனித்தனியே பதிலிறுக்கிறான்,மும்முறை உரையாடல் இம்முறையிற் செல்கிறது.

யோபுவின் நண்பர்கள் மூவரும் பொதுவாக நோயும் துன்பமும் அவ்வவர் செய்த பாவத்தின் பயனாக ஏற்படுகின்றன என்ற கொள்கையுடையவரே.யோபு பொதுவாக நீதிமான் எனப்பெயர் பெற்றவன். இத்தகைய கொடிய பாவங்கள் எவற்றையும் செய்தவனல்லன் என அவர்களும் நன்கு அறிவர். ஆயினும் அவனுள்ளத்தில் ஏதோ பாவம் இருத்தல் வேண்டும். அதை நீக்க இறைவனின் தண்டனையாகவே இத்துன்பங்கள் வந்துள்ளன. யோபு தன் உள்ளத்தில் உள்ள பாவத்தின் பொருட்டு வருந்தி இறைவனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்வானேயாகில் அவன் துன்பம் நீங்கி மறுபடியும் உடல் நலத்தையும் செல்வத்தையும் நன்மையையும் அடைவான் என அவர்கள் கருதினர்.

யோபு இக்கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை யோபு தான் பிறந்த நாளை நொந்தான் பிறந்தவுடனேயே இறந்திருக்கலாகாதோ என எண்ணினான். அப்பொழுதும் தான் விரைவில் இறந்துவிட்டால் நலமாக இருக்கும் என எண்ணினான். இங்கு யோபு மரணத்தைக் குறித்து ஒருகருத்தைக்கூறுகிறான்.''துன்மார்க்கருடைய தொந்தரவு அங்கே ஓய்ந்திருக்கிறது ; பெலனற்று விடாய்த்துப் போனவர்கள் அங்கே இளைப்பாறுகிறார்கள் கட்டுண்டிருந்தவர்கள் அங்கே ஏகமாக அமைந்திருக்கிறார்கள் : ஒடுக்குகிறவனுடைய சத்தம் அங்கேகேட்கப் படுகிறதில்லை. சிறியவனும் பெரியவனும் அங்கே சரியாயிருக்கிறார்கள்; அடிமை தன் எஜமானனுக்கு நீங்கலா யிருக்கிறான்'' (3.17.19). மரணத்தின்பின் துன்பமில்லை ஆனால் இன்பமும் இல்லை. எச்செயலும் இல்லை என்பதே அக்கால யூதர்களின் கருத்து எனத் தோன்றுகிறது.

தான் நேர்மையுள்ளவன் என யோபு எண்ணுகிறான். காரணமில்லாமலே கடவுள் தனக்குத் துன்பத்துக்கு மேல் துன்பத்தைத் தருவதாகக் கூறி வருந்துகிறான். கடவுள் ஏன் தனக்கு இரவும் பகலும் துன்பத்தைத் தந்து கொண்டேயிருக்கிறார். வலிமையற்றவர்களாகிய மானிடர்கள் தவறு செய்தாலுங்கூடக் கடவுள் இவ்வளவு கடுமையாக ஒறுக்கலாமா என எண்ணுகிறான்.

தான் நேர்மையுள்ளவன் தனக்கு இத்தகைய துன்பத்தைக் கடவுள் தந்தது அநீதியே என யோபு கூறியதைக்கேட்டு அவன் நண்பர்கள் அவனையே இன்னும் அதிகமாகக் குறை கூறுகின்றனர்.

உள்ளத்தில் வீண்பெருமை கொண்டவனாக இருப்பதனாலேயே யோபு கடவுளையேகுறைகூறத் துணிகிறான் என எண்ணிக் கடவுள் அவனை ஒறுத்தது நீதியே எனக் கூறுகின்றனர், உள்ளத்தில் அகம்பாவமுள்ளவர்களாய் இறைவனுக்கு மாறாகநிற்பவர் அழிவர்எனவும் வற்புறுத்திக் கூறுகின்றனர். அவன் தன் தவற்றையுணர்ந்து வருந்திஇறைவனிடம் மன்னிப்புக் கோரவேண்டுமெனப் பணிக்கின்றனர்.

அவர்களின் பேச்சு யோபுவின் உள்ளத்தை மேலும் வருத்துகிறது. அவனும் முன்பு கடவுள் நீதியுள்ளவர், நல்லோர்க்கு நன்மை செய்வார் தீயோரை ஒறுப்பார் எனவே எண்ணி வந்தான். ஆனால் இப்பொழுது அவன் அனுபவம் அதற்கு மாறாகஇருந்தது. இத்தகைய துன்பத்தையடையத்தக்க பாவம் எதுவும்தான் செய்ததில்லை யென அவன் உள்ளச் சான்று அவனுக்குக் கூறியது. அவன் உள்ளத்தில் நிகழ்கின்ற போராட்டத்தை ஆசிரியர் அவன் சொற்களின் மூலம் காட்டுகிறார். வாழ்க்கையே துன்பமயமானது என அவனுக்குத் தோன்றுகிறது. 'உலகில் மனிதனின் வாழ்க்கை கடினமானதல்லவா? அவன் நாட்கள் கூலியாளின் நாட்களைப் போலுள்ளன. அடிமை விரைவில் இரவு வருமா என ஏங்குவதைப் போல் ஏங்குகிறான். கூலியாள் தன் கூலிக்காகக் காத்திருப்பதைப் போல் தன் உழைப்பின் பயனுக்குக் காத்திருக்கிறான்' என யோபு எண்ணுகிறான். இவ்வளவு அற்பமாகிய மனிதனாகிய தன்பேரில் கடவுள் ஏன் பகைபாராட்டுகிறார். ஏன் தனக்குச் சிறிதும் ஓய்வளிக்காது ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கணமும் துன்பத்தைத் தருகிறார்? ஏதாவது குற்றம் செய்திருந்தாலும் அதை மன்னித்தலாகாதா என்கிறான். இறைவனின் கோபம் அப்பொழுதைக்குத் தானோ பின்பு தணியுமோ என அவன் எண்ணுகிறான். கோபம் தணிந்தபின் அவர் தன்னைத் தேடுவார்த் தான் அதற்குள் இறந்து விடுவான் என யோபு சிந்திக்கிறான்.

கடவுளுடன் பேசி அவர் செய்த அநீதியை எடுத்துச் சொல்லி வழக்காட வேண்டும் என்னும் ஆவல் யோபுவின் உள்ளத்தில் எழுகிறது. ஆனால் அவரோ எல்லையற்ற ஆற்றலும் அறிவும் உள்ளவர். அவரோடு வழக்காடி யாரால் வெல்ல முடியும்? குற்றமற்றவனாக இருந்தாலும் ஒருவன் கடவுளுடன் வாதாடி வெல்ல முடியுமா? கடவுள் அவனைக் குற்றமுள்ளவனாகக் காட்ட விரும்பினால் அவனுடைய சொல்லே அவனைக் குற்றவாளியாக்கும். அவன் நல்லவனாக இருந்தாலும் அவனைத் தீயவன் என நிறுவிக் காட்டக் கடவுளால் ஆகும். கொள்ளை நோய் பரவும் போது நல்லவர்களும் தீயவர்களும் ஒருங்கே

இறக்கிறார்கள். அப்பொழுது கடவுள் நல்லவர்களுக்கு அநீதியைத் தானே செய்கிறார்? கடவுள் யோபுவைப்போல் ஒருமனிதனல்லர் அவருடன் பேசி வெல்வதற்கு. ஆயினும் கடவுளுக்கும் தனக்கும் நடுநின்று தீர்க்கக்கூடிய ஒருவர் இருந்தால் நலமாக இருக்கும் என யோபு எண்ணுகிறான்.

'நான் கடவுளைப் பார்த்து என்னைக் குற்றவாளியாகத் தீர்க்காதிரும், ஏன் என்னொடு போராடுகிறீர் என்பதைத் தெரிவியும், உமது கையால் உண்டாக்கப்பட்டவனாகிய என்னை இழந்து என்னைத் துன்புறுத்துவது நலமாக இருக்கிறதோ எனக் கேட்பேன்' என்று யோபு கூறுகிறான். முன்பு தான் நலமாக வாழ்ந்து மகிழ்ச்சியுடன் கடவுளை வழிபட்ட நாட்களைஎண்ணிப்பார்க்கிறான் யோபு தன்னைக் கர்ப்பத்தில் உருவாக்கிக் காத்துத் தனக்குப் பலநலங்களை யருளிய கடவுள் இறுதியில் தனக்கு இத்தகைய கொடுந்துன்பத்தைத் தரும் நோக்கத்துடன் தான் யாவும் செய்தாரா? பாவத்தைச் செய்தால் கடவுள் ஒறுப்பார். நீதியைச் செய்தாலும் கடவுள் ஒறுக்காமல் விடுவதில்லை. இவ்வாறாயின் அவர் ஏன் தன்னை உலகில் பிறப்பித்தார்? இப்படிச் சிந்தனை செய்து தான் இறப்பதன்முன் சிறிது ஆறுதலடையும்படி தன்னுடன் போராடாது விலகுமாறு அவன் இறைவனை வேண்டிக் கொள்கிறான்.

தன்னைக் குறைகூறும் நண்பர்களை நோக்கி அவர்கள் இறைவன் சார்பாகப் பேசுவதனால் அவரை மகிழ்விக்கமுடியா தென்றும் நீதிக்கு மாறாகக் கடவுளின்சார்பாகவே ஒரம் பேசினாலும் அதை விரும்பாமல் அவர் கடிந்து கொள்ளுவார் என்றும் யோபு கூறுகிறான். தனக்கு அவர் அநீதி செய்கிறார் என முறையிடும்போதும் அவர் அடிப்படையில் நீதியுள்ளவர் என்ற எண்ணம் அவன் மனதைவிட்டு நீங்காதிருக்கிறது.

கடவுளுடன் வழக்காட வேண்டும் என்னும் ஆவல் அவன் உள்ளத்தில் மீண்டும் எழுகிறது. ஆனால் கடவுளுக்கு எதிரே மனிதர் எவ்வளவு அற்பமானவர் என்பதையும் அவன் உணர்கிறான். மக்கள் பூவைப்போல் தோன்றி விரைவில் அழிகின்றனர். மரம் வெட்டினாலும் பின் துளிர்விட்டு வளரும். ஆனால் மனிதன் இறந்தால் இறந்தது தானே, மனிதன் இறந்தபின் உயிர் வாழ்வானோ? கடவுள் தம்மால் படைக்கப்பட்ட மனிதன்மேல் விருப்பம் வைத்து அவன் பாவங்களை மறந்து மன்னித்து அழைத்துக்கொள்ளக்கூடிய

ஒரு காலம் வருமாகில்அதற்காகத்தான் காலமெல்லாம்காத்திருப்பான் என யோபு கூறுகிறான்.[3] கடவுள் தனக்கு மாறாக இருக்கிறார், காரணமில்லாமல் தன்னைப் பகைக்கிறார், தன்னுடன் போராடுகிறார் என எண்ணும் போதும் அவர் அன்புக்கு ஏங்குகிறது அவன் உள்ளம்.

தான் விரைவில் இறந்து விடுவான் என எண்ணிய யோபு பின் வருமாறு கூறுகிறான்.

*மண்ணிலமே என் இரத்தத்தை மூடாதே
என் கூக்குரல் அமைதியடையாதிருப்பதாக
இதோ இப்போதும் எனக்குச் சான்று பகர்பவர்
விண்ணிலிருக்கிறார், எனக்காகப் பேசத்தக்கவர் உயரத்தில் உள்ளார்.

என் நண்பர்கள் என்னை இகழ்கின்றனர்; என் கண்கள் கடவுளை நோக்கிக் கண்ணீர் சிந்துகின்றன. ஒரு மனிதனுக்கும் அவன் அயலானுக்குமிடையே நியாயம் தீர்த்து நீதியை நிறுவுவது போலக் கடவுளுக்கும் மனிதனுக்குமிடையேயும் அவர் நீதியை நிறுவுவாராக. (16.18-21).

மனிதர் அநீதியைச் செய்தால் கடவுளிடம் முறையிடலாம். கடவுளே அநீதியைச் செய்தால் யாரிடம் முறையிடலாம்? இங்கு யோபு கடவுளுக்கு மாறாக அவரிடமே முறையிடுகிறான். கடவுளைப் பார்த்து அவர் தனக்குச் செய்தது அநீதி என ஒத்துக் கொள்ளுமாறு கேட்பதுபோல் இருக்கிறது அவன் பேச்சு.

3. நூலில் இக்கருத்தைத் தரும் பகுதியில் தமிழ்மொழி தெளிவின்று. இப் பகுதியை மொழிபெயர்ப்பதும் கடினமே. புதிய அமெரிக்க மொழிபெயர்ப்பில் (Revised Standard Version) இப்பகுதி வருமாறு;

If a man dies, shall he live again?
All the days of my service I would wait
till my release should come
Thou wouldest call, and I would answer thee;
thou wouldest long for the work of thy hands.
For then thou wouldest number my steps
thou wouldest not keep watch over my sin;
My transgressions would be sealed up in a bag
and thou wouldest cover over my iniquity
(14.14.17)

இங்கு யோபு தான் வறுமையும் நோயும் அடைந்ததனால் தன் சகோதரரும் நண்பரும் தன்னை விட்டுப் பிரிந்ததாகவும் தன் பணியாட்களும் தன்னை மதிக்காதிருப்பதாகவும் கூறுகிறான். முன்பு தன் வீட்டில் விருந்துண்டவர்களும் தன்னை மறந்தனர் என்கிறான். இது உலக இயல்பையே காட்டும். மரணத்தைக் குறித்து எண்ணும் போது மரணத்தின் பின்னாவது தான் குற்றமற்றவன் என நிறுவப்பட வேண்டும் என்னும் ஆவல் யோபுவின் உள்ளத்தில் எழுகிறது. 'என் நேர்மையை நிறுவுபவர் (Vindicator) ஒருவர் உள்ளார் என அறிவேன்; அவர் இறுதியில் மண்ணின் மேல் நிற்பார். என் உடல் அழிந்த பிறகாயினும் நான் அவரைக் காண்பேன்' என யோபு கூறுகிறான். யூதரிடையே மறுமையைப் பற்றிய தெளிவான கொள்கையில்லாத அக்காலத்தில் இவ்வுலகவாழ்வில் நீதி கிடைக்-காவிட்டால் இறந்த பின்பாவது நீதி கிடைக்க வேண்டுமே என மக்களிடையே எழுந்த ஓர் ஆர்வத்தை ஒரு நம்பிக்கையின் தொடக்கத்தை இக்கதை காட்டுகிறது. காரணமின்றிப் பல துன்பங்களை அனுபவித்து நோயுற்று இவ்வுலக வாழ்வை நீத்து இறக்கப் போகும் நிலையில் தான் இருப்பதாக எண்ணும் யோபு தான் இறந்த பின்பாவது கடவுள் ஏதோ ஒரு வகையில் தன் நேர்மைக்குச் சான்று பகர்வார் எனத் தன் நண்பர்களிடம் கூறுகிறான்.

தனக்கு அநீதி இழைக்கப்பட்டதெனக் கருதும் யோபு பொது-வாக உலகில் நிலவும் நீதியின்மையைக் குறித்தும் சிந்திக்கிறான். அநீதியைச் செய்வோர் பலர் செல்வச் செழிப்புடன் வாழ்கின்றனர். அவர்கள் பிள்ளைகளும் நலமாக இருக்கின்றனர். அவர்கள் தொழுவில் மாடுகள் கூடப் பல்கிப் பெருகிச் செழுமையாகத் தானிருக்கின்றன. அவர்கள் பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர். கீத வாத்தியத்துடன் நடனம் செய்கின்றனர். அவர்கள் பாவத்தின் பயனாக அவர்கள் சந்ததியோர் துன்பமடைவர் என்னும் கருத்து யோபுவிற்கு மன நிறைவைத் தரவில்லை. கடவுள் ஏன் அவர் பின் வருவோரை ஒறுக்கக் காத்திருக்கிறார்? அவர்கள் நீதியை யறியுப் படி தீமை செய்-தோர் தம்மையே யல்லவா ஒறுத்தல் வேண்டும் என அவன் வினவு-கிறான். வறியோரின் துன்பத்தைக் குறித்தும் அவன் எண்ணுகிறான். போதியகூலி பெறாததனால் போதிய உணவில்லாமல் செல்வர்களின் நிலங்களில் வேலை செய்கிறார்கள். பசியோடு வயலில் அரிகளைச் சுமக்கிறார்கள். தாகத்தோடு திராட்சைப் பழங்களைச் சாறுபிழியும் ஆலையில் பணி செய்கிறார்கள். இரவில் போதிய உடை போர்வை

முதலியவை யின்மையால் குளிரினால் வருந்தி மலைக்குகைகளிலும் பாறைகளினிடையிலும் ஒடுங்குகிறார்கள். இவ்வாறு வருந்துகிறவர்கள் கூக்குரலிடுகின்றனர் கடவுள் அவர்களின் பிரார்த்தனைகளைக் கேட்கிறாரா?

இவ்வாறெல்லாம் வினவுகிறான் யோபு. தன் துன்பம் அவனைப் பிறர் துன்பத்தைக் குறித்தும் சிந்திக்கும்படி தூண்டியது.

முன்புதான் செல்வந்தனாகத் தன் மக்களும் சுற்றமும் சூழ வளமாக வாழ்ந்தநிலையை யவன் எண்ணி வருந்தினான். அவன் நகர வாயிலுக்குச் சென்றால் இளைஞர் விலகி விடுவர் முதியோர் எழுந்திருப்பர். சமூகத்தில் தலைமையுடையோரும் செல்வர்களும்கூட அவனுக்கு மதிப்பளித்து அவனெதிரில் பேசாதிருப்பர். அவன் ஊர்ச் சபையில் நீதியை யெடுத்துச்சொல்வான். வறியோர், திக்கற்றோர். விதவைகள் ஆகியோருக்காக அவன் பரிந்து பேசுவான். அவன் அநீதி செய்வோரிடமிருந்து ஏழைகளை விடுவிப்பான். அவன் ஆலோசனைக்காகப் பிறர் காத்திருப்பர் மழையை விரும்பி யேற்றுக் கொள்ளும் நிலம் போல அவன் சொற்களை யேற்றுக்கொள்வர். ஆனால் இப்போதோ எல்லோரும் அவனை ஏளனம் செய்து இகழ்கின்றனர். பிறர் துன்பத்தின் பொருட்டு அவன் வருந்தியிருக்கிறான். ஏழைகளின் துயரைக் குறித்து இரங்கியிருக்கிறான். ஆயினும் அவன் நன்மையை எதிர்பார்த்தபோது தீமை வந்தது. ஒளிக்குக் காத்திருந்தபோது இருள் வந்ததே; ஏன்?

உயர் ஒழுக்கமும் வாய்மையும் பொருந்தத் தான் வாழ்ந்த நல் வாழ்க்கையை எடுத்துக் கூறுகிறான் யோபு நேர்மையும் தயாளமும் அவனிடமிருந்தன.

''என் வேலைக்காரனானாலும் என் வேலைக்காரியானாலும், என்னோடு வழக்காடும் போது, அவர்கள் நியாயத்தை நான் அசட்டை பண்ணியிருந்தால், தேவன் எழும்பும்போது நான் என்ன செய்வேன்; அவர் விசாரிக்கும்போது நான் அவருக்கு என்ன மறு உத்தரவு சொல்லுவேன்?

தாயின் கர்ப்பத்தில் என்னை உண்டு பண்ணினவர் அவனையும் உண்டு பண்ணினார் அல்லவோ? ஒரே விதமான கர்ப்பத்தில் எங்களை உருவாக்கினார் அல்லவோ?

எளியவர்கள் வாஞ்சித்ததை நான் கொடாதிருந்து, விதவையின் கண்களைப் பூத்துப்போகப் பண்ணி,

தாய் தகப்பனில்லாத பிள்ளை என் ஆகாரத்தில் சாப்பிடாமல் நான் ஒருவனாய்ச் சாப்பிட்டதுண்டோ ?

என் சிறு வயது முதல் அவன் தகப்பனிடத்தில் வளர்வதுபோல் என்னோடே வளர்ந்தான் ; நான் என் தாயின் கர்ப்பத்தில் பிறந்தது முதல் அப்படிப்பட்டவர்களைக் கைலாகு கொடுத்து நடத்தினேன்.

ஒருவன் உடுப்பில்லாததினால் மடிந்து போகிறதையும் ஏழைக்கு மூட வஸ்திரமில்லாதிருக்கிறதையும் நான் கண்ட போது,

அவன் என் ஆட்டுமயிர்க் கம்பளியினால் அனல் கொண்ட-தினால்,

அவன் இடை என்னைப் புகழாதிருந்ததும்,

ஒலிமுக வரசலில் எனக்குச் செல்வாக்கு உண்டென்று நான் கண்டு, திக்கற்றவனுக்கு விரோதமாய் என் கையை நீட்டினதும் உண்டானால்,

என் கைப்பட்டை என் தோளிலிருந்து சரிந்து என் புயத்து எலும்பு முறிந்து போவதாக'' (31.13-22).

மேலும் தன் பகைவனுக்கு ஏற்பட்ட தீங்கைக் குறித்துத்தான் மகிழ்ந்ததுண்டா. இங்கு வயிறார உண்ணாதவர்கள் யார் என்று தன் பணியாட்கள் சொல்லாதிருந்ததுண்டா, வழிப்போக்கன் தெருவில் இராத் தங்க நேர்ந்தால் தான் வீட்டு வாசலைத் திறந்து அவனுக்கு இடமளிக்காதிருந்ததுண்டா, தான் ஏதாவது கபடத்தைத் தன் நெஞ்-சில் ஒளித்து வைத்ததுண்டா என யோபு வினவுகிறான். தான் தன் வயலில் வேலை செய்தவர்களுக்குக்கூலி கொடாமல் வயலின் பயனை உண்டதுமில்லை என்றான்.

'நான் சொல்வதைக் கேட்பதற்கு ஒருவர் இருந்தால் நலமாக இருக்கும். இதோ என் வழக்கைக் கூறி நான் கையெழுத்திட்டேன். சர்வ வல்லமையுடைய கடவுள் எனக்குப் பதில் சொல்வாராக என் எதிராளி தன் வழக்கை எழுதிக்கொடுத்தால் நலமாக இருக்கும்' எனக் கூறி யோபு தன்னுரையை முடிக்கிறான்.

இந்நூலில் இறுதியில் யாவே யோபுவிற்குப் பதில் கூறுகிறார். பதில் கூறுகிறாரா? பதில் வினாக்கள் விடுக்கிறார். 'அறிவற்ற சொற்-

களினால் ஆலோசனையை இருளாக்குகிற இவன் யார்? ஓர் ஆடவனைப் போல் எழுந்து நில்; நான் கேள்வி கேட்கிறேன், நீ பதில் கூறு' என்ற பெருமிதம் நிறைந்த சொற்களுடன் தொடங்குகிறது யாவேயின் பேச்சு. 'மனிதன் இறைவனுடன் எவ்வாறு வழக்காடி வெல்ல முடியும்? அவர் ஆற்றல் என்னை அச்சத்தில் ஆழ்த்தும். அவர் என்னைக் குற்ற வாளியெனத் தீர்க்க விரும்பினால் என் வாய்ச்சொல்லே என்னைக் குற்றவாளியாக்கும்' என்றெல்லாம் யோபு முன்பு கூறினான். ஆயினும் இறைவனின் நோக்கம் மக்களை அச்சுறுத்திப் பணியவைப்பதன்று அவர்கள் அறிவை விரிவடையச் செய்து தெளிவிப்பதே என்பது 'நீ ஓர் ஆடவனைப் போல் தைரியமாக எழுந்து நின்று பேசு' என்ற யாவேயின் சொற்கள் காட்டும். 'பூமியின் அடித்தளத்தை நான் நிறுவியபோது நீ எங்கிருந்தாய்? அதன் அளவை வரையறுத்தவர் யார்? உனக்கே தெரியும் போலும். அதை நூலிட்டு அளந்தவர் யார்? அது எதன்மேல் நிறுவப்பட்டது? அதன் மூலைக் கல்லை நாட்டியவர் யார்? அப்பொழுது உதய கால விண்மீன்கள் ஒருங்கே பாடின. தேவ-புத்திரர்கள் (தேவதூதர்கள்) மகிழ்ச்சியினால் ஆரவாரித்தார்களே. கடல் தன் கர்ப்பத்திலிருந்து பொங்கியெழுந்தபோது அதைக் கதவிட்டு அடைத்தவர் யார்? முகிலை அதற்கு ஆடையாக அணி-வித்து இருளைப் போர்வையாகப் போர்த்தினேன். அதற்கு ஓர் எல்லையை அமைத்துக் கதவும் தாளும் இட்டேன். பூரித்தெழும் உன் அலைகள் இவ்வளவு தூரம் செல்லலாம். இதற்கு மேல் செல்லலாகாது என்றேன்'.

இவ்வாறே தன் படைப்பின் அருந்திறத்தை யோபு உணருமாறு கேள்விக்கு மேல் கேள்விகளை அடுக்கிக் கொண்டு போகிறார் யாவே. யோபு உதயத்தைத் தோற்றுவிப்பானா, இருளையும் ஒளியையும் மாறி-வரச் செய்வானா? வெண்பனியும் (Snow) கல்மழையும் (Hail) எங்-கிருந்து வருகின்றன வென்றும் கீழ்க்காற்றும் மேல் காற்றும் எவ்வாறு எழுகின்றன வென்றும் அறிவானா? விண்மீனின் தொகுதிகள் வானில் இயங்கும் இயக்கத்தை அவன் நிர்ணயிப்பானா? அவன் கட்டளையிட்-டால் முகில் மழை பொழியுமா? அவன் அழைத்தால் இடியும் மின்ன-லும் இங்குள்ளோம் என வருமா? சிங்கம் போன்ற கொடுவிலங்கு கட்கும் கூட்டிலிருந்து கத்தும் காகக்குஞ்சுகட்கும் உணவளிப்பவர் யார்? மலையாடு, காட்டெருது, காட்டுக் கழுதை ஆகியவற்றைப் பாதுகாத்து அவ்வவற்றிற்கும்வாழும் இடங்களைநியமித்து அவற்றைப் பல்கிப் பெருகவும் செய்வது யார்? மக்கள் வாழாத வெளியிடங்களிலும்

மழை பெய்யவும் புல் செழித்து வளரவும் செய்கிறார் கடவுள் அவர் அறிவினாலேயே வேட்டைப் பருந்து (Hawk) மேலே பறக்கிறது. கழுகு மலைப்பாறைகளிடையே கூடு அமைக்கிறது.

யோபுவின் கேள்விகட்கு யாவே நேரடியாக விடையிறுக்கவில்லை. மக்கள் வாழ்க்கையில் 'எப்பொழுதும் நீதி நிறைவேறுவதில்லையே ; தன்னைப்போல் பல நன்மைகளைச் செய்தவர்கள் துன்பமடைவது ஏன்? தீமையையும் அநீதியையுஞ் செய்தவர்கள் பலர் நலமாக வாழ்வது ஏன் ? என்பது அவன் கேள்வி. படைப்பின் திறத்தைக் குறித்துப் பல கேள்விகளை விடுப்பதன் மூலம் தம் எல்லையற்ற ஆற்றலுக்கும் அறிவிற்கும் எதிரே மக்களின் அறிவுமிகக் குறைந்ததே-அத்தகைய மக்கள் தன் செயல்களையும் நோக்கங்களையும் புரிந்து கொள்ளுதலரிது என்பதையே அவர் அறிவுறுத்த முயல்கிறார்.

'நான் மிகச் சிறியவன்; உமக்கு என்ன பதில் சொல்வேன்? என் கையினால் வாயை மூடிக் கொள்கிறேன் ஓரிருமுறை நான் பேசினேன்; மறுபடியும் பேச மாட்டேன்' எனக் கூறி யோபு அமைதியடைகிறான்.

திரும்பவும் நீர்யானை,முதலைமுதலியவற்றை எவ்வளவு ஆற்றலும் வலிமையும் உடையனவாக இறைவன் படைத்துள்ளார் என்பது அடுத்த பகுதியில் விளக்கப்படுகிறது. 'உம்மால் எல்லாம் ஆகும் என்பதை அறிவேன், உமது நோக்கங்கள் யாராலும் தடை செய்யப் படத் தக்கன வல்ல; என்னால் புரிந்து கொள்ள முடியாததைக்குறித்து நான் பேசினேன்; என் அறிவுக்கு அப்பாற்பட்டனவும் அற்புதமானவுமாகியவற்றைக் குறித்து நான் பேச முன்வந்தேன். முன்பு நான் என்காதுகளினால்உம்மைக் குறித்துக் கேள்வியுற்று அறிந்தேன். இப்போது என் கண்கள் உம்மைக் கண்டன. ஆகையினால் என்னையே நான் இகழ்கிறேன். என் சொற்களுக்கு மிக வருந்துகிறேன்' என யோபு மறுபடியும் கூறுகிறான்.

யாவே யோபுவின் சொற்களை அறிவுற்ற சொற்கள் எனக்கூறினாராயினும் அவன் நண்பர்களை நோக்கித் தம் ஊழியனாகிய யோபுவின் சொற்களே தமக்கு உவகையளித்தன எனவும் அந் நண்பர்களின் சொற்களைத்தாம்விரும்பவில்லையெனவும்இறுதியில்கூறி அவர்களைக் கடிந்து கொள்கிறார். யோபு அதன்பின் திரும்பவும் ஏராளமான செல்வத்தையும் இறந்த தன் புதல்வர்களுக்குப் பதிலாக வேறு புதல்வர்-

களையும் பெற்றான் என்றும் நெடுநாள் மகிழ்ச்சியோடு வாழ்ந்தான் எனவும் கதை முடிவில் கூறப்படுகிறது.

நல்லோர் துன்பமுறுவது ஏன் என்ற கேள்வியை எழுப்பிய ஆசிரியர் அக் கேள்விக்கு விடை கூறவில்லை. ஆயினும் கதையின் முன்னுரையே அதற்கு ஒருவாறு விடை கூறுகின்றது எனலாம். யோபு இக்கதையில் பல துன்பங்களுக்கு ஆளானது ஏன்? அவன் செய்த குற்றங்களினாலன்று. 'குற்றமற்றவனும் நேர்மையுள்ளவனுமாகிய என் ஊழியன் யோபு' என யாவே தாமே முன்னுரையில் அவனைக் குறித்துக் கூறுகின்றார். பின் அவன் துன்புற்றது எதற்காக? தன்னலமற்ற பக்தி உலகில் மக்களிடையே உண்டு என்பதை நிறுவுவதற்காகவே. ஆயினும் அதை அவன் அறியவில்லை. கதையின் முற்பகுதியில் வாசகர்கட்குக் காட்டப்பட்ட இறைவனின் திருவோலக்க நிகழ்ச்சிகள் இறுதி வரையில் யோபுவுக்கு அறிவிக்கப்படவில்லையென்பது கருதத்தக்கது. தனக்கு நேர்ந்த துன்பங்களின் காரணத்தை அவன் என்றும் அறியவில்லையாயினும் கதையின் இறுதியில் இறைவனின் எல்லையற்ற அறிவையும் ஆற்றலையும் எண்ணி அவர் செய்தசெயல்கள் தன்னால் புரிந்து கொள்ள முடியாதிருப்பினும் அவை தகுதியற்றனவல்ல, ஏற்றவையே எனக் கருதி அமைதியுறுகிறான்.

வாழ்க்கையில் நேர்மையைக் கடைப்பிடித்துத் தூய நல்வாழ்க்கை வாழ முயல்பவர்களும் துன்பமடைதல் கூடும். அத்தகையோர், கடவுள் அநீதியைச் செய்கிறார் எனக் கருதி வருந்தாது எல்லையற்ற ஆற்றலும் அறிவும் உடையவராகிய கடவுள் ஏதோ ஒரு நல்நோக்கத்துடன் தான் யாவற்றையும் செய்கிறார், அவர் நோக்கங்கள் மக்களின் அறிவுக்கு எட்டாதவையாக இருக்கலாம், கடவுளின் அறிவோ எல்லையற்றது, ஆகையினால் அவர் எது செய்தாலும் அது தகுதியே என எண்ணி ஆறுதல் அடைய வேண்டும் என்பதே இங்கு ஆசிரியர் கருத்தாகும். மேலும் துன்பம் எப்பொழுதுமே தேவ கோபத்தினாலோ இறைவனின் தயவின்மையினாலோ ஏற்படுவது அன்று. ஒருவனை நோயோ பிற துன்பங்களோ தாக்கும்போது அவன் இறைவனின் அருளையோ அவர் தயவையோ இழந்து விட்டான் என்பது பொருளன்று. அவ்வாறு எண்ணி அவன் மனம் வருந்த வேண்டுவதில்லை. துன்பத்ினூடேயும் நோயினூடேயும் இறைவனின் அருளை நாடலாம் அடையலாம். அவர் அன்பில் மாறாத நம்பிக்கையுடையராயிருக்கலாம். 'நீ ஏதோ பாவம் செய்திருக்கிறாய்; அதையுணர்ந்து இறை-

வனிடம் நீ மன்னிப்புக் கோருதல் வேண்டும்' என நண்பர்கள் கூறிய தற்கு மாறாக, யாவே முன்னுரையிலும் பின்னுரையிலும் 'என் ஊழி, யன் யோபு' என உரிமை பாராட்டும்படி கடவுளின் தயவே யோபுவின் மேல் தங்கியிருக்கிறது. இதுவே இங்கு ஆசிரியர் காட்ட விரும்பும் கருத்தாகும்.

தன்னலமற்ற பக்தி மக்களிடையே உண்டு என்பதை நிறுவ-வதற்காக அத்தகைய பக்தியை உலகில் பரப்புவதற்காக யோபு பல துன்பங்களையடைந்தான். ஆனால் அதனால் அவன் எவ்விதப் பயனையும் அடையாமற் போகவும் இல்லை. நூலின் இறுதியில் யோபு "(முன்பு) என் காதினால் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டேன் ; இப்போதோ என் கண்கள் உம்மைக் காண்கின்றன" (42.5) எனக் கூறுவதனால் தன் துன்பங்களின் மூலம் அவன் கடவுளைப் பற்றி முன்பு பெற்றிருந்ததைவிட ஆழ்ந்த அறிவைப் பெற்றான் எனவும் அவ்வனுபவம் அவனுக்கு ஆன்மீக நற்பயனையளித்தது எனவும் இந்-நூலை ஆயும் அறிஞர் சிலர் எடுத்துக் காட்டுவர்.

ஆதியாகமத்தில் யாக்கோபு இரவில் இருளில் யாரென அறியாது ஒருவருடன் போரிட்டு வைகறையில் தன்னோடு போரிட்டவர் தேவனே யென அறிந்து அவர் ஆசியைப் பெற்றான். (முதலைந்து நூல்கள் பார்க்க). யோபு என்னும் நூலிலும் கடவுள் தனக்கு மாறாக இருக்கிறார். தன்னைப் பகைக்கிறார் என எண்ணி மானசீகமாக அவருடன் போராடத் துணிந்த யோபு இறுதியில் அவர் தன் சார்பாகவே இருப்பதை யறிந்து அவர் ஆசியையும் பெறுகின்றான் வாழ்க்கையில் மாறாகத் தோன்றும் நிகழ்ச்சிகள் அல்லது சூழ் நிலைகள் அனுகூலமாகப் பயனளித்தல் கூடும், அவ்வாறு பயன்படுத்திக் கொள்ள முயலுதல் வேண்டும். மாறாகத் தோன்றுவனவும் அனுகூலமாகும்படி இறையருளை நாடவேண்டும் என்ற கருத்தையும் இக்-கதைகள் தரும்.

இந்நூலில் தற்போதுள்ள வடிவத்தில் யோபுவும் நண்பர்களும் பேசி முடித்தபின் யாவே பேசுமுன் இடையில் எலிகூ என்னும் யோபுவின் உறவினர் ஒருவர் கூறும் உரை காணப்படுகிறது. இது பிற்சேர்க்கையே எனப் பழைய ஏற்பாட்டை ஆயும் அறிஞர் பலர் கருதுகின்றனர். எலிகூ முதலில் நண்பர்கள் கூறியது போலவே கடவுள் யோபுவுக்கு அளித்த துன்பங்களெல்லாம் அவனைத் திருத்தி நல்வழிப்படுத்துவதற்காகவே எனவும் அவன் உள்ளத்தில் தற்

பெருமையும் தனக்கு நேர்ந்த துன்பங்களைக் குறித்துச் சினமும் கொண்டவனாய் இறைவனையே அநீதியைச் செய்பவர் காரணமில்லாமல் மக்களைத் துன்புறுத்துபவர் எனத் தூற்றலாகா-தெனவும் கூறுகிறான். பின்பு இயற்கையில் விளங்கும் இறையாற்றலை வியந்து கூறி அவ்வளவு ஆற்றலுள்ள கடவுளை இகழ வேண்டாம் என எச்சரிக்கிறான். இடியிலும் மின்னலிலும் விளங்கித் தோன்றும் அவர் ஆற்றல் நம்மை நடுங்க வைக்கவில்லையா என்கிறான். அப்பொழுதே பெருங்காற்றிடையே நின்று யாவே பேசுகிறார். எலிகூவின் பேச்சு ஒரு வகையில் முன்னால் நிகழ்ந்த உரை-யாடலையும் யாவேயின் பேச்சையும் இணைப்பதாக இருக்கிறதே-யன்றி அதில் தனிப்பட்ட கருத்து எதுவும் இல்லை. இப்பேச்சு கதையின் வளர்ச்சிக்கு அவசியம் இல்லை எனவும் இது பிற்சேர்க்கை யெனவும் அறிஞர் கருதுவர்.

யோபு என்னும் இந்நூலில் இடையிடையே வரும் ஒரு சில வரிகளையே திருக்குறளில் வரும் சில வரிகளுடன் ஒப்பிடலாம். ''தேவன் கையிலிருந்து நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமா என்றான்'' (2.10). கதையின் முன்னுரையில் யோபு தன் மனைவியிடம் கூறியதாக இக்கூற்று வருகிறது. இதை ஊழ் என்னும் பத்தில் வரும்.

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன் (379)

என்று குறளுடன் ஒப்பிடலாம்.

யோபு நண்பர்களுடன் பேசும்போது ஓரிடத்தில் கூறுகிறான். ''ஆனாலும் நான் போகும் வழியை அவர் அறிவார்; அவர் என்னைச் சோதித்த பின் நான் பொன்னாக விளங்குவேன்'' (23.10) இது,

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு (267)

என்ற குறளின் கருத்தை யொக்கும்.

யோபு தான் செல்வமும் செல்வாக்கும் உடையவனாயிருந்த போது செய்த செயல்களைக் குறித்துக் கூறும் சொற்களிலும் பல அறக் கருத்துக்களைக் காணலாம்.

''நான் மாயையிலே (பொய்மையில்) நடந்தேனோ. என் கால் கபடுசெய்யத் தீ விரித்தோ என்று, சுமுத்திரையான தராசிலே தேவன் என்னை நிறுத்து என் உத்தமத்தை அறிவாராக'' (31.5—6),

அருங்கேட னென்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யா னெனின் (210)

என வள்ளுவர் கூறியதற்கொப்ப இங்கு யோபு தான் தீவினை யொன்றும் செய்தில்லையாகையால் தனக்குக் கேடுவர நியாயம் இல்லை என்கிறான்

"என் மனம் யாதொரு ஸ்திரீயின் மேல் மயங்கி அயலானுடைய வாசலை நான் எட்டிப் பார்த்துண்டானால், அப்பொழுது என் மனைவி மற்றொருவனுக்கு மாவரைப்பாளாக" (31 9-10)

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு (148)

என்பதையும் யோபு நன்கு உணர்த்திருந்தான்.

தான் தன் செல்வசக்கைப் பயன்படுத்திச் செய்த நன்மைகளைக் குறித்து யோபு கூறுகிறான்.

"முறையிடுகிற ஏழையையும் திக்கற்ற பிள்ளையையும் உதவியற்றவனையும் இரட்சித்தேன்.

கெட்டுப் போக இருந்தவனுடைய ஆசீர்வாதம் என்மேல் வந்தது. விதவையின் இருதயத்தை செம்பீரிக்கப் பண்ணினேன்.

நீதியைத் தரித்துக் கொண்டேன், அது என் உடுப்பாயிருந்தது.

நான் குருடனுக்குக் கண்ணும் சப்பாணிக்குக் காலுமாயிருந்தேன்.

நான் எளியவர்களுக்குத் தகப்பனாயிருந்து, நான் அறியாதவழக்கை ஆராய்ந்து பார்த்தேன்.

நான் அநியாயக்காரர்களுடைய கடைவாய்ப் பற்களையுடைத்து அவர்கள் பறித்தை அவர்கள் பற்களினின்றும் பிடுங்கினேன்". (29.12-17).

கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு (981)

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால் பூன்றிய தூண் (983)

என்பதற்கேற்ப எல்லா நன்மைகளையும் அவன் செய்து வந்தான். உறவினர் மட்டுமன்றிப் பிறர் மாட்டும் அன்புடையவனாகி யாவர்

மாட்டும் ஒப்புரவு செய்தான். பழிபாவங்களுக்கு நாணி நீதியைத் தரித்துக் கொண்டான். வாய்மையைப் போற்றினான். தான்செய்யக் கூடிய நற்செயல்கள் யாவற்றையும் செய்தான். பிறர் செய்யும் அநீதியைக் கண்டித்து நீதியை நிறுவினான்.

''நான் எளியவர்களுக்குத் தகப்பனாயிருந்து நான் அறியாத வழக்கை ஆராய்ந்து பார்த்தேன்'' என்பது யூதர்களின் வழக்கப்படி ஊர்ச்சபையில் பிற மூப்பர்களுடன்கூடி யோபுவும் வழக்குகளை ஆராய்ந்ததையே குறித்ததாதல் வேண்டும்.

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி (118)

என வள்ளுவர் கூறியிருப்ப 'எளியவர்களுக்குத் தகப்பனாயிருந்து வழக்கை யாராய்ந்தேன்' என யோபு கூறுவது திருக்குறளின் நடுவு நிலைமைக் கொள்கைக்கு மாறுபாடானதுபோல் தோன்றும். வழக்கில் வறியவர் என ஒருவனுக்கு இரங்கி நடுவுநிலைமைக்கு மாறாகத் தீர்த்தல் ஆகாது என்பதை நீதிநூலோர் அனைவரும் ஒப்புவர். ''வியாஜ்யத்தில் தரித்திரனுடைய முகத்தைப் பாராயாக'' (யாத். 23.3) என்றுதான் முதலைந்து நூல்களில் காணப்படும் விதிகளும் கூறுகின்றன. ஆகவே இங்கு யோபு 'எளியவர்களுக்குத் தகப்பனாயிருந்து' எனக் கூறுவதன் கருத்து எளியவர்கள் சார்பாக வழக்கைத் தீர்த்தான் என்பதன்று செல்வர்கள் வறியவர்களுக்கு அநீதி செய்யாதபடி நடுநின்று காத்தான் என்பதே.

தன் செல்வத்தைக் கொண்டு யோபு செய்த ஒப்புரவும் ஈகையும் முன்பே கூறப்பட்டன. திக்கற்ற பிள்ளைக்கு உணவும், ஆடையும் போர்வையும் இல்லாது குளிரில் வருந்திய ஏழைக்கு உடையும் கம்பளியும் ஈந்தான். வள்ளுவர் ஒப்புரவு என்னும் அதிகாரத்தில் நல்லோன் ஒருவனின் செல்வம் பலருக்கும் பயன்படும் எனக் கூறியது போலவே யோபுவின் செல்வம் பலருக்கும் பயன்பட்டது என இந்நூலின் ஆசிரியர் கூறுகின்றார்.

''பரதேசி வீதியிலே இராத்தங்கினதில்லை; வழிப்போக்கனுக்கு என் வாசல்களைத் திறந்தேன்'' (31.32) என யோபு கூறுவதினின்றும் விருந்தோம்பல் என்னும் பண்பு அவனிடம் சிறந்து விளங்கிற்று என்பது புலனாகும்.

யோபு என்னும் நூல் இவ்வகையாகப் பல அறக்கருத்துக்களை இடையிடையே கூறினும் இந்நூலின் முக்கிய நோக்கம் நல்லோர் துன்பமடைவது ஏன் என்பதை ஆராய்வதே. இக்கேள்விக்கு ஆசிரியர் தெளிவான விடை கூறவில்லை. நல்லோர் கடுந்துன்பம் அடைய நேரிட்டால், அதன் காரணம் அவர்க்கும் பிற மக்கட்கும் புலனாகா விட்டாலும் இறைவனின் நல்நோக்கமொன்று அதன் மூலமாக நிறைவேறுதல் கூடும், எல்லையற்ற ஆற்றலும் அறிவும் உடைய கடவுள் ஏதோ ஒரு நல்நோக்கத்துடன் தான் நல்லோர் துன்பமடையும் ஒரு நிலைமையை அனுமதிக்கிறார் என எண்ணி அமைதியுறல் வேண்டும் என்பதையே ஆசிரியர் இங்குக் கற்பிக்க விரும்புகிறார்.

நல்லோர் துன்பமடைவது ஏன்? என்பதை வள்ளுவர் தனியே ஆராயவில்லை. பொதுவாக ஒவ்வொரு அறத்தையும் கூறும்போது,

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று (83)

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் (138)

அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள் (178)

என அறங்களைக் கைப்பிடித்தோர் நன்மையை யடைவர். அவர் செல்வம் குறையாது, அவர் வாழ்க்கை கெடாது எனக் கூறிவந்தாராயினும் உலகில் நல்லோர் வறுமையினால்வருந்துவதும் துன்பமடைதலும் உண்டு என்பதை வள்ளுவரும் உணர்ந்திருந்தார். நல்லோர் துன்பம் (Innocent suffering) என்ற பொருள் குறித்துவள்ளுவர் ஆங்காங்குக் கூறிச் செல்லும் கருத்துக்களை இங்கு ஆய்வது பொருந்தும்.

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும் (169)

அழுக்காற்றை உளத்திற் கொண்டவனின் செல்வப் பெருக்கும் செம்மையில் நிற்கும் நன்னெறியாளனின் கேடும் ஆராயப்படும் என்றார். 'அறிவுடையாரால் இதற்கு ஏதுவாகிய பழவினையாது?' என ஆராயப்படும் என்று பரிமேலழகர் பொருள் கூறினார். வள்ளுவர் பொதுவாக வினைத்தொடர்பு குறித்த கொள்கையை ஏற்றுக் கொண்டாராயினும் இக்குறளில் அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான் கேடும் பழவினையின் பயன் எனக்கூறவில்லை அவை ஆயப்படும் என்று மட்டுமே கூறினார்.

பழைய ஏற்பாட்டில் எரேமியா, எசேக்கியேல் போன்ற தீர்க்க-தரிசிகளும், துதிப்பாடலைப் பாடிய கவிஞர்களுட் சிலரும் யோபு என்னும் நூலின் ஆசிரியரும் 'நல்லோர் துன்பமடைவது ஏன்? தீயோர் செழிப்புற வாழ்வது ஏன்?' என்பதை ஆய்ந்தனர். பலவாறு ஆராய்ந்தும் முடிவு காணாராயினர்.

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு (263)

வள்ளுவர் இக்குறளைச் சிறப்பாகத் தவத்தினால் துறவியர் அடையுந் துன்பத்தைக் குறித்துக் கூறினாராயினும் வாழ்க்கையில் துன்பங்களைப் பொறுமையாகத் தாங்குபவர் அதனால் ஆன்மீக நன்மையடைகின்றனர் எனவும் கொள்ளலாம். இக்கருத்து யோபு என்னும் நூலிலும் 'சங்கீதம்' போன்ற பழைய ஏற்பாட்டு நூல்களிலும் காணப்படுவதொன்றே

கெடுவாக வையா துலகம் நடுவாக
நன்றிக்கட் டங்கியான் தாழ்வு (117)

இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின் (988)

நடுவுநிலைமையை விட்டுவிலகாத நன்னெறியாளர், சான்றோர் ஆகி-யோரும் வறுமையடைதல் கூடும். அத்தகைய வறுமையை உயர்ந்-தோர் தாழ்வாகக் கருதமாட்டார்கள், சான்றோரின் வறுமை அவர்க்கு இழிவைத் தருவதன்று என வள்ளுவர் இக்குறளில் கூறினார். நன்-னெறியில் நின்றும் வறுமையுற்றோர்க்கு அவர் அவ்வாறு ஆறுதல் கூற முயல்கிறார்.

நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது. (235)

இக்குறள் துன்பமுறும் நல்லோர்க்கு மற்றொரு வகையில் ஆறுதல் கூறுகிறது நல்லோர் செல்வத்தை யிழப்பினும் பிற துன்-பங்களையடையினும் நன்னெறியில் நின்று ஏதோ ஒரு நன்முயற்சியில் உயிரை யிழப்பினும் அவர் புகழ் அழியாதிருக்கும். ஆனால் இவ்வாறு நன்னெறியில் நின்று துன்பங்களைத் தாங்குதல் யாவரும் செய்யக் கூடியது அன்று. ஆகவே புகழுடம்பிற்கு ஆக்கத்தைத் தரும் கேட்டையும் புகழுடம்பை நிலைத்திருக்கச் செய்யும் சாக்காட்டையும் அடையவல்லார் வித்தகரே.

துன்புற்றோர்க்கு வள்ளுவர் கூறும் மற்றொரு அறிவுரை துன்பத்தைப் பொருட்படுத்தலாகாது, துன்பத்திற்கு வருந்தலாகாது, துன்பம் இயல்பென்று கருத வேண்டும். இன்பத்தை விழைதலாகாது, இன்பமும் துன்பமும் சமமெனக்கருத வேண்டும் என்பதே. 'இடுக்கண் அழியாமை' என்னும் அதிகாரம் பொதுவாக இத்தகைய கருத்துக்களையே கூறுகிறது.

> இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
> துன்பம் உறுதல் இலன் (628)
>
> இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்
> ஒன்னார் விழையும் சிறப்பு (630)

துன்பத்தையும் இன்பத்தையும் சமமாகக் கருதவேண்டும் அல்லது துன்பத்தை இன்பமாகக் கொள்ள வேண்டும் எனப் பழைய ஏற்பாட்டு நூல்களை எழுதிய யூத அறிஞர்கள் போதிக்கவில்லை. பண்டைக் காலத்தில் கிரேக்கரின் ஒரு சாரார் (Stoics) துன்பத்துக்கு வருந்தாது இன்பத்தையும் துன்பத்தையும் சமநோக்குடன் ஏற்றுக் கொள்வதே சிறந்தது எனக் கற்பித்தனர். ஆனால் யூத அறிஞர் பிறர்க்கு நன்மை விளையும்பொருட்டு ஒருவர் துன்பத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். துன்பத்தின் மூலம் கடவுளின் சித்தம் நிறைவேறக் கூடுமானால் அதைப் பொறுமையுடன் தாங்கிக் கொள்ளல் வேண்டுமெனக் கற்பித்தனரே யன்றிப் பொதுவாக இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகக் கருதவேண்டும் என்னும் கருத்து அவர்கட்கு இல்லை.

நல்லோர் துன்பத்தைக் குறித்துப் பழைய ஏற்பாட்டில் காணப் படும் கருத்துக்களை விவிலியநூற் கருத்துக்களை ஆயும் தற்கால அறிஞர் ஒருவர் பின்வருமாறு தொகுத்துக் கூறுகிறார்.

''துன்பம் மக்களைத் திருத்தும் என்னும் கருத்து, துன்பம் குற்றங்கட்குத் தண்டனையாகவோ பழியெதிர் செயலாகவோ ஏற்படுகிறது என்ற கருத்திலின்றும் வந்ததே (யாவேயின் நோக்கம் அருள் நோக்கமே என்றும் நம்பிக்கையினால் ஒறுத்தல் திருந்துவதற்காகவே என்றும் கருத்துத் தோன்றிற்று). இக்கருத்தைத் தவிர நல்லோர் துன்பம் அதோடு தொடர்புள்ள தீயோரின் செல்வ வாழ்க்கை என்ற பிரச்சனையைக் குறித்துப் பழைய ஏற்பாடு ஐந்து வெவ்வேறு கருத்துக்களை அல்லது நோக்கங்களைத் தருகிறது. இவற்றை அவை தோன்றிய காலத்தின் படியின்றி இயல்பாக ஒன்றினின்றொன்று எழத்

தக்க முறைப்படி கூறினால், (1) காத்திருந்துபார் (2) நேர்மையாளர்க்கு மரணத்தின்பின் மறு வாழ்வு இருத்தல் கூடும் (3) வாழ்க்கை இருள நிறைந்த புதிராக உள்ளது (4) வாழ்க்கையில் நமது அறிவுக் கெட்டாத தெய்வ சித்தம் நிறைவேறிக்கொண்டிருப்பதால் அது ஒளி நிறைந்த புதிரே. (5) நல்லோர் அடையுந் துன்பம் குற்றம் செய்தோரைத் திருத்தி அவர்க்கு நலம் பயத்தல் கூடும். இவ்வாறு பல கருத்துக்கள் தோன்றிப் பயனளித்தமை அக்கால யூதர்களில் அநேகர் நல்லோர் துன்பம் என்ற பிரச்சனையைக் குறித்துச் சிந்தித்தனர் என்பதையும் அதைக் குறித்து அதிகக் கவலையுற்றனர் என்பதையும் காட்டும்.''[4]

காத்திருந்து பார் எனக் கூறுவது ஆபகூக் நூலும் துதிப்பாடல்களிற் சிலவுமே. ஒரளவு நல்லோர் துன்புறுவதையும் தீயோர் செழிப்பதையும் காணினும் இறுதியில் நல்லோர் நலமடையத் தீயோர் அழிவர் என்பதே அவற்றில் காணப்படும் கருத்து (தீர்க்கதரிசிகள், ஆபகூக்; துதிப்பாடல்கள் பார்க்க).

நேர்மையாளர்க்கு மரணத்தின்பின் மறுவாழ்வு இருத்தல் கூடும் என்னும் கருத்து யோபு என்னும் நூலிலும் சில துதிப்பாடல்களிலும் காணப்படுகிறது.

வாழ்க்கை இருள் நிறைந்த புதிராக உள்ளது எனக் கூறுவது பிரசங்கி என்னும் நூல்.

வாழ்க்கை மக்கள் அறிவிற்குப்புலனாகாத புதிராக இருப்பினும் கடவுளின் நல்நோக்கம் மக்கள்வாழ்க்கையில் நிறைவேறிவருவதனால் வாழ்க்கை துன்பமாக இருப்பினும் ஒளி நிறைந்ததே என்பது 'யோபு' என்னும் நூலின் ஆசிரியர் காட்ட முயலும் கருத்தாகும்.

---

4. Wheeler Robinson, Religious Ideas in the Old Testament P.172

"If we exclude the disciplinary value of suffering as simply a natural extension of penal or retributive (an extension based on the gracious purpose of Yahweh) then we may say that the Old Testament offers five different attitudes to the problem of the suffering of the innocent (with the related fact of experience, the prosperity of the wicked). The five attitudes in logical though not in chronological order are (1) Wait! (2) There may be life beyond death for the righteous (3) Life is a dark mystery (4) Life is a bright mystery of a divine purpose higher than our grasp (5) The suffering of the innocent may avail for the guilty. The variety of these suggestions show how widely the problem was felt, as their fruitfulness shows its intensity"

நல்லோர் அடையும் துன்பம் பிறர் சார்பாக அடையுந்துன்பமாக (Vicarious suffering) இருத்தல் கூடும் என்பது இரண்டாம் ஏசாயாவின் கருத்து.

இக் கருத்துக்கள் திருக்குறளில் காணப்படுகின்றனவா என ஆராயின் துன்பம் மக்களைத் திருத்தும் ஆற்றலுள்ளது என்பது,

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு (267)

என மேலே காட்டப்பட்ட குறளினால் போதரும். இனி,

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும் (169)

என்ற குறட்குத் தீயோர்செல்வமும் நல்லோர்கேடும் பழவினையின் பயன் என ஆராயப்படும் என்று பொருள் கொள்ளாது, அத்தருணத்தில் அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமடைவது போலவும் செவ்வியான் கெடுவது போலவும் தோன்றினாலும் அவர்கள் வாழ்க்கை முழுவதையும் ஆராயின் அது உண்மையாகாது எனவும் பொருள் கொள்ளலாம். பரிதியார் அவ்வாறே பொருள் கொண்டு, 'அழுக்கு மனத்தின் பெற்ற கேடும் இமைப்பிற் கெடும்' எனப் பொருள் கூறினார். இவ்வாறு பொருள் கொள்ளின் அது, 'காத்திருந்து பார்' என்பதனோடு ஒக்கும்.

வாழ்க்கை சில வகைகளில் மக்களறிவுக்கு எட்டாத புதிராக இருக்கிறது என்ற கருத்து ஊழ் என்னும் அதிகாரத்தில் ஓரளவு காணப்படுகிறது.

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது (377)

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும் (380)

முதலிய குறள்கள் மக்களறிவுக்கு எட்டாத ஏதோ ஒரு ஆற்றல் சில சமயம் மக்கள் எண்ணங்களுக்கு அல்லது முயற்சிகளுக்கு மாறாகச் செயற்படுகிறது என்பதைக் காட்டும். வகுத்தான் என்னும் சொல் இங்குக் கடவுளைக் குறிக்கலாம். மற்றப்படி கடவுள் இவ்வுலகில் தம் சித்தத்தை நிறைவேற்றுகிறார் என்றோ அவர் சித்தம் எது என்றோ வள்ளுவர் விளக்கிக் கூறவில்லை. உரையாசிரியர்கள் பலரும் ஊழ்

என்பதற்கு வினைப்பயன் என்கிற பொருள் கொண்டனர். வள்ளுவரும் வினைத்தொடர்பில் நம்பிக்கையுடையவர் ஆகையினால் அவர் கருத்தும் அதுவாகவே யிருக்கலாம்.

நல்லோர் அடையும் துன்பம் பிறர் சார்பாக அடையுந்துன்பமாக இருக்கலாமென வள்ளுவர் கூறவில்லை. குடிசெயல்வகையில் ஒருவன் தன் குடும்பத்தின் சார்பாகத் துன்பத்தை ஏற்றுக் கொள்ள முன் வருதல் கூடும் எனக் கூறினாரேயன்றி உலகில் நல்லோர் துன்பமடைவதைக் கடவுள் அனுமதிப்பது அதனால் பிறர் நன்மையடையும் பொருட்டாக இருத்தல் கூடும்என்னும் கருத்து திருக்குறளில் இல்லை.

## 6.3. பிரசங்கி

பிரசங்கி (Ecclesiastes), போதகர் அல்லது சொற்பொழிவாளர் என்னும் பொருளைத்தரும்தலைப்பைக்கொண்ட இச்சிறுநூல் 12 அதிகாரங்களையேகொண்டது. இது கி. மு 3-ஆம் நூற்றாண்டில் எழுதப் பட்டதென விவிலியநூலை ஆயும் அறிஞர் பலர் கருதுகின்றனர். இதில் கிரேக்கக் கருத்துக்களும் ஓரளவு காணப்படுகின்றன என்பர்.

வாழ்க்கைக்கு இலக்கு ஒன்றும் இல்லை எனத் தோன்றுகிறது இந்நூலாசிரியர்க்கு. சூரியன் உதிக்கிறது, மாலையில் மறைகிறது, திரும்பவும் அடுத்தநாள் உதிக்கிறது. காற்று வீசுகிறது, திரும்பவும் அதே இடத்திற்கு வருகிறது. ஆறுகள் எல்லாம் கடலில் விழுகின்றன. ஆனால் கடல் நிறைவதில்லை. மக்கள் வாழ்க்கையும் ஓயாத உழைப்பாக இருக்கிறது மக்கள் ஓயாமல் உழைக்கிறார்கள். எதை நோக்கி? ஆகவே 'வீணிலும் வீண்' அனைத்தும் வீணே.'[5] (Vanity of vanities, all is vanity) என முழங்குகிறார் பிரசங்கி.

அவர் செல்வத்தைப் பெருக்கினார். பல கட்டிடங்களைக் கட்டினார். மந்தை மந்தையாக ஆடுமாடுகளை வாங்கினார். பல அடிமை-

5. ஆங்கில மொழிபெயர்ப்பில் 'Vanity of vanity, all is vanity' எனக் காணப்படும் தொடர் தமிழ்மொழிபெயர்ப்பில் 'மாயை, மாயை எல்லாம் மாயையே' எனக் காணப்படுகிறது மாயை என்ற சொல்லை இங்குப்பயன்படுத்துவது பொருத்தமாகத் தோன்றவில்லை. நம் நாட்டு வேதாந்த நூல்களில் காணப்படும் உலகம் மாயை என்ற கருத்து யூதர்களிடம் இருந்ததில்லை. பிரசங்கி என்னும் நூல் முழுவதையும் பார்க்கும் போது, வாழ்க்கை பொருளற்றது, வாழ்க்கையின் பொருள் புரிந்து கொள்ள முடியாததாக இருக்கின்றது, மக்கள் செயல்கள் அல்லது முயற்சிகள் பல பொருளற்றுப் போகின்றன என்பதே ஆசிரியரின் கருத்து எனத் தோன்றும்.

இக் கட்டுரையில் vanity என்னும் சொல் வீண் எனமொழிபெயர்க்கப்படுகிறது.

களையும் வாங்கிக் கொண்டார். ஆயினும் அதனால் அவர் உள்ளம் நிறைவடையவில்லை. அறிவைத் தேடினார். அறிவு அதிகமாக அதிகமாகத் துன்பமும் அதிகமாயிற்றே யல்லாமல் நிறைவு காண முடியவில்லை. ஆகவே செல்வமும் அறிவைத் தேடும் முயற்சியுங் கூட வீணே என எண்ணினார்.

வாழ்க்கை நிலையற்றது. எல்லோரும் இறுதியில் மரணமடைகின்றார்கள். மூடன் மரணமடைவது போலவே அறிவாளியும் மரணமடைகிறான். அறிவாளிக்குத் தன் அறிவினால் என்ன பயன்? இவ்வாறு சிந்தித்து இந்நூலின் ஆசிரியர்அனைத்தும் வீணே என உணர்ந்தார்.

ஆயினும் அறிவைத் தேடவேண்டாம் செல்வத்தைத் தேடவேண்டாம் என அவர் கூறவில்லை. அவற்றால் வாழ்க்கையில் பயனுண்டு என அவர் உணர்ந்தார். மக்கள் முயற்சியுடையவராயிருத்தல் வேண்டும் எனவும் அவர் கற்பித்தார். ஏனெனில் முயற்சியும் உழைப்பும் மன மகிழ்ச்சியைத் தரும் என அவர் உணர்ந்தார். ஆயினும் உழைப்பும் உழைப்பினால் தேடப்படும் செல்வமும் எப்போதும் பலனளிப்பதில்லை.

"நான் திரும்பிக் கொண்டு சூரியனுக்குக் கீழே கண்டதாவது, ஓடுகிறவர்களுக்கு வேகமுள்ளவர்களின் வேகமும், யுத்தத்துக்குச் சவுரியவான்களின் சவுரியமும் போதாது; ஐசுவரியம் அடைவதற்குப் புத்திமான்களின் புத்தியும் போதாது; தயவு அடைகிறதற்கு வித்வான்களின் அறிவும் போதாது; அவர்களெல்லோருக்கும் சமயமும் தேவச் செயலும் நேரிடவேண்டும்" (9 11).

ஒருவன் தன் முயற்சியினாலும் அறிவினாலும் செல்வத்தைச் சேர்த்தாலும் இறுதியில் அதைத் தன் மக்கட்கோ பிறர்க்கோ விட்டுச் செல்கிறான். அவர்கள் முயற்சியில்லாதவர்களாய் அறிவில்லாதவர்களாயிருந்து அச்செல்வத்தை வழித்தலும் கூடும். ஒருவன் வாழ்நாளிலேயே செல்வம் எதிர்பாராத நிகழ்ச்சியினால் அழிதல் கூடும். ஒருவனுக்குச் செல்வம் இருந்தும் அதை அவன் அனுபவிக்க முடியாது போதலும் உண்டு.

வாழ்க்கையில் எப்போதும் நீதியுள்ளவர்கள் தான் மேலோங்குகிறார்களா என்றால்அதுவும்இல்லை. நீதிஉலகில் எப்போதும்வெற்றி அடைவதில்லை.

''பின்னும் சூரியனுக்குக் கீழே நான் நியாயத்தலத்தைக் கண்டேன், அங்கே அநியாயம் இருந்தது; நீதி ஸ்தலத்தையும் கண்டேன், அங்கே அநீதி இருந்தது'' (3.160).

''இதற்குப் பின்பு நான் சூரியனுக்குக் கீழே செய்யப்படும் கொடுமைகளையெல்லாம் சிந்தித்துப் பார்த்தேன்; இதோ ஒடுக்கப்படுகிறவர்களின் கண்ணீரைக் கண்டேன்; அவர்களைத் தேற்றுவாரில்லை. ஒடுக்குகிறவர்களின் பட்சத்தில் பலம் இருந்தது; அப்படியிருந்தும் தேற்றுவாரில்லை'' (4.1).

* ''மற்றொரு பொருளற்ற தன்மை இவ்வுலகில் காணப்படுகிறது தீயோரின் செயல்கட்கு ஏற்ப நிகழ வேண்டியது நீதிமான்கட்கு நிகழ்கிறது. நீதிமான்களின் செயல்கட்கு ஏற்ப நிகழ வேண்டியது தீயோர்க்கு நிகழ்கிறது. இதுவும் வீணே என்றான்'' (8.14).

உலகம் நீதியின்படி ஆளப்படுவதாகத் தெரியவில்லை. கடவுளின் செயல்களோ மக்களால் புரிந்துகொள்ள முடியாதனவாக இருக்கின்றன. ஒருவன் இரவிலும் பகலிலும் துயில் செய்யாது இருந்து ஆராய்ந்தாலும் புரிந்துகொள்ள முடியாது. உலகில் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளைக் கொண்டு கடவுள் தன்மேல் விருப்பமா வெறுப்பா கொண்டிருக்கிறார் என மனிதன் ஓர்ந்துணர்தலும் இயலாது (8-15-9.1).

இறுதியிலோ எல்லோருக்கும் நிகழ்வது மரணமே. அது நல்லோர்க்கும் பொல்லார்க்கும் பொதுவாகவுள்ளது.

''எல்லாருக்கும் எல்லாம் ஒரேவிதமாய்ச் சம்பவிக்கும்; சன்மார்க்கனுக்கும் துன்மார்க்கனுக்கும் நற்குணமும் சுத்தமும் உள்ளவனுக்கும் சுத்தமில்லாதவனுக்கும், பலியிடுகிறவனுக்கும் பலியிடாதவனுக்கும், ஒரே விதமாய்ச் சம்பவிக்கும்; நல்லவனுக்கு எப்படியோ பொல்லாதவனுக்கும் அப்படியே; ஆணையிடுகிறவனுக்கும் ஆணையிடப்படுகிறவனுக்கும் சமமாய்ச் சம்பவிக்கும்'' (9.2).

பிரசங்கி என்னும் இந்நூல் எழுதப்பட்ட காலத்திலேயே மரணத்தின் பின் மறுவாழ்வு உண்டென்ற கருத்து யூதர்கள் சிலரிடையே பரவி வந்ததெனத் தெரிகிறது. ஆயினும் 'பிரசங்கி' அக்கருத்தைக் குறித்து ஐயமே தெரிவிக்கிறது.

* ''எல்லாவற்றிற்கும் அதன் தன் நேரமும் முறையும் உண்டு. ஆகையினால் மனிதனின் துயரம் அதிகமாக இருக்கிறது; பின்பு நேர்வது என்ன என்று அவனுக்குத் தெரியாது; அது எப்படியிருக்கு

மென்று அவனுக்குச் சொல்பவர் யார்? தன் உயிரைச் செல்லாமல் தடுத்து நிறுத்த மனிதனுக்கு ஆற்றல் இல்லை. மரண நாளின் பேரில் அவனுக்கு அதிகாரமும் இல்லை'' (8.6-8).

''மானிட மக்களுக்கு நேரிடுவதும் விலங்குகளுக்கு நேரிடுவதும் இறுதியில் ஒன்றே; அவை மரிப்பது போலவே அவர்களும் மரிக்கிறார்கள்; எல்லோருக்கும் ஒருவித மூச்சே உள்ளது; விலங்கைவிட மனிதன் அதிக வாய்ப்புடையவன் அல்லன்; அனைத்தும் வீணே.

எல்லோரும் ஒரே இடத்துக்குப் போகிறார்கள்; எல்லாம் மண்ணிலிருந்து உண்டாயின; எல்லாம் மண்ணிற்குத் திரும்புகின்றன.

மனிதனின் ஆவி மேலே செல்கிறதா என்றும் விலங்கின் ஆவி கீழே மண்ணில் கலக்கிறதா என்றும் அறிபவன் யார்?'' (3. 19-21)

மனிதனுக்கு மட்டும் மறுமையுண்டு என்றும் விலங்குகட்கு மறுமையில்லையென்றும் தம் காலத்தில் தம் நாட்டவர் சிலரிடையே பரவி வந்த கொள்கையையே இந்நூலின் ஆசிரியர் மேற்காட்டப்பட்டவர்களின் இறுதியில் குறிப்பிடுகிறார். ஆனால் அவ்வாறு மனிதனுடைய ஆவிமட்டும் மரணத்தின்பின்னும் ஏதோ ஒருநிலையில் வாழ்கிறது என்பதை அறிபவன் யார் என அவர் வினவுகிறார். ஆகவே ஐயத்திற்கிடமாய இம்மறுமைக் கொள்கையும் அவருக்கு உள்ள நிறைவையளிக்கவில்லை.

ஆகவே மக்கள் உலகில் முயற்சி செய்து உழைத்து அதன் பயனை அனுபவித்து நன்றாக வாழ வேண்டுமென அவர் கற்பித்தார்.

''மனுஷன் புசித்துக் குடித்து, தன் பிரயாசனத்தின் பலனை அனுபவிப்பதைப் பார்க்கிலும், அவனுக்கு ஒரு நன்மையுமில்லை; இதுவும் தேவனுடைய கரத்திலிருந்து வருகிறது என்று நான் கண்டேன்'' (2 24).

''நீ போய், உன் ஆகாரத்தைச் சந்தோஷத்துடன் புசித்து, உன் திராட்சை ரசத்தை மன மகிழ்ச்சியுடன் குடி; தேவன் உன் கிரியைகளை அங்கீகாரம் பண்ணியிருக்கிறார்.

உன் வஸ்திரங்கள் எப்பொழுதும் வெள்ளையாயும் உன் தலைக்கு எண்ணெய் குறையாததாயும் இருப்பதாக.

சூரியனுக்குக் கீழே உள்ள தேவன் உனக்கு நியமித்திருக்கிற மாயையான நாட்களிலெல்லாம் (Days of vanity) நீ நேசிக்கிற

மனைவியோடே நிலையில்லாத இந்தஜீவ வாழ்வை அனுபவி ; இந்த ஜீவனுக்குரிய வாழ்விலும் நீசூரியனுக்குக்கீழேபடுகிற பிரயாசத்திலும் பங்கு இதுவே.

செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பலத்தோடே செய் ; நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே'' (9 7-10)

இங்கு மரணத்தின்பின் செயலொன்றுமில்லை. ஆகையினால் இவ்வாழ்க்கையையே நன்கு அனுபவிக்க வேண்டும் என்பதே கூறப் படுகிறது. ஆயினும்பிரசங்கி மக்கள் மகிழ்ச்சியை மட்டும் தேட-வேண்டும் எனக் கூறவில்லை அறத்தையும் கைக்கொள்ள வேண்டும் என்றார்.

''வாலிபனே ; உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும் ; உன் நெஞ்சின் வழிகளிலும் உன் கண்ணின் காட்சிகளிலும் நட ; ஆனாலும் இவைகளெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி

நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும் உன் மாமிசத்தி-லிருந்து தீங்கையும் நீக்கிப் போடு'' (11.9-10).

மக்கள் வீண் கவலைகளை விட்டு வாழ்க்கையை நன்கு அனு-பவிக்க வேண்டும். ஆயினும் தீயவழியிற் செல்லலாகாது. அறவழியில் நின்றே வாழ்க்கையின் வளங்களைத் துய்த்தல் வேண்டும். 'அறத்தால் வருவதே இன்பம்' என்பதைப் பிரசங்கியும் உணர்ந்திருந்தார்.

வாழ்க்கையில் உழைப்பும் முயற்சியும் வேண்டும் என்பதையும் அவர் உணர்ந்தார். ஆயினும் எப்போதும் உழைத்துக் கொண்டே-யிருந்தால் பயனில்லை ; உழைக்கவும் வேண்டும், வாழ்க்கையின் வளங்களை அனுபவிக்கவும் வேண்டும்.

எல்லாவற்றிற்கும் இடைப்பட்ட நிலையையே பிரசங்கி விரும்-பினார் ; இதைச் சிறந்த இடைநிலை (The golden mean) என்பர். அளவுக்கும் மீறி உழைப்பதால் பயனில்லை; செல்வத்தையும்அளவுக்கு மீறித்தேடவேண்டா ; கல்வியையும் அறிவையும் தேடுவதில் ஒரு அளவோடு நிறுத்திக் கொள்ள வேண்டும் என அவர் கற்பித்தார். அறத்திலும் கூட அளவுக்கு மீறி ஈடுபடலாகாது என்றார், 'மிஞ்சின-

நீதிமானாயிராதே; உன்னை அதிக ஞானியுமாக்காதே' (7.16) (Do not be righteous overmuch ; neither make thyself overwise) என்பதும் அவர் போதனையாகும்.

இவையே பொதுவாக இந்நூலின் கருத்துக்களாகும். இந்நூலாசிரியர் பொதுவாக உலகில் நீதி மேலோங்குவதில்லை யெனக் கூறுவதால்இறைவனின் நீதியைக் குறித்து,"இவைகளெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என அறி" (11.9) எனவும் "சகல எண்ணங்களையும் சகல செய்கைகளையும் நியாயம் தீர்க்கும் காலம் இனி இருக்கிறபடியால் சன்மார்கனையும் துன்மார்க்கனையும் தேவன் நியாயந் தீர்ப்பார் என்று உள்ளத்தில் எண்ணினேன்" (3.17) எனவும் வரும் வரிகள் மற்றொருவரால் இடைச்செருகலாகப் பின்பு சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டுமென விவிலியநூலை ஆயும் அறிஞர் சிலர் கருதுவர். சிலர் இத்தகைய மாறுபட்ட கருத்துக்கள் ஆசிரியர் உள்ளத்தில் எழுந்த ஐயங்களைக் காட்டும் என்பர். ஆசிரியர் யூதகுலத்தைச் சேர்ந்தவராதலால் கடவுள் ஒருவர் உளரென்றும் அவர் நீதியுள்ளவர் என்றும் சிறுவயதிலிருந்து கற்பிக்கப்பட்டார். ஆனால் தம் காலத்தில் சமூகத்தில் எங்கும் நீதி நிலவவில்லை, வலியோர் மெலியோரை வாட்டுதலும் பலவித அநீதிகளும் இருந்தன எனக் கண்டார். ஆகவே இருகருத்தையும் அவர் தம் நூலில் கூறினார் என்பர்.

கடவுள் ஒருவர் உள்ளார் என்ற நம்பிக்கை இந்நூலாசிரியர்க்கு இருந்தது. ஆனால் தீர்க்கதரிசிகளுக்கும் யோபு என்னும் நூலின் ஆசிரியர்க்கும் இருந்த ஆழ்ந்தபக்தி, கடவுளின் எல்லையற்ற அறிவையும் ஆற்றலையும் மக்களின் ஆராய்ச்சிக்கு மேற்பட்ட அவர் நீதியையும் அருளையும் குறித்த ஆழ்ந்த சிந்தனைகள் இந்நூலாசிரியர்க்கு இல்லை. வாழ்க்கை பொருளற்றதாகவும் நீதியின் வழிவராததாகவும் தோன்றினும் கடவுள் நல்லவராகத்தான் இருக்க வேண்டும் எனச் சாதாரணமாக மக்கள் கொள்ளும் ஒரு பொதுவான கருத்தே இந்நூலில் காணப்படுகிறது.

திருக்குறட் கருத்துக்களையும் இந்நூற் கருத்துக்களையும் ஒப்பிட்டு நோக்கும் பொழுது சில ஒற்றுமைகளையும் காணலாம். மக்களின் முயற்சி உலகில் எப்போதும் பயனளிப்பதில்லை என்பதையும் சிலர் செல்வத்தைத் தேடியும் அனுபவிக்க இயலா நிலையில் இருக்கின்றனர் என்பதையும் இந்நூலாசிரியர் எடுத்துக்காட்டினார். இதையே வள்ளுவரும் ஊழ் என்னும் அதிகாரத்தில்,

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும் (380)

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்த லரிது (377)

என்ற குறள்களிற் கூறினார்.

''வாழ்வு காலத்தில் நன்மையை அனுபவித்திரு; தாழ்வு காலத்தில் சிந்தனை செய் ; மனிதன் தனக்குப் பின் வருவதொன்றையும் கண்டுபிடியாதபடிக்குத் தேவன் இவ்விரண்டையும் ஒன்றுக்கொன்று எதிரிடையாக வைத்திருக்கிறார்'' (71-14)

மேற்காட்டப்பட்ட பிரசங்கியின் கூற்றையும் ஊழ் என்னும் அதிகாரத்தில் உள்ள பின்வரும் குறளுடன் ஒப்பிடலாம்.

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன் (379)

சினத்தையடக்கு, (உன் மனதில் சீக்கிரமாய்க் கோபம் கொள்ளாதே, மூடரின் நெஞ்சிலே கோபம் குடி கொள்ளும் (7.9) தீமையை விலக்கு (உன் மாமிசத்திலிருந்து தீங்கை நீக்கிப்போடு (11.10) எனப் பிரசங்கி இடையிடையே கூறிச்செல்லும் அறக் கருத்துக்களும் வெகுளாமை தீவினையச்சம் முதலிய திருக்குறள் அறங்களுடன் ஒத்தனவே.

செல்வத்தின் நிலைமையைப் பிரசங்கி பின்வருமாறு கூறுகிறார்.

''சூரியனுக்குக் கீழே நான் கண்ட வேறொரு கொடிய தீங்குமுண்டு ; அதாவது, ஐசுவரியமானது அதையுடையவர்களுக்கே கேடுண்டாகும்படி சேகரித்து வைக்கப்படுவதாம். அந்த ஐசுவரியம்-விக்கினத்தால் அழிந்து போகிறது. அவன் ஒரு புத்திரனைப் பெறுகிறான். அவன் கையில் யாதொன்றும் இல்லை'' (5 13-14).

செல்வம் விரைவில் அழிந்துவிடக்கூடும் என்பதையே வள்ளுவரும்,

கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று (332)

என்ற குறளால் விளக்கினார். கூத்து நிகழ்கின்ற அரங்கினருகே மக்கள்திரள் வந்து சேர்வதுபோலச் செல்வம் சேரும். கூத்து முடிந்த பின் அத்திரள் கலைவதுபோலச் செல்வமும் அழியும் என்றார்.

ஆயினும் பொதுவாக 'வாழ்க்கை பொருளற்றது அனைத்தும் வீணே' எனப் பிரசங்கி என்னும் நூலின் ஆசிரியர் கொண்ட கருத்து திருக்குறளில் இல்லை. ஏனெனில் வள்ளுவர் மறுமையில் திட்டமான நம்பிக்கையுடையவர். மக்கள் இம்மையில் செய்த நல்வினை தீவினைகளின் பயனை மறுமையில் அடைதல் கூடும் என அவர் நம்பினரர். அதுமட்டுமின்றி இம்மையில் கற்ற கல்வி, இம்மையில் பயின்ற புலனடக்கம், இம்மையில் நட்டநட்பு ஆகியவை மறுமையிலும் தொடர்ந்து பயனளிக்கும்எனவும் நம்பினார் (குறள்398, 126, 107, 62) ஆதலின் இம்மையில் மக்கள் முயற்சி ஒரமையம் பலனளிக்காது போயினும் அம்முயற்சிகள் பொருளுள்ளனவே என அவர் கொண்டார். 'மூடனும் இறக்கிறான். அறிவாளியும் இறக்கிறான்; ஆகவே அவ்வறிவாளிக்குத் தன் அறிவினால் என்ன பயன்?' எனப் பிரசங்கி வினவியது போல் வள்ளுவர் வினவவில்லை ஏனெனில்,

> ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
> எழுமையும் ஏமாப் புடைத்து (398)

என அவர் நம்பினார். ஒருவன் இம்மையில் செய்கின்ற முயற்சிகள் தொடர்ந்து மறுமையிலும் பயனளிக்கும் என நம்பிய வள்ளுவர் மக்களை உழைப்பையும் கல்வியையும் அறத்தையும் ஒரு அளவோடு நிறுத்திக் கொள்ள வேண்டும் எனக் கருதவில்லை

> உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
> தள்ளினும் தள்ளாமை நீர்த்து (596)

என மக்கள் உயர்குறிக்கோளும் ஊக்கமும் முயற்சியும் உடையராய் வாழ்தலையே அவர் விரும்பினார். மக்களின் முயற்சிகள் உலகில் சில சமயம் பயனளிக்காது போவதனால் உழைப்பை ஓரளவுடன் நிறுத்திக் கொள்ள வேண்டுமெனப் பிரசங்கி கருதியதுபோல் வள்ளுவர் கருதவில்லை அவ்வாறே அறிவையும் கல்வியையும் ஒரளவோடு நிறுத்தி விடாது எப்பொழுதும் தேடவேண்டும்; மேன்மேலும் தேடவேண்டும் என்றார்.

> தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறும் அறிவு (396)

> யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
> சாந்துணையும் கல்லாத வாறு (397)

அறத்தையும் ஒரளவோடு நிறுத்திக் கொள்ள வேண்டுமென வள்ளுவர் எங்கும் கூறவில்லை. அறத்தை எவ்வெவ்வழிகளிலெல்லாம் செய்ய

முடியுமோ அவ்வவ்வழிகளிலெல்லாம் எப்போதும் செய்ய வேண்டும் எனவே வள்ளுவர் வற்புறுத்தினார்.

> ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
> செல்லும்வா யெல்லாம் செயல். (33)

பிரசங்கி என்னும் நூலில் காணப்படும் ஊக்கமின்மைக்கும் விரக்தி மனப்பான்மைக்கும் ஒரு காரணம் திட்டமான மறுமைக் கொள்கையின்மை என்பது முன்பே சுட்டப்பட்டது. மற்றொரு காரணம் அக்காலத்து அந்நாட்டிலிருந்த வரலாற்றுச் சூழ்நிலை எனலாம். இந் நூல் கி. மு. 3-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கொள்ளின் அது யூதவரலாற்றில் பெர்சியராட்சிக் காலத்தின் இறுதி அல்லது கிரேக்கராட்சிக் காலமாகும். அதற்கு முன்பே 300 ஆண்டுகள் யூதநாடு அந்நிய ஆட்சிக்குட்பட்ட நிலையில் இருந்தது. நெடுங்காலம் அந்நிய ஆட்சியின்கீழிருந்து மனம் சோர்வுற்றதனால் இத்தகைய மனப்பான்மை அக்கால யூத மக்கள் சிலருக்கு ஏற்பட்டிருக்கலாம். அதிகாரிகள் பலர் நீதியற்றவர்களாயிருப்பதையும் அவர்களாட்சியின்கீழ் வறியவர்கள் துன்புறுவதையும் ஆசிரியர் குறிப்பிடுகிறார். பேரரசின் ஒரு சிறு பகுதியாக இருந்த யூத நாட்டவர்க்கு அரசனிடம் நேரில் சென்று முறையிட வாய்ப்பில்லை. ஒரு அதிகாரிக்கு மேல் மற்றொரு அதிகாரி அவனுக்குமேல் பிறிதொரு அதிகாரி என அரசியலமைப்பு இருந்ததை அவர்தம் நூலில் குறிப்பிடுகிறார் (5.8-9). அரசனையோ அதிகாரிகளையோ ஒருவன் தன் படுக்கையறையில் குறை கூறினாலும் கூட அது அவர்களுக்கு யார்மூலமாவது தெரிந்து விடும் எனவும் அவர் கூறுகின்றார் (10. 20). இவ்வாறு ஒற்றர்கட்கு அஞ்ச வேண்டிய நிலைமையும் நாட்டில் இருந்தது போலும். இத்தகைய அரசியல் நிலையில் ஓரளவு முயற்சியும் உழைப்பும் போதும், கிடைத்ததைக் கொண்டு அனுபவிக்கக் கூடியதை அனுபவிப்போம் என மக்கள் கருதுதல் இயல்பே.

வள்ளுவர் வாழ்ந்த காலம் திட்டமாக வரையறுக்கப்படாவிடினும் கி. பி. முதலாம் அல்லது இரண்டாம் நூற்றாண்டெனவே அறிஞர் பலரும் கருதுவர். அவர் காலம் களப்பிரர் படையெடுப்புக்கு முற்பட்ட காலமே. வள்ளுவர் காலத்தில் தமிழ்நாட்டைத் தமிழரசர்களேயாண்டனர். மக்கள், தங்களுக்கு யாராலாவது அநீதி செய்யப்பட்டால் அரசனிடம் சென்று நேரில் முறையிடும் வாய்ப்பைப் பெற்றிருந்தனர். நாட்டில் வறுமையும் இருந்ததெனினும் செல்வம் தேடும் வாய்ப்பு இருந்தது. உழவு, தொழில், வாணிபம் முதலியவற்றில் ஈடு-

பட்டு பொருளாக்கத்தைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்பு இருந்தது. அந்நிய அதிகாரியின் அநீதிக்கோ கொடுமைக்கோ அஞ்ச வேண்டிய நிலையில்லை.'யாதானும் நாடாமால் ஊராமால்' எனக் கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு செய்யப்படுவதை வள்ளுவர் கூறுவதையும் 'அறிவுடையோனாறரசும் செல்லும்' (புறம் 183) எனப் புறநானூற்றில் சோழன் நல்லுருத்திரன் கூறுவதையும் நோக்குமிடத்துக் கல்விக்குப் பண்டைத் தமிழகத்தில் பெருமதிப்பு இருந்தது எனவே தோன்றும். ஆகவே இத்தகைய சூழ்நிலையில் உழைப்பையோ கல்வியையும் செல்வத்தையும் தேடும் முயற்சியையோ ஒரு அளவோடு நிறுத்திக்கொள்ளும்படி போதிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே வள்ளுவர் மிகுந்த ஊக்கமுடைமையையும் பல நற்றுறைகளிலும் மேன்மேலும் செய்யும் முயற்சியையுமே விரும்பினார்.

பிரசங்கி என்னும் நூலில் காணப்படும் கருத்துக்கள் கிருஸ்தவக் கொள்கைகளுமல்ல. பழைய ஏற்பாட்டுக் கொள்கைகள் தளர்ந்து புதிய ஏற்பாட்டுக் கொள்கைகள் தோன்றுமுன் மக்களுள்ளத்தில் எழுந்த ஐயங்களையும் ஒருவித உள்ளச்சோர்வையுமே இந்நூல் காட்டுகின்றது. புதிய ஏற்பாட்டின் காலத்திலிருந்து கிருஸ்தவர்கள் மக்கள் அனைவர்க்கும் மறுமையுண்டு, மக்களுயிர் உடலைவிட்டுப் பிரிந்தபின் ஏதோ ஒரு நிலையில் தொடர்ந்து வாழ்கிறது என்ற கொள்கையையே கொண்டனர். பிரசங்கி 'மிஞ்சின நீதிமானாயிராதே' என்று கூறியதற்கு மாறாகக் கிருஸ்துபெருமான் 'பூரண சற்குணராயிருங்கள்' (Be ye Perfect) என்றார்.

கி. மு. 4-ஆம் நூற்றாண்டுக்கும் இரண்டாம் நூற்றாண்டுக்கும் இடையே எழுந்த இம்முதறிவு இலக்கியங்கள் ஆழ்ந்த சிந்தனையைக் காட்டுவன. தமிழ்நாட்டில் பக்தியுணர்ச்சி மேலிட்டவர்களாய்க் கவிபாடிய ஆழ்வார்களும் தேவார திருவாசக ஆசிரியர்களும் வாழ்ந்த பல்லவர்காலத்தின்பின் சோழர்காலத்தில் ஆழ்ந்த சிந்தனையாளர்களால் எழுதப்பட்ட தத்துவ நூல்கள் (சித்தாந்த நூல்களும் ஆசாரியார்களின் நூல்களும்) தோன்றின. அதுபோலவே இறைவனால் அழைக்கப்பட்டவர்களாகத் தம்மைக் கருதி உணர்ச்சி மேலிடப்பட்டவர்களாய்க் கவிதை மூலம் தம் கருத்துக்களை விளக்கிய தீர்க்கதரிசிகளின் காலத்தின் பின் ஆழ்ந்த சிந்தனையை வெளியிடும் இம்முதறிவு இலக்கியங்கள் யூதர்களிடையே தோன்றின போலும்.

ஆயினும் தீர்க்கதரிசிகளின் நூல்கள், துதிப்பாடல்கள், முதறிவு இலக்கியங்கள் ஆகிய இப்பலவகைப்பட்ட பழைய ஏற்பாட்டு

நூல்களும் கிருஸ்துவின் காலத்துக்கு முன்பே யூதர்களிடையே தோன்றின என்பது கருதத்தக்கது. இவ்வளவு பழங்காலத்தில் இத்தகைய நூல்களைத் தோற்றுவித்த யூதர்களின் சமய அறிவும் பக்தியும் ஆழ்ந்த சிந்தனையும் வியக்கத்தக்கனவே. அக்காலத்தி-லேயே அரும் நூல்களை இயற்றி உலகுக்களித்த இவ்வினத்தவர் பிற்கால வரலாற்றில் பல துன்பங்களுக்கு ஆளானமை மிகவும் இரங்கத்தக்கதே. தற்காலத்தில் தாம் தூய திருநாடு எனக் கருதும் தம் தாயகத்திற்குத் திரும்பித் தமக்கென ஓர் நாட்டையும் அரசையும் உருவாக்கியிருக்கும் இம் மக்களின் வருங்காலம் வளமாக இருப்பதாக. அவர்கள் பிற இனத்தவருடனும் பிற நாட்டவருடனும் நல்லுறவு கண்டு தம் நல்லறிவினால்பிறர்க்கு நன்மைபயந்து தாமும் புகழ்பெறும் வரய்ப்பை யடைவார்களாக.

7

# நற்செய்தி நூல்கள்

## 7.1. கிருஸ்து பெருமான்

புதிய ஏற்பாட்டில் கிருஸ்து பெருமானின் வாழ்க்கை வரலாற்றையும் போதனைகளையும் கூறுவன நற்செய்தி நூல்களாகும். இவை புதிய ஏற்பாட்டில் முதற்கண் வைக்கப்பட்டுள்ளன. அடுத்து வரும் 'அப்போஸ்தலர்களின் செயல்கள்'(Acts of the Apostles) கிருஸ்துவின் காலத்தின்பின் அவர் சீடர்களும் அவரைப் பின்பற்றுவோரும் அவர் போதனைகளைப் பிறருக்குக் கற்பிக்க அது கிருஸ்தவ சமயமென ஒரு புதுச் சமயமாகி எருசலேம் நகரிலும் யூதர்களின் நாட்டிலுள்ள பல பகுதிகளிலும் பின்பு ரோமராட்சிக்குட்பட்ட பிறநாடுகளிலும் பரவியதையும் கூறும். அப்போஸ்தலர் என அழைக்கப்பட்ட ஆதிக் கிருஸ்தவத் தலைவர்களில் ஒருவராகிய பவுலும்வேறுசிலரும் பல்வேறு நகர்களில் சிறுசிறு கூட்டமாக வாழ்ந்த கிருஸ்தவர்கட்கு எழுதிய கடிதங்களும் புதிய ஏற்பாட்டில் சேர்க்கப்பட்டுள்ளன. புதிய ஏற்பாட்டின் இறுதியில் உள்ள 'வெளி' (Revelations) என்னும் நூல் வெளிப்பாட்டு நூல்களின் (Apocalyptic Literature) வகையைச் சேர்ந்ததாகும்.

முதல் மூன்று நற்செய்தி நூல்களிடையே, அவை கூறும் நிகழ்ச்சிகளிலும் அவற்றல் குறிக்கப்படும் கிருஸ்துவின் போதனைகள் கூற்-

னுக்கள் ஆகியவற்றிலும், சிற்சில வேறுபாடுகளிருப்பினும், அதிக ஒற்றுமை காணப்படுவதால் இவற்றைச் சமநோக்கு நற்செய்தி நூல்கள் (Synoptic Gospels) என்பர். யோவானின நற்செய்தி இவற்றினின்றும் ஓரளவு வேறுபட்டு விளங்குகிறது.

கிருஸ்து தாமே நூல்களெவற்றையும் எழுதவில்லை. நற்செய்தி நூல்கள் பிறராலேயே எழுதப்பட்டன. இவற்றை எழுதியவர் யார் எப்போது எழுதினார் என்பவற்றைக் குறித்து அறிஞர்கள் நெடுநாள் ஆய்ந்துள்ளனர். நற்செய்திநூல்கள் தற்போதுள்ள வடிவில் கிறிஸ்துவின் முக்கிய சீடராகிய பன்னிருவரில் எவராலும் எழுதப்படவில்லை யென்றே தோன்றும். ஆனால் அவர்களிற் சிலர் எழுதிய குறிப்புக்களை இந்நூல்களைத் தற்போதுள்ள வடிவில் எழுதியவர்கள் பயன்படுத்தியிருக்கலாமென்பர்.

பாபிலோனியராட்சியின் பின் பெர்சியராட்சிக்கும் அதன் பின் கிரேக்கராட்சிக்கும் உட்பட்டிருந்த யூதர் நாடு கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் கிரேக்கர்க்கு மாறாகக் கலகம் செய்து தன்னாட்சியை நிறுவிச் சிலகாலம் உரிமை பெற்ற நாடாக இருந்தது. ஆனால் அந்நிலை நீடிக்கவில்லை. கிருஸ்துவின் காலத்துக்குப் பல ஆண்டுகளின் முன்பே அக்காலத்தில் பாலத்தீனம் (Palestine) என அழைக்கப்பட்ட யூதர்நாடு ரோமராட்சிக்கு உட்பட்டது. நற்செய்தி நூல்களில் காட்டப்படும் காலம், அதாவது கிருஸ்து பெருமான் மண்ணுலகில் வாழ்ந்த காலம் ரோமராட்சிக் காலமே.

பழைய ஏற்பாட்டின் காலத்திலேயே தீர்க்கதரிசிகள் பலர் பிற்காலத்தில் யூதர்களிடையே ஒரு நல்லரசன் தோன்றுவான் எனவும் அவன் ஆட்சிக்காலம் பொற்காலமாக இருக்குமெனவும் அவன் இறைவனின் ஆட்சியை உலகில் நிறுவுவான் எனவும் கூறிச் சென்றது முன்பே குறிப்பிடப்பட்டது. துதிப்பாடல்களில் சிலவும் அப்பேரரசனைக் குறித்துக் கூறுவதாகப் பிற்காலத்தோர் பொருள் கொண்டனர் (துதிப்பாடல்கள் பார்க்க). முன்பு யூதர்களிடையே அரசர்கள் இருந்த காலத்தில் ஓரரசன் ஆட்சிக்கு வரும்போது அவன் கடவுளால் அரசனாக நியமிக்கப்பட்டவன் என்பதற்கு அடையாளமாகச் சிறந்த நறுமணத்தைலத்தை அவன் தலையிலிடுவது வழக்கமாக இருந்தது. அவ்வழக்கிற்கு ஏற்ப வரப்போகும் பேரரசனையும் அவர்கள் 'தைலமிடப்பட்டவன்' (Anointed) எனப் பொருள்படும் மெசாயா (Messiah)

என்னும் சொல்லால் குறிப்பிட்டனர். கிருஸ்து பிறந்த காலத்தில் மெசாயா விரைவில் தோன்றுவார் என எதிர்பார்க்கும் ஒருநிலை யூதர்களிடையே காணப்பட்டது. மெசாயா வருவதன் முன் ஒரு தீர்க்க-தரிசி தோன்றி அவர் வருகைக்காக மக்களை ஆயத்தப்படுத்துவார் எனவும் சிலர் கருதினர். மெசாயா பேரரசனாக விளங்குவார், கட-வுளின் ஆட்சியை உலகில் நிறுவுவார், கடவுளைக் குறித்து மக்-கட்குக் கற்பிப்பார், கடவுளின் இயல்பைத் தம் வாழ்க்கையின் மூலம் வெளிப்படுத்துவார் எனப் பல திறப்பட்ட கருத்துக்கள் அம்மெசாயா-வைக் குறித்து அக்காலமக்களிடையே நிலவின. நெடுங்காலம் அந்-நிய ஆட்சியின் கீழ்இருந்து அலுப்புற்ற யூதர்கள் வரப்போகும் மெசாயா தம் நாட்டிற்கு அரசியல் விடுதலை பெற்றுத் தருவார் எனவும் எதிர் பார்த்தனர். அது இயல்பே. ஆனால் தம்மை மெசாயா எனக் கருதிய கிருஸ்து தம் பணியைக் குறித்து இக்கருத்தை மேற்-கொள்ளாது இரண்டாம் ஏசாயாவால் கூறப்பட்ட 'யாவேயின் ஊழியனு'டைய இலக்கணத்தையே தமக்குரியதாக ஏற்றுக்கொண்-டார் என்பது அவர் வாழ்க்கையினின்றும் புலப்படும்.

பழைய ஏற்பாட்டின் காலத்திற்கும் புதிய ஏற்பாட்டின் காலத்-திற்கும் இடையே தோன்றிய வெளிப்பாட்டிலக்கியங்கள் முன்பே குறிப்பிடப்பட்டன (தீர்க்கதரிசிகள், தானியேல் பார்க்க) இவ்விலக்-கியங்களில் காணப்பட்ட கருத்துக்களும் கிருஸ்துவின் காலத்து யூதர்-களிடையே பரவியிருந்தன. உலக வரலாற்றின் இறுதியில் கடவுள் மக்களனைவரையும் நியாயம் தீர்த்துஏற்ற தண்டனையையோ நலத்-தையோ அளிப்பார் என்பது இவற்றில் காணப்படும் கருத்தாகும். அத்தகைய இறுதித்தீர்ப்பு விரைவில் வருமெனவும் அக்காலத்துச் சிலர் கருதினர்.

கிருஸ்துவின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் நற்செய்திநூல்களில்கூறப்-படுகின்றன. அவற்றை இங்கு விரிவாகக் கூறவேண்டுவதின்று. அவர் பெத்தலகேம் என்னும் நகரில் பிறந்ததாகவும் நாசரேத்து என்னும் ஊரில் வளர்ந்ததாகவும் கூறப்படுகிறது. அவர் பெற்றோர் அவருடன் பெத்தலகேமிலிருந்து எகிப்து சென்று அங்குச் சிலகாலம் கழிந்த பின்பே நாசரேத்தில் வந்து வசித்தனர் என 'மத்தேயு' கூறும். லூக்காவின் நூல் கிருஸ்து சிறுகுழந்தையாக இருந்தபோது பெற்-றோர் அவரை ஆலயத்திற்குக் கொண்டு சென்றனர் என்றும் அங்குச் சிமியோன் அன்னாள் என்ற பக்தி நிறைந்த முதியோர் இருவர் அக் குழந்தை பிற்காலத்து அடையப்போகும் சிறப்பை உள்ளுணர்வினால்

உணர்ந்துகூறிக் கடவுளைத் துதித்தனர் எனவும் கூறும். இவ்விரு நூல்களிற் கூறப்பட்ட நிகழ்ச்சிகளும் உண்மையாயின் எகிப்திற்குச் செல்லுமுன்பே அவர்கள் எருசலேம் ஆலயத்திற்குச் சென்றிருத்தல் வேண்டும். பெத்தலகேம் எருசலேம் நகருக்கு அருகிலுள்ள நகரே-யாகும்.

முழுக்குப் பெற்றபின் கிருஸ்து யோர்தான் நதிக்கருகிலிருந்த பாலைநிலத்தினுட் சென்று நாற்பது நாட்கள் தனித்திருந்து உண்-ணாது நோற்றார் எனச் சமநோக்கு நற்செய்தி நூல்கள் கூறும். நோன்பின் இறுதியில் சாத்தானால் அவருக்கு ஏற்பட்ட சோதனை-யைக்குறித்து மத்தேயு, லூக்கா என்னும் இரு நூல்களும் கூறுகின்-றன. (மத் 4. 3. 10 லூக் 4. 3 - 12) சாத்தான் அவரை மூன்று முறை தன் வழிக்கு வருமாறு தூண்டுகிறான். மூன்று முறையும் அவர் மறுத்துரைக்கிறார். கல்லை உணவாக மாற்றி உண்ணுமாறும் ஆலயத்தின் மேலிருந்து கீழே குதிக்குமாறும் தன்னைப் பணிவதன் மூலம் உலகிலுள்ள அனைத்து நாடுகளின் ஆட்சியைப் பெறுமாறும் வேண்டுகிறான். உணவைவிட இறைவன் வாக்கே ஊட்டமாவது என்றும் இறைவனை அம்முறையில் ஆராய்தலாகாது என்றும் இறைவன் ஒருவரையே வணங்கவேண்டுமென்றும் மறுப்புக் கூறப்-படுகிறது. இக்கதை கிருஸ்துவின் உள்ளத்தில் நிகழ்ந்த போராட்-டத்தையே குறிக்குமென்பர். நோன்பின் இறுதியில் தன்னிடமிருந்த அதீதமான ஆற்றலை யுணர்ந்த அவர் அதைத் தமக்கோ பிறர்க்-கோ உணவு முதலிய உலக நன்மைகளைப் பெறப் பயன்படுத்த-லாமா, வியப்பூட்டும் செயல்களைச் செய்து மக்கள் உள்ளத்தைக் கவரலாமா பல நாடுகளை வென்று பேரரசனாகி அம்முறையில் இறையாட்சியை உலகில் நிறுவலாமா எனச் சிந்தித்து இவை-யனைத்தும் தமக்கேற்ற வழிகளாகா என நீக்கினார் என்றே பொருள் கொள்வர்.

கிருஸ்து தம் சீடர்களோடும் பல இடங்கட்குச் சென்று தம் சமயப் போதனைகளைக் கற்பித்துப் பணி புரிந்த காலத்தில் உடல் நோயினாலும் மனநோயினாலும் துன்புற்ற பலரைக் குணமாக்கிய-துடன் மற்றும் பல இயற்கை யிறந்த செயல்களைச் செய்ததாகவும் நான்கு நற்செய்தி நூல்களும் கூறுகின்றன. தொழுநோயாளர்-களைக் குணமாக்கியும் முடக்குநோயினால் பிடிக்கப்பட்டுப் படுக்கை யிலிருந்தோரை எழுந்து நடக்கும்படி செய்தும் சூம்பின கையை-யுடைய ஒருவனைக் கண்ட போது அவன் கையை நேராகும்படி

செய்தும், குருடர்கள் பார்வை பெறவும் செவிடர்கள் செவியால் கேட்கும் ஆற்றல் பெறவும் ஊமையர் பேசவும் செய்தும் மற்றும் பல பிணியாளர்களைப் பிணி தீர்த்ததாகவும் நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன. அசுத்த ஆவியினால் பீடிக்கப்பட்ட பலரையும் கிருஸ்து குணமாக்கினார் என இந்நூல்கள் கூறும். இவ்வாறு கூறப்படும் நிகழ்ச்சிகளைப் படிக்கும் போது பலவகை மனநோயினால் அல்லது நரம்பு நோயினால் துன்புற்றவர்களையே அக்காலத்தில் சுத்த ஆவியினால் பீடிக்கப்பட்டவர்களாகக் கருதினர் எனத் தோன்றும். யாராலும் அடக்க முடியாதவனாய்ச் சங்கிலிகளையும் விலங்கு-களையும் தகர்த்தெறிந்துவிட்டுத் தனியே கல்லறைகளிடையே வசித்து இரவும் பகலும் கூக்குரலிட்டுக் கொண்டும் கற்களால் தானே தன்னைக் காயப்படுத்திக் கொண்டும் இருந்த ஒருவனைக் கதரேனருடைய நாட்டில் கிருஸ்து கண்டார் எனக் கூறப்படுகிறது. இப்புனைந்துரை கடும் மன நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவன் நிலையையே காட்டும். அவன் சிறிது நேரத்தில் குணமடைந்து நல்லறிவு பெற்றவனாய்க் கிருஸ்து தனக்கு இரங்கிச் செய்த இந்-நன்மையைத் தன் இனத்தாரிடம் கூறுமாறு நன்றியுடன் திரும்பிச் சென்றான் எனவும் நற்செய்தி நூல்களை எழுதியோர் கூறுகின்ற-னர் (மார். 5-1-20) மற்றொருமுறை ஒரு தந்தை அசுத்த ஆவி-யினால் பீடிக்கப்பட்ட தன் மகனைக் கிருஸ்துவிடம் அழைத்து வந்து பின் வருமாறு கூறினான். ''அது அவனை எங்கே பிடித்தாலும் அங்கே அவனை அலைக்கழிக்கிறது. அப்பொழுது அவன் நுரை தள்ளிப் பல்லைக் கடித்துச் சோர்ந்து போகிறான்'' (மார். 9. 18). இப்புனைந்துரை நோயாளி ஒருவனை வலிப்பு நோயினால் துன்-புற்றான் என்பதைக் காட்டும். அவனையும் அவர் குணமாக்கினார். இவ்வாறு பல நோயாளர்க்கு உடல் நலத்தையும் மன ஆரோக்கி-யத்தையும் அளித்தார் என நற்செய்தி நூல்கள் கூறுகின்றன.

நற்செய்தி நூல்கள் ஒருபால் கிருஸ்துவை இவ்வாறு தெய்வத் தன்மையுடையவராகக் காட்டினும் மற்றொருபால் அவரை மிக மானிடத் தன்மையுடையவராகவும் அது மட்டுமன்றிப் பணிவும் தாழ்மையும் உடையவராகவும் காட்டுகின்றன. அவர் பெற்றிருந்த-தாகக் கூறப்படும் அதீத ஆற்றலை அவர் எக்காலும் தம் நன்மைக்காகவோ தம் தேவைகளைப் பெறுவதற்காகவோ அன்றிப் புகழுக்காகவோ பயன்படுத்தியதாகக் கூறப்படவில்லை. பன்முறை தாம் செய்த நற்செயல்களைப் பிறர் அறியாதவாறு செய்ய முயன்றார். நோயாளிகளைக் குணமாக்கிய போதும் பிறரிடம் சொல்ல வேண்டாம் எனப் பணித்தார்.

தம்மை எதிர்த்த பரிசேயரும பிறரும் அவரே வரப்போகும் மெசாயா-வாக இருப்பின் அதை ஓர் அடையாளத்தால் விளக்கி நிறுவ வேண்டுமெனக் கேட்டபோது மறுத்தார். மக்கள் அளித்த உணவையே உண்டார். அன்பரில்லங்களில் தங்கினார். நண்பர்களின் படகில் ஏறிச் சென்றார். பல இடங்களிலும் நடந்து திரிந்தார். சமேரியாவில் வழி நடந்ததனால் களைப்புற்று ஒரு கிணற்றருகில் அமர்ந்துதண்ணீர் எடுக்க வந்த மாதிடம் தாகத்திற்குக் குடிக்கத் தண்ணீர் தரும்படி கேட்டார். 'பறவைகட்குக் கூடுகளும் நரிகட்குத் தங்கக் குகைகளும் உள்ளன. எனக்கோ தலைசாய்க்க இடமில்லை' எனவும் 'நான் பணி செய்யப்படுவதற்கன்றிப் பணி செய்வதற்காகவும் பலரை மீட்கும் பொருளாக என உயிரை அளிப்பதற்காகவும் வந்தேன்' எனவும் கூறினார்.

கிருஸ்துவின் வாழ்க்கையில் காணப்பட்ட மற்றொரு இயல்பு அவர் சமூகத்தில் தாழ்ந்த நிலையிலுள்ளோர், துன்புற்றோர், பிறரால் இகழப்பட்டோர் ஒதுக்கப்பட்டோர் ஆகியோரை என்றும் ஆதரித்து அத்தகையோரிடம் நட்புக் கொண்டு உறவாடியதாகும். பாவிகள் எனப் பரிசேயரால் கருதப்பட்ட பலருடன் கிருஸ்து நட்பு முறையில் பழகினார்.

யூதநாட்டில் செல்வாக்கு மிகுந்தோர் கிருஸ்துவின்பேரில் பகை கொண்டனர். கலிலேயாவிலோ எருசலேம் நகரிலோ இரு இடங்-களிலுமோ பகை தோன்றி வளர்ந்தது. இதற்குப் பல காரணங்கள் நற்செய்திநூல்களில் காணப்படுகின்றன. கிருஸ்து சமூகத்தில் பிறரால் ஒதுக்கப்பட்டோரிடத்து நட்புக் கொண்டொழுகியதைப் பரிசேயரும் வேதபாரகரும் விரும்பவில்லையென்பது முன்பே குறிப்பிடப்பட்டது. 'பாருங்கள்,இவர் பாவிகளை யேற்றுக் கொண்டு அவர்களோடுஉணவு உண்கிறார்' என அவர்கள் குறை கூறினர். ஆசாரியார்களும பரிசேயரும் வேதபாரகரும் ஓய்வு நாளை ஆதரிப்பதையும்மிக முக்கிய-மாகக் கருதினர். வாரத்தில் ஒரு நாளை ஓய்வுநாளாகக் கொள்வது சமூகத்திற்கு நன்மையே. கடுமையாக வேலை செய்து உழைக்கும் பலருக்கு அதனால் வாரத்தில் ஒரு நாள் ஓய்வு பெற்று அந்நாளை மகிழ்ச்சியாகக் கழிக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. ஆனால் அதையே கடும் விதியாகக் கொண்டு ஓய்வு நாளில் இவ்வளவு தூரத்துக்கு மேல் நடத்தலாகாது இவ்வளவு எடைக்கு அதிகமான எடையுள்ள பொருளைத் தூக்குதலாகாது என உபவிதிகளையும் ஏற்படுத்தினால் ஓய்வுக்குப் பதில் இவ்விதிகளை நினைவிற்கொண்டு கைக்கொள்ளு-

வதே ஒரு சுவையாகத் தோன்றும். இத்தகைய நிலையே கிருஸ்துவின் காலத்திலிருந்தது. கிருஸ்து ஓய்வு நாளில் நோயாளிகளைக் குணமாக்கு வதைப் பரிசேயரும் வேதபாரகரும் எதிர்த்தனர் என நற்செய்தி நூலகளில் பன்முறை கூறப்படுகிறது. ஒருமுறை ஓய்வுநாளில் அவர் சீடர்கள் சிலர் சிலகதிர்களைப் பறித்து அவற்றிலிருந்து தானியத்தை உண்டதைக் கூடப் பரிசேயர் ஓய்வுநாளை மீறியதாகக் கருதினர் என மார்க்கு கூறுகிறார் (2.23-28) உணவருந்துவதற்கு முன் கைகழுவுதல் உண்கலத்தை சுத்திகரித்தல் முதலிய விதிகளைக் கடைப்பிடிக்-காததைக் குறித்தும் கிருஸ்துவும் சீடர்களும் குறை கூறப்பட்டனர். கிருஸ்து சில சமயங்களில் ஒரு நோயாளியைக் குணமாக்கியபோது 'உன் பாவங்கள் உனக்குமன்னிக்கப்பட்டன' என்று கூறியதை வேத பாரகர்தவறாகக்கொண்டனர். கடவுள் ஒருவரேபாவங்களை மன்னிக்க வல்லவர் எனவும் மனிதராகிய கிருஸ்து பிறரை நோக்கி 'உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன' எனக் கூறுவது கடவுளை அவமதிப்-பதாகும் எனவும் கருதினர். பரிசேயரும் திருமுழுக்களித்த துறவி யோவானின் சீடரும் சிலநாட்களில் உணவுண்ணாது நோன்பு மேற்-கொள்வது வழக்கமாக இருக்கக் கிருஸ்துவின் சீடர் அவ்வாறு செய்ய-வில்லை எனவும் குறை கூறப்பட்டது.

இயேசு கிருஸ்து கற்பித்த நீதிகள் அவர் சொற்களில் மட்டு-மின்றி அவர் வாழ்க்கையிலும் காணப்படுவதனாலேயே இங்கு வாழ்க் கையை முதற்கண் கூற நேர்ந்தது. அவர் வாழ்க்கை முழுவதிலும் தன்னலமற்ற அன்பும் பணிபுரியும் மனப்பான்மையுமே காணப்-பட்டன. பரிசேயர் முதலியோர் செய்து வந்த குற்றங்களை எடுத்துக் கூறித் திருத்த முயன்றாரேயன்றி அவர்களிடத்தும் அருளே கொண் டார். சிறைப்படும்முன் கடைசியிரவிலும் தாம் விரைவில் கைது செய்யப்படப்போவதையும் கொலைத் தண்டனையளிக்கப்படப் போ-வதையும் உணர்ந்திருந்தாராயினும் அந்நிலையிலும் சீடர்களின்பாதங் களைக் கழுவியும் உணவை ஆசி கூறிப் பகிர்ந்தளித்தும் அன்புப்பணி-யிலேயே ஈடுபட்டார். தம்மைப் பிரிந்து வருந்தப்போகும் சீடர்களின் நிலையை எண்ணி ஆறுதல் கூறினார். அவர்கட்காகப் பிரார்த்தித்-தார். சிலுவையிலறையப்பட்டபோதும் தம்மைத் துன்புறுத்தியவர் களின் நலனுக்காகவே இறைவனிடம் வேண்டினார். தன்னுடன் சிலுவையிலறையப்பட்ட கள்வர் தலைவன்மேல் அருளுடையராகி அவன் நற்கதி பெறுவானெனக்கூறினார். கிருஸ்துவைத் தேவகுமார-னெனக் கருதுவோர் அவர் 'தாகமாயிருக்கிறேன்' எனக் கூறியபோதும்

அது தண்ணீர் மேல் உள்ள தாகம் மட்டுமன்று (குருதியை இழந்த தனால் அவர் உண்மையில் தாகத்தினாலும் வருந்தியிருத்தல் வேண்டும்.) தம்மை வெறுத்து நிராகரித்த மக்கள் குலத்தின் அன்பைப் பெறுவதற்கே வேட்கையுற்றார், மக்களை பாவத்தினின்று மீட்டு இறைவனருளில் கூட்டவே ஆவலானார் எனப் பொருள் கொள்வர்.

இவ்வாறு வாழ்ந்து இறந்த கிருஸ்து,
அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு (72)

என்ற குறளுக்கு இலக்கியமானார். கிருஸ்துவின் வாழ்விலும் சாவிலும் காணப்பட்ட அன்பு அவர் காலத்திலிருந்து தற்காலம் வரையிலும் பல கவிஞர்கள், எழுத்தாளர்கள், ஓவியர்கள், சிற்பவல்லுனர்கள் முதலி-யோரின் திறமைக்குப் பொருளாயிற்று. நம் நாட்டிலும், 'அவர் காலத்தில் வாழ்ந்திருந்தால் அவர் பாதங்களை நானும் என் கண்-ணீரினால் கழுவியிருப்பேன், அன்றி என் இதயத்தின் குருதியையும் அளித்திருப்பேன்' என சுவாமி விவேகானந்தரைக் கூறச்செய்ததும்[1] திரு. வி. கலயாணசுந்தர முதலியாரைக் 'கிருஸ்துவின் அருள் வேட்டல்' பாடச் செய்ததும் கிருஸ்து பெருமான் மக்கள் குலத்தில் வைத்த மட்டற்ற அன்பே யாகும்.

வெள்ளிக் கிழமை மாலை கிருஸ்து இறந்தார். அடக்கம் பண்ணப்பட்டார். அக்கால யூதர்கள் வழக்கப்படி அவர் உடலைத் துணிகளில் சுற்றி ஒரு கல்லறையில், அதாவது ஒரு குன்றின் சாரலில் குடையப்பட்ட குகையில் வைத்துக் குகையின் வாசலை ஒரு பெரிய கல்லினால் மூடினார்கள். மூன்றாம் நாள் ஞாயிறன்று காலை அவர் உயிர்த்தெழுந்ததாகவும் உயிர்த்தெழுந்த கிருஸ்துவைச் சீடர்கள் கண்டதாகவும் நற்செய்தி நூல்கள் கூறுகின்றன. கிருஸ்து உயிர்த் தெழுந்ததைப் பற்றிய குறிப்பு நற்செய்தி நூல்களில் மட்டுமன்றிப் பவுலின் கடிதங்களிலும் காணப்படுகிறது. தூயர் பவுல் தாம் கொரிந்தியருக்கெழுதிய முதலாவது கடிதத்தில்,

"கிருஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்-களுக்காக மரித்து,

---

1. Roland, Romain, The Life of Swami Vivekananda and the Universal Gospel, Published by Adwiata Ashram, Almora Himalayas (1944) P. 110

அடக்கம் பண்ணப்பட்டு வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து,

கேபாவுக்கும் பன்னிருவருக்கும் தரிசனமானார்.

அதன் பின்பு ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில் தரிசனமானார், அவர்களில் அநேகர் இந்நாள் வரைக்கும் இருக்கிறார்கள், சிலர் மாத்திரம் நித்திரை யடைந்தார்கள்.

பின்பு யாக்கோபுக்கும் அதன் பின்பு அப்போஸ்தலரெல்லாருக்கும் தரிசனமானார்.

எல்லாருக்கும் பின்பு அகாலப்பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார்'' (1.கொரி.15.3-8) என உயிர்த்தெழுந்த நிகழ்ச்சிகளைக் கூறினார். (இங்குக் கேபா என்னும் சொல் பேதுருவைக் குறிக்கும். யாக்கோபு கிருஸ்துவின் சகோதரர். ஆதிக் கிருஸ்தவத் தலைவர்களில் ஒருவர்) நான்கு நற்செய்தி நூல்களிலும் இறுதி அதிகாரங்கள் உயிர்த்தெழுந்த செய்தியைக் கூறும்.

கிருஸ்துவால் செய்யப்பட்டதாகக் கூறப்படும் இயற்கையிறந்த நிகழ்ச்சிகளைப் போலவே இவ்வுயிர்த் தெழுதலும் பல அறிஞர்களால் பலவாறு ஆராயப்படுகிறது. சீடர்களும் பிறரும் கிருஸ்துவை. அவர் இறந்தபின் கண்டனரா, எவ்வடிவில் கண்டனர். வெளியில் கண்டனரா தம்முள்ளத்தில் கண்டனரா, அது கற்பனையா உருவெளித் தோற்றமா என்றெல்லாம் அந்நிகழ்ச்சிகள் மலவாறு ஆராயப்படுகின்றன. பவுலும் நற்செய்தி நூல்களை எழுதியோரும் கிருஸ்து உயிர்த்தெழுந்தார் எனவும் பலருக்குக் காட்சி யளித்தார் எனவும் நம்பினர் என்பதைத் தவிரப் பிறிதொன்றும் ஆராய்ச்சியினால் நிறுவப்படக் கூடியதன்று.

நீதிக் கருத்துக்களை ஆராயும் இந்நூலில் குறிப்பிடத்தக்கது, கிருஸ்து பெருமானின் வாழ்க்கையில் காணப்பட்ட அதே தன்னலமற்ற அன்பும் மன்னித்தருளும் மனப்பான்மையும் தற்பெருமையற்ற தாழ்மையுமே இவ்வுயிர்த்தெழுந்த நிகழ்ச்சிகளைக்கூறும் கதைகளிலும கிருஸ்துவின் இயல்பாகக் காணப்படுகின்றன என்பதொன்றே. ஞாயிறன்று காலை சில மாதர்களைக் கண்டு 'வாழ்க' என வாழ்த்திய அருளும் (மத்.28) எம்மாவு என்னும் ஊருக்குச் சென்று கொண்டிருந்த இரு நண்பர்களையணுகிப் பழைய ஏற்பாட்டின் சில பகுதி

களையும் அவற்றின் மூலம் தம் மரணத்தின் பொருளையும் விளக்கிக் கூறி அவர்களுடன் அவர்களில்லத்திற்குச் சென்று அப்பத்தை ஆசி கூறிப் பிட்டு அளித்த ஆசிரியத் தன்மையும் அன்புப்பணியும் (லூக். 24) கலிலேயாக் கடற்கரையில் நின்று, கடலில் மீன் பிடித்துக் காலையில் கரையணுகிக் கொண்டிருந்த சீடர்களைக் 'காலையுண-வருந்த வாருங்கள்' என அழைத்து அப்பத்தையும் மீனையும் அவர் களுக்கு அளித்துத் தன்மை மும்முறை மறுத்துரைத்த பேதுருவை நோக்கி, 'நீ என்னிடத்தில் அன்பு கூறுகிறாயா, அவ்வாறாயின் என் ஆடுகட்கு உணவளித்துக் காப்பாற்று' எனக் கூறிப் பேதுரு இழந்த தன்னம்பிக்கையை மீண்டும் பெறச் செய்து அவரை மறுபடியும் சீடர் கூட்டத்தின் தலைவராக்கிய திறனும் கிருஸ்துவின் குணநலங்களோடு முற்றும பொருந்துவனவே. (யோ. 21).

கிருஸ்து நூல்களெவற்றையும் எழுதவில்லை. குறிப்புகளெவற்-றையும் எழுதி வைக்கவும் இல்லை. சீடர்க்கும் பிறர்க்கும் கற்பித்தார். தம்மால் கற்பிக்கப்பட்டவர்கள் தம் போதனைகளைக் காப்பாற்றிப் பிறர்க்கும் கற்பிப்பர் என நம்பினார்.

சமநோக்கு நற்செய்தி நூல்களில் காணப்படும் போதனைகளை நோக்கும்போது இறையாட்சி (The Kingdom of God) விரைவில் வருகிறது. மனந்திரும்பி அதில் சேரமுந்துங்கள் என்பதே அவர் கூறிய முக்கிய செய்தியாகத் தோன்றுகிறது. தந்தை போன்ற அன்புள்ள கடவுளே உலகிற்குத் தலைவராவர். ஆயினும் மக்கள் அவர் ஆணை வழி நில்லாது மீறி நடந்து பாவத்துக்குள்ளாயினர். மக்களைத் தம்-மிடம் திரும்புமாறும் தம் ஆணையை ஏற்று நடக்குமாறும் அவர் அழைக்கிறார். அவ்வாறு செய்வோர் உள்ளத்தில் சாந்தியையும் உண்மை மகிழ்ச்சியையும் அடைவர். மறுமையிலும் நலமடைவர் எனக் கற்பித்தார். 'தேவனுடைய ஆட்சியையும் அவர் நீதியையும் தேடுங்கள். மற்றதெல்லாம் உங்கட்குக் கூடவே கொடுக்கப்படும்' என்றார்.

கிருஸ்து பக்திக் கவிஞர்களைப் போல உணர்ச்சி வசப்பட்டுக் கவி பாடவில்லை. தத்துவ அறிஞர்களைப் போலக் காணப்பட்ட உலகைக் கொண்டு காணப்படாத கடவுள் ஒருவர் உளர் என அறிய-லாம் என்றெல்லாம் தர்க்கமுறையில் தம் கடவுட் கொள்கையை நிறுவ முயலவுமில்லை. மகன் தந்தையைக்குறித்துப் பேசுவது போன்ற

அன்புடனும் உரிமையுடனும் பேசினார் இதையே நம் நாட்டில் தற்காலத்தில் வாழ்ந்த திரு வி கல்யாண சுந்தர முதலியாரும்,

நன்றாக இறைஉறுதி எளிமைவழி நவின்றாய்
ஞானமென்று கடபடம் நீ நாட்டவில்லை யையா

(கிருஸ்துவின் அருள் வேட்டல் 4 . 3)

எனப் பாடினார்.

இறையாட்சியைக் குறித்துக் கூறிய கிருஸ்து அதில் புகுபவர் எத்தகையவராயிருத்தல் வேண்டும் என்பதையே மலைப் பொழிவில் கூறினார். சாந்தகுணமுள்ளவர்களும், நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்களும், இரக்கமுடையோரும், உள்ளத்தில் தூய்மையுடையோரும் மக்களிடையே நல்லுறவை ஏற்படுத்த முனைபவர்களும் இறைவனைக் காண்பர். இறையருளைப் பெறுவர் இறைவனின் மக்களென அழைக்கப்படுவர். நீதியை நாடுபவர்கள் நீதிக்காக எல்லாத்துன்பங்களையும் தாங்கவும் ஆயத்தமாக இருத்தல் வேண்டும். இறைவனாணை வழி நடப்போர் கொலை முதலிய குற்றங்களைச் செய்யாதிருப்பது மட்டுமின்றி உள்ளத்தில் சினமில்லாதவர்களாய் வாழ்க்கையில் ஒழுக்கத்தைக் காப்பது மட்டுமின்றி உள்ளத்தில் முறையற்ற காம உணர்ச்சியையே எழவிடாதவர்களாய் எப்போதும் வாய்மையையே மொழிபவர்களாய், பேசுவதெல்லாம் உண்மையாகவேயிருப்பதனால் எதன் மேலும் ஆணை (Oath) யிடாதவர்களாய் இருத்தல் வேண்டும். தீமைக்குப் பதில் தீமை செய்தலாகாது ஒரு கன்னத்திலறைந்தவனுக்கு மறுகன்னத்தைக் காட்ட வேண்டும். அங்கியைத் தரும்படி வழக்காடுபவனுக்குப் போர்வையையும் அளித்தல் வேண்டும். ஒரு கல் தூரம் தன்னுடன் வரும்படி வற்புறுத்துபவனுடன் இரண்டு கல் தூரம் நடத்தல் வேண்டும்.[2] பகைவரிடம் அன்புகூருதல் வேண்டும். மிக்க துன்பத்தைச் செய்பவர் சார்பாகக் கடவுளிடம் வேண்டுதல் செய்தல் பொருந்தும்; ஏனெனில் கடவுள் நல்லவர்கள் மேலும் தீய-

---

2 இது ரோமராட்சியில் இருந்த ஒரு சட்டத்தை அல்லது வழக்கத்தைக் குறிக்கும். அக்காலத்தில் போர் வீரர்கள் குடிமக்களைக் கட்டாயப்படுத்தி ஓரளவு வேலை செய்வித்துக் கொள்ளலாம் என்னும் முறைமையிருந்தது. ஒரு போர்வீரன் தான் எடுத்துச் செல்லும் தன் உடை முதலிய பொருட்களை ஒரு கல் தூரம் சுமந்து வரும்படி ஒரு குடிமகனைக் கட்டாயப்படுத்தல் கூடும். அப்படி ஒருவன் உன்னைக் கட்டாயப்படுத்தி உன்னை ஒரு கல் தூரம் தன் பொருளைச் சுமந்து தரும்படி செய்தால் அவனுக்கு உதவி செய்து அவன் அன்பைப் பெறும் பொருட்டு இரண்டு கல் தூரம் அவனுடன் போ என்பதே பொருளாகும்

வர்கள் மேலும் சூரியனின் ஒளிபடச் செய்கிறார்; நீதியுள்ளவர்கள் மேலும் நீதியற்றவர்கள் மேலும் மழையைப் பொழிகிறார். (மத்.5)

அறத்தையும் வழிபாட்டையும் நோன்பையும் பிறர் பார்ப்பதற்காகச் செய்தலாகாது. பிறர் அறியாதவாறு செய்வதே சிறப்பு.

இறைவனருள்வழி ஒழுகுவோர் உலகில் செல்வத்தைச் சேர்த்துவைக்க முயலார். அவர்கள் விண்ணுலகிலேயே (Heaven) செல்வத்தைச் சேர்த்துக்கொள்ள முயல்வர். எதை உண்போம் எதைக்குடிப்போம் எதையணிந்து கொள்வோம் என அவர்கள் கவலையுற வேண்டுவதில்லை. ஏனெனில் விதைக்காமலும் அறுக்காமலும் களஞ்சியத்தில் தானியத்தைச் சேர்க்காமலும் வாழ்கின்ற வானத்துப் பறவைகட்கும் கடவுள் உணவையளிக்கிறார். வயலில் மலரும் பூக்களுக்கும் சாலோமோனும் அறியாத வண்ண ஆடைகளை அணிவிக்கிறார்.

(மத்-6)

மக்கள் பிறரைக் குற்றம் கூறுதலும் நியாயம் தீர்க்க முயலுதலும் ஆகா. பிறரை நியாயந்தீர்க்க முயலாதிருப்பின் கடவுளும் நம்மை நியாயம் தீர்க்காதிருப்பார். பிறரைக் குறை சொல்லும் போது அதைவிடப் பெரிய குற்றம் நம்மிடம் இருக்கிறதா என ஆராய்தல் வேண்டும் தம் குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காண்கிற் பின் அது ஒருவாறு பொருந்தும். ஆயினும் தகுதியற்றோர் பால் நல்லுரைகளைக் கூறி அவர் சினத்துக்கு ஆளாகாதவாறு எச்சரிக்கையாகவும் இருத்தல் வேண்டும்.

கடவுள் மக்கள் வேண்டுகோள்களைக் கேட்டு அருள் செய்பவராகிறார். கேட்பவனுக்குக் கொடுக்கப்படும்; தேடுகின்றவன் கண்டடைவான்; தட்டியவனுக்குக் கதவு திறக்கப்படும். மண்ணுலகத்தில் எத்தந்தையாவது அப்பத்தைக் கேட்ட மகனுக்குக் கல்லையும் மீனை வேண்டிய மகனுக்குப் பாம்பையும் அளிப்பானா? மண்ணுலகிலுள்ள மக்களே தங்கள் புதல்வர்கட்கு நல்ல பொருள்களைக் கொடுக்க வல்லவர்களாயிருக்கும் போது விண்ணுலகத் தந்தையாகிய கடவுள் தம்மிடம் வேண்டுபவர்கட்கு நல்லனவற்றையே தருவார் என்பது உறுதியல்லவா?

கிருஸ்துவின் சொற்களைக்கேட்டு அதன்படி நடப்பவன் கல்லின் மேல் வீட்டைக் கட்டியவனைப் போலிருக்கிறான். அதன்படி நடவாதவனோ மணலின் மேல் வீட்டைக் கட்டியவனைப் போலிருக்கிறான்.

பெருமழை பெய்து வெள்ளம் திரளும் போது மணலின் மேல் கட்டப்-பட்ட வீடு விழும். கற்பாறையின் மேல் கட்டப்பட்ட வீடோ நிலைத்-திருக்கும் (மத் 7).

இறையாணையை யேற்று நடப்பவர்கள் உலகில் உப்பைப் போலிருக்கின்றனர். ஆனால் அவர் தம் சுவையை இழந்துவிடல் ஆகாது. இழந்து விடில் என்ன பயன்? அவர்கள் உலகிற்கு ஒளியா-கவும் இருக்கின்றனர். அவர்கள் தங்கள் நற்செயல்களால் உலகுக்கு ஒளிநல்க வேண்டும். அவர்கள் நற்செயல்களைக் கண்டு பிறர் கடவு-ளைப் புகழ்தல் வேண்டும். (மத் 5)

சமநோக்கு நற்செய்தி நூல்கள் இடையிடையே கிருஸ்துவின் தெய்வத் தன்மையைக் காட்ட யோவானின் நூலோ முழுவதும் அதையே கூறுகிறது. கடவுளோடு ஒரு தன்மையுடையவரும் உலகத்தின் தொடக்கத்திற்கு முன்பே அநாதியாகவே கடவுளுடன் உறைபவரும் கடவுளுடன் ஒன்றாகக்கருதப்படத்தக்கவரும் கடவுளின் திருவார்த்தை அல்லது எண்ணமாக விளங்குபவருமாகிய தேவ-குமாரனே கிருஸ்துவாக இவ்வுலகில் வந்து தோன்றினார் என்பது இந்நற்செய்தியாசிரியரின் கருத்து (யோவான் 1 1-5). இந்நூலில் கிருஸ்து தாமே தம்மைத் தேவகுமாரனெனவும் கடவுளோடு ஒரு தன்மையுடையவரெனவும் கடவுள் செய்வதையே செய்பவர் எனவும் மற்றும் பலவகையாகவும் கடவுளுக்கும் தமக்குமிடையே உள்ள சிறப்பான உறவைக் குறித்துக் கற்பித்ததாகவும் கூறப்படுகிறது (யோ.5). மற்றும் 'நானே வாசல்' (யோ. 10. 9) 'நானே நல்ல மேய்ப்பன்' (யோ. 11. 25)'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமா-யிருக்கிறேன்' (யோ. 14. 6). 'நானே மெய்யான திராட்சைச் செடி என் பிதா திராட்சைத் தோட்டக்காரர்' (யோ. 15. 1) 'நானே திராட்சைச்செடி நீங்கள் கொடிகள்(சீடர்களை நோக்கிக்கூறப்பட்டது) ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனி கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது' (யோ. 15. 5) எனக் கிருஸ்துவின் கூற்றாக இந்நூலில்வரும் சொற்களும் கிருஸ்துவின் தெய்வத்தன்மையையும் தனித் தன்மையையும் (uniqueness) காட்டும் இவையனைத்தும் கிருஸ்து தம்முடன் நெருங்கிப் பழகிய சீடர்கட்குக் கற்பித்த கருத்துக்களே யெனவும் அவரின் அன்பிற்குரிய சீடராகிய யோவானிடமிருந்து இந்நூலின் ஆசிரியர் அவற்றையறிந்திருக்கலாமெனவும் சிலர் கருதுவர். சிலர் இந்நூலாசிரியர் , தம் காலத்தில் கிருஸ்தவர்-

களிடையே இருந்த கொள்கைகளைக் குறித்து ஆழ்ந்து சிந்தித்து அவற்றைக் கிருஸ்துவின் உரையாக எழுதினாரேயன்றி இவை சமநோக்கு நற்செய்தி நூல்களில் காணப்படாததனால் இவை வரலாற்றின் படி கிருஸ்துவின் உரைகளாகக் கொள்ளப்படத்தக்கன வல்ல என்பர். எவ்வாறாயினும் இக்கருத்துக்கள் பொதுவாகக் கிருஸ்தவர்களால் ஏற்றுக்கொள்ளப் படுபவையே.

கிருஸ்து சாதாரண சமய ஆசிரியரோ நீதிகளைக் கற்பித்த ஆசிரியரோ அல்லர். அவர் கடவுளோடு ஒரு தன்மையுள்ள தேவகுமாரனாவார். ஆகையினால் தனித்தன்மையுடையவர். மக்கள் குலத்தைப் பாவத்தினின்றும் மீட்பதற்காக மண்ணுலகில்மானிடமகனாகத் தோன்றினார். தம்போதனைகளினாலும் தூய வாழ்வாலும் மரணத்தினாலும் மக்களைப் பாவத்தினின்றும் மீட்பார் அல்லது மீட்க வழி செய்தார் என்பனவே கிருஸ்துவ சமயத்தின் கோட்பாடுகளாகும்.

## 7.2. கிருஸ்துவின் நற்செய்தியும் திருக்குறளும்

நீதி நூலாகிய திருக்குறளுடன் பெரிதும் ஒப்பிடத்தக்கன கிருஸ்து பெருமான் போதனைகளிலடங்கிய நீதிக் கருத்துக்களே. தனித்தனிக் கூற்றுக்களை ஒப்பிட்டு ஆயுமுன் இருவரும் நீதியைக் கூறும் முறையில் இருவரின் நீதிக் கருத்துக்கட்கும் பிறப்பிடமாக இருக்கும் அடிப்படையில் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை நோக்குதல் பொருந்தும். ஒற்றுமைகளாவன :

(1) கிருஸ்து தனிப்பட்டோரின் அறத்தையே கூறினார். ஆமோஸ் முதலிய கி. மு. எட்டாம் நூற்றாண்டுத் தீர்க்கதரிசிகள் யூத சமுதாயத்தை ஒன்றாகக் கருதிச் சமுதாயத்தில் நிலவிய தீமைகளைக் கண்டித்தும் அவை நீங்கி நாட்டில் நிலவ வேண்டிய நன்னிலையைக் குறித்தும் பேசினார். எரேமியா, எசேக்கியேல் ஆகியோர் தனிப்பட்டவர்க்கு முக்கியத்துவம் அளித்தனர். கிருஸ்து தனிப்பட்ட ஒவ்வொருவரும் கடவுளின் பார்வையில் அருமையானவர்கள் என எண்ணினார். தனிப்பட்டோர் தம்வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய அறத்தையும் மக்கள் தனிப்பட ஒருவருக்கொருவர் காட்ட வேண்டிய அன்பையுங் குறித்துப் பேசினார்.

வள்ளுவரும் தனிப்பட்டோரின் அறத்தையே கூறினார். நாடு என்னும் அதிகாரத்தில் ஒரு நல்ல நாட்டின் இயல்பைக் குறித்துக்

கூறினாராயினும் பொதுவாகத் தனிப்பட்டோர்க்குரிய அறத்தைக் கூறுவதே அவர் நோக்கமாகக் காணப்படுகிறது.

பிளேட்டோ (Plato) போன்ற கிரேக்க அறிஞர் சிலர் ஒரு சிறந்த நகர் எவ்வாறிருக்க வேண்டுமென இலக்கணம் கூறினர். கிருஸ்து அவ்வாறன்றித் தனிப்பட்டோர்க்குரிய அறத்தைக் கூறியதால் அவர்காட்டும் அறம் தீமை நிறைந்த இவ்வுலகிலேயே கடைப்பிடிக்கப்பட வேண்டியதாகிறது. தம்மை இகழ்ந்து அடிக்கக் கூடியவர், வழக்காடி ஆடையைப் பறிக்கக் கூடியவர், கட்டாயப்படுத்தி வேலை வாங்கக்கூடிய அரசு ஆகிய தீமைகள் செறிந்த சூழ்நிலையிலேயே சீடர்கள் அவையனைத்தையும் வெல்லும் அன்பையும் அறத்தையும் கடைப்பிடிக்கும்படி கற்பிக்கப்படுகின்றனர்.

இம்முறையில் நோக்கும் போதும் வள்ளுவர் ஒரு கற்பனை நல்நாட்டிலன்றித் தீமைகள் பல நிறைந்த இவ்வுலகிலேயே அறத்தைப் பின்பற்ற விரும்புவோர் கடைப்பிடிக்கத்தக்க நீதிகளைப் போதித்தார். நாட்டில் கொடுங்கோலரசர்கள் தோன்றக் கூடும். செல்வத்தைச் சேர்த்து வைத்துப் பிறருக்குதவாத வன்கண்ணர் இருப்பர். கறுத்து இன்னா செய்வோர்இருப்பர், கயவர் இருப்பர். பல தீமைகள் இருக்கும் சூழ்நிலையிலேயே அவற்றிற்கு மாறாக நல்லறத்தைக் கடைப்பிடிக்குமாறு வள்ளுவரும் கற்பித்தார்.

(2) கிருஸ்து வெளிநடத்தையை மட்டும் கூறாமல் உள்நோக்கத்தின்முக்கியத்துவத்தை வற்புறுத்தினார். கொலையும் தீங்கு செய்தலும் மட்டுமன்றி உள்ளத்திலுள்ள சினமும் தீதாகும். நடத்தையில் ஒழுக்கமின்மை மட்டுமின்றி உள்ளத்திலுள்ள முறையற்ற காம உணர்ச்சியும் பாவமாகும் என மலைப்பொழிவு கூறுகிறது. உள்ளத்தில் தூய்மையுடையவர்கள் பாக்கியவான்கள் Blessed are the pure in heart என்பது மலைப்பொழிவிலுள்ள ஆசி மொழிகளில் ஒன்றாகும். மக்களின் உள்ளத்திலிருந்தே தீமையனைத்தும்தோன்றுகிறது. ஆகவே உள்ளம் தூய்மையடைதலே முக்கியம் எனப் பிற இடத்திலும் போதித்தார்.

வள்ளுவரும் 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்' (34) என அகத்தின் தூய்மையேபோற்றினார். அறமல்லாதனவற்றைக் கண்டிக்கும் போதும், 'உள்ளத்தால் உள்ளான் வெகுளி எனின்' (309)

'உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன் பொருளைக் கள்ளத்தால் கள்-வேம் எனல' (282) 'மறந்தும் பிறன் கேடு சூழற்க' (204) எனப் பல இடத்தும் புறச் செயலை மட்டுமின்றி உள்நோக்கத்தையும் சுட்டினார்.

(3) கிறிஸ்து சில விதிகளை மட்டும் கற்பிக்கவில்லை. ஒரு சில நடைமுறையறங்களை மட்டும் கூறவில்லை. பலவகைகளில் ஓர் எல்லைஇலக்கை (An infinite goal) மக்கள் முன் வைத்தார் என்ப-தைக் கிருஸ்துவர் பலர் எடுத்துக் காட்டுகின்றனர். 'உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல் பிறனிடத்தும் அன்பு கூருவாயாக' (மார். 12. 31) 'பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள்' (மத். 5. 48) 'உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறது போல, நீங்களும் இரக்க-முள்ளவராயிருங்கள்' (லூக். 6. 36) இக் கூற்றுக்களினால் கற்பிக்-கப்படும் அறத்திற்கு எல்லையுண்டா? எவ்வழியிலெல்லாம் பிறரிடத்து அன்பு பாராட்டவேண்டும், எவ்வழியிலெல்லாம் இரங்கவேண்டும், கடவுளிடம் உள்ளதாகக் கூறப்படும் பூரண சற்குணத்தையடைய எவ்வகைக் குண நிறைவு வேண்டும், என எண்ணி எண்ணி நாள் தோறும் மேன்மேலும் முயலத்தக்க உயர் இலக்கைக் கிருஸ்து தந்தார் என்பர்.

வள்ளுவர் கருத்தின்படியும் அறம் ஓர் அளவோடு முற்றுப் பெறுவதின்று.

ஒல்லும் வகையால் அறவினை யோவாதே
செல்லும்வாயெல்லாம் செயல் (33)

அன்பிலா ரெல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு (72)

கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு (981)

என்னும் குறள்களும் எல்லையற்ற அறத்தையே காட்டும். எவ்வாறு இன்னும் பல வகைகளில் அறத்தைக் கடைப்பிடிக்கலாம், எவ்வெவ் வகையில் அன்பினால் பிறருக்குரியராகலாம், என்ன என்ன நல்லன-வற்றை யெல்லாம் கடனாகக் கொண்டொழுகலாம் என எண்ணி மேன் மேலும் முயலத்தக்க வகையிலேயே வள்ளுவர் அறம் கூறினார்

(4) கிருஸ்து எப்பொழுதும் அறங்களையே (moral laws) கூறினார். சடங்காசாரமான விதிகளை (cultic and ritualistic rules) கூறவில்லை.பழைய ஏற்பாட்டு விதிகள் (முதலைந்து நூல்கள் பார்க்க) இவ்விரண்டையும் இணைத்தே கூறும். கிருஸ்து தூய அறத்தைக் கூறினார்.

சமயக்கணக்கர் தம் மதி வழி கூறாது பொது நீதியைப்போதித்த வள்ளுவரும் சடங்காசாரமான விதிகளைக் கூறாது அறத்தையே கூறினார். ஆசாரக் கோவை போன்ற நூல்கள் நீதிக் கருத்துக்களுடன் அக்காலத்துத் தமிழ்நாட்டு மக்களிடையே பரவியிருந்த நற்பழக்க வழக்கங்களாகக் கருதப்பட்ட செயல்கள், சில ஆசாரங்கள் ஆகிய-வற்றைச் சேர்த்துக் கூறும். வள்ளுவர் அவ்வாறு கூறவில்லை.

இவ்வாறு அடிப்படையில் சில ஒற்றுமைகளைக் காணினும் அடிப்படையிலேயே சில வேறுபாடுகளையும் காணலாம்.

(1) கிருஸ்துவின் போதனைகளில் கடவுளுக்கும் மக்களுக்கும் இடையே உள்ள தொடர்பே முக்கியமாகக் காட்டப்படுகிறது. 'இறைவனின் ஆட்சியையும் அவர் நீதியையும் முதலில் தேடுங்கள் மற்றவையெல்லாம் உங்களுக்குக் கூடவே கொடுக்கப்படும்' (மத் 6.33) என்பதே அவர் அறை கூவல். அவர் இறையாட்சியைக் குறித்துக் கூறிய உவமைகளும் தம்மைவிட்டு விலகிச் சென்ற மக்களைத்திரும்ப ஏற்றுக்கொள்ள ஆவலாக இருக்கும். அல்லது தேடிக்காக்கும் கடவுளின் அன்பைக் குறித்துக் கூறிய கதைகளும் மக்களனைவரும் இறைவனின் அன்புக்குரியவர்களும் அவர்க்கே பொறுப்புள்ளவர்களும் ஆவர் என்ற கருத்தைக் காட்டும். நீதிகளைக் கூறும் போதும் இவை கடவுளுக்குகந்தவை, இவை கடவுளின் இயல்போடு பொருந்துபவை ஆகையினால் இவை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்னும் முறை-யிலேயே கிருஸ்து அவற்றைக் கூறினார்.

வள்ளுவரின் முக்கிய நோக்கம் இறைவனியல்பை விளக்கு-வதோ இறைவனுக்கும் மக்களுக்குமுள்ள அல்லது இருக்க வேண்டிய தொடர்பை ஆய்வதோ அன்று. அவர் நோக்கம் பொது நீதியைக் கூறுவதே. மக்கள் ஒருவருடன் ஒருவர் கொள்ளும் தொடர்பில் இருக்க வேண்டிய நீதிமுறைகளையே வள்ளுவர் ஆய்ந்து கூறினார். 'கடவுள் வாழ்த்து' என ஓரதிகாரத்தை எழுதினாரெனினும் பிற இடங்களிலெல்லாம் நீதிகளைத் தனியே கூறினாரன்றி அவற்றைக் கடவுளுடன் தொடர்புபடுத்தவில்லை. கடவுள் வாழ்த்துக்கு வெளி-

யில் வள்ளுவர் கடவுளைக் குறிப்பிடுவது இரண்டொரு இடங்களில் மட்டுமே.

தம் கடவுட் கொள்கையையே தம் போதனைகட்கு மையமாகக் கொண்ட கிருஸ்து கடவுளை அன்பு நிறைந்த தந்தையாகக் கருதினார். அவர் கடவுளைக் குறித்துப் பெரும்பாலும் வழங்கிய சொல் தந்தையெனனும் சொல்லேயாகும். 'என் தந்தை 'எனவும் 'உங்கள் தந்தை' எனவும் 'விண்ணிலுள்ள எங்கள் தந்தையே' எனவும் பன்முறை இம்முறைச்சொல்லையே யாண்டார். மக்கள் குலமனைத்திற்கும் கடவுளைத் தந்தையாகக் கருதியமைக்கு ஏற்ப மக்களனைவரையும் சகோதரராக உடன் பிறப்பாளராகக் கருதினார். 'நீ உன் கண்ணிலுள்ள உத்திரத்தை காணாது உன் சோதரன் கண்ணிலுள்ள துரும்பைக் காண்பதென்ன?' 'நீ உன் சகோதரனுக்கு ஏழு தடவையன்றி எழுபது தடவை மன்னித்தல் வேண்டும்' என்னும் நீதிகளில் மக்களனைவரையும் சகோதாரராகக் கருதும் வழக்கைக் காணலாம். அவ்வாறே நியாயத் தீர்ப்பைக் குறித்துக் கூறும்போதும் 'என் சகோதரரில் மிகச் சிறியவனுக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்' என உலக மக்களனைவரையும் தன் உடன் பிறப்பாளராகக் கூறி உரிமை பாரட்டினார். அதற்கேற்ப அறத்தைக் கூறினார். ஒரு குடும்பத்திலுள்ளவர்கள் ஒருவர் தேவையை மற்றவர் கவனித்தும் ஒருவர் செய்யும் குற்றங்களை மற்றவர் பொறுத்தும் ஒருவருக்கொருவர் இவ்வளவுதான் செய்தல் வேண்டும் என்னும் வரையறையின்றி வேண்டுவதெல்லாம் செய்தும் அன்பினால் இணைந்து வாழ்வது போல மக்களனைவரும் வாழ வேண்டுமெனக் கற்பித்தார்.

திருக்குறள் உயர் அறங்களைக் கூறினும் மக்கள் குலமுழுவதையும் ஒரு குடும்பமாகக் கருதும் இவ்வடிப்படை குறளில் இல்லை. கடவுளைத தந்தையாகவோ மக்களனைவரையும் உடன்பிறப்பாளராகவோ கூறும் வழக்கும் இல்லை வள்ளுவர் கடவுளைத் தந்தையென எவ்விடத்தும் கூறாது யாவர்க்கும் தலைமையானவன் என்ற பொருளில் இறைவன் எனக் கூறினார் தந்தை போன்ற அன்புடையவன் எனக் கூறாது வேண்டுதல் வேண்டாமையிலான்''பற்றற்றான்' எனக் கூறினார்.

(2) முப்பாலையும் மொழிந்த வள்ளுவர் அறத்தை இல்லறம், துறவறம் என இருவகையாகப் பிரித்துக் கூறினார். பொருட்பாலிலும் அரசர்க்குரிய அறங்கள், அமைச்சர்குரிய அறங்கள், தூதர்கட்கிருக்க வேண்டிய குணநலன்கள், வீரர்க்குரிய இயல்புகள் (படைமாட்சி

படைச்செருக்கு) என வெவ்வேறு வகையினர்க்கும் அறத்தைத் தனித் தனியே பிரித்துக் கூறினார்.

கிருஸ்து இவ்வாறு வாழ்க்கையில் வெவ்வேறு நிலையிலுள்ளவர் களின் கடமைகளை வரையறுக்க முயலாது யாவர்க்கும் பொதுவான அறத்தை மட்டுமே கூறினார்.

இருவரின் வாழ்க்கை நிலையிலும் இருவரும் வாழ்ந்த காலத்திலும் நாட்டில் நிலவிய வரலாற்றுக் சூழ்நிலையிலும் இருந்த வேறுபாடு இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். கிருஸ்துவின் காலத்தில் யூதர்கள் ரோமராட்சிக்குட்பட்டிருந்தனர். அரசராகவோ அமைச்சராகவோ தூதராகவோ பணியாற்றும் வாய்ப்பு யூதர்கட்கு இருக்கவில்லை. மேலும் கிருஸ்து அவர் வாழ்நாளில் ஒரு சமயத்தலைவராகவோ அல்லது குருவாகவோ கருதப்பட்டாரேயன்றி அரசியலுக்கும் அவருக்கும் எவ்விதத் தொடர்ப்பும் இருக்கவில்லை அந்நிலையில் அவர் அரசர்க்கும் அமைச்சர் முதலியோர்க்கும் உரிய கடமைகளைக் கூறாதிருத்தல் இயல்பே. வள்ளுவர் காலத்தில் தமிழர்கள் உரிமையுள்ளவர்களாக இருந்தனர். தமிழரசர்களே நாட்டையாண்டனர். வள்ளுவர் செய்து வந்த தொழில் யாது என்பது தெளிவின்று. அறிஞர் பலர் கருதுவதுபோல அவர் ஓர் அரசவையில் உயர் அலுவலராகப் பணியாற்றியிருப்பின் தம் நூலில் அரசர்க்கும் அங்கங்கட்கும் உரிய கடமைகளையும் அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய அறங்களையும் தனித்தனியே கூறுதல் இயல்பே.

(3) வள்ளுவர் வாழ்க்கையைக் குறித்துத் தற்போது நாம் அறிவது யாதுமில்லை.

கிருஸ்து தாம் போதித்த அறங்களனைத்தையும் தம் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டினார். அவர் சொற்கள் மட்டுமின்றிச் செயல்களும் அறத்தைக்கற்பிப்பனவாகும். இவ்வேறுபாட்டையே திரு வி. கலியாண சுந்தர முதலியாரும் 'கிருஸ்துவின் அருள் வேட்டல்' என்ற தம் நூலில் எடுத்துக் கூறினார்.[4]

---

4. கலியாணசுந்தர முதலியார், திரு.வி. கிருஸ்துவின் அருள் வேட்டல் 2.6-7
கள் கொலை காமம் களவு பொய்தீய கறைகழித்துத்
தள்ளும் வழிகளெனச் சாற்றினர் பல்லோர் தரணியிலே
பள்ளிப் படிப்பாய்ப் பரவின, வாழ்வில் படிவதற்கே
கொள்ளுமனமே கொலைஞரை மன்னித்த கோவடியே
ஒழுக்கம் விழுப்பம் உயிரிலும் ஓம்பென்றுரைத்திருந்தால்
கொழிக்குமோ தானே குலவிடைந்து குவலயத்தீர்
ஒழுக்கவடிவாம் கிருஸ்துவை யுன்னி உளத்தழுதால்
அழுக்கைக் கழுவும் ஒழுக்கம் அரும்பி அலர்ந்திடுமே

இவை பொதுவகையில் காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளாகும். இனி வெவ்வேறு பொருள் குறித்து இருவர் கருத்துக்களையும் ஒப்பிடல் பொருந்தும்.

### 7. 2. 1. இல்லமும் அன்பும்

வள்ளுவர் இல்லறவியலை முதலியலாக அமைத்தார். இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், புதல்வரைப் பெறுதல் என்னும் அதிகாரங்கள் குடும்ப வாழ்க்கையையே குறிக்கும். அன்புடைமையும் இவற்றோடு நெருங்கிய தொடர்புடையதே. விருந்தோம்பல் இல்லத்தில் கடைப்பிடித்தற்குரியதே. இவற்றைக் கூறியபின்னே ஏனைய அறங்களைக் கூறினார். இல்லத்திலிருந்தே அறம் பிறத்தல் வேண்டும் என அவர் கருதினார் போலும். இவற்றிலெல்லாம் வள்ளுவர் வெறும் விதிகளைக் கூறவில்லை. இல்லத்தில் எத்தகைய அன்பு செயற்பட வேண்டும் என்பதை ஆழ உணர்ந்து கூறினார்.

மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு (65)

குழலினி தியாழினி தென்ப தம்மக்கள்
மழலைச்சொல் கேளா தவர் (66)

என்டன விதிகளா? குடும்பத்தில் இயல்பாகச் சுரந்தெழும் அன்பை இவ்வாறு புனைந்துரைத்தாரேயன்றி வேறென்ன ?

கிருஸ்துவும் இல்லத்திலுள்ள இயல்பான அன்பைப்போற்றினார். உவமைகளினாலும் உருவகக் கதைகளினாலும் குடும்பத்திலுள்ள தந்தையின் அன்பைக் கொண்டு கடவுளின் அன்பை விளக்கினார். கெட்ட குமாரன் கதையில் காட்டப்படும் தந்தையின் அன்பு யாவரும் அறிந்ததே. "உங்களில் எந்த மனுஷனாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானோ? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானோ?" (மத். 7.9-10) என்னும் சொற்களும் இயல்பாகப் பெற்றோர்க்குப் பிள்ளைகள் பேரில் இருக்கும் அன்பின் உறுதியைக்காட்டும்.

முதுமையுற்ற பெற்றோரைக் காக்கும் கடன் மக்கட்கு உண்டு என்பதைக் கிருஸ்து வற்புறுத்தினார் 'உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக' என்னும் பழைய ஏற்பாட்டு

விதியை எடுத்துக் காட்டி ஒருவன் ஆலயத்துக்கு ஒரு குறிப்பிட்ட அளவு காணிக்கையைச் செலுத்தினால் தன் பெற்றோரைப் பாதுகாக்கும் கடமையினின்றும் தன்னை விடுவித்துக் கொள்ளக் கூடும் என அக்காலத்து நடைமுறையில் சிலரால் கடைப்பிடிக்கப்பட்டு வந்த தவறான வழக்கத்தைக் கண்டித்தார் (மார்.7. 10-12).

வள்ளுவர் முதுமையுற்ற பெற்றோரைப் பேணும் பொறுப்பைக் கூறா விடினும்,

மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல் (70)

என்னும் குறளில் அது அடங்கும் என்பது உறுதி.

கணவன் மனைவியை எக்காரணத்தின் பொருட்டும் தள்ளுதற் சீட்டெழுதித் தள்ளிவைத்தல் கூடும் எனத் தன் காலத்தில் இருந்த வழக்கையும் கிருஸ்து மறுத்துரைத்தார். இது பழைய ஏற்பாட்டிலுள்ள விதியே யாகும். அக்கால மக்கள் அதை மோசேயால் கற்பிக்கப்பட்ட விதிகளில் ஒன்றாகக் கருதினர். ஆயினும் கிருஸ்து அதை ஏற்றுக் கொள்ளவில்லை. கணவனும் மனைவியும் வாழ்நாள் முழுவதும் இணைந்து வாழ்வதே கடவுளின் சித்தம் என அவர் கருதினார். 'அப்படியானால் தள்ளுதற் சீட்டெழுதிக் கொடுத்து அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டார்?' என வினவிய பரிசேயர்க்கு, அவர் "உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதய கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார். ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை" என்றார் (மத். 19. 7- 8).

இக்கருத்தும் மனைவியை வாழ்க்கைத் துணை என அழைத்த வள்ளுவர் கருத்தோடு முற்றும் பொருந்துவதே கணவனும் மனைவியும் வாழ்நாள் முழுவதும் இணைந்து வாழவேண்டுமென்பதே வள்ளுவர் கருத்து என்பதைக் காமத்துப்பாலும் காட்டும். ஆதி முதலாய் அப்படி இருக்கவில்லை எனக்கிருஸ்து கூறுவது இங்குக்கருதத்தக்கது

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப (தொல்.பொருள் - 145)

எனக் கூறிய தொல்காப்பியரைப் போல மிகப் பண்டைக் காலத்தில் மக்கள் சமுதாயத்தில் கணவனுக்கும் மனைவிக்குமிடையே, எவ்வித விதியும் இல்லாவிடினும் தாமாகவே வாழ்நாள் முழுவதும் இணைந்து

வாழும் குடும்ப ஒற்றுமை இயல்பாகவே இருந்தது எனக் கிருஸ்து பெருமானும் கருதியதாகத் தோன்றுகிறது.

இவ்வாறு குடும்பத்திலுள்ள அன்பையும் ஒற்றுமையையும் போற்றியபோதும் இறைப்பணிக்குத் தடையாக இருப்பின் குடும்பத்-தையும் துறத்தல் வேண்டுமெனவும் கிருஸ்து கற்பித்தார்.

7.2.2. பிறர்க்கு உதவி

விருந்தோம்பல் என்னும் பண்பு யூதர்களிடையே மிகப் பழைய காலத்திலிருந்தே போற்றப்பட்டுவந்தது என்பது ஆதியாகமக் கதைகளில் காணப்பட்டது. முதறிவிலக்கியங்களும் விருந்தோம்பலைப் போற்றின; கிருஸ்து அப்பண்பை மக்களிடமிருந்து எதிர்பார்த்தார். அதைப் பாராட்டினார். பல இடங்களுக்குச் சென்று சமயக் கருததுக்களைக் கற்பித்த போது தங்குவதற்கு ஓரிடத்தை முன்னதாகவே ஏற்பாடு செய்து கொள்ளாது மக்களின் ஆதரவினால் அளிக்கப்பட்ட வசதிகளை ஏற்றுக் கொள்வதே அவர் வழக்கமெனத் தெரிகிறது. ஆகவேதான் 'மனித குமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை' என்றார். தம் சீடர்களை ஈரிருவராக வெவ்வேறிடங்களுக்குச் சென்று போதிக்குமாறு அனுப்பியபோதும் கையில் பணமோ உணவுப் பொருள்களோ எடுத்துச் செல்லாது அவ்வவ்விடங்களில் அவர்களை ஏற்றுக் கொண்டு உபசரிக்கத் தக்கவர் இல்லங்களில் தங்கி அவர்கள் அளிக்கும் உணவையுண்டு அவ்வவ்விடங்களில் பணியாற்றுமாறு பணித்தார். (மத் 10.10-11)

''உங்களை ஏற்றுக் கொள்கிறவன் என்னை ஏற்றுக் கொள்கிறான்; என்னை ஏற்றுக்கொள்கிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்கிறான்.

தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக் கொள்கிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனையடைவான்; நீதிமான் என்னும் நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக் கொள்கிறவன் நீதி-மானுக்கேற்ற பலனையடைவான்.

சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவ-னுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை யடையாமற்போகான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன் என்றார்'' (மத். 10. 40-42).

இங்கு விருந்தோம்பல் சிறப்பிக்கப்படுவதுடன் விருந்தினர் தகுதிக்கேற்றபடி விருந்தோம்பல் பயனளிக்கிறதென்ற கருத்தும் காணப்படுகிறது.

இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன் (87)

உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து (105)

என்ற குறள்களின் கருத்தை யிங்குக் காணலாம்.

இங்குப் பயனென்பது செல்வம், செல்வாக்கு, புகழ் போன்ற வற்றைக் குறிப்பதன்று. இத்தகையபயன்களைநாடலாகாது எனவே இருவரும் கருதினர்.

பிறர்க்குச் செய்யும் உதவியையும் இறைப்பணியாகக் கருதிச் செய்யின் அது சிறப்பாகும் எனவும் கிருஸ்து கற்பித்தார். "இப்படிப் பட்டஒரு பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக் கொள்கிறவன் என்னை ஏற்றுக் கொள்கிறான்" (மத். 18.5) என்றார். இக்கருத்து குறளில் இல்லை.

எவ்வெவ் வகையிலெல்லாம்பிறர்க்கு உதவி செய்ய வேண்டும். என்பதைக் கிருஸ்து ஒரு சிறந்த விதியில் அடக்குகிறார். "ஆதலால், மனுஷர் உங்களுக்கு எதைச் செய்ய விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இதுவே நியாயப் பிரமாணங் களும் தீர்க்க தரிசனங்களுமாம்" (What so ever ye would that men should do unto you, even so do, unto them for that is the law and the prophets. (Matt 7. 12) தன்னைப் போல் பிறரையும் நினைத்தல் வேண்டும் என்ற கருத்தைச் சில குறள்களிலும் காணலாம்.

அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை (315)
தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல் (318)
இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது (98)

தனக்குத் துன்பம் தருவனவற்றைப் பிறர்க்குச் செய்யலாகாது. வன்சொல் வழங்குதலாகாது என இவை எதிர்மறைக் கருத்தையே

தருகின்றன. கிருஸ்து 'நீ எதையெல்லாம் மற்றவர்கள் உனக்குச் செய்ய வேண்டுமென விருப்புகிறாயோ அதையெல்லாம் மற்றவர்கட்குச் செய்' என உடன்பாட்டு முகத்தால் கூறினார். சீன கிரேக்க அறிஞர்களும் இவ்வாறே எதிர்மறையில் கூறினர் எனவும் கிறிஸ்து உடன்பாட்டால் கூறியது அதைவிடச் சிறப்புடையதெனவும் அருள் திரு. சி. எப். அண்ட்ருஸ் தம் 'மலைப்பொழிவு' என்னும் நூலில் எடுத்துரைத்தார்.[5]

வறியார்க்கு உதவி செய்தல் சிறப்பாகும். "நீ பகல் விருந்தாவது இராவிருந்தாவது பண்ணும்போது, உன் சிநேகிதரையாகிலும் உன் சகோதரரையாகிலும் உன் பந்து ஜனங்களையாகிலும் ஐசுவரியமுள்ள அயலகத்தாரையாகிலும் அழைக்க வேண்டாம். அழைத்தால் அவர்கள் உன்னையழைப்பார்கள்; அப்பொழுது உனக்குப் பதிலுக்குப் பதில் செய்ததாகும்.

நீ விருந்து பண்ணும் போது ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் அழைப்பாயாக.

அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய்; அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார்கள்" (லூக். 14.12-14) எனக் கிருஸ்து ஒரு முறை கூறினார். இது,

> வறியார்க்கொன் றீவதே ஈகை மற்றெல்லாம்
> குறியெதிர்ப்பை நீர துடைத்து (221)

என்ற குறளுடன் ஒப்பிடத்தக்கது. இன்னும் "கைமாறு கருதாமல் கடன் கொடுங்கள்; அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்; அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே" (லூக். 6. 35) என்னும் வாக்கியமும்,

> கைமாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்
> டென்னாற்றுங் கொல்லோ உலகு (211)

5. Andrews, C F, Sermon on the Mount, P. 49.

"Here is a 'rule' of daily conduct which covers the whole range of life as far as society is concerned. It goes much beyond the negative form we find in Hillel and Confucius, and also among the stiocs Christ leads us at once to the positive attitude of doing right and away from the negative course of merely refraining from doing wrong.

என்னும் குறளும் ஒருவகையில் ஒப்பாகும். 'கடவுள் நல்லவர்க்கும் தீயவர்க்கும் மழையைப் பொழியச் செய்கிறார்; அது போலக் கைமாறு கருதாமல் யாவர்க்கும் உதவுங்கள்' எனக் கிருஸ்து கற்பித்தார். வள்ளுவர் கடவுள் மழையைப் பொழியச் செய்கிறார் எனக் கூறா விடினும் மழையையே பயன் கருதா வள்ளண்மைக்கு உவமையாக்கினார்.

### 7. 2. 3. குற்றம் பொறுத்தலும் பகைவரிடத்து அன்பும்

'என் சகோதரன் செய்யும் குற்றங்களை நான் ஏழு தடவை மன்னிக்க வேண்டுமா?' எனக் கேட்ட பேதுருவுக்கு 'ஏழு தடவையன்றி ஏழு எழுபது தடவை மன்னித்தல் வேண்டுமெனக் கிறிஸ்து கூறினார். பிறர் சொல்லாலும் செயலாலும் செய்யும் குற்றங்களைப் பொறுக்கும் இயல்பு திருக்குறளில் பொறையுடைமை என்னும் பத்தில் பலவாறு போற்றப்படுகிறது

நண்பர்களோ தன்னினத்தவரோ செய்யுங் குற்றங்களை மட்டுமன்றிப் பகைவர் செய்யும் தீமைகளையும் பொறுத்தல் வேண்டும். அவர்கள் எவ்வளவு தீமை செய்யினும் அவற்றைப் பொறுத்தல் மட்டுமன்றி மாறாக நன்மை செய்தலும் வேண்டும்.

'நான் உங்களுக்குச் சொல்கிறேன். உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசிர்வதியுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்.

உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால் உங்களுக்குப் பயன் என்ன? ஆயக்காரர்களும் அப்படியே செய்கிறார்களல்லவா?

உங்கள் சகோதரரை மட்டும் வாழ்த்துவீர்களானால் நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? ஆயக்காரர்களும் அப்படிச் செய்கிறார்களல்லவா? (மத். 5.44-47)

திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று (157)
இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று (308)

இன்னா செய்தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல் (314)

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு (987)

இக்குறள்களும் பிறர் எவ்வளவு துன்பம் செய்யினும் வெகுளாதிருத்தலையும் அவர்களின்மேல் இரக்கம் கொள்ளுதலையும் துன்பம் செய்தார்க்கும் நன்மையையே செய்யும் சான்றாண்மையையும் கூறும்.

இங்குக் கிருஸ்துவும் வள்ளுவரும் இருவருமே தனிப்பட்டோர் தம் பகைவரிடத்து நடந்து கொள்ள வேண்டிய முறைமையையே உளத்திலெண்ணிக் கூறுவதாகத் தோன்றுகிறது. நாடுகளிடையே பகை தோன்றுங்கால் அக்காலத்து நிகழ்ந்து வந்த போர்முறையையே வள்ளுவர் ஆதரித்தார். படைமாட்சி, படைச்செருக்கு என்னும் அதிகாரங்களை யெழுதினார். இகல் என்னும் அதிகாரம் பகைவிரும்பத்தக்கதன்று, கூடுமானால் போரின்றி அமைதியை நாடுவதே சிறந்ததுஎன்பதைக் காட்டுமாயினும் 'பகைமாட்சி' 'பகைத்திறந்தெரிதல்' எந்நிலையில் எத்தகையோருடன் போர் தொடுக்கலாம் என்பதையும் 'காலம் அறிதல்', 'இடம் அறிதல்' என்பன எக்காலத்து எவ்விடத்துப்போர் தொடுத்தல் பொருந்தும் என ஆராய வேண்டியதன் அவசியத்தையும் கூறுவதால் போரை ஓரளவு ஆதரிக்கின்றன.

கிருஸ்து அரசியலைக் குறித்துக் கூறவில்லை. ஆயினும் அவர் தீமையைத் தீமையால் எதிர்க்க வேண்டா எனவும் தீமை செய்தோர்க்கும் நன்மை செய்து பகைவரிடமும் அன்பு பாராட்டவேண்டும் எனவும் மலைப் பொழிவில் கூறிய கருத்துக்கள் தனிப்பட்டோர்க்கேயன்றி நாட்டுக்கும் பொருந்துமா எனக் கிருஸ்துவ அறவியல் அறிஞர் பலர் ஆராய்கின்றனர். பொருந்தும் எனவும் பொருந்தா எனவும் இரு வேறுபட்ட கருத்தைத் தெரிவிக்கின்றனர். கிருஸ்துவின் மலைப் பொழிவு அரசியலுக்கும் பொருந்தும், கிருஸ்துவ நாடுகள் போரில் ஈடுபடுவது கிருஸ்துவின் கொள்கைக்கு மாறானதே என்ற கருத்தைத் தீவிரமாக எடுத்துக் கூறியவர் ருஷ்ய அறிஞரும் எழுத்தாளருமான திரு லியோடால்ஸ்டாய் என்பவரே. ஆனால் கிருஸ்தவர்களில் பெரும்பாலோர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

நம்நாட்டில் இந்நூற்றாண்டின் முற்பகுதியில் காந்தியடிகள் நடைமுறையில் இயற்றிக் காட்டிய சத்தியாக்கிரக இயக்கம் இங்கு நினைவு கூறத்தக்கது. மகாத்மா காந்தி இளம் வயதில் அகிம்சை,

சத்தியம் என்னும் கொள்கைகளைச் சமண சமயத்தோரிடமிருந்து கற்றார். பின்பு டால்ஸ்டாய் எழுதிய 'இறையாட்சி உங்களுக்குள்ளே யுள்ளது' (The Kingdom of God is within you) என்னும் நூலைக்-கற்று அந்நூலாசிரியருடன் கடிதப் போக்குவரத்து மேற்கொண்டு அவர் கொள்கைகளை யறிந்துகொண்டார். அக்கொள்கைகளைப் பெரிதும் தழுவியே தம் அறப்போரியக்கத்தை வகைப்படுத்தினார்.

மகாத்மா காந்தியின் கீழ்ப் பணியாற்றி இவ்வியக்கத்தில் ஈடுபட்டு அனுபவம் பெற்ற தமிழ்நாட்டுத் தொண்டர்களில் ஒரு-வராகிய காந்தீயக்கவி நாமக்கல் வே. ராமலிங்கம் பிள்ளை காந்தியின் அறவியல்கொள்கைகள் திருக்குறளில் கூறப்பட்ட இன்னாசெய்யாமை, வாய்மை, கொல்லாமை, வெகுளாமை என்ற கொள்கைகளோடு முற்-றும் பொருந்துவனவே என்பதைத் தம் பாடல்களில் பன்முறை எடுத்-துக் கூறினார். இக்கொள்கைகளை வள்ளுவர் முக்கியமாகத் துறவி-கட்காகக் கூறியிருப்பினும் இவை அரசியலுக்கும் பொருந்தும் என்பதைக் காந்தி காட்டினார் என அவரைப் போற்றினார். வள்-ளுவர் சமயத்தைக் குறித்துப் பலரும் பலவாறு ஆராய்வர். வைதிக சமயத்தவராக இருக்கலாமெனப் பலரும் சமண சமயத்தவராக இருக்கலாமெனப் பலரும் பவுத்த சமயத்தவராக இருக்கலாமெனப் பலரும் கூறுவது உண்டு. கிருஸ்தவ சமயக் கொள்கைகளையுங் கூட வள்ளுவர் அறிந்திருக்கலாமெனச் சிலர் கருதுவர். இது ஐயத்-திற்குரியதே. வள்ளுவர் வைதிக சமயத்தவராக இருப்பினும் பௌத்த சமணசமயங்களிலிருந்து பல அறக்கொள்கைகளை ஏற்றுக் கொண்-டார் எனக் கருதல் பொருந்தும். அகிம்சை, சத்தியம் என வட மொழியில் கூறப்பட்ட அறங்களையே அவர் தமிழில் இன்னாசெய்-யாமை, வாய்மை எனக் கூறியிருத்தல் வேண்டும். இந்நூற்றாண்டின் முற்பகுதியில் நாடுமுழுவதும் பரவிய மாபெருந்தேசீய இயக்கத்தில் இவ்வறக் கொள்கைகளும் 'பகைவரிடத்தும் அன்பு கூருங்கள்' என இயேசுபெருமான் மலைப்பொழிவில் கூறிய அறவுரையும் இணைந்து நின்று அரசியலுக்கும் பொருந்துவதாகி நடைமுறையில் நற்பயன் விளைவித்ததைக் கண்கூடாகக் கண்டோம். காந்தி மலைப்பொழிவைத் தழுவியெழுதப்பட்ட டால்ஸ்டாயின் நூல்களினின்றும் ஊக்கம் பெற்-றார். அதே இயக்கத்தில் ஈடுபட்ட நாமக்கல் கவிஞர், சத்திய மூர்த்தி முதலிய தமிழ்நாட்டுத் தொண்டர்கள் திருக்குறளினின்றும் ஊக்கம் பெற்றனர்.

ஆயினும் கிருஸ்துவ அற இயலை ஆயும் அறிஞர்கள் சிலர் சத்-தியாக்கிரகம் கிருஸ்து பெருமானின் போதனைகட்கு மாறானது எனக்

கருதுகின்றனர் என்பதும் இங்குக் குறிப்பிடற்குரியது அத்தகைய இயக்கத்தில் ஈடுபடுவோர் படைக் கலங்களெடுத்துப்போர் செய்யா விடினும் அதில் வெறுப்புக்கும் தன்னலத்திற்கும் இடம் உண்டு எனவும் சிலர் கருதுவதாகத் தெரிகிறது[6]. காந்தியடிகள் சத்தியாக்கிரகத்தைப் புரிந்துகொண்ட முறையை யாராயின் அதில் வெறுப்புக்கும் தன்னலத்திற்கும் இடம் இல்லை சத்தியாக்கிரகம் செய்வோரின் நலத்துக்காக அன்றி அறத்திற்காகவே செய்யப்படுவது அறத்திற்கு மாறாக அது இயங்காது அதில் ஈடுபடுவோர் உள்ளத்திலும் பகைமையின்றி அன்பே கொள்ளுதல் வேண்டும். இவ்வியக்கம் ஆற்றல்

6. Scott, Ernest F., The Ethical Teachings of Jesus, p. 75 (chap X NonResistance).

"Some times the method of Jesus has been defined as passive resistance and this as we have learned from modern instance, is a real power, which can be exerted on occasion with terrible effect. But the theory of passive resistance misses the whole point of jesus' teaching. For one thing, it involves the motive of hate which is the very thing he condemns. One might almost infer from some expositions of the Sermon on the Mount, that Jesus objected to violence because it causes physical pain, and is foolish and unnecessary, since we can harm our enmies just as much without hurting their bodies. Surely a strange reading of the thought of Jesus, for whom the wrong even of murder consisted wholly in the inward motive. But passive resistance is contrary to his teaching not only because it retains the false motive but because it is merly passive. His whole purpose is to impress on us that goodness is an active power. We are to overcome not by standing still but by throwing ourselves boldly on the side of those forces which will eventually prove the strongest. Non-resistance of evil has no meaning apart from the positive faith in the ultimate victory of good".

இங்கு Passive resistance என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படுவது நம் நாட்டில் காந்தியடிகள் நடத்திய அறப்போரியக்கத்தையும் குறிக்கிறதா எனபது தெளிவின்று. குறிப்பதாயின் இவ்வாசிரியர் காந்தியடிகளின் உள்ளக்கிடக்கையைப் புரிந்து கொள்ளவில்லை என்பது தெளிவு. பின்வரும் ஒரு தமிழ்நூல் மேற்கொள் காந்திய சத்தியாக்கிரகத்தையே தெளிவாகக் குறிப்பிடுகின்றது.

ரசல் சந்திரன், யோ. கிருஸ்துவ அறம், பக்கம் 76.

"தீமைக்கு எதிர்த்து நில்லாமை, தீமைக்குப்பதில் தீமை செய்யலாகாது. இப்போதனை காந்தியக் கொள்கையாகிய அகிம்சை அல்லது சத்தியாக்கிரகத்திலும் வேறுபாடுடையது. இயேசுவின் போதனையில் அகிம்சையைக் கருவியாகக் கொண்டு தன் நோக்கத்தைச் சாதித்துக் கொள்வதற்கு முற்றிலும் இடமில்லை. வலது கன்னத்தில் அறைகிறவனுக்கு மறுகன்னத்தைத் திருப்பிக்காட்டுதலும், ஒருகல் தொலை வரக்கட்டாயப்படுத்துகிறவனோடு இரண்டுகல்தொலை போகும் சிந்தையுடையவராயிருத்தலும் வேண்டும். ஆனால் இத்தகைய நடத்தையினால் மறைவாயுள்ள எந்நோக்கத்தையும் அடைவது என்ற கருத்து, இயேசுவின் சிந்தைக்கு முரண்பட்டது ஆகும். இயேசு பெருமான் போதனையில் முக்கிய அமிசம் யாதெனில், தீமையினைத் தீமையினால் எதிர்த்து நில்லாது, அதனை நன்மையினால் வெல்ல வேண்டும்என்பதே."

வாய்ந்ததே. ஆனால் அதன் ஆற்றல் அதைக் கைக்கொள்வோர்க்கும் அவரொடு மாறுபடுவோர்க்கு மென இரு திறத்தார்க்கும் நன்மையை விளைவிக்கும். இதுவே காந்தியடிகளின் கருத்தாகும். தீமை செய்தோர்க்கு மாறாகப் படையெடுத்துப் போர் செய்யாது பிற வகையில் ஊறு செய்தல் என்பது மகாத்மாவின் கொள்கையன்று. தீமையை நன்மையினாலும் அன்பினாலும் வெல்லல் வேண்டுமென்ற கிருஸ்து பெருமானின் அடிப்படைக் கொள்கையையே அவரும் போற்றினார். காந்திய அறவியல் கொள்கைகள் மலைப் பொழிவின் கொள்கைகட்கு மாறானவை எனக் கருதும் கிருஸ்துவ அறவியல் அறிஞர் முன்னவற்றைச் சரியாக புரிந்து கொண்டனரா என்பது ஐயத்திற்குரியதே. காந்தியடிகளுடன் மிக நெருங்கிப் பழகியவரும் தேசிய இயக்கத்தின் காலத்தில் நம் நாட்டில் வாழ்ந்து அதில் ஈடுபட்ட தொண்டர்களின் செயல்களையும் அவர்கள் நடந்து கொண்ட விதத்தையும் நேரில் கண்டவரும் அத்தகையோரிடம் அன்பு பூண்டு உறவாடியவருமாகிய அருள் திரு.சி.எப். ஆண்ட்ரூஸ் இவ்வியக்கத்தில் கடைப்பிடிக்கப்பட்ட அறவியல் கொள்கைகள் மலைப் பொழிவின் துறவுரைகளுடன் மிகவும் பொருந்துவனவே எனக் கூறி அவ்வியக்கத்தின் தலைவரையும் தொண்டர்களையும் பாராட்டினார் [7]

வெகுளாமையைக் குறித்துக் கிருஸ்து கூறியனவும் இப் பகுதியில் ஆய்தற்குரியன. பிறர்மேல்சினங்கொள்வது நியாயத் தீர்ப்புக்கு (Judgement) அதாவது தனக்கே நேரும் தீங்குக்கு ஏதுவாகும். பிறரை இகழ்தலும் வைதலும் அதைவிட அதிகத் தீங்கு பயப்பனவாகும். அத்தகைய சினம் தனக்கே அழிவைத் தரும்

7. Andrews, C.F., *The sermon on the Mount*, p. 148.

"Strangest of all, perhaps, is this that Mahatma Gandhi a Hindu, should have pointed us so nearly towards a truly christian solution and have carried it out so far in action as to make it appear practicable to some of the finest christians of our own day".

p. 158 "But greater still that Tolstoi's own work has been that of his spiritual successor, Mohandas Karamchand Gandhi, both in South Africa and India. Gandhi himself is not a Christian, but a Hindu......with Mohandas Gandhi the carring out of these pacifist principles which the Sermon on the Mount embodies has been carried a long step further forward by his remarkable insight and genius in organising such a wide-corporate faith in non-violence among very ordinary people that thousand have gone joyfully to prison in order to attain their ends by non-violent and truthful means".

(அல்லது கெஹென்னாவில் தள்ளப்படும் நிலையைத்தரும்)[8] (மத். 5.22) பிறர் மேல் பகையோ சினமோ கொள்ள நேரிட்டாலும் விரைவில் துணிந்து நல்லுறவு காண முயல வேண்டும். ஆலயத்தில் காணிக்கை செலுத்தவரும்போது தனக்கும் மற்றொருவர்க்குமிடையே ஏதாவது மாறுபாடு உண்டென்பது நினைவுக்கு வந்தால் முதலில் சென்று அவருடன் நல்லுறவு ஏற்படுத்திக் கொண்டு பின்பே காணிக்கை செலுத்துதல வேண்டும். எதிராளியுடன் விரைவில் ஒத்துப் போகாவிட்டால ஒறுத்தலுக்கு ஆளாக நேரிடும். (மத். 5. 23-26)

> தன்னைத்தான் காக்கிற் சினங் காக்க காவாக்கால
> தன்னையே கொல்லும் சினம் (305)
>
> சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமெனும்
> ஏமப் புணையைச் சுடும் (306)

எனச் சினத்தை நெருப்புக்கு ஒப்பிட்டு அதன் தீமையைக் குறித்து எச்சரித்த வள்ளுவரும் 'மறத்தல் வெகுளியை யார் மாட்டும்' (303) எனச் சினம் ஏற்படினும் அதை விரைவில் விட்டொழிக என்பர்.

### 7.2.4 துறவு

தீர்க்கதரிசிகளும் மூதறிவிலக்கியத்தை எழுதியோருமாகிய பண்டையூதஅறிஞர்கள் துறவறம் என ஒரு அறத்தைக் கற்பிக்கவில்லை. ஆயினும் கிருஸ்துவின் காலத்தில் எஸ்ஸேனர் (Essenes) எனத் துறவறம் பூண்டோர் சிலர் யூதர்களிடையே இருந்தனர். கிருஸ்துவின் முன்னோடியாக விளங்கித் தம்மிடம் வந்தோர் அனைவர்க்கும் திருமுழுக்களித்த யோவானும் துறவியே. ஆனால் கிருஸ்து ஒரு துறவியைப் போல வாழவில்லை. துறவறம் என ஒரு அறத்தைக் கற்பிக்கவும் இல்லை. கிருஸ்து மிக உயர் ஆடைகள் அணியாவிட்டாலும் பொதுவாக நல்ல ஆடைகளையே அணிந்தார். அன்பர்கள் விருந்துக்கழைத்த போது உடன்பட்டுச் சென்று விருந்துண்டார். ஓரளவு திராட்சைப் பழச்சாறும் அருந்தினார். பிறர் நலத்துக்காகத் தம் நலத்தை எப்பொழுதுப் துறக்க ஒருப்பட்டு இறுதியில் உயிரையும்

8. மூலத்தில் (கிரேக்க மொழியில்) கெஹென்னா (Gehenna) எனவரும் சொல்லே தமிழ்மொழிபெயர்ப்பில்நரகம் என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கஹேன்னா என்பது எருசலேம் நகருக்குப் புறம்பேயுள்ள, நகரின் குப்பை கூளங்களைக் கொட்டி எரிப்பதற்கேற்ற ஓர் இடமாகும். பிற்காலத்தோர் இச் சொற்கு நரகம் எனப் பொருள் கொண்டனர். அழிவு என்ற கருத்தைத் தருவதாக இருக்கலாம். தற்கால இறையியல் அறிஞர் பலர் அவ்வாறு பொருள் கொள்வர். நரகம் எனப் பொருள் கொள்வோரும் உள்ளர்.

அளித்த பாபெருந்தியாகத்தை அவர் செய்தாராயினும் உலக நன்மைகள் அல்லது உலக இன்பங்கள் இயல்பாகவே தீயன, அவற்றைத் துறத்தல் வேண்டும் என னும் கருத்து அவரிடம் இருக்கவில்லை. இம்முறையில் தமக்கும் யோவான் ஞானஸ்நானனுக்கும் உள்ள வேறுபாட்டை அவர் தாமே எடுத்துக் கூறினார். யோவான் நல்லுணவு திராட்சைப் பழச்சாறு முதலியவற்றை உண்ணாதவனாயிருந்தும் அவனையும் குறை கூறினார். தாம் இவற்றை ஏற்றுக் கொள்வதைக் கண்டு உணவில் அதிக விருப்பமும் திராட்சைப் பழச்சாற்றை அருந்துவதில் ஆவலும் உடையவர் பாவிகளுக்கும் ஆயக்காரருக்கும் நண்பர் என அதையும் குறை கூறுகின்றனரே யென்றார் (மத். 11-19)

வள்ளுவர் அறத்தை இல்லறம் துறவறம் என இருவகையாகப் பிரித்து எழுதினார் ஆயினும் துறவறவியலில் கூறப்படும் அருளுடைமை, கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னாசெய்யாமை, கொல்லாமை என்பன உண்மையில் துறவிகட்குமட்டுமின்றிப் பிறர்க்கும் பொருந்துவனவே. கிருஸ்து துறவறத்தைக் கூறாவிடினும் இவ்வறங்களிற் பல அவராலும் கூறப்பட்டன என்பது மேலே காட்டப் பட்டது.

துறவறம் எனத்தனியே ஓர் அறத்தைக் கூறாவிடினும் வாழ்க்கையில் உயர்ந்த நன்மைகளைப்பெறுவதற்காகப்பிறவற்றைத் துறக்க வேண்டிய அமையங்களும் உள எனக் கிருஸ்து கருதினார். ஆன்மீக வளர்ச்சிக்கு அல்லது இறைப்பணிக்குத் தடையாக இருப்பவற்றைத் துறத்தல் வேண்டும். "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப் படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" (மத். 6.26) மற்றும் தம்மைப் பின்பற்றுவோர் அவ்வாறு பின்பற்றுவதற்குத் தடையாக இருப்பின் பெற்றோரை உறவினரை மக்களை என யாரையும் துறத்தல் வேண்டுமென்றார், பின்பற்றுங்கால் உயிருக்கே ஊறு நேரும் நிலை எற்படின் உயிரையும் துறப்பதே ஏற்றது என்றார் (மத். 10.34-39) அவ்வாறு உயிரையிழப்பவர் உண்மையில் அதைக் காப்பர், அதாவது மறுமையில் நலமடைவர் எனவும் கூறினார். ஓரமையம் கிருஸ்து தம் சீடர்களுடன் உரையாடும்போது இறையாட்சியின் பொருட்டுத் திருமணம் செய்யாது வாழ்ந்து பணி செய்வோரும் உண்டு என்றார். ஆயினும் தம் சீடரை அவ்வாறு வாழும்படி கூறவில்லை. அதை ஏற்றுக் கொள்ள வரம் பெற்றவரேயன்றிப் பிறர் அதை ஏற்றுக் கொள்ளார் என்றார் (மத்.

19. 11 12) 'தவமும் தவமுடையார்க்காகும்' (குறள் 262) என்பது போலப் பிரமசரிய வாழ்க்கையும் ஒரு சிலருக்கே தகும் எனக் கருதினார் போலும். அதையும் இறைபணிக்காகச் சிலர் மேற்கொள்வர் எனக் கூறினாரேயன்றி அதில் தனிச்சிறப்பு ஏதும் இருப்பதாகக்கூறவில்லை.

செல்வத்தில் அதிகப்பற்று வைத்தலாகாது என்னும் கருத்தும் கிருஸ்து பெருமானின் போதனைகளில் இடையிடையே காணப்படு-வதே. தம்மிடம் வந்து 'நான் நித்திய வாழ்வையடைவதற்கு யாது செய்ய வேண்டும்?' என வினவிய பெருஞ்செல்வனை நோக்கி 'உன உடைமைகளை விற்று வறியவர்க்கு அளித்துவிட்டு என்னைப் பின்-பற்றி வா' என்றார். அவன் அவ்வாறு செய்யமனமில்லாது திரும்பிச் சென்றதை நோக்கித் தம் சீடர்களைப் பார்த்து, 'பெருஞ்செல்வர் இறையரட்சியில் புகுவது ஒட்டகம் ஊசிக்காதின் வழியே செல்வதைப் போல அரிதா யிருக்கிறது' என்றார் (மத். 19 21-24). மலைப் பொழிவிலும் மண்ணுலகில் அதிக செல்வத்தைச் சேர்த்து வைக்க முயலாது விண்ணில் செல்வத்தைச் சேர்க்க வேண்டும் எனக் கூறினார். ஒருமுறை சகோதரர்களிருவரிடையே பாகப் பிரிவினை குறித்து மாறுபாடு ஏற்பட்டிருப்ப அவர்களில் ஒருவன் கிருஸ்து-வையணுகித் தன் சகோதரன் தனக்குச் சேரவேண்டிய பாகத்தைக் கொடுக்குமாறு அவனுக்கு அறிவுரை கூறும்படி கேட்டான். கிருஸ்து மறுத்துச் செல்வத்தில் அதிகப்பற்றுவைப்பதன் மடமையைக் குறித்து ஒரு கதையையும் கூறினார்.

''பின்பு அவர் அவர்களை நோக்கி; பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் ; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தியிருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார்.

அல்லாமலும் ஒரு உவமையை அவர்களுக்குச் சொன்னார். ஐசுவரியமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது.

அப்பொழுது அவன் நான் என்ன செய்வேன் என் தானியங்-களைச் சேர்த்து வைக்கிறதற்கு இடம் இல்லையே.

நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்து, பெரி-தாகக்கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்துவைத்து, பின்பு : ஆத்துமாவே உனக்காக அநேக வருஷங்களுக்குஅநேகம் பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது.

நீ இளைப்பாறிப் புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக் கொண்டான்.

தேவனோ அவனை நோக்கி ; மதி கேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியே எடுத்துக் கொள்ளப்படும். அப்பொழுது நீ சேகரித்து வைத்தவைகள் யாருடையதாகும் என்றார்.

தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல் தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறவன் இப்படியேஇருக்கிறான் என்றார்'' (லூக் 12. 15-21).

இக்கதை, 'ஒரு பொழுதும் வாழ்வதறியார் கருதுவகோடியும் அல்ல பல' (337 என்ற) குறளின் கருத்தோடு ஒப்பிடற்குரியது. ஆயினும் இங்குக் கிருஸ்து வெறும் துறவைப் போதிக்காது செல்வத்தைத் தனக்கென வைத்து மகிழாமல் இறைபணியில் பயன்படுத்த வேண்டுமென்பதையே வலியுறுத்த விரும்புகிறாரென்பதை இறுதி வாக்கியம் காட்டும்.

பின்னும் செல்வர்கள் செல்வத்தில் அதிகப் பற்றுவைக்காவிடில் அவற்றைக் கொண்டு வறியவர்க்கு உதவியளித்தல் கூடும். அதிக உணவும் உடையும் உள்ளவர்கள் அவற்றையில்லாதோர்க்குப் பகிர்ந்தளிக்க வேண்டும் எனத்திருமுழுக்களித்த யோவானும் கூறினார். கிருஸ்துஒரு பெருஞ்செல்வனைநோக்கி 'உன் பொருளை விற்று வறியவர்க்கு அளித்துவிட்டு என்னைப் பின்பற்றிவா' எனக் கூறிய போதும் வெறுந்துறவையன்றிச்செல்வத்தை வறியவர்க்குப்பயன்படுத்தலையே கூறினார் கிருஸ்து தன் வீட்டிற்கு வரப்பெற்ற மகிழ்ச்சியினால் சாக்கயஸ் தன் பொருள்களில் பாதியைவறியோர்க்கு வழங்கமுன் வந்தான். கிருஸ்து ஒரு பெருஞ்செல்வனையும் அவன் வீட்டு வாயிலிலிருந்து ஐயமேற்ற வறியவனொருவனையும் குறித்துக் கூறிய கதையிலும் அச்செல்வன் பிறர்க்கு உதவாததனால் மறுமையில் துன்புற்றான் எனக் கூறினார் (லூக். 16. 19-31).

இவ்வாறன்றித் துறவுக்காகவே துறவு என்னும் கருத்து நற்செய்திநூல்களில் இல்லை. திருக்குறளில் துறவு, அவா அறுத்தல் என்னும் அதிகாரங்களில் காணப்படும், 'பற்று அனைத்தையும் நீக்க வேண்டும், ஐம்புலன்களையடக்க வேண்டும், யாவற்றையும்துறத்தல் வேண்டும், அவா அனைத்தும் துன்பத்தைத் தரும். அவாவை

நீப்பதே இன்பமாகும், வேண்டாமையே விழுச்செல்வம் என்னும் கருத்துக்கள் கிருஸ்துவின் கூற்றுக்களில் காணப்படாதவையே. கடவுளைப் 'பற்றற்றான்' 'வேண்டுதல் வேண்டாமை யிலான்' எனக் கூறிய வள்ளுவர் 'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்றுவிடற்கு' (356) அதாவது 'பற்றற்றானாகிய கடவுளையேபற்றல் வேண்டும், அதுவும் பிற பயன் கருதியன்று. பற்று விடற்கேயாம்' என்றார். கிருஸ்து கடவுளைத் தந்தையாகக் கருதினாரேயன்றிப் பற்றற்றவராகக் கருதவில்லை. கெட்டகுமாரன் கதையில் தந்தையும் காணாமற்போன ஆட்டின் கதையில் மேய்ப்பனும் பற்றற்றவர்களாகவா காட்டப்படுகிறார்கள்? ஆகவே கிருஸ்து தம் கடவுட் கொள்கைக் கேற்றபடி 'பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள்' (மத். 5-48) எனவும் 'உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறது போல, நீங்களும் இரக்கமுள்ளவராயிருங்கள்' (லூக்.6.36) எனவும் கூறினாரேயன்றிப் 'பற்றற்றிருங்கள்' எனக் கூறவில்லை, தாமும் பற்று அற்றவராக இருக்க முயலவில்லை.

கிருஸ்துவுக்குத் தாம் பிறந்த நாட்டிலும் இனத்திலும் பற்று இருந்தது. பிற யூதர்களைப் போலவே எருசலேம் நகரிலும் அவர் பற்றுடையவராயிருந்தார். தம் குடும்பத்தினரிடம் அன்பு பாராட்டினார். தாம் இறக்கும் நிலையிலும் தம் அன்னையின் பிற்காலத்தை யெண்ணி அவரை ஆதரித்துப் பேணுமாறு தம் சீடரொருவரிடம் வேண்டினார். ஆயினும் தம் குடும்பத்தோர் விருப்பின்படி நடவாது இறைபணியையே போற்றினார். பல நண்பர்களிடத்தில் அன்புடன் பழகினார். ஆயினும் தம் சீடரிடமே அவர் அதிக அன்பு பாராட்டினார். சிறைப்படுமுன் இறுதி யிராவுணவுண்ண ஒரு நண்பரின் இல்லத்தில் தம் சீடருடன் அமர்ந்தபோதும் தாம் பாடுபடுவதன் முன் அவர்களோடு கூட அவ்வுணவை உண்ண மிகவும் ஆவலாக இருப்பதாகக் கூறினார் (லூக் 22. 15).

பற்று இருக்குங்கால் இன்ப துன்பமும் இருத்தல் இயல்பே. வள்ளுவர் இடுக்கண் அழியாமையில் சில குறள்களில் கூறும் இன்பத்தையும் துன்பத்தையுஞ் சமமாகக் கருதல் வேண்டும் என்னும் கருத்தும் சீனோ என்னும் அறிஞரைப் பின்பற்றிய கிரேக்கரின் இன்ப துன்ப நடுநிலைக் கொள்கையை (Stoicism) ஒக்குமேயன்றி அக்கருத்தும் நற்செய்தி நூல்களில் இல்லை. இன்பதுன்பத்தைச் சமமாகக் கருதுதலன்றி ஒருநற்குறிக்கோளுக்காகத் துன்பத்தை உவந்து ஏற்றுக்கொள்ளுதல்

வேண்டுமெனவே கிருஸ்து கற்பித்தார் நீதியின் பொருட்டுத் துன்பப் படுபவர் பாக்கியவான்கள், விண்ணுலக ஆட்சி அவர்களுடையது என்றும் தம்மைப் பின்பற்றுவதனால் பிறரால் நிந்திக்கப்பட்டும் பல-தீமைகள் செய்யப்பட்டும் துன்புறுவோர் மகிழ்ச்சி யடைந்து களி கூருதல் வேண்டும், ஏனெனில் அவர்கள் பலன் மிகுதியாயிருக்கும் எனவும் கூறினார் (மத் 5.10-11).

கிருஸ்து தாமே இன்பதுன்பமில்லாதவராக இருக்கவில்லை. நற்செய்தி நூல்களில் பல இடங்களில் அவர் ஏதாவது ஒரு நிகழ்ச்சி-யைக் குறித்து மகிழ்ச்சியடைந்தமை கூறப்படுகிறது. சமேரியர்கள் சிலர் தம் போதனைகளைக் கேட்க ஆவலாக இருந்ததைக் கண்டுமிக்க மகிழ்ச்சி கொண்டு உணவுண்பதையும் மறந்தார். சில சமயங்களில் சினமும் கொண்டார் எனக் கூறப்படுகிறது. ஓய்வு நாளில் அவர் ஒரு நோயாளியைக் குணமாக்க எண்ணியபோது சிலர் அவர் ஓய்வு நாளில் குணமாக்கினால் அவரைக் குற்றம் சாட்டலாமென்னும்நோக்-கத்துடன் அவர் என் செய்வார் என நோக்கிக் காத்திருக்க அதைக் கண்டு சினமுற்றார். அவர்களின் இருதய கடினத்தினிமித்தம் மனம் வருந்திக் கோபத்துடன் சுற்றிலுமிருந்தவர்களைப் பார்த்துப் பின் முடங்கின கையுடனிருந்த நோயாளியைக் குணமாக்கினார் என மார்க்கின் நற்செய்தி கூறுகிறது (மார் 3.1-6). ஆலயத்திலிருந்த வணிகர்களை அப்புறப்படுத்திய போதும் சினமுற்றார். எருசலேம் நகருக்குத் தம் காலத்தின் பின் வரப்போகும் துன்பத்தையெண்ணிக் கண்ணீர் சிந்தினார். தம் சீடர்களில் ஒருவர் தம்மைக் காட்டிக் கொடுக்கப் போவதையறிந்து மிக்க துயருற்றார். கெத்சமனே தோட்டத்தில் கடவுளை வழிபட்டு வேண்டிக் கொண்டபோதும் கடுந்துய-ரத்தில் ஆழ்ந்தார். துயரத்தில் தம் சீடர்களின் துணையையும் தோழ-மையையும் நாடினார். 'விழித்திருந்து என்னுடன் இறைவனை நோக்-கித் தீமையினால் மேற்கொள்ளப்படாதபடி வேண்டிக் கொள்ளுங்கள்' என்றார்.

நற்செய்தி நூல்களில் காட்டப்படும் கிருஸ்து தன்னலமற்றவ-ராகவும் அன்பும் இரக்கமும் நிறைந்தவராகவும் இருந்தார். ஆனால் அவர் இன்பதுன்பங்களினால் பாதிக்கப்படாத பற்றற்ற துறவியாக இருக்கவில்லை.

7. 2. 5. நோன்பு முதலியன

கிருஸ்துவின் காலத்தில் யூதர்களில் பலர் சில குறிப்பிட்ட நாட்களில் சில வேளை உணவை நீத்தோ அன்றி நாள் முழுவதும் உண்ணாதிருந்தோ நோன்பு மேற்கொண்டனர். கிருஸ்துவின் சீடர்கள்

அவ்வாறு நோற்காதது பற்றிப் பரிசேயர் குறை கூறினர் என்பது முன்பே குறிப்பிடப்பட்டது. கிருஸ்து கூறிய பதில், மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய தோழர்கள் நோன்பு மேற்கொள்ளமாட்டார்கள்; ஆனால் மணவாளன் அவர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளப்படும் காலம்வரும், அப்போது அவர்கள் உபவாசிப்பார்கள் என்பதே (மார். 2. 19-20). ஒருமுறை அவர், சீடர்கள் வலிப்பு நோயினால் துன்புற்ற ஒருவனைக் குணமாக்க முயன்று இயலாது போனபின் ஏன் தம்மால் அது முடியவில்லை என அவரை வினவிச் செபத்தினாலும் உபவாசத்தினாலுமே அத்தகைய ஆற்றலைப் பெற முடியும் என்றார் (மத். 17. 21). ஆகவே உபவாசம் அல்லது உணவுண்ணாது நோற்றலுக்குச் சமய வாழ்க்கையில் இடமுண்டு என இயேசு கருதினார். ஆனால் அதையே மிக முக்கியமாகக் கருதவில்லை யெனக் கொள்ளலாம்.

'உண்ணாது நோற்பர்' 'ஆற்றுவாராற்றல் பசியாற்றல்' என வரும் திருக்குறள் தொடர்களினால் வள்ளுவரும் உபவாசத்தை யேற்றுக் கொண்டார் என்பது பெறப்படும் ஆயினும்,

உண்ணாது நோற்பர் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின் (160)
ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவா ராற்றலின் பின் (226)

என்றே கூறுவதனால் அவரும் நோன்பைவிடப் பிற அறங்களையே முக்கியமாகக் கருதினார் என அறியலாம்.

ஓய்வுநாளை ஆசரிப்பதைக்குறித்துக் கிருஸ்துவுக்கும் பரிசேயர்க்கும் இடையே ஏற்பட்ட மாறுபாடும் முன்பே குறிப்பிடப்பட்டது. 'மனுஷன் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப்படவில்லை; ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது' எனக் கிருஸ்து கூறினார். (மார்க் 2. 27). பொதுவாகச் சமயச் சார்பான விதிகள் அல்லது ஒழுக்க முறைகள் மக்களுக்கு நன்மை பயப்பனவாயின் ஏற்றுக் கொள்ளத்தக்கன. அவற்றால் மக்களின் நலம் பாதிக்கப்படுமாயின் விலக்கத்தக்கன எனக் கொள்ளலாம். ஆயினும் அருளுடைமையே சமயச் சார்பான விதிகளை விட ஏற்றமுடையது. இக்கருத்து பொது அறங்களையே கூறி அன்பையும் அருளையும் போற்றிய வள்ளுவர் கருத்தோடு பொருந்துவதே.

'நோன்பு, வழிபாடு ஆகியவற்றையும் பிற அறங்களையும் பலர் காணச் செய்ய வேண்டா எனக் கிருஸ்து கூறினார். ஆரவாரமாகச்

செய்யப்படும் அறங்களை வள்ளுவரும் விரும்பவில்லையென்பதை 'ஆகுல நீர பிற' என்ற தொடர் காட்டும்.

7 2. 6. சமூகத்தில் மாதர் நிலை

வள்ளுவர் குலமகளை உயர்வாகக் கருதினார்.

பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பெனுந்
திண்மை யுண்டாகப் பெறின் (54)

எனக் கூறினார். பொது மகளிரைச் சேர்தலாகாது என ஆடவர்க்கு அறம் போதித்தார். பொதுமகளிர் செய்யத்தக்கது யாது எனக் கூறவில்லை. வள்ளுவர்க்குப் பின் மணிமேகலையாசிரியரே பொதுமகளிர்க்கும் நன்னெறி காட்ட முயன்றார்.

கிறுஸ்து மங்கையரனைவரையும் நன்மதிப்புடன் நடத்தினார். மகளிரைத் தாழ்வாகக் கருதவில்லை. பொதுமகளிராக வாழ்ந்த பெண்களுடனும் நட்புப்பூண்டு அவர்களை நன்னெறிப்படுத்தினார். அவ்வாறு அவரால் சீர்திருத்தப்பட்ட ஒரு பெண்மணியே நன்றிப் பெருக்கினால் அவர் பாதங்களைக் கண்ணீரினால் கழுவினாள் என நற்செய்தி நூல்களுள் கூறப்படுகிறது. இத்தகையோரிடம் அவர் பழகுவதைக் குறித்துப் பிறர் குறை கூறியதையும் அவர் பொருட்படுத்தவில்லை. ஒழுக்கம் தவறியவளெனப் பிறரால் நிறுவப்பட்டுத் தண்டனைக்காகக் கொண்டுவரப்பட்ட பெண்ணைக் காப்பாற்றி 'மாதே போ மறுபடித் தவறு செய்யாதே' எனக் கூறி அனுப்பினார் (யோ.8.1-8). ஆயினும் அவர் ஒழுக்கத்தை உயர்வாகப் போற்றினார். இந்நிகழ்ச்சியின் போதும் இத்தகையதொரு நிலைமை ஏற்பட்டதற்கு நாணித் தலை குனிந்தார். மாதர் பலரைத் தவறான ஒழுக்கத்தினின்றும் மீட்டு நல்வழிப்படுத்தினார்.

பொது மகளிரைக் குறித்து எழுதும்போது வள்ளுவருக்கு இருக்கும் இகழ்ச்சி மனப்பான்மை (contemptuous attitude) கிருஸ்துவிடம் இல்லை.

இனி,

சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை (57)

என்ற குறளினால் வள்ளுவர் பொதுவாக மகளிர் சமூகத்தில் உரிமையுடன் வாழவேண்டுமென விரும்பினாரென்று கொள்ளலாம். கிருஸ்து-

வின் காலத்தில் யூத சமுதாயத்தில் மகளிர் உரிமையுடன் வாழ்வதற்குப் பல தடைகள் இருந்தன. ஆயினும் மகளிர் பலர் கிருஸ்துவும் அவர் சீடர்களும் ஊருராகச் சென்று போதனை செய்த போது உடன் சென்றுபணி புரிந்தனர். அக்காலச் சமூகத்தடைகளை மீறி அவர் மாதர் பலருடன் நன்முறையில் பழகினார். தம் சமயக் கருத்துக்களைப் பெத்தனியில் வாழ்ந்த மார்த்தா, மேரி ஆகிய சகோதரிகள், சமேரியாவில் கிணற்றங்கரையில் கண்ட பெண்மணி போன்ற பல மாதர்க்குப் போதித்தார்.

7.2 7. அரசியல்

கிருஸ்து அரசியலைக் குறித்து அதிகமாகப் பேசவில்லை ரோமப் பேரரசனாகிய சீசருக்கு வரி செலுத்துவது ஏற்றதா எனச் சிலர் வினவிய போது ஒரு நாணயத்தைக் காட்டும்படி கேட்டார். பின் அதில் யாருடைய பெயரும் உருவமும் பொறிக்கப்பட்டிருக்கின்றன என வினாவினார். சீசருடையதே என அவர்கள் பதிலிறுத்தனர். சீசருடையதைச் சீசருக்கும் கடவுளுடையதைக் கடவுளுக்கும் அளிக்கும்படி கூறினார் இதன் பொருள் யாது? பொதுவாக நாட்டில் எவ்வகை அரசு நிலவுகிறதோ அவ்வரசுக்குக் குடிமக்கள் தம் கடமையைச் செய்யவேண்டும் எனக் கொள்ளலாம். ஆனால் அவ்வரசு எத்தகையதாக இருக்க வேண்டும் என்பதைக் குறித்து அவர் யாதும் கூறவில்லை.

கிருஸ்து கூறிய உருவகக் கதைகள் பல அரசனுக்கும் குடிமக்கட்கும் அல்லது ஒரு தலைவனுக்கும் பணியாட்கும் இடையே உள்ள தொடர்பைக் காட்டுவன. அவரவர் தத்தமக்கு மேல் தலைமைப் பொறுப்பிலுள்ளோர்க்கும் கீழ்ப்படிந்து உண்மையுடன் நடந்து கொள்ளும் தன்மையையே இக்கதைகள் பொதுவாக ஆதரிக்கின்றன. நாட்டில் சட்டதிட்டங்களும் ஒழுங்குமுறைகளும் பாதுகாக்கப்படவேண்டும், மக்கள் கட்டுப்பாடுகளுடன் நடந்து தங்கள் கடமைகளைச் செய்ய வேண்டும் எனவே அவர் விரும்பினார் எனலாம்.

எத்தகைய சமுதாய அமைப்பை அல்லது அரசியல் முறையை மக்கள் வகுத்துக் கொள்ளவேண்டும் எனக் கிருஸ்து திட்டமாகக் கூறவில்லை. அரசியலமைப்புகள் காலத்துக் கேற்றபடி மாறுதல் கூடும். கிருஸ்து கூறிய அறக் கருத்துக்களுடன் மாறுபடாததாயும் அவ்வறங்களை மக்கள் பின்பற்ற வழி வகுப்பதாகவும் இருக்கும் அமைப்பையே அவர் விரும்புவார் எனலாம்.

வள்ளுவர் காலத்தில் முடியாட்சியே தமிழ்நாட்டில் நிலவியது. தமிழ்மன்னரே தமிழ்நாட்டை யாண்டனர். ஆகையால் பொதுவாக மக்களனைவரும் அவ்வாட்சியை ஆதரித்தனர். அரசர்க்கு வரி செலுத்துவது ஏற்றதா என்ற கேள்வி எழ இடமில்லை. குடிமக்கள் வரி செலுத்துதலும் பிற கடமைகளையும் தக்கவாறு செய்தலுமே வள்ளுவர் கருத்துக்கு ஏற்றதாகும். வள்ளுவர் அரசரிடம் பெருமதிப்பு வைத்திருந்தார். அரசர்கள் தம் பொறுப்பையுணர்ந்து குடிமக்களின் நலத்தைப் பேணிச் செங்கோல் செலுத்தவேண்டுமென்பதைப் பன்முறை கூறி வலியுறுத்தினார். கொடுங்கோலரசர்கள் தோன்றக்கூடும் என்பதையும் உணர்ந்திருந்தார். அரசர்கள் தவறு செய்யின் அமைச்சர் இடித்துரைத்து ஆட்சியில் நேரும் தவறுகளைத் திருத்த முயலவேண்டுமெனக் கூறினாரேயன்றிக்குடிமக்கள் அரசைஎதிர்க்கலாமெனக் கருதவில்லை. அமைச்சரும் அரசரைமீறி நடக்கலாமென அவர் கருதியதாகத் தெரியவில்லை. வள்ளுவரும் பொதுவாக மக்கள் கட்டுப்பாட்டுடன் நடந்து மேற்பொறுப்பிலுள்ளோர்க்குக் கீழ்படிதலையே விரும்பினாரெனக் கருதலாம். தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல் முதலிய அதிகாரங்கள் அரசியல் அலுவலர் அரசனுக்கு அடங்கி நடக்கக் குடிமக்கள் அவர்கட்கு அடங்கி நடக்கும் இயல்பையே காட்டும்.

வள்ளுவர் முடியாட்சியின் காலத்தில் வாழ்ந்தாராயினும் அவர் அரசியலிலும் அமைச்சியலிலும் கூறிய கருத்துக்கள் பல தற்காலத்திலும் ஆட்சிப் பொறுப்புடையவர்க்குப் பொருந்துவனவே.

7. 2. 8. உள்ளப்பண்புகள்

தாழ்மை, உண்மை ஆகிய பண்புகளைக் கிருஸ்து போற்றினார். தாழ்மையைப் பன்முறை புகழ்ந்தார். எவன் பெரியவன் என்பதைக் குறித்துத் தமக்குள் உரையாடிய சீடர்களை நோக்கி 'எவனாகிலும் முதல்வனாயிருக்க விரும்பினால்அவன்எல்லோருக்கும் கடையனாகவும் பணியாளாகவும் இருக்கக் கடவன்' என்றார். ஒரு சிறு குழந்தையின் தற்பெருமையின்மையைத் தாழ்மைக்கு எடுத்துக்காட்டாகக் கொண்டார் (மார். 9.34-36) மற்றோர் அமையம் கிருஸ்து பிற இனத்தவரிடையே ஆட்சிப் பொறுப்புடையோர் மக்களை இறுமாப்பாய் ஆளுகிறார், அவர்களுள் பெரியவர்கள் பிறர் மேல் கடினமாய் ஆட்சி செலுத்துகிறார்கள் என்பதைக் குறிப்பிட்டுத் தம்மைப் பின்பற்றுவோரிடையே அவ்வாறன்றிப் பெரியவன் பிறருக்குப் பணி புரிபவனாகவும் முதன்மையுள்ளவன் பிறருக்கு ஊழியனாகவும் இருத்தல் வேண்டும். என்றார் (மார். 10. 42-44).

விருந்து முதலிய நிகழ்ச்சிகளில் முதலிடங்களைத் தேடுவது எவ்வளவு தகுதியற்றதென எடுத்துக் கூறினார். தற்பெருமையுடன் வழிபாடு செய்த பரிசேயனைக் கண்டித்தார். 'தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்'. தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்' (மத். 23. 12) என்றார்.

கிருஸ்து தாமே தாழ்மையுடையவராயிருந்து பணிபுரிந்தமை அவர் வாழ்கை முழுவதிலும் காணப்படும் இயல்பாகும்.

வள்ளுவர் தாழ்மை அல்லது பணிவுடைமையைக் குறித்து ஓதிகாரம் எழுதாவிடினும் உள்ளத்தில் தாழ்மையையும் நடத்தையில் பணிவையும் அவரும் போற்றினார் என்பதைப் பலகுறள்கள் காட்டும்.

பணிவுடையான் இன்சொல னாதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற (95)

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து (125)

பணியுமாம் என்றும் பெருமை: சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து (978)

பெருமை பெருமித மின்மை சிறுமை
பெருமித மூர்ந்து விடல் (979)

என்னும் குறள்கள் பணிவுடைமையைத் தற்பெருமையின்மையைச் சிறப்பிக்கும். உள்ளத்தில் தாழ்மை குடிமக்கட்கு மட்டுமன்றி அரசர்க்கும் வேண்டப்படுவதொன்று எனவே வள்ளுவர் கருதினார். கிருஸ்து பிற இனத்தவரிடையே அரசர்கள் இறுமாப்பாய் ஆள்வதைக் கூறியபோது அக்காலத்து யூதர்களை யாண்ட ரோமப் பேரரசர்களை யெண்ணிக் கூறியிருக்கலாம். அல்லது யூதர்கட்கு அயலிலிருந்த பிற நாடுகளை யெண்ணிக் கூறியிருக்கலாம். அரசர்களோ அரசியலலுவலில் ஈடுபட்ட மேன்மக்களோ குடிகளை இறுமாப்பாய் ஆள்வதோ கடினமாக ஆட்சி செலுத்துவதோ தகும் என்பது என்றும் வள்ளுவரின் கருத்தன்று. தமிழிலுள்ள பிற நீதிநூல்களும் அவ்வாறு கூறவில்லை. அரசன் காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லனல்லனாகவும் இன் சொலால் ஈத்தளிக்க வல்லவனாகவும் இருத்தல் வேண்டுமென வள்ளுவர் கருதினார். மாண் பிறந்த மானம் அரசர்க்குத்தக்கதன்று தன் அமைச்சரிடத்து அரசன் செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடையவனாகத் திகழவேண்டும். அரசர்கள் செருக்கற்றவர்களாக இருத்தல் வேண்டும் என்பதை.

செருக்கும் சினமும் சிறுமையு மில்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து (431)

என்னும் குறளில் கூறினசர். கிருஸ்து தன்னைவியந்த பரிசேயனைக் கண்டித்தார். வள்ளுவர் 'வியவற்க எஞ்ஞான்றும் தன்னை' (439) எனவே அரசர்க்கும் அறிவுரை கூறினசர் இவ்வாறு வள்ளுவர் 'இறைமாட்சி'யினும் 'குற்றங்கடிதலி'லும் அரசர்க்கும் உள்ளத்தாழ்மையை விதித்தார்.

சொல்லிலும் செயலிலும் உண்மையையும் கிருஸ்துபோசற்றினார். உள்ளத்தில் உண்மையில்லாது வெளியே வழிபாட்டையும் அறங்களையும் செய்தலைக் கண்டித்தார். வள்ளுவரும் மனத்தொடு வாய்மை மொழிதலையும் (295) உள்ளத்தாற் பொய்யா தொழுகுதலையும்(294) போற்றினார். துறவு வேடம் பூண்டொழுகி உள்ளத்தில் உண்மையில்லாதிருப்போரையே வள்ளுவர் கூடாவொழுக்கம் என்னுமதிகாரத்தில் வன்மையாகக் கண்டித்தார்.

பொய்வேடம் பூண்டொழுகும் சமயத்தலைவர்களைக் குறித்துக் கிருஸ்து எச்சரித்தார்.

''கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் ; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டு உங்களிடத்தில் வருவார்கள் ; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்'' (மத்.-7.15)

வள்ளுவரும் போலித்துறவிகளைக்குறித்து ஓர் உவமைகூறினார்.

வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று (273)

ஓநாய் ஆட்டின் தோலைப்போர்த்துக் கொண்டு ஆட்டுமந்தையிடையேவரின் ஆடுகள் அறியாது அஞ்சாது நிறகும். ஓநாய் அவற்றைப்பற்றி உண்ணலாம். பசு புலியின் தோலைப் போர்த்துக் கொண்டு வயலில் செல்லின் வயலைக் காப்போர் அஞ்சி நீங்குவார் பசு பயிரை மேயலாம். உள்ளத்தில் பக்தியும் ஆழ்ந்த சமயப்பற்றும் இன்றிப் பிறரை ஏமாற்றித் தாம் நன்மைபெறும் பொய்வேடத்தார்க்கு இருவர்கூறிய உவமைகளும் நன்கு பொருந்துவனவே. போலித்தீர்க்கதரிசிகளை எவ்வாறு அறியலாம்? அவர்கள் செயல்களை, அவர்களால் ஏற்படும் பலாபலன்களை ஆராய்ந்து அறியலாம் எனக்கிருஸ்து கூறினார்.

"அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்; முட்செடிகளிலே திராட்சைப் பழங்களையும் முட்பூண்டுகளிலே அத்திப் பழங்களையும் பறிக்கிறார்களா?

அப்படியே நல்ல மரமெல்லாம் நல்லகனிகளைக் கொடுக்கும்; கெட்டமரமோ கெட்டகனிகளைக் கொடுக்கும்.

ஆதலால் அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" (மத். 7. 16, 17, 20)

வள்ளுவரும் போலித்துறவிகளையும் உண்மைத் துறவிகளையும் அவர் செயல்களைக் கொண்டே அறிக என்றார்.

கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற்கொளல் (279)

அம்பு செவ்விதாக இருப்பினும் (நேராக இருப்பினும்) செயலினாற் கொடிதாகும். யாழின் கோடு கோடியதாக (வளைந்தாக) இருப்பினும் அதன் செயல் இனிமை பயக்கும் செவ்விய செயலாகும். ஆகவே மக்களையும் துறவு வேடம் முதலிய தோற்றத்தால் கொள்ளாது செயல்களை ஆராய்ந்து அவர் செயல் அறமாயின் நல்லோர் எனவும் செயல் தீதாயின் தீயோர் எனவும் கொள்ளுதல் வேண்டும்.

இனி மக்களனைவருமே ஓரளவு தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்கின்றனர். பிறரிடம் உள்ள குற்றங்களை எளிதில் காண்கின்றனர். தம்மிடமுள்ள குறைகளை உணர்வதில்லை. தம்மை நல்லோர் எனக் கருதுகின்றனர். இதைக் கிருஸ்து நன்கு உணர்ந்தார். அவரவர் குற்றங்களை ஆயுமாறு பணித்தார்.

"நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல் உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?

இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி: நான் உன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப் போடட்டும் என்று நீ சொல்கிறதெப்படி?

மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப் போட வகை பார்ப்பாய்" (மத் 7. 3-5).

மக்களின் இவ்வியல்பை உணர்ந்தே வள்ளுவரும்.

ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு (190)

என்றார். அரசர்களையும் தம் குற்றம் நீக்கிப்பிறர் குற்றம் காணும்படி கூறினார். (436).

கிருஸ்து போற்றிய மற்றொரு பண்பு அஞ்சாமையாகும். அரசியலைக் கூறாத அவர் போரில் வீரத்தைப் போற்றவில்லை. பிறர் எவ்வகைத் துன்பத்தைச் செய்யினும் தளராதிருக்கும் வீரத்-தையே போற்றினார். நீதிக்காக அல்லது இறைபணிக்காகத் துன்-பத்தையேற்றுக் கொள்ள வேண்டும். உயிரை இழக்க நேர்ந்தாலும் பின் வாங்கலாகாது. இத்தகைய அஞ்சாமையைக் கடவுளிடத்து உள்ள நம்பிக்கையினாலேயே பெறலாம் என அவர் கருதினார். உடலை அழிக்கும் வல்லமையுள்ள மக்களுக்கு அஞ்சாமல் உடலையும் உயிரையும் அழிக்கவல்ல இறைவனுக்கே அஞ்சுதல் வேண்டும் என்றார். (மத். 10.28).

அரசர்க்கும் வீரர்க்கும் தனித்தனியே அறத்தைக் கூறிய வள்ளுவர் போரில் காட்டப்படும் வீரத்தையும் போற்றினார். அஞ்சாமையை அரசர்க்குரிய குணங்களில் ஒன்றாகக் கருதினார் (382). போரில் படை, நட்பு முதலியவற்றைவிட அரசனுக்குத் துணையாக இருப்பது தன் உள்ளத்திண்மையே எனக் கருதி, 'எஞ்சாமை எண்ணி இடத்தாற் செயின், அஞ்சாமை அல்லால் துணை வேண்டா' (497) என்றார் படையைக் குறித்துக் கூறும் போது ஊறஞ்சாவன்கண்' 'ஊறஞ்சாவெல்படை' 'உறின் உயிர் அஞ்சாமறவர்' என வீரர்க்கு வேண்டிய அஞ்சாமையைச் சிறப்பித்-தார்.

போரில் காட்டப்படும் வன்கண்மையையும் போற்றியபோதும் வள்ளுவர் வாழ்க்கையில் பிறர் செய்யும் துன்பங்களைப் பொறுக்கும் பண்பில் தோன்றும் மனத்திண்மையையும் பாராட்டத் தவறவில்லை.

> இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
> என்ன பயத்ததோ சால்பு (987)

எனக் கூறிய வள்ளுவர் வாழ்க்கையில் பிறர் செய்யும் குற்றங்களைப் பொறுக்கும் இத்தகைய சாலபிற்கு வேண்டப்படும் உள்ளத்திண்-மையை உணர்ந்து பிறிதொரு குறளில் 'சால்பெனினும் திண்மை' (988) என்றார். 'வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை' (153) என்ற தொடரும் பொறுமைக்கு வேண்டப்படும் அஞ்சாமையைக் காட்டும்.

நன்மை செய்வதில் அஞ்சாமை வேண்டும். அஞ்சாது தீமை-யையும் செய்தல் தகுமா? கிருஸ்து ஆன்மாவையும் அழிக்கவல்ல

இறைவனுக்கு இறை நீதிக்கு அஞ்சுதல் வேண்டும் என்றார். வள்ளுவர் இறைவனுக்கு அஞ்சுக எனக் கூறவில்லை. பழிபாவங்கட்கு அஞ்ச வேண்டும் என்றார்.

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில் (428)

### 7.2.9. பிற கருத்துக்கள்

தீவினை யச்சத்தைக் குறித்து வள்ளுவர் ஓரதிகாரம் வகுத்தார். ஒருவன் தன் உள்ளத்தில் அல்லது தன் வாழ்வில் தீமை புகாதவாறு காக்க வேண்டிய அவசியத்தைக் குறித்துக் கிருஸ்து மிகவும் கண்டிப்பாகப் போதித்தார்.

''உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்து போடு. உன் சரீரம் முழுவதும் கெஹென்னாவில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும்உன் கண்களில் ஒன்று கெட்டுப் போவது உனக்கு நலமாயிருக்கும்.

உன் வலது கை உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்து போடு. உன் சரீரம் முழுவதும் கெஹன்னாவில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், உன் அவயவத்திலொன்று கெட்டுப் போவது உனக்கு நலமாயிருக்கும்.[9] (மத். 5. 29-30).

சினத்தைக் குறித்துக் கூறியபோதும் கிருஸ்து தன் சகோதரன் பேரில் சினங்கொண்டு வைபவன் கெஹென்னாவில் தள்ளப்பட ஏதுவாயிருப்பான் என்றார். இங்கும் கெஹென்னாவைக் குறிப்பிட்டார்.

சினத்தைக் காவாதவன் தன்னையே அழித்துக் கொள்கிறான் என்றார் வள்ளுவர்.

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப்பு ணையச் சுடும் (306)

எனச் சேர்ந்தோரையும் அவர்க்கு இனமாயவரையும் சுட்டெரிக்கும் நெருப்பாகச் சினத்தை உருவகித்தார். தீவினையச்சத்திலும்.

9. தமிழ் மொழிபெயர்ப்பில் நரகம் எனவரும் சொல் இங்குக் கெஹென்னா என மாற்றப் பட்டுள்ளது.

தீயவை தீய பயத்தலான் தீயவை
தீயினும் அஞ்சப் படும் (202)

எனக் கூறித் தீமையின் ஆற்றலை யுணர்த்தினார்.

உளவியலை நன்கு உணர்ந்தே இருவரும் சினத்தையும் தீமையையும் நெருப்பிற்கு (கெஹன்னா நெருப்பையுடைய ஓர் இடமே) ஒப்பிட்டிருத்தல் வேண்டும். சினம் உளத்தில் மிகாதும் குறையாதும் சமநிலையில் (in a static state) இருக்கத் தக்க ஒன்றன்று ஒன்றின் சினம் தணிதல் வேண்டும். அல்லது அது பெருகும்: பெருகி அழிவிற்கே வழிகோலும். தீமையும் அவ்வாறே சமநிலையில் இருப்பதன்று. அதை உள்ளத்தைவிட்டு அகற்றல் வேண்டும். அதற்குப் பதிலாக நன்மையை ஏற்றல் வேண்டும். இல்லாவிடில் தீமை பெருகி அழிவைத்தரும். தீயவை தீயபயக்கும் என்றார் வள்ளுவர். வீட்டில் ஓரிடத்தில் நெருப்புப் பற்றினால் அதை உடனே அவித்தல் வேண்டும். சிறிது நெருப்புத்தானே என வாளாவிருத்தல் இயலாது. அது பெருகி வீட்டை யழிக்கும் ஆகவே அது சினத்துக்கும் தீமைக்கும் பொருந்திய உவமையாயிற்று.

ஒருவன் ஒரு செயலைச் செய்யுமுன் அதைத்தன்னால் முற்றச் செய்து முடித்தல் இயலுமா, அதனால் அழிவு நேரிடுமா, நேரிட்டால் அதைத் தாங்கிக் கொள்ளத்தன்னால் ஆகுமா, இறுதியில் என்ன நன்மை ஏற்படும் என்பவற்றை நன்கு எண்ணி ஆய்ந்த பின்பே அதைச் செய்யத் தொடங்குதல் அறிவுடைமையாகும்.

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு (467)

கிருஸ்து தம் சீடராகச் சேரவிருப்புவோர் அதனால் ஏற்படத்தகும் பலாபலன்களை நன்கு எண்ணிய பின்னரே சேர்த்தல் வேண்டும் என்றார். அப்போது இரு உவமைகளை அவர் கூறினார். ஒருவன் ஓர் உயர் மாடத்தைக் கட்ட எண்ணுவானாகில் அதைக்கட்ட எவ்வளவு பொருள் வேண்டப்படும் என எண்ணித் தன்னால் அப்பொருளைச் செலவு செய்து அதைக் கட்டி முடிக்க முடியுமா என ஆய்ந்த பிறகே கட்டத் தொடங்குவான். ஒரு அரசன் போர் செய்யப்புறப்படுமுன் தன்னிடமுள்ள படையைக் கொண்டு பகையரசனின் படையை எதிர்த்து வெல்ல முடியுமா என இருவர் படைவலியையும் ஒப்பிட்டு ஆய்ந்த பின்பே போர் தொடங்குவான். தன்னால் பகையரசனை எதிர்த்து நிற்க முடியாது எனக்கண்டால் தூதரையனுப்பிச் சந்து

செய்வித்துக் கொள்ள முயல்வான். அவ்வாறே தன்னைப் பின்பற்று-வோரும் அதனால் வருந்துன்டங்களைத் தாங்கத் தம்மால் ஆகுமாஎன எண்ணியே துணிதல் வேண்டும் என்றார் (லூக். 14.27-33). இங்குக் கிருஸ்து உவமை முகத்தால், அரசன் போர் முறையைக் குறித்துக் கூறிய கருத்து வள்ளுவர் தெரிந்து செயல்வகை, வலியறிதல் என்னும் அதிகாரங்களில் கூறிய கருத்துக்களுடன் பொருந்துவதாயிற்று. அரசியலைக் குறித்துக் கூறாவிடினும் அரசியலறிவு கிருஸ்துவிடம் இல்லாமல் இல்லை.

வரப்போகும் தம்மரணத்தைக் குறித்துக் கிருஸ்து ஒரமையம் பின்வருமாறு கூறினார்.

''மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லு-கிறேன். கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்'' (யோ. 12. 24) இக்கூற்று,

நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகற் கல்லால் அரிது (235)

என்னும் குறளுடன் ஒப்பிடத் தக்கது ஆயினும் வள்ளுவர் வித்-தகரின் மரணத்தின்பின் அவர் புகழுடம்பு நிலைத்திருத்தலைக் கரு-தியே கூறியிருத்தல் வேண்டும் கிருஸ்து புகழையன்றித் தம் மரணத்-தினால் மக்கள் குலத்துக்கு ஏற்படும் நற்பயனைக் கருதியே கூறினார்.

வள்ளுவரும் கிருஸ்துவும் மறுமையுண்டு என்னும் கொள்கை-யையே கொண்டிருந்தனர். ஆயினும் இருவர் மறுமைக் கொள்-கைக்கும் வேறுபாடு உண்டு. கிருஸ்து பிற யூதர்களைப் போல் இவ்-வுலகில் மக்கள் ஒருமுறையே பிறந்து வாழ்வரென எண்ணியதாகத் தெரிகிறது. சென்ற பிறவி, மறுபிறவி, வினைத் தொடர்பு ஆகிய கருத்-துக்கள் நற்செய்தி நூல்களில் இல்லை.

உயிருடம்பின் நீக்கியார் என்ப செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர் (330)

என்ற குறளால் வள்ளுவர் இப்பிறவியில் நோயினால் துன்புறுபவர் சென்ற பிறவியில் செய்த தீவினையின் பயனை அனுபவிக்கின்றனர் என்ற கருத்தைக் கூறுகிறார்.

இதற்கு மாறாகக் கிருஸ்துவின் சீடர் சிலர் பிறவிக் குருடன் ஒருவனைச் சுட்டி 'ஆசிரியரே, இவன் குருடனாய்ப் பிறந்தது யார்

செய்த பாவம், இவன் செய்த பாவமா, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமா? என அவரை வினவ அவர், 'இது அவன் செய்த பாவமும் மல்ல. தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்' என்றார். பின் அவனுக்குப் பார்வையளித்தார் (யோ 9. 1-3). நோய் முதலியவற்றைக் குறித்து இறைவனின் நோக்கம் ஏதோஒன்று அதன் மூலம் நிறைவேறுகிறது எனவே அவர் கருதியதாகத் தெரிகிறது.

இம்மைக்கும் மறுமைக்கு முள்ள தொடர்பைக் குறித்துக் கிருஸ்து கூறிய கூற்றுக்களில் ஒன்று பின்வருமாறு.

''பூலோகத்தில் நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' (மத். 18-18).

இங்குக் கட்டு என்பது அன்புத் தளையையே. இக்கூற்று

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தம்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு (107)

என்ற குறளுடன் ஒப்பிடற்குரியது. குறள் பல பிறவிகளைக் கூறினும் நற்செய்தி நூல்கள் மறுபிறவியற்ற மறுமையைக்கூறினும் இம்மையில் ஏற்படும் நட்பு முதலிய அன்பின் தொடர்பு மறுமையிலும் நிலைக்கும் என்ற பொதுக் கருத்து இங்குக் காணப்படுகிறது.

திருக்குறட்கருத்துக்களுடன் ஒப்பிடத்தக்கன நற்செய்தி நூல்களில் காணப்படும் நீதிக் கருத்துக்களே. இவற்றை ஒப்பிட்டு ஆயுங்கால் பல கருத்துக்கள் ஒத்தும் சில கருத்துக்கள் ஒவ்வாதும் உள்ளன. இவ்வாய்வு வள்ளுவரின் அறிவியலறிவைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது என்பது திண்ணமே.

நற்செய்தி நூல்களில் காணப்படும் இறையியற் கொள்கைகளைத் திருக்குறளில் காண்பதற்கு இடமில்லை.

———

# 8

## பிற நூல்கள்

புதிய ஏற்பாட்டில் நற்செய்தி நூல்களும் கடிதங்களுமன்றிப் பிற நூல்களாகவுள்ளன. 'அப்போஸ்தலர்களின் செயல்கள்' (The Acts of the Apostles) 'வெளி' (Revelations) என்னும் இரண்டே அப்போஸ்தலர் என்னும் சொல் அனுப்பப்பட்டவர் என்னும் பொருள்படும். கிறிஸ்துவால் தெரிந்தெடுக்சப்பட்டுத் தம் போதனைகளைப் பலருக்கும் கற்பிப்பதற்காக அனுப்பப்பட்ட ஆதிக் கிருஸ்தவத் தலைவர்களே அப்போஸ்தலர் எனப்படுவர். கிருஸ்துவின் சீடர் பன்னிருவரொடு உயிர்த்தெழுந்த கிருஸ்துவால் தம் பதவிக்கு அழைக்கப்பட்டவராகக் கருதப்படும். பவுலும் சிறப்பாக இப்பெயர் பெறுவார். அப்போஸ்தலர் என்னும் சொல்லைத் தமிழில் திருத்தூதர் எனச் சிலர் மொழி பெயர்ப்பர். இவ்வப்போஸ்தலர்கள் அல்லது திருத்தூதர்கள் கிருஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகளும் ஆற்றிய அரும்பணிகளுமே 'அப்போஸ் தலர்களின் செயல்கள்' என்னும் நூலில் கூறப்படுவன 'வெளி' என்னும் நூலின் ஆசிரியர் தாம் ஒரு தெய்வீகக் காட்சியை (vision) சபைகளுககு கண்டதாகக் கூறி அதைப் புனைந்துரைக்கிறார். அவர் சில சபைகளுக்கு (churches) கூற விரும்பிய அறிவுரைகளும் இக் காட்சியுமே அந்நூலில் அடங்கிய பொருளாகும்.

8.1. திருத்தூதரின் செயல்கள் (The Acts of the Apostles)

நற்செய்தி நூல்களுள் ஒன்றினை யெழுதிய தூயர் லூக்காவே இந்நூலையும் எழுதியிருத்தல் வேண்டுமென விவிலியத்தை ஆய்வோர் கருதுவர். இவ்விரு நூல்களும் ரோமராட்சியில் ஓர் உயர் அலுவராயிருந்த தெயொபிலு (Theophilus) என்பவருக்கு எழுதியனுப்பப்பட்டன என இவற்றின் தொடக்கத்தில் காணப்படும் குறிப்பும் இவை ஒருவரால் எழுதப்பட்டன என்னும் கருத்துக்கே ஆதரவு நல்கும் இந்நூல் எழுதப்பட்ட காலத்தைக் குறித்து ஓரளவு கருத்து வேறுபாடுகள் உள. தூயர் பவுலின் மரணத்தின் முன் கி.பி.64ஆம் ஆண்டளவில் இந்நூல் எழுதப்பட்டதெனச் சிலர் கருதுவர். இந்நூல் பவுலின் சிறையிருப்பைக்குறித்துக் கூறி மரணத்தைக் கூறாவிடினும் அந்நிகழ்ச்சியின் பின் 75 ஆம் ஆண்டிற்கும் 85 ஆம் ஆண்டிற்கும் இடையே எழுதப்பட்டதெனப் பலர் கருதுவர். எழுதப்பட்ட காலத்தை இன்னும் பிற்பட்டதாகக் கணிப்போரும் உளர்.

கிருஸ்தவ சமயம் அல்லது கிருஸ்துவின் போதனைகள் எருசலேம் நகரினின்றும் சமேரியா முதலிய யூத நாட்டின் பிறபகுதிகளிலும் யூதநாட்டுக்கு வெளியே உள்ள ஆனால் ரோமப் பேரரசுக்கடங்கிய பிறபல நாடுகளிலும் பரவிய வரலாற்றைக் கூறுவது இந்நூலாசிரியரின் நோக்கங்களில் ஒன்றாகும். இறைவனின் அருள் அடியவராகிய திருத்தூதருடன் கூட இருந்து அவர்களை வழி நடத்திற்றெனக் காட்டுவதும் மற்றொரு நோக்கமாகும். அக்காலத்தில் கிருஸ்தவ சமயத்தை எதிர்த்த யூதரும் பிறரும் அச்சமயத்தைக் குறித்துக் கூறிய குறைகளை மறுத்து அதன் மேன்மையை நிறுவுவதும் ஆசிரியரின் நோக்கங்களுள் ஒன்றாகும் என இந்நூலை ஆய்ந்தோர் கூறுவர்.

திருத்தூதரின் செயல்களில் முதல் 12 அதிகாரங்களிலும் முக்கிய இடம் பெறுபவர் பேதுருவே.

கிருஸ்தவ சமயக் கோட்பாடுகள் (doctrines) உருவாகிய முறைமையும் இந்நூலில் ஓரளவு காட்டப்படுகிறது.

இக்கிருஸ்தவர்கள் கிருஸ்துவே மெசாயா எனவும் அவர் சிலுவையிலறையப்பட்டுக் கொல்லப்பட்டது தேவசித்தத்தின்படியே நடந்தது எனவும் அதன் மூலம் கடவுளின் நோக்கமே நிறை வேறிற்றெனவும் அவர் உயிர்த்தெழுந்தார் எனவும் அவர் ஆவி தங்களிடையே இருந்து தங்களை வழிநடத்துகிறதெனவும் கிருஸ்துவை நம்பி

னோர் பாவத்தினின்றும் மீட்கப்படுவர் எனவும் நம்பி அவ்வாறே கற்பித்தனர். சில துதிப்பாடல் வரிகளும் பழைய ஏற்பாட்டில் காணப்படும் தீர்க்கதரிசிகளின் கூற்றுக்கள் சிலவும், சிறப்பாகத் தான் துன்புற்றுப் பின் நற்பயனையடைந்து தன் துன்பத்தினால் பிறரையும் நற்பயனெய்துவிக்கும் யாவேயின் ஊழியனைக் குறித்து இரண்டாம் ஏசாயா கூறிய மொழிகளும் இயேசு கிருஸ்துவையே சுட்டுவதாக இவர்கள் கொண்டனர்.

## 8.11 இந்நூலில் அடங்கிய நீதிக் கருத்துக்கள்

ஆதிக் கிருஸ்தவர்களிடையே காணப்பட்ட பல நற்பண்புகளில் இடுக்கண்ணழியாமை, ஒப்புரவு என்னும் இருதன்மைகளைச் சிறப்பாக இந்நூல் முழுவதும் எடுத்துக் காட்டுகிறார். ஆசிரியர் லூக்கா வேறு சில அறங்களையும் இங்குக் காணலாம்.

தலைமை ஆசாரியாரின் முன்னிலையில் விசாரிக்கப்பட்டபோது பேதுருவும் யோவானும் அஞ்சாது பதிலிறுத்ததைக் கண்டு அனைவரும் வியப்படைந்தனர். ''பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு, அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதமையுள்ளவர்களென்றும் அறிந்த படியினால் ஆச்சரியப்பட்டு, அவர்களை இயேசுவுடனே கூட இருந்தவர்களென்று அறிந்து கொண்டார்கள் (4.13). பின்பு ஆசாரியார்கள் இயேசுவின் பெயரினால் பேசவும் போதிக்கவும் கூடாதெனக் கட்டளையிட்ட போதும் தாம் இறைவனுக்கே கீழ்ப்படிய வேண்டுமெனக் கூறி மறுத்தனர். பேருதுவும் வேறுசில சீடர்களும் பின்பு யூதத் தலைவர்களால் சிறையிலிடப்பட்டும் அடிக்கப்பட்டும் ஒறுக்கப்பட்ட போதும் கிருஸ்துவுக்காகத்தாங்கள் இத்தகைய துன்பத்தையடைந்ததைக் குறித்து மகிழ்ச்சி கொண்டார்களெனக் கூறப்படுகிறது. அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானம் அடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால். சந்தோஷமாய் ஆலோசனை சங்கததைவிட்டுப் புறப்பட்டுப் போய், தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிருஸ்து என்று பிரசங்கித்தார்கள்'' (5.41-42).

அவ்வாறே இளைஞனாகிய ஸ்டேவானும் யூத ஆசாரியார்களவையின் முன்னிறுத்தப் பட்டபோது அவன் முகம் மகிழ்ச்சிப் பொலிவோடு விளங்கியதால் தேவதூதனின் முகம் போலக் காணப்பட்டதாம். ஸ்டேவான் அங்கு ஆற்றிய நீண்ட சொற்பொழிவைக்

கேட்டுச் சினமுற்ற யூதர்கள் அவரைக் கல்லெறிந்து கொல்ல வகை தேடிய போதும் கிருஸ்துவின் ஆற்றலில் நம்பிக்கையுடையவராய் 'அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும் மனுஷகுமாரன் தேவ-னுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன்' எனச் சொல்லிக் கல்லால் எறியப்பட்டபோதும் 'கர்த்தராகிய இயேசுவே என் ஆவியை ஏற்றுக் கொள்ளும்' எனக் கூறி உயிர் நீத்தனராம் (7.55.59).

பவுலும் அவ்வாறே சிறைமிலிடப்பட்டும் ஒறுக்கப்பட்டும் பிறரால் துன்பம் செய்யப்பட்டபோதும் தன்னிலையில் தளராமல் கிருஸ்துவைக் குறித்த செய்தியைப் பிறருக்குக் கற்பித்தார்.

ஆதிக்கிருஸ்தவத் தலைவர்கள் இடுக்கணுக்கு அழியாதிருந்தது மட்டுமின்றி அதற்கு மகிழ்ந்தார்கள்.

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன் (628)
இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன் (629)

என வள்ளுவர் கூறியது போல அவர்கள் இன்பத்தை விழையாம லிருக்கவில்லை. துன்பம் இயல்பு ஆகையினால் இன்ப துன்ப சம-நிலைக் கொள்கையைப் பின்பற்ற வேண்டுமெனக் கருதவுமில்லை. இன்னாமை இன்பமெனக் கொண்டனர். ஆனால் அதற்கு ஒரு சிறப்-புக் காரணம் இருந்தது.

நல்லோர் துன்பமடையும்போது அதை அவர்கள் எவ்வெம்-முறையில் ஏற்றுக் கொள்ளுதல் கூடும் என்பதைக் குறித்துப் பழைய ஏற்பாட்டுக் கருத்துக்கள் முன்பு ஆயப்பட்டன (முதறிவு இலக்கியம், யோபுபார்க்க) இங்கோ அவற்றினின்றும் வேறாய ஒரு புதிய கருத்து காணப்படுகிறது. ஆதிக்கிருஸ்துவர்கள் துன்பத்தையேற்று மகிழ்ந்-தனர். ஏன், கிருஸ்து கடவுளின் திருமகன் எனவும் மக்களைப் பாவத்-தினின்றும் மீட்டுக் காப்பதற்காக மண்ணுலகில் தோன்றித் தம்முயி-ரையும் அளித்தார் எனவும் நம்பிய அவர்கள் நன்றிப் பெருக்கினால் அவர் பொருட்டாகத் துன்பத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றனர்.

படை மறவர் போரில் காட்டும் வீரத்தைக் கூறுமிடத்து வள்ளுவர் தம்மை ஆதரித்து அன்பு பாராட்டிய அரசர் பொருட்டுப் போரில் அடையும் மரணத்தையவர்கள் விரும்பியேற்பர் என்றார்.

புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோட் டக்க துடைத்து (780)

"தம்மைப் பெரிதும் தலையளித்து ஓம்புதல் பொருந்தின அரசன் முதலானோர், 'இவரையும் இழந்தோம் என்ன பாவம்!' என்று இரங்கிக் கண்ணீர் சொரியுமாறு அமரில் புகுந்துசாக வல்லராயின், அதுவே சாக்காடு என்பது, மற்று அது இரந்து கொள்ளும் தகுதியினையுடையது என்றவாறு" (காலிங்கர் உரை).

மக்களுள் ஒருவனாய மண்ணுலக அரசன் தமக்குச் செய்த தலையளியை எண்ணி நன்றிப் பெருக்கினால் அவ்வரசன் பாராட்டும்படி போரில் உயிரை ஈய வீரர் முன்வருவாராயின் விண்ணுலக அரசெனத் தாம் கருதிய இயேசுகிருஸ்து தமக்குச் செய்த அருளையெண்ணிப் பேதுரு பவுல் போன்றோர் பல துன்பங்களை ஏற்றுக் கொள்ளவும்இறுதியில் உயிர் துறக்கவும் முன்வந்தது வியப்பன்று.

ஆதிக் கிருஸ்தவர்கள் ஒப்புரவை, அதாவது செல்வர் பொருளுடையோர் இல்லோரை ஆதரித்தலை ஒரு முக்கிய கடமையாகக் கொண்டனர். தொடக்க காலத்தில் கிருஸ்தவர்கள் தனிப்பட்ட உடைமை எதுவும் தமக்கென வைத்துக் கொள்ளாது பொருளனைத்தையும் சீடர் கூட்டத்திடையே பொதுவாக்கி அனைவரின் தேவைக்கும் ஏற்றவாறு பகிர்ந்தளித்து ஒருவகைப் பொதுவுடைமையயே கைக்கொண்டனர் எனக் கூறப்படுகிறது.

"விசுவாசிகளெல்லோரும் ஒருமித்திருந்து சகலத்தையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள்.

காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத் தக்கதாக அவைகளில் எலலோருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்" (2. 44-45).

"நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டு வந்து,

அப்போஸ்தலருடைய பாதத்தில் வைத்தார்கள்; அவனவனுக்குத் தேவையானதற்குத் தக்கதாய்ப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது' (4 34-35)

ஆயினும் இம்முறை சிலர் தொழில் செய்யாது சோம்பியிருந்து பிறரின் உதவியை எதிர்பார்ப்பதற்கு இடமளித்தது. ஆகையினால்

நாளடைவில் இப்பொதுவுடைமை கைவிடப்பட்டுத் திரும்பவும் தனியார் உடைமையே ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆயினும் செல்வ-முடையோர் வறுமையால் வாடுவோர்க்குத் தம்பொருளைப் பகிர்ந்-தளித்து ஆதரித்தல் வேண்டும் என்னும் பொறுப்புணர்ச்சி கிருஸ்து வர்களிடையே இருந்து கொண்டிருந்த தென்பதை யாசிரியர் நூல் முழுவதிலும் காட்டுகிறார். கிருஸ்தவ சமயத்தில் சேர்வதற்கெனத் தூய ஆவியால் தெரிந்தெடுக்கப்பட்டவனும் யூதரல்லாத பிற இனத்-தவனுமாகிய கொர்நேலியுவும் (Cornelius)பொதுமக்களின் நன்மைக்-காகப் பல அறங்களைச் செய்தான் எனக் கூறப்படுகிறது (10.2). கிருஸ்துவைப் பின்பற்றின தொற்காள் (Dorcus) என்னும் பெண்மணி ஏழை விதவைகட்கு ஆடைகள் தைத்து வழங்கியாதரித்தாள் என்பது இந்நூலில் கூறப்படும் செய்திகளில் ஒன்றாகும் (9.39). தற்காலத்தில் மேல்நாடுகளில் இம்மாதின் பெயரால் மாதர் கழகங்கள் (Dorcas Society) ஏற்படுத்தி ஏழைகட்கு உடைகள் தைத்து வழங்குவர். இவ்-வாறு அவரவர் தம்ஊரில் அல்லது தாம் வாழும் நாட்டில் அறங்களைச் செய்வது மட்டுமின்றிப் பவுலின் முயற்சியால் பலநாடுகளைச் சேர்ந்த பெருநகர்கள் பலவற்றில் கிருஸ்துவசபைகள் அல்லதுதிருக்கூட்டங்கள் தோன்றியபின் செல்வம் நிறைந்த நகர்களில் வாழும் கிருஸ்தவர்கள் வளமற்ற இடங்களில் வாழ்ந்தவறுமையால் வாடும் கிருஸ்தவர்கட்குப் பொருள் அனுப்பி உதவி செய்தல் வேண்டும் என்னும் கருத்தும் ஏற்-படலாயிற்று தூயர் பவுல் எருசலேம் நகரிலுள்ள கிருஸ்தவர்கட்காகத் தான் பணியாற்றிய பிற நகர்கள் பலவற்றினின்றும் நிதிதிரட்டி அதை அளிப்பதற்காக யூதர்கட்குத் தன்பாலிருந்த பகையையும் பொருட்-படுத்தாது எருசலேம் நகர் சென்றார் என இந்நூல் கூறுகிறது.

ஆதிக் கிருஸ்தவரின் இவ்வறக் கருத்துக்கள் வள்ளுவர் கூறும் ஈகை, ஒப்புரவு என்னும் கருத்துக்களுடன் பொருந்துவனவே.

> கைமாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
> டென்னாற்றுங் கொல்லோ உலகு (211)

எனவும்,

> வறியார்க்கொன் றீவதே யீகை (221)

எனவும் வள்ளுவர் கூறியதற்கொப்பவே கொர்நலிவு, தொற்காள் ஆகியோரும் தமக்குப் பதில் நன்மை செய்ய வகையற்றவர்களாகிய வறியோர்க்கு உதவினர். போதிய உடையற்ற ஏழைவிதவைகட்கே தொற்காள் ஆடைகள் தைத்து வழங்கினாள். தம்முடைமைகளைத்-

தையும் பொதுவாக்கி அவனவன் தேவைக்குத் தக்கபடிபகிர்ந்து-வழங்கிய ஆதிக் கிருஸ்தவர்களும் 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' (322) என்ற அறத்தையே கடைப்பிடிக்க முயன்றனர். ஆயினும் வள்ளுவர் தனிப்பட்டோர் செய்யும் அறங்களை எண்ணியே கூறினார். கிருஸ்தவர்கட்கு அக்காலத்திலேயே சபை அல்லது திருக்கூட்டம் (Church) என்னும் ஓர் அமைப்பு இருந்ததனால் பலர் முயற்சியால் பலர் பொருட் கொடையால் கூட்டாகச் சேர்ந்து அறம் செய்யும் வாய்ப்பும் இருந்தது. காந்நேலியு, தொற்காள் போன்றோர் தனிப்-படவும் அறம் செய்தனர். பவுலின் முயற்சியால் பல்வேறு நகர்களில் வாழ்ந்தோர் தாம் கண்டும் பழகியும் அறிந்தும் இராத எருசலேம் நகரத்தவர்க்கு உதவ முன் வந்தனர். பவுலின் இம்முயற்சியும் 'பகுத்-துண்டு பல்லுயிர் ஓம்புதலே' யாகும்.

'பகைவரை நேசிக்க; தீமை செய்தோர்க்கு நன்மை செய்க' எனக் கிருஸ்து கூறிய அறவுரையையும் ஆதிக் கிருஸ்தவத் தலைவர்கள் பலர் தம் வாழ்க்கையில் கடைப் பிடித்தனர் என்பதைத் திருத்-தூதரின் செயல்கள் காட்டுகின்றன. தூயர் ஸ்டேவான் (St. Stephen) யூதர்கள் தம்மேல் கல்லெறிந்து கொல்ல முற்பட்ட போதும் முழங்கால் படியிட்டுத் தொழுது கொண்டிருந்தவர் இறுதியில் 'கர்த்தாவே இக்-குற்றத்தை இவர்கள் மேல் சுமத்தாதிரும்' (Lord, do not hold this sin against them) எனக் கூறி உயிர் நீத்தார். தூயர் பவுல் பலமுறை தம்மை எதிர்த்தவர்க்காக வேண்டிக் கொண்டார். அவர்கட்கும் நல்லறங்களைக் கூற முயன்றார். சிறப்பாகத் தமக்குப் பல துன்பங்-களைச் செய்த தம்மினத்தவராகிய யூதர்களிடத்து மாறாத அன்புடை-யவரானார். பவுலின் இப்பண்பு அவர் கடிதங்களிலும் காணப்படும் (இவ்வன்பரின் வாழ்க்கை வரலாறு பின்பு கடிதங்களை ஆயும் போது கூறப்படும்). பவுலின் வாழ்க்கையில் வரும் ஒரு நிகழ்ச்சி இங்குக் குறிப்பிடற்குரியது. யூதர்கள் சிலரால் குற்றஞ்சாட்டப்பட்டு ரோம அதிகாரியால் கைது செய்யப்பட்ட பவுல் ஒருமுறை பெஸ்து (Festus) என்னும் ரோம அதிகாரி, யூதச் சிற்றரசன் அகிரிப்பா (Agrippa) ஆகிய இருவர் முன்பும் விசாரிக்கப்பட்டார். முன்பு தீர்க்க தரிசிகளால் கூறப்பட்ட மெசாயா இயேசுவே எனவும் அவர் மறைவின் பின்னும் அவர் ஆவி மக்களிடையே செயலாற்றுகிறதெனவும் தம்கருத்துக்களை அவர் மிக்க ஆர்வமாய்க் கூறக் கேட்ட யூத அரசன் 'இன்னும் சிறிது நேரத்தில் என்னையும் ஒரு கிருஸ்தவனாக்கி விடலாமென எண்ணு-கிறாய் போலும்' எனக் கேலியாகக் கூறப் பவுலோ சிறிதுநேரத்திலா-யினும் அதிக நேரத்திலாயினும் நீர்மட்டுமின்றி இன்று நான் கூறு

வதைக் கேட்ட யாவருமே என்னைப் போலாக வேண்டுமென்றுதான் கடவுளை மிகவும் வேண்டிக் கொள்கிறேன் கைதியாகக் கட்டுண்டு நிற்கும் நிலையைத் தவிர' என அன்போடும்பணிவோடும் உள்ளார்ந்த ஆவலோடும் கூறினார். தாம் அவர்கள் முன்னிலையில் கைதியாக நிற்கும் போதும் தாம் அடைந்த ஆன்மீக நன்மையை அவர்களும் அடைய வேண்டும். தாம் அடைந்த துன்பங்களை அடையவேண்டா என்ற விருப்பினையே தெரிவித்தார்.

இவ்வாறு இன்னாசெய்தார்க்கும் இனியவே செய்யும் (செய்ய இயலா நிலைமையிலும் இனியவே கருதும்) சான்றாண்மை ஸ்டேவான் பவுல் போன்றோரிடம் காணப்பட்டது.

முற் கூறியபடி சீடர் கூட்டத்தில் சேர்ந்தோர் யாவரும் தத்தம் உடைமைகளை விற்றுப் பணத்தைத்'தலைவர்களிடம்கொடுத்தகாலத்தில் அன்னானியா என்னும் ஒருவனும் அவன் மனைவி சபிராளும் தம் நிலத்தை விற்று அதில் ஒரு பங்கை மறைத்து வைத்துக் கொண்டு மீதியை மட்டும் பேதுருவிடம் கொண்டு வந்து கொடுப்ப அவர் முதலில் வந்த அன்னானியாவையும் பின்பு தனியேவந்த சபிராளையும் ஏன் இவ்வாறு பொய் கூறத் துணிந்தனர் எனத் தனித்தனியே, வினவ அவ்வதிர்ச்சியினாலேயே அவர்கள் இறந்தனர் எனக் கூறப்படுகிறது (5. 1-11) இந்நிகழ்ச்சி,

> தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
> தன்னெஞ்சே தன்னைச் சுடும் (293)

என்ற குறளை மெய்ப்பிக்கும்.

பவுல் உழைப்பின் உயர்வை நன்கு உணர்ந்திருந்தார் யூதர் குலத்தைச் சேர்ந்த அனைவரும் எவ்வளவு செல்வமும் கல்வியும் உள்ளவராயினும் ஒரு கைத்தொழிலும் கற்றிருத்தல் வேண்டும் என்ற வழக்கப்படி இளம் வயதில் கூடாரம் கட்டுதல் (tent-making) அல்லது தோல் பதனிதடுல் என்னும் தொழிலைக் கற்றிருந்தார். செல்வமும் செல்வாக்கும் மிக்க கல்வியும் பெற்றிருந்த அவர் கிருஸ்தவராகித் தம் குடும்பத்தை விட்டுப் பிரிந்து பல இடங்களுக்கும் சென்று சமயப்பணியாற்றிய காலங்களிலும் அவ்விடங்களில்தாம் கற்ற கைத் தொழிலையே செய்து வருவாய் தேடிக் கொண்டார் எனத் தெரிகிறது. கொரிந்து நகரில் தங்கியபோது ஆக்கில்லா என்னும் யூதனையும் அவன் மனைவி பிரிசில்லாளையும் கண்டு அவர்களுடன் நட்புக் கொண்டு அவர்கள் கூடாரம் பண்ணுகிற தொழிலாளிகளாயிருந்ததால் பவுல் தாமும்

அவர்களுடன் தங்கி வேலை செய்து வந்தார் எனக் கூறப்படுகிறது. (18.3) ஏபேசஸ் என்னும் நகரைச் சேர்ந்த கிருஸ்தவர்களிடம் விடை பெற்றுக் கொள்ளும்போது பவுல் பின்வருமாறு கூறினார். ஒருவனுடைய வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை. நீங்கள் அறிந்திருக்கிறபடி, எனக்கும் என்னுடனே கூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலை செய்தது. இப்படிப் பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும் வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லாவிதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன்'' (20.23-35).

கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையில் பீடுடைய தில் (1021)

என வள்ளுவர் குடிசெயல்வகையில் கூறினார். தன்குடியை யுயுரச் செய்ய விரும்பும் ஒருவன் எவ்வகையிலும் முயன்று உழைத்துத் தன் குடிக்கு உதவுவான். அப்பணியில் கைசோர மாட்டான் என்பது இங்குக் கூறப்பட்டது கிருஸ்தவர் திருக்கூட்டத்தையே தம் குடும்பமாகக் கருதிய வுல் அதன் நன்மையின் பொருட்டுத் தம் போதனையினாலும் எழுத்தினாலும் பணி செய்ததுமன்றித் தாம் தங்கிய இடங்களில் தமக்கும் தம் கூட இருந்த உதவியாளர்கட்கும் வேண்டிய உணவு முதலியவற்றிற்காகத் தொழில் செய்தும் திருக்கூட்டத்திற்குத் தம் உழைப்பை நல்கினார். இவ்வாறு சில நீதிக் கருத்துக்கள் 'திருத்தூதரின் செயல்கள்' (Acts of the Apostles) என்னும் நூலில் காணப் படுகின்றன.

## 8. 2. வெளி (Revelations)

இல்நூல் யாரால் எழுதப்பட்டது என்பது ஆய்வுக்குரியதே. சில காலத்தின் முன்பு இந்நூல் நற்செய்தி நூல்களில் ஒன்றை எழுதிய யோவானாலேயே எழுதப்பட்டதென்றும் இவ்விரு நூல்களையும் எழுதிய ஆசிரியர் கிருஸ்துவின் முக்கிய சீடர் பன்னிருவரில் ஒருவராகிய யோவானே எனவும் பொதுவாகக் கருதப்பட்டு வந்தது. ஆயினும் கிருஸ்துவுடன் நெருங்கிப் பழகிய ஒருவர் இந்நூலை எழுதியிருக்க் கூடும் என எண்ணுவது கடினமே.

ரோமப் பேரரசன் நீரோவின் காலத்தின் பின் வெஸ்பாஸியன் (Vespasian) என்ற பேரரசன் காலத்தில் அதாவது 69ஆம் ஆண்டிற்-

கும் 79 ஆம் ஆண்டிற்கும் இடையே இந்நூல் எழுதப்பட்டிருக்க வேண்டும் எனவே ஆராய்ச்சியாளர் பெரும்பாலோர் கருதுவர். 'வெளி' எழுதப்பட்ட காலத்தை இன்னும் பிற்படக் கணிப்போரும் உளர்.

'வெளி'யின் பொருளையோ அதில் அடங்கிய நீதிக்கருத்துக்களையோ ஆராய்வது கடினமே. இந்நூலின்சில பகுதிகளைப் படிக்கும் போது ஒரு புராணக் கதையைப் படிப்பது போலிருக்கும். இந்நூல் நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடக்கும் போராட்டத்தை உருவகமாகக் காட்டும் என்பர். கந்தபுராணம் போன்ற புராணக் கதைகளும் கூட நன்மைக்கும் தீமைக்கும் இடையே நிகழும் போராட்டத்தைத் தானே உருவகமாகக் காட்டுகின்றன.

இந்நூல் முழுவதும் ஒருகாட்சி அல்லதுகனவில் கண்டவற்றைக் கூறும் முறையில் எழுதப்பட்டுள்ளது. உண்மையில் ஆசிரியர் இத்தகைய காட்சிகளைக் (visions) கண்டாரா அல்லது தாம் கூற விரும்பிய கருத்தை அம்முறையில் கூறினாராஅது ஓர் இலக்கியம் உத்திதானா என்பது தெளிவின்று. ஆராய்ச்சியாளர் இருவகையாகவும் கொள்வர்.

நான்காம் அதிகாரத்திலிருந்தே இந்நூலின் முக்கிய நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன. இதிலிருந்துகாட்சி விண்ணுலகத்திலும் மண்ணுலகத்திலும் மாறி மாறி நிகழ்கிறது விண்ணுலகில் அரியணையில் தேவதூதரும் பிறரும் புடைசூழ வீற்றிருக்கும் கடவுள் மண்ணுலகில் மக்கள் செய்த பாவங்களுக்குத் தண்டனையாக மும்முறை பல துன்பங்களை அனுப்புகிறார். ஒவ்வொருமுறை மண்ணுலகில் நிகழும் துன்பங்களைக்கூறிய பின்னும் விண்ணுலகில் கடவுளுக்குச் செய்யப்படும் வழிபாட்டையும் தீமையை எதிர்த்து வென்றோர் (ஆசிரியர் கருத்துப்படி கிருஸ்தவர்களே) விண்ணில் அடையும் மகிழ்ச்சியையும் ஆசிரியர் காட்டுகிறார். மறுபடியும் மண்ணுலகில் நிகழும் துன்பங்கள் கூறப்படுகின்றன. இம்முறையில் இருளையும் (மண்ணுலகத் துன்பத்தையும்) ஒளியையும் (விண்ணுலக மேன்மையையும்) மாற்றி மாற்றியமைக்கும். ஒருவகை முரண் அணி (contrast of light and darkness) நூலில் காணப்படுகிறது.

யோவானின் கருத்துப்படி கிருஸ்துகாட்டிய நெறியே நன்னெறி. அதைப் பின்பற்றுவோரே நல்லோர். அக்காலத்தில் கிருஸ்தவ இயக்கத்தை எதிர்த்த ரோமப் பேரரசனும் அவனை ஆதரிப்போரும் முற்றிலும் தீயோரே. தீயோர் திருந்துவதில்லையென்பதே ஆசிரியர்

கருத்துப் போலும். யோவான் கண்ட வெளிப்பாட்டில் விண்ணுலகில் அரியணையில் வீற்றிருக்கும் இறைவனையும் அவர் வலதுபக்கத்தில் அமர்ந்திருக்கும் ஆட்டுக்குட்டியானவரை (கிருஸ்து) யும் எதிர்த்தவர்கள் பல துன்பத்துக்கு ஆளாகியும் திருந்தாது இறுதியில் அழிக்கப்படுகின்றனர்.

தீமை அழிக்கப்பட்டபின் நிலவத்தக்க நன்னிலை இறுதி அதிகாரங்களில் காட்டப்படுகிறது. மீட்கப்பட்டு விண்ணகரை யடைந்தோர் என்றும் மகிழ்வுடன் வாழ்வர். இறைவனை வணங்கிப்பணி செய்வர். கடவுளை நேரில் காண்பர். அங்கு இருளில்லை, இரவில்லை, துன்பங்கள் இரா. கடவுளே அவர்கட்கு ஒளியாக இருப்பர். கண்ணீர் மாற்றிக் கவலைகளை யகற்றுவர். மீட்கப்பட்டோர் என்றும் பேரின்பந்துய்ப்பர். ஆயினும் இந்நூலின்படி சிறுபான்மையோரே இவ்வாறு மீட்கப்பட்டு இறுதியில் உயர்நிலையையடைவர் எனத் தோன்றுகிறது.

விவிலியத்தை ஆயும் தற்காலக் கிருஸ்தவ அறிஞர்கள் சிலர் இந்நூல் சிறந்த கொள்கைகளைக் கூறவில்லையென்பதை யேற்றுக் கொள்கின்றனர்.[1] சிலர் இந்நூல் விவிலியத்தில் சேர்க்கப்படாதிருந்திருப்பின் நலமாக இருக்கும் எனவும் கூறுவர்.

மக்கள் தீமையைச் செய்யின் தீயபயனே அல்லது துன்பமே விளையும் என்பது நீதிநூலோர் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் கருத்தேயாகும்.

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும் (202)

என்றுதான் வள்ளுவரும் கூறினார். தேவசித்தத்தை மீறி நடப்பதனால் தீமையே விளையும் என்பதும் பொதுவாகச் சமயநூலோரால் ஏற்றுக் கொள்ளத்தக்கதே. ஆயினும் வெளியில் மக்களில் பெரும்பாலோர் (கிருஸ்துவால் மீட்கப்பட்டோரை யொழிய ஏனையோர்)க்கும் கடவுளுக்கும் இடையே ஏற்படும் மாறுபாடும் அவர்கள் அவரால் ஒறுக்கப்பட்டு இறுதியில் அழிதலும் புனைந்துரைக்கப்பட்டமுறை விரும்பத்தக்கதாக இல்லை.

---

1 Henshaw T, New Testament Literature, P. 43

"The Apocalypse passes muster as far as date is concerned, but it stands for a tendancy which we deplore, which we regard as opposed to our Lord's teaching."

வள்ளுவர் இறைவனை 'அறவாழியந்தணன்' என்றார் (8) இத்தொடருக்கு அறக்கடலாகிய அந்தணன் அல்லது அறக்கடலையுடைய அந்தணன் எனப்பொருள் கொள்வர். ஆழி என்னும் சொல் படைக்கலத்தை (சக்கரம்) குறிப்பதாகக் கருதி அறத்தைப் படையாக உடையவன் எனப்பொருள் கொள்வோரும் உளர். அறத்தைப் படையாகக் கொண்டிருப்பினும் கடவுள் அழகிய தண்ணளியுடையவரே யெனக் கருதி யந்தணன் என்றார் போலும். இறைவன் ஒறுப்பினும் அது அருட்செயலே யென்பதைக் கிருஸ்தவரும் கிருஸ்தவரல்லாதவருமாகிய சமய நூலோர் பலர் கூறுகின்றனர். ஆங்கிலக் கவிஞர் ஜான்மில்டன் (John Milton) தம் சுவர்க்க நீக்கம் என்ற நூலில் இதை நன்கு காட்டினார்[2] 'நிக்கிரககங்கள் தானும் நேசத்தால் ஈசன் செய்வது'[3] எனச் சைவசித்தாந்த நூல்கள் கூறுகின்றன. இக்கருத்தைத் தழுவியே கச்சியப்ப சிவாச்சாரியாரும் தம் காவியத்தில் போர்க்கோலம்பூண்டு களத்தில் நின்ற முருகக் கடவுளைப் 'பற்றி கலின்றி நின்ற பராபர முதல்வன்' எனவும் 'வந்தனன் அமருக்கென்கையருளென நாட்டலாமே' எனவும் கூறினார். இறுதியில் எதிர்ப்பினூடும் ஒரொருகால் சூரபன்மனின் உளத்தில் தோன்றிய அன்பையும் ஆர்வத்தையும் உணர்ந்து முருகக் கடவுள் அருள் புரிந்தார் எனத் தம்

2 Milton, John, Paradise Lost :

"Remember with what mild, and gracious temper he both heard and judged without wrath or reviling...." X.1046-8

"...in whose look severe when angry most he seemed and most severe what else but favour, grace and mercy shone." X 1094 6

கவிஞர் மில்டன் இறைவன் ஒறுப்பிலும் தோன்றும் அருளை இவ்வாறு காட்டினார் ஆயினும் சாத்தானால் ஏமாற்றப்பட்டுத் தவறிழைத்த ஆதாம் ஏவாளை இவ்வாறு அருளுடன் ஒறுத்த தேவகுமாரன், தாமே தவறிழைத்த சாத்தானையும் அவனைச் சார்ந்த தேவ தூதர்களையும் அருளின்றி ஒறுத்தார் எனவும அவர்கள் என்றும் மன்னிப்புப் பெறுவதில்லையென அறுதியாகக் கூறினாரெனவும் தம் சுவர்க்க நீக்கத்தில் எழுதினார்.

கச்சியப்ப சிவாச்சாரியாரோ சூரபன்மன் அசுரனேயாயினும் சிவகுமாரனையெதிர்த்துப் போர் செய்வானேயாயினும் இறுதியில் அருள் பெற்று நன்னிலையையடைந்தான் எனத் தம் கதையையமைத்தார்.

இவ்விருநூல்களுள் எது ஆழமான உண்மையைக் காட்டுகிறதென்பது சிந்திப்பதற்குரியதே. தற்கால ஆங்கில இறையியல் வல்லுநர்சள் சிலர், தேவதூதர்களில் ஒரு சாரரின் தலைவனாகிய சாத்தான் கடவுளை யெதிர்த்துப் பகைஞனாயினான் என்பது உண்மையாயின். அவனும் இறையருளை நாடின் அருள் பெறுதல் கூடும்; ஏனெனில் கடவுளின் அருள் எல்லையற்றது என்ற கருத்தைத் தெரிவிக்கின்றனர்.

Paternoster, Michael., Thou art there also, Chap 5, Can Satan be saved?

3. சிவஞான சித்தியார் சுபக்கம் 2.15

கதையயமைத்தார். இறைவன் ஒறுப்பதும் அருட்செயலே யென்பதை 'வெளி'யின் ஆசிரியர் புரிந்து கொள்ளவில்லை போலும்.

இந்நூல் காட்டும் நீதியை யாராயின் கிருஸ்தவர்கள் எவ்விதத் துன்பம் ஏற்படினும் கலங்காது தம் நெறியில் நிலைத்திருக்கவேண்டும் என்பதே ஆசிரியரின் முக்கிய கருத்தாகும். பிறரால் துன்புறுத்தப்பட்ட காலத்தில் எழுதப்பட்டமையால் இடுக்கண் அழியாமையே மிக வேண்டப்படும் பண்பு ஆயிற்று. அக்காலத்து அந்நாடுகளில் கிருஸ்தவரல்லாத வேறு சிலர் பின்பற்றிய தீய ஒழுக்கங்களை விட்டுவிலகிக்கிருஸ்தவர்கள் தூயவாழ்க்கை வாழவேண்டும் என்பதையும் ஆசிரியர் இடையிடையே கூறினார். துன்பத்தைப் பொறுமையோடு தாங்க வேண்டும் என இவ்வாசிரியர் கற்பித்தார். அவ்வாறு தாங்குவது சிறந்ததே ஆனால் துன்பத்தைத் தாங்கும்போது தமக்குத் துன்பம் செய்தோர் பின்பு பன்மடங்கு துன்புற்று இறுதியில் அழிவர் என எண்ணி நிறைவடைதல் அறமாகுமா?

திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று (157)

(நோநொந்து—அதனால் அவர்க்கு வரும் துன்பத்துக்கு நொந்து) என்ற குறளுக்கும்,

தம்மை இகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்று
எம்மை இகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை
எரிவாய் நிரையத்து வீழ்வர்கொல் என்று
பரிவதூஉம் சான்றோர் கடன் (58)

என நாலடியார் காட்டும்அறத்துக்கும் அது மாறானதே. தமிழ்நாட்டு நீதுநூல்கள் பெரும்பாலும் நாடு நன்னிலையிலிருப்பமக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்த காலத்திலேயே தோன்றின. நீரோவின் ஆட்சியில் கிருஸ்தவர்கள் அடைந்த கடுந்துன்பத்தைத் தமிழர்கள் அடையவில்லை. பலரைச் சிறையிலிட்டும் சிலரைக் கொன்றும் அரசர்கள் கடுந்துன்பம் செய்த காலையில் யோவான் 'வெளி'யை யெழுதினார் என்பது கருதி அவர் மனநிலையைப் புரிந்துகொள்ளலாமாயினும் அம்மனப்பான்மையைச் சிறந்த அறமாகக் கருதுவதற்கில்லை.

தம்மைச் சிலுவையிலறைந்து கொடுந்துன்பஞ்ச் செய்தவர்களையும் தாம் அடைந்த துன்பத்தைக் கண்டு இரங்காது எண்ணி இகழ்ந்தவர்களையும் குறித்து 'பிதாவே இவர்களுக்கு மன்னியும் தாம் செய்வது இன்னதென அறியாதிருக்கிறார்களே எனக்கூறி அவர்களும் மனந்திரும்பி இறைவனருளை உணரமாட்டார்களா என ஆர்வமே உற்ற கிருஸ்து பெருமானின் உள்ளத்தோடும்இது பொருந்துவதன்று எனலாம்.

# 9

# கடிதங்கள்

## 9.1 கடிதங்களின் வரலாறு

புதிய ஏற்ப்பாட்டிலுள்ள 27 பகுதிகளுள் 21 கடிதங்களே. இக்கடிதங்கள் ஆதிக் கிருஸ்தவத்தலைவர்களால் வெவ்வேறு நகர்களில் அமைந்திருந்த திருக்கூட்டங்களுக்கோ ( churches) அல்லது தனிப்பட்டவர்களுக்கோ எழுதப்பட்டனவாகும். இவை நூல்வடிவாக வெளியிடப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு எழுதப்பட்டனவல்ல. அவ்வப்போது ஏற்பட்ட தேவைக்குத்தக எழுதப்பட்டனவே. ஆயினும்அவை பெரும்பாலும் கிருஸ்தவர் கூட்டங்களில் பலர் முன்னிலையில் படிப்பதற்காக எழுதப்பட்டன ஆதலால் மிகக் கவனத்துடன் எழுதப்பட்டவையே. ஆதிக்கிருஸ்தவர்களிடையே வழங்கி வந்த சமயக் கோட்பாடுகளையும் ஒழுக்க முறைகளையும் இவை காட்டுவதனால் பின்பு புதிய ஏற்பாட்டில் சேர்க்கப்பட்டன.

பல முக்கியக் கடிதங்கள் தூயர் பவுலினாலேயே எழுதப்பட்டன. 21 கடிதங்களில் 14 பவுலால் எழுதப்பட்டனவாகப் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்படுகின்றன.

பவுலின் கடிதங்களனைத்தும் கி.பி. 49-64 என்னும் ஆண்டுகட்கு இடையே எழுதப்பட்டவையே. காலத்தை நோக்கும் போது

நற்செய்தி நூல்கட்கும் புதிய ஏற்பாட்டிலுள்ள ஏனைய நூல்கட்கும் முற்பட எழுதப்பட்டவை இவையே. பவுல் காலத்தியருக்கு எழுதிய கடிதம் எழுதப்பட்ட காலத்தைக் குறித்துக் கருத்து வேறுபாடுகள் உள. ஏனைய கடிதங்கள் எழுதப்பட்ட காலம் ஏறக் குறையப் பின்வருமாறு.

| | |
|---|---|
| தெசலோனியர் (இரு கடிதங்கள்) | கி.பி. 50-51 |
| கொரிந்தியர் (இருகடிதங்கள்), ரோமர் | கி.பி. 55-56 |
| கொலோசியர், பிலேமோன், எபேசியர் | 66-62 |
| பிலிப்பியர் (சிறையிருப்பின் கடிதங்கள்) | (அல்லது 62-64) |

## 9 2. பவுலின் கடிதங்களும் திருக்குறளும்

புதிய ஏற்பாட்டிலுள்ள இறையியற் கொள்கைகளைத் திருக்குறளில் காண்பதற்கு இடமில்லை. ஆயினும் அறத்தொடு பொருந்திய தூய வாழ்க்கை வாழ்வதற்கும் வீட்டுநிலையை யடைவதற்கும் கடவுளின் துணை வேண்டும் என்ற கருத்தைத் திருக்குறளிலும் காணலாம்.

அறவாழி யந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்த லரிது (8)

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார் (3)

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார் (10)

அறக்கடலாக விளங்குபவனும் அழகிய தண்ணிய இயல்பை யுடையவனுமாகிய இறைவனின் பாதத்தைச் சேர்ந்தவர்க் கல்லால் பிறர்க்குப் பொருளுமின்பமுமாகியகடலை நீந்தலரிது என்றார் பரிமேலழகர். பிற வாழி என்பதற்குப் பாவக் கடலெனப் பரிதியாரும் பிறவிப் பௌவமெனக் காலிங்கரும் பொருள் கொண்டனர். இவ்வுலகிலும் வீட்டுலகிலும் நீடு வாழ்வதற்கும் பிறவிப் பெருங்கடலை நீந்துதற்கும் இறைவனடி சேர்தல் வேண்டும் என மற்ற இருகுறள்களும் கூறுகின்றன. மலர்மிசையேகினான். என்ற தொடருக்கு அன்பால் நினைவார்தம் உள்ளக்கமலத்தில் எழுந்தருள்பவன் என்றும் (பரிமேலழகர்) அன்பர்கள் இட்டமலரின் மேல் எழுந்தருள் என்றும்

(பரிதியார்) பொருள் கூறப்படுகிறது. ஆயினும் இத்தொடரின் பொருள் தெளிவின்று.

பல பிறவிகள் உள என எண்ணிய திருவள்ளுவரும் திருக்குறளாசிரியர்களும் பிறவிக்கடலைக் கடத்தற்கு இறைவனடியைச் சார்தல் வேண்டுமென்றனர். மக்களுக்கு ஒரு பிறவிமட்டுமே உண்டு என நம்பிய பவுல் பாவத்தினின்றும் விடுதலையடைவதற்குக் கடவுள் துணை வேண்டுமென்றார்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார் (6)

இங்கு நீடு வாழ்வார் என்ற தொடர் வீட்டின் கண் நிலைத்திருப்பர் எனப் பொருள் தருவதாகவே உரையாசிரியர் பலராலும் கொள்ளப்படுகிறது. பொறிவாயிலைந்தவித்தானால் சொல்லப்பட்ட பொய்தீர் ஒழுக்க நெறியென்பது எதைககுறிக்கிறதென்பது ஐயத்திற்குரியதே. இது நான்மறைகளில் சொல்லப்பட்ட ஒழுக்கத்தைக் குறிக்கிறதா தமிழில் அக்காலத்திலிருந்த பிற சமயநூல்களிலோ அறநூல்களிலோ கூறப்பட்ட நெறியைக் குறிக்கிறதா அன்றி (வள்ளுவர் சமணசமயத்தைச் சேர்ந்தவராக இருப்பின்) பரமாகமம் என்ற சமண நூலில் சொல்லப்பட்ட ஒழுக்கத்தைக்குறிக்கிறதா என்பது தெளிவின்று. உரையாசிரியர்களும் அதைத் தெளிவித்திலர். அன்றி நல்லொழுக்கமனைத்துமே கடவுளின் அருளால் அல்லது வழிநடத்துதலினாலேயே கைகூடுகிறதெனக் கருதிப் பொதுவாகப் பொய் தீர்ந்த நல்லொழுக்க நெறியில் நின்றார், எனவும் கொள்ளலாம். 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்ற தொடருக்கு 'ஐம்பொறிவாயிலாகத் தோன்றும அவாக்களையடக்கியவன்' என்ற அளவில் பொருள் தெளிவாக இருப்பினும் இங்கும் ஓர் இடர்ப்பாடு நேரிடுகிறது. இத்தொடர் புத்தரையோ மகாவீரரையோ போல மண்ணுலகில் வாழ்ந்த ஒரு சமயத்தலைவரைக் குறிப்பதன்றிக் கடவுளையே குறிப்பதாயின் இதன் பொருள் யாது ? கடவுளுக்கு ஐம்பொறிகள் உள எனவும் அவற்றின் வழியாகத் தோன்றும் அவாக்களை அவர் அடக்கினார் எனவும் கருதுமாறில்லை. இவ்விடர்ப்பாடு கருதியே போலும் பரிதியாரும் காலிங்கரும் ஐந்தடக்குதனை நெறி நின்றார்க் காக்கி முறையே.

"சந்த, பரிச, ரூப, ரச, கந்தம் என்கின்ற பொறியை வழியாகவுடையவற்றிற்கு மனசைப் போக்காமல் காக்கவல்லார் இகபரமிரண்டிலும் நெறி நின்று அநேக காலம் வாழ்வர் என்றவாறு" எனவும்,

"சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்கின்ற ஐம்புலன்களை நுகர்தற்கு வழிக்கருவியாகிய மெய்வாய் கண்மூக்குச் செவி என்கின்ற ஐம்பொறிகளையும் அகத்தடக்கி இறைவனது உபதேச முறைமையாகின்ற நல்லொழுக்கத்தின் வழிப்பட்டு நின்றவர் முத்தராவார் என்றவாறு" எனவும் பொருள் கூறினர். இவ்வாறு பொருள்கொள்வதற்குக் குறள்,

பொறிவாயில் ஐந்தவித்தார், பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்

என இருத்தல் வேண்டும். ஆனால் செய்யுளோ பொறி வாயிலைந்தவித்தலை ஒருமையில்ஒருவர் செயலாகவே கூறுகிறது. இத்தொடர்-கடவுளைக் குறிப்பதாயின் தம்மை வழிபடும் அன்பர்களின் ஐம்பொறிகளின் வாயிலாகத் தோன்றும் அவாக்களும் அடங்கும்படி அருள் செய்பவர் எனப் பொருள் கொள்ளுதலே பொருத்தமாகும்.

"ஆயினும் என் மனத்தின் பிரமாணத்துக்கு விரோதமாகப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் இருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்கிறது" (ரோமர் 7. 23) எனக் கூறிக் கிருஸ்துவின் அருளினாலேயே தாம் தம் அவயங்களை நெறிப்படுத்திப் பாவத்தினின்றும் மீளுதல் கூடும் என்று கூறிய பவுலின் கருத்தையே ஒப்ப ஐம்புலன்களை யடக்குவதற்கு இறைவனின் அருள் வேண்டும் என்ற கருத்து இங்குப் பெறப்படுகிறது.

நன்னெறியில் செல்ல விரும்புபவர்க்கு ஐம்புல அவாக்கள் இடையூறாக இருக்கின்றன. கடவுளின் அருள் கொண்டே அவற்றை வெல்ல முடியும் என்ற கருத்தைத் தமிழிலுள்ள, பக்தி இலக்கியங்களிலும் தத்துவ இலக்கியங்களிலும் கூடப் பன்முறை காணலாம்.

புள்ளுவர் ஐவர்கள்வர் புனத்திடைப் புகுந்து நின்று
துள்ளுவர் சூறைகொள்வர் தூநெறி விளைய வொட்டார்
முள்ளுடை யவர்கள் தம்மை முக்கணான் பாத நீழல்
உள்ளிடை மறைந்து நின்றங் குணர்வினால் எய்தலாமே
(திருநாவுக்கரசர் தே 285. 5 தலமுறை)

இங்கு நாவுக்கரசர் தூயஒழுக்கத்தைப் புனத்தில் விளையும் பயிராகவும் ஐம்புலன்களை அவ்விளைவைத் தடுக்கும் வேடர் அல்லது கள்வராகவும், இறையருளை (அவரால் தாக்கப்படாது) மறைந்து

நின்று அவருடன் போர் செய்வதற்கேற்ற பாதுகாப்பான இடமாகவும் உருவகித்தார்.

> இந்திரியம் எனைப்பற்றி நின்றேஎன் வசத்தின்
> இசையாதே தன்வசத்தே எனையீர்ப்பகுதி வற்றைத்
> தந்தவன் தன் ஆணைவழி நின்றிடலால் என்றும்
> தானறிந்திட் டிவற்றினொடுந் தனையுடையான் தாளிகள்
> வந்தனைசெய் திவற்றின்வலி யருளினால் வாட்டி
> வாட்டமின்றி யிருந்திடவும் வருஞ்செயல்கள் உண்டேல்
> முந்தனுடைச் செயலென்று முடித்தொழுக வினைகள்
> மூளாஅங் காளாகி மீளார்னன்றே.
> (சிவஞான சித்தியார் சுபக்கம் 10.3)

இங்கு அருணந்தி சிவாச்சாரியார் இறைவனின் ஆணைவழி நின்று அவர் தாள்களை வந்தனை செய்து அவர் அருளினால் புலன்களின் வலியை வாட்டி, அவற்றின் வசமாகாது அவற்றைத் தம் வசமாக்கலாம் என்றார். இவ்வாறு வரும் பிற்காலச் செய்யுள்களை நோக்கும்போது 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்னும் தொடருக்குத் தம்மை வணங்கும் அன்பர்களின் ஐம்புலன்களும் அடங்க அருள் செய்பவர் என இங்குக் கொண்ட பொருள் ஏற்றதாகத் தோன்றும்.

இன்னும் கடவுளின் ஆவி அன்பர்கள் உள்ளத்தில் நின்று அவர்களை வழிபாட்டில் ஈடுபடுத்தி நன்னெறிப்படுத்துகிறது எனப் பவுல் கூறியது போலக் கடவுள் தாமே அன்பர்கள் உள்ளத்தில் நின்று தம்மை நினைக்கவும் வாழ்த்தவும் வணங்கவும் செய்து அவர்களைத் தம் வசமாக்கிக் கொள்கிறார் என்ற கருத்தும் நம் பக்தி இலக்கியங்களில் பரக்கக் காணப்படுவதே.

> வந்திப்பார் வணங்கி நின்று வாழ்த்துவார் வாயினுள்ளார்
> சிந்திப்பார் சிந்தையுள்ளார் திருந்துநெய்த் தானத்தாரே
> (67. 8 தலமுறை)

> நெஞ்சுளே புகுந்து நின்று நினைதரும் நிகழ்வினானே
> (121. 1 தலமுறை)

> நெஞ்சுள் நின்று நினைப்பிற்கும் நீதியை (297. 8 தலமுறை)

என நாவுக்கரசரும்,

"அவனருளாலே அவன் தாள் வணங்கி" (சிவபுராணம் 18)
என்றும்

கள்வன் கடியன் கலதியிவன் என்னாதே
வள்ளல் வரவர வந்தொழிந்தான் என்மனத்தே
உள்ளத்து றுதுயர் ஒன்றொழியா வண்ணமெலாம்
தெள்ளும் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ
(திருக்கோத்தும்பி 19)

என்றும் மாணிக்கவாசகரும் இன்னும் பலவகையாகப் பல பக்தர்களும் அடியவர்களின் குறைகளைப் பொருட்படுத்தாது உள்ளத்தில் புகுந்து நின்று வழிநடத்தும் கடவுளின் அருளை வியந்து பாடியுள்ளனர்.

திருமுழுக்குப் பெற்றுக் கிருஸ்தவத் திருக்கூட்டத்தில் சேர்ந்தவர்களே கடவுளின் தூய ஆவியைப் பெற்றவர்கள் எனவும் அவர்களின் உள்ளத்திலேயே இறையருள் செயற்படுகிறதெனவும் பவுல்கருதினார். தம் காலத்தில் தம் அனுபவத்தைக் கொண்டு அவர் எழுதினார். ஆயினும் திருநாவுக்கரசர் போன்ற கிருஸ்தவரல்லாத பிற அன்பர்களும் கடவுளே தம்முள்ளத்திலிருந்து தம்மை நினைக்கவும் வழிபடவும் செய்கிறார் என்பதைத் தம் அனுபவத்தால் உணர்ந்தனரே. இன்னும் கடவுளே தம் உள்ளத்தில் நின்று நன்மை தீமையைப் பிரித்துணரும் அறிவைத் தமக்கு நல்குகிறார் எனவும் அவரே தம்மை இனிய துதிப்பாடல்கள் பாடுவிக்கிறார் எனவும் நாவுக்கரசர் உணர்ந்து கூறினார்.

நானேதும் அறியாதே என்னுள் நின்று
நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய் (77.2தலமுறை)
பந்தமறுத் தாளாக்கிப் பணிகொண்டாங்கே
பண்ணியலுந் தமிழ்மாலை பாடுவித்தென்
சிந்தைமயக்கறுத்த திருவருளினானை (161. 4 தலமுறை)

வள்ளுவர் பொதுவாக உலகில் நல்வாழ்க்கை வாழ்வதற்கும் வீடுபேற்றையடைதற்கும் இறைவனின் துணை வேண்டுமென்றார். கடவுள் தாமே அன்பர்களின் உள்ளத்தில் நின்று வழிநடத்துகிறார் என்ற கொள்கை பிற்கால இலக்கியங்களில் வளரலாயிற்று. பவுல் கிருஸ்துவின் மூலம் பாவமன்னிப்பைப் பெற்றோம் என்றார். கடவுள் மக்களின் பாவத்தை மன்னித்தல் கூடும் என்ற கருத்து திருக்குறளில் இல்லை. ஆனால் பாவமன்னிப்பும் பக்திக்கவிஞர்கள் தம் அனுபவத்தில் உணர்ந்த ஒன்றே.

பிழைபொறுத்தி என்பதுவும் பெரியோய் நின் தன்
கடனன்றே பேரருள் நின் பால தன்றே(124 7தலமுறை)

பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன்
பிழைத்தனகள் அத்தனையும் பொறுத்தா யன்றே
இத்தனைக்கும் எம்பரமோ ஐய ஐயோ
எம்பொருமான் திருக்கருணை இருந்தவாறே (309 8தலமுறை)

என்ற நாவுக்கரசரின் மொழிகள் சான்றாம்.

விவிலிய நூலிலேயே கிருஸ்துவின் காலத்தின் முன்பு தீர்க்கதரிசிகள் தாம் கடவுளால் வழி நடத்தப்பட்டதாக நம்பினர். பழைய ஏற்பாட்டின் துதிப்பாடல்களைப் பாடிய கவிஞர்களும் பாவமன்னிப்பைக் குறித்துப் பாடினர். இறைவன் அன்பர்களின் உள்ளத்தில் நின்று வழி நடத்துதல் மட்டுமன்றித் தாமே இவ்வுலகில் ஒரு மானிட மகனாகப் பிறந்து வாழ்ந்து தம் வாழ்வில் தீமையை எதிர்த்து வென்றார் என்பதும் ஆதலால் அவர் வாழ்க்கை மக்களுக்கு முன் மாதிரியாக விளங்குவதுடன் தீமையினின்றும் அல்லது பாவத்தினின்றும் மக்களை மீட்க அவர் வாழ்க்கையும் மரணமுமே வழியாயின என்பது கிருஸ்தவ சமயத்தின் சிறப்பான கொள்கைகளாம்.

மற்றும் தமிழ்நாட்டு பக்தர்கள் பெரும்பாலோர் உலகைத் துறந்து கடவுளைக் கூடுதலையே முக்கிய நோக்கமாகக் கொள்ள பவுலும் ஆதிக் கிருஸ்தவத் தலைவர்களும் உலகில் வாழ்ந்து குடும்பத்துக்கும் சமூகத்திற்கும் அரசுக்கும் தாம் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து சமுதாயத்தினுள்ளிருந்தே பாவங்களை விட்டுத் தூய வாழ்க்கை வாழ்தலை நோக்கமாகக் கொண்டனர். மேலும் திருக்கூட்டம் அல்லது சபை என்னும் ஓரமைப்பை ஏற்படுத்தித் தமக்குள்ளேயே அன்பும் ஒழுக்கமும் ஒற்றுமையும் வாய்ந்த ஓர் உயர் சமுதாயத்தை வகுத்துக் கொள்ள முயன்றனர்.

வள்ளுவர் அறத்தை இல்லறம் துறவறம் என இருவகையாக வகுத்தார். பவுல் போன்ற ஆதிக் கிருஸ்தவத் தலைவர்கள் மக்களனைவரையும் சமுதாயத்துடன் இணைந்துவாழ்ந்தே தூநெறியைக் காக்குமாறு தூண்டினர்.

வள்ளுவரும் பவுலும் பொதுவாக இறையருளையும் அறத்தையும் நோக்கும் முறை மேலே ஒப்பிடப்பட்டது. இனி அறங்களைத் தனித்தனியே ஒப்பிட்டு ஆய்தல் தகும்.

குடும்ப ஒற்றுமையைக் குறித்துப் பவுல் கூறிய கருத்துக்கள் அதாவது கணவன் மனைவியைத் தள்ளிவைத்தல் ஆகாது, கணவனோ மனைவியோ மணமுறிவு(divorce)பெற்றுப்பின் வேறொருவரை மணத்தல் ஆகாது என்பன, மனைவியை வாழ்க்கைத் துணை எனக் கூறிய வள்ளுவர் கருத்துக்கும் ஏற்றதே ஆடவனே குடும்பத்தில் தலைமையுடையவன், மனைவி கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டியவளே எனப் பவுல் கருதினார். வள்ளுவர் கருத்தும் அதுவே என்பதைப் 'பெண் வழிச் சேறல்' என்னும் அதிகாரத்தில் மனைவியின் விருப்பின்படி நடக்கும் ஆடவனை அவர் கண்டித்தல் காட்டும். கணவன் இறந்தபின் மனைவி மறுமணம் செய்து கொள்ளலாம் என்னும் கருத்து பவுலின் கடிதங்களிலும் விவிலிய நூலின் பிற பகுதிகளிலும் காணப்படுகிறது. பாரதிதாசன் போன்ற தற்காலக் கவிஞர்கள் இக்கருத்தை ஆதரித்துப் பாடுகின்றனரேயன்றிக் கைம்பெண் மறுமணத்தை ஆதரித்தோ மறுத்தோ வள்ளுவர் யாதும் கூறவில்லை.

பிள்ளைகள் பெற்றோர்க்குக் கீழ்ப்படிதல் வேண்டும். பெற்றோர் பிள்ளைகளைச் சினமூட்டாவகையில் நன்னெறியில் வளர்த்தல் வேண்டும் என்பன போன்ற கடமைகளையெல்லாம் வள்ளுவர் இரு குறள்களில் அடக்கினார்.

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல் (67)
மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்என்னும் சொல் (70)

தந்தைக்குக் கீழ்ப்படியாத மகனைப் பார்த்து யாரும் 'இவன் தந்தை என்னோற்றான் கொல்'எனக் கூறார். தன்மகனை அவையத்து முந்தியிருப்பச் செய்வதற்குத் தந்தை அவனைச் சிறுவயதிலிருந்து நல்லறிவு புகட்டி நன்னெறியில் வளர்த்தல் வேண்டும் என்பதும் தெளிவு.

அடிமைகளுக்கும் அவர்களை ஆள்வோர்க்கும் உரிய கடமைகளைக் குறித்து வள்ளுவர் யாதும் கூறவில்லை. அக்காலத்தில் தமிழ் நாட்டில் மக்கள் அடிமையாதல் பெருவழக்காக இருந்ததா என்பது ஐயமே. இப்பொருள் முன்பே ஆயப்பட்டது (தீர்க்கதரிசிகள் எட்டாம்

நூற்றாண்டில் வாழ்ந்தோர் பார்க்க). ரோமராட்சியின் கீழ் அதிலும் ரோம், கொரிந்து, அதென போன்ற செல்வம் மிக்க நகர்களில் பாதிப் பேர் அடிமைகளாகவேயிருந்தனர். ஆகவே பவுல் போன்றோர் அவர்கள் நிலைமையையும் அவர்கட்குரிய கடமையையும் தனியே எடுத்துச் சொல்ல வேண்டியதாயிற்று. 'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்' (972) என்ற வள்ளுவர் கூற்றை நோக்கின் மக்கள் ஒருவர்க்-கொருவர் அடிமையாதல், சிலர் அடிமைகளாகவே பிறத்தல் (ரோம-ராட்சியின் கீழ் சிலர் அடிமைகளாகவே பிறந்தனர். சிலர் பரம்பரை யடிமைகளாகவும் இருந்தனர்) அவர் கருத்துக் கேற்றதன்று எனக் கூறுதலும் கூடும். பவுல் அடிமைகளையாளிவோர் அவர்களை அரு-ளுடன் நடத்துதல் வேண்டு மெனவும் சில அமையங்களில் சகோதரர் போல் எண்ணல் வேண்டு மெனவும் கூறினாரேயன்றி அடிமை கொள்ளும் வழக்கமே தவறு எனக் கூறி அதை எதிர்த்தாரில்லை-ஏன் ? ரோமப் பேரரசின் கீழ்வாழ்ந்த குடிமக்களுள் கிருஸ்தவர் மிகச் சிறுபான்மையினரே. அவர்கட்கு எவ்வித அரசியல் செல்வாக்கும் இருக்கவில்லை. மாறாக எவ்விடத்தும் கிருஸ்தவ சமயத்திற்கு ஓரளவு எதிர்ப்பே அக்காலத்தில் இருந்தது. பவுல் போன்ற கிருஸ்துவத் தலைவர்கள் ரோம ஆட்சியின் கீழ் நிலவிய சட்டங்களையோ சமுதாய அமைப்பையோ மாற்றவோ திருத்தவோ ஆற்றலுள்ளவர்களல்லர். அவர்கள் கருத்தை அரசரும் ஆட்சிப் பொறுப்பிலுள்ளோரும் பொருட் படுத்தத்தக்க நிலைமையும் இல்லை. அரசியலில் உயர்அலுவலராக இருந்த வள்ளுவர் நிலைமைக்கும் சிறையிலிருந்து பல கடிதங்களை எழுதிய பவுலின் நிலைமைக்கும் எவ்வளவு வேறுபாடு? அடிமைகளின் நிலைமையை மாற்றி அவர்களை உரிமையுள்ளவர்களாக்க, அடிமை கொள்ளும் வழக்கத்தையே ஒழிக்க எவ்வித வழியும் இல்லாத அந்-நிலையில் இருக்கின்ற சமுதாய அமைப்பின் கீழ்க் கிருஸ்தவர் கடைப்-பிடிக்கத்தக்க அறங்களைப் பவுல் கூறினார்.

அன்பே பிற அறங்களுக்கு அடிப்படையாவது எனப் பவுல் கூறினார். அவ்வாறு கருதியே வள்ளுவரும் அன்புடைமையை விருந்-தோம்பல் முதலிய பிற அறங்களின் முன்வைத்தார். அன்புடை-யோர் என்றும் தம்நலத்தைப் பொருட்படுத்தாது பிறர் நலத்தையே பொருட்படுத்துவர் என்பதை,

> அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
> என்பும் உரியர் பிறர்க்கு (72)

என்ற குறள் மூலம் புலப்படுத்தினார். தமிழ்நாட்டில் சங்க காலத்திலிருந்து பல்லவகாலம் வரை பரவிய சமண சமயமும் அன்பு அல்லது தயையே எல்லா அறங்களுக்கும் அடிப்படையெனக் கருதி அதைத் 'தயா மூல தன்மம்' எனப்போற்றியது. திருநாவுக்கரசரும் தயையே அறங்களனைத்திற்கும் மூலமானது என்னும் இக்கருத்தையேற்றுக்கொண்டு 'தயாமூல தன்மம்' என்னும் தொடரைத் தம்பாடல்களில் இருமுறை ஆண்டார்[1]. அறங்களனைத்திற்கும் அன்பே அடிப்படை என்னும் கருத்து பொதுவாக எல்லோரும் ஏற்றுக் கொள்ளத் தக்கதே.

அறிவையும் பிற திறமைகளையும்பெற்றிருந்தாலும் உள்ளத்தில் அன்பு இல்லாவிடில் பயனில்லை என்ற பவுலின் கருத்தையும்,

புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு (79)

என்ற குறளுடன் ஒப்பிடலாம்.

கிருஸ்து உலக மக்களனைவரையும்ஒருகுடும்பமாகக் கருதினார். மக்களனைவரையும் உடன்பிறப்பாளராகவும் கடவுளைத் தந்தையாகவும் எண்ணினார். பவுல் கிருஸ்தவர் திருக்கூட்டத்தைக் கிருஸ்துவின் உடலமாகவும் அதைச் சேர்ந்த ஒவ்வொருவரையும் ஒருறுப்பாகவும் கூறினார். மக்கள் குலத்தை ஒரு குடும்பமாகக் கூறும் வழக்கு திருக்குறளில் இல்லாதது போலவே சமுதாயத்தை ஒருடலமாகவும் மக்கள் ஒவ்வொருவரையும் அதன் உறுப்புக்களாகவும் கூறும் வழக்கும் இல்லை. ஆட்சியில் பொறுப்புடைய அமைச்சர், தூதர், படை வீரர் முதலானோரையே அரசாட்சிக்கு உறுப்புக்களாகக் கருதி அங்கம் எனக் குறிப்பிடும் வழக்கு அக்காலத்திலிருந்தது. பிற்காலத்தெழுந்த பக்தி இலக்கியங்களும் பெரியபுராணமும் அடியவர் கூட்டத்தின் சிறப்பை ஆங்காங்கே கூறுகின்றன வாயினும் அடியவர் கூட்டத்தை ஓர் உடலமாகவும் அதிலுள்ளாரை அவயவங்களாகவும் கூறும் வழக்கு அவற்றிலும் இல்லை. ஆகவே பவுல் கூறியது போல ஒருவர் துயருற்றால் அனைவரும் துயருறல் வேண்டும், ஒருவர் நலமடைந்தால் அனைவரும் மகிழ்ச்சியுற வேண்டும், அத்தகைய

1. திருநாவுக்கரசர் **தேவாரம்**

சலங்கொடுத்துத் தயாமூலதன்மை யென்னும்
தத்துவத்தின் வழி நின்று தாழ்ந்தோர்க் கெல்லாம்
நலங்கொடுக்கும் நம்பியை ...... 138. 6 தலமுறை
தயாமூல தன்ம வழியெனக்கு நல்கி 73. 6 தலமுறை

ஐக்கியம் பொதுவாகச் சமுதாயத்திலோ அடியவர் கூட்டத்திலோ நிலவவேண்டும் என்ற கருத்தும் திருக்குறளிலோ தமிழிலுள்ள சமய-நூல்களிலோ இல்லை.

பவுல் சமய அறிவு மிக்க யூதர்களோடும் தத்துவ அறிவும்கலைச் சிறப்புமுடைய கிரேக்கர்களோடும் நாகரிகத்தில் தாழ்ந்த நிலையிலிருந்த பிற இனத்தாரோடும் அவரவர்க் கேற்றமுறையில் நடந்து கொண்டார் என்பதைப் பவுலின் கடிதங்கள் காட்டின. மற்றும் புதிதாகக் கிருஸ்துவ சமயத்தில் சேர்ந்தவர்களுக்கு அவர்கள் எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய கருத்துக்களையே கூறினார் என்பதையும் கிருஸ்துவ சமய அறிவைப் பெற்றவர்களுடன் உரையாடும்போது ஆழ்ந்த கருத்துக்களைக் கூறினார் என்பதையும் அவர் கடிதங்களினின்றும் அறியலாம். அவரவர் பண்பறிந்து நடத்தலும் கேட்போர் அறிவு நிலைக்கு ஏற்றபடி, அவர் புரிந்துகொள்ளுமாறு பேசுவதும் வள்ளுவர் அரசியலிலும் அமைச்சியலிலும் கூறிய அறங்களே.

> நன்றாற்ற லுள்ளந் தவறுண் டவரவர்
> பண்பறிந் தாற்றாக் கடை (469)
>
> ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல் வெளியார்முன்
> வான்சுதை வண்ணம் கொளல் (714)

தம்மைக் கிருஸ்துவின் அமைச்சராகவும் தூதராகவும் கருதிக் கொண்ட பவுல் பிற நீதிநூலோர் அரசியலில் கூறத்தக்க சில அறங்-களையும் தம் பணியில் கடைப்பிடித்தது பொருத்தமே.

ஒழுக்கத்தையும் தன்னடக்கத்தையும் (self control) பவுல் வற்புறுத்தியமை,

> ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
> உயிரினும் ஓம்பப் படும் (131)

எனவும்,

> காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
> அதனினூங்கில்லை உயிர்க்கு (122)

எனவும் கூறிய வள்ளுவர் கருத்துக்கு ஏற்றதே.

ஈகையை இருவரும் சிறப்பித்தனர். ஆயினும் வள்ளுவர் ஈகையைக் குறித்துக் கூறியபோது தனிப்பட்டோர் தம் பொருளை

வறியார்க்கோ பிறர்க்கோ தனித்தனியே ஈதலைக் குறித்தே எண்ணி-னார் எனத் தோன்றும். பவுல் திருக்கூட்டத்தைச் சேர்ந்த பலரிட-மிருந்தும் பொருள் திரட்டி எருசலேம் நகர்க்கிருஸ்தவர்களிடையே மிகுந்த வறியோரிடம் சேர்ப்பித்தார். அந்நிதிக்குப் பொருள் தரும்படி பலரிடம் வேண்டினார். இவ்வாறு வறியவர்க்காகப் பொருள் திரட்டு-வோர்க்குப் பொறுப்புப் பெரிது. தம் பொருளையே தாம் பிறர்க்கு ஈவதாயின் யாருக்காயினும் தரலாம். செல்வர்க்கோ தமக்கு வேண்டி-யவர்க்கோ ஈயினும் தவறில்லை. ஆயினும் வள்ளுவர்,

வறியார்க்கொன் றீவதே ஈகை மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரதுடைத்து (221)

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி (226)

என்ற குறள்களின் மூலம் மிக வறியவர்க்கு ஈவதே தக்கது என்பதை உணர்த்தினார். பலரிடமிருந்து பொருள் திரட்டி அதை வறியவர்க்குப் பயன்படுத்த முயல்வோரோ யாருடைய பொருள் யார்க்குப் பயன்படு கிறது என்பதைக் குறித்து இன்னும் அதிக கவனம் செலுத்தல் வேண்டும். கொடுப்பவர்களில் செல்வரும் இருப்பர் ; இடைப்பட்ட-வரும் இருப்பார் ; வறியவரும் ஒரு நல்லறத்துக்காகத் திரட்டப்படும் நிதிக்குப் பொருள் கொடுக்க முன்வருவதுண்டு. பலரிடமிருந்து திரட்டப்படும் பொருள் தக்க வகையில் பயன்படுத்தப்படுகிறதா மிக வறியவரின் குறையைப் போக்க உதவுகிறதா என்பதை நிதி திரட்டுவோரும் அதைப் பயன்படுத்துவோரும் கவனித்தல் வேண்டும். இப்பொறுப்பை பவுல் நன்குணர்ந்தார். நிறைவுள்ள இடத்தினின்று எடுத்துக் குறை நிரப்புவதே நிதி திரட்டலின் நோக்கம் என்றார். இக்கருத்து இன்று கிருஸ்தவத்திருக்கூட்டத்திலும்(Chorch) கிருஸ்துவ நிறுவனங்களிலும் (ஏன், அறநிலையங்களனைத்திலுமே) கடைப்பிடிக்கப்படின் அது சிறப்பாகும்.

தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்த
துண்ணலின் ஊங்கினிய தில் (1065)

எனக் கூறிய வள்ளுவர் பவுலைப் போலவே உழைக்கும் வலிமையும் வாய்ப்பும் உள்ளோர் உழைப்பதைக் கைவிட்டுப் பிறர் உதவியை எதிர்பார்த்தலை விரும்பார் என்பது உறுதி. ஈகை எத்தகையோர்க்குச் செய்யப்பட வேண்டும் என்பதைக் குறித்து மணிமேகலை பின்வரு-மாறு கூறுகிறது.

காணசர் கேளசர் கால்முடப் பட்டோர்
பேணுநர் இல்லோர் பிணிநடுக்குற்றோர்
யாவரு வருகென இசைத்துடன் ஊட்டி (13. 111-115)

இவ்வாறே வள்ளுவரும் கருதியிருத்தல் கூடும்.

பவுல் கூறிய தாழ்மை பொறையுடைமை வெகுளாமை முதலிய அறங்கள் நீதி நூலோர் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படத்-தக்கனவே.

வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை (439)

என வள்ளுவர் அரசற்குக் கூறிய அறிவுரையைப் பவுல், 'தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல்' என அனைவர்க்கும் கூறினார். அரசர்தம் செல்வச்சிறப்பையோ போரில் பெற்ற வெற்றியையோ குறித்துத் தம்மை வியத்தல் கூடும். சமய நெறியில் பற்றுடையோர் தம் சமய அறிவையெண்ணியோ தாம் அடைந்த-ஆன்மீக உயர்வை யெண்ணியோ தம்மை வியத்தல் கூடும். இரண்டும் அவரவர்க்குத் தகுதி யற்றனவே.

இன்னா செய்தோர்க்கும் இனியவே செய்யும் கிருஸ்துவின் கொள்கையைப் பவுலும் பின்பற்றினார். இன்னும்

மறத்தல் வெகுளியை யார் மாட்டும் தீய
பிறத்தல் அதனால் வரும் (303)

என்பதற்கு இணங்க,

"நீங்கள் கோபங் கொண்டாலும் பாவம் செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னால் உங்கள் எரிச்சல் தணியக் கடவது" (எபே. 4.26) என்றார்.

வாய்மையையும் இருவரும் போற்றினர். வாய்மையைப் போற்றும் போதும் அதைப்பிறர்க்குத் தீங்கு பயவாத வகையில் கடைப் பிடித்தல் வேண்டும் எனக் கருதி வள்ளுவர்,

வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமையிலாத சொலல் (291)

என்றார். உண்மையைக் கூறும் போதும் பிறர் மனம் நோகாத வகை-யிலும் பிறர்க்குத் தீங்கு நேராதவகையிலும் பேசுதல் வேண்டும் என்-

பதை எண்ணியே பவுல் அன்புடன் சத்தியத்தைக் கைக் கொண்டு (speaking the truth in love. Eph. 4.15) என்றார்.

பயனில சொல்லாமை என ஓரதிகாரத்தை எழுதிய வள்ளுவரைப் போலவே பவுலும் வீண்பேச்சை விரும்பவில்லை. பயனில கூறு-வதை விட அந்நேரத்தை இறைவனை வாழ்த்தி நன்றி செலுத்து தலில் பயன்படுத்தல் நலமென்றார்.

''அப்படியே வம்பும் புத்தியீனமான பேச்சும் பரியாசமும் தகா-தவைகளே. ஸ்தோத்திரஞ்செய்தலே தகும்'' (எபே. 5.4).

இன்னும் ''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'' (590) என்பதற் கேற்பப் பவுலும்,

''கடைசியாக சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்-புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தி-யுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்'' (பிலி 4.8) என்றார்.

வள்ளுவர் அரசியலையும் அங்கவியலையும்விரிவாகக்கூறினார். பவுல் குடிமக்களின் கடமைகளை மட்டுமே ஓரளவு கூறினார். வரி செலுத்துதல் வேண்டும். அரசியல் அலுவலர்க்கு மதிப்பளித்தல் வேண்டும் எனக் குடிமக்கள் கடமைகளைத் தனியே வள்ளுவர் கூற-வில்லை. அப்படி எடுத்துக்கூற வேண்டாதபடி அக்கடமைகள் அக்-காலத்தில் எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டனபோலும். குடி-மக்கள் வரி செலுத்துதலையும்பிற கடமைகளைச்செய்தலையும் இயல்-பென வள்ளுவர் எதிர்பார்த்தார் என்பது பொதுவாகப் பொருட்-பாலைக் கற்குங்கால் புலப்படும். 'வினை செய்வான் கோடாமை கோடாது லகு' (520) என்ற தொடர் ஒன்றே குடிமக்கள் அரசியல் அலுவலர்க்குக் கீழ்ப்படிந்து அவர் வழி நிற்றலை இயல்பென வள்ளு-வர் கொண்டார் என்பதைத் தெளிவாக்கும்.

பவுலின் கடிதங்களில் காணப்படும் இறையியல் கொள்கைகள் சிலவும் வீடு குறித்த கருத்துக்களும் இறுதியில் (கடிதங்களனைத்தை-யும் ஆய்ந்து பிற கடிதங்களின் கருத்துக்களையும் தொகுத்தபின்) திருக்குறட் கருத்துக்களுடன் ஒப்பிட்டு ஆயப்படும்.

## 9.3. திருக்கூட்ட ஆட்சி ஒழுங்கு குறித்த கடிதங்கள் (Pastoval Epistles)

தீமோத்தெயு என்னும் இரு கடிதங்களிலும் தீத்து என்னும் கடிதத்திலும் சபை ஆட்சி ஒழுங்கு, சபைத் தலைவர்கட்கும் உதவி-யாளர்கட்கும் இருக்க வேண்டிய குண நலன்கள் ஆகியவை பற்றிய குறிப்புக்கள் காணப்படுவதால் இவை இப்பெயர் பெற்றன. தீமோத்-தேயு, தீத்து என்பன பவுலுடன் சேர்ந்து பணி செய்த உதவியாளர்-களின் பெயர்களே. ஆயினும் இக்கடிதங்கள் உண்மையில் பவுலால் எழுதப்பட்டனவோ, அவ்வுதவியாளர்கட்காக எழுதப்பட்டனவோ, என ஆராய்ச்சியாளர் பலரும் கருதுகின்றனர். இவர்களின் காலத்-தின் பின்,முன்பு பவுல் எழுதிய சில குறிப்புக்களைக்கொண்டு பிறரால் எழுதப்பட்டனவே என்பர். இவ்வாறு எழுதப்பட்ட காலம் முதலாம் நூற்றாண்டின் இறுதி அல்லது இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதி என்பர். ஆகவே இவை பவுலின் காலத்திற்குச் சற்றுப் பிற்பட்ட காலத்தில் இருந்த கிருஸ்தவ சமுதாயத்தின் நிலையைக் காட்டும்.

பவுலின் காலத்தில் காணப்படும் இறையியல் கொள்கைகளே இவற்றிலும்காணப்படுகின்றன. கடவுள் ஒருவரே. கிருஸ்து மக்களைப் பாவத்தினின்றும் மீட்க வந்தார். மீட்குப் பொருளாகத் தம்முயிரை யளித்தார் மக்களைக் கடவுளிடம் சேர்ப்பிக்கும் இடையீட்டாளராக (mediator) விளங்குகிறார் என்னும் கருத்துக்கள் இக்கடிதங்களிலும் காணப்படுபவையே. இன்னும் அவர் விரைவில் மக்களை நியாயந்-தீர்க்க வருவார் என்னும் கருத்தும் இக்கடிதங்களின் காலத்திலும் தொடர்ந்து நிலவி வந்ததெனத் தெரிகிறது.

இக்கடிதங்கள் பெரும்பாலும் திருக்கூட்ட ஒழுங்கு குறித்து எழுதப்பட்டவை யாகையினால் இவற்றில் திருக்குறளுடன் ஒப்பிட்டு ஆய்வதற்கு ஏற்ற கருத்துக்கள் அதிகம் இல்லை ஒழுக்கமுடைமை, விருந்தோம்பல், அடக்கமுடைமை, கள்ளுண்ணாமை, அறிவுடைமை, வெஃகாமை, புறங்கூறாமை ஆகிய பண்புகள் திருக்கூட்டத்தைக் கண்காணிப்பவர்கள் உதவியாளர்கள் ஆகியோரிடம் எதிர்ப்பார்க்கப் பட்டன எனத் தெரிகிறது. இனியவை கூறல் நடுவுநிலைமை ஆகிய நலங்களும் அவர்கள் புரியும் பணியில் வேண்டப்பட்டன. ஈகை, ஒப்புரவு ஆகியவற்றை வள்ளுவர் தனிப்பட்டோர் செய்யும் அறங்-களாகவேகருதினார். கிருஸ்தவர்கட்கு முதலாம் நூற்றாண்டிலிருந்தே திருக்கூட்டம் (Church) எனப்படும் ஓரமைப்பு ஏற்பட்டு விட்டதனால்

திருத்தூதரின் செயல்களிலும் இக்கடிதங்களிலும் கிருஸ்தவர்களுள் வறியோரைத் திக்கற்றோரை ஆதரித்தல் கிருஸ்தவ சமுதாயத்தின் பொதுக்கடன் என்னும் கருத்துக் காணப்படுகிறது. பலர் கூட்டாகச் சேர்ந்து வறியோரைத் தாங்கி ஒப்புரவு செய்யும் நிலையை இங்குக்-காண்கிறோம்.

இக்கடிதங்களில் காணப்படும் பொது நீதிகள் தூயர் பவுல் கூறிய நீதிகளுடன் ஒத்தவையே. அன்புடைமை, பணிவுடைமை வாய்மை ஆகிய பண்புகளையே இவைபோற்றுகின்றன.

மாதர்களின் ஆடையணிகளைக் குறித்து வள்ளுவர் யாதும் கூறவில்லை. இக்கடிதங்களில் கூறப்படும் கருத்துக்களை,

குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே யழகு (131)

என்னும் நாலடியார்ச் செய்யுளுடனேயே ஒப்பிடலாம்.

மனைத்தக்க மாண்புடைய ளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை (51)

எனக் கூறிய வள்ளுவர் ஓர் இளம் பெண்ணுக்கு மனையறத்திற்கேற்ற மாண்புகளைக் கற்பிக்கத்தக்கவர் யார் எனக் கூறவில்லை. மணப்பரு-வத்தையடையும் மகளுக்கு அறிவும் ஆசாரமும் கற்பித்தற்குரியவள் தாயே என்ற கருத்து சங்ககால அகப் பொருளிலக்கியங்களில் காணப் படுகிறது. குடும்பத்தில் தாய் மனையறங்களை மகளுக்குக் கற்பித்தல் பொருந்துவதே. கிருஸ்தவர்களிடையே திருக்கூட்ட அமைப்பு (Church) இருப்பதனால் இளம்பெண்கள் ஒருகால் மனையறங்களைத் தம் பிறந்தகத்தில் கற்கும் வாய்ப்பைப் பெற்றிராவிட்டாலும் திருக்-கூட்டத்திலுள்ள முதிர் வயதுள்ள மாதர் இளம்பெண்களுக்கு அத்த-கைய அறங்களைக் கற்பித்தல் வேண்டும் என இங்கு ஒரு சமுதாயப் பொறுப்பு ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

## 9. 4. எபிரேயர்க்கு எழுதப்பட்ட கடிதமும் பொதுக் கடிதங்களும் திருக்குறளும்

செல்வர்கள் வறியோர்க்கு உதவ வேண்டுமென யாக்கோபும் யோவானும் கூறிய கருத்துக்கள்,

வறியார்க்கொன் றீவதே ஈகை (221)

எனவும்,

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி (226)

எனவும் கூறிய வள்ளுவர் கருத்துக்களுடன் பொருந்துவனவே.

மேலும்,

அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு (72)

என வள்ளுவர் பிறரிடத்து அன்புள்ளோர் பிறர் இடுக்கண் உற்ற-விடத்துத் தம் என்பையும் ஈவர் என்னும் கருத்தைத் தெரிவிப்பதால் பசியினாலும் குளிரினாலும் துன்புறும் வறியவனுக்கு உணவும் உடை-யுமாகிய சிறுபொருள் தானும் ஈயாது நல்வாழ்த்தை மட்டும் கூறி அன்புள்ளவனாகத் தன்னைக் காட்டிக் கொள்ள முயலும் ஒருவன் உண்மையில் அன்பிலாதவனே என அவரும் கருதுவர் என்பது திண்ணமே.

இருக்கையளித்தல் முதலியவற்றில் செல்வர்க்கும் வறியோர்க்-கும் வேறுபாடு காட்டுதலாகாது என வள்ளுவர் கூறியதாகத் தோன்றவில்லை. ஆயினும் செல்வரே அறிவிலும் தகுதியிலும் உயர்ந்-தோர் எனக் கருதுதலாகாது. செல்வர் அறிவும் பண்பும் அற்ற-வராகவும் வறியவர் அந்நலங்கள் பொருந்தியவராகவும் இருத்தல் கூடும் என்ற கருத்தைத் தரும் குறள்கள் உள.

இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு (374)

அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள (241)

இன்மை ஒருவற் கிளிவன்று சால்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின் (988)

வறியோர் என்ற காரணத்தால் மட்டும் ஒருவரை இகழ்தலும் செல்வர் என்ற காரணத்தால் மட்டும் ஒருவரை மதித்தலும் பொருந்தா என்பதை இக்குறள்கள் காட்டும். இவை செல்வரையும் வறியவரையும் குறித்த யாக்கோபின் கருத்துக்களோடு ஓரளவு பொருந்தும்.

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லவர் கிழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர். (973)

என்ற குறளும் இங்குக் கருதத் தக்கது. கிருஸ்தவர்கள் வழிபாட்டுக் காகக் கூடும் இடங்களில் செல்வர்கட்கு மேலான இருக்கை யளித்து வறியோரைக் கீழே இருக்கும்படி பணிப்பது தகாது என யாக்கோபு கூறினார். வள்ளுவர் வழிபாட்டிடங்களைக் குறித்தன்றிப் பொதுவாகவே கூறினார். அவர் கூறுவதோ தம் செல்வத்தால் மதிக்கப்பட்டு உயர்ந்த அமளி மிசை அமர்த்தப்படினும் மேன்மைப்பண்புகள் இல்லாதோர் மேன்மையில்லாதவரே. கீழே வறுநிலத்திருப்பினும் மேலான பண்புடையார் உண்மையில் மேலானோரே என்பதாம்.

செல்வர்கள் வறியோரைத் துன்புறுத்தலையும் கூலி கொடாதிருத்தலையும் யாக்கோபு கண்டித்தார்.

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி (115)

எனக் கூறிய வள்ளுவரும் அவற்றை விரும்பமாட்டார் என்பது தெளிவு. தான் வறியோனெனக்கருதிச் செல்வம் பெறும் பொருட்டோ தான் செல்வன் என்ற பெருமிதத்தினாலோ நடுவுநிலைமை தவறாதிருத்தலே சான்றோர்க்கு அழகாம் என்பது அவர் கருத்து.

யாக்கோபு நாவடக்கத்தை மிகவும் வற்புறுத்தினார். யூதாவும் இரண்டாம் பேதுரு என்னும் கடிதத்தின் ஆசிரியரும் கூடவும் நாவடக்கத்தைக் கூறினர். வள்ளுவரும் மூன்று குறள்களில் நாவடக்கத்தைப் போதித்தார்.

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு (127)

ஒன்றானும் தீச்சொற் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும் (128)

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு (129)

"உங்களுள் ஒருவன் தன் நாவையடக்காமல் தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னைத் தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும்"(யாக்.1.26) என்ற

யாக்கோபின் கூற்று மேலே காட்டிய 'ஒருவன் கூறும் சொற்களில் ஒன்றேனும் தீய பயனைத் தருமாயின் அவன் செய்யும் பிற அறங்களும் நன்றாகாதாகி விடும்' என்ற குறளை யொக்கும்.

''அப்படியே நாவானது சிறிய அவயமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும்; பாருங்கள் சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது
நாவும் நெருப்புதான்'' (யாக் 3.5-6).

யாக்கோபு நாவை நெருப்பாக உருவகித்தது போலவே வள்ளுவரும் அதை நெருப்புடன் உவமித்தார். சுடுசொற்களை அள்ளி வீசுவதால் அது நெருப்பாயிற்று சுடுசொற்களால் சினமும் பகையும் உண்டாகித் தீங்கு பயக்கும் என்பதைக் கருதியே இருவரும் நாவடக்கத்தை வற்புறுத்தினர்.

'அடக்கம் அமரருள் உய்க்கும்' (121) என வள்ளுவர் கூறியதனால் தேவதூதரும் அடக்கமுடையோராய்த் திகழ்கின்றார் எனக் கருதிய யூதாவையும் இரண்டாம் பேதுருவையும் போல் அடக்கம் அமரரின் பண்பு என அவரும் கருதினார் போலும்.

தாம் அறிவுடையோர் என எண்ணுவோர் தம்முள் மனக்கசப்பும் பகையும் உடையவர்களாக இருப்பின் அது உண்மை அறிவாகாது. உண்மையறிவோ (பரத்திலிருந்து வருகிற ஞானம்) மக்களுள் பகையற்ற அமைதியையும் சமாதானத்தையும் இணக்கத்தையுமே உண்டாக்கும் என யாக்கோபு கூறினார் (யாக். 3.13-17).

சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு (422)

உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும்
கூம்பலும இல்ல தறிவு (425)

என்ற குறள்களும் அறிவு உள்ளத்தைச் சென்ற வழியில் செலவிடாது தீதினின்றும் நீக்கிநன்றின்பாலுய்க்கும் என்றும் அறிவு தன்னையுடையோனுக்கு உலகையே நட்பாக்கும் அந்நட்புதானும் முன்மலர்ந்து பிற்கூம்புதலின்றி ஒரு தன்மைத்தாய் நிலைத்திருக்கும் நட்பாகும் என்றும் கூறும். அறிவு மனக்கசப்பு பகையாகியவற்றை நீக்கி அமைதியையும் இணக்கத்தையும் தரும் என்ற கருத்து இங்குக் காணப்படுகிறது.

வாழ்க்கையின் நிலையற்ற தன்மையை உணராது வருங்காலத்தைக் குறித்து மக்கள் திட்டமிடுவதன் பொருத்த மின்மையை யாக்கோபு பின்வருமாறு கூறினார் :

''மேலும் நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப் போய், அங்கே ஒரு வருஷம் தங்கி வியாபாரம் செய்து சம்பாத்தியம் பண்ணுவோம் என்கிறவர்களே கேளுங்கள்.

நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே, உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சகாலம்தோன்றிப் பின்பு தோன்றாமலிருக்கிற புகையைப் போலிருக்கிறதே.

ஆதலால் ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால, இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்ல வேண்டும்'' (யாக். 4.13-15).

ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியும் அல்ல பல (337)

என்றார் வள்ளுவர்.

புதிய ஏற்பாட்டிலுள்ள கடிதங்களையெழுதிய ஆசிரியர்களில் பலர் புறங்கூறுதலைக் கண்டித்தனர். அது அன்புக்கு மாறானது என்றனர். யாக்கோபு, பேதுரு ஆகியோரின் கருத்தும் அதுவே. வள்ளுவரும்,

அறஞ்சொல்லும் நெஞ்சத்தா னன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும் (185)

என்றார்.

ஒருவன் துன்பம் நேரிட்டபோதும் அதை நீக்குமாறு அல்லது அதைத் தாங்கும் வலிமையைத் தருமாறு கடவுளை வேண்டுதல் பொருந்தும், மகிழ்ச்சியுடன் இருக்குங்காலும் கடவுளுக்கு நன்றி கூறித் துதிப்பாடல்கள் பாடவேண்டும் என யாக்கோபு கூறினார். இக்கருத்து குறளில் இல்லை. பொதுவாகக் கடவுளை வணங்குதல் மக்கள் கடன் என வள்ளுவர் கடவுள் வாழ்த்தில் கூறினார். இடுக்கண் அழியாமையில், இடுக்கண் வருங்கால் நகுதல், 'இலக்கம் உடம்பு இடும்பைக்கு' 'இடும்பை இயல்பு' எனக் கருதுதல், இன்னாமை இன்பம் எனக் கொள்ளல் ஆகிய அறிவுரைகளைக் கூறினாரேயன்றிச்

செய்த பாவங்களுக்காக வருந்துதல் வேண்டும். இறைவனிடம் மன்னிப்புக் கோருதல், ஒருவர்க்காக ஒருவர் பிரார்த்தனை செய்தல் வேண்டும் என்னும் கருத்துக்களும் குறளில் இல்லை.

மகளிர் அமைதியையுடைய உள்ளத்தையே தமக்கு அணியாகக் கொள்ளல் வேண்டுமெனப் பேதுரு கூறினார்.

''அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது'' (பேது. 3.4)

இக்கூற்று,

பணிவுடையன் இன்சொல னாதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற (95)

என்னும் குறளுடன் ஒப்பிடத்தக்கது.

துன்பத்தைத் துணிவுடன் தாங்குதல் அல்லது இடுக்கணழியாமை இக்கடிதங்களில் பலவற்றில் பேசப்படுகிறது. நல்லோர் துன்பத்தைக் குறித்த பழைய ஏற்பாட்டுக் கருத்துக்களும் திருக்குறட் கருத்துக்களும் முன்பு ஒப்பிட்டு ஆயப்பட்டன. இக்கடிதங்களும் நல்லோர் துன்பத்தைக் குறித்துப் பல கருத்துக்களைக் கூறுகின்றன. அவை வருமாறு :-

(1) துன்பம் துன்பமுறுவோர்க்கு உறுதியையும் மனவலிமையையும் அளித்து அவர் குணத்தை யுயர்த்துகிறது.

''இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; என்றாலும் துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக் காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்.

அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்: அதைப் பார்க்கிலும் அதிகம் விலையேறப்பெற்ற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்குப் புகழ்ச்சியும் வலிமையும் கனமுமுண்டாகக் காணப்படும்.''

(1 பேது. 1.6.7.)

இத்தகைய கருத்துக்கள் எபிரேயர், யாக்கோபு என்னும் கடிதங்களிலும் உள்ளன. துன்பம் மக்களைத் திருத்திக் குண உயர்வை அளிக்கும் என்னும் கருத்து (the disciplinary value of suffering) பழைய ஏற்பாட்டிலும் காணப்படுவதே. திருக்குறளிலும் இக்கருத்து உள்ளமை முன்பே குறிப்பிடப்பட்டது.

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு (267)

(2) நீதியின் வழியில் நின்று துன்பமடைபவர் கிருஸ்து அடைந்த துன்பத்தில் பங்குபற்றுகின்றவர்களாயுள்ளனர். ஆகவே கிருஸ்துவோடு தமக்குக் கிடைத்த இவ்வகை இணக்கத்தை (Fellowship) குறித்து அவர்கள் மகிழ்ச்சியடைதல் வேண்டும்.

''கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும் படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்''. (1 பேது 4-13)

இக்கருத்து கிருஸ்தவ இறையியல் கொள்கையினின்றும் பிறப்பதால் இதைத் திருக்குறளில் காண இடமில்லை.

(3) கிருஸ்தவர்கள் பிற கிருஸ்தவர்களின் துணையினால் அல்லது கூட்டுறவினால் உள்ள உறுதியையடைதல் கூடும்; அவ்வாறு ஒருவர்க்கொருவர் உதவித் துணை நிற்றல்வேண்டும். ஒருவர்க்காக ஒருவர் வேண்டுதல் புரிதலும் வேண்டும் இவ்வாறு செய்யின் துன்பம் அவர்களுள் ஐக்கியத்தையும் நெருக்கத்தையும் உண்டாக்கும்.

''நிந்தைகளாலும் உபத்திரங்களாலும் நீங்கள் வேடிக்கையாக்கப்பட்டது மல்லாமல், அப்படி நடத்தப்பட்டவர்களுக்குப் பங்காளருமானீர்கள்.

நான் கட்டப்பட்டிருக்கையில் நீங்கள் என்னைக்குறித்துப் பரிதபித்ததுமன்றி, பரலோகத்தில் அதிக மேன்மையும் நிலையுள்ளதுமான சுதந்திரம் உங்களுக்கு உண்டென்று அறிந்து உங்கள் ஆஸ்திகளையும் சந்தோஷமாய்க் கொள்ளையிடக் கொடுத்தீர்கள்'' (எபி 19 33-34).

உடன் கிருஸ்தவர்கள் நிந்திக்கப்பட்டுத் துன்பத்துக்குள்ளான போது தாமும் மனம் வருந்தியும் அவர்கள் சிறைப்பட்டபோது

அதற்கு இரங்கித் தம்பொருளைக் கொடுத்து உதவியும் பலர் தம் ஐக்கியத்தைப் புலப்படுத்தியமை இங்குக் கூறப்பட்டது.

''கட்டப்பட்டிருக்கிறவர்களோடே நீங்களும் கட்டப்பட்டவர்கள் போல அவர்களை நினைத்துக் கொள்ளுங்கள்; நாங்களும் சரீரத்-தோடிருக்கிறவர்களென்று அறிந்து, தீங்கனுபவிக்கிறவர்களை நினைத்துக் கொள்ளுங்கள்'' (எபி. 13-3).

இங்குச்சிறைப்பட்டும் வேறுவகையிலும் கிருஸ்தவ சமயக் கோட்பாடுகளினிமித்தம் துன்புறுவோரை நினைக்கும் படியும் தாமும் அவர்களுடன் துன்புறுவதுபோல் அனுதாபம் கொள்ளும்படியும் கிருஸ்தவர்கள் கற்பிக்கப்படுகின்றனர்.

''விசுவாசத்தில் உறுதியாயிருந்து அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்தில் அப்படிப்பட்ட-பாடுகள் நிறைவேறி வருகிறதென்று அறிந்திருக்கிறீர்கள்''.

(1 பேது 5. 9)

இங்குத்துன்புறும் கிருஸ்தவர்கள் உலகில் பல இடங்களிலும் தங்கள் சகோதரர் (உடன் கிருஸ்தவர்) தம்மைப் போலவே பாடு-படுகின்றனர் என்னும் எண்ணத்தினால் அவர்களொடும் தமக்குள்ள கூட்டுறவு அல்லது ஐக்கியத்தினால் ஆறுதலையும் உள்ள உறுதியையும் அடைந்து தீமையை எதிர்த்து நிற்றல் கூடும் என்ற கருத்து காணப்-படுகிறது.

இத்தகைய கருத்துக்களும் திருக்குறளில் இல்லை. ஏனெனில் ஓர் உயர் குறிக்கோளுக்காகப் பலர் சேர்ந்து துன்புறும் நிலை அக்-காலத்தில் தமிழ்நாட்டில் இல்லை. தனிப்பட்டோர் துன்பத்தை எண்ணியே வள்ளுவர் இடுக்கணழியாமை என்னும் அதிகாரத்தை எழு-தியிருப்பதாகத் தோன்றுகிறது. இந்நூற்றாண்டின் முற்பகுதியில் பலர் சேர்ந்து தேசியப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைபுகுந்தும் பிற துன்பங்களை யேற்றும் பணி செய்த காலத்தில் தோன்றிய பாரதியார் நாமக்கல் கவிஞர் முதலியோரின் பாடல்களிலும் தொண்டர்கள் துன்-பத்தில் அடையும் இணக்கம், தம்மொடு துன்புறுவோரின் ஐக்கியத்-தினால் உறுதி பெறல் ஆகிய கருத்துக்களைக் காணலாம்.

(4) அநீதியாகத் துன்புறுவோர் அத்துன்பத்தைப் பொறுமை-யுடன் தாங்கி அந்நிலையிலும் தம் உயர் ஒழுக்கத்தையும் குறிக்கோள்

களையும் காத்து நிற்பாரேயாயின் அவர்க்கும் துன்பம் செய்வோரும் அவர் பொறையையும் உறுதியையும் காணும் பிறரும் திருந்தி அவர் கொள்கைகளையே தாமும் தழுவி நலமடைதல் கூடும் என்னும் கருத்து 'முதலாம்பேதுரு' வில் பன்முறை காணப்படுகிறது. வீட்டில் கணவன் மனைவியிடையே உள்ள உறவிலும், அடிமைகட்கும் அவர்களையுடையவர்க்கும் உள்ள தொடர்பிலும் குடிமக்கட்கும் அரசுக்கும் இடையே உள்ள கடப்பாடுகளிலும் கிருஸ்தவர்களின் நன்னடத்தையும் பிறர் அநீதியாகத்துன்பமிழைப்பினும் அதைப் பொறுமையுடன் தாங்கும் இயல்பும் பிறரை நல்வழிப்படுத்தப் பயன்படவேண்டுமென்பதே பேதுருவின் ஆவலாயிற்று.

இக்கருத்து திருக்குறளில் இவ்வளவு தெளிவாகக் காணப்படவில்லை. ஆயினும்,

> திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
> அறனல்ல செய்யாமை நன்று 157)

என்னும் குறள் தன்னிடத்துப் பிறர் செய்யத் தகாத கொடுமைகளைச் செய்யினும் அத்தீவினைப் பயனால் அவர் பின்னால் அடையப்போகும் துன்பத்திற்கு அல்லது தானும் அத்தகைய கொடுஞ்செயல்களைச் செய்தால் அதனால் அவர்க்கு நேரும் துன்பத்துக்கு இரங்கி அறனல்லாதவற்றைச் செய்யாதிருப்பது நன்று எனக் கூறுகிறது. இங்குத் துன்பம் செய்வோர்க்கு இரங்கவேண்டும், அவர் நலனைக் கருதுதல் வேண்டும் என்னும் கருத்துக் காணப்படுகிறது. துன்புறுவோரின் பொறுமையினால் துன்பம்செய்வோர் நல்வழிப்படுவர் என்னும்கருத்து இல்லை.

> இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
> நன்னயம் செய்து விடல் (314)

என்னும் குறள் இன்னாசெய்யப்பட்டோர் செய்தோர்க்கு நன்மையே செய்யின் அதனால் அவர் (இன்னாசெய்தோர்) நாணமடைவர் எனக் கூறுவதால் அவ்வாறு நாணினோர் பின்பு திருந்தி நல்வழிப்படுவர். அது துன்புற்றோர் காட்டும் பொறுமையின் பயன் என்ற கருத்தும் அதில் அடங்கியிருப்பதாகக் கொள்ளலாம்.

### 9.5. புதிய ஏற்பாட்டில் இறையியல் கொள்கையும் திருக்குறளும்

அவதாரம் அதாவது கடவுள் மக்களில் ஒருவராகப் பிறந்து வாழ்ந்து மரித்தல் என்னும் கருத்து திருக்குறளில் இல்லை புதிய

ஏற்பாடோ கிருஸ்துவையே கடவுளாகக் கொள்கிறது மற்றும் கடவுள் தந்தை, மகன், தூய ஆவி என மூவடிவத்தில் உள்ளார் என்ற திரித்துவக் கொள்கை (doctrine of Trinity) பிற்காலத்தெழுந்ததெனினும் அதன் அடிப்படை புதிய ஏற்பாட்டிலேயே காணப்படுகிறது. கிருஸ்து கடவுளைத் தந்தையென்றார். அவரைப் பின்பற்றுவோரும் கடவுளைத் தந்தையாகக் கண்டனர். 'அப்பா பிதாவே' எனத் தாம் அவரையழைப்பதாகப் பவுல் கூறினார் கிருஸ்துவையும் தெய்வத்தன்மையுடையவராகக் கருதி வழிபட்ட கிருஸ்தவர்கள் அவரைக் கடவுளின் திருமகன் என அழைத்தது மட்டுமன்றி அவர் உலகத்தின் தோற்றத்தின் முன்பே பிதாவாகிய கடவுளோடு உடனுறைந்தவர். அவர் மூலமாகவே யாவும படைக்கப்பட்டன, அவர் இவ்வுலகில் தோன்றிய பிறப்பு முன்பே நியமிக்கப்பட்டது, அவர் தம் தூய வாழ்வாலும் மரணத்தாலும் மக்களைப் பாவத்தினின்றும் மீட்டார் அல்லது மீட்க வழிவகுத்தார், பின்னும் பிதாவோடு உடனிருந்து மக்களை அவருடன் இணங்குவிக்கும் இடையீட்டாளராக (Mediator) பணியாற்றுகிறார் என்றும் கற்பித்தனர்.

இக்கருத்துக்கள் திருக்குறளில் இல்லை. பலவடிவங்களையேற்று அல்லது தாம ஒருவரே பலராகி நின்று செயல்புரியும் ஆற்றல் குறித்ததொன்றாக மாட்டாக்குறைவிலனாகிய கடவுளுக்கு உண்டு என்பதைப் பிற்காலத் தெழுந்த சித்தாந்த நூலோர் ஒப்புவர்.²

வள்ளுவர் திருக்குறளில் கடவுளைக்குறித்துக் கூறும் கருத்துக்களில் 'வாலறிவன்' 'தனக்குவமை இல்லாதான்' 'அறவாழியந்தணன்' என்பன விவிலிய நூல் கடவுட் கொள்கைக்கும் பொருந்துவனவே. 'மலர்மிசையேகினான்' என்பதற்கு அடியவர் உள்ளக்கமலத்தில் வீற்றிருப்பவன் எனப் பொருள் கொள்ளின் அதுவும் ஏற்றதே. மற்றும் கடவுள் உலகுக்குக் காரணமானவர், கடவுளின் புகழ் பொருள் நிறைந்த புகழாகும் என்னும் கருத்துக்களும் விவிலிய நூலிலும காணப்படுவனவே. இக்கருத்துக்கள் அனைத்தும் பழைய ஏற்பாட்டிலேயே காணப்பட்டமை ஆங்காங்கு எடுத்துக் காட்டப்பட்டது.

2 **சிவஞான சித்தியார்** சுபக்கம் 1. 74

சிவஞ்சத்தி நாதம் விந்து சதாசிவன் திகம்ழ ஈசன்
உவந்தருள் உருத்தி ரன் தான்மாலயன் ஒன்றி னொன்றாய்
பவந்தரும் அருவம நாலிங் குருவகா லுபயம ஒன்றாய்
நவந்தரு பேதம் ஏக நாதனே நடிப்ப னென்பர்

'பொறிவாயிலைந்தவித்தான்' என்னும் தொடரோ கிருஸ்தவ இறையியற் கொள்கைக்கே மிக ஏற்புடையதாகும். அங்கு அது எவ்வித இடர்ப்பாடுமின்றிப் பொருந்தும் பொருந்துமாறு பின்பு விளக்கப்படும்.

'எண்குணத்தான்' என்னும் தொடருக்கு உரையாசிரியர்கள் பலவாறு பொருள் கொண்டனர் இத்தொடரை வினைத்தொகையாகக் கொண்டு எண்ணப்பட்ட குணங்களையுடைய இறைவன் எனக் காலிங்கர் பொருள் கூறினார். தற்காலத்தில் சிலர் இத்தொடரைப் பண்புத்தொகையாகக் கொண்டு, 'எண்பொருளவாகச் செலச்சொல்லி' (குறள் 424) என்ற தொடரில் வருவதுபோல் 'எளிமை' என்னும் பொருளைத் தருவதாகக் கருதி அடியார்க்கு எளியவனாய் இறைவனின் தன்மையைக் குறிக்கும் என்பர். ஆயினும் உரையாசிரியரில் பெரும்பாலோர் எண் என்னும் அடி எட்டு என்னும் பொருளைத் தருவதாகக் கொண்டனர் பரிமேலழகர் கூறும் எண் குணங்களிற் சில விவிலிய நூலிலும் கடவுளின் இயல்பாகக் கூறப் பட்டமை முன்பே ஆயப்பட்டது (துதிப்பாடல்கள் பார்க்க) பரிதியார் கூறும் எண்குணங்களுள அனந்தஞானம், அனந்தவீரியம், அனந்த-குணம், அனந்த தரிசனம், அழியா இயல்பு என்பன கிருஸ்தவ இறையியற் கொள்கையோடும் பொருந்தும் நாமமின்மை, அவா-வின்மை என்பன பொருந்தா.

வள்ளுவர் கடவுளை'வேண்டுதல் வேண்டாமை இலான்'எனவும் பற்றற்றான்' எனவும் கூறியதறகுமாறாக விவிலிய நூலில் கடவுள் மக்கள் குலத்தின் மேல் மிக்க அன்புள்ளவராகவும் மக்கள் சார்பாகத் தாமும் இன்பதுன்பத்தையடைபவராகவும் காட்டப்படுதல் முன்பே காட்டப்பட்டது. (நற்செய்தி, தீர்க்கதரிசிகள் நூல்கள பார்க்க) புதிய ஏற்பாட்டின் காலத்தில் கிருஸ்தவர்கள் கிருஸ்துவையே கடவுளாக வழிபடத் தொடங்கினர். கிருஸ்து பாவமில்லாதவராக வாழ்ந்தார் பற்றற்றவராக இருக்கவில்லை தன் வயத்தரும் எல்லையில் ஆற்றலு-டையவருமாகிய கடவுள் இவ்வுலகில் ஒரு மனிதனாகப் பிறந்து வாழ்ந்து மக்கட்கு ஆசிரியராகவும் நோய் தீர்ப்பவராகவும் நண்பராக வும் பணிசெய்து இறுதியில் தமமை யெதிர்த்தும் இகழ்ந்தும் அடித்தும் துப்பியும் பலவாறு துன்பம் செய்யவும் சிலுவையில் அறைந்து கொல்-லவும் தம்மை அவர்கள் கையில் ஒப்புக் கொடுத்தார் என்றால் அதன் காரணம் எதுவாக இருத்தல் கூடும்? மக்கள் குலத்தில வைத்த

மட்டற்ற அன்பினாலும் அவர்களைப் பாவத்தினின்றும் மீட்கும் ஆவலினாலுமின்றி வேறு எதனால் அவர் இவ்விதம் தாழ்தல் கூடும்? ஆகவே புதிய ஏற்பாட்டின் கடவுளைப் பற்றற்றவர் அவா அற்றவர் எனக் கூறுமாறில்லை.

இவ்வாறு வள்ளுவரின் கடவுட் கொள்கையையும் புதிய ஏற்பாட்டின் கடவுட் கொள்கையையும் ஒப்பிடும் போது சில ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் காண்கிறோம்.

புதிய ஏற்பாட்டு இறையியல் கொள்கையையும் திருக்குறட் கருத்துக்களையும் மற்றொரு வகையிலும் ஒப்பிட்டு ஆய்தல் கூடும்.

அன்புடைமை, ஒப்புரவறிதல், ஈகை, அருளுடைமை பெருமை, சான்றாண்மை, பண்புடைமை, குடிசெயல்வகை முதலிய பல அறங்களை வள்ளுவர் அறத்துப்பாலிலும் பொருட்பாலின் ஒழிபியலிலும் கூறினார். இவற்றை மக்களிற் சிறந்தோரிடம் காணப்பட வேண்டிய இயல்புகளாகக் கருதினாரேயன்றிக் கடவுளின் இயல்புகளாக அவர் கருதவில்லை.

கடவுளோ எல்லாவித எழிற்குணங்களுடையவரென மறைகளனைத்தினாலும் போற்றப்படுகிறார். படர்ந்த சோதி, ஒல்லாத பேரொளியை உகந்தொருகால் ஒதுக்கி யுனதுண்மையான கல்யாண வடிவதனைக் காணுமா காட்டு என மறைகள் இரக்கின்றன[3]. மக்களிற் சிறந்தோரிடம் காணப்படும் நல்லியல்புகள் இன்னும் அதிக அளவில் கடவுளிடம் காணப்படுதல் கூடும் என எண்ணுவதிலும் தவறில்லை.

ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு (215)

என வள்ளுவர் மக்களைக் குறித்தே கூறினார். ஆனால் கடவுளைத் தயாள குணமுடையவராகக் கருதிய திருநாவுக்கரசர்,

ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்
இன்னடி யார்க்கின்பம் விளைப்பான் கண்டாய்
(212.5 தலமுறை)

என இவ்வுவமையைக் கடவுளுக்காக்கினார். உலக நடையினை யவாவும் பேரறிவாளனாகிய செல்வன், ஊருணியை நாடி வந்தவர்களெல்-

3. Radhakrishnan (trans) The Principal Upanishads, Isavasyopanishad, 16.

லாம் நீர்மொண்டு செல்லுதல் போலத் தன்னைநாடி வந்தவர்களெல்லாம் தன் செல்வத்தினால் பயன கொள்ளுமாறு வாழ்வான். பேரின்ப முடையவராகிய கடவுளும் தம்மை வந்தடைந்தோர்க்கெல்லாம் இன்பம் நல்கும் செல்வராக விளங்குகிறார் எனத் திருநாவுக்கரசர் கருதினார்.

கிருஸ்தவ இறைமியற் கொள்கையை நோக்குமிடத்தும் இவ்வாறே திருக்குறள் அறங்கள் சில கடவுளிடத்துப் பேரளவில் பொருந்துவதைக் காணலாம். கிருஸ்து மண்ணுலகில் வாழ்ந்தபோது பொருட் செல்வம் உடையவராக இருக்கவில்லை. தம்மிடமிருந்த ஆற்றலைப் பயன்படுத்தி நோய் தீர்த்தும் பிறவகையிலுதவியும் தம்மிடம் வரும் யாவரும் பயனடையுமாறு நீர் நிறைந்த ஊருணி போலவே யவரும் வாழ்ந்தார். இன்னும்,

> பணியுமாம் என்றும் பெருமை (978)
>
> ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
> மாற்றாரை மாற்றும் படை (985)
>
> இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
> குற்றம் மறைப்பான் உடம்பு (1029)

என்னும் குறள்களில் காணப்படும் கருத்துக்களும் புதிய ஏற்பாடு காட்டும் கடவுளின் இயல்பொடு சிறப்புறப் பொருந்துவனவாம்.

தாழ்மை, தியாகம் ஆகிய பண்புகளை வள்ளுவர் கடவுளின் இயல்புகளாகக் கருதவில்லை. ஆயினும் நம் நாட்டிலும் பிற்காலத்துப் பக்திக் கவிஞர்கள் இவற்றைக் கடவுளின் இயல்புகளாகக் கண்டனர்.

'தன்பெருமை தானறியாத் தன்மையன் காண்' (திருச்சாழல் 19) என்றார் மாணிக்கவாசகர். சைவ சமயப் பாடல்கள் பல முற்றும் உணர்ந்தவரும் முடிவிலாற்றல் உடையவருமாகிய பரமனை மக்களிடம் தாழ்ந்து இரப்பவராகக் காட்டுகின்றன. சிவபெருமான் நஞ்சுண்ட தியாகச் செயலைச் சைவ சமயக் கவிஞர் பலர் வியந்து பாடியமை முன்பே குறிப்பிடப்பட்டது. (தீர்க்கதரிசிகள், பதிலாளாகத்துயரைத் துய்த்தல் பார்க்க) பிற்காலத்தில் தியாகேசர் என்பது சைவர்கள் தம் மிறைக்கு வழங்கிய பெயர்களில் ஒன்றாகும்.

சைவ சித்தாந்த நூல்கள் கடவுள் என்றும் துன்பமோ துயரமோ அடைவதில்லை எனவேகூறுகின்றன. கடவுள் உலகில் பிறத்தல்

கூடும் துயரமடைதல் கூடும் என்ற பிறரின் கருத்துக்களைத் தீவிரமாக மறுக்கின்றனர்.[4] கடவுளை நிர்க்குணவடிவமாகக் கருதும் வேதாந்த நூல்களும் கடவுள் துன்பமடைதல் கூடும் என்ற கருத்தை ஏற்பதில்லை. நம் நாட்டுத் தத்துவ நூல்களுள் கடவுள் துன்பத்தை யேற்கக் கூடும் என்ற கருத்து ஓரளவு காணப்படுவது வைணவ நூல்களிலேயே. கடவுள் என்றும் துன்பமடைதல் இல்லை யெனில் தியாகம என்ற கருத்துக்கும் இடமில்லையே. ஆயினும்,

அரவத்தால் வரையைச் சுற்றி அமரரோடசுரர் கூடி
அரவித்துக் கடையத் தோன்றும் ஆலநஞ்சமுதாவுண்டார்
அரவித்தம் அடியராகி வீடிலாத் தொண்டர் தம்மை
நரகத்தில் வீழவொட்டார் நனிபள்ளி யடிகளாரே

(129.7 தலமுறை)

என்பன போன்ற பக்திக் கவிதைகளில் இறைவனின் தியாகத்தைக் குறித்த சிந்தனையே மேலோங்கி நிற்கிறது. இக்கவிதையைப் பாடிய திருநாவுக்கரசர், மக்களைத் தீமையினின்றும் அல்லது துன்பத்தினின்றும் மீட்பதற்கு (நரகத்தில் வீழவொட்டார்) கடவுள் ஏதோ ஒரு வகையில் துன்பத்தையேற்க வேண்டியிருந்தது என்பதை ஆலநஞ்சமுதாவுண்டார்) உள்ளுணர்வால் உணர்ந்தாரா? தத்துவ அறிவினால் அறியமுடியாத ஓர் உண்மையைப் பக்தர்களின் அன்பு நிறைந்த உள்ளம் அறிய அவாவிற்றா? இது சிந்திப்பதற்குரியதே.

தமிழ்நாட்டுப் பக்தி இயக்கத்தின் காலத்தின்முன், திருக்குறளும் தொல்காப்பியமும் தோன்றுமுன், இருக்குவேதப்பாடல்களைப் பாடிய கவிஞர்களிலொருவர் புருடசூக்தம் என்னும் கவிதையை எழுதினார். படைக்கப்பட்ட பொருள்களனைத்தையும தோற்றுவிப்பவனும தான் முதலில் தோன்றியவனுமாகிய முதல்வனே ஒரு வேள்வியில் பலியிடப் படும் பொருளானான்; தன்னைப் பலியாக அளிததே அனைத்தையும் படைத்தான் எனப்பாடினார்[5] படைப்பிலேயே ஏதோ ஒரு வகையல் இறைவனின தியாகம் அடங்கியுளளது என அம்முனிவர் கரு னார் போலும்.

4 சிவஞான சித்தியார் சுபக்கம் 2.25:

யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வம் ஆகியாங்கே
மாதொருபாகனார் தாம வருவர்மற்றைத்தெய் வங்கள்
வேதனைப் படும் இறக்கும் பிறக்கும்மேல்வினையும் செய்யும்
ஆதலால் இவையி லாதான் அறிந்தருள் செய்வன் அன்றே

5. Macnicol Nicol (Editor) Hindu Scriptures, P. 28, X 90, The 'purusha Sukta, H'umn of Man).

இவ்வாறு நம் நாட்டுச் சமய நூல்களில், தம்மால் படைக்கப் பட்டவர்கள் சார்பாகத் துன்பத்தை ஏற்றுக் கொள்ளும் கடவுளின் தியாகத்தை, தம் மேன்மையையும் ஆற்றலையும் விட்டு அவர்கள் பால் தாழும் அன்பைக் கதையிலும் கவிதையிலும் ஓரளவு காணலாமாயினும் இவை சிறப்புற விளங்கித் தோன்றுவது கிருஸ்தவ இறையியல் கொள்கையிலேயே

தம் தந்தையாகிய கடவுளுடன் சமமாக இருப்பதைப் பெரிதாக எண்ணாமல் ஓர் அடிமையின் சாயலில் இவ்வுலகில் தோன்றிச் சிலுவையில் மரணமடையும் அளவிற்குக் கிருஸ்து தம்மைத் தாமே தாழ்த்திக் கொண்டார் என்ற பவுலின் கூற்றைப் படிக்கும்போது 'பணியுமாம் என்றும் பெருமை' என வள்ளுவர் கூறிய அறவியல் உண்மையின் ஆழ்ந்த பொருள் புலப்படும். கெத்ஸமனே தோட்டத்தில் தம்மைக் கைது செய்ய வந்தோரிடம் 'யாரைத் தேடுகிறீர்கள்?' என வினவி 'நாசரேத் ஊரைச் சேர்ந்த இயேசு நானே ; என்னைக் கைப்பற்ற வாளும் தடியும் கொண்டு படையுடனா வந்திருக்கிறீர்கள் ? நாள்தோறும் ஆலயத்தில் உங்களுடனிருந்து மக்களுக்குப் போதனை செய்தேனே?' எனக் கூறித் தம்மை அவர்கள் கையில் ஒப்புவித்த போது கிருஸ்து பகைவரிடமும் காட்டிய பணிவு,

ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை (985)

சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல் (986)

என வள்ளுவர் கூறிய உயர் சான்றாண்மையொடு ஒக்கும்.

இன்னும் இவ்வுலக மக்களைப் பாவத்தினின்றும் மீட்பதற்காக அவர்கள் சார்பாகக் கிருஸ்து மரித்தார் என்னும் கிருஸ்தவ இறையியற் கொள்கையும்,

இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பா னுடம்பு (1029)

என்னும் குறளுக்கு உயர் பொருள் காட்டவல்லதே. இங்குக் கடவுளைத் தம் தந்தையாகவும் மக்களனைவரையும் தம் உடன்பிறப்பாளராகவும் கருதிய கிருஸ்து தம் குடும்பத்தைக் குற்றம் மறைப்பதற்காக மிக்க துன்பத்தையேற்றதும் பொருந்துவதே.

ஆனால் இவ்வறங்களை வள்ளுவர் மக்களிற் சிறந்தோர் பொருட்டுக் கூறினாரேயன்றிக் கடவுளின் இயல்புகளாகக் கருத-வில்லை கிருஸ்தவர்கள் இவற்றைக் கடவுளின் இயல்பாகக்கண்டனர்.

இறையியல் கொள்கையில் காணப்படும் இவ்வேறுபாடு அறவியலை எவ்வாறு பாதிக்கிறதென ஆராயின், புதிய ஏற்பாட்டு நூல்களை எழுதிய கிருஸ்தவத் தலைவர்கள் அறங்களைக கற்பிக்குங்-கால் அவற்றைக் கடைப்பிடிப்பதற்குத் தாம் தெய்வமாகக் கொண்ட கிருஸ்துவைத்துணையாகவும் முன்மாதிரியாகவும் கருதினர். கடவுளை அவ்வாறு கொள்ளும் நிலை திருக்குறளில் இல்லை. ஏனெனில் மக்க-ளிடம் காணப்பட வேண்டிய அறங்கள் பேரளவில் கடவுளால் கடைப் பிடிக்கப்படுகின்றன என வள்ளுவர் கருதவில்லை. புதிய ஏற்பாட்டை எழுதியோர், 'கிருஸ்து செல்வராக இருந்து நமக்காக வறியவரானார், ஆகையால் நாமும் நம்பொருளைவறியவர்க்காகப்பகிர்ந்தளிப் போமாக எனவும் 'கிருஸ்துவிடம் காணப்பட்ட பணிவு எங்களிடமும் இருப்ப-தாக' எனவும் 'கிருஸ்து தம்மைநிந்தித்தவர்களை நிந்திக்காதிருந்தார். அதுபோல் நீங்களும் பொறையுடைமையைக்கைக்கொள்ளுங்கள்' என-வும் அறங்கள் பலவற்றிற்கும் கிருஸ்துவை முன்மாதிரியாகக் காட்ட வள்ளுவர் கடவுளை முன்மாதிரியாகக் கொண்டது ஒரு இடத்திலேயே

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு (350)

என்ற குறளே அந்த ஒரு இடம்.

இவ்வுலகில் நல்வாழ்க்கை வாழ்வதற்குக் கடவுளின் துணை ஏதோ ஒரு வகையில் வேண்டப்படுகிறது என வள்ளுவரும் கருதினார் 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்னும் தொடருக்குத் 'தம்மை வழி படுவோரின் ஐம்புலன்கள் அடங்கும்படி அருள் செய்பவர்' எனப் பொருள் கொள்ளுதல் கூடும் என்பது முன்பு விளக்கப்பட்டது. கிருஸ்தவர்கள், கடவுள் தாமே இவ்வுலகில் மனிதனாகப் பிறந்து வாழ்ந்து தம்மானிட வாழ்வில் ஐம்புல அவாக்களையும் அடக்கி நன்-னெறிப்படுத்திப் பின் தம்மை வழிபடுவோரும் அவாககளை அடக்கு-மாறு துணை நிற்கிறார் என நம்பினர்.

''ஆதலால் அவர் தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதனாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக் கிறார்'' (எபி. 2. 18).

"நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியரா் நமக்கிராமல், எல்லா விதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்.

ஆதலால் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டை சேரக் கடவோம்" (எபி. 4. 15-16)

இங்குப் பிரதான ஆசாரியர் எனக் குறிப்பிடப்படுபவர் கிருஸ்துவே. திருக்குறளில் அவதாரக் கொள்கையில்லை யாதலி-னால் இக்கருத்தும் திருக்குறளில் இல்லை.

9. 6. வீடு (Salvation)

பண்டைத் தமிழகத்தில் பரவியிருந்த வைதிக சமண பௌத்த சமயத்தோர் அனைவரும் கருதியது போல வள்ளுவரும் பிறப்பாகிய சுழலினின்று விடுதலையடைதலையே வீடாகக் கொண்டார் எனத் தோன்றுகிறது.

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு (339)

புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு (340)

முதலிய குறள்கள் ஒவ்வொரு உயிர்க்கும் இவ்வுலகில் பல பிறவிகள் உள என்ற வள்ளுவர் கருத்தைக் காட்டும்.

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி (356)
ஓர்த்துள்ளம் உள்ள துணரின் ஒரு தலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு (357)
பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு (358)
வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும் (362)

இக்குறள்கள் பிறப்பினின்றும் விடுதலையடைவதையே வீடு பேறாகக் கொள்கின்றன என்பது தெளிவு. இன்னும் மெய்யுணர்தலும் பற்று இன்மை அல்லது அவா இன்மையுமே அவ்வீடுபேற்றை

யளிக்கும் பண்புகளாம் என்பதும் இன்னபல குறள்களினின்றும் தெளி-வாம். ஆயினும் உயிர் பிறப்புத் தொடரினின்றும் விடுதலையடைந்த பின் எய்தும் வீட்டுநிலை எத்தகையதென்பது குறளில் அவ்வளவு தெளிவாகக் கூறப்படவில்லை. பண்டையோர் வீட்டுநிலையைச் சிந்தையும்செல்லாச் சேட்சியது எனக் கருதினாராகலின் அந்நிலை எத்தகையது என விளக்க முயலவில்லை போலும். சங்கரர் காலத்தின் பின் வீட்டு நிலையில் உயிர் தன் தனிப்பட்ட தன்மையை (individua-lity) இழந்து கடவுளுடன் முற்றிலும் ஒன்றாகிறதா, வேறாகவே நிற்கிறதா, ஒரு வகையில் ஒன்றாகவும் பிற வகையில் வேறாகவும் நிலவுகிறதா என்றெல்லாம் தத்துவ அறிஞர்களிடையே நிகழ்ந்த ஆய்-வுகள் வள்ளுவர் காலத்தில் எழவில்லை போலும் வீட்டு நிலையில் கடவுளுக்கும் உயிருக்கும் இடையே உள்ள உறவு எத்தகையது என் பதை விளக்க வள்ளுவர் முயலவில்லை.

'நிலமிசை நீடு வாழ்வார்' (3) எனக் கடவுள் வாழ்த்தில் வரும் தொடருக்கு 'இவ்வுலகின்கண் நெடுங்காலம் வாழ்வார்' எனவும் 'வீட்டுலகின்கண் அழிவின்றி வாழ்வார்' எனவும் இருவகையாகவும் உரையாசிரியர் பொருள் கொண்டனர். இன்னும்,

> யானென தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
> உயர்ந்த உலகம் புகும் (346)

என்னும் குறளும் வீட்டுநிலையை உலகம் எனக் குறிக்கும் வீட்டு நிலையை 'நிலம்' 'உயர்ந்த உலகம்' என வழங்குவதனால் வேதாந்த நூல்களில் கூறப்படுவதுபோல உயிர் தன்னையே இழந்து பரம் பொருளில் கலந்து விடுமென வள்ளுவர் எண்ணவில்லையெனத் தோன்றும்.

> இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னும்
> துன்பத்துள் துன்பம் கெடின் (369)
> ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
> பேரா இயற்கை தரும் (370)

என்னும் குறள்கள் வீட்டுநிலை இன்பமயமானது, மாற்றமில்லாதது என்ற கருத்தைத் தருகின்றன. ஆகவே வீடு எவ்விதமாற்றமுமற்ற ஓர் இன்பநிலை (a static state of bliss) எனக் கருதலாம் வீட்டு நிலையில் உயிர்கட்கும் கடவுளுக்குமிடையே அல்லது உயிர்கள் தமக்-குள்ளேயே அன்புறவு எதுவுமிருத்தல் கூடுமென வள்ளுவர் கருதிய-தாகத் தோன்றவில்லை. வீட்டையடைதற்கு முன்பே பற்றறுதல் வேண்டும் ஆகையினால் வீட்டில் அன்புறவு இல்லைபோலும்.

விவிலிய நூலிலோ, பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு ஆகிய இருபகுதிகளிலுமே மக்களுக்கு இவ்வுலகில் ஒரு பிறப்பே உண்டு என்னும் கொள்கை நிலவுவதால் பிறப்பறுதலைக்குறித்து அங்குக் கவலை யில்லை. பழைய ஏற்பாட்டில் கி.மு. நான்காம் அல்லது ஐந்தாம் நூற்றாண்டுகளின் முன் மறுமையைக் குறித்த கருத்தே யூதர்களிடம் இல்லை. தாம் கடவுள் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து நீதியைக் கடைப்பிடித்தொழுகினால் தம்நாடும இனமும் நலமுறும், தம் பின்வருவோர் (descendants) நலமடைவர், தாம் இறைவனின் ஆணை வழியில் நில்லாமலும் நீதியை மீறித் தீமையைச் செய்தும் வாழ்ந்தால் தம் இனமும் நாடும் தீங்குறும், தம் பின்னோரும் துன்பமடைவர் என அக்கால யூதர்கள் எண்ணினாரேயன்றித் தனிப்பட்டோர் மறுமையில் அடையும் துறக்கத்தையோ நிரயத்தையோ வீட்டையோ குறித்து அவர்கள் எண்ணவில்லை.

பழைய ஏற்பாட்டிலேயே கி.மு நான்காம் அல்லது ஐந்தாம் நூற்றாண்டின் பின் மறுமையிருத்தல் கூடும் எனவும் அம்மறுமையில் நல்லோர் நலத்தையும் தீயோர் துன்பத்தையும் அடைவர் எனவும் பலர் கருதலாயினர். நல்லோர்க்கு நித்திய இன்பமும் தீயோர்க்கு நித்தியத்துன்பமுமாகிய மறுமை உண்டென்ற கருத்தைத் தானியேல் என்னும் நூல் தருகிறது.

புதிய ஏற்பாட்டின் காலத்தில் கிருஸ்தவர்கள் தாம் கிருஸ்துவின் மேல் வைக்கும் நம்பிக்கையும் (faith) அவரொடு தமக்குள்ள அன்புறவுமே வீட்டைத் தருவன எனவும் அவையும் கடவுளின் அருளினாலேயே கிட்டப்பெறுவன எனவும் நம்பினர். மெய்யுணர்தலினாலோ அவா வறுத்தலினாலோ வீட்டையடையலாமென அவர்கள் கருதவில்லை. வீடு என்பது யாது? யூதர்கள் பல பிறவிக்கொள்கையுடையவர்களல்ல ராகலின் அவர்கட்கு வீடு பிறப்பறுதலன்று. பாவத்தினின்றும் விடுதலையடைதலும் கடவுளுடன் நல்லுறவு கொள்ளுதலுமே வீடு என அவர்கள் கருதினர். இவ்வுலக வாழ்க்கையின் பின்னும் வீட்டுநிலையினும் தமக்கும் கிருஸ்துவின் மூலம் கடவுளுக்கும் இடையே உள்ள அன்புறவும் கிருஸ்துவின் அன்பர்களாகிய தம்மிடையே உள்ள ஐக்கியமும் மாறாதிருக்கும். அத்தகைய அன்பில் அடையும் இன்பமே வீட்டின்பமாகும் என அவர்கள் கருதினர். கடவுளால் மீட்கப்பட்டு அவருடன் நல்லுறவு கொள்வதிலும் ஒருவரோடொருவர் சகோதர அன்பு பாராட்டுவதிலும் மக்கள் மகிழ்ச்சியடைவது மட்டுமன்றிக் கடவுளும் மக்களை மீட்பதிலும் அவர்களுடன்

உறவு கொள்வதிலும் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறார் என்பதே விவிலிய நூற்கருத்தாம்

"அவர் தமக்கு முன்வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தில் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்" (எபி 12.2).

இங்குக் கிருஸ்து மக்களை மீட்பதில் தமக்குள் மகிழ்ச்சியினால், அந்நேரத்தில் ஏற்பட்ட அவமானத்தை எண்ணாமல் சிலுவையில் மரணத்தை உவந்து ஏற்றுக் கொண்டார் எனக் கூறப்படுகிறது.

"வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள, சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்-களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவர்" (யூதா. 24) என யூதாவின் கடிதம் கடவுளைக் குறிப்பிடுகிறது.

இவ்வாறு பண்டைக் கிருஸ்தவர்கள் வீட்டுநிலையிலும் அன்-புறவும் அதனால் ஏற்படும் மகிழ்ச்சியுமே சிறப்புற்று விளங்கும் எனக் கருதியதனால் வீட்டுநிலையிலும் உயிர்தன் தனிப்பட்ட தன்மையை (individuality) இழப்பதில்லை யெனவே நம்பினர். தூயர் பவுல் வீட்டிலும் உயிர் ஏதோ ஒருவகை உடலத்துடன் கூடியதாக இருக்கும் என்றார். இவ்வுலகிலேயே கடவுளின் ஆவி தம்மிடையே செயற்படுகிறது, தாம் கிருஸ்துவின் மூலம் கடவுளுடன் ஒருவகை ஐக்கியத்தை யடைகின்றனர் என நம்பியபோதும் வீட்டு நிலையில் உயிர் கடவுளுடன் இரண்டறக் கலக்கும் என்ற கொள்கை அவர்களிடம் இல்லை. 'வெளி' யென்னும் நூலையெழுதிய யோவான் ஒரு தெய்வீகக் காட்சியில் (Vision) பெருந்திரளான மக்கள் இறை-வனின் அரியணையைச் சூழ்ந்து நின்று துதிப்பதைக் கண்டனராம்.

"இவைகளுக்குப் பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரர்களிலு-மிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக் கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளையங்கிகளைத் தரித்து, தங்கள் கை-களில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்துக்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன்" (வெளி. 7.9)

அவர்கள் கடவுளையும் அவர் திருமகனாகிய கிருஸ்துவையும் வாழ்த்தி நின்றனர். அவர்கள் கிருஸ்துவால் மீட்கப்பட்டவர்கள்.

கிருஸ்து அவர்களைக் காத்துப் பரிபாலிப்பவராக இருக்கிறார். அவர்கட்கு இனி எவ்விதத் துன்பமுமில்லையென ஒரு தேவதூதன் யோவானிடம் கூறினான்.

வீட்டுநிலையை இவ்வாறு புனைந்திருக்கிறார் வெளியின் ஆசிரியர். வீட்டையடைந்தோர் தம் தனிப்பட்ட தன்மையையிழப்பதில்லை யென்பதுடன் வீடு ஒவ்வொருவரும் தனித்தனியேயடைவதன்று, அன்பர்களின் கூட்டு வாழ்க்கையிலேயே வீட்டுநிலை பெறப்படுகிறது. (Salvation is realised in the co operative life of the saint) என்ற கருத்தும் இங்குக் காணப்படுகிறது.

வள்ளுவர் காட்டும் வீடு இதனினின்றும் வேறாயதே.

வள்ளுவர் வீடு கடவுளுடன் இரண்டறக் கலந்த நிலையென்று கூறவில்லை. சங்கரர் காலத்தின் முன் தமிழ்நாட்டில் அத்துவிதக் கொள்கைகள் அதிகமாகப் பரவுவதன் முன், வாழ்ந்த தேவார ஆசிரியர்களும் விட்டைக் கடவுளுடன் இரண்டறக் கலந்த நிலையாகக் கருதியதாகத் தோன்றவில்லை. பல தேவாரப்பாடல்களைப் பார்க்கும்போது அவர்களும் அடியவரின் கூட்டு வாழ்க்கையில் பெறப்படும் வீட்டு நிலையையே அவாவினர் எனத்தோன்றும். பண்டைக் கிருஸ்தவர்கள் 'புதுஎருசலேம்' (The new Jerusalem) 'கடவுளின் நகர்'(City of God) என்னும் சொற்களைப்பயன்படுத்தியது போலவே தேவார ஆசிரியர்களும் கூட்டு வாழ்க்கையைக் காட்டும் சிவபுரம், சிவலோகம் என்னும் சொற்களையே பயன்படுத்தினர்.[6] திருநாவுக்கரசர், அவர் இறுதியாகப் பாடியதாகக் கருதப்படும் திருப்புகலூர்த் திருத்தாண்டகத்தில் ஒவ்வொரு செய்யுளின் இறுதியிலும் 'உன்னடிக்கே போதுகின்றேன்' எனப் பாடினார். ஆனால் இறைவன் அடியடைதல் என்பதற்கு அவர் கொண்ட பொருள் யாது?

இறுமாந்திருப்பன் கொலோ ஈசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்தித் தன் சேவடிக்கீழ்ச் சென்றங்
கிறுமாந்திருப்பன கொலோ (2/7-11 தலமுறை)

என்று அவர் திருவங்கமாலையில் பாடியதை நோக்கப் பல கணங்களுடன் (பலருடன்) கூடி இறைவனைச் சேவித்து மகிழும் ஒரு நிலையையே எண்ணினார் எனத்தோன்றும்.

6. திருநாவுக்கரசர் தேவாரம் (தலமுறை)
செல்லநல்லசிவலோகநெறி வகுத்துக்காட்டுவானை (138.1)
சின்னிலா எறிக்கும் சென்னி சிவபுரத்தமா தேனோ (283.2)

அமரர் முனிவர் ஆகியோர் முன்னிலையில் இறைவன் தம்மை நந்தமர் என ஏற்றுக் கொள்ளும் ஒரு நிலையையே சுந்தரர் பெரும் பேறாகக் கருதினாரேயன்றி வேறு எவ்வகை வீட்டையும் நாடவில்லை. அவர்கண்ட கைலைக் காட்சியிலும், 'அரவொலியாகமங்கள் அறிவார் அறிதோத்திரங்கள் விரவிய வேதவொலி விண்ணெல்லாம் வந்தெதிர்ந் திசைப்ப' யோவான் கண்ட காட்சியையொப்பப் பெருந்திரளானோர் இறைவனைச் சூழ்ந்து நின்று துதிப்பதைக் கண்டார்.[7] ஆயினும் 'வெளி'யில் யோவான் கண்டதைப் போல நிரையத்தைக் குறித்த காட்சி எதையும் சுந்தரர் காணவில்லை.

தேவார ஆசிரியர் காலத்துக்கும் சங்கரர் காலத்துக்கும் பின் வாழ்ந்தவராகத் தற்கால இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் பலரால் கருதப்படும் மாணிக்கவாசகரோ, தேவார ஆசிரியர்களைப் போல் சிவலோகம்,சிவபுரம் என்னும் சொற்களைப்பயன்படுத்தினாராயினும், இரண்டறக் கலந்த வீட்டுநிலையையெண்ணித் திருப்படையாட்சி பாடினார். அவ்வீட்டு நிலையில் வழிபாடும் இறைபணியும் இறையருளைப் பெறுதலும் பிற அடியாரோடு கூட்டுறவு இல்லையென்றார். இவையனைத்தும் வீடுபேற்றின் முன்னிகழ்வன,விடுபேற்றையடைந்த பின் நிகழா என்பதே இப்பாடலில் காணப்படும் கருத்தாகும்.

"மாலறியா மலர்ப்பாதமிரண்டும் வணங்குதுமாகாதே" (1)
"மன்னிய அன்பரில் என்பணிமுந்துறவைகுவதாகாதே" (4)
"கன்றை நினைத்தெழுதாயென வந்த கணக்கது வாகாதே" (2)
"எல்லையில் மாக்கருணைக்கடலின்றினிதாடுதுமாகாதே" (4)
"நாமுமெலாமடியாருடனே செல நண்ணுதுமாகாதே" (2)
"சீரடியார்கள் சிவானுபவங்கள் தெரிந்துறுமாகாதே" (8)

முதலிய வரிகள் அதைக்காட்டும்.

மாணிக்கவாசகரின் இக்கருத்துக்களைப் பிற்காலத் தெழுந்த சைவ சித்தாந்த நூலோரும் ஏற்றனர். வள்ளுவர் வீட்டில் உயிருக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு எத்தகையது என விளக்க முயல வில்லை. சித்தாந்த நூலோர் பல உவமைகளினால் அதை விளக்க முயன்றனர். தீயிரும்பைத் தன்னியல்பொடுபொருத்த வேதிப்பது போலவும் உப்பு நீரில் கலந்து தன்சுவையை நீருக்கு அளிப்பது

7. சுந்தரர் தேவாரம் 96,68 தலமுறை

போலவும்கடவுள் உயிரைத் தன்வயமாக்குவர் என்பர்.அவ்வீட்டுநிலை இன்பமயமானதாக இருக்கும் என்பது,

> கரும்பைத் தேனைப் பாலைக் கனியமுதைக் கண்டைக்
> கட்டியையொத்திருப்பன் அந்த முத்தியினிற்கலந்தே
> (சிவஞான சித்தியார் சுபக்கம் 11.12)

என்பது போன்ற வரிகளால் புலப்படும். இவ்வுவமைகளைப் பார்க்கும் போது கடவுள் நாம் வணங்குவதற்கும் பணி செய்வதற்கும் உரிய ஒருவரா (Person to be worshipped and served) அல்லது அனுபவிப்பதற்குரிய பொருளா (or object to be enjoyed) என்ற ஐயம் ஏற்படும்.

இறைவனுக்கும் உயிர்களுக்கும் இடையே இருக்க வேண்டிய உறவை ஆளோடு ஆளிகொள்ளும் அன்புறவாக (a personal relationship of love) திருக்குறள் காட்டவில்லை. சித்தாந்த நூல்களும் அதைத் தெளிவித்தில. அத்தகைய உறவை எட்டியவர்கள் பக்திக் கவிஞர்களே.

> மந்திரமாமுனிவர் இவனாரென எம்பெருமான்
> நந்தமரூரனென்றான் நொடித்தான் மலையுத்தமனே
> (96.9 தலமுறை)

என்ற சுந்தரர் மொழிகளில் காணப்படும் ஆள் உறவு (personal relationship) சித்தாந்த நூல்களில் மறைந்துவிடுகின்றது.

இருதிறத்து அன்பினாலாய ஆளுறவையே கிருஸ்தவர்கள் முக்கியமாகக் கொண்டனர்.

தலைசிறந்த தத்துவ அறிஞரும் இருக்கு வேதப் பாடல்கள் முதற்கொண்டு இந்து சமய நூல்களனைத்தையும் பழுதறக் கற்றவருமாகிய திரு அரவிந்தர் வீட்டைக் குறித்துக் கூறும் கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கது. படைப்பு முழுவதும் ஓர் இலக்கை நோக்கிப்போய்க் கொண்டிருக்கிறது. மக்கள் தனித்தனியாக அன்றிக் கூட்டாக அடையும் வீட்டு நிலையே அவ்விலக்காம். அதையே அரவிந்தர் அமரவாழ்வு (The love divine) என்றார். வீட்டுநிலையில்உயிர் தான் (இறைவனுடன் மட்டுமன்றிப் பிறஉயிர்களுடனும்) ஒன்றாந்தன்மையை உணருமெனினும் தன் தனிநிலையை (individuality) இழந்துவிடுவதில்லை. ஆகவே வழிபாடும் இறைபணியும் வீட்டுநிலையிலும்

உள்ளன.கடவுளிடம் அன்பு செலுத்தி அவர் அருளை உணர்ந்துமகிழும் இனிய வாய்ப்பை உயிர் என்றும் இழப்பதில்லை. பிற உயிர்களின் உறவிலும்வீடு பெற்றோர் மகிழ்வர். தனக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பில் தான் மகிழ்வது போலவே வீடுபெற்ற ஒருவர் பிறருக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பிலும் உவகை காண்பர். ஆகவே மாணிக்கவாசகர் மறுத்த வாய்ப்புகள் அனைத்தும் வீட்டுநிலையிலும் என்றும் உள. என்பதே அரவிந்தர் தம் நூல்களனைத்திலும் அறுதி யிட்டுக்கூறும் கருத்தாம்.

வள்ளுவர் காலத்தில் மக்கள் வீட்டுநிலை எத்தகையது என்பதைக் குறித்து அதிகம் ஆயவில்லை போலும். பிற்காலத்தில் அதைக்குறித்துப் பல கருத்துக்கள் எழுந்தன.

வீடுகுறித்த கொள்கை அறவியல் கருத்துக்களைப் பாதிக்கிறதா என ஆராயின் ஓரளவு பாதிப்பதே. வீடு ஒவ்வொருவரும் தனித்தனி-யே அடைதற்குரியது என்ற கருத்தினாலேயே வள்ளுவர் துறவு, அவா வறுத்தல் என்று அதிகாரங்களை எழுதி அவற்றில் பற்றை விடுதலை யும் ஆசைகளை நீத்தலையும் வற்புறுத்தினார். வள்ளுவர் இல்லற வியலுள் அன்புடைமை முதலிய அறங்களைக் கூறினாரெனினும்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் (50)

என இல்வாழ்க்கையைச் சிறப்பித்தாரெனினும், பற்றின்மையே இறுதியில் வீட்டைத் தரவல்லது எனக் கருதி,

யானென தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும் (346)

என்றார்.

தூயர் பவுல் முதலிய புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களோ அன்புறவு வீட்டின் கண்ணும் நிலைத்திருப்பது எனக் கருதியதனால் 'ஒருவரில் ஒருவர் அன்பாயிருங்கள்' எனப் பன்முறை கூறிக் கிருஸ்த-வர்களிடையே இருந்த அன்பின் தொடர்பை ஊக்குவித்தனரே-யன்றிப் பற்றின்மையைப் போதிக்கவில்லை. பிறபண்புகள் திறமைகள் ஆகிய அனைத்தும் அழியினும் அன்பு என்றும் நிலைத்திருக்கும் எனப் பவுல் கூறினார் பவுல் இல்லறத்தில் ஈடுபடவில்லை. தமக்கெனக் குடும்பம் ஒன்று இல்லாவிடினும் உடன்பணிசெய்த கிருஸ்தவ ஊழியர் களிடத்தும் நண்பர்களிடத்தும் பிற கிருஸ்தவர்களிடத்தும் மிக்க

அன்பு பாராட்டினார். சிலரை 'என் மகன்' எனவும் 'என் சகோதரன்' எனவும் முறைகூறியழைத்தார். பற்றில்லாதவராக இருக்க அவர் முயலவில்லை.

9. 7. முடிவுரை

விவிலிய நூலின் வெவ்வேறு பகுதிகள் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறு அறிஞர்களால் எழுதப்பட்டன. ஆதலின் ஒவ்வொரு பகுதியில் காணப்படும் நீதிக் கருத்துக்களும் இங்குத் தனித்தனியே திருக்குறள் கருத்துக்களுடன் ஒப்பிட்டு ஆயப்பட்டன.

அன்புடைமை, நடுவு நிலைமை, வாய்மை போன்ற சில அடிப்படையறங்கள் எந்நாட்டினர்க்கும் எக்காலத்தினர்க்கும் பொதுவானவையே. இவற்றைக் காலந்தோறும் நாடுதோறும் அறவோர் எவ்வெச் சூழ்நிலைகளில் எவ்வெவ்வகைகளில் கடைப்பிடித்தனர் அல்லது கடைப்பிடிக்குமாறு கற்பித்தனர் என ஆய்வதே சுவையுடையது. ஊனுண்ணாமை, கள்ளுண்ணாமை முதலிய சில அறங்களைக் குறித்துக் காலந்தோறும் நாடுதோறும் கருத்து வேறுபாடுகள் இருத்தலும் கூடும். ஊனுண்பதும் மிதமாக மதுவருந்துவதும் தவறில்லையெனச் சிலர் கருதுதல் கூடும். நாடுகளின் தட்பவெப்ப நிலைக்கேற்ப உணவு முதலியவற்றில் வேறுபட்ட பழக்க வழக்கங்கள் அவ்வந்நாட்டிற்குப் பொருத்தமாக இருத்தலும் கூடும்.

சமூகநிலை, வரலாற்றுச்சூழ்நிலை ஆகியவற்றுக்கேற்ப நீதிக்கருத்துக்கள் வேறுபடுதலும் கூடும். எடுத்துக்காட்டாக நிலையான அரசும் ஆட்சியும் ஏற்படும் முன் மக்கள் இனமினமாகப் பாலை நிலத்தில் அலைந்து திரிந்த காலத்தில் பழிவாங்கும் முறையே மக்கட்குப் பாதுகாவலாக அமைய, அரசும் நீதிமன்றங்களும் ஏற்பட்டபின் அம்முறை விரும்பத்தகாததாயிற்று. ஒருநாட்டின் பொருள் நிலைக்கும் சமூக நிலைக்கும் ஏற்பக் கூறப்படவேண்டிய சில நீதிகள் பிறிதொரு நாட்டின் நிலையில் தேவையற்றனவாகின்றன. விவிலியத்தின் பல பகுதிகளிலும் அடிமைகளைக் குறித்தும் வட்டிக்குக் கடன் கொடுத்தலைக் குறித்தும் பல கருத்துக்கள் கூறப்படத் திருக்குறள் அவற்றைக் குறித்து யாதும் கூறவில்லை.

அவ்வந்நாட்டில் பரவியுள்ள சமயக் கருத்துக்கட்கேற்பவும் நீதிக்கருத்துக்களும் அறிஞர் நீதியை ஆராயும் முறையும் வேறுபடு-

கின்றன. வள்ளுவர் பெரும்பாலும் பொதுநீதிகளையே கூறினாராயினும் தம்காலத்துப் பரவியிருந்த வைதிக, பௌத்த சமணசமயங்கட்குப் பொதுவான பல சமயக்கருத்துக்களை அவரும் தழுவிக் கொண்டார். வினைப்பயன் என்ற கொள்கைபரவியிருந்த நம் நாட்டில் நீதிநூலோர் 'நல்லோர் துன்பமடைவது ஏன்?' என்பதை ஆய்வதில் அதிக கவனம் செலுத்தவில்லை. வினைத்தொடர்பு பற்றிய கருத்து இல்லாத பண்டை யூதர் நாட்டிலோ அக்கேள்வி அறவோர் பலரின் உள்ளத்தை வருத்தியது. அதற்கு வெவ்வேறு விடைகாணவும் முயன்றனர். வள்ளுவர் துறவறத்தில் கூறும் தவம், மெய்யுணர்தல், துறவு, அவாவறுத்தல் ஆகிய அறங்களும் சமயக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டனவே. வேறு சமயக் கோட்பாட்டின் அடிப்படையில் இக்கருத்துக்கள் வேறுபடுதல் கூடும்.

இத்தகைய ஒற்றுமை வேற்றுமைகள் பல இந்நூலில் ஆங்காங்கே ஆயப்பட்டன. ஆயினும் வள்ளுவர் அறத்துப்பாலிலும் பொருட்பாலின் ஒழிபியலிலும் காட்டும் சில உயரறங்களுக்கு விஞ்சிய அறக்கருத்துக்களைக் காட்டுதலில்லை. அவற்றில் பல கிருஸ்து பெருமானின் கூற்றுக்களுடன் ஒத்திருப்பதுமன்றி அவர் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்த குறிக்கோள்களை விளக்குவனவாகவும் அமைந்தமை புதிய ஏற்பாட்டை ஆயுங்கால் காட்டப்பட்டது. தன்னலமற்ற அன்பு, பொறை, தாழ்மை, தியாகம் ஆகியவற்றை மக்களில் சிறந்தோரிடம் காணப்படவேண்டிய அறங்களாக வள்ளுவர் காட்டினார். அவை சான்றோர்க்குரிய அறங்கள் மட்டுமின்றி அவையே கடவுளின் இயல்புகளுமாகும் என விவிலியநூல் கூறுகிறது.

# நூல் விளக்கம்

பழந்தமிழ் நூல்கள்

1. கம்பராமாயணம், எஸ், ராஜம் வெளியீடு; சென்னை-1. (1958-1959).
2. கலித்தொகை (நச்சினார்க்கினியருரை), கழகவெளியீடு(1970)
3. சிலப்பதிகாரம் (அடியார்க்கு நல்லாருரை), டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் பதிப்பு, சென்னை, (1960).
4. சிவஞான சித்தியார் சுபக்கம், கழக வெளியீடு(1969).
5. சீவக சிந்தாமணி (திரு. பொ. வே. சோமசுந்தரனாருரை)கழக வெளியீடு (1964).
6. சுந்தரா தேவாரம் (தலமுறை),திருப்பனந்தாள் மடத்து வெளியீடு (1965).
7. ஞானசம்பந்தர் தேவாரம் (தலமுறை) திருப்பனந்தாள் மடத்து வெளியீடு. (1961).
8. திருக்குறள், அறத்துப்பால் உரைக் கொத்து, திருப்பனந்தாள் மடத்து வெளியீடு, (1969).
9. திருக்குறள், பரிமேலழகர் உரை,வானதி பதிப்பகம், சென்னை (1961).
10. திருக்குறள், பொருட்பால் உரைக்கொத்து, திருப்பனந்தாள் மடத்து வெளியீடு, (1961)
11. திருக்குறள், மணக்குடவர் உரை, மலர்ப்பதிப்பகம், சென்னை (1955)
12. திருமுலர், திருமந்திரம், ப இராமநாத பிள்ளை உரை, கழக வெளியீடு சென்னை, (1963).
13. திருவாசகம், ப. இராமநாத பிள்ளை உரை, கழக வெளியீ டு, (1968)
14. தொல்காப்பியம், பொருளதிகாரம் (அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல்) நச்சினார்க்கினியர் உரை, கழக வெளியீடு, (1965).

15. நாலடியார் (அருள் ஜி. யு. போப் உரையுடன்), கழக வெளி-யீடு, (1958).

16 நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம், இரத்தினநாயகர் புதல்வர் பதிப்பு. சென்னை, (1958).

17. நாவுக்கரசர் தேவாரம் (தலமுறை) திருப்பனந்தாள் மடத்து வெளியீடு, (1961).

18. பத்துப்பாட்டு மூலமும் உரையும், (திரு. பொ. வே. சோம சுந்தரனார் உரை), கழக வெளியீடு, (1971).

19. பதினோராந்திருமுறை, திருப்பனந்தாள் மடத்து வெளியீடு (1963).

20. பழமொழி நானூறு, மூலமும் உரையும், கழக வெளியீடு, (1958,

21. புறநானூறு, எஸ். ராஜம் வெளியீடு, சென்னை-1, (1948).

22. மணிமேகலை, டாக்டர். உ. வே. சாமிநாதய்யர் பதிப்பு. சென்னை (1965).

இன்றைத் தமிழ் நூல்கள்

1. இராகவ ஐயங்கார், மு., தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, மு. ரா. நாராயண ஐயங்கார் பதிப்பு, மானா மதுரை, (1959).

2. இராமசுவாமிப்புலவர், சு. அ., கந்தபுராணம் (வசனம்), கழக வெளியீடு, (1959).

3. கலியாண சுந்தரமுதலியார், திரு. வி., கிருஸ்து மொழிக்குறள், சாது அச்சுக் கூடம், சென்னை, (1956).

4. கலியாண சுந்தரமுதலியார், திரு. வி., கிருஸ்துவின் அருள் வேட்டல், அரசி புக் டிப்போ, சென்னை,

5. சந்திரன், யோ. ரசல், கிருஸ்தவ அருள், கிருஸ்தவ இறை-யியல் இலக்கியக்குழு, (1964).

6. பரிசுத்த வேதாகமம், இந்திய வேதாகமச் சங்கம், 20. மகாத்மா காந்திரோடு, பெங்களூர்.

7. பாரதியார் கவிதைகள், வானதி பதிப்பகம் சென்னை, (1958).

ஆங்கில நூல்கள் (விவிலிய நூல் ஆய்வு குறித்தன)


1. Anderson, Bernard. *W.,Understanding the Old Testament,* Prentice Hall Inc.N J. (1960)
2. Andrews, C.,F., *The sermon on the Mount*, George Allen and Unwin Ltd., London, (1942).
3. Bewer, Julius A , *The Literature of the Old Testament* Columbia University Press, (1933).
4. Cutle, Ethel, *One Prophet and Another,* The Womans Press, New York, (1911).
5. Driver, G. Rev., *Isaiah, his life and times,* Fleming. H. Revett Company.
6. Grant, Robert, M., *A Historical Introduction to the New Testament* Collin, The Fortona Library, (1963)
7. Henshaw. T, *New Testament Literature,* Hodder and Stoughton, (1963)
8 *Holy Bible, The* (Authorised Version), Pollins Clea Type Press, London and New York.
9. *Holy The,* (Revised Standard Version) Thoma Nelson, and sons, New York, (1952).
10. *Loehr, Max, A History of Religion in the old Testament,* Ivor Hicholson and Watson Ltd., London, (1936).
11. Manson, T.W , *A Companion to the Bible,* T Clark. Edinburgh. (1950).
12. Paternoster, Michael, *Thou art there also,* S.P.C.K. London, (1969).
13. Preston, Ronald H and Manson, Authony T., *The Revelation of Saint John the Divine,* S.C.M. Press, London, (1949).
14. Robinson, wheeler H, *The Old Testament Its Making, and Meaning,* University of London Press, (1944).
15. Robinson, wheeler H, (Editing, *Record and Revelation,* Oxford Clarendon (1938)

16. Robinson, wheeler, H, *The Religious Ideas in the Old Testment*, Duck work, Hentriettastreet. w.c.
17. Schewitzer, Albert, *The Mysticism of Paul*, the Apostle (trans William Montgomory A&C Black, London W., 1. (1931).
18. Scott, Ernest, F., *The Ethical Teaching of Jesus*, The Macmilan Company (1924).
19. Scott, Ernest, F., *The Literature ofthe New Testaments* Columbia University Press, New York, (1933).
20. Smith, Norman H, *The Distinctive Ideas in the Old textament*, The Epworth Press, London, (1945).

ஆங்கில நூல்கள் பிற

1. Aurabindo, Sri, *The Future Evolution of Man*, (compiled by P. B. Saint Hillaire), Sri Autabindo Ashram, Pond cherry, (1963).
2. Aurchindo, Sri, *The Snpramental Manifestation the Earth*, Sri Aurobindo Ashram, Pondicherry, (1952)
3. Bouquet, A. C., *Hinduism*, Hutchinson University Library, London, (1969).
4. Manicol, Nicol, *HinduScriptures*, J. M. Dent and Sons, London, E. P. Dutton and Co., New York, (1988).
5. Max Mullar (trans). *The Upanishads*, Dover Publication Inc, New York.
6. Meenakshisundaram, T. P., *A History of Tamil Literature*, Annamalai Nagar (1965).
7. Milton, John, *Paradise Lost*, The Odyssey Press Inc, New York.
8. Pillai, K. K., *ASocial History of the Tamils*. Part I Madras University, (1969).
9. Radhakrishnan (trans), *The Principal Upanishads*, George Allen and Unwin Ltd, London, (1969)
10. Rolland, Romain, *The Life of Swami Vivekananda*, (trans. E. E, Malcolm Smith), Advaita Ashtam, Almora, Himalayas, (1944).

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

திருக்குறள் ஆய்வகம்

# வெளியீடுகள்

1987



# திருக்குறள் ஆய்வு வெளியீடு : 1

## குறள் கண்ட பொருள் வாழ்வு

டாக்டர் தி. முருகரத்தனம்

பொருளடக்கம்


1. உலகச் சிந்தனை
2. வள்ளுவர் சிந்தனை
3. அரசும் பொருளும்
4. வள்ளுவர் கண்ட வளநாடு


"திருக்குறளில் உள்ள பொருளியல் கருத்துக்களைத் தொகுத்தும், அவற்றை இக்காலத்துப் பொருளியல் அறிஞர்களின் கொள்கையோடு ஒப்பிட்டும், பல்கலைக் கழகத் துணைப்பேராசிரியர் டாக்டர் முருகரத்தனம் இந்நூலினை இயற்றியுள்ளார். உலகச் சிந்தனை, வள்ளுவர் சிந்தனை, அரசும் பொருளும், வள்ளுவர் கண்ட வளநாடு என்னும் தலைப்புகள் நூலின் அமைப்பைப் புலப்படுத்துகின்றன. திருக்குறளையும் பொருளியல் நூல்களையும் ஆழ்ந்தும் நுணுகியும் கற்றுப்பலவகைக் கருத்துக்களையும் தெளிவுற இந்நூலில் விளக்கியுள்ளார்".

துணைவேந்தர் மு. வரதராசன்


டெமி—பக்கங்கள் XI+207 1973 (இருப்பு இல்லை)

திருக்குறள் ஆய்வு வெளியீடு : 2

# குறள் கூறும் இறைமாட்சி

டாக்டர் தி. முருகரத்தனம்

பொருளடக்கம்

1. பொருட்பால் வழங்கும் பொருள்
2. அரசருள் ஏறு
3. வேந்தனும் வேந்தும்
4. பண்புடை வேந்தன்
5. படிப்பும் பண்பாடும்
6. அரசர் பணி

''வள்ளுவர் கண்ட அரசியல் கருத்துக்கள் ஆராய்ச்சிக்கு
எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றுள்ளும் அரசர்
பற்றிய கருத்துக்கள் முதலில் ஒருநூலாக எழுதப்பட்டன.
அவையே 'குறள் கூறும் இறைமாட்சி' என்னும் இந்
நூலாகியது. திருக்குறளின் பொருட்பாலில் முதல் இருபத்
தைந்து அதிகாரங்கள் 'அரசியல்' என ஓரியலாக அமைந்
துள்ளன. அவ்வியலில் காணப்படும்கருத்துக்களே இங்கு
ஆராய்ச்சிக்கு உரியனவாயின''.

டெமி - பக்கங்கள் IV + 145 1974 விலை ரூ. 7—00

திருக்குறள் ஆய்வு வெளியீடு : 3

# வள்ளுவர் வகுத்த அரசியல்

(கருத்தரங்கக் கட்டுரைகள்)

தொகுப்பும் பதிப்பும்

டாக்டர் தி. முருகரத்தனம்

பொருளடக்கம்

(1) வள்ளுவர் கண்ட அரசியல் அன்றும் இன்றும் : டாக்டர் மு. வரதராசனார் (2) வள்ளுவர் கண்ட சட்டமும் நீதியும் : திரு. பி. ஆர். பக்கிரிசங்கர் (3) வள்ளுவர் கண்ட அரசியலும் சங்க இலக்கியங்களும்; பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் (4) வள்ளுவர்கண்ட அரசியலும் பிற அற இலக்கியத்தார் கண்ட அரசியலும்: டாக்டர் இரா. சாரங்கபாணி (5) வள்ளுவர் கண்ட அரசன்—இறைமையின் எல்லையும் இயல்பும் : டாக்டர் தி. முருகரத்தனம் (6) வள்ளுவர் கண்ட இறைவனும் வடநூல் மரபும்: டாக்டர் கோ. சுந்தரமூர்த்தி (7) வள்ளுவர் கண்ட அரசியலும் மனுவும்: டாக்டர் சோ. சுப்பிரமணியன் (8) திருவள்ளுவரும் கிரேக்க அரசியற் சிந்தனையாளர்களும் : பேராசிரியர் பா. சூரியநாராயணன் (9) Tr;ukkural and Western Political Thought : டாக்டர் ந. சுப்பிரமணியன் (10) Politics and Eth;cs in Tirukkural; டாக்டர் எம்.முத்துராமன் (11) Concept of Kingship in Kural and Later Epics : பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன்

டெமி—பக்கங்கள் VII+193 1974 விலை ரூ 6–00

திருக்குறள் ஆய்வு வெளியீடு : 4

# வள்ளுவர் வகுத்த பொருளியல்

(கருத்தரங்கக் கட்டுரைகள்)

தொகுப்பும் பதிப்பும் :

டாக்டர் தி. முருகரத்தனம்

## பொருளடக்கம்

(1) குறள் கூறும் பொருளியல்; டாக்டர் அ. இராமசாமி (2) வள்ளுவரது பொருளியலின் எல்லையும் இயல்பும் : பேராசிரியர் மா. பா. குருசாமி (3) திருக்குறளில் வருவாய்த் தோற்றுவாய்கள் : பேராசிரியர் ந.சி. பாலசுப்பிரமணியன் (4) திருக்குறளில் பங்கீட்டுப் பொருளியல் : திரு. க. அருணாசலம் (5) திருவள்ளுவரின் ஒப்புரவுக் கோட்பாடு : திரு. தே. வேலப்பன் (6) Relevance of Valluvam to Modern Political Economy: டாக்டர் பா. நடராசன் (7) Valluvar on the Making and Using of Wealth : பேராசிரியர் எஸ். வேலாயுதம் (8) Tiruvalluvar's Conception of Public Finance ; பேராசிரியர் எல். சிதம்பரதாணு (9) Entrepreneurship: பேராசிரியர் எஸ். வேலாயுதம் (10) Economc Thought of Tiruvalluvar with Special Reference to Occupation: பேராசிரியர் ஏ.வி. கிருஷ்ணமூர்த்தி (11) Agriculture in Triukkural : பேராசிரியர் எஸ். சுந்தரராசன் (12) The Concept of Welfare in Tirukkural : திரு. எஸ். சங்கரராமலிங்கம் (13) A Comparative Study of the Ideas of Tiruvalluvar and Mahatma Gandhi on the Economic Ideas : திரு. ஆர். அரங்கசுவாமி (14) The Qualities of a Good Administrator : டாக்டர் டி. பிரைட்சிங்

டெமி—பக்கங்கள். 148 1975 விலை : ரூ 6-00

திருக்குறள் ஆய்வு வெளியீடு : 5

# குறள் கூறும் சமுதாயம்

காமாட்சி சீனிவாசன்

பொருளடக்கம்


1. திருக்குறள் கூறும் சமுதாயம் ஓர் இலக்கியல் (Ideal) சமுதாயமா?
2. இல்லம்
3. தொழில்கள்
4. அறங்கள்
5. மக்களின் அன்றாட வாழ்க்கை
6. சமுதாயத்தின் பிற இயல்புகள்
7. துறவு
8. வள்ளுவர் விரும்பும் சமுதாயத்திற்கும் பிற அறிஞர் விரும்பும் சமுதாயத்திற்கும் ஒப்பு



டெமி–பக்கங்கள். X + 372. 1975 விலை ரூ. 10-00

திருக்குறள் ஆய்வு வெளியீடு : 6

# திருக்குறளும் விவிலியமும்

காமாட்சி சீனிவாசன்

பொருளடக்கம்


1. யூத இலக்கியமும் விவிலிய நூலாய்வும்
2. முதலைந்து நூல்கள்
3. வரலாற்று இலக்கியங்கள்
4. தீர்க்கதரிசிகள்
5. துதிப்பாடல்கள்
6. முதறிவு இலக்கியம்
7. நற்செய்தி நூல்கள்
8. பிற நூல்கள்
9. கடிதங்கள்


டெமி — பக்கங்கள். 346 + XXVI முதற்பதிப்பு 1979 விலை ரு.

திருக்குறள் ஆய்வு வெளியீடு : 7

# குறள் கூறும் சமயம்

காமாட்சி சீனிவாசன்

பொருளடக்கம்


1. வள்ளுவர் காலச் சமயச் சூழ்நிலை
2. கடவுளும் அமரரும்
3. வான்சிறப்பு அல்லது இயற்கையின் திறம்
4. உயிர்களும் அவற்றின் நிலைகளும்
5. சமுதாயமும் வாழ்க்கையும்
6. வள்ளுவர் எச்சமயத்தைச் சேர்ந்தவர்?



டெமி – பக்கங்கள் . 223 1979 விலை ரூ. 7-00

திருக்குறள் ஆய்வு வெளியீடு: 8

# குறள் கூறும் அரசு

டாக்டர் தி. முருகரத்தனம்

பொருளடக்கம்.

1. நாடு
2. நாட்டின் பொருள்
3. அரண்
4. அரண்வகை
5. நட்பு

வள்ளுவர் வழங்கிய கருத்துக்களை இன்றைய அரசியற் சிந்தனையுடன் ஒப்பிட்டாராய்தலே இவ்வாராய்ச்சியின் நோக்கம், வள்ளுவர்க்குப் பின் காலமும் கருத்தும் மாறியுள்ளன. ஆனாலும் சில அடிப்படை உண்மைகள் நிலைபேறுடையன. அத்தகைய உண்மைகள் குறளில் காணப் படுகின்றன. திருக்குறளுக்கு அதுவே பெருமை.''

டெமி — பக்கங்கள் 134 + 8 1983 விலை ரூ : 8-00

திருக்குறள் ஆய்வு வெளியீடு: 9, 10, 11.

# திருக்குறள் உரைக்களஞ்சியம்

## டாக்டர் ச. தண்டபாணி தேசிகர்

1. அறத்துப்பால் — **பாயிரவியல். பக்.** 238 **விலை** ரூ. 15-00
2. அறத்துப்பால் — **இல்லறவியல், பக்.** 691 **விலை** ரூ 30-00
3. அறத்துப்பால் — **துறவறவியல், ஊழியல், பக். விலை** ரூ 30-00

டெமி அளவு : 1981, 1983, 1986 **முழுக்கலிக்கோக் கட்டு**

### அடுத்து வருவன

### திருக்குறள் உரைக்களஞ்சியம்

### டாக்டர் ச. தண்டபாணி தேசிகர்

1. *பொருட்பால் — அரசியல்*
2. *பொருட்பால் — அங்கவியல்*
3. *பொருட்பால் — ஒழிபியல்*

"இவ்வுரைக்களஞ்சியத்தில் தொன்மையுரைகளோடு அண்மையுரைகளும் தொகுப்பிடம் பெற்றிருப்பது மன நிறைவாகும். அப்பாத்துரையார், பாவாணர், இலக்குவனார், மு. வ., பாரதிதாசனார், இராமலிங்கனார், கோவிந்தசாமி என்றினையோர் உரைகள் வேண்டுமளவு தழுவப் பெற்றுள. கண்டதும் கேட்டதும் என்ற வகையில் சில நல்லுரைகளும் சேர்ந்துள. இதனால் எவ்வளவு முன்பு உரையிருப்பினும் திருக்குறள் தொட்டனைத்தூறி வரும் மணற்கேணியாகச் சுரப்பதைக் காண்கின்றோம். திருக்குறளுக்கு உரை செய்யும் மனவுணர்வு எக்காலத்தும் பெருகி வருவதையும் அதனால் திருக்குறள் கால நூலாகப் புதுமை பெறுவதையும் அறிகின்றோம்

உரைக்களஞ்சியம் பல்வேறு உரைகளின் குவியல் என்று எண்ணிவிடல் வேண்டா. ஒவ்வோர் குறளுக்கும் கிடைத்திருக்கும் உரையெல்லாம் ஓரிடத்துக்குவித்துக் காட்டுவதோடு நில்லாது அவற்றை நிறுத்துப் பார்க்கும் ஆய்வுப் பெற்றியுடையது".

**வ.சுப.மாணிக்கம்**

# திருக்குறள் துறையின் புறப்பணி :

## திருக்குறள்

(மூலமும், பரிமேழகருரையும், இவ்வுரைக்கியையுமாறு ஆசிரியர் கோ வடிவேலு செட்டியார் அவர்கள் இயற்றிய தெளிபொருள் விளக்கமும் கருத்துரையும் குறிப்புரையும், ஆங்கில மொழி பெயர்ப்புடன்).

டெமி அளவு : 1972, 1976, 1976 முழுக்காலிக்கோ கட்டு

1. அறத்துப்பால் **பக்கங்கள்** VIII + 24 + 428 விலை ரூ. 10-00
2. பொருட்பால் பக்கங்கள் 51 + 720 + IX விலை ரூ. 15-00
3. காமத்துப்பால் பக்கங்கள் 49 + 253 + 30 + 4 விலை ரூ. 10-00

"இந்நூலில் திருக்குறளுக்குப் பரிமேலழகர் நல்கிய உரைக்குத் தெளிபொருள் விளக்கம் உள்ளது : கருத்துரை உள்ளது : பரிமேலழகரின் உரையில் இலைமறை காய்போல் உள்ள நுண் பொருள்களுக்குக் குறிப்புரையான விளக்கம் உள்ளது : பரிமேலழகர் மேற்கோளாகக் காட்டியுள்ளசெய்யுள்களுக்கு உரை உள்ளது : பரிமேலழகர் தமக்கே உரிய வகையில் தந்த இலக்கண குறிப்புகளுக்கு விளக்கம் உள்ளது. பல சமயங்களின் கோட்பாடுகள் பற்றிய விளக்கமும் உள்ளது. மேற்கோள் காட்டப்பட்டுள்ள செய்யுள்களின் நூற்பெயர் முதலிய குறிப்புகளும்உள்ளன. பாடவேறுபாடுகளும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இதன் முதல்பதிப்பு 1904-ஆம்ஆண்டில் வெளியானது. 1918-ஆம் ஆண்டில் இரண்டாம் பதிப்பு வெளியிடுகையில் ஒவ்வொரு குறட்பா விளக்கத்தின் இறுதியிலும் குறளின் ஆங்கில மொழிபெயர்ப்பும் சேர்க்கப்பட்டது. புலவர்களை அணுகித் தமிழ் மரபின்படி கற்கஇயலாத பலர் இந்நூலை வாங்கிக் கற்றுத் திருக்குறளை உணரும் வாய்ப்புப் பெற்றார்கள், படிப்படியே இந்நூலில் ஆழ்ந்த சிலர் பரிமேலழகரின் நுட்பமான உரையை அணுகத்தலைப்பட்டு அதன் பயனால் மதி நுட்பம் வளரப் பெற்றுத் தமிழ்ப் புலமையும் பெற்றனர், இவ்வாறு பலர் தம் அறிவு வளர்ச்சிக்குப் பயன் பட்டு வந்த இந்தச் சிறந்த நூல் ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளாய் விற்பனைக்குக் கிட்டாததாய்க் கற்போர்க்கு எட்டாததாய் நின்றது கண்டு அறிஞர் வருந்தினர்."

துணைவேந்தர்—

டாக்டர் மு. வரதராசன்

# மதுரை-காமராசர் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை வெளியீடுகள்

விற்பனை முறைகள் :

1. விற்பனையாளர்க்கு (Publishers & Book Sellers) 25% கழிவு உண்டு. மற்ற அனைவருக்கும் 15% கழிவு தரப்படும்.

2. விலைப்பட்டியலில் குறிப்பிட்ட நூல்களைப் பெற விழைவோர் "பதிவாளர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-625 021" என்ற முகவரிக்கு, எழுதுக.

3. நூல் விற்பனை நிலையங்களும், நூலகங்களும், கல்வி நிலையங்களும் தேவையான படிகளை எழுதின் உரிய விதிமுறைக்கிணங்க அவை அனுப்பி வைக்கப்படும்.

4. சில தனி நூல்கள் வேண்டுவோர் நூல்கட்குரிய தொகையுடன் தக்க அஞ்சற் செலவையும் சேர்த்து அனுப்பவேண்டும்.

5. விலையஞ்சல் (V.P.P.) மூலமும் நூல்கள் விடுக்கப்படும்.

---

குறிப்பு : நூலின் ஆசிரியர், பெயர், விலை, வேண்டும் படிகள், அனுப்புமுறை முதலிய விளக்கங்களைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

---

பதிப்பாளர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
பல்கலை நகர்
மதுரை—625021.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 7 | 33 | awa | away |
| 9 | 31 | The poetry to | The poetry rises to |
| 10 | 32 | Consistin | Consisting |
| 12 | 6 | உருவக் கதைகளைக் | உருவகக் கதைகளைக் |
| 12 | 7 | என்ன | என்ற |
| 13 | 34 | Epistlies | Epistles |
| 14 | 4 | யூக | யூத |
| 16 | 27 | அடித்தித் திருத்தி | அடித்துத் திருத்தி |
| 20 | 16 | வானத்தையாளவும் | வானத்தையளாவும் |
| 20 | 27 | ஜந்துக்களிடத்திலும் | ஜந்துக்களிடத்திலும் |
| 26 | 31 | வளத்ர்துப் | வளர்த்துப் |
| 41 | 16 | கொண்டர்கள் | தொண்டார்கள் |
| 43 | 16 | என மூப்பர்கள் | மூப்பர்கள் என |
| 59 | 16 | அறிஞர் | அறிகிறார் |
| 64 | தலைப்பு | திருக்குறளும் விவிலியமும் | திருக்குறளும் விவிலியமும் |
| 65 | 23 | Rura | Rural |
| 70 | தலைப்பு | வரலாறு | வரலாற்று |
| 85 | 15 | பாறுப்போடு | பொறுப்போடு |
| 87 | 1 | டுத்திக் கொள்ளத் | படுத்திக் கொள்ளத் |
| 92 | 33 | என்பதை | என்பதே. |
| 102 | 21 | உயர்ந்தவர் | உயர்ந்தவன் |
| 106 | 29 | Conceieved | conceived |
| 106 | 33 | Conceieved | Conceived |
| 108 | 16 | தோள்றுகிறது | தோன்றுகிறது |
| 112 | 24 | (கடன் ... இருந்தால்) | (கடன் ... இருந்தால்) |
| 118 | 25 | தொழிலிலும் | தொழிலும் |
| 139 | 9 | கண்டணர் | கண்டனர் |
| 142 | 34 | கொண்டாத் | தொண்டாத் |
| 144 | 19 | யினைத்தும் | யிணைத்தும் |
| 146 | 17 | பிரசனம் | பிரகசனம் |
| 154 | 34 | Appear | Appar |
| 155 | 24 | of | to |
| 194 | 5 | எனவே | யனவே |
| 206 | 20 | சேர்விலானாக | சோர்விலாவாக |
| 213 | 25 | தேடுவார்த் | தேடுவார். |
| 214 | 8 | இமுந்து | இகழ்ந்து |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 220 | 33 | செல்பத்தையும் | செல்வத்தையும் |
| 223 | 33 | விரித்தோ | விரித்ததோ |
| 224 | 4 | செய்தில்லையாகையால் | செய்ததில்லை யாகையால் |
| 224 | 7 | பார்த்துண்டானால் | பார்த்தலுண்டானால் |
| 224 | 9 | சான்றேர்க்கு | சான்றோர்க்கு |
| 224 | 21 | பறித்தை | பறித்ததை |
| 237 | 20 | நிலைமையைப் | நிலையாமையைப |
| 251 | 7 | தன்மை | தப்மை |
| 269 | 26 | merly | merely |
| 297 | 14 | யுயுரச் | யுயரச் |
| 297 | 26 | இல் நூல் | இந் நூல் |
| 299 | 12 | சுறுபான்மையோரோ | சிறுபான்மை யோரோ |
| 301 | 31 | கொடுந்துன்பதைச் | கொடுத்துன்பத்தைச் |
| 302 | 2 | புதிய ஏற்ப்பாட்டிலுள்ள | புதிய ஏற்பாட்டி லுள்ள |
| 304 | 3 to 4 | திருக்குறளாசிரியர்களும் | திருக்குறளுரையா சிரியர்களும் |
| 305 | தலைப்பு | கடிகங்கள் | கடிதங்கள் |
| 306 | 4 | எனையிர்ப்பகுதி | ஏனையீர்ப்பதி |
| 308 | 6 | எம் பொருமான் | எம் பெருமான் |

21A
3-15